

# பொன் விழா மலர்

## கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

# "பொன்விழா மலர்"

## 1969 - 2019

# "Golden Jubilee"

## Kn/Kanakapuram Mahavidyalayam Kilinochchi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | "பொன்விழா மலர்" |
| வெளியீடு | : | கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்<br>கிளிநொச்சி. |
| பதிப்பு | : | 2019 |
| இதழாசிரியர் | : | திருமதி. கோ. நவரட்ணராஜா |
| பதிப்பகம் | : | விஸ்டா8 பிறிண்டேர்ஸ்,<br>இல. 164 D, இராமநாதன் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 075 520 6848 / 076 646 8860 |
| Title | : | "Golden Jubilee" |
| Published By | : | Kn/ Kanakapuram Maha Vidyalayam |
| Published in | : | 2019 |
| Editor | : | Mrs. K. Navaratnarajah |
| Printers | : | Vista8Printers<br>No. 164D, Ramanathan Road, Jaffna.<br>T.P: 075 520 6848 / 076 646 8860 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வித்தியாலயத்தின் உயிர் நாடியாக
சிகரம் தொட உழைத்த
வல்லரக்கன் வஞ்சனையால் மறைந்திட்ட
நெஞ்சம் நிறை ஆசான்களிற்கும்
நல்லுலகில் நாயகராகும் கனவுடன் விதையான
மாணவர்க்கும் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சரஸ்வதி சிலை



ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப் பளிங்கு போல்வாள் என்உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரதக் கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கண மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினு மோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போலுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரளமைத் திறம் வியந்து
செயன் மறந்து வாழத்துமே!

இயற்றியவர்: மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தான

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

இயற்றியவர்: மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

இராகம்: ஆரபி தாளம்: ஆதி

## பல்லவி

வளர் புகழ் ஓங்கிட கனகபுரம் தன்னிலே
வான்புகழ் தாங்கிடும் மகா வித்தியாலயம்
வாழ்க வளர்க வெல்க என்று வாழ்த்துவோம்
வாழ்க வளர்க வெல்க என்று வாழ்த்துவோம்.

## அநு பல்லவி

போற்றிடுவோம் நிதம் நின்பதமே தினம்
பாடிப் பணிந்து பணி தொடர்வோம்.

(வளர் புகழ் ...)

## சரணம்

தாய்தந்தை பெரியோர் குருவிற்கடங்கி
செந்தமிழ் ஆங்கிலம் அறிவியல் மனையியில்
முந்துறு தேகபயிற்சி நல் ஏர் வினை
சிந்தனையுள் சேர்ந்து சீர் பெறுவோம்.

(வளர் புகழ் ....)

சீர் பெறும் மகா வித்தியாலயம் வாழ்க
சிறப்புறும் ஆசிரியர் யாவரும் வாழ்க
பார்புகழ் ஓங்கிடப் பணிபுரிந்திடவே
பண்புள்ள மாணவர் வாழ்க வாழ்க

(வளர் புகழ் ....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கனகபுரம் மகா வித்தியாலய நில வரைபடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட வாசகம்

நன்றே செய் இன்றே செய்

# தூர நோக்கு

ஆளுமைப் பண்புமிக்க

சமூகப் பிரஜையை உருவாக்குதல்

# பணிக்கூற்று

பாடசாலையினதும் சமூகத்தினதும்

பௌதீக, ஆளணி வளத்தினை

உச்ச அளவில் பயன்படுத்தி

சமூகத்தின் கல்வி எதிர்பார்புக்களை

நிறைவேற்றுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கொடி




## பாடசாலை இலச்சினை







மாணவ முதல்வர் சின்னம்




மாணவர் கழுத்துப்பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முதல்வர்



திருமதி.இ.ரவீந்திரநாதன்
B.Ed (NIE) SpTri (Tamil) SLPS I
School management Diploma

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர்



திருமதி.மே.தில்லைநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபஅதிபர் இடைநிலை



திரு.திருக்கேதீஸ்வரன்
அதிபர் தரம் 02
SP Tri (Ag) SLPS II

# உபஅதிபர் ஆரம்பபிரிவு



திரு.மா:புள்ளநாயகம்
SP Tri (Pri) SLTS I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் ஆசிரியர்களுடன் கல்விசாரா ஊழியர்களும் - 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்
# பொன்விழா கீதம் – 2019

**(தொகையறா)**

ஆளுமை நிறைந்த எங்கள் அதிபர் – ஆசான்கள் புகழ்பாடி
மாணவச்செல்வங்கள், பெற்றோரை வாழ்த்தி
பழைய மாணவரின் பங்களிப்பைப் போற்றி
பொன்விழா காணுதே கிளி/கனகபுரம்
மகா வித்தியாயலம் கொடியேற்றி
வாழிய! வாழிய! என்றும் – எங்கள்
கனகபுரம் மகா வித்தியாலயம்

**(பல்லவி)**

உனது பணி நாளும் உயிரெனவே வாழும்
கனகபுரம் யாவும் கவிமழையாய் தூறும்
அன்புத்தாயாகி அறிவே ஆறாகி – தந்தாய்
பண்பான மாணவரை...
மண்ணில் விதையாகி மீண்டும் முறையாகி – நின்று
நிழலாவோம் ஆனவரை...
(உனது பணி நாளும்...)

**(சரணம் -01)**

இமயத்தின் உயரம் எங்கே உந்தன் செயல் முன்னே
இதயத்தில் வாழ்வாயம்மா எங்கள் உயிர் நீயே
வளமோடு நாங்கள் வாழ என்றென்றும் கல்வி தந்தாய்
கலைகள் அழியாமலே எமக்கள்ளி வந்தாய்
உயிரது ஒருநாள் உதிர்கின்ற போதும் செய்ந்நன்றி மறவோமே...
உந்தன் கலைக்கூடம்
ஒருமுறை வந்தால் உலகையும் வெல்வோமே...
(உனது பணி நாளும்...)

**(சரணம் 02)**

கனவுக்ள நனவானதே இன்றெங்கள் கண்கள் முன்னே
கைகளெல்லாம் ஒன்றாய் சேர்ந்தால் நாளும் வெற்றிதானே
பழைய மாணவரின் அயராத உழைப்பாலே
பள்ளிக்கூடம் எங்கும் பசுமை பொங்கும் செழிப்பாலே
வருகின்ற நாட்கள் வாழ்த்தினைக் கூற வசப்படும் எதிர்காலம்...
உந்தன் புகழ் பாடும்
ஒவ்வொரு நாளும் அழகாய் உருவாகும்....
(உனது பணி நாளும்...)

இசையமைப்பு, குரல்: யுவராஜ், பாடல் வரிகள்: நிரஞ்சலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரியும் இதழினுள் சொட்டும் தேன் துளிகள்


| | |
|---|---|
| ஆசிச் செய்தி/ வாழ்த்துச் செய்தி | I - L |
| காலத்தின் கண்ணாடி | 01-30 |
| இதயம் பேசுகிறது | 31-46 |
| வளர்த்துவிட்ட முத்துக்கள் | 47-81 |
| பறந்து சென்ற பட்டாம் பூச்சிகள் | 82-160 |
| வழிகாட்டிகளின் வரிகள் | 161-178 |
| ஏற்றி விடும் ஏணிகள் | 179-215 |
| நாளைய விடிவெள்ளிகள் | 216-261 |
| விண்ணைத் தொடும் வீரர்கள் | 262-271 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



கற்றதனால் ஆயபயன் என் கொல் வாலறிவன் நற்றார் தொழாஅர் எனின்" என்று வள்ளுவன் வழியினிலே நின்று 1969 ம் ஆண்டு கனகபுரம் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட பாட சாலையானது மிகச் சிறந்த முறையில் ஐநூறுக் கும் மேற்பட்ட மாணவர்களுடனும் 40 ற்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும் இயங்கி வரு வது மகிழ்சிக்குரிய விடயமாகும்.

கிளிநொச்சிப்பகுதி மாணவர்களுக்காக ஆசிரியர் உட்பட நலன்விரும்பிகள் இதில் அக்கறை கொண்டிருப்பது எமது எதிர்கால சந்ததியினரை நல்வழியில் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணர்கள் எதிர்கால நலமுடன் வாழவும் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக வருவதற்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக.

நன்றி

கிரியாதத்வந்தி
**சிவஶ்ரீ-கு.இரத்தினேஸ்வரக் குருக்கள்**
சாமிநாத குருகுல அதிபர்
திருநகர்-கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



போரின் கோரத்தாண்டவமதில் சிக்குண்டு சின்னா பின்னமாகியும் தளராத தற்துணிவுடன் நிமிர்ந்து நின்று அரை நூற்றாண்டாக செல்வங்களுள் சிறப்பான செல்வமான கல்விச் செல்வமதை எம் எதிர்காலத் தலைமுறைக்கு ஊட்டி வரும் கிளி/ கனகபுரம் மகா வித்தியாலய பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இக்கல்விக்கூடக் குடும்பத்திற்கு எனது பொன்விழா வாழ்த்துக் களைத் தெரிவித்து உங்கள் மகிழ்வில் நானும் இணை கின்றேன்.

1969 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி கண்டு இன்று 47 ஆசிரியர்களையும், 516 பிள்ளைகளையும் கொண்ட தரம் 1C பாடசாலையாக உயர்ந்து நிற்கின்றது. இப்பாடசாலையானது கல்வி இணைபாட விதானச் செயற்பாடுகளில் பல சாதனைகளையும் வெற்றிகளையும் அடைந்து வளர்ந்து வருவது எமது மனதிற்கினிய விடயமாகும்.

இப்பாடசாலையில் இக்காலத்தில் கல்விகற்கும் பிள்ளைகள் போர் பெற்றெடுத்த பிள்ளைகளாக இருக்கின்றார்கள். இவர்களது உடல், உள, கல்வி வளர்ச்சி என்பது மிகவும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாக விளங்குகிறது. இக்கடமையை இப்பாடசாலைச் சமூகம் கருத்திலெடுத்து பணியாற்றிவருவது உண்மையிலேயே பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

அள்ள அள்ளக் குறையாத அமுதமாகிய கல்வியை குழந்தைகள் உள்ளமதில் 50 ஆண்டுகளாக வார்த்து வரும் இப்பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், நலன் விரும்பிகளை வாழ்த்துவதோடு இப்பாடசாலை உயர தம்மைத் தியாகம் செய்து இறைவனடி சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், நலன்விரும்பிகள் ஆன்மா இளைப்பாறுதல் பெறப் பிரார்த்திக்கின்றேன். தொடர்ந்தும் இப்பாடசாலையானது பலவகையிலும் முன்னேற தனது இலக்கை அடைய இறைவன் ஆசீர் இப்பாடசாலைச் சமூகத்தோடு என்றும் இருக்க மன்றாடுகின்றேன்.

"எல்லாம் வல்ல இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக".

**அருட்திரு யோ.அ.யேசுதாஸ்**
கிளி மறைமாவட்ட முதல்வர்
சென்திரேசா ஆலயம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை ஜனாதிபதி
President of Sri Lanka

## வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா மலருக்கு எமது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

1969ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 1C தர பாடசாலையான கனகபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்குவதுடன், மாவட்ட மற்றும் மாகாண மட்ட போட்டிகளில் சிறந்த வெற்றிகளைப் பெற்றுள்ளனர் என்பதனையும் கலை மற்றும் வர்த்தகத் துறைகளில் முன்னணி தொழில்வாண்மையாளர்கள், கல்வியாளர்கள், உள்ளிட்ட பல சிறந்த பிரஜைகள் இப்பாடசாலை உருவாக்கியிருக்கின்றது என்பதனையும் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

'உலகை மாற்றுவதற்கான மிகவும் பலம் வாய்ந்த ஆயுதம் கல்வியே ஆகும்" என்று நெல்சன் மண்டேலா குறிப்பிடுகின்றார். அந்த வகையில் சிறந்த கல்விக்கே மனிதனை மாற்றும் பலம் உள்ளது என்பதே எனது நம்பிக்கையாகும்.

பொன்விழா காணும் கனகபுரம் மகாவித்தியாலய மாணவர்களின் வேண்டுகோளின் பேரில் எனது வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை மைதானத்தினை கடந்த வருடம் திறந்து வைத்த நிகழ்வானது. பசுமையானதொரு நிகழ்வாக எனக்கு நினைவிருக்கின்றது. கல்விப் பணியில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து பொன்விழா கொண்டாடும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இச்சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் உயர்வுக்காக உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை இப்பாடசாலை எதிர்காலத்திலும் வெற்றிப் பாதையில் பயணிக்க எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மைத்ரிபால சிறிசேன

2019 ஜுலை 17 ஆம் திகதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையில் தரம் 1 முதல் கல்விப் பொதுத்தராதர உயர்தரம் வரை கற்கும் மாணவர்களின் கல்வியில் மேலும் மேலும் வளர்ச்சியையும் ஒழுக்க விழுமியங்களில் முன்னேற்றங்களையும் ஏற்படுத்துவதற்கு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து இப் பொன்விழாக் காலத்தில் சத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் இங்கு இப்பொழுது கற்றுக்கொண்டிருக்கும் ஏறத்தாழ 500 மாணவர்களும் கிளிநொச்சி நகரத்தையும் அதன் சுற்றயலையும் சேர்ந்த 12 கிராமங்களிலிருந்து வருபவர்களாகவுள்ளனர். இக்கிராமங்களின் குடும்பங்களில் அடுத்த 10 தொடக்கம் 15 வருடங்களில் எத்தகைய முற்போக்கான மாற்றங்கள் நிகழப் போகின்றன என்பது கனகபுரம் மகாவித்தியாலயத்தில் தற்காலத்தில் பணியாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் கல்விப்பணியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தங்கியுள்ளது.

இப்பொன்விழாக் காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் கனகபுரம் மகாவித்தியாலய சமூகத்தினராகிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பொறுப்பான கல்வி நிர்வாகிகள் அனைவரும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும் என்ற வேண்டுதலுடன் அனைவருக்கும் பொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**கலாநிதி சுரேன் ராகவன்,**
ஆளுநர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தின் மத்தியில் அமைந்துள்ள கிளி/கனகபுரம் மகாவித்தியாலயப் பாடசாலையானது இவ்வருடம் தனது 50 ஆவது அகவை நிறைவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய கால கட்டத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சி மட்டுமல்லாமல் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தனக்கென தனி இடம்பிடித்துள்ள இப் பாடசாலையானது மென்மேலும் வளர வாழ்த்துவதோடு ஐம்பதாவது ஆண்டு விழாவும் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
கல்வி இராஜாங்க அமைச்சர்,
யாழ் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணியில் கலங்கரை விளக்காய் திகழும் "கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்"



கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறை சார் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுச்சேர்க்கும் பாடசாலைகள் பலவற்றுள் கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம் ஆற்றிவரும் பங்கும் அளப்பரியதே! 1969 களில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சிப்பாதை நோக்கி பரிணமித்து இன்று ஐந்து தசாப்தங்களைக் கடந்தும் தன்நிலை நின்று தாளாது, தனக்கே உரித்தான தனித்தன்மைகளோடும், பண்பாட்டு மரபியல்களோடும் தனது மாவட்ட மாணவர்களின் பல் பரிமாண வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருவது பெருமைக் குரிய விடயமாகும்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெறுமனே ஒன்றிரண்டு ஆசிரியர்க ளோடும் ஒரு சில மாணவர்களோடும் இயங்கத்தொடங்கிய இப்பாடசாலை மெல்லமெல்ல மாற்றம் பெற்று இன்று தன் கனதியான கல்விப்பணிக்கு கிடைத்த கௌரவமாய் "கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்" என்னும் மாபெரும் அடையாளத்தோடு பொன்விழா காண்கின்றமை மனநிறைவளிக்கிறது.

இந்த மாவட்டத்தில் பெயர்சுட்டிச் சொல்லும் அளவுக்கு முன்னுதாரணமாய் வாழ்ந்த, வாழ்கின்ற பல ஆளுமைகளை உருவாக்கித்தந்த பெருமையோடு, இயன்றளவு இக்கல்லூரியால் உருவாக்கப்படும் மாணவர்கள் கல்வித்துறையில் மட்டுமன்றி, கலை, இலக்கிய ஆர்வலர்க்காகவும், சிறந்த சிந்தனையாளர்களாகவும், மனிதநேயப் பண்பாளர் களாகவும், இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கின்ற, மற்றவர்களை வாழ்விக்கின்ற மனிதம் நிறைந்த மனிதர்களாகவுமே செதுக்கப்படுவது இக்கல்லூரியின் பெருமைக்கு அணிசேர்க்கும் இன்னொரு விடயமாகும். வருடாவருடம் நடைபெறும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையிலும், உயர்தரப் பரீட்சையிலும் கணிசமான மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப்பெற்றுவருவதோடு, பல்கலைக்கழகத்திற்கும் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்பட்டு வருகின்றமை இப்பள்ளியின் பெருமையை பறைசாற்றி நிற்கிறது.

கனகபுரம் என்ற மண்ணினதும், கிளிநொச்சி மாவட்டத்தினதும் அடையாளமாக பலதரப்பட்டோரின் இரத்தத்தாலும், வியர்வையாலும் உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலை பல்வேறு இடர்களையும் இன்னல்களையும் தாண்டி, காலத்திற்கு காலம் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளுக்குள் தானும் அகப்பட்ட போதும் அவற்றிலிருந்தெல்லாம் மீண்டெழுந்து ஐம்பது ஆண்டுகளை கடப்பதென்பது சாதாரண விடயமல்ல. அது ஒரு வரலாற்றுப்பதிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற கல்விப் பணியாற்றிய அதேவேளை இந்த மண்ணையும், மக்களையும், இனத்தையும், மொழியையும் தம் உயிரினும் மேலாய் சுவாசித்து அந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவுமே தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஆகுதியாக்கிய பல நூற்றுக்கணக்கான தமிழ்த் தேசிய வீரர்களை பெற்றெடுத்த பெருமையும் இந்தக்கல்லூரித்தாயின் பெரும் சிறப்புக்களுள் ஒன்று.

இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு பரந்து விரிந்த அளவில் கல்விப்பணிக்கும், சமூகப் பணிக்கும் அணிசெய்யும் இப்பள்ளி மென்மேலும் வளரவும், உயரவும் மனதார வாழ்த்துவதோடு, ஐம்பதாவது ஆண்டுநிறைவு விழா சிறக்கவும், பொன்விழா மலர் வெளியீடு நிறைவடையவும் இறை ஆசிகளை வேண்டி நிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இணைத்தலைவர் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழா காணும் இந் நேரத்தில் மாணவர்களும் பாடசாலையும் சகல வள நிறைவையும் பெற்று, வளமிகு தேசத்தில் சக்திமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வடைகிறேன். இளம் மாணவ சமுதாயம் மீது நிச்சயம் கூடுதல் கரிசனையையும் வழங்குவோம்.

கடந்த காலங்களில் சேவைகளை வழங்கியிருந்த எமது தமிழ் கல்வியியலாளர்களை போன்று இவ் தலைமுறையினரையும் சிறந்த ஆளுமை மிக்கவர்களாக, எமது நாட்டிலும் உலகளவிலும் ஆரோக்கியமான சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வல்லமை படைத்தவர்களாக உருவாக்கிக் கொள்ள வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பது எனது நம்பிக்கை நிச்சயம் வெற்றி பெறும்.

புரையோடி காணப்பட்ட எமது மக்களின் வாழ்வாதார மட்ட அடைவை தேர்ச்சி அடைய செய்ய வேண்டும் என்பதற்காக பிரயோக அரசியலை தேர்ந்தெடுத்திருந்தேன். அதே நேரம் முதுபெரும் பொக்கிசமான கல்வியை வழங்கி வளமிக்க எம் தேசத்தில் உந்து சக்தி மிக்கவர்களாக திகழச் செய்ய வேண்டும். பாடசாலை கல்விக்கு பின்னரான தொழில் சார் கற்கை நெறிகளை வழங்குவதன் ஊடாக ஆற்றலுக்கான தொழிலும், தொழிலுக்கேற்ற வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம். அதற்கான நிலையம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைய உள்ளமை திறன் விருத்தி கற்கையாளர்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதமாகும்.

பொன்விழாமை கொண்டாடும் இவ் இனிய தருணத்தில் பாடசாலையின் சகல வளர்ச்சியிலும் உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

**அங்கஜன் இராமநாதன்**
முன்னாள் விவசாய பிரதி அமைச்சர்.
பாராளுமன்ற உறுப்பினர்
இல 80A கோவில் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



"புத்திமான் பலவான்" என்பது உலகியல் உண்மை. புத்தியென்ற அறிவுச்செயற்பாட்டின் ஆதாரமே கல்வி. இந்தக் கல்விக்கு முக்கியமாக பங்களிப்பவை கல்விச்சாலைகள். அதில் முக்கியமானவை பாடசாலைகள் மாணவப்பருவத்தில் கல்வி மூலம் அறிவையும், நடைமுறை ரீதியாக ஒழுக்கத்தையும், விளையாடடுக்களின் வழியாக உடலுறுதி சேர்ந்து பணியாற்றும் இயல்பு போன்றவற்றையும், தலைமைத்து வத்தை வழங்குதன் வழியே ஆளுமை விருத்தியையும், பள்ளிப் பருவத்தில் ஊட்டுகின்றன. பாடசாலைகள். இந்த வகையி லேயே பாடசாலைகள் மாணவருக்கு இன்றியமையாதிருக் கின்றன. சிறந்த பாடசாலை என்பது சிறந்த ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்குவதன் வழியே உருவாகிறது. அந்த அடிப்படையிலே மதிப்பிடப்படவும் அடையாளப்படவும் படுகிறது. கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயத்தையும் நாம் இந்த அடிப்படையிலேயே நோக்க வேண்டும். இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன. என்பது ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியே.

அரை நூற்றாண்டு காலத்தை நிறைவு செய்துள்ள இந்தப் பாடசாலைக்குச் செழிப்பானதொரு அடையாளமும் வரலாறும் உண்டு. கனகபுரத்தின் உருவாக்கத்தோடு இணைந்ததாக இந்தப் பாடசாலையின் வரலாறு இணைந்துள்ளது. ஆகவே கனகபுரத்தின் வளர்ச்சியோடு இந்தப் பாடசாலையின் வளர்ச்சியும் அமைந்திருக்கிறது,

கனகபுரம் மக்கள் தங்கள் பிரதேசத்தை மிக ஆழமாக நேசிப்பவர்கள் என்பதை நன்கறிவேன். அந்தவகையில் அவர்கள் தங்களுடைய பாடசாலையையும் மிகப்பற்றுடன் நேசிக்கின்றனர். யுத்தம் முடிந்த பிறகு 2010 இல் இந்தப் பாடசாலையின் மீளெழுச்சியைக் குறித்தும், கனகபுரம் பிரதேசத்தின் முன்னேற்றத்தைப்பற்றியும் இந்தப் பிரதேச மக்கள் என்னிடம் அணுகிப் பேசினர். இதனைத் தொடர்ந்து கனகபுரம் அபிவிருத்திச்சங்கத் திற்கான புதிய கட்டிடம் தொடக்கம் இந்தப் படாசாலையின் செயற்பாடுகளுக்குத் தேவையான பௌதீக வளங்களான கட்டிடங்கள், தளபாடங்க்ள போன்றவற்றை விசேட ஒதுக்கீட்டின் மூலம் ஏற்பாடு செய்திருந்தேன். தொடர்ந்து ஆசிரிய வளப்பகிர்வு, ஆசிரிய விடுதிகளை மீளமைத்தல் போன்றவற்றையும் செய்து கொடுத்திருந்தேன்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பணிகளால் மிகக் குறுகிய காலத்தில் பாடசாலை தன்னுடைய பௌதீக வளத்தேவைகளை ஓரளவுக்கு நிறைவாக்கியது. இதைத் தொடர்ந்து தற்பொழுது மிகச் சிறப்பான விளையாட்டு மைதானமொன்றும் கிடைத்துள்ளது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்தப்பாடசாலையின் மாணவர்கள் தமது அறிவுத்திறன் வெளிப்பாட்டிலும், ஆற்றல் வெளிப்பாடுகளிலும் சிறந்து மிளிர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு இந்தப் பிரதேச மக்கள், அதிபர், ஆசிரியர்கள் போன்றோரின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் வலுவூட்டலாக அமைய வேண்டும். இன்றைய சூழலில் அனைத்து வளங்களும் கிடைக்கப்பெற்றுள்ள இந்தப் பாடசாலை, கல்வி, விளையாட்டு, ஆளுமை விருத்தி போன்றவற்றில் வரலாற்றுச் சாதனை படைக்க வேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் இந்தப் பாடசாலையின் மாணவர்கள் எட்டப்போகும் சாதனைப் பெறுபேறுகள் இந்தப்பாடசாலையில் கணித, விஞ்ஞான உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான கதவுகளைத் திறக்கும் என நம்புகின்றேன். அவ்வாறு வளர்ச்சியை நோக்கிச் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் இணைந்து நிற்போம்.

இன்று ஐம்பதாவது ஆண்டு நிறைவில் மகிழ்ந்து களிக்கும் கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியிலும் பணிகளிலும் என்றும் நாம் இணைந்திருப்போம்.

ஆற்றலுடைய மாணவரை உருவாக்குவோம் - அவர்
போற்றற்கரிய கல்விச்சாலையை வளர்த்தெடுப்போம்.

**முருகேசு சந்திரகுமார்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இயற்கை அன்னையின் எழில்வாய்ந்த கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரத்தில் **1969**ஆம் ஆண்டு திரு எஸ்.ஸ்ரீகாந்தா அவர்களால் இப்பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1C பாடசாலையாக காணப்படுவதுடன் உயர்தரத்தில் கலை, வர்த்தக மற்றும் பதின்மூன்று வருட தொழிற்பாடக்கற்கை நெறியில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை சிறப்பானதாகும். இப் பாடசாலையில் கல்விகற்ற பழைய மாணவர்கள் உயர்பதவிகளில் இன்று கடமை புரிந்து கொண்டிருப்பது இப்பாடசாலையின் பெருமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகின்றது. மேலும் எமது சமூகத்திற்குரிய நன் மாணாக்கர்களை உருவாக்குவதில் இப்பாடசாலை உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப் பாடசாலையினால் ஐம்பதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மலரை வெளியிடுவதிலும், பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் இப் பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்தமையிட்டு வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள், அனைவரையும் பாராட்டுகின்றேன். இப்பாடசாலை கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் மென் மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைக்கவும், விழா சிறப்பாக நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
முந்நாள் செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

இயற்கை அன்னையின் எழில்வாய்ந்த கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரத்தில் 1969ஆம் ஆண்டு திரு.எஸ். ஸ்ரீகாந்தா அவர்களால் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1c பாடசாலையாக காணப்படுவதுடன் உயர்தரத்தில் கலை, வர்த்தகம் மற்றும் 13 வருட தொழிற்பாடக் கற்கை நெறியில் மாணவர்கள் கல்விகற்று வருகின்றமை சிறப்பானதாகும். இப் பாடசாலையில் கல்விகற்ற பழைய மாணவர்கள் உயர் பதவிகளில் இன்று கடமை புரிந்து கொண்டிருப்பது இப்பாடசாலையின் பெருமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகின்றது. மேலும் எமது சமூகத்திற்குரிய நன் மாணாக்கர்களை உருவாக்குவதில் இப் பாடசாலை உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப் பாடசாலையினால் 50 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மலரை வெளியிடுவதிலும், பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்தமை யிட்டு கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மலர்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இப்பாடசாலை கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் மென்மேலும் வளர்ச்சி யடைந்து பல சாதனைகளைப் படைக்கவும், விழா சிறப்பாக நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயத்தினது பொன்விழா வினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி நகரை அண்டிய கனகபுரம் கிராமத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையானது 1969 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இப்பாடசாலை ஐந்நூறிற்கு மேற்பட்ட மாணவர் களைக்கொண்ட 1C தரப் பாடசாலையாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலை தரம் 1 - 13 வரை வகுப்புக்களைக் கொண்டதாகவும் க.பொ.த (உ.த) இல் கலை, வர்த்தகம், 13 வருட உத்தரவாத தொழிற் பாடக் கற்கை நெறி என்பனவற்றையும் கொண்டுள்ளது.

இப்பாடசாலையானது மாணவர்கள் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டி வருகின்றனர். இப்பிரதேசத்தில் வாழும் மாணவர்களுக்கு கடந்த 50 வருடங்களாக சிறந்த கல்வியை இப்பாடசாலை வழங்கிவருகின்றது. பொன்விழா காணும் இவ்வேளையில் இப்பாட சாலை மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் பொன் விழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

1969 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய உயர்திரு. எஸ். ஸ்ரீகாந்தா அவர்களால் அதே ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மாவட்டத்தின் தொன்மையான பாடசாலையே கனகபுரம் மகா வித்தியாலயமாகும். இப்பாடசாலையின் முதலாவது அதிபராகக் கடமையாற்றிய திரு.க.பொன்னையா அவர்களை இந்த இடத்தில் நினைவு கூருவதுடன் அவரின் அயராத உழைப்பின் வெளிப்பாடாகவே இந்த “பொன்விழா” என்ற மைற்கல்லை நாம் நோக்கமுடியுமாக இருக்கிறது.

தற்பொழுது இப்பாடசாலையானது மாவட்டத்தின் பெருமையைப் பறைசாற்றும் முகமாக கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி நிற்பது பாராட்டுதலுக்குரிய விடயமாக இருப்பதுடன் தற்சமயம் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி.இ.ரவீந்திரநாதன் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் சுமார் 516 மாணவர்களும், 45 திறமைமிக்க ஆசிரியர்களும் கடமை யாற்றி சிறந்த, திறமைமிக்க, பன்முக ஆளுமையுடைய மாணவர்களை உருவாக்குவதே இவர்களுடைய இலட்சியமாக இருக்கவேண்டும் என்ற பிரார்த்தனையுடனும் இப் பாடசாலை மேலும் பல்வேறு மட்டங்களில் வளர்ச்சியடைந்து சிறந்த பலசாதனைகளை நிலைநாட்டி பல நூற்றாண்டுகளைக் கடந்து பயணிக்கவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**

மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்

கிளிநொச்சி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதாம் ஆண்டின் அளவிடாச் சாதனைகள்

கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம் தன்னுடைய கல்விப்பணியில் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன் விழாக் கொண்டாடும் இவ் வேளை எனக்கு மனநிறைவைத் தருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த குடிகள் வாழும் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை பல கல்வி மான்களை உருவாக்கி எமது மாவட்டத் திற்கு பெருமை சேர்த்து நிற்கின்றது.

ஒரு சமூகத்தின் இருப்பை, அதன் புகழை, அதன் சமூக பண்பாட்டு பெறுமானங்களை விருத்தி செய்வதில் பாட சாலைகளே நிலைக்களங்களாக விளங்குகின்றன. அவ்வகை யில் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயம் தன் சீரிய பணியை கடந்த 50 ஆண்டுகளாக நிறைவேற்றி இன்று பொன்விழாக் கண்டு குதூகலிக்கின்றது.

அவ்வகையில் தற்போது இப்பாடசாலை பல பெருமைகளை பெற்று இன்றைய அதிபர் திருமதி.இ. ரவீந்திரநாதன் தலைமையில் வீறுநடை போடுகின்றது. இப் பாடசாலைக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் வருகைதந்து பாடசாலைக்கான மைதானத்தை திறந்து வைத்தமை இப்பாடசாலை அதிபரின் ஆளுமை பண்பை வெளிப்படுத்துவதோடு கிளிநொச்சி மாவட்ட கல்வி சமூகத்தை பெருமிதம் கொள்ள வைத்த நிகழ்வாகும்.

இத்தகு சிறப்புக்களைப் பெற்ற இப்பாடசாலை மேலும் பல சிறப்புக்களை பெற்று கல்வியில் உயர்ந்த சீரிய சமூகத்தை உருவாக்கும் கலைக்கூடமாக மிளிர வேண்டும் என பொன்விழாக்காணும் இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

**த.முகுந்தன்**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்.
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மண்ணின் கல்விச்சாலையான கனகபுரம் மகாவித்தியாலயம் அதன் அகவை 50 ஆவது ஆண்டில் பொன்விழாக்காணும் இவ்இனிய சந்தர்ப்பத்தில், பள்ளிச் சமூகத்தை வாழ்த்துவதில் மகிழ்வும் நிறைவும் அடைகிறோம்.

கிளிநொச்சி மண்ணின் மூத்த குடிமக்களாய், கனகபுரம் மண்ணில் குடியேறிய, படித்த வாலிபர்களின் பிள்ளைகள் பாங்குற வாழ்வதற்கு வழிதந்த கனகபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி வரலாற்றின் அடையாள ஆலயமாக விளங்குவது பெருமை தருகின்றது.

அன்றைய அரசாங்க அதிபர் மதிப்புக்குரிய ஸ்ரீகாந்தா அவர் களின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட இவ் ஊரில் இப்பள்ளி, அழகு தமிழ்க்கலை களையும், அறிவெனும் தனத்தையும், குறைவற்று வழங்கிய பணியினால் சிறப்புற்றது. கிளிநொச்சியின் வாழ்வும் வளமும் ஆகும். இன்று, கனகபுரத்தார் உலகெங்கும் பரந்தும் சிறந்தும் வாழ்கின்றபோதும், தன் ஊரின்மீதும், தன் பள்ளியின் மீதும், தன்சார் உறவுகள் மீதும் கொண்ட பெரும்பற்று தமிழ்த்தேசியப்பற்றாக பரிணமித்து உள்ளமைக்கு, கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வாஞ்சை மிகு அர்ப்பணிப்பே அளப்பெரியது என்போம்.

இத்தகைய கிளிநொச்சி மண்ணின் புகழ் பூத்த கல்லூரியான, கனகபுரம் மகாவித்தியாலயம் பொன்விழாக்கண்டு பூரித்து நிற்கும் இவ்வேளை, கரைச்சி பிரதேச சபை தனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் கல்வி சமூகத்தினருக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அருணாசலம் வேழமாலிகிதன்,**
தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிக் கல்விக்கோட்டத்தில் அமைந்துள்ள கனகபுரம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி பெரிதும் மனம் மகிழ்வடைகிறேன். 11.11.1969 இல் ஆரம்பிக்கப்பட்ட கனகபுரம் அ.த.க பாடசாலையானது 11.11.1994இல் குறித்த காலத்திலேயே தனது வெள்ளிவிழாவை கொண்டாடியமை மிகவும் சிறப்பம்சமாகும். அதுவும் கனகபுரம் மகாவித்தியாலயம் என்ற பெயருடன் 1710 மாணவர்களுடன் திகழ்ந்தமை மகிழ்ச்சிக் குரியது. வெள்ளி விழாவிற்கு முற்பட்ட 5 ஆண்டு காலப்பகுதியில் 114 மாணவர்கள் க.பொ.த (உ/தர) வகுப்பில் கல்வி கற்க தகுதி பெற்று பள்ளிக்கும் கனகபுரம் கிராமத்திற்கும் மிகவும் பெருமை சேர்த்தனர். இந்த மாணவர்களில் பெரும்பான்மையினர் இன்று எமது மாவட்டத்திலேயே பல உயர் பதவிகளிலிருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பொற்காலத்திலே அர்ப்பணிப்புடன் அதிபராக சேவை யாற்றிய திரு,ச.ஆறுமுகதாஸ் அவர்களை இந் நேரத்தில் யாரும் மறந்துவிடல் ஆகாது.

இந்த ஆண்டிலே பொன் விழாவைக் காணும் இப் பள்ளியானது 516 மாணவர்களுடன் 45 ஆசிரிய வளத்துடன் கல்விச் சேவையாற்றி வருகின்றது. நான் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்த காலத்திலே, இப் பள்ளியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட பழைய மாணவர்கள் பலர் கடினமாக பணியாற்றியதை நான் மறக்கவில்லை. இன்னும் இந்த பொன்விழாவிற்கான உழைப்பும் பொன்விழா நிகழ்வானது சிறப்பாக நிறைவேற்ற வாழ்த்துகிறேன் வெள்ளிவிழா காலம் பொற்காலம் போல, அதற்கு மேலாகவும் பள்ளித்தாயின் வளர்ச்சி மென்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது ஆசிச்செய்தியை நிறைவு செய்கிறேன்.

**க.முருகவேல்**
முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாவிற்கான வாழ்த்துச்செய்தி



கிளிநொச்சி கல்வி வலய பாடசாலையான கனகபுரம் மகா வித்தியாலயம் 2019ம் ஆண்டில் தனது 50 வது ஆண்டைப் பூர்த்தி செய்து பொன்விழா கொண்டாட இருப்பதால் அதற்காக ஓர் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கிராமப்புற குடியேற்ற கிராமமாக உருவாகிய கனக புரத்தில் ஒரு பாடசாலை அத்தியாய சேவையாகக் கருதிய அரசாங்க அதிபர்.திரு.எஸ். சிறிகாந்தா அவர்களால் 1969ம் ஆண்டில் கனகபுரம் அ.த.க பாடசாலையாக தரம் 5 வகை பாடசாலையாக அமைந்ததே இன்றைய கனகபுரம் மகாவித்தி யாலயம் ஆகும். அதன் அதிபராக திரு.க.பொன்னையா அவர்கள் நியமிக்கப்பட்டார். வேலை காரணமாக நானும் அவரும் காலைநேரம் யாழ்தேவிப் புகையிரதத்தில் ஒன்றாக பிரயாணம் செய்யும் நண்பர்களாக விளங்கினோம். அதிபரின் அயரா முயற்சியால் இப்பாடசாலை துரித வளர்ச்சி அடையத் தொடங்கியது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சிப்போக்கில் ஒரு குடியேற்ற கிராமத்தின் சிறப்பான வளர்ச்சியை இப்பாடசாலை கண்டது, மாணவர் தொகை அதிபரிப்பால், க.பொ.த சாதாரண தரம், உயர்தர வகுப்புக்களை காலக்கிரமத்தில் தனதாக்கியது. ஒரு மாவட்டத்தின் அதிகூடிய மாணவர்களை உடைய பாடசாலையாக உருவாகியது. அதன் அதிபராக திரு,க.ஆறுமுகதாஸ் அவர்கள் விளங்கினார். மாவட்டத்தின் தமிழ்த்தினப் போட்டியில் முதலாம் இடம்பெறும் ஒரு பாடசாலையாக விளங்கியதை யாவரும் அறிவர். இப் பாடசாலையின் வளர்ச்சிப்போக்கிற்கு சிறப்பாக காரணங்கள் பல இருந்தன. இப்பாடசாலையில் பணிபுரிந்த அதிபர்கள் வரிசையில் திரு,க.பொன்னையா அதிபர் முதல் இன்றைய அதிபர் திருமதி.இ.இரவீந்திரநாதன் வரை ஆசிரியர்களை தமது குடும்ப உறுப்பினர்களாக மதிக்கும் பண்பு தனித்துவமானது. பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவரும் "எமது பாடசாலை என கொண்டிருக்கும் மனப்பான்மை இரண்டாவது காரணாமகும். அண்மைக் காலமாக விசேடமாக திருமதி இ.ரவீந்திரநாதன் அதிபராக நியமிக்கப்பட்ட பின் பாடசாலையின் கட்டட வளர்ச்சி சுற்று மதில் முதலான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. மேலும் பாடசாலையின் கல்வி, விளையாட்டுத் துறை, கலைப்பாடத்துறைகள் துரித வளர்ச்சி அடைவதும் யாவராலும் பேசப்படுகிறது, திட்டமிடப்பட்ட ஒரு வளர்ச்சிப்போக்கை கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மகாவித்தியாலயத்தில் நாம் காணலாம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒற்றுமையே இதற்கான அடிப்டைக்காரணம் 50 ஆண்டு வளர்ச்சியை கொண்டாடுவதற்கு மிகப்பொருத்தமான ஒரு பாடசாலையாக நாம் பார்க்கிறோம். மேலும் மேலும் துரித வளர்ச்சியை கல்வியிலும், அபிவிருத்தியிலும் அடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.அரியரத்தினம்**
முன்னாள் வலய, மேலதிக
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா வாழ்த்து



1969 ம் ஆண்டு அன்றைய அரச அதிபர் மதிப்புக்குரிய உயர்திரு. ஸ்ரீஸ்காந்தா அவர்களால், "கோழிப்பண்ணை என்ற கிராமம் (கனகபுரம்) படித்த வாலிபர் திட்டம் எனும் வகையில் 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதே வேளையில் அவர்களது பிள்ளைகள் கல்வி கற்பதற்காக 1969ம் ஆண்டு கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் உதயமாகியது.

வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக உயர்திரு க.பொன்னையா அவர்கள் நியமிக்கப்பட்டார். தமிழ் கலாசார உடையுடன் அவர் இன்றும் எம் கண்முன்னே நிற்கின்றார். அவருக்குப் பின் பல அதிபர்கள் யுத்த காலத்தில் பல சொல்லொணாத் துயரங்கள் மத்தியிலும் சேவையை செவ்வனே செய்து வந்தனர்.

போரின் உச்ச கட்டத்தின் போது முகம் குப்புற விழுந்த இவ் வித்தியாலயம் தன் முகவரியைத் தொலைக்காமல் இன்றும் ஒரு விருட்சமாக வளர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து பேருவகை அடைகின்றேன். கல்வியில் மாத்திரம் அல்லாது இணை பாட விதானச் செயற்பாடுகளிலும் பிரகாசிப்பது போற்றுதற்குரியது.

மிகவும் வசதிகள் குன்றியிருந்த காலத்தில் இவ் வித்தியாலயத்தில் பயின்ற பழைய மாணவர்கள், தாங்கள் அனுபவித்த துன்பங்கள் இன்றைய மாணவர்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில் பல உதவிகளைப் பாடசாலைக்கு வழங்கி வருவது பாராட்டிற்குரியது.

அரை நூற்றாண்டு காலத்தை முடித்து "பொன்விழா" கொண்டாடவிளையும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"நேரம் தவறாமையே மிகச் சிறந்த ஆளுமை"

**மா.தேவேந்திரன்**

முந்நாள் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்



கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயம் பொன் விழா காண்பதையிட்டு இப்பாடசாலையின் முன்னை நாள் அதிபரும், கரைச்சிப் பிரதேச கோட்டக் கல்வியதிகாரியும் என்றவகையில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிளிநொச்சி நகரிலே மத்தியதர வர்க்கத்தினரின் கொலனி குடியிருப்பிலே அமைந்து கல்விப்பணியாற்றி பல பொறியிய லாளர்கள், வைத்தியர்கள், இலங்கை நிர்வாக சேவை, உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பல நூறு புத்திஜீவிகளை உருவாக்கி கல்விச் சுடர் மங்கள ஒளிவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றது. இக் காலப்பகுதியில் இப் பள்ளியிலே கல்வி கற்ற பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் இணைந்து கரம் கோர்த்து பள்ளியின் பௌதீக வளங்கள் பலவற்றையும் தேடிக்கொடுப்பது, பள்ளி சுற்றுமதில் அமைத்த பழைய மாணவர்கள், உள்ளகத்திலும் பல வேலைகளை செய்து கல்வித்தரம் உயர கல்விச்சுடர் மேலும் ஓங்கி ஒளிவிட அதிக வாய்ப்பாக அமையும் என எண்ணுகின்றேன்.

இலங்கையிலே நடைபெற்ற முப்பது வருட கால உள்நாட்டுப் போரினாலே மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட இப் பிரதேச மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து வவுனியா செட்டிக்குளம் நலன்புரி முகாங்களில் தங்கவைக்கப்பட்டு மீண்டும் மீள திறப்பதற்காக 01.01.2010 ம் ஆண்டு சுப்பிரமணியம் தர்மரத்தினம் ஆகிய நான் அதிபராக நியமிக்கப்பட்டு மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. மீளவும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் முதலாக மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும். மீள ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் மக்கள் தொகை மிகக்குறைவாக காணப்பட்ட அதேவேளை கிளிநொச்சி நகரமும் வெறிச்சோடிக் காணப்பட்டது. அக்காலப்பகுதியில் பல்வேறு பௌதீக வளங்கள் அதிபர் விடுதி, ஆசிரியர்கள் விடுதி, பாடசாலையின் கட்டிடத்திருத்தம் எனப் பல வேலைகளை விரைவாக செய்து சுமார் 1500 மாணவர்களையும் கொண்டியங்கியது. இக் காலப்பகுதியில் வடக்கு மாகாண மாணவர்கள் முப்பது வருடங்களுக்கு பின்னர் முதன் முதலாக தெற்குக்கு சென்று பார்க்கின்ற முதலாவது வாய்ப்பாக கல்விச் சுற்றுலா ஒன்றை ஒழுங்கு செய்து ஏழு நாட்கள் 250 க்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் 15 வரையான ஆசிரியர்களும் நாட்டின் தெற்கு, மத்திய, வடமத்திய மாகாணங்களை மாணவர்களுக்கு பார்க்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தேன். இப் பாடசாலையில் சுமார் எட்டு மாதங்கள் அதிபராக கடமைபுரிந்து பின்னர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று சென்றேன். பின்பும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வந்திருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இப்பாடசாலை பொன் விழாக்காணும் இக் காலப்பகுதியில் பாடசாலை யின் பல்வேறு தேவைகள் பௌதீக வளங்கள் பூர்த்தியாக்கப்பட்டு இப் பிரதேசத்தில் மிடுக்குடன் வளரும் இப் பாடசாலையின் வளர்ச்சி பிரமாண்டமானது. இதற்கு தற்போது உழைத்துவரும் அதிபர் திருமதி.இ.ரவீந்திரநாதன் அவர்களுடன் கூடிய ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் வாழ்த்தி கனகபுரம் மகாவித்தியாலயத்தின் கல்விப் புகழ் ஓங்குக உயர்க என வாழ்த்தி நிற்கின்றேன். மேலும் பல படிநிலைகளை கண்டு வைரவிழா காண்கின்ற போது கல்லூரியாக உயர்வு பெற வாழ்த்துகின்றேன்.

**திரு.சு.தர்மரத்தினம்,**
கோட்டக்கல்வி அதிகாரி,
கோட்டக் கல்வி அலுவலகம்,
கரைச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரம் மகா வித்தியாலய கல்வித் தாய்க்கு அகவை ஐம்பது

கனகபுரம் மகாவித்தியாலயம் அகவை ஐம்பதை நிறைவு செய்வது மனமகிழ்வை தருகிறது. பாடசாலையும் சமூகமும் இணைந்து பெருவிழாவாக முன்னெடுப்பது பாராட்டத் தக்கது.

கிளிநொச்சி A9 சாலையை மையமாக வைத்து கிழக்குப் புறமாக திருவையாறும், மேற்குப் புறமாக கனகபுரம், வடக்குப் புறமாக குமரபுரம் கிராமமும் உருவாக்கப்பட்டது. குமரபுரம் கிராமத்திற்கு D.R.O அமரர் முருகேசபிள்ளை பிதாமகராக அமைந்தது போல கனகபுரம் கிராமத்தின் பிதாமகராக அன்றைய அரசாங்க அதிபர் அமரர் எஸ்.ஸ்ரீகாந்தா அவர்கள் விளங்கினார்கள். கனகபுரத்தின் வரலாறு என்ற புத்தகத்தை உருவாக்குவதற்காக பல முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. எனது பங்களிப்பையும் கோரியிருந்தார்கள். நான் அறிந்தவரையில் அது கைகூடவில்லை என்றே நினைக்கிறேன். ஆசி இருந்தால் அனைவருக்கும் உதவி இருக்கும். கனகபுரம் கிராமம் படித்த வாலிபர்களை ஒருங்கிணைத்தது. பண்ணைகள் என்ற கட்டமைப்பினூடாக வடிவமைக்கப்பட்டது. பணப்பயிர்களும் விலங்கு வேளாண்மையும் முன்வைக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் திட்டமிட்டபடி பயிர்ச்செய்கைகள் நன்கு நடைபெற்றன. காலம்போகப்போக நகரமயமாக்கத்தின் விளைவுகளால் போக்குகள் மாறின. நிலம் பல கூறுகளாக பிரிக்கப்பட்டது. முக்கியமாக கனகபுரம் டிப்போ வீதி புறநகரமாகியது. விவசாய முயற்சிகள் கைவிடப்பட்டன. வர்த்தக முயற்சிகள் முனைப்புக்க காட்டின. திரு.க. பொன்னையா அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை பல படிமுறை வளர்ச்சிகளை கண்டுள்ளது. சுமார் 20 வருடங்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் பதவி நிலையில் கல்விப் பணியாற்றியதால் வித்தியாலயத்தின் வளர்ச்சிப்போக்கை நன்கு அறிய வாய்ப்புக்கிட்டியது,

தற்போது அவுஸ்திரேலியா நாட்டில் புலம் பெயர்ந்து, வாழும் திரு.ஆறுமுகதாஸ் அதிபர் அவர்கள் நகரப் பாடசாலைகளை விஞ்சும் வகையில் வழிநடத்தினார்கள். கிளி/மத்திய மகா வித்தியாலயத்திற்கு திரு.சோதிநாதனின் சகாப்தம் இன்றுவரை எவ்வாறு பேசப்படுகிறதோ அது போலவே கனகபுரம் மகாவித்தியாலயத்திற்கு ஆறுமுகதாஸ் அவர்களின் சகாப்தமும் அமைகிறது. இன்றைய அதிபர் திருமதி.இ.ரவீந்திரநாதன் அவர்கள் பாடசாலையை சிறப்பாக வழிநடத்துகிறார்கள். பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளாக சுற்றுமதில், முகப்புவாயில் அடங்கிய மைதானம் அமைத்தமையும் அரச தலைவர் வருகை தந்து வழங்கி வைத்தமையும் உச்ச பட்ச சாதனையாகும். பாடசாலை மென்மேலும் வளரவேண்டும். மண்ணையும் மக்களையும் போசிக்க வேண்டும். உச்ச பட்சமான சமூக விழுமியங்கள் கொண்ட மாணவர் பரம்பரை உருவாக வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**அ.அமிர்தலிங்கம்**
ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



கிளி/கனகபுரம் மகாவித்தியாலய ஐம்பதாவது ஆண்டு பொன்விழா சிறப்புற மனமார வாழ்த்துகிறேன். இப் பள்ளியின் வரலாற்று நிகழ்வானது மாணவர்களின் வளர்ச்சியின் படிக்கற்களாகவும் பாடசாலையின் அபிவிருத்தியாகவும் திகழ்கின்றது. நான் இப்பாடசாலையில் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றினேன். இடப்பெயர்வின் போது ஆசிரியர்களினதும் மாணவர்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலம் நல்ல பெறுபேற்றினை அடைந்தோம்.

கற்றல் செயற்பாடு இணைபாட விதான செயற்பாடு ஆகியவற்றில் வெற்றி கண்டோம். நான் அந்நிய தேசத்தில் வாழ்ந்தாலும் தற்போதும் இப்பாடசாலை வாழ்க்கை என் கண்முண்ணே வந்து செல்லும். எல்லோரும் ஒன்றிணைந்து பாடசாலை மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி.

**திரு.க.ஆறுமுகதாஸ்**
முந்நாள் அதிபர்
கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கனகபுரம், ஒரு வித்தியாசமான, முன்மாதிரியான படித்த வாலிபர் மேட்டு நிலக் குடியேற்றத் திட்டம், படித்த வாலிபர்கள், அரச உத்தியோகங்களை நம்பித் தேடிக்கொண்டிருந்த காலத்தில், நாட்டில் ஏற்பட்ட சிங்கள மேலாதிக்க அரசியல் நெருக்கடிகளால், மண் மீட்புப் பணியின் முன்னோடிகளாய் ஆதரவு, பாதுகாப்பு என்ற குழுவாழ்க்கைப் பண்புகளை அடித்தளமாக அமைத்து தோட்டச் செய்கை, கோழி வளர்ப்பு ஆகிய வாழ்வாதாரத் தொழில்களைத் துணையாகக் கொண்டு எமது வாலிபர்கள் வெற்றிகரமான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம் என்ற யாழ் ஞானிகளில் மூத்த,முக்காலமும் உணர்ந்த யோக சுவாமிகளின் சிந்தனைக்கு ஏற்ப, அன்று அரசாங்க அதிபராக இருந்த உயர்திரு ம.ஸ்ரீகாந்தாவின் தூரநோக்குச் சிந்தனையோடு 1958இல் உருவாக்கிய திட்டம் இது.

அத்தகைய அரச அதிபரின் அயராத முயற்சியால் அமைக்கப்பெற்று அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.கா.பொ.இரத்தினம் அவர்களால் 29.11.69இல் இப்பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. அன்று கனகபுரம் அ.த.க பாடசாலையாக, ஆரம்பமான இக்கல்விக்கூடம். இன்று 1C மகாவித்தியாலயமாக உயர்தர வகுப்புக்களில் தொழிற்கல்வி கற்கக்கூடிய கல்வி நிலையமாக 50 ஆண்டுகளில் பாரிய வளர்ச்சியுற்றதே இதன் கல்வி வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இக்கல்வி நிலையம் தனது பொன் விழாத் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தில் பொன்விழா மலர் ஒன்றை வெளியிடுவது பாராட்டுக்குரியது. அதன் மலர்வுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**நா.சோதிநாதன்**
(ஓய்வுநிலை) அதிபர்
கிளி/மத்திய மகா வித்தியாலயம்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



**1969**ம் ஆண்டு பதின்மூன்று மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு தரம் III, தரம் II, 1C என்ற வரை வளர்ந்து உயர்ச்சி பெற்று ஐம்பதாவது ஆண்டில் பொன்விழா வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். **1981**ம் ஆண்டு எனது பயிற்சிக் காலத்தில் ஒருமாணவி ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றமையும் **1996**ம் ஆண்டு உப அதிபராக கடமையாற்றிய காலத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று முதல் பல்கலைக்கழகம் சென்றமையும் பெருமிதம் கொள்ள செய்தது. கல்வியிலும் புறகிருத்திய செயற்பாடுகளிலும் வெற்றியீட்டி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

தாம்பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்பது போல கற்றவர்கள் அதற்கேற்ப பதவியை வகிப்பவர்கள் தனது திறமையடிப்படையில் வகிக்கும் பதவிகளை (துஸ்பிரயோகம்) செய்யாது தனது பதவிகளுக்கு உரிய வகையில் சமூகத்திற்கு உதவுவது தன்னை உயர்ந்த மனிதனாக்கும். பரந்துவிரிந்த இவ்வுலகில் கணக்கிடமுடியாதளவில் மனித இனம் பிறப்பெடுக்கின்ற போதிலும் மனித பிறப்பின் பயன் உணர்ந்து செயற்படுபவர்கள் ஒரு சிலரே. அவர்கள் இவ்வுலகில் உயிர் வாழுகின்ற காலம் வரை அவர்பெயரும் உயிர்வாழும். நாம் எங்கு பிறந்தோம், எங்கு வளர்ந்தோம், ஏன் பிறந்தோம் எங்கு செல்லப்போகின்றோம். எதைச் செய்யப்போகின்றோம் என்பதும் யாருக்கும் தெரியாது. ஆனால் இவ்வுலகையும், உடலையும் நிரந்தரம் என எண்ணி இறுமாப்படைகின்றோம். பிறவிப்பயனை சமய இதிகாசங்கள் கூறுகின்றபோதும் அதை நாம் கருத்திற் கொள்வதில்லை. பிறவிப்பயனை அடையும் வழியையும் உணரமுயற்சிப்பதில்லை.

ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டியது குற்றம் களைவது. எனவே பழையன கழிதலும் புதியன புகுதலும் போன்று புதிய புதியனவற்றை தேடியறிந்து மாணவனுக்கு தெளிவுபடுத்துதல் அவசியமாகும். எமக்கெல்லாம் வழிகாட்டியவர்கள் அறிவை மாத்திரம் வழங்கவில்லை. தன்னைப்போல் பிறரையும் நேசி என்ற நல்வழிகாட்டல்களை பின்பற்றுவதனால்தான் தற்போதும் பல எதிர்ப்புணர்வுகளுக்கு மத்தியிலும் பொதுப்பணியாற்றுவதற்கு எம் மனதை வழிகாட்டி வருகின்றது. அறிவு திறனுடன் மனப்பாங்கும் உருவாகும் போதுவேலையில்லா திண்டாட்டமும் தானே நீங்கிவிடும். அன்பான ஆசிரிய பெருந்தகைகளே தங்களின் வழித்துணையோடு இவ்வித்தியாலயம் எமது நாட்டின் தலைச்சிறந்த கல்லூரியென உயர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. சி. சந்திரராஜா**
முந்நாள் அதிபர்
J.P அகில இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்தாயை வாழ்த்துகிறேன்



ஐம்பது வருடங்கள் கல்விச் சேவையை வழங்கி, பொன் விழாக் காணும் கல்வித்தாயான கிளி/கனகபுரம் மகாவித்தியால யத்தின் பொன்விழா மலருக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்வடைகிறேன். கப்பலைச்செலுத்தும் மாலுமிகள் போன்று, பாடசாலை எனும் கப்பலை அதிபர் என்ற ஸ்தானத்தில் இருந்து நான்கரை வருடங்கள் செலுத்திய வர்களில் நானும் ஒருவன். 2010 -12-15 முதல் 2015-06-22 வரையில் இப்பாடசாலையில் அதிபராகச் சேவை புரிந்துள் ளேன். எஸ்.ஸ்ரீகாந்தா என்ற அரச அதிபரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம், கனகபுரம் கிராமத்திற்கும், ஏனைய அயற் கிராம மாணவர்களுக்கும் தனது கல்விச்சேவையை வழங்கி வருகிறது. அயற்கிராமங்களில் புதிய பாடசாலைகள் சில திறக்கப்பட்டாலும், தனக்கான ஸ்தானத்திலிருந்து கல்விச்சேவையை வழங்கிவரும் கிளி/கனகபுரம் மகாவித்தியால யத்தைப் பொன்விழாக்காணும் இந்நேரத்தில் மனப் பூர்வமாக வாழ்த்துவதில் உவகை அடைகிறேன். தனது கல்விச் செல்வத்தை வஞ்சகம் இன்றி எல்லாக்குழந்தைகளுக்கும் ஒரே விதத்தில் வழங்கி வந்த போதும், இச்சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, தமது வாழ்க்கையை மேன்நிலைக்கு உயர்த்திய பல பழைய மாணவர்கள் பலர் இதனது உன்னத சேவைக்குச் சான்று பகிர்ந்து கொண்டிருக் கிறார்கள்.

இடப்பெயர்வுகள், உள்நாட்டு யுத்த அனர்த்தங்களால் அவ்வப்போது இடையூறு களையும், தளர்வுகளையும் எதிர்கொண்டாலும் இயலுமைக்கேற்ப தனக்கென்ற ஸ்தானத்தை இது தக்கவைத்துக் கொண்டே உள்ளது. நான் அதிபராக இருந்த காலத்தில் இதன் சேவையால் பாடசாலையின் மீது பற்றைக் கொண்டிருந்த பழைய மாணவர்கள் இதற்கான சுற்று மதிலை அமைக்கத் தொடங்கி, பெரும்பகுதி வேலையை முடித்திருந்த தோடு, தற்போது இது முழுமை பெற்றுள்ளது. தற்போது விளையாட்டு மைதானத் துக்கான மதில் கட்டமைப்பையும் பெற்றுப் பொலிவுடன் திகழ்கின்றது. பாடசாலைக் கான காணியின் சமநிலையற்ற தன்மை பௌதிக விருத்திக்கு ஒரு இடையூறாக இருந்தபோதும், அதையும் சவாலாக ஏற்று அபிவிருத்தி கண்டுள்ளது. தன்னிடம் வந்த மாணவச் செல்வங்களுக்கு நாட்டில் உள்ள கல்விச் சட்டத்திற்கு அமைய "13 வருடக்கல்வியை வழங்கியே வெளியேறவிடுவேன்." என்ற தீர்மானத்துடன், 13 வருடக் கல்விச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் பாடசாலைகளில் ஒன்றாக இது திகழ்வதும் சிறப்பிற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீகக் கட்டமைப்பிலும், வழங்கும் கல்வியின் பண்பு ரீதியான விருத்தியிலும் மேலும் பல படிகளைக் கடந்து மேன்மையடைய வேண்டுமென மனதார இக் கல்வித்தாயை வாழ்த்துவதுடன் இக்கல்வித் தாயிடம் கல்வி பெறும் மாணவச் செல்வங்களுக்கும் இதற்குப் பெருமை சேர்க்கும் வகையில், கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி தங்களுடைய வாழ்வையும் மேன்மைப் படுத்துவதுடன் மனிதகுல மாண்புகளைப் பின்பற்றும் சீலர்களாகவும் வாழ வேண்டுமென அன்போடு வேண்டிக் கொள்கிறேன். அகிலமெல்லாம் உன்புகழ் ஓங்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு. ஐ. குகானந்தராசா**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்நாள் அதிபரின் உள்ளத்திலிருந்து...



வன்னி மண்ணின் இயற்கை அன்னையின் வளம் நிறைந்த அளப்பரிய நகரில் பிரசித்தி பெற்று கல்வி உலகில் தலை நிமிர்ந்து சிறந்து விளங்கும் பாடசாலைகளில் ஒன்றாக கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் துலங்குகின்றது. இப் பாடசாலை 50 வது நிறைவு ஆண்டின் பொன்விழாவை காண்பதையிட்டு பெருமை அடைகின்றேன்.

இப் பாடசாலை அமைந்துள்ள இடம் பல கிராமங்களை அடக்கிய ஊட்டப்பிரதேசங்களைக் கொண்டதுடன் கிளிநொச்சி நகருக்கும் அண்மையிலும் அமைந்தமை குறிப் பிடத்தக்க விடயமாகும். கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் தரம் - 1 தொடக்கம் தரம் -13 கலை, வர்த்தகப்பிரிவுகளை கொண்டமைந்த 1c கலவன் பாடசாலையாகும். அன்று தொடக்கம் இன்றுவரை பல உயர்மட்ட சித்திகளை பெற்று பல தடங்களைப் பதித்துள்ளது. இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பற்பல உயர்சாதனைகளைப் புரிந்துள்ளது. இப் பாடசாலையில் கல்வி பயின்ற மாணவ மணிகள் உள்நாட்டிலும், (ஏனைய வாழும்) அந்நிய நாடுகளிலும் கல்வியியலாளர்களாகவும் மற்றும் பல்வேறு தொழில் துறைகளிலும் பிரகாசிக் கின்றார்கள்.

இப்பாடசாலையின் 2002 - 2007 காலப் பகுதிக்குள் 1700க்கு மேற்பட்ட மாணவர்களும் 130 க்கு மேற்பட்ட ஆசிரியர் குழாமும் காணப்பட்டனர். இதனால் இடப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மாணவ்ரகளுக்கு இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றும் இருபாலாசிரியர்களுக்கும் விடுதிகள் இரண்டும் திரு.ப.அரியரட்ணம் முந்நாள் கல்விப்பணிப்பாளர் அவர்கள் அடிக்கல் நாட்டி கட்டடவேலைகள் ஆரம்பித்து வைக்க திரு.குருகுலராஜா முந்நாள் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களால் திறப்பு விழாவின் போது கட்டடங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன. மேலும் மேம்பாலம், கிணறு ஒன்றும் சிறுவர் முற்றமும் இக்காலப்பகுதியில் புதிதாக அமைக் கப்பட்டு பாவனைக்கு உட்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதியிலேயே கிளிநொச்சி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு.இராசநாயகம் அவர்களால் பாடசாலைக்கென நிரந்தர மைதானக்காணியும் பெற்றுத்தரப்பட்டது.

இப்பாடசாலை சகல துறைகளிலும் பெருமைகூறுமளவிற்கு துலங்கியமை மிகவும் அளப்பரிய பணியாற்றியவர்களில் முதலிடமாக போற்றப்பட வேண்டியவர்கள் தன்னலமற்று அர்ப்பணிப்போடு சேவையாற்றிய கௌரவத்திற்கும் மரியாதைக்குமுரிய ஆசிரியர்கள் என்பதனை சிரம்தாழ்த்திக் கூறுவதில் பெருமையடைகின்றேன். மேலும் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பல்துறைசார்ந்தவர்களுடன் இணைந்து எதிர்கால சந்ததியினரை உலகத்திற்கேற்ப சிறந்த வல்லுனர்களாக சமூகத்திற்கு வழங்கி என்றென்றும் நிலைத்திருக்க எனது நல்வாழ்த் துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

**திருமதி. பிரபாலினி திலகநாதன்**
முந்நாள் அதிபர்,
கிளி/கனகபுரம் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவில் கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்



ஈழமணித்திருநாட்டில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் மாகாணமாக வடமாகாணம் திகழ்கின்றது. வடமாகாணத்தின் மத்தியில் கிளிநொச்சி மாவட்டம் உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் யாழப்பாணம் கண்டி நெடுஞ்சாலையில் மேற்குத் திசையில் 2 கிலோ மீற்றர் தூரத்தில் கனகபுரம் கிராமத்தில் அமைந்துள்ள 1 சீ பாடசாலையே கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகும். கனகபுரம் மகா வித்தியாலய பொன்விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கு வதில் பெரு மகிழ்வடைகின்றேன். அன்னையின் 50 வருட வளர்ச்சிப்பாதையில் 3 வருடங்கள் அதிபராக கடமையாற்ற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமைப்படுகின்றேன்.

புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக சேவையாற்றும் ஆசிரியர்குழாம், கற்கும் ஆர்வமு டைய மாணவச்செல்வங்கள், எந்நேரமும் உதவத்தயாரான பெற்றோர் இவையெல்லாம் இவ்வித்தியாலயத்தில் உள்ள பெறுமதிமிக்க வளங்கள் எனலாம். நகரை அண்மித்த பாடசாலையாக அமைந்த நிலையிலும் விடுதி வசதிகளைக் கொண்டிருந்தமை பாட சாலை செயற்பாட்டிற்கு மேலும் உறுதுணையாக அமைந்தது.

இவ்வித்தியாலயமும் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது எனின் மிகையாகாது. சமூகப்பற்றுள்ள, பல்துறை ஆற்றலுள்ள மாணவர் களை உருவாக்கி சமூக எதிர்பார்ப்பை பூர்த்தி செய்த பெருமையும் இவ்வித்தியாலயத்திற்கு உண்டு. இத்தகைய பெருமையும், பெறுமதிமிக்க வளங்களையும் கொண்டிருந்த இவ் வித்தியாலயத்தின் அதிபராக கடமையேற்று நடத்தியமை மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் எனது கடமைக்காலம் வேதனையும், சோதனையும் நிறைந்த போர் உக்கிரமடைந்த காலமாக மாறி இருந்தது. இந்நிலை எமது வித்தியாலயத்திற்கு மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, பாடசாலைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் பொதுவானதாக அமைந்தது. அருகிலுள்ள கிராமமான ஜெயந்திநகரில் 2007 நவம்பரில் நடாத்தப்பட்ட விமானக் குண்டுத்தாக்குதலால் பாடசாலை செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மாணவர்கள், ஆசிரியர்கள் இடப்பெயர்விற்குத் தயாரான நிலையில், மாணவர்களின் வரவு வீதம் 2018 தை மாதம் தரம் 1 கால்கோள்விழா அன்று பாட சாலையில் அண்மையில் நடாத்தப்பட்ட அகோர விமானக் குண்டுத்தாக்குதல் பாடசாலை செயற்பாடுகளை அச்ச உணர்வுடன் நடத்தும் நிலை ஏற்பட்டது.

கிளிநொச்சி மக்கள் 2008 புரட்டாதி மாதம் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் இப் பாடசாலையும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக கிளி/தர்மபுரம் மகா வித்தியாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 மார்கழி வரை இயங்கியது. எமது வித்தியாலயத்தின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டும் என்ற பெற்றோர், ஆசிரியர்களின் கருத்திற்கமைய விசுவமடு தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து பாடசாலையை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது, பாடசாலையின் முக்கியமான ஆவணங்கள், சொத்துக்கள் விசுவமடுவிற்கு நகர்த்தப்பட்டது. பாடசாலையை நகர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய பிரதி அதிபர் திரு.த.சேதுபதி அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

2009 தை மாதம் தொடக்கம் பாடசாலையை நடாத்தமுடியாத நிலை ஏற்பட்டது. மக்கள் மேலும் இடம்பெயர்ந்து மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களில் தங்கி வாழ்ந்தனர். போர் மூலம் தீவிரமடைந்ததால் மக்கள் பட்டினி, படுகாயம், வறுமை என்பவற்றிற்கு முகம் கொடுத்து எந்நேரமும் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டது.

பாடசாலை மாணவர்கள் பலர் கொல்லப்பட்டனர். எமது வித்தியாலய ஆசிரியர் திருமதி.ஞா.தேவேந்திரன் அவர்களும் 2009 மார்ச் மாதம் மாத்தளன் பகுதியில் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்டார். மக்கள் போர் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் பல்வேறு பிரச்சினைகளுடன் வாழும் நிலை ஏற்பட்டது. இடமாற்றம் பெற்ற நிலையில் 2009 ஐப்பசியுடன் இடைத்தங்கல் முகாமில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கடமையாற்றச் சென்றபோதிலும் இவ் வித்தியாலயத்தில் கடமை யாற்றிய காலம் என்றும் நினைவில் நிலைத்திருக்கும்.

இவ் வித்தியாலயம் மேலும் வளர்ச்சி கண்டு நன்மாணாக்கரை உருவாக்கும் கலைக்கூடமாக வளர என்றும் இறைவன் ஆசியை வேண்டுகின்றேன்.

**திருமதி.தேவகி புவனேஸ்வரன்**
முந்நாள் அதிபர்

அதிபர்

யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்
ஏழாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரம் மகாவித்தியாலய பொன்விழா மலருக்கான வாழ்த்துச்செய்தி



கனகபுரம் மகா வித்தியாலயத்தின் 50 வது ஆண்டு நிறைவு விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் உள்ளார்ந்த உவகையடைகின்றேன். கனகபுரம் படித்த வாலிபர் மேட்டு நிலக் குடியேற்றத்திட்டம் 1958ஆம் ஆண்டு, இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட படித்தவாலிபர் மேட்டுநிலக் குடியேற்றத்திட்டமாகும். இத்திட்டமானது திட்டமிடப் பட்டு குடியேற்றம் செய்யப்பாமையால் பாடசாலை, கோவில்கள், விளையாட்டு மைதானம் போன்ற பொதுச் செயற்பாடுகளுக்கு காணிகள் ஒதுக்கப்படவில்லை. அதனால் கனகபுரம் முதலாம் பண்ணை அங்கத்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட மேட்டுநிலத்தில் ஒரு பகுதியை அவர்களின் விருப்பத் தோடு பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டது. பாடசாலைக்கு தெரிவு செய்யப்பட்ட இடம் சமதரையாக இல்லாது விட்டாலும் வேறுபொருத்தமான இடம் இல்லாதபடியினால் தற்போதுள்ள இடத்தில் அமைக்கப்பட்டது. அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் க.பொ.இரத்தினம் அவர்களினதும், கனகபுரம் மக்களினதும், அயற்கிராம மக்களினதும் அயராத முற்சியினால் 1969ஆம் ஆண்டு கனகபுரம் மகா வித்தியாலயம், கனகபுரம் அ.த.க பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் முதலாவது அதிபர் அமரர்.க.பொன்னையா அவர்களை கனகபுரம் பாடசாலைச் சமூகம் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். இப்பாடசாலை மற்றைய பாடசாலைகளைப் போல் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தாலும் கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் மற்றும் ஏனைய நிகழ்வுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னிலை வகித்து வந்ததை யாராலும் மறுக்கமுடியாது. இடப்பெயர்வு காலங்களிலும் 2000 க்கு மேற்பட்டவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வந்தார்கள். தற்போது மாணவர்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. முன்பு போல் கூடிய மாணவர்கள் இணைந்து கற்பதற்கு கனகபுரம் மக்களும் அயற் கிராம மக்களும் தங்கள் பிள்ளைகளை கனகபுரம் மகா வித்தியாலயத்தில் சேர்க்க வேண்டுமென்று அன்பாகவும், வினயமாகவும் கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலை ஆரம்ப காலம் முதல் பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எல்லோரும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டு வந்ததை எல்லோரும் நன்கு அறிவார்கள். எல்லோரையும் பாராட்டுகின்றேன். கனகபுரம் மகா வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை பழைய மாணவர்கள், பாடசாலை நிர்வாகம் ஒன்று சேர்ந்து எல்லோரும் வியக்கும் வகையில் பலவிதமான செயற்பாடுகளைச் செய்து வருவதையிட்டு மிகவும் பாராட்டுகின்றேன். இவர்களைப் போல் இனி வருங்காலங்களிலும் பாடசாலை நிர்வாகம், பழைய மாணவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்பட அருள்மிகு கனகாம்பிகை அம்மன் சகலருக்கும் சகல செல்வங்களையும் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவனை மனதார வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.கனகரத்தினம்
கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கனகபுரம் மகாவித்தியாலயமாகக் கல்வித்தாய் பொன் விழாக்காணும் இவ் ஆண்டில் பொன்விழா மலருக்கு ஆசிச் செய்தி. வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

வயலும் வயல் சார்ந்தும் நீர்வளம், நிலவளம் நிறைந்த இக் கனகபுரம் மண்ணிற்கு வளம் சேர்த்து வளர்ந்துவரும் இப் பாடசாலை ஐம்பது ஆண்டுக்குள் தன் பணியை எம் மாணவர் களுக்கு வழங்கி வரலாற்றில் தடம் பதித்த பல வல்லுனர்களை வருடா வருடம் எம் மக்களிற்காய் பணியாற்றக் கையளிப்பது பெருமைக்குரியதே. கலை, கலாசாரம், பண்பாட்டு அம்சங் களுடன் நிறைந்து செல்வம் செழிப்பையும் கொண்ட இக்கிராமத்தின் தனிச் சிறப்பிற்கு பாடசாலை ஓர் அத்திவாரமாக அமைகின்றது, காலத்திற்கு காலம் வரும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் தம் சேவைக்காலத்தில் அயராது பாடுபட்டு வருவதை யுத்தத்தின் வலிகளால் வந்த வீழ்ச்சிக்குப் பின்னால் இன்று இப்பாடசாலை பெற்றுள்ள வளர்ச்சியினூடே காணக்கூடியதாக உள்ளது.

வன்னி மண்ணிற்கு அழகு சேர்க்கும் பாடசாலை சமூகத்தின் அளப்பரிய சேவைக்கு என்றும் நாம் மதிப்பளித்து பாடசாலை வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இப்பாடசாலை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரிற்கும் நன்றி கூறுவதோடு இப்பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு அனைத்து துறைகளிலும் மென்மேலும் வளர்ச்சி பெற்று ஓர் கல்லூரியாக மிளிர்ந்து ஒளிவீச வாழ்த்தி பொன்விழா மலர் வெளியீடு சிறப்புற அமைய என் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வி .க.விஜிதா**
கிராம அலுவலர்.
கனகபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

இப்பாடசாலையின் 25 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது வெள்ளி விழா மலருக்கு பழைய மாணவர் சங்க செயலாளராக நான் கட்டுரை வழங்கியிருந்தேன். தற்போது பொன் விழா மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிளிநொச்சி கனகபுரம் பாடசாலை 1969ம் ஆண்டு அமரர் சி.பொன்னையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அவரது அயராத முயற்சியினால் வீடு வீடாக சென்று பெற்றோருடன் தொடர்பு கொண்டு மாணவர்களை ஒன்று திரட்டி இப்பாடசாலையை மகாவித்தியாலயம் எனும் நிலை அடைய காரணமாக இருந்தார் என்பது வரலாறு. தொடர்ந்து பல அதிபர்கள் இப்பாடசாலையை பொறுப்பேற்று இருந்தாலும் பாடசாலையின் பொற்காலம் என அதிபர் திரு.க.ஆறுமுகதாஸ் அவர்களது காலத்தையே கூற முடியும். அக்காலத்தில் பாடசாலை கல்வி, விளையாட்டு மற்றும் கலைத்துறை ஆகிய அனைத்து துறைகளிலும் மாவட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகவும் சவாலானதாகவும் விளங்கியது. இதற்கு அவரது தலைமைத்துவ பண்பு ஆளுமை மிக்கதாக இருந்ததே காரணமாகும். வளங்களை திரட்டி கிடைக்கும் வளங்களைத் திட்டமிட்டு தூரநோக்கோடு சிந்தித்து செயற்படுத்துவதே நிறுவத்தலைவரின் பண்புக்கு வரைவிலக்கணம் என்பதை நிரூபித்து காட்டியிருந்தார். எனினும் இடப்பெயர்வு பாடசாலை வளர்ச்சியில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தாலும் 2000 மாணவர்கள் கல்வி கற்று வந்தார்கள். அப்போதைய காலத்தில் பாடசாலை பல சாதனைகளை படைத்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருப்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

கனகபுரம் மகாவித்தியாலயத்தில் பொன்விழாவைக் கொண்டாடுவதற்காக பழைய மாணவர்கள் தனிப்பட்ட வகையிலும் க.பொ.த (சா/த) பிரிவு ரீதியாகவும், குடும்பங்களாகவும் மேற்கொண்டு வரும் பாரிய அபிவிருத்தி திட்டங்களினூடாக சாதனை மிகு பாடசாலையாக தரமுயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடம்பெறவிருக்கும் பொன்விழா நிகழ்வு சிறந்த முறையில் இடம்பெறவும், எதிர்பார்க்கும் பாடசாலையாக இனிவரும் காலங்களில் வளர இறைவனை பிரார்த்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. அ. றெஜிஅலோசியஸ்**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
கனகபுரம் மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

கிளிமாநகரிலே
படித்த வாலிபர்திட்டத்திலே
கனகபுர கிராமத்திலே
பொன்விழா காணும்
கனகபுரம் மகாவித்தியாலயம்

பொன்னான காலமது
பொன்னையா முதல் ஆசான்
தொடக்கிவைத்த பள்ளித்தாயே
இவளுக்கு அகவை ஐம்பது
தாயே உனது கருவிலிருந்து
ஆயிரம் ஆயிரம் தலைவர்களை உருவாக்கி
உன்பணி தொடர்கின்றதே தாயே
உனது பணி பொன்னானது
பொன்விழா காணும் உன்னை
வாழ்த்தி ஆசிச்செய்தி கூற
நான் என்ன புண்ணியம் செய்தேன் தாயே
மென்மேலும் உனது பணி தொடர
மனமுருகி வாழ்த்துகின்றேன்.
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

**திரு. தி. மகேந்திரம்**
பா. அ. ச. செயலாளர்,
கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தின் இதயப் பகுதியில் அமைந்துள்ள கனகபுரம் மகாவித்தியாலயம், கனகபுரம் கிராமத்தினதும், அயற் கிராமங்களான திருநகர், உதயநகர், அம்பாள்குளம், ஆனந்தநகர், விநாயகபுரம், செல்வாநகர் போன்ற கிராமங்களினதும் அறிவுப் பசியைப் போக்கி பல்வேறு துறைகளிலும் பல கல்விமான்களை உருவாக்கிய பாடசாலை. கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் ஐம்பதாவது ஆண்டு நிறைவு கண்டு பொன்விழா எடுப்பதையிட்டும், பொன்விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மிகுந்த வளப்பற்றாக் குறைகளின் மத்தியில் கல்வி கற்று நிறைந்த பல பதவிகளை வகிக்கும் பழைய மாணவர்கள், மற்றும் சமூகத்தின் முற்போக்கு சிந்தனையாளர்களாக, சமூகத்தின் வழிகாட்டிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் பழைய மாணவர்கள் சார்பாக இன்றைய மாணவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது "நீங்கள் சகல வசதிகளும் கிடைக்கும் காலகட்டத்தில் கல்வி கற்கிறீர்கள். உங்களுக்கு கிடைத்த இந்த உயர்வான வாய்ப்பினைப் பயன்படுத்தி நாட்டின் எதிர்கால பொறுப்புக்களை ஏற்கத் தயாராக வேண்டும்" என்பதாகும்.

என்னைப் போன்ற பல சகோதர உறவுகளின் அறிவுக்கண்ணைத் திறந்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய கனகபுரத் தாயின் மாணவ, மாணவியர் பலர் மென்மேலும் பல சாதனைகளைப் புரிந்து வையகம் போற்ற வாழ்கவென வாழ்த்துகிறேன்.

**திரு. கனகேந்திரம் இளவழகன்**
கனகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவர்சங்கத்தின்
சர்வதேச இணைப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



நான் சுந்தரேஸ்வரி யோகராசா, எங்கள் பெருமைக்குரிய கனகபுரம் மகாவித்தியாலயத்தின் "பொன்விழா" நிகழ்வுக்கு வாழத்து செய்தி அனுப்புவதில் மிகவும் பெருமிதம் அடை கின்றேன். இந்தப் பாடசாலை 1969ம் ஆண்டு ஆவணிமாதம் ஆரம்பிக்கப்பட்டு இன்று 50 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. என எண்ணும்போது மனம் கொஞ்சம் பின்னோக்கிப் போகின்றது. ஆரம்ப நாட்கள் திரு,பொன்னையா மாஸ்ரர் அவர்கள் வந்து பாடசாலை பதவி ஏற்ற நாட்கள்.. அவருக்குப் பின்னர் ஒரு சில ஆசிரியர்கள் என்று சிறிய அளவில் இருந்து இன்று எத்தனையோ டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள் என பலவிதமான அறிவாளிகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் பாடசாலையின் வளர்ச்சி, எண்ணிலடங் காதவை.

நானும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் பங்காற்றி இருக்கின்றேன் என எண்ணும் போது இராமர் பாலம் கட்டும்போது அதில் ஒரு சிறிய அணிலும் தன் பங்குக்கு உதவி செய்தது போல 1980- 1982 வரையான காலத்தில் இப்பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக பணியாற்றியுள்ளேன். அப்போது காலம்சென்ற திரு.பரராஜசிங்கம் அவர்கள் தலைவராக இருந்து செயற்பட்டோம். அப்போது தான் நான் தனித்து நின்று பல தடவைகள் முயற்சி செய்து M.P திரு.ஆனந்தசங்கரி அவர்களின் முழு ஒத்துழைப்புடன் எங்கள் பாடசாலைக்கு ஒரு விளையாட்டு மைதானம் தேவை என்பதனை வலியுறுத்தி பாடசாலை வீதி, டிப்போ றோட் சந்தியில் 3 ஏக்கர் காணியை விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு பதிவுசெய்து தந்தனர். அதனை அப்போது நாம் நடாத்திக் கொண்டிருந்த கனகபுரம் மகளிர் சங்கம் (அதில் அப்போது உபதலைவராகவும், செல்வி சந்திரா வைத்திலிங்கம் தலைவராகவும் இருந்தோம்) மூலமாக பணம் சேகரித்து முழுக்காணியையும் திருத்தி விளையாட்டு மைதானத்துக்கு கொடுத்தோம். ஆனால் பின்னர் போர்ச்சூழல் காரணமாகவும் பாடசாலையிலிருந்து அங்கே மாணவர்கள் போய் விளையாடுவது கொஞ்சம் சிரமமாக இருந்ததோ என்னவோ பின்னாளில் அது கைவிடப்பட்டு விட்டது. இதனை அப்போது அங்கு வாழ்ந்த அனைவருக்கும் தெரியும்.

எது எப்படியாக இருந்தாலும் கூட இந்த பாடசாலையின் 50 ஆண்டு வளர்ச்சிப் பங்கில் எமதுபங்கும் சேர்ந்துள்ளது என எண்ணும்போது மிகவும் மனம் நிறைவாக உள்ளது. கனகபுரம் பாடசாலைக்கு முன்பாக நாம் வாழ்ந்த இடம், வீடு என் தந்தையார் ஸ்தாபித்த பைரவர் கோவில் எல்லாமே புதிய பரிமாணத்துடன் நிமிர்ந்து நிற்கின்றன. ஒரு நிமிடம் எம் கண்முன்னே தோன்றும் காட்சிகள் நினைவுகளாக கண் இமையோடு கலந்து பயணிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொர்க்கமே என்றாலும் நம்மூரைப் போல வருமா" என்பது போல நாம் கனடாவில் 25 வருடங்களாக வாழ்ந்தாலும் கூட பசுமையான பழைய நினைவுகள் அடிக்கடி மனதை வருடிக் கொள்கின்றது. எது எப்படியாயினும் எங்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கனகபுரம் மகா வித்தியாலயம் இன்று பொன்விழாக் காணும் அளவுக்கு 50 ஆண்டுகளில் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. மிக போற்றப்படவேண்டிய விடயம், அதற்கு காலம் காலமாக படிப்படியாக எல்லாக் காலங்களிலும் உதவிய சக நல்லுள்ளங்களுக்கும், மற்றும் பழைய மாணவர்களுக்கும் எங்கள் குடும்பம் சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, இன்னும் மென்மேலும் பல தலைமுறைகள் கடந்தும் பெயர் சொல்லும் பெரும் கல்லூரியாக வளரவேண்டும் என நாமும் திருமண வாழ்வில் பொன்விழா கண்ட தம்பதிகளாக வாழ்த்துகின்றோம்.

**திரு.திருமதி. யோகராசா சுந்தரேஸ்வரி**

பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சீரோங்கு வடபுல மண்ணில் வந்தாரை வாழ வைக்கும் எழில் மிகு கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வியும் ஒழுக்கமும் ஒருங்கே வழங்கும் கனகபுரம் மகா வித்தியாலயத்தில் பொன்விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மனமகிழ் வடைகின்றேன்.

யுத்த மேகங்கள் வடபுல யாழ் மண்ணை ஆக்கிர மித்திருந்த **1995 - 1996** காலப்பகுதியில் மக்கள் அனைவரும் மண்ணை விட்டு வெளியேறும் பேரவலம் ஏற்பட்டது. அந்தக் காலப்பகுதியில் பல்லாயிரம் மக்கள் படகு மூலம் கிளிநொச்சி நகரில் குவிக்கப்பட்டனர். என்னதான் சண்டை நடந்தாலும் மண் மீட்புக்காகப் போராடிய வர்களும் சரி இடம்பெயர்ந்த மக்களும் சரி கல்வியை இழக்கத் தயாராக இருக்கவில்லை.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தான் இடம்பெயர்ந்து மாணவர்களுக்குத் தயாரானது. கனகபரம் மகாவித்தியாலயம் காலையில் நிரந்தர மாணவர்களுக்கும் மாலையில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் கல்வியை வழங்குவதில் பாரபட்சம் காட்டாது நடுநிலை நாயகமாக விளங்கிய துணிச்சலும் அஞ்சா நெஞ்சமும் கண்டிப்பு செயற்றிறனுமிக்க அதிபர் திரு (ஆறுமுகம்) அவர்களை மறக்க முடியாது. நாம் இடம்பெயர்ந்த ஆசிரியர்களாக தற்காலிகமாக இணைக்கப்பட்டாலும் தன்னுடைய ஆசிரியர்களாக தற்காலிகமாக இணைக்கப்பட்டாலும் தன்னுடைய ஆசிரியர்களாக எம்மைக் கண்காணித்து வழி நடத்தியமையும் இன்னும் நினைவிலுள்ளது.

சுமார் 24 வருடங்களின் பின்னும் அந்தம் பசுமையான மரநிழலும் ஓலைக் கொட்டில்களும் உருவாக்கிய ஒவ்வொரு இடம்பெயர்ந்த மாணவனும்கனகபுரம் மகாவித்தியாலயம் உருவாக்கிய மாணவர்களே. எனவே ஒவ்வொரு வருடமும் பாடசாலை வரலாற்றைக் கட்டிக்கொண்டே செல்கிறது. 50 வருடகால பாடசாலை உருவாக்கிய உயர் பண்புகள் என்றும் அழியாத வையே. தொடர்ந்து வந்த அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவையே இன்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி, விளையாட்டு கலைத்துறைகளில் பிரகாசிக்க வைக்கிறது என்றால் மிகையாகாது. பொன்விழாவைச் சிறப்பிக்கும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் இறையாசியும் கூறி நிற்கின்றேன்.

"வாழ்க வளமுடன்"

25/146 மடுத்தாய் இல்லம்
புதிய மூர் வீதி
மன்னார்.

**திருமதி சுகந்தி செபஸ்ரியன்**
இளைப்பாறிய வலயக்கல்விப்பணிப்பாளர்
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

கிளிநொச்சி மாவட்டத்தில், கனகம் என்றால் பொன் என்று பொருள்படுகின்ற கனகபுரத்திலே அமைந்துள்ள கிளி/கனகபுரம் மாகவித்தியாலயம் இவ்வாண்டு பொன் விழா ஏற்பாடுகளைத் தாங்கி நின்று பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதையிட்டு எமது கிராமமே விழாக்கோலம் பூண்டு நிற்கின்றது.

ஐம்பது ஆண்டுகள் உருண்டோடிய இப் பொன்னா லாகிய வனப்புமிகு அன்னையின் பொன்விழா மலர் உங்கள் கைகளில் தவழுகின்ற போது கடந்து வந்த பாதையிலுள்ள பாடசாலை சமூகத்தினரின் அர்ப்பணிப்புக்களுக்கு ஒரு கணம் தலைசாய்த்து இதழாசிரியர் என்ற வகையில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இப்பாடசாலையானது தன்னைச் சுற்றியுள்ள கிராமப் பிள்ளைகளைத் தாங்கி நின்று அவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளை வளர்த்தது மட்டுமன்றி, கடல் கடந்த நாடு களிலும் அவர்கள் சிறப்புடன் மிளிர வழிவகுத்ததோடு பலதுறைசார்ந்த சாதனையாளர் களையும் உருவாக்கி இன்று பொன்மயமாகத் தலைநிமிர்ந்து நின்று, அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்போடு இம்மலரை வெளியிட விழைவது குறிப்பிடத் தக்கது.

தங்கள் கைகளில் தவழும் பொன்விழா மலரிற்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகளுடன், காலத்தின் கண்ணாடி என்ற தலைப்பில் பாடசாலை வரலாறும், அறிக்கைகளும், இதயம் பேசுகிறது என்ற தலைப்பில் முந்நாள் அதிபர், பிரதிஅதிபர்களின் பதிவுகளும், வளர்த்துவிட்ட முத்துக்கள் என்ற தலைப்பில் முந்நாள் ஆசிரியர்களின் செய்திகளும், பறந்து சென்ற பட்டாம்பூச்சிகள் என்ற தலைப்பில் பழைய மாணவர்களது உளப்பதிவுகளுடன் பன்முகவிடயங்களும், வழிகாட்டிகளின் வரிகள் என்ற தலைப்பில் விரிவுரையாளர்களின் சிந்தனைகளும், ஏற்றிவிடும் ஏணிகள் என்ற தலைப்பில் ஆசிரியர்களின் எழுத்துருவாக்கங்களும் நாளைய விடிவெள்ளிகள் என்ற தலைப்பில் மாணவர்களது ஆக்கங்களும் தொகுப்புகளும், விண்ணைத்தொடும் வீரர்கள் என்ற தலைப்பில் சாதனையாளர்களின் சாதனைகளும் செஞ்சோற்றுக்கடன் என்ற தலைப்பில் நன்றியுரையையும் இம்மலர் தாங்கி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலருக்கான வேலைகளை ஆரம்பிக்கும் போது இம்மலர் சிறப்பானதாக அமைய வேண்டுமென அன்று தொடக்கம் இன்று வரை உழைத்த பழைய மாணவருக்கும், மலர்க் குழுவினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்விழா மலரானது எட்டுத் திக்கும் மணம் வீச ஆசிச்செய்திகள் வாழ்த்துச் செய்திகள் வழங்கியவர்களுக்கும், ஆக்கங்கள் தொகுப்புக்கள் வழங்கிய அத்தனை உள்ளங்களுக்கும், மலர் உருவாக்கித்திற்கு நிதிப் பங்களிப்பு வழங்கிய "கலைக் குடும்பத் தினருக்கும்" அழகுற அச்சேற்றம் செய்த Vista8 அச்சகத்தினருக்கும் விளம்பரங்களைத் தந்து உதவியவர்களுக்கும், புகைப்படங்களை எடுத்துதவிய அஸ்வின் புகைப்படக் கலையகத்திற்கும் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் நன்றியுடன் கூடிய வாழ்த்துக்களைக் கூறி மலர் சிறக்க இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

காலச் சூழ்நிலை காரணமாக எமது பாடசாலையில் **2010**ஆம் ஆண்டுக்கு முன்னர் தரம் **05** புலமைப்பரீட்சை, க.பொ.த.சாதாரண தரம், க.பொ.த.உயர்தரம் ஆகியவற்றின் பெறுபேறுகள் பதிவுகள் யாவும் இல்லாதுள்ள நிலையில் சில தரவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளது. இதற்காகப் பெருமனதுடன் மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எவ்வாறாயினும் இம்மலர் வெளியீடு எமது பாடசாலையின் இரண்டாவது வரலாற்றுப் படைப்பாக உள்ளது. எனவே, பிழைகள், தவறுகள் நேர்ந்திருக்கலாம். "நேர்கொண்ட சிந்தனையாளர் பொறுத்திடுவீர்" என்ற திடமான நம்பிக்கையோடு கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் உயர்ச்சிபெற்று எதிர்காலத்திலும் எல்லா வளங்களுடனும் திகழ வேண்டுமென வாழ்த்தி **50**ஆவது ஆண்டு நிறைவையொட்டி இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருமதி.கோசலாதேவி நவரட்ணராஜா
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நாயகியை வாழ்த்துகின்றோம்

கிளி மண்ணில் விளைந்த முத்தே!
கனகம் தந்த சொத்தே - உன்
கரங்களால் விலங்கிடப்பட்ட
சொந்தங்கள் யாம் சொல்லுகின்றோம்
உன் பிறப்பை அதன் சிறப்பை

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து
ஒன்பது. அடுத்தடுத்து பதினொன்று
போட்டால் அப்படியே உன் ஜனனம்
நித்திலத்தில் நீ அவதரித்தாய்
சரித்திரத்தில் சான்றானாய் - நீ
பிரசவித்த பிள்ளைச் செல்வங்கள்
பார் - எங்கும் புகழ் பரப்பி
பணி செய்யும் அழகே தனியழகு

அம்மா! உனக்கோர் நாமம்
இட்ட அர்ப்பண நாயகன்
ஸ்ரீ காந்தா வையகம் போற்ற
வாழ்ந்த மா மேதை!
மூத்த மகன் பொன்னையா
முதல்வராகி வரலாறு படைக்க
அறுவர் வந்து அடைக்கலம் ஆனதினால்
அரும்பியது உன் பணி அற்புதமாய்.
தொடர்ந்து வந்த காலத்தில்
தொடராகப் பணி செய்த
பெருந்தகைகள் வாழியவே!

பாலைமர நிழலிலே பக்குவமாய்
கதை சொன்ன வரலாறும்
ஆரம்பம் (க்) கல்வி கற்ற மாணவரின்
மனதிலே அழியாத நினைவுகள்
ஆக்கம் கண்டதினால் அன்று
எழுபதுகளில் ஏற்றம் கண்டு
அபிவிருத்திச் சங்கமொன்று அரும்பியது

செயலாளர் அமிர்தரத்தினமும் சிறப்பான
பணியாற்றி சென்றதினால் உன்
சிந்தை குளிர்நததம்மா
சிக்கல்கள் நாட்டில் எழுந்ததினால்
சின்னா பின்னமாகி
இடப்பெயர்வை சந்தித்து

இடம் தேடி வந்த நேரத்தில்
கனகத் தாய் கரம்பற்றி
தன கருகில் அமர்த்தியதால்
அனேக அயல் கிராமங்கள்
புதுப் புதுவாய் பூத்ததுவே!

செல்வமிழந்து சீரிழந்து சிறகொடிந்து
சொந்தங்கள் வந்ததினால் - பள்ளியிலே
பாலகரின் எண்ணிக்கை பல மடங்கு
ஆனதினால் ஆசான்கள் அளவும்
பத்தாகிப் பல்கிப் பெருகியதே.

அடுத்த மகன் திடம் கொண்ட
தில்லை நாயகம் திறம்பட
பணியாற்றிச் செல்ல
சம்பவத் திரட்டில் குறிப்பெழுதும்
வழக்கத்தை
நிலைப்படுத்தி எண்பத்தொன்று தனில்
சின்ன மகன் சிங்கார வேலு
சிறப்பாகப் பணியாற்றிச் செல்ல
அடுத்தடுத்து அன்பு மக்கள்
இருவர் முதல்வர்களாகி வந்தாலும்
எண்பத்து இரண்டில் இடை நடுவில்
சென்று விட்ட காலமது.
இங்கிலீசை இங்கிதமாய் எடுத்தியம்பும்
ஆசான் அவர்தான் சிவகுமாரன் சேர்
சிறப்பாகப் பணியாற்றி சிந்தையில்
இடம் பிடித்தார் இக்காலமதில்
செல்வி சின்னத்தம்பியும்
பொறுப்புடனே பணி செய்து
கழுத்துப் பட்டியணியும் வழக்கத்தை
வரலாறாக்கி வைத்த பெருந்தகைகளை
இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

கருத்தூன்றிக் கற்றிட கலைகள் பயின்றிட
கன்னி விளையாட்டுப் போட்டியையும்
முதன் முதலில் முழுசாக நடாத்தி
களங் காண வைத்த மாணவ வீரர்கள்
மாவட்ட மட்டத்திலும் சாதனைகள்
பல படைக்க வழி சமைத்த - நல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்ப சிவம் முதல்வரையும்
இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

அற்புதமான முதல்வர் ஆறுமுகதாஸ்
அவர் புகழைப் பறைசாற்ற
அர்ப்பணப் பூக்கள் இங்கே
ஆயிரம் மாயிரமாம் - இவர்
காலமது பொற்காலம் அதில்
புதுமைமகள் பல படைத்து
சாதனை வீரர்களாய் சரித்திர
நாயகர்கள் அன்னை மடியில்
அவதரித்த அர்ச்சனை மலர்கள்
முதல் முதலாய் தரம் ஐந்தில்
தடம் பதித்த அண்ணல் அமல்ராஜ்
அவர்களுடன் சாதனையை
தனதாக்கி பல்கலைக் கழகம்
தெரிவான முதல்தர மாணவர்களாய்
துரைரட்ணமும் பள்ளி வரலாற்றில்

பதித்த சுவடுகளை புள்ளியிட்டுப்
பார்க்கின்றோம் பூரிப்பால்
களிக்கின்றோம் அவைதனிலே
அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஒற்றுமையாய் அத்தனை பேரும்
ஒன்று பட்டு பத்திரமாய் அமைத்த
பழைய மாணவர் சங்கமது
அத்திவாரமாய் அமைந்ததினால்
இத்தனையும் இங்கே நிகழ்ந்ததுவே
வண் C யாய் வனப்படைந்தவும்
வெள்ளிவிழா வெடுத்து வெற்றித்
தடங்கள் பல பதித்து
இங்கே சிகரத்தை தொட்டதுவும்
வேட்டி உடுத்தி வீறு நடைபோடும்
நல்லதிபர் ஆறுமுகதாஸ் காலமதை
வாழ்த்துகின்றோம்.

பதவி உயர்வு பெற்று பயணித்த
வேளையிலே பள்ளி முதல்வரான
சந்திர ராசா பற்றுடனே பவனி வந்தார்
கல்வியறிவுடனே கலையறிவும்
பெருக வழியமைத்த பெருந்தகையை
வாழ்த்துகின்றோம்.

போர்மேகம் கலைந்து - இங்கே
புதுப்பணிகள் தொடர
என் கடன் பணிசெய்வதே
என்றமைத்த கோட்பாட்டை
தன்னகத்தே கொண்டு செயற்பட்ட
முதல்வர் பிரபாலினி அவர்களையும்
இந்நாளில் வாழ்த்துகின்றோம்

முன்னவர் செய்த முதற்தர சேவைதனை
முழுவதாய் கூறி விட்டோம்
பின் வந்த முதல்வர்களின் காலமதில்
கனிந்தவையும் கனதியானவைதான்
ஆரம்ப காலமது அமைதியின் ஊற்று
பின்வந்த காலம் பிரச்சினையின் ஊற்று
படிப்பதற்குப் பள்ளி இல்லை
பாட நூலில்லை பிள்ளையில்லை
இத்தனையும் தாங்கி ஏடு எடுத்து
கல்வி சொல்ல வாத்தி இல்லை
என்ற காலத்தின் கோலமது

அத்தனையும் தாங்கி ஏங்கி - இன்னல்கள்
மத்தியில் தான் இப்போதைய கல்வி
ஒன்றிரண்டா ஓராயிரம் சிக்கல்கள்
பள்ளியிலே இத்தனைக்கும் தலை சாய்த்து
தவம் கிடக்கும் முதல்வர்கள் எத்தனை
பேர்?
படிப்பினிலே போட்டி பள்ளியிலே
போட்டி
பக்கத்து வீட்டுடனும் போட்டி
ரியூசனிலே போட்டி ரியூடரிவாத்தியிலே
போட்டி இத்தனையும் தாங்கி வரும்
மாணவர்க்கு பள்ளியிலே படிப்பதில்
போட்டி அத்தனையும் பள்ளியிலே
படிப்பிப்பதில் ஏட்டிக்குப் போட்டி
இதுமட்டுமல்ல என்னும் எத்தனையோ
போட்டி

சொல்லனாத் துயரமதில்
சோதனைகள் பல சூழ
சொத்துச் சுகமிழந்து சோர
கல்வியே கருத்தனமாகி
கட கடவென ஓடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைக்குள் வந்து படிப்பைப்
பார்வையிட்டும், வண்டுடனே
வட்டமிடும் கிபிரையும் பார்த்து
வங்கர் தேடி ஓடும் காட்சியை
மறக்க முடியுமா? இத்தனையும் உண்மை
இதுவும் ஓர் காலம் தான் பத்திரமாய்
மாணவரைப் பார்ப்பதையும் பழக்கமாக்கி

பள்ளியிலே வலம் வரும் பண்பான
முதல்வரவர் அவர் காலமதிலும்
சாதனைகள் ஏராளம், பன்னிரண்டு
மாணவர்கள் பாஸ் பண்ணி தரம்
ஐந்தில் ஒரு திருப்புமுனை மட்டுமல்ல
பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகி
நின்றமையும் சாதனைதான்
இதைப் புரியாததும் வேதனை தான்

கட்டு மானம் இழந்து அடையாளம்
அழிந்து ஆவணங்கள் தொலைந்து
ஆன காலப் பகுதியிலும் கல்வியொன்றே
செல்வமென மதித்து ஊர்வந்து
கல்விச் சாலைதனை இயக்கி
முதல் முதலாய் முன்னுதாரணமான
முதல்வரையும் முதற்தரமாய்க்
கொண்டதுவும் சாதனைதான்
நாலி ரண்டு திங்கள் என
பணியாற்றி பதவி உயர்வு
பெற்றுச் சென்ற செம்மலையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

அமைதியின் சொரூபமாய் அதைத்
தொடர்ந்து வந்த காலமதில்
அதிபராய் வந்ததினால் பள்ளியிலே
சில தடங்கள் பதித்து பொன்
எழுத்தால் பொறித்து விட்ட
திறி "ஏ" சாதனையை சாதித்த - அந்த
இரு மாணவச் செல்வர்களை - இங்கே
மரியாதை செய்கின்றோம்
விஷேட கல்வி கணனியறை
நூல்களுக்கோர் வாசிப்பறை
கட்டடங்கள் கணித அறை கனதியாய்
கிடைத்ததுவும்
கல்வியிலும் கலைகளிலும்
மாணவர்கள் தடம் பதித்ததுவும்
பொற்காலம் எனப் புடமிட
முடியாதோ, அத்தனையும் உண்மைதான்
ஆவணமாய் உள்ளதுவே
இக்கால முதல்வராய் பணியாற்றி
பதவி உயர்வு பெற்று சென்றவரை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

வளர்ச்சிப் பாதையின் வண்ணமாய்
வளர்ந்து வரும் பள்ளியின் முதல்வராய்
வளம் பல சேர்த்து களம் கண்ட
அதிபராய், ஆசானாய் கல்வியிலே
க.பொ.த விலே பத்து ஏ சித்தி
பலரும் மகிழ்வடைய சாதனையாக்கி
வரலாற்றில் பொறித்திட
வகை செய்து, தெருவிலே திரியாமல்
வினைத்திறனாய் பதின்மூன்று வருடமென
பள்ளியிலே தனியொரு பிரிவு
புதிது புதிதாய் வளம் சேர்க்கும்
பழைய மாணவர்கள் ஒன்றிணைவும்
பாராட்டத் தக்கது தான்
பொன்விழா நாயகியை பொற்கரங்களில்
தாங்கும் முதல்வராய் எம் பள்ளியிலே
இன்னும் பலப் பல சாதனைகள்
படைக்க சந்தர்ப்பங்கள் - உருவாக்கி
சான்று பகரும் முதல்வரையும்
இந்நாளில் இனிதாக வாழ்த்துகின்றோம்...

**மலர்க்குழு**
**கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவக் குழு



## வகுதித்தலைவர்கள்



திருமதி.பு.குமார்



திரு.ச.கௌரீசன்



திருமதி.இ.சண்முகம்



திருமதி.கோ.சந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



# பழைய மாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வரலாற்றுத் தடங்கள்

திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்படும் ஈழமணித் திருநாட்டின் வளம் கொழிக்கும் வன்னி மாநிலத்தில் முல்லையும், மருதமும், நெய்தலும் இலங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே கரைச்சிப் பிரதேசத்தில் கனகம் (பொன்) விளையும் பூமியாக 1958ஆம் ஆண்டு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கனகபுரம் கிராமத்தவர்களின் பிள்ளைகளுக்கான கல்விக்கூடம் ஒன்று அமைப்பதற்காக 1967ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு, கட்டிடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு இக்கிராமக் குடியேற்றத்திற்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தின் அந்நாளுக்கான அரசஅதிபர் திரு.மு.ஸ்ரீகாந்தா அவர்களால் 1969.11.11 அன்று யாழ்.கனகபுரம் அ.த.க.பாடசாலை எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் முதல் அதிபராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.க. பொன்னையா அவர்கள் (1969-1980)கடமையாற்றினார். இப்பாடசாலையின் முதல் மாணவியாக இரண்டாம் பண்ணையைச் சேர்ந்த செல்வி விநாயகமூர்த்தி லட்சுமி சேர்க்கப்பட்டு தொடர்ந்து ஆறு மாணவர்களுடன் பாடசாலை செயற்படத் தொடங்கியது. 1972இல் ஐந்து ஆசிரியர்கள் 260 மாணவர்கள் என வளர்ச்சியடையத் தொடங்கியது. அக்காலப் பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களான திருமதி. மேரி ஜோசப்பின் அமிர்தரத்தினம், திரு.க. அந்தோனிப்பிள்ளை, திரு.தோமஸ், திருமதி.தி.தங்கம்மா, திருமதி.நாகம்மா போன்றோர் இப்பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் பங்காற்றினர்.

விஜயதசமியன்று மாணவச் செல்வங்களுக்கு அதிபர் ஏடு தொடக்கி வைத்ததும் ஏனைய ஆசிரியர்கள் பாலை மர நிழலின் கீழ் பாடல் ஆடல்களை நிகழ்த்திக் கல்வி கற்பித்தமையும் ஆரம்பக்கல்வி கற்ற மாணவர்களின் மனங்களில் இன்று வரை அழியாத நினைவுகளாக உள்ளது. 1970இல் இப்பாடசாலைக்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் செயலாளராக திருமதி.எம்.ஜே.அமிர்தரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். 1972இல் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் இப்பாடசாலையின் வகுப்பறைக்கு சீமெந்தினாலான அலுமாரிகள் கட்டிக் கொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. 1973இல் கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து சேகரித்துத் தற்காலிக மண்டபம் ஒன்றினை அமைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1977-1980ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளில் இலங்கையில் ஏற்பட்ட இனப்பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் கனகபுரம் கிராமத்தைச் சூழ எழுந்த புதிய கிராமங்களான அம்பாள்குளம், உதயநகர், விநாயகபுரம், செல்வா நகர் உட்பட பல கிராமங்களிலிருந்து பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். இதனால் மாணவர்களின் தொகை 565ஆக அதிகரித்த துடன் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் பத்தாகியது. பாடசாலைக் கட்டடமும் மூன்றாக அதிகரித்தது. பின்பு திரு.பொன்னையா அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல அதிபர் திரு.பொன்.தில்லைநாயகம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று அப் போதிருந்த வளங்களைப் பயன்படுத்தி பாடசாலையை நன்னிலைப்படுத்தினார்.*

*1981ஆம் ஆண்டு கடைசிப் பகுதியில் திரு.க.சிங்காரவேலு அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலை பற்றிய சகல விடயங்களையும் பதி வேட்டில் குறிப்பெடுக்கும் வழக்கத்தைக் கொண்டுவந்தார். அக்காலப்பகுதியில் தான் திரு.கே.க.சிவகுமாரன் அவர்கள் ஆங்கில ஆசிரியராக நியமிக்கப்பட்டு மாணவர்களுக்கு ஆங்கிலப்பாடத்தை விருப்புடன் கற்பித்தார். இவர் சிறிது காலம் அதிபராகக் கடமையாற்றினார். பின்பு திரு.எஸ்.கே..கந்தையா அதிபரானார். மாணவர் தொகை 834ஆகவும் ஆசிரியர் தொகை 12ஆகவும் இருந்தது. அவரைத்தொடர்ந்து திரு.எஸ்அழகரத்தினம் சிறிது காலம் அதிபர்களாகக் கடமையாற்றினர். 1983ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் செல்வி இ.சின்னத்தம்பி அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். அவர் மாணவர்கள் கழுத்துப்பட்டி அணியும் பழக்கத்தினையும் ஊக்கப்படுத்தினார். 1983ஆம் ஆண்டு விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு இப்பாடசாலையின் முதலாவது கன்னி விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. திரு.கே.சாம்பசிவம் அவர்கள் 1984.03.15 அன்று அதிபராக பதவி ஏற்றார். இவ்வேளையில் இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய காலமாகும். மாணவர் தொகைக்கு (933) ஏற்ப ஆசிரியர்கள் இல்லை. இந்த இக்கட்டான நேரத்தில் தான் திரு.கே.சாம்பசிவம் அதிபர் அவர்கள் கூடுதலான பட்டதாரி ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுத்தார். மாணவர்களின் கல்வியில் முன்னேற்றமும் விளையாட்டு, கலைத்திறன் போட்டிகள் போன்றவற்றில் பங்குகொண்டு மாவட்ட மட்டப் பரிசில்களைப் பெற்றனர்.*

*1986ஆம் ஆண்டு திரு.க.ஆறுமுகதாஸ் அவர்கள் அதிபராக நியமிக்கப் பட்டார். அந்நேரம் மாணவர் வருகை அதிகரித்ததுடன் தரம் 5 புலமைப்பரிசில்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் முதன்முதலில் செல்வன் இ. அமல்ராஜ் அவர்கள் சித்தி பெற்று சாதனை நிலைநாட்டினார். 1987இல் கட்டடம், ஆசிரியவளம், தளபாடம் போன்ற வளங்கள் பற்றாக்குறையாக இருந்தாலும் அதிபர், ஆசிரியர்களின் ஆளுமையாலும், நிர்வாகத்திறனாலும் விடாமுயற்சியினாலும் தமிழ்த்தினப்போட்டிகள், கலைத் திறன் போட்டிகள், மெய்வல்லுநர் விளையாட்டுகள் போன்றவற்றில் மாணவர்கள் முதலாம், இரண்டாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டனர். 1991இல் இப்பாடசாலையில் கல்வி பயின்று அயல் பாடசாலைகளில் உயர்தரக்கல்வியினை முடித்துக்கொண்ட மாணவர்களால் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு திரு.அ.றெஜி அலோசியஸ் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1992இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 07 மாணவர்கள் சித்திய டைந்து சாதனை நிலை நாட்டினர். 1994ஆம் ஆண்டில் இப்பாடசாலையானது கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் என்ற பெயரில் 1C தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1994இல் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட தோடு வெள்ளி விழா நிகழ்வானது மூன்று நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. 1994ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண பரீட்சையில் பெருந்தொகையான மாணவர்கள் கணித, விஞ்ஞான, வர்த்தகம், கலைப்பிரிவுகளுக்கு தெரிவானார்கள்.

1995ஆம் ஆண்டு யாழ் மாவட்ட இடப்பெயர்வினால் மாணவர் தொகை 2000ஆக அதிகரித்தது. இவ்வேளை பாடசாலையில் இடவசதியின்மை ஏற்பட திரு.வி.இராஜசுந்தரம் அவர்களின் காணியில் மரநிழலில் கீழ்வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. 1996ஆம் ஆண்டு போர் எனும் கொடிய அரக்கனின் பார்வை எம்பள்ளி மீதும் பட்டதைத் தொடர்ந்து கிளி/ஸ்கந்தபுரம் இல.2 அ.த.க. பள்ளி வளாகத்தில் தஞ்சம் புகுந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியினால் கொட்டகை கள் அமைத்து பல இன்னல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் பாடசாலையின் செயற்பாடுகள் நடைபெறத் தொடங்கியது. அதிபர் அவர்களின் அயராத முயற்சியினால் மாணவர்களின் போட்டி மனப்பாங்கு அதிகரித்ததோடு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் முதன்முதலாக திரு.செ.துரைரட்ணம் பல்கலைக்கழகம் கலைப்பிரிவுக்குத் தெரிவாகியதோடு நான்கு மாணவர்கள் சித்தியும் பெற்றனர். போர்க்காலச் சூழலில் இவ்வதிபரின் சேவையானது பாடசாலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் திரு.க.ஆறுமுகதாஸ் அவர்கள் 1999ஆம் ஆண்டு கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றதன் பின் திரு.சி.சந்திரராசா அவர்கள் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்ட வேளையில் போர்க்கால மேகங்கள் சற்றே விலகி சமாதான ஒளிக்கற்றைகளின் கீற்றுக்கள் தெரியத்தொடங்கியவுடன் பள்ளி மீண்டும் தனது சொந்த இடத்தில் செயற்படத் தொடங்குவதற்கு போரினால் பாதிப் படைந்த பாடசாலை வளாகத்தினைப் பழைய மாணவரும் பெற்றோரும் இணைந்து துப்பரவுப் பணியில் ஈடுபட்டு பாடசாலை செயற்படத் தொடங்கியது.

2002ஆம் ஆண்டு திருமதி.பிரபாலினி திலகநாதன் அதிபராகப் பாடசாலை யைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். 2006ஆம் ஆண்டு விளையாட்டு மைதானத்திற்கான சுற்றுமதில் அமைப்பதற்குரிய அடிக்கல் நாட்டுவதற்கு வருகை தந்து வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ப.அரியரத்தினம், கிராம அலுவலர் திரு.சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் அடிக்கல் நாட்டினர். பழைய மாணவர்களான திரு.பி.யூடி ரமேஸ் ஜெயக்குமார், திரு.சீ.கலைவாணன், திரு.றெஜி அலோசியஸ் ஆகியோர் முனைப்புடன் செயற்பட்டனர். ஆனால் அரசியல் சூழ்நிலையால் மைதான வேலை இடம் பெறவில்லை.

2007-2009 காலப் பகுதியில் திருமதி.தேவகி புவனேஸ்வரன் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று சீரிய முறையில் பாடசாலையை வழிநடத்திக் கொண்டி ருந்த வேளையில் 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையால், பாடசாலை ரெட்பானாவை நோக்கி நகர்த்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை தொடர்வதற்காக பாடசாலையின் ஆவணங்கள் தளபாடங்கள் ஏனைய பொருட்களையும் ரெட்பானாவை நோக்கி நகர்த்துவதில் முன்னின்ற உழைத்த அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்களான திரு.பொ. அருள்நேசன், திரு.த.சேதுபதி, திரு.சு.வரதராஜா, திரு.பா.ஸ்ரீஸ்குமார், திரு.க. யுவராஜா, இளங்குமார் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையையும், ஒத்துழைப் பையும் எம்மால் இன்றும் நினைவு கூரக்கூடியதாக உள்ளது.

2009ஆம் ஆண்டு நலன்புரிநிலையத்திலிருந்த போது எங்கள் பாடசாலை யைச் சேர்ந்த 12 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந் ததும் வர்த்தகப் பிரிவில் செல்வன் மே.அன்ரனி நிதர்சன், கோ.கௌசிகன் ஆகிய மாணவர்கள் இருவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானதும் பெருமைக்குரிய விடயமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் ஏற்பட்ட அசாதாரணநிலை காரணமாக எமது பாடசாலையின் ஆசிரியரான தேவேந்திரன் ஞானசோபனா அவர்களையும், சில மாணவர்கள், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும், நலன்விரும்பிகளையும், இழந்து கதிகலங்கி நின்ற வேளையில் போக்குவரத்து வசதிகளோ வர்த்தக நிலையங்களோ, மருத்துவ வசதிகளோ எதுவுமற்ற நிலையில் எமது பாடசாலைச் சூழல்முட்புதர்கள் நிறைந்ததாகவும், 100'x20' அடி கொண்ட 5 வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் குழாய்க் கிணறு கூட்டுறவு விற்பனை நிலையம், சிற்றுண்டிச் சாலை, சிறுவர் பூங்கா, சமையற்கூடம் ஆகியன முற்றாக அழிவடைந்து வளப்பற்றாக்குறையோடு 2010.01.04ஆம் திகதி மீளவும் சொந்த இடத்தில் அதிபர் திரு.சு.தர்மரத்தினம் அவர்கள் தலைமையில் பாடசாலை இயங்க ஆரம்பித்தது.

மீள்குடியேற்றத்தின் பின் எமது பாடசாலையே முதன்முதலாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பித்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். எமது பாடசாலையின் ஆசிரியர்களையும் ஏனைய பாடசாலைகளின் ஆசிரியர் களையும், மாணவர்களையும், அதிபர்களையும் தாங்கி கல்வியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கட்டாய நிலை காணப்பட்டது.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஊர்மக்கள் ஆகியோரின் அயராத முயற்சியால் படிப்படியாக பாடசாலை நல்லதோர் நிலையை அடைந்தது பெருந்தொகையான மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்களை உள்ளடக்கி 2010இல் முதன்முதலாக இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு வெகுசிறப்பாக நடைபெற்று அனைவரது பாராட்டையும் பெற்றுக் கொண்டாமையும் மறக்க முடியாதவையாகும்.

இக்காலகட்டத்தில் அதிபர் திரு.சு.தர்மரத்தினம் அவர்கள் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்து உறவுப்பாலமாக ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரை இணைத்து தென்பகுதிக்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டமையையும் பாராட்டத்தக்க விடயமாகும். குறுகிய காலப் பகுதியாக இருந்தாலும் அயராது உழைத்த இவ்அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்கும் மரியாதைக்கும் உரியவர்களே,

இக்காலக்கட்டத்தில் அதிபர் சு.தர்மரத்தினம் அவர்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சந்தர்ப்பத்தில் மாவட்டத்தின் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதால் இணைப்பிலுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் தமது பாடசாலைக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் ஏறக்குறைய **700**க்கு மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கியதாக எமது பாடசாலை காணப்பட்டது. **2010.10.06** பிரதி அதிபர் திரு.த.சேதுபதி அவர்கள் பாடசாலைக் கடமைப் பொறுப்பை ஏற்று வழிநடத்தினார். **2010.12.15**இல் திரு.ஐ.குகானந்தராசா அதிபர் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்த வேளையில் **2010-2011** ஆண்டுகளில் எமது பாடசாலையின் மைதானத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் பொதுச் சந்தையினை அமைக்க நடவடிக்கை எடுத்த போது பாடசாலைச் சமூகமும், கிராம மக்கள் அனைவரும் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திய போதும் அரசியல் சூழ்நிலையால் மைதானக் காணியை இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம். இதனால் எமது மாணவர்களின் விளையாட்டுத் தொடர்பான செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது. இது பாடசாலைக்கு ஒரு பின்னடைவாக இருந்தது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மேலும் எமது பாடசாலைக்கு யுனிசெப் நிதிஉதவியிலான 20'x60' அரை நிரந்தரக்கட்டடம் ஒன்று கிடைத்தது. **2011.02.28**இல் அது திறந்து வைக்கப் பட்டது. இதனால் ஒரு சில வகுப்பறைகளை உள்ளடக்கி பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

***2011.06.03*** இல் பீப்பிள் லீசிங் நிறுவனத்தினரால் (Peoples Leasing) எமது பாடசாலைக்கு ஒரு தொகுதி நூலகப் புத்தகங்களையும், நூலக றாக்கைகளையும் அன்பளிப்புச் செய்தனர். அதைக் கொண்டு தற்காலிக நூலக அறையொன்றை மெருகூட்டி மாணவர்கள் நூல்களைப் பயன்படுத்தவும், நூலகப் பாடத்தில் பயனடையும் வகையில் தற்காலிக நூலக அறையொன்றும் திறந்து வைக்கப் பட்டது. அதுவே இன்றுவரை எமது மாணவர்களுக்கு வளமூட்டுகின்றது என்பதனை இங்கு குறிப்பிடவேண்டும்.

மேலும் **2012.08.31** அன்று நெக்கோட் திட்டதினாலான கட்டடம் ஒன்றிற்கான அடிக்கல் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களின் ஏற்பாட்டில் 110'x27' அடி அளவிலான மேடையிலான கட்டடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அமைக்கப்பட்டு 2012.10.19 அன்று திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தினால் இன்று வரை எமது பாடசாலை மாணவர்கள் அடைந்த பயனுக்கு அளவே இல்லை என்று கூறினால் அது மிகையாகாது. இது மட்டுமன்றி கட்டடத்தைச் சூழ உள்ள பகுதி சமதரை அற்றதாகக் காணப்பட்டதால் அதை ஓரளவிற்கேனும் சீரமைப்பதற்கான வேலைத்திட்டச் செயற்பாடு நடைபெற்றதை நன்றியுடன் கூறுவது சாலச்சிறந்தது.

இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் பௌதீக வளத்தேவைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டதோடு மாணவரின் கல்வி மேம்பாட்டு விருத்திச் செயற்பாடுகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்ட காலமாகும். இப்பாடசாலை ஆரம்பித்தது முதல் இதுவரை பெற்றிராத வரலாற்றுச் சாதனையாக 2012ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் அதிகூடிய பெறுபேறாகச் செல்வி யோசெப் தர்சிகா 6A, 2B, S என்ற பெறுபேற்றையும் 19பேர் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றனர். அதேஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் செல்வன் ப.பவிதரன் (மாவட்ட நிலை 07), செல்வன்.டி.நிரோசன் (மாவட்ட நிலை 09) ஆகியோர் 3A சித்தி பெற்று சாதனை படைத்துள்ளமை இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வேண்டிய ஒன்றாகும்.

2013-2014 காலப்பகுதியில் பாடசாலை வளாகத்திற்கு 1500 அடி நீளமான சுற்று மதிலினை புலம்பெயர் நாடுகளிலுள்ள பழைய மாணவர்களினதும் தாயகத்திலுள்ள பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.க.கடம்பசோதி அவர்களினதும் திரு.க.மயூரன் ஆகியோரின் அயராத முயற்சியினாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் சுற்றுமதில் அமைக்கப்பட்டு எமது பாடசாலை அழகுபெற்று நிற்கின்றது. மேலும் 2013ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றதுடன் சித்தி வீதமும் அதிகரித்தமையும் பாராட்டப்பட வேண்டியதாகும். இவ்வாண்டில் கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் எமது பாடசாலைக்கு கணினி அறை ஒன்றும் குடிநீர் விநியோக வேலைத்திட்டமும் இரண்டு கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டது. அது மட்டுமன்றி விசேட தேவையுடைய மாணவர்களின் நலன் கருதி "மகிழ்ச்சி இல்லம்" ஒன்று அமைக்கப்பட்டு வைத்திய கலாநிதி ஜெயராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் திருமதி.கௌரி பொன்னையா அவர்களால் விசேட கல்வி மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்காக விசேட கல்வி அலகுக்கான கட்டிடத்தொகுதிக்கான அடிக்கல் 2013.07.11இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பட்டது. இது 1.9மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2013.09.30 அன்று திறந்து வைக்கப்பட்டது. இம்மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதனால் எமது பாடசாலையின் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடு தனிஒரு அலகாகப் பரிணமித்து இன்றுவரை அதில் கல்வி கற்கும் மாணவர்கள் மாவட்டம், தேசிய மட்டங்களில் முதன்நிலை பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்து வருவது தனிச்சிறப்பாகும்.

2014.03.31இல் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் கிளி/பாரதி வித்தியாலயத்தின் அதிபரும் திரு.க.இராசேந்திரம் அவர்களால் பழைய மாணவர் அனுசரணையுடன் எலெக்ரோனிக் மணி அன்பளிப்புச் செய்யப்பட்டது. அதுவே இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றது என்பதனையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையில் 2014.09.14 அன்று திருமதி இராஜரஞ்சிதம் ரவீந்திரநாதன் அவர்கள் பிரதி அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றார். இவ்வருடத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 6 மாணவர்கள் சித்தியடைந்ததுவும், சித்தி வீதம் 91.4 ஆகவும் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2015.06.20ஆந் திகதி அதிபர் திரு.ஐ.குகானந்தராசா அவர்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்ல திருமதி. இராஜரஞ்சிதம் ரவீந்திரநாதன் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதேநேரத்தில் பிரதிஅதிபராக திரு.அ.பங்கையற்செல்வன் கடமை ஏற்றுக் கொண்டார். இவ்வருடத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 06 மாண வர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். இதைவிட மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும், கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளும் முன்னேற்றம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் 24 மாணவர்கள் உயர்தரம் கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். க.பொ.த. உயர்தரப் பெறுபேறு களுக்கமைய 03 மாணவர்களும் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ள மையும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 96.2 வீதச் சித்தியினைப் பெற்றுள்ளமையும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அதிபரின் அயராத உழைப்பும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும், பழைய மாணவர்கள், பெற்றோர்களின் ஒத்துழைப்பும் பாடசாலையின் சகலதுறை வளர்ச்சிக்கும் படிக்கற்களாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்கல்வியில் மட்டும் மாணவர்கள் அனைவரும் சாதனைகள் படைப்பது சாத்தியமற்றது. இக்குறைபாடுகளை நீக்கி ஒரு மாணவன் முழுமனிதனாக வளர இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் தேவை என்பதற்கமைய எமது பாடசாலை மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் கலைகளிலும் களங்காண வேண்டும். அதற்கமைய எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு படிக்கற்களாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. அந்த வகையில் எமது பாடசாலையின் வளர்ச்சிப் போக்கை நோக்குமிடத்து 'Band வாத்திய' அணி ஒன்றை உருவாக்குவதில் எமது அதிபர், ஆசிரியர்கள் பெரும் முயற்சியை மேற்கொண்ட போது World vision நிறுவனத்தால் அதற்குரிய வாத்திய தொகுதிக் கருவி உபகரணங்களை வழங்கி எமது பாடசாலை மாணவரின் செயற்படுதன்மையை வெளிக்கொணர சந்தர்ப்ப மளித்தமை நன்றியோடு இவ்வரலாற்றில் பதிக்கின்றோம்.

வடமாகாணக் கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் 2017.01.11 ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கட்டடம் 18,701.942 ரூபா செலவில் அமைக்கப் பட்டு பூர்த்தியடைந்திருக்கும் இக்கட்டடத் தொகுதி எமது மாணவர்களின் வினைத்திறனான கற்றலுக்கு முக்கிய வளமாக சான்று பகரும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமன்றி இக்காலப்பகுதியில் 68,24580.00 ரூபா செலவில் ஆரம்பப்பிரிவுக்கான கல்வி வள நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்பாடடையச் செய்வதற்கான ஒரு வரப்பிரசாதமாகும். இக்கட்டடமானது 2019.03.1 இல் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

நீண்ட காலமாக மாணவரது உடல், உளசீர்நிலைக்குதவும் விளையாட்டுப் பயிற்சிக்களுக்கான களங்களை வழங்குவதற்கு இடர்பட்டுக்கொண்டிருந்த வேளை 2017.10.15ஆம் திகதி அன்று எமது மைதானத்தில் கட்டி எழுதப்பட்ட புதிய சந்தைத் தொகுதியினைத் திறந்து வைப்பதற்கு வருகை தந்த மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட தினத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பெற்றோரான திரு.க.திருவரசு, திரு.தி.மகேந்திரம் அவர்களும், ஏனைய பெற்றோரும், திரு.பா.தேவகுமார், ஏனைய பழைய மாணவர்களின் அயராத முயற்சியினாலும் ஒத்துழைப்போடு அனைவரும் இணைந்து செயற்பட்டு மகஜர் ஒன்றைக் கையளித்த போது ஜனாதிபதி அவர்களால் மிகவிரைவில் எமக்கு ஒரு மைதானம் வழங்கப்படும் என்ற வாக்குறுதியொன்றைப் பெற்றுக்கொண்டோம். மேலும் இதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் நீண்ட காலமாக எமது வரலாற்றுப் பாதையில் கல்விப் பெறுபேறுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. விசேட திறமைச்சித்திகளைப் பெற்று ஒரு மாணவி பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றமையையும் 05 மாணவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுமையும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் செல்வி.திருவரசு கம்சாயினி 09பாடங்களிலும் A சித்தி பெற்றதுடன் 25 மாணவர்கள் உயர்தரம் கற்கும் வாய்ப்பினைப் பெற்றமையும் எமது பாடசாலையில் கல்விச் செயற்பாட்டில் ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

அதைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் பாடசாலைக்கான மைதானம் ஒன்றை அமைப்பதற்கான காணியைப் பெறுவதற்கு நாம் பல சிரமங்களைச் சந்தித் தோம். அனைவரது அயராத முயற்சியின் பயனாகக் காணிக்கான உரித்துடை மையைப் பெற்று ஜனாதிபதி செயலக நிதியுதவியுடன் பாடசாலை மைதானத்தின் சுற்றுமதிலுக்கான அத்திவாரம் இடப்பட்டு சுற்றுமதில் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை 2018.03.13ஆம் திகதி அன்று இனந்தெரியாதோரால் 110அடி வரையிலான சுற்றுமதில் சேதமாக்கப்பட்ட கொடூரமான செயல் கனகபுரம் மகாவித்தியாலயத்தை நேசித்த அனைவரின் மனங்களையும் பாதித்தது. "மன்னிப்போம் மறப்போம்" என்பதற்கமைய நல்லுள்ளம் கொண்டவர்களால் மீளவும் சுற்றுமதில் அமைக்கப்பட்டு 2018.06.18 ஆம் திகதி மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பாடசாலை நிர்வாகத்திடம் மைதானம் கையளிக்கப்பட்ட உன்னதமான நிகழ்வு பாடசாலையின் வரலாற்று பதிவிலே பொறிக்கப்பட்ட வேண்டியதொன்றாகும்.

எமது பாடசாலையின் நீர்விநியோக முறையிலிருந்த குறைபாட்டை இனங்கண்டு 1991ஆம் ஆண்டு க.பொ.த.சாதராணதர மாணவர்கள் தாமாக முன்வந்து "நிரந்தர நீர்த்தாங்கியொன்றை துரிதமாக அமைத்து மாணவர்களுக்கான குடிநீர்ப் பிரச்சினையைச் சீராக்குவதற்கும், ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்து 2018.08.31 அன்று பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைந்தமை பெருமைக்குரிய விடயம். இவர்களை நாம் பாராட்டுவதும் நன்றியோடு நினைவு கூருவதும் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

கடந்த காலங்களை விஞ்சி அண்மைக்காலங்களிலே இப்பாடசாலையின் சகல துறை வளர்ச்சிப் போக்கும் மிக உயர்வடைந்து வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். எமது பாடசாலை அருகிலுள்ள பாடசாலை அதிசிறந்த பாடசாலை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வேலைத்திட்டம் ஆரம்பித்து சிறப்புற நடைபெற்று வருவதும், நவீன வசதிகளுடனான தேர்ச்சிக் கூடங்கள் அமைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடன் கூடிய தொழில் வழிகாட்டல் மூலம் மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யும் செயற்பாடுகள் நடைபெற்று வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பரீட்சைப் பெறுபேறுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற் பாடுகளிலும் பங்கு கொண்டு சகல போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களின் நிலை வரவேற்கத்தக்கதொன்றாகும் இப்பாடசாலையானது வருடம் தோறும் ஆண்டு விழாவினை நடாத்தி அதில் மாணர்களுக்கான பரிசுப்பொருட்கள், சான்றிதழ்கள், அமரத்துவமடைந்த ஆசிரியர்களின் நினைவாக நினைவுப் பரிசில்களையும் வருடம் தோறும் வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 13 வருடக்கல்வித் திட்டமும் விசேட கல்வி அலகும் உள்ளடங்கலாக 516 மாணவர்களையும் 47 ஆசிரியர்களையும் கொண்டமைந்துள்ளது.

இப்பாடசாலையில் ஆரம்பம் முதல் இன்று வரை கற்றவர்கள் வைத்தியர் களாகவும், பொறியியலாளர்களாகவும் அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் பல தொழில்சார் உயர்பதவிகளிலும் இருந்து இம்மாவட்டத்திலும் பிறமாவட்டங் களிலும் சேவையாற்றி வருகின்றமையானது. இப்பாடசாலைக்கு ஒரு தனிச்சிறப் பாகும். எமது பாடசாலையின் சகல துறை மேம்பாட்டிற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திக் குழு என்பன பாடசாலையின் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் ஒத்துழைப்பு நல்கி எமக்கு உந்து சக்தியாக இருந்து வருகிறது. இதை விட பாடசாலைக்கு ஆதரவு மிக்க ஓர் அமைப்பாக பழைய மாணவர் சங்கம் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்) இருப்பது பாராட்டத்தக்கது. எமது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்கள் ரூபா 110000/- பெறுமதி கொண்ட நுழைவாயில் வளைவினை அமைப்பதற்கு உதவியமைக்கு நன்றிகலந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 2019ஆம் ஆண்டு 50ஆவது அகவை காணும் இந்தநன்நாளிலே பழைய மாணவர்களாக இருந்து புதுமை படைத்த அவர்களது நல்லுள்ளங்கள் புதிய திருப்பமாக நிரூபணமாகி காட்சியளிக்கும் இப்புதிய படைப்புக்கள் வித்தியாலயத் தாய்க்கு அணி செய்து திறப்பு விழா கண்டு அரங்கேறும் இந்நிகழ்வுகளையும் இப்பாடசாலையின் வரலாற்றுத் தடங்களாக அமைவதையிட்டு பெருமை அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களிலும் தற்காலத்திலும் பழைய மாணவர்கள் அரச, அரசார்பற்ற அமைப்புக்களினாலும் வழங்கப்பட்ட வழங்கப்பட்டிருக்கும் உதவித் திட்டங்கள் மாணவர்களின் கற்றலுக்கும், சகல அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வருவது யாவரும் அறிந்த உண்மையே. இவ்உதவி ஒத்தாசைகள் மென்மேலும் பெருகி இப்பாடசாலையை ஒரு முன்னணிப் பாடசாலையாக வளர்ச்சி பெற்று வளமடையும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று பாடசாலையின் நிலையான வளர்ச்சிப் பாதையின் 50ஆவது அகவை கண்டு "பொன்விழா" மலரினைப் பிரசவித்து மகிழ்ந்திருக்கும் எமது கல்விக் கூடமும், நாமும் உங்கள் அனைவரதும் ஒவ்வொரு துளி வியர்வையையும் இப்பாடசாலைத் தாய்க்கு உரமாக்கியிருப்பதை கண்டு உவகையடைந்து உயிர் பெற்று உச்சாணிக் கொப்பைத் தொடுவதற்கு உதவிகள் பல புரிந்து பொன்விழாக்காணும் இந்நாளில் தங்களின் பொற்கரங்களைப் பற்றுவதற்காக பீனிக்ஸ் பறவைகளாக எழுந்து நிற்கின்றோம்.

*உசாத்துணை:*

*பாடசாலையின் வெள்ளி விழா மலர் 1994*

*பாடசாலையின் சம்பவத்திரட்டுப்புத்தகம்*

*கிராமப் பெரியோர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் முன்னை நாள் முதல்வர்கள்



திரு.சி.பொன்னையா
1969-1980



திரு.பொன்.தில்லைநாயகம்
1980



திரு.க.சிங்காரவேல்
1981



திரு.S.சிவகுமார்
1983



திரு.S.K.கந்தையா
1983



திரு.S.அழகரத்தினம்
1983



செல்வி.R.சின்னத்தம்பி
1983



திரு.க.சாம்பசிவம்
1984-1986



திரு.க.ஆறுமுகதாஸ்
1986-1999



திரு.சி.சந்திரராசா
1999 - 2002



திருமதி.பி.திலகநாதன்
2002 - 2007



திருமதி.தே.புவனேஸ்வரன்
2007 - 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.சு.தர்மரட்ணம்
2010



திரு.ஐ.குகானந்தராசா
2010-2015

## பாடசாலையின் முன்னை நாள் பிரதி முதல்வர்கள்



திரு.தே.அந்தோனிப்பிள்ளை



திரு.சி.சந்திரராசா



திருமதி.க.குமாரலிங்கம்



திரு.கருணாநிதி



திரு.த.சேதுபதி



திருமதி.இ.ரவீந்திரநாதன்



திரு.அ.பங்கையற்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக் காலப்பகுதியில் அமரத்துவம் அடைந்த



திருமதி. ஜெ.கோகிலராணி



திருமதி.தே.ஞானசோபனை



செல்வி.சிவமலர்

**கனக புரத்தின் கலைக் களஞ்சியங்களே**
**காவியத்தின் நாயகிகளே**
**பள்ளியிலே பவனி வந்த சொந்தங்களே**
**பாதியிலே எமைப் பரிதவிக்க விட்டீரே**
**சோகத்தின் நினைவலை மனதிலே**
**சோர்வடைய வைத்ததினால் – இன்று**
**நீங்கா நினைவுகளாய் நெஞ்சத்தில் – நீங்கள்**
**நீறாய் பூத்திருக்கும் நினைவு மலர்களம்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய அதிபரின் உள்ளத்திலிருந்து...

**விதை ஒன்று விருட்சமானது**



இன்று 50ஆவது அகவையினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் எமது பாடசாலை 1969ஆம் ஆண்டு ஒரு விதையாக கிளிநொச்சி மண்ணில் வீழ்ந்து இன்று பெரு விருட்சமாகி ஆயிரமாயிரம் மாணவச் செல்வங்களின் கனவு களிற்கு சிறகு கொடுத்து கலங்கரை விளக்காய் உலகெங்கும் ஒளிபரப்பி தமிழர் தம் உயர்விற்கு உரமூட்டி நிற்கும் எம் பாடசாலையின் இந்நாளினைத் தலைமை தாங்க இறையாசி கிட்டியமையிட்டு மகிழ்வடைகின்றேன்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய மதிப்பிற்குரிய எஸ்.சிறிகாந்தா அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையின் முதல் அதிபராக திரு.க.பொன்னையா அவர்கள் கடமையேற்றிருந்தார். நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கனகபுரம் மற்றும் அயற் கிராமங்களில் மக்கள் குடியேறியமையின் காரணமாக மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததுடன் பல சாதனைகளும் நிலை நாட்டப்பட்டதாக அறியமுடிகிறது. 1992ஆம் ஆண்டு கனகபுரம் மகாவித்தியாலயம் என்ற பெயரில் 1c பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

இன்று வரை 14 அதிபர்கள் கடமையாற்றிச் சென்றுள்ளனர். அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் நீடித்த உழைப்பும் அர்ப்பணிப்பும் உயர்மட்டத்தில் இருந்ததுடன் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு பாடசாலைக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

**வாழ்த்தும் வரவேற்பும்**

"வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

என வள்ளுவர் கூறியது போல உள்ளத்தில் உயர்வு பெற்ற உயர்ந்த மனிதர்களாக நெஞ்சத்தால் ஒளிவீசும் மாந்தர்களாக எம் எதிர்கால சமூகத்தின் தூண்களான மாணவச் செல்வங்கள் முன் வீற்றிருக்கும் இன்றைய நிகழ்வின் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக கலந்து மகிழ்வித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களே, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இளங்கோவன் அவர்களே, கௌரவ விருந்தினர்களாக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கரைச்சிப் பிரதேச செயலாளர் திரு.த.முகுந்தன் அவர்களே, பிரதிக்கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) திரு.பா.வாசுதேவன் அவர்களே மற்றும் எமது அழைப்பினை ஏற்று வருகை தந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வினை அலங்கரித்துக் கொண்டிருக்கும் பாடசாலைகளின் அதிபர்களே ஆசிரியர்களே கிராம அலுவலர்களே ஏனைய உத்தியோகத்தர்களே, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, வித்தியாலயத்தின் பழைய மாணவர்களே, கிராம அமைப்புக்களின் தலைவர்களே உறுப்பினர்களே, ஆசிரியர்களே மாணவச் செல்வங்களே அனைவரிற்கும் மனம் நிறைந்த வந்தனங்கள்.

எமது வளமும் பலமும் நல்லெண்ணங்களிற்கு ஏற்பவே செயல் வடிவங்கள் தீர்மானிக்கப்படும் என்ற பொன்மொழிக்கேற்பவும், "ஒரு பள்ளிக்கூடத்தினைத் திறப்பவர் ஒரு சிறைச்சாலையை மூடுகின்றார்" என்ற விக்ரர் கியூகோ என்பவரின் கூற்றுப் படியும் எமது பிரதேசத்தின் பெறுமதிமிக்க மாணவரது செல்வங்களைப் பாடசாலைத் தாய் அரவணைத்து வைத்துள்ளார். உயர்ந்த கனவுகளோடும் உன்னத இலட்சியங்களோடும் உறங்காது விழித்திருக்கும் கண்மணிகளான பிள்ளைகளை நெறிப்படுத்தவும், உயர்ந்த இலட்சியங்களை நோக்கி அழைத்துச் செல்லவும், சிறந்த ஆசிரியர் சமூகம் இப்பாடசாலையில் இயங்கி வருகின்றது.

பாடசாலையின் நலனிலும், அபிவிருத்தி நடவடிக்கையிலும் கருமமே கண்ணாக அல்லும் பகலும் அயராது உழைக்கும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பன வினைத்திறனுடன் இயங்கு நிலையில் உள்ளமை, பாடசாலைக்கான எதிர்கால சுபீட்சத்தினை கோடிட்டுக் காட்டுகின்றது.

புலம்பெயர் மாணவர்களினதும் தாய்நாட்டின் மாணவர்களினதும் நிதிப் பங்களிப்புடனும் உடல் உழைப்பினாலும் பாடசாலைக்கான வரவேற்பு வளைவு, சரஸ்வதி சிலை, பொன்விழா தூபி, உள்ளக அழகுபடுத்தல், கொடிக்கம்பபீடம், பெண்கள் மலசல கூடம், கண்காணிப்புக் கமரா, உள்ளக நடைபாதை, சிற்றுண்டிச் சாலை, திறன்வகுப்பறை, குழாய்க்கிணறு, துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம், வீதிஓர நடைபாதை, மைதான அரங்கு, ஆண், பெண் மலசலகூடம், குடிநீர்க் கிணறு, மைதான மின்னொளி அமைப்பு, குழாய்க்கிணறு, சீர்செய்யப்பட்ட மதில் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை நிறைவேற்றி பாடசாலையில் கவர்ச்சிகரமான சூழலினை ஏற்படுத்தியுள்ளமையினையிட்டு பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டுக்களினையும் நன்றிகளினையும் தெரிவிப்பதில் மனநிறைவடைகிறேன். மேலும் அடைவு மட்ட உயர்வுக்காகவும் எம்முடன் கைகோர்த்து பயணிக்க உறுதியளித்துள்ளமையையிட்டு எம் பள்ளிச் சமூகம் தாய் நாடு உட்பட பாரெங்கும் பரந்து வாழும் எம் பழைய மாணவர்களின் காத்திரமான பணியினை வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன்.

பாடசாலையின் உயர்வுக்காக பல்வேறு வகையிலும் இணைந்து எந்நேரமும் செயலாற்றும் பெற்றோர்கள் கிடைத்தமை பெரும் பலமாகும். பாடசாலை அமைந்துள்ள கிராமம் கனகபுரமாக இருந்த போதும் இங்கே கற்கும் மாணவர்களில் அதிகமானோர் தொலைவிலுள்ள ஏனைய பல கிராமங்களை ஊட்டப்பிர தேசமாகக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். பல்வேறு சவால்களின் மத்தியில் எமது பாடசாலை மாணவர் கல்வியில் சாதனைகளினை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் அனைவரும் ஒன்றிணைந்து உழைத்தால் வெற்றியின் உச்சத்தினை எட்டமுடியும் என்பதும் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்தின் மூத்தோர் பலர் பாடசாலை உயர்வுக்காகப் பல்வேறு வகையிலும் உழைப்பவர்களாகவும் எம்மை ஊக்கப்படுத்தி எமக்கு உறுதுணையாக இருப்பவர் களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

**எமது பயணத்தில் நாம் சந்தித்தவையும் சாதித்தவைகளும்**

புலமைப்பரிசில் பரீட்சையில் 93% சித்தியினைப் பெற்று மாவட்டத்தில் சாதனை படைத்தமையும், க.பொ.த.சாதாரண தரப் பெறுபேற்றின் வளர்ச்சிப் போக்கினைக் காட்டியதுடன் பல மாணவர்கள் கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப பிரிவுகளுக்குச் சென்றுள்ளமையும் மேலும் க.பொ.த. (உ.த) 3A பெற்றமையும், மேலும் க.பொ.த (சாதாரண தரம்) செல்வி. திருவரசு கம்சாயினி 9A சித்தியினைப் பெற்றமை வரலாற்றுச் சாதனையாகும்.

**எமது மேம்பாடும் பௌதிக வளங்களும்**

எனது நிர்வாகக் காலத்திட்டத்தில் இடைநிலைப்பிரிவு, மாணவர் பாவனைக்காக கணித, விஞ்ஞான, கணினி, நூலக வசதிகளுடனான இரண்டு மாடிக்கட்டடத்தினை அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத்திட்டத்தில் கல்வி அமைச்சின் நிதிஉதவியுடன் அமைக்கும் வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கான கற்றல் வள நிலையம் 2016ஆம் ஆண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு திறப்புவிழா மேற்கொண்டு மாணவர் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் இதுவரை காலமும் பாடசாலைக்கான நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லாத பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டு பாடசாலை நிர்வாகத்தினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் வழங்கப்பட்ட கோரிக்கைக்கமைய தற்காலிகமாக பாடசாலையினால் பயன்படுத்தப்பட்டு வந்த அரச காணியை மாவட்டச் செயலாளர் திரு.சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர் திரு.த.முகுந்தன் அவர்ளது ஏற்பாட்டினால் பாடசாலைக்கு நிரந்தரமாக வழங்கப்பட்டுள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2018.06.18 அன்று வருகை தந்து திறந்து வைத்தமை சிறப்பம்சமாகும். மைதானக் காணியினை உரித்தாக்குவது தொடர்பாகவும் சுற்றுமதில் அமைத்தல் தொடர்பிலும் பல்வேறு சவால்களை எதிர் கொண்டு வெற்றி கொண்டமை குறிப்பிட வேண்டிய விடயமாகும். பாடசாலையின் சுற்றுமதில் தாய்நாட்டினாலும் புலம்பெயர்நாட்டிலும் உள்ள பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளமை சிறப்பம் சமாகும். அத்துடன் நிரந்தர குடிநீர் தாங்கி ஒன்று 1991ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்டு குழாய் நீர்வசதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

மேலும் பொன்விழா நிகழ்வினை முன்னிட்டு பல்வேறு கட்டுமான வேலை களினைப் பாடசாலை வளாகத்திலும், விளையாட்டு மைதானத்திலும் பூர்த்தி செய்து சாதனை படைத்துள்ளார். இதில் மைதான அரங்கினை திரு. தேவகுமார் தனியாக அமைத்து வழங்கியுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் கனவுகளும் எதிர்பார்ப்புகளும்**

"பேச்சில் எளிமை, கொள்கையில் தெளிவு, செயலில் உறுதி ஆகிய மூன்றும் உள்ளவர்கள் எதனையும் சாதிக்க முடியும்" என்ற முல்லரின் சிந்தனைப்படி தெளி வான கொள்கையுடனும் உறுதியான செயற்பாடுகளோடும் மாணவர்களினதும் பெற்றாரினதும் இலட்சியங்களை அடைவதற்காக உறுதியுடன் பயணிக்கின்றோம்.

தூய்மையான உள்ளத்தினை கட்டி எழுப்புவதே கல்வியின் ஆணிவேர். தன் உழைப்பினால் உயர்ந்த இலட்சியங்களையும், உன்னத பண்புகளையும் விதைத்துக் கொண்டிருப்பவரே சிறந்த மாணவர். ஒரு பாடசாலையின், அல்லது ஓர் அதிபரி னால் அல்லது ஓர் ஆசிரியர் சமூகத்தில் வெற்றி என்பது வெறுமனே பரீட்சைப் பெறுபேற்றினை வைத்து மட்டும் கணிப்பிட முடியாது.

இன்று நம் சமூகத்தில் புகழ் பூத்தவர்களாக விளங்கும் பலர் ஒரு காலத்தில் மிகச்சிறிய பாடசாலைகளில் மிகக்குறைந்த வளங்களோடு தமது கல்வி வரலாற்றைப் பதிவு செய்தவர்கள். எதிர்காலத்தில் உலகின் பல சாதனையாளர்கள் எங்கள் வகுப்பறைகளில் கற்றவர்களாவும், எங்கள் மைதானத்தில் ஓடி விளையாடியவர்களாகவும் இலை மறை காயாக எங்கோ ஒரு முலையில் ஒதுங்கியிருந்தவராகவும், உங்களுள் இருந்துதான் பிறப்பெடுக்கப் போகிறார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனவே சாதனை என்பது அதிபர், ஆசிரியர்களால் கட்டி எழுப்படுவதல்ல என்பதனை பெற்றார்கள், நலன் விரும்பிகள் யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு சமூகக் காரணிகள் சகபாடிகளின் தாக்கம் செல்வாக்கு செலுத்துகின்றமையினை பல ஆய்வுகள் நிரூபித்திருப்பது மட்டுமல்லாது. எமது அனுபவ உண்மையும் கூட. எனவே, அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பொறுப்பெடுப்பதன் மூலம் கல்வி அடைவு மட்டம், ஒழுக்க நன்நடத்தையுடைய நல்ல மாணவர் சமூகத்தினை உருவாக்கமுடியும் என்பதில் ஐயமில்லை.

**மனம் நிறைந்த நன்றிகளும் மகிழ்வான வாழ்த்துக்களும்.**

50ஆவது ஆண்டு விழாவினைச் சிறப்பாக முன்னெடுக்கும் நிகழ்விற்கு நேரம் ஒதுக்கி பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்களிற்கும் ஏனைய அதிதிகளுக்கும் இந்நேரத்தில் நன்றி கூறுகின்றேன்.

தமது உடல் பொருள் நேரத்தினையும் தமது கல்லூரித் தாய்க்காக அர்ப் பணித்து அழகுபடுத்தி பல்வேறு கட்டுமாணங்கள் அமைத்து இறும்பூதடைந் திருக்கும் பாடசாலை யின் தாய்நாட்டிலும், புலம்பெயர்நாட்டிலும் வசிக்கும் பழைய மாணவர்களிற்கு உளமார்ந்த நன்றிகள்.

இந்நிகழ்வினைச் சிறப்பிப்பதற்காக என்னுடன் இணைந்துழைத்த நலன் விரும்பிகள், பெற்றோர்கள், பிரதிஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஏற்பாட்டுக்குழுவினர்கள் அனைவரிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். மேலும் உரியகாலத்தில் மலர் வெளியீட்டுக்காக உழைத்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், பழைய மாணவர்களுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த பழைய மாணவன் தெ. அமிர்தகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விஸ்டா8 பிறிண்டேர்ஸ்) உரிமையாளருக்கும், ஊழியர்களிற்கும், நூலிற்கான நிதிப் பங்களிப்புச் செய்த திரு. திருமதி எம்.சீவரத்தினம் குடும்பத்தினருக்கும் நன்றியுடன் பாராட்டினைத் தெரிவிக்கின்றேன்.

காலத்திற்கு காலம் காவுகொள்ளப்பட்டு கொடிய யுத்தத்தின் பிடியில் அரிய வரலாற்றுத் தடயங்கள் யாவும் அழித்தொழிக்கப்பட்டன. பாடசாலைச் சமூகத்தின் பெருமுயற்சியால் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பதிவேற்றப்பட்டுள்ளது. இதனால் படைப்புக்களில் தவறுகள் தவிர்க்க முடியாதவை. இதில் ஏதுவும் தவறுகள் இருப்பின் பொறுத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாறாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
அன்ன வராயினும் புண்ணியங் கோடி
அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

**திருமதி. இ. ரவீந்திரநாதன்**

அதிபர்

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கம்

கனகபுரம் படித்த வாலிபர் திட்டத்தில் 1969ம் ஆண்டு அதிபர் திரு.சி.பொன்னையா அவர்கள் தலைமையில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக வளர்ச்சி கண்ட இப்பாடசாலை பல கல்விமான்களை உருவாக்கியது. அவ்வாறு பாடசாலைக்கல்வியை நிறைவு செய்து வெளியேறியோரை ஒன்று திரட்டி 1991ம் ஆண்டு அப்போதைய அதிபராக இருந்த திரு.க.ஆறுமுகதாஸ் அவர்களால் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. உதயமாகிய சங்கத்தின் முதல் செயலாளராக திரு.அ.றெஜிஅலோசியஸ் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து 2003ம் ஆண்டு வரை திரு.அ.றெஜிஅலோசியஸ் அவர்களும் 2003ம் ஆண்டிலிருந்து 2005ம் ஆண்டுவரை திரு.க.அருட்செல்வம் அவர்களும் தொடர்ந்து மீண்டும் 2005ம் ஆண்டிலிருந்து 2013ம் ஆண்டு வரை திரு.அ.றெஜிஅலோசியஸ் அவர்களும் 2013ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டு வரை திரு.க.கடம்பசோதி அவர்களும் 2017ம் ஆண்டிலிருந்து இன்றுவரை மீளவும் திரு.அ.றெஜிஅலோசியஸ் அவர்களும் செயலாளராக பழைய மாணவர் சங்கத்தை வழி நடத்தி வந்தனர்.

அன்று தொடக்கம் பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகவிருந்தது, பாடசாலையின் வெள்ளி விழா மூன்று தினங்கள் கொண்டாடப்பட்டபோது அவ்விழாவிற்கு வலுசேர்க்கும் முகமாக பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் பெருமெடுப்பிலான வெள்ளி விழா கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி நடாத்தப்பட்டு விழா மேடையில் பரிசில் வழங்கப்பட்டது, வெள்ளிவிழா நிகழ்வுகளை நேர்த்தியாக ஒழுங்கமைத்து நடாத்திய பழைய மாணவர் சங்க செயலாளர் தலைமையிலான குழுவின் செயற்பாடு அனைவராலும் பாராட்டப்பட்டது. பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையாக இருந்த காலத்தில் மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்களை பழைய மாணவர்கள் தமது ஓய்வு நேரங்களிலும் பாடசாலை நேர்த்திற்கும் முன்பும், பின்பும், சனி, ஞாயிறு தினங்களிலும் கற்பித்து வந்தனர். இதன் பயனாக 1989ம் ஆண்டு மாணவர்கள் மாவட்டத்தில் அதி சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டதுடன் பாராட்டையும் பெற்றனர்.

இவ்வாறு செயற்பட்ட பழைய மாணவர்கள் பாடசாலையில் வருடாவருடம் இடம் பெறும் நிகழ்வுகளில் தமது பூரண பங்களிப்பை வழங்கி வந்தனர். 1996ம் ஆண்டு இப்பாடசாலை இடம்பெயர்ந்து, ஸ்கந்தபுரத்தில் இயங்கிய காலத்தில் பழைய மாணவர்கள் தமது ஒத்துழைப்பை வழங்கி, கொட்டகைகள் அமைத்து, மாணவர்களது கல்விக்கு வலுச்சேர்க்க ஒத்துழைத்தனர். அந்தக் காலத்தில் எத்தனையோ அதிபர்கள் கடமை புரிந்தும் இப்பாடசாலை சமூகத்தால் எல்லோராலும் செயல் வீரனாக கணிக்கப்பட்ட அதிபர் திரு.க.ஆறுமுகதாஸ் கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென்றார். அவரது பிரியாவிடை நிகழ்வை வெகு விமரிசையாகக் கொண்டாடிய பழைய மாணவர்கள் அவரை கௌரவித்து தங்கப்பதக்கம் அணிவித்து மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பாடசாலை கனகபுரத்தில் இயங்க ஆரம்பித்தது. பாடசாலையின் மைதானத்திற்கென ஒதுக்கப்பட்ட காணி கிளிநொச்சி டிப்போ வீதியில் தெற்கு புறமாக அம்பாள்குளம் கிராம அலுவலர் பிரிவில் அடங்கி இருந்தது. பராமரிப்பின்றி காடுகளாக இருந்த காணி பழைய மாணவர் சங்கத்தால் புனரமைப்பு செய்யப்பட்டு மதில் கட்டுவதற்கு அத்திவாரம் இடப்பட்டது. எனினும் 2008ம் ஆண்டு இடப்பெயர்வுக்கு பின் அக்காணி சந்தைக்காக பாவிக்கப்பட்டதுடன் அடுத்தடுத்த காலங்களில் பொருளாதார மத்திய நிலையமாக மாற்றம் பெற்றது.

இதனால் மைதானமின்றி இருந்த பாடசாலைக்கு ஒரு மைதானம் தேவை என பல முயற்சிகளை எடுத்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் இணைந்து மாண்புமிகு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று ஒரு நிரந்தர மைதானம் பெற்றுக்கொள்ள வழியேற்படுத்தி வெற்றி கண்டனர். அதன் பயனாக தற்போது சுற்றுமதிலுடன் கூடிய மிகச்சிறந்த மைதானத்தை பாடசாலை கொண்டுள்ளதோடு, இது மாணவர்களது விளையாட்டுத்துறை சார்ந்த அபிவிருத்திக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது.

பாடசாலையின் வளாகம் ஓர் திறந்த வெளியாகவே காணப்பட்டது. இதனை கருத்தில் கொண்ட பழைய மாணவர்கள் இப்பாடசாலையைச் சுற்றி சுற்றுமதில் அமைக்கும் வேலையை முன்னெடுத்தனர். அக்காலப்பகுதியில் அதிபராக இருந்த திரு,ஐ.குகானந்தராஜா அவர்கள் பழயை மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்டார். பாடசாலையின் பாதுகாப்புக்காக இதனை செய்து முடிக்க வேண்டுமென புலம்பெயர்தேசங்களில் இருக்கும் பழைய மாணவர்கள் பூரண ஒத்துழைப்பை நல்கினர். இதனால் செயலாளர் திரு,க.கடம்பசோதி அவர்களின் முழு முயற்சியின் பயனாக 1500 அடி நீளமான சுற்றுமதில் அமைத்து முடிக்கப்பட்டது. பின்னர் பாடசாலை நிர்வாகத்திற்கும் பழைய மாணவர் சங்கத்திற்குமிடையே புரிந்துணர்வு இன்மையால் சில கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றன. இருப்பினும் பழைய மாணவர்கள் இப்பாடசாலையின் முதுகெலும்பாக செயற்பட வேண்டியவர்கள் என்ற எண்ணத்திற்கமைய தொடர்ந்து செயற்பட்டனர். இப்பாடசாலை கடந்த காலங்களில் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறை, கலைத்துறையிலும் பல சாதனைகளை படைத்திருந்து. அதன் பெருமையில் பழைய மாணவர்களும் பங்கெடுத்து மகிழ்ந்திருந்தனர்.

கனகபுரம் பழைய மாணவர்கள் பாடசாலை மீது அளப்பரிய பற்றுக் கொண்டவர்களாக இருப்பது இப்பாடசாலைக்கு கிடைத்திருக்கும் ஒரு கொடையாகும். பற்றுள்ளவர்களாக மாணவர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு பாடசாலை அதிபர் தலைமையிலான ஆசிரியர் குழாத்தை சார்ந்ததாகும். இப்பாடசாலை பழைய மாணவர்கள் இதனையிட்டு பெருமை கொள்கின்றனர். இக்காலப்பகுதியில் பொன்விழா நிகழ்வு நெருங்கியது, அதனை சாதகமாக பயன்படுத்தி தற்போதைய நிலையிலிருந்து மேலும் சாதனைமிகு நிலைக்கு மாற்ற வேண்டுமானால் பொன் விழாவைச் சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு முக்கிய சில அபிவிருத்தி பணிகளை அவசரமாக செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென தீர்மானித்த பழைய மாண வர்கள் பெருமளவிலான வேலைத்திட்டங்களை பிரிவு ரீதியாகவும் குடும்பங்களாகவும் பொறுப்பேற்று செய்து வருகின்றனர். இதனூடாக பாடசாலையைத் தரமுயர்த்த முடியும் என நம்புகின்றனர்.

இம்மாவட்டத்தில் எந்தவொரு பாடசாலைக்கும், சொந்தமாக கலையரங்கம் இல்லாதிருக்கும் நிலையில் 3 மில்லியன் பெறுமதியான கலையரங்கம் ஒன்றை பழைய மாணவர் திரு.பா.தேவகுமார் அவர்கள் தனது சொந்த நிதியில் அமைத்துக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது. பொன் விழாவிற்காக பழைய மாணவர்களின் அர்ப்பணிப்புடனான பங்களிப்பு ஏனைய பாடசாலைகளுக்கு ஓர் முன்னுதாரணமாக அமையப் பெறும் என்பது வரலாற்று நிகழ்வாகும் என்பது திண்ணம்.

பழைய மாணவர் சங்கம் சார்பில்,
திரு.அ.றெஜிஅலோசியஸ்,
செயலாளர்,
கனகபுரம் மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா ஏற்பாடுகளும் உண்மையான அபிவிருத்தி இலக்கும்

**அறிமுகம்**

2019ஆம் ஆண்டில் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் எனும் எமது ஆத்மார்த்த பாடசாலையின் 50 ஆண்டு நிறைவடைவதால் பொன்விழா நிகழ்வினை சிறப்பாக கொண்டாட வேண்டும் எனும் எண்ணம் பாடசாலை தாயை நேசிக்கும் பல்வேறு தரப்பினரிடம் முகிழ்ந்திருந்தது. பலரும் பல மாதங்களாக விழாவிற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்ற விருப்பில் தனிப்பட்ட கலந்துரையாடல்களை கருத்துப்பகிர்வுகளை கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இருந்தே மேற்கொண்டு வந்ததை நான் அறிவேன்.

ஆர்வத்தோடு இருந்த பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் பலரும் பொன்விழா ஏற்பாட்டுக்கான தமது பங்களிப்பினை ஒருங்கிணைப்பதற்கான சந்தர்ப்பத்தினை எதிர்பார்த்திருந்தனர். இந்த நிலையில் சில பழைய மாணவர்களால் தனிப்பட்ட முறையிலான ஒரு கலர் துரையாடல் மேற்கொள்ளப்பட்டு பொன்விழாவினை சிறப்பாக நடாத்துவதற்கான ஆரம்பகட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக பாடசாலையின் முதல்வருடனும், ஒரு சில ஆசிரியர்களுடனும், நலன்விரும்பிகளுடனும், பழைய மாணவர்களுடனும் தனிப்பட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலையின் முதல்வர் பொன்விழா ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்வந்தார். அத்துடன் சில ஆசிரியர்களும், நலன்விரும்பிகளும் வழங்கிய பேராதரவு எமக்கு உத்வேகத்தினை அளித்தது. பழைய மாணவர்களது ஆதரவு பெரும் பலமாக அமைந்தது.பாடசாலையின் முதல்வரது ஏற்பாட்டில் முகாமைத்துவ குழு, பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகிய பாடசாலையின் முக்கியத்துவமிக்க அமைப்புகளுடன் கலந்துரையாடி பொன்விழா நிகழ்வினை நடாத்துவதற்கு தேவையான அண்ணளவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மதிப்பீட்டினுள் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளடக்கப்பட்டன. பொன்விழாக்காணும் பாடசாலை என்ற வகையில் இதுவரை தீர்க்கப்படாத அத்தியாவசிய பௌதீக வளத்தேவைகளை பூர்த்தி செய்தல் தொடர்ந்து பொன்விழா நிகழ்வுகளை சிறந்த முறையில் நடாத்துதல் என்பவற்றுக்கான தேவைப்பாடு கள் இனம் காணப்பட்டு தனித்தனியாக உத்தேச மதிபீடுகள் தயாரிக்கப்பட்டன.

**ஏற்பாட்டுக்குழுத் தெரிவு**

பொன்விழா நிகழ்வினை சிறப்பாக கொண்டாடுவதற்கு பாடசாலைச் சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி அனைவரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளவேண்டியது அவசியம் என உணரப்பட்டது. எனவே பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகிய சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பினரையும் உள்ளடக்கி பொன்விழா ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான முக்கிய உத்தியோக பூர்வமான கூட்டம் 2019.02.07ம் திகதி பாடசாலை மண்டபத்தில் கூட்டப்பட்டது. இதில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் பொன்விழா ஏற்பாடுகள் என்பவற்றுக்கான மதிப்பீட்டு முன்மொழிவுகள் விரிவாக ஆராயப்பட்டு முழுமையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

தொடர்ந்து அன்றைய கூட்டத்தில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய பொன்விழா ஏற்பாட்டு குழு, மலர்வெளியீட்டுக்குழு என்பன தெரிவுசெய்யப்பட்டன. இனங்காணப்பட்ட அபிவிருத்திப் பணிகளையும் பொன்விழா நிகழ்வுக்கான ஏற்பாடு களையும் ஏற்பாட்டுக்குழுவினர் தலைமையேற்று முன்னெடுக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**பொறுப்புகள்**

ஏற்பாட்டுக்குழுவானது தனது செயற்பாடுகளை வெற்றிகரமாக முனனெடுப் பதற்காக பல்வேறு பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான தேவைப்பாட்டினை கொண்டிருந்தது.

**01. பாடசாலையின் பௌதிக வள அபிவிருத்தியை மேற்கொள்ளுதல்:-**

ஏற்கனவே இனங்காணப்பட்ட பௌதீக வளத்தேவைகளையும் எதிர்காலத்தில் பாடசாலைச் சமூகத்தின் பல்வேறு தரப்பினருடன் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் மூலம் இனங்காணப்படும் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கி முழுமையான வளத் தேவையை இனங்கண்டு உறுதிபடுத்துவதோடு பொன்விழாவிற்கு முன்னர் மேற்கொள் ளக்கூடிய அவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**02. பொன்விழா நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்:-**

பாடசாலையின் அனைத்து தரப்பினரையும் விருந்தினர்களையும் பொது மக்களையும் உள்ளடக்கி 2000 பேர் கலந்து கொள்வார்கள் என திட்டமிடப்பட்டுள்ள பொன்விழா நிகழ்வினை பாடசாலையின் நன்மதிப்பை மேம்படுத்தும் வகையில் மிகச்சிறந்த ஒழுங்கமைப்புடன் பிரமாண்டமாக மேற்கொள்ள வேண்டும்.

**03. பாடசாலை சமூகத்தினை ஒன்றிணைத்தல்:-**

பாடசாலை என்பது சமூகத்தின் ஒரு விலைமதிப்பில்லா சொத்து என்ற வகையில் அனைத்து தரப்பினரையும் இணைத்து அவர்களது ஒத்துழைப்பு மற்றும் பங்கு பற்றலுடன் பொன்விழா ஏற்பாடுகளையும் தொடர்ந்து பொன்விழா நிகழ்வினையும் கொண்டாட வேண்டும்.

**04. பொன்விழா மலர்வெளியீட்டிற்கு ஏற்பாடு செய்தல்:-**

பாடசாலை தனது பொன்விழா மகுடத்தினை அணியும் வேளையில் பொன்விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரினை காத்திரமான முறையில் வெளியீடு செய்வதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை மேற்கொள்வதோடு வரலாற்று ஆவணமாக மிளிர்ந்து நிலைத்திருக்க வேண்டிய மலர் காத்திரமான முறையில் அமைவதற்கு தேவையான உதவிகளை மலர் வெளியீட்டுக்குழு விற்கு வழங்க வேண்டும்.

**05. மாணவர்களது கல்வி மற்றும் இணைபாட விதான செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கு ஒத்துழைத்தல்:-**

பாடசாலை என்பது மாணவர்களுக்குரியது. அதன் உண்மையான உரித்தாளர் களாகிய மாணவர்களது கல்வி மற்றும் பல்துறை மேம்பாடே உண்மையான அபிவிருத்தி ஆகும். என்ற வகையில் அவர்களது கற்றல் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளது மேம்பாட்டினை அடைய எதிர்நோக்கும் சலால்களை இடர்களை தகர்த்து முன்னேற்றம் காணும் மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதே பொன்விழா காணும் பாடசாலையின் உண்மை இலக்காகும். அந்த வகையில் தேவையான ஆதரவினை வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இவ்வாறு பாரிய பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புடைய குழுவாக ஏற்பாட்டுக் குழு செயற்பட்டு மிகக் குறுகிய காலத்தில் பொன்விழா நிகழ்வுக்கென தீர்மானிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் முதல் நான்கு இலக்குகளையும் அடைய வேண்டிய நிலையில் செயற்திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டி இருந்தது. 05வது இலக்கு குறுங்காலத்தில் அடைந்து விடக் கூடிய ஒன்று அல்ல. எனினும் ஏனைய இலக்குகளை விட மிகப்பிரதானமானது இதுவே என்பதால் இதனை அடைவதற்கான நீண்டகால நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்து அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

**சவால்கள்**

மேற்குறித்த இலக்குகளை அடைவதற்கு ஏற்பாட்டுக்குழு பிரதானமாக கீழ்வரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

*01.* பாடசாலை சமூகத்தில் காணப்பட்ட ஒன்றிணைவின்மை

*02.* குறுகிய ஏற்பாட்டுக்காலம்

*03.* பாரிய நிதித்தேவை

**தந்திரோபாயங்கள்**

பொன்விழா நிகழ்வுகளை சிறப்பாக ஏற்பாடு செய்வதிலும் அதற்கு சமாந்தரமாக பாடசாலையின் பௌதீக அபிவிருத்தியை மேற்கொள்வதிலும் காணப்பட்ட சவால் களுக்கு முகம் கொடுத்து வேலைத்திட்டங்களை முன்னகர்த்த வேண்டிய பாரிய பொறுப்பினை ஏற்பாட்டுக்குழு கொண்டிருந்தது. எனவே எதிர்கொள்ளப்பட்ட பாரிய சவால்களை வெற்றி கொள்வதற்கான பல்வேறு தந்திரோபாயங்களை வகுத்து அதற்கமைவாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் பொன்விழாவினை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கோடு எமது ஏற்பாட்டுக்குழு அமைக்கப்பட்டபோது பாடசாலை சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடையேயும் அதிருப்தியும் முரண்நிலையும் அதிகரித்துக் காணப்பட்டது. பல பழைய மாணவர்கள் பாடசாலையின் செயற்பாடுகளில் பங்குபற்றுதல் இன்றி காணப்பட்டனர். முன்னைய காலங்களில் பாடசாலை வளர்ச்சிக்கென தம்மை அர்ப்பணித்து செயற்பட்ட பழைய மாணவர்கள் கூட பாடசாலையின் சகல செயற்பாடுகளில் இருந்தும் ஒதுங்கி இருந்த சூழ்நிலை காணப்பட்டது. சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் அதிருப்தி கொண்டவர்களாக காணப்பட்டனர். இவ்வாறு பாடசாலைக்கும் ஏனைய பாடசாலை சமூகத்தினருக்கும் இடையே காணப்பட்ட முரண்பாட்டு நிலையே எமக்கான பிரதான சவாலாக எதிர்நோக்கப்பட்டது.

இது சீர்செய்யப்பட்டு நடுநிலைப்படுத்தப்பட்டாலே பொன்விழாவைக் கொண்டாடக்கூடிய சூழல் அமையும் என்பதனால் ஏற்பாட்டுக்குழுவினர் பல சமூகப் பெரியார்களையும் நலன்விரும்பிகளையும் தனித்தனியாக அவர்களது வீடுகளுக்குச் சென்று சந்தித்து கலந்துரையாடி எமது செயற்பாடுகளையும் அதன் எதிர்கால அவசியத்தன்மையினையும் விளக்கினோம். பொன்விழா கொண்டாடப்படுவதற்கான ஒரு நிகழ்வாக மட்டும் எம்மால் ஏற்பாடு செய்யப்படாது பாடசாலையின் மீள்எழுச்சிக்கும் சிறந்த கற்றல் கற்பித்தல் சூழலை ஏற்படுத்தவும் உறுதியான திட்டத்தோடு முன்னெடுக்கப்பட்டு வருவதனை உணர்ந்து அனைவரும் தமது ஆதரவினை வழங்க முன்வந்து எமக்கு உறுதுணையாக செயற்பட்டனர்.

ஆரம்பத்தில் ஒரு சில பழைய மாணவர்கள் மட்டுமே பாடசாலை சார்ந்த செயற்பாடுகளில் பங்குபற்ற முன்வந்த சூழலில் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் சோர்வுற்றிருந்த காலப்பகுதியில் அனைத்து பழைய மாணவர்களையும் இணைக்க வேண்டிய கடப்பாடு காணப்பட்டது. இந்நிலையில் ஒவ்வொரு பிரிவுகளிலும் கல்வி கற்ற பழைய மாணவர்கள் பலரை நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களது பிரிவு மாணவர்களை திரட்டுமாறு கோரிக்கை விடுத்து வந்தோம். அதேவேளை viber Group ஒன்றினை ஆரம்பித்து அதில் எம்மால் தொடர்பெடுக்க முடிந்த பழைய மாணவர்களை இணைக்க முயற்சி செய்தோம். முதல் மூன்று வாரங்கள் அதில் இணைந்தவர்களது எண்ணிக்கை முப்பதை தாண்டவில்லை. பல்வேறு வகைகளில் அறிவித்தல் வழங்கி பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அதில் பெருமளவானோர் பங்குபற்றினர். தொடர்ந்து viber group மூலமாகவும் பழைய மாணவர்கள் இணைக்கப்பட்டனர். இதன் மூலம் வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு பெருமளவான பழைய மாணவர்கள் இணைந்து வலுவான ஒரு அணியாக உருவாகினர்.

இச்செயற்பாடுகள் மூலம் ஏற்பாட்டுக்குழுவினரது தலைமையில் பாடசாலையின் பொன்விழா செயற்பாடுகளில் பலரும் இணைக்கப்பட்டு ஒருமித்த நோக்கோடு செயற்பட சந்தர்ப்பம் ஏற்பட்டது. பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலையின் பல்வேறு குழுக்கள், மாணவர்கள், பெற்றோர் என பல தரப்பினருடனும் அடிக்கடி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு அவர்களது ஆலோசனைகள் பெறப்பட்டு தேவைகள் இனங்காணப்பட்டதோடு அனைத்து தரப்பினரும் பொன்விழா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் உள்வாங்கப்பட்டனர். பாடசாலை சமூகத்தினரிடையே காணப்பட்ட முரண்நிலைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு அனைவரும் இணைந்து செயலாற்றும் பலம் மிக்க நிலை தோற்றம் பெற்றது. இன்னமும் சிறிய அளவில் தொடர்ந்து காணப்படும் கருத்து வேறுபாடுகளை தொடர்ச்சியான செயற்பாடுகள் மூலம் இழிநிலைக்கு கொண்டுவர மேலும் முயற்சி செய்தல் வேண்டும். எதிர்காலத்தில் முன்னுதாரணமான பாடசாலை சமூகமாக எமது பாடசாலை மிளிர அனைவரும் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற மனநிலை மாற்றம் நீண்டகாலத்தில் படிப்படியாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.

குறுகிய காலத்தில் பாடசாலையின் சகல தரப்பினரையும் ஒன்றிணைக்க ஏற்பாட்டுக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பெருமளவு வெற்றியடைந்ததன் குறிகாட்டியே பெருமளவான அபிவிருத்திப் பணிகளும் சிறந்த ஏற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டமையாகும். மிகக் குறுகிய காலத்தில் பொன்விழாவிற்குரிய அனைத்து ஏற்பாடு களையும் முன்னெடுக்க வேண்டியிருந்தமை நாம் எதிர்நோக்கிய இரண்டாவது பிரதான சவாலாகும். பொன்விழாவிற்கான மேடை நிகழ்வுகளை மட்டும் நடத்துவது எமது இலக்காக இருந்திருந்தால் ஆறு மாதங்கள் எனும் காலம் மிகப் போதுமானதாக அமைந்திருக்கும். ஆனால் மிகப்பாரிய அளவிலான அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கும் இலக்கினை நாம் வகுத்துக் கொண்டதால் குறித்த காலத்திலுள் இலக்கினை அடைவதற்கு நாம் கூடுதலாக உழைக்க வேண்டி இருந்தது.

கிடைக்கக் கூடியதாக உள்ள நேரத்தினை உச்ச அளவில் பயன்படுத்தும் நோக்கோடு ஏற்பாட்டு குழுவினர் தமது தனிப்பட்ட விடயங்களை புறந்தள்ளி முழுமையாக ஏற்பாட்டுப் பணிகளில் காலத்தினை செலுத்த முன் வந்தனர். இரவு 11.00 மணி வரை சில நாட்களில் அதனைக் கடந்தும் குழுவாக செயற்பட முன்வந்தமை எமது இலக்கை அடைய சந்தர்ப்பமளித்தது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு சிலரது அர்ப்பணிப்பும் சிறந்த தந்திரோபாய திட்டமிடலும் சவாலாக இருந்த செயற்திட்டத்தினை உரிய காலத்தில் நிறைவேற்ற வாய்ப்பளித்தது. நாம் ஆரம்பத்தில் திட்டமிட்டதை விட காலத்திற்கு காலம் பலரது ஆலோசனைகளுக்கு அமைய புதிதாக உள்வாங்கப்பட்ட திட்டங்களையும் இணைத்து செயற்படுத்த முடிந்தமை பெரும்பேறாகும். இதற்கு ஆக்கமுள்ள வகையில் பங்குதாராக செயற்பட்ட வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பரந்து வாழும் சில பழைய மாணவர்களது அதீத ஆதரவு ஊக்குவிப்பாக அமைந்தது.

எமது திட்டங்களை கனவு நிலையிலிருந்து நனவாக செயற்படுத்த பாரியளவிலான நிதித் தேவை காணப்பட்டமை நாம் எதிர்கொண்ட மூன்றாவது பாரிய சவாலாகும். ஆரம்பத்தில் 11 மில்லியன் செலவில் எமது திட்டங்களை வகுக்கும் போது ஒரு சதம் நிதி கூட எம்மிடம் இருக்கவில்லை. இருப்பினும் நிதியை ஒரு தடையாகக் கொள்ளாமல் திட்டமிடலை மேற்கொண்டு அதற்கான இயன்ற முயற்சிகளை செய்வதே எமது நிலைப்பாடாக வரித்துக் கொண்டோம். ஏற்பாட்டுக் காலமாக இருந்த ஆறு மாதங்களில் முதலிரு மாதங்கள் திட்டமிடலை மேற்கொள்ளவும் பாடசாலைசமூகத்தினை ஒருங்கிணைக்கவும் செலவிடவேண்டியிருந்தது. மீதி நான்கு மாதங்களில் பாரிய அளவு நிதியைத் திரட்டி எமது திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு காணப்பட்டது. கடந்த காலங்களில் பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட மூன்று பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டங்கள் எமக்கு முன்மாதிரியாக அமைந்தன. எமது பாடசாலை பழைய மாணவன் திரு.கடம்பசோதி தலைமையில் பற்றுள்ள சில மாணவர்கள் இணைந்து பாடசாலையின் சுற்று மதிலினை ரூபா 2,500,000 (இருபத்தைந்து இலட்சம்) பெறுமதியில் அமைத்திருந்தனர். அவர்களது அர்ப்பணிப்பும் செயற்திறனும் எமக்கு வழிகாட்டியாக இருந்தது. தொடர்ந்து 1991ம் ஆண்டு க.பொ.த(சா/த) பிரிவு பழைய மாணவர்கள் தாமாக முன்வந்து ரூபா 1,100,000 (பதினொரு இலட்சம்) பெறுமதியான நிரந்தர நீர்த்தாங்கியையும் நீர் விநியோக அமைப்புகளையும் அமைத்து பாடசாலை சமூகத்திடம் ஒப்படைத்திருந்தனர். இச்செயற்பாடு பிரிவாக ஒன்றிணைதலின் பலத்தையும் அதன் மூலம் மேற்கொள்ளக்கூடிய சாதனையையும் எமக்கு எடுத்துக் காட்டியது. தொடர்ந்து திரு.அழகன் தலைமையில் சில பற்றுள்ள பழைய மாணவர்கள் இணைந்து ரூபா 750,000 பெறுமதியில் பாடசாலை சுற்று மதிலுக்கான பூச்சு வேலைகளை மேற்கொண்டிருந்தனர். இது எத்தகைய சூழ்நிலையிலும் பாடசாலையின் வளர்ச்சி கருதி முன்நோக்கி நகரும் பற்றுறுதியை வெளிக்காட்டியது.

இச் செயற்பாடுகளை முன்மாதிரியாகக் கொண்டு எமது செயற்பாடுகளை ஒழுங் கமைத்து அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க தீர்மானித்தோம். பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "துரித பாடசாலை அபிவிருத்தித்திட்டம்" எனும் மகுடத்தில் எம்மால் இனங்காணப்பட்ட வேலைத் திட்டங்களை செயலுருவிற்கு கொண்டு வர முயன்றோம். திட்டங்கள் பழைய மாணவர்களது பார்வைக்கு முன்வைக்கப்பட்டு பிரிவு ரீதியாக ஒன்றிணைந்து ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு வேலைத்திட்டத்தினை தமது இயலுமைக்கேற்ப பொறுப்பேற்குமாறு கோரிநின்றோம். பிரிவு ரீதியாக பழைய மாணவர்களை நேரடியாக அணுகி அவர்களது பிரிவைச் சேர்ந்த ஏனைய மாணவர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க ஊக்குவித்தோம். எமது இந்த அணுகுமுறை பாரிய வெற்றியைத் தந்தது.

பல பிரிவுகள் வேகமாக ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். அதேபோல் பல நலன்விரும்பிகளை சந்தித்து எமது திட்டங்களை விளக்கி அவர்களது ஆதரவினைக் கோரினோம். பழைய மாணவர்களின் குடும்பங்கள் சில வேலைத் திட்டங்களை பொறுப்பேற்றுக்கொண்டனர். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் வரவேற்பு வளைவு மற்றும் சிறுவர் பூங்கா என்பவற்றை அமைத்துத்தர முன்வந்தார். கரைச்சி பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் அவர்கள் பாடசாலையை சூழவுள்ள வீதிகளுக்கு நவீன மின்னொளி பொருத்தவும் பாடசாலையின் முன் வீதியை செப்பனிட்டுத் தரவும் முன் வந்தார். World vision நிறுவனத்தினர் பாடசாலை கட்டடங்களுக்கான வர்ணப்பூச்சுக் குரிய Paint இனை வழங்குவதற்கு முன்வந்தனர். பழைய மாணவர்கள் தனியாகவும் குடும்பங்களாகவும் பிரிவு ரீதியாகவும் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பொறுப்பேற்றுக் கொண்டனர். பிரிவு ரீதியாக பொறுப்பேற்ற வேலைத்திட்டங்களை மிகச்சிறப்பாக பழைய மாணவர்கள் முன்னெடுத்துச் சென்ற அதேவேளை பொன்விழா நிகழ்வு ஏற்பாடுகளுக்கென தமது நிதிப்பங்களிப்பையும் மனமுவந்து வழங்கினர். பழைய மாணவர்களது பாடசாலைப் பற்றும் ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பும் மிகவும் முன்னுதாரணமானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய வளத்தேவையைக் கொண்டிருந்த எமது பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்ய குறுகிய காலத்தில் பழைய மாணவர்கள் காட்டிய அதிதீவிர பங்களிப்பு வளர வேண்டிய ஏனைய பாடசாலைகளுக்கும் கூட சிறந்த முன்மாதிரியை ஏற்படுத்தி யுள்ளது. இதன் உடனடி வெளிப்பாடாக எமது மாவட்டத்தின் சில பாடசாலைகளில் பழைய மாணவர்கள் பிரிவு ரீதியாக ஒன்றிணைந்து ஒரு சில அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க முயற்சிப்பது பெருமைக்குரிய மாற்றமாகும். மிக குறுகிய காலப்பகுதிக்குள் மிகப்பெரிய செயற்றிட்டங்களை முன்னெடுத்த பெறுமைக்குறியவர்களாக இறுமாப் புடன் பாடசாலைத் தாயின் பொன்விழா நிகழ்வில் எமது பழைய மாணவர்கள் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது பெரிய வரப்பிரசாதமாகும்.

**எதிர்கால இலக்கு**

பாடசாலை அபிவிருத்தி என்பது அதன் பௌதீக வளத்தேவைகளை பூர்த்தி செய்வதுடன் மட்டுமோ அல்லது பொன்விழாவினை சிறப்பாக நடத்துவதனால் மட்டுமோ உண்மையான இலக்கை அடைந்து விடாது என்பதனை எமது பழைய மாணவர்கள் நன்குணர்ந்துள்ளனர். மாணவர்களது கல்வி அடைவு மற்றும் இணை பாடவிதான செயற்பாடுகளில் அவர்களது வெளிப்பாடு என்பனவே மிக முக்கியமான அபிவிருத்தி இலக்காகும். இது மிகக் குறுகிய காலத்தில் சாதித்துக் காட்டக் கூடிய ஒன்றல்ல. பாடசாலையின் உண்மை அபிவிருத்திக்கான அடிப்படை வளத்தேவைகளை நாம் பூர்த்தி செய்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் அடுத்த கட்டம் பற்றிய முன்னெடுப்புக்கள் மிகவும் அத்தியாவசியமானவை. உண்மை வளர்ச்சி என்பது பாடசாலை சமூகத்திற்கு தலைமை தாங்கும் பாடசாலை முதல்வரது தலைமைத்துவ திறனிலும் ஆசிரியர்களது அர்ப்பணிப்பு மிக்க வழிகாட்டலிலுமே பெரிதும் தங்கியுள்ளது. அவர்கள் முன்வந்து எதிர்காலத்தில் செயற்படுத்த தயாராக இருக்கும் கல்வி மற்றும் இணைந்த செயற்பாடு களுக்கு நீண்டகால அடிப்படையில் ஆதரவு வழங்க பழைய மாணவர்கள் முன் வந்திருப்பது மிக தூர நோக்கு சிந்தனையாகும்.

"பொன்விழாவிலிருந்து வைரவிழா வரை" எனும் மகுடத்தில் எதிர்வரும் பத்து ஆண்டுகளில் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்த முன்னெடுக்கப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளுக்கும் தேவையான ஆதரவினை வழங்குவதற்காக முறையான அமைப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு அதனூடாக பாடசாலை அபிவிருத்திக்கு தேவை யான சகல நடவடிக்கைகளும் பழைய மாணவர்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்படு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களது கல்வி செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல், வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவியளித்தல், பின்தங்கியுள்ள பாடங்களில் கவனம் செலுத்தி மேலதிக வகுப்புக்களை ஏற்பாடு செய்தல், விளையாட்டு அபிவிருத்திக்கு தேவையான வளங்கள், பயிற்சிகள், உபகரணங்கள் போன்றவற்றை பெற்றுக்கொடுத்தல். கலைத்திறன் ஆர்வத்தை மேம்படுத்த தேவையான ஆதரவினை வழங்குதல், ஒழுக்கமும் பாடசாலைப்பற்றும் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாகுவதற்கு தேவையான செயற்திட்டங்களுக்கு ஆதரவளித்தல், ஆசிரியர்களது விளைதிறன்மிக்க வழிகாட்டலுக்கு ஊக்குவிப்பு வழங்குதல், தலைமைத்துவ ஆற்றலையும், இயலுமையையும் விருத்தி செய்ய உதவுதல், மேலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வளத்தேவைகளை பாடசாலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொடுத்தல் என பல இலக்குகளை எதிர்காலத்தில் அடைவதற்காக உழைப் பதற்கும் தமது பேராதரவை வழங்கவும் வேண்டிய பொறுப்பினை பழைய மாணவர்கள் உணர்ந்து தமது செயற்திட்டங்களை வகுத்து வருவது மாவட்டத்தின் முதனிலை பாடசாலையாக எமது பாடசாலையை மாற்றுவதற்கான அவர்களது இலக்கை விரைவில் அடைந்துவிட முடியும் என்பதற்கான சாதகத்தன்மையை பிரகாசமாக வெளிக்காட்டு கிறது. பாடசாலை சமூகத்தின் அனைத்து தரப்பினரது ஒத்துழைப்போடு உறுதியாக இந்த இலக்கு எட்டப்படும் எனும் நம்பிக்கையை ஊட்டுகிறது.

**சாதனையின் நாயகர்கள்**

பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பாட சாலை துரித அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பாரிய அளவிலான பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும், விழாவுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கும் ஏற்பாட்டுக்குழு என்றவகையில் தமது உழைப்பு, நேரம் அனைத்தையும் முழுமையாக அர்பணித்து ஏற்பாட்டுக்குழுவின் செயளாளர் திரு.அ.றெஜிஅலோசியஸ், பொருளாளர் திரு.பா.தேவகுமார், என்பவர்களோடு திரு.நா.ஜெயாளன், திரு.தி.மகேந்திரன், திரு.கு.ஜெயகுமார், திரு.சீ.கலைவாணன், ஆகிய பழையமாணவர்களுக்கும், கு.புவனா ஆசிரியர், ஆ.பரா ஆசிரியர், ஆகிய மதிப்புக்குரிய ஆசிரியர்களும் குழுவாக செயற்பட்டிருந்தனர். அவர்களது இணைவும் தொடர்ச்சியான செயற்பாடும் திட்டங்களை செயலுருப்படுத்த உதவியது.

எமது அபிவிருத்தி திட்டங்களுக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களுக்கும், கரைச்சி பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் அ.வேழமாலிகிதன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். பாடசாலை கட்டடங்களுக்கு வர்ணப்பூச்சு பூசுவதற்கு வர்ணப்பூச்சுகளை (Paint) வழங்க முன்வந்த World vision நிறுவனத்திற்கும் வேலைத்திட்டங்களுக்கும் பொன்விழா ஏற்பாட்டுக்கும் பங்களிப்பு வழங்கிய வணிக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது திட்டங்களை தயாரிக்கவும் அதனை செயற்திறனுடன் முன்னெடுக்கவும் ஒத்துழைத்த பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர்கள, நலன்விரும்பிகள், வர்த்தகர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஏற்பாட்டுக் குழுவின் சார்பிலும் பழைய மாணவர்கள் சார்பிலும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அளப்பரிய சாதனையாளர்களாக ஒன்றிணைந்துள்ள சகல பழைய மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் சிரம்தாழ்த்தி அன்புகலந்த நன்றியை தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.

"அறிவு தந்த பாடசாலையை அகிலம் போற்ற உயர்த்துவோம்."

பொன்விழா ஏற்பாட்டுக்குழு தலைவர்,

இ.அமல்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட துரித பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

| இல | நிதிப் பங்களிப்பு | வேலைத் திட்டங்கள் |
|---|---|---|
| 1 | 1978,1979,1980 பிரிவு | சரஸ்வதி சிலை |
| 2 | 1993 பிரிவு | மைதான மதில் திருத்தமும் மைதான மலசலகூடம் அமைத்தலும் |
| 3 | 1989 பிரிவு | உள்ளக சூழல் சீர் செய்தலும் அழகுபடுத்தலும் |
| 4 | 1995 பிரிவு | Ground மின்னொளி |
| 5 | 2011 பிரிவு | கண்காணிப்பு Camera பொருத்துதல் |
| 6 | 1990 பிரிவு | சிற்றுண்டிச்சாலை |
| 7 | 2008 பிரிவு | வகுப்பறை (60அடி) கட்டட திருத்தம் |
| 8 | பழைய மாணவர்கள் | மதில் வெள்ளை அடித்தலும் முன்புறம் வர்ணம் பூசுதலும் |
| 9 | 1984 பிரிவு | வீதியோர நடைபாதை அமைத்தல் |
| 10 | 1997 பிரிவு | பாடசாலை பெண்கள் மலசலகூடம் அமைத்தல் |
| 11 | 1988 பிரிவு | மைதான கிணறு அமைத்தல் |
| 12 | பழைய மாணவர்கள் | உள்ளக பாதை |
| 13 | திரு திருமதி.தில்லையம்பலம், மதன்கண்ணா குடும்பம் | நினைவு தூபியும் சூழ உள்ள பகுதி நடைபாதையும் |
| 14 | திரு.இராஜசுந்தரம் குடும்பம் | துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் |
| 15 | திரு.தேவகுமார் குடும்பம் | மைதான அரங்கு |
| 16 | Dr.சுகந்தன் குடும்பம் | திறன் வகுப்பறை |
| 17 | திரு. நாகலிங்கம் குடும்பம் | நூலகத்துக்கான தளபாடம் |
| 18 | திரு.பின்ரன் குடும்பம் | 02 குழாய்க்கிணறு அமைத்தல் |
| 19 | கௌரவ பா.உ சிறிதரன் அவர்கள் | வரவேற்பு வளைவும் வாயிற்கதவும் |
| 20 | | சிறுவர் பூங்கா |
| 21 | பழைய மாணவர்கள் World Vision | வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசுதல் |
| 22 | நியூலலிதா நகை மாளிகை | உள்ளக பிரதான பாதை |
| 23 | கரைச்சி பிரதேசசபை | பாடசாலை வீதி மின்னொளி |
| | | பாடசாலை வீதி திருத்தம் |
| 24 | பழைய மாணவர்கள் | 600அடி வேலி தூண் இட்டு அமைத்தல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழா ஏற்பாட்டுக்கான பங்களிப்பு விபரம்

| இல | நிதிப் பங்களிப்பு | வேலைத் திட்டங்கள் |
|---|---|---|
| 1 | 2005 O/L | மாணவர்களுக்கான பரிசளிப்பு ஏனைய கௌரவிப்பு |
| 2 | 2000 பிரிவு | கௌரவிப்பு முன்னாள் ஆசிரியர்கள் |
| 3 | பார்த்தீபன் Arts | அழைப்பிதழ் வரவேற்பு வளைவு Banner (பனர்) |
| 4 | கலைக்குடும்பம் | மலர் வெளியீடு |

| | |
|---|---|
| பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் துரித பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் பெறுமதி | **16.5 மில்லியன்** |
| பொன்விழா ஏற்பாட்டுக்கான பொறுப்பேற்கப்பட்ட வேலைகளின் பெறுமதி | **1.1 மில்லியன்** |
| பொன்விழா ஏற்பாடுகளுக்காக பழைய மாணவர்கள்,பெற்றோர் நலன்விரும்பிகள் வர்த்தகர்களிடம் பெறப்பட்ட நிதி (மலர் அச்சிடப்படும் தினம் வரை) | **2.1 மில்லியன்** |
| **முழுமொத்தம்** | **19.7 மில்லியன்** |

## கடந்த காலத்தில் பழைய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

| இல | நிதிப் பங்களிப்பு | வேலைத் திட்டங்கள் |
|---|---|---|
| 1 | பழைய மாணவர்கள் | 720அடி சுற்று மதில் |
| 2 | திரு கடம்பசோதி குடும்பம் | 600அடி சுற்று மதில் |
| 3 | கௌரவ மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அவர்கள் | 180அடி சுற்று மதில் |
| 4 | 1991 பிரிவு மாணவர்கள் | நீர்த்தாங்கியும் நீர் விநியோக அமைப்பும் |
| 5 | பழைய மாணவர்கள் | 1500அடி மதில் பூச்சு |
| 6 | பழைய மாணவர்கள் | கணினிக்கூடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள் சில
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள் சில



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வுகளின் பதிவுகள் சில

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை நிகழ்வுகளின் பதிவுகள் சில










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் பிரதி அதிபர், ஆசிரியர்களுடன் மாணவ முதல்வர்கள்



## அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களுடன் இசை வாத்தியக் (பாண்ட்) குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்கள்



ப.பவிதரன்
2012 க.பொ.த.உ 3A



டி.நிரோசன்
2012 க.பொ.த.உ 3A



தி.கம்சாயினி
2017 க.பொ.த.ச 9A



ஞா.கவிசாலினி
சமூக விஞ்ஞானப் போட்டி தேசியம் நிலை 1



ச.விநோதன்
சித்திரப் போட்டி மாகாணம் நிலை 1



சி.டிலக்சன்
சட்ட வேலி 400மீமாவட்டம் நிலை 1



ஜெ.சானிலா
உயரம் பாய்தல் மாவட்டம் நிலை 1



ர.சாருஜன்
சட்ட வேலி 110மீமாவட்டம் நிலை 2



ச.துர்க்கா
சட்ட வேலி 80மீமாவட்டம் நிலை 2



வி.பிந்துஜா
முப்பாய்ச்சல் மாவட்டம் நிலை 2



யூ.கார்த்திக்
சட்டவேலி 80மீ மாவட்டம் நிலை 2



இ.தாரணி
நீளம் பாய்தல் மாவட்டம் நிலை 1



T.தனுசன்
முப்பாய்ச்சல் மாவட்டம் நிலை 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் பேசுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவச் செல்வங்களே...

கல்வியானது தாயின் கருவறையிலிருந்து கல்லறை வரை என கல்வியியலாளர்கள் கூறுவர். எனவே கல்வி நடவடிக்கைகளை நாளாந்தம் வாழ்நாள் கல்வியாக இடம்பெறல் அவசியமாகும். கல்வி செயற்பாட்டாளர்கள் இரு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**3.** *சமூக சீராக்கம்*(social settings) - *சமூகம் சார்ந்தவை, சமூகத்தில் செல்வாக்கு மிக்கதாக விளங்கும் சக்திகள். மேற்கூறியவை தான் மாணவர்களது கல்விக்கு தளமாக அமைவனவாகும். இக்காரணிகள் மூன்றும் ஒன்றிற்கொன்று சமமுக்கியத்துவம் வாய்ந்தவை. அத்துடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. மேலும் இக்காரணிகள் ஒன்றின் மீது ஒன்று செல்வாக்கு செலுத்துபவை. எனவே இம்மூன்று காரணிகளுக்குமிடையே அரைகுறை யான புரிந்துணர்வு அல்லது தவறான புலப்பார்வை இருக்குமாயின் சிறந்த கல்வியை பெறுவதற்கான வாய்ப்புக்கள் அரிதாகும். இதனையே கல்வி முகாமைத்துவத்தின் தந்தையென வர்ணிக்கப்படும் பீட்டர் ட்றக்கர்* (peter drucker*) அவர்களும் நிறுவனத்தின் இலக்குகளும், தனியாள் இலக்குகளும் நிறுவனச் செயற்பாடுகளில் ஒன்றினைந்தால் தான் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை அடைய முடியும் என்று கூறுகின்றார். எனவே மாணவர்களே உங்களிடம் சிறந்த கல்வி இலக்குகள் உருவாக வேண்டும். அவை அடையக் கூடியவையாக இருக்கவேண்டும். உங்கள் கல்வி இலக்குகள் உங்கள் பாடசாலை என்ற நிறுவன இலக்குகளுடனும், அதிபர், ஆசிரியர்களது கல்விச்செயற்பாடுகளுடன் ஒன்றி னைந்து செயற்படுமாயின் உங்கள் வளர்ச்சிக்கு மாத்திரமின்றி பாடசாலை கீர்த்திக்கும், பாடசாலை சார்ந்த சமூகத்திற்கும் பெருமையளிப்பதாகும். மாணவன் எப்பொழுதும் தன்னை கற்றல் நிலைக்கு தயார்படுத்திக் கொள்வானாயின்* (readiness for learning*)இவ் எதிர்பார்த்த நிலையினை அடைவது கடினமாக இருக்காது.*

*இறுதியாக ஒன்றைக் கூறவிரும்புகிறேன். பெற்றோர்களுக்கு மதிப்பளியுங்கள். அவர்கள் கூறும் நற்கருத்துக்களை உள்வாங்குங்கள். ஏனெனில் அனுபவ அறிவுடைய தந்தையானவர் ஆயிரம் பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலானவர், ஓர் தாயின் கனிவான முகம்தான் குழந்தை ஒன்றின் முதற்பாடப் புத்தகம். எனவே வீடு தான் சிறந்த மனிதனை உருவாக்குகின்றது.* ("A wise father is more than a hundred school masters, the mother's face is the child's first lesson-book. Home makes the man") *பொன் விழா கொண்டாடும் உங்கள் எல்லோர்க்கும் என் அன்பார்ந்த வாழ்த்துக்கள், வந்தனங்கள்.*

**கணபதி சாம்பசிவம்**

முந்நாள் அதிபர் (1984-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

அன்று எனது பாடசாலை வழியாக கோயிலுக்குச் சென்று கொண்டு இருந்த வேளையில் எனது பாடசாலையைக் கண்டு இதுதானா நான் கற்பித்த பாடசாலை என்று பிரமிப்படைந்தேன். ஓலைக் கொட்டிலாக இருந்த எனது பாடசாலை இன்று மாடிக கட்டிடத்தையும், கல்லாலான பல கட்டிடங்களும் நிறைந்த மாபெரும் கலாசாலையாக திகழ்ந்தது. இந்த பிரமிக்கத்தக்க தோற்றமே எனது வாழ்வில் 21 வருடகாலம் சேவையாற்றியதை என் நினைவுக்குக் கொண்டு வந்தது. அவை எனது வாழ்வில் நீங்காத நினைவுகளாக மலர்ந்தது.

1983 ஆண்டு வரலாறு காணாத இனக்கலவரத்தை இலங்கை கண்டது கல்வி முறையில் கொத்தணி முறை வந்தது. இவை கிளிநொச்சியின் கல்வி நிலையை வளர்த்தது. ஆரம்பக் கல்வியின் பொதுவான கல்வி பெறுபேறும் இவற்றை வெளிப்படுத்தின இந்த வகையில் எனது பாடசாலையில் ஒரு மாணவர் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தார். இவ் வேளையில் 1985 மக்கள் தொகை, நிலத் தொடர்பு வளங்கள் என்பவற்றின் அடிப்படையில் தனி மாகாணமாக பிரிக்கப்பட்டு கிளிநொச்சி கல்வி நிலை கருதி, பல ஆசிரியர்களை தென் பகுதியில் இருந்து இடம்மாற்றம் செய்தனர். இந்த வேளையில் தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்ட நாங்கள் மீண்டும் கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டு என்று வேண்டுகோளுக்கிணங்க அமைய மீண்டும் கனகபுரம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டேன். இந்தக் கால கட்டங்களில் போர் அனர்த்தங்களினாலும், சுனாமியினாலும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களி னாலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இவை இன்று எனது வாழ்வில் நீங்காத நினைவுகளாக விளங்குகின்றது.

1986 ஆண்டு முதல் நாட்டில் ஏற்பட்ட அவல நிலைமை கல்வியை பெரிதும் பாதித்தது. பாடசாலை நாட்கள் அவலமாக கழிந்த நாட்களும் உண்டு. எறிகணை வீச்சாலும், குண்டு வீச்சாலும் பாடசாலை குழப்பமடைந்தது. பாலமரங்களின் கீழும் பதுங்கு குழிகளாலும் காலம் கழித்தோம். கல்வி நிலை குழம்பிய வண்ணமே இருந்தது. க.பொ.த சாதாரண பரீட்சைவிண்ணம் கூட படாசாலையில் இருந்து 3 மைல்களுக்கு அப்பால் உள்ள மாமரத்தின் கீழ் இருந்து கையெழுத்து இட்டனர். இவ் வேளையில் மாணவர்களின் திறமையிலும் ஆசிரியர்களின் முயற்சியாலும் எமது மாணவர்கள் முதன்மை பெறுபேறுகள் பெற்றனர். இது மாணவர்களின் சாதனை மட்டுமல்ல பாடசாலையை மேல் நிலையை அடையச் செய்தது.

1986 ஆண்டு முதல் இப்பாடசாலைவளர்ச்சி கண்டு இன்று பொறியியலாளர்கள், வைத்தியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஏனையோர் தேர்தல் ஆணையாளராகவும் உதவி முகாமைத்துவ உறுப்பினராகவும் நல்ல பெற்றோராகவும் விளங்குகின்றனர். அன்று நான் கண்ட கனவை எனது அன்பு மாணவர்கள் நிலைநாட்டியமை மிகவும் சந்தோசத்திற்குரிய தாகும். "ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போல எல்லா நிறுவனத்திலும் என் மாணவர்கள் இருப்பது பெரிதும் சந்தோசத்திற்கு உரிய விடயமாகும்.

இவை மட்டுமல்ல ஆண்டுதோறும் பாடசாலை ஆண்டு விழா, பரிசளிப்பு விழா, மாணவர் தினம், ஆசிரியர் தினம், சரஸ்வதி பூஜை, ஒளிவிழா உயர் தர மாணவர் ஒன்று கூடுல் போன்ற விழாக்கள் கொண்டாடப்படும் போது மாணவர்களினதும் ஆசிரியர் களினதும் கலைத்திறன் வெளிக்கொண்டு வருவது மட்டும் அல்லாமல் நாங்கள் அடையும் சந்தோசத்திற்கு எல்லையே இல்லையென குறிப்பிடலாம். இவை மட்டுமா விளை யாட்டுப் போட்டி, மரதன் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்றவற்றுடன் உள்ளக விளையாட்டுக்கள் போன்றன வும் இடம்பெறும். இவ் விளயைாட்டுக்ளில் மாணவர்களுடன் நாமும் மாணவர்கள் ஆகிவிடுவோம். அக் காலத்தை என்னால் மறக்கத்தான் முடியுமோ.

ஆண்டு தோறும் பாடசாலையால் சுற்றுலா செல்வதும் பாடசாலை திட்டமிடலில் ஒரு அம்சம் ஆகும். இச் சுற்றுலாக்கள் கூட எனது வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகும். எனது அன்புக்குரிய மனங்கவர்ந்த மாணவர்களை அனைத்துப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்வையிட அழைத்துச் செல்வதுடன் இந்நிகழ்வு மாணவர்களுக்கு மட்டுமல்ல எமக்குமபயன்படுவதாகும். இந்த வேளையில் மாணவர்கள் எம்மை அறிந்து கொள்ளவும் நாம் அவர்களை அறிந்து கொள்ளவும் முடிகிறதும் எமது பாடசாலை மாணவர்கள் தமிழ்தின விழாவில் இயல்,இசை, நாடகம் போன்ற மூன்று துறைகளில் பங்குபற்றி தமிழ்மொழிக்கு மாத்திரமின்றி பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களுக்கும் இன்பத்தை தந்து மகிழ்வித்தமை மறக்கத்தான் முடியுமா?

சுருங்கக்கூறின் எனது வாழ்வில் ஆசிரியராக இருந்த வேளையில் ஏற்பட்ட நன்மைகள் யாவும் பொற்காலமாகவும் துன்பப்பட்ட சம்பவங்கள் அல்லல் உற்ற காலமாகவும் எனது வாழ்வில் நீங்காத நினைவாக தடம் பதித்து, எனது நினைவுச் செப்பேற்றை சமர்ப்பிக்கின்றேன்.

*"நிலையற்ற வாழ்வுக்கு நீங்கா நினைவுகளே துணை"*

**திருமதி. க. குமாரலிங்கம்**
ஒய்வுபெற்ற பிரதி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் இலக்கியத்தடம்...

**(இது நீண்டதொரு தேடலுக்கான ஆரம்பப்புள்ளி மட்டுமே)**

சிந்தனைகளுக்கும், கற்பனைகளுக்கும், எண்ணங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் உருக் கொடுத்து உள்ளத்தை கவரும் சொற்கட்டு இலக்கியம். இலக்கியம் படிப்பவர் உள்ளத்தை பண்பட வைக்கும்,மனதை அமைதிப்பட வைக்கும்,உயர்ந்த எண்ணங்களை நோக்கி அழைத்துச்செல்லும். மொத்தத்தில் இது ஒரு வகை உளவியல் சிகிச்சை என்றே கூறலாம்.

மொழியை காக்கும் வடிவம் இலக்கியம். ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் நாகரிக கண்ணாடியாகவும் இலக்கியத்தைப் பார்க்கலாம். இதை வைத்துக்கொண்டு கிளிநொச்சி யின் அகல் விளக்காய் விளங்கும் கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வரலாற்று நாளில் நின்று கொண்டு கிளிநொச்சியின் இலக்கிய அடையாளங்களை கொஞ்சம் தொட்டுப் பார்க்கலாம் என்பது எனது எண்ணம்.

அந்த வகையில் நோக்கினால் கிளிநொச்சிக்கான இலக்கிய அடையாளங்களின் ஆரம்பமாக 1950களை எடுத்துக்கொள்ளலாம் என நினைக்கின்றேன். அப்படிப்பார்த்தால் சுமார் 70 தொடக்கம் 75 வருடங்கள் அதனுடைய போக்கு நீண்டு வந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. கிளிநொச்சியின் இலக்கிய வளர்ச்சி என்பது அந்தந்த காலப்பகுதியில் பல்வேறு படைப்பாளிகள் ஊடாக பண்பாடாகவும் பக்குவமாகவும் வளர்ந்து வந்திருக் கிறது. கிளிநொச்சியை மையம் கொண்ட இலக்கியப்படைப்பாளிகளை இவ்வாறு நோக்க முடிகிறது.

கிளிநொச்சியின் அடையாளமாக மிளிரும் படைப்பாளிகள்.
கிளிநொச்சியின் அழகை பேசும் படைப்பாளிகள்.

கிளிநொச்சியின் அடையாளமாக மிளிரும் படைப்பாளிகளில் கிளிநொச்சியின் அழகை சிறப்பாக சொன்னவர்கள் பலர். இவர்களை விட பலர் பொதுமைப்படைப் பாளிகளாகவும் விளங்கி இருக்கிறார்கள்.

கிளிநொச்சி பிரதேசத்தை மையப்படுத்திய படைப்புக்களில்
பிரதேச சூழல்
வாழ்வியல்
அரசியல் (போர்,இடப்பெயர்வு)
என்பன அந்தந்த காலப்பகுதியின் விம்பங்களாக வெளிப்பட்டு நிற்கிறது.

கிளிநொச்சியின் இலக்கிய படைப்பாளிகளின் பட்டியலைத் தேடினால் அது மிகவும் நீளமானது. எனது தேடலில் நான் பலரை தவறவிட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. எனினும் இவர்களில் சிலர் பற்றியாவது நாம் பேசவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா.யோகேந்திரநாதன்**

இவர் பல தசாப்தங்களை கிளிநொச்சியில் கடந்தவர்.சுமார் 40 தொடக்கம் 50 வருடங்கள் இலக்கியப்பணியில் கிளிநொச்சியில் நின்று நிலைத்தவராகவும் கிளிநொச்சியின் மூத்த படைப்பாளியாகவும் இவர் தான் இருக்க முடியும். இவரது படைப்புக்களில் கிளிநொச்சியின் வாழ்வியல் சிறப்பாக வெளிப்படும். நாடகம், குறுந்திரைப்படம், வானொலி நாடகங்கள், நாவல்கள் என இவரது இலக்கிய மேடை மிகவும் விசாலமானது. இவரது நாவல்களிலே இடிபடும் கோட்டைகள் நீந்திக்கடந்த நெருப்பாறு உற்பட்ட படைப்புக்கள் காலத்தால் அழியாதவை.யோகேந்திரநாதன் அவர்களும் கிளிநொச்சியின் இலக்கிய வரலாற்றில் அழிக்க முடியாத நபராகவே திகழ்வார்.

**தாமரைச்செல்வி**

கிளிநொச்சியின் இலக்கியப்பரப்பிலே மூத்த படைப்பாளிகளில் இவரும் ஒருவர். 1970களிலிருந்து எல்லைகள் கடந்து தமிழ்நாடு உட்பட தமிழர்கள் வாழும் தேசமெங்கும் இவரது இலக்கியப்பணி பரந்து விரிந்தது. இவரது படைப்புக்களில் சுமார் 200 சிறுகதைகளும்,30 க்கு மேல் நாவல்களும் உள்ளதாக சொல்லப்படுகின்றது.பச்சை வயல் கனவு,ஒரு மழைக்கால இரவு,வன்னி ஆச்சி,விண்ணில் நல்ல விடிவெள்ளி ஆகிய இவரது படைப்புக்கள் எமது சூழல் மரபுகளுடன் கூடிய வாழ்வியலை மிகவும் அழகாகக் கூறுவன. தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன் சஞ்சிகையிலும் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ள அதே வேளை தமிழ் நாட்டின் திரைப்பட இயக்குநர் மகேந்திரன் உட்பட சில இயக்குநர்கள் இவரது நாவல்களை குறுந்திரைப்படங்களாக இயக்கி அவற்றில் விருதுகளையும் பெற்றிருக்கிறார்கள்.

இலக்கியப்படைப்புகளுக்காக உயர் தேசிய விருதுகளையும் தமிழ்நாட்டின் விருதுகளையும் பெற்ற இவர் சிறந்ததொரு ஓவியக்கலைஞராகவும் அடையாளம் காணப்படுகிறார்.அத்துடன் இவரது இலக்கியப்படைப்புக்கள் ஆங்கில,சிங்கள,ஜேர்மன் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது இவரது படைப்புக்களுக்கு இன்னும் பெருமை சேர்க்கிறது.

**மு. விவேக்**

கிளிநொச்சியில் புதுக்கவிதை வடிவத்தை ஆரம்பத்தில் வெளிப்படுத்தியவர் இவர் என நினைக்கின்றேன்.புதுக்கவிதை வடிவங்களை அழகாகச்சொல்லும் மு.மேத்தாவின் கவிதைகளுக்கு நிகராக இவரது புதுக்கவிதை படைப்புக்களை காணலாம். தடையங்கள், இலையுதிர் வசந்தம் ஆகியன இவரது சிறப்பான புதுக்கவிதை படைப்புக்கள். பல்வேறு சஞ்சிகைகள்,இணையத்தளங்களூடான இவரது எழுத்துப்பணி விரிந்து செல்கிறது.

**சி. கருணாகரன்**

கருணாகரனை கிளிநொச்சியின் அடையாளம் பேசும் படைப்பாளியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமைப்படைப்பாளியாகவும் காணமுடிகிறது. கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை கள், நேர்காணல்கள் என சுமார் 15க்கு மேற்பட்ட படைப்புக்கள் இவரது படைப்புக்களாக வெளிவந்தன என நினைக்கின்றேன். இவரது பல கவிதைகள் சர்வதேச வெளியீடுகளிலும் பிரசுரமாகியுள்ளதோடு இவரது இலக்கியப்படைப்புக்கள் ஆங்கில,சிங்கள மொழி களிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இவரது "இப்படி ஒரு காலம்" எனும் கிளிநொச்சியில் உள்ள சில ஊர்களின் வரலாற்றுப் பெருமை பேசும் கட்டுரைத்தொகுப்பை வானொலியின் நூலாய்வு நிகழ்வு ஒன்றுக்காக நான் தெரிவு செய்திருந்தேன்.இதே நூலை சிங்கள மொழியில் "வன்னி மதக" (வன்னியின் நினைவுகள்) என்ற பெயரில் அனுஷா சிவலிங்கம் என்பவர் மொழி பெயர்த்திருந்தார். கிளிநொச்சியின் இலக்கிய வடிவங்களை சர்வதேச மட்டத்தில் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்ற சிறந்த படைப்பாளியாக கருணாகரன் காணப்படுகின்றார் என்பதோடு தொடர்ச்சியாக இன்னும் எழுதிக்கொண்டிருக்கின்ற ஒருவராக இவர் காணப்படுவது சிறப்பானது என்பது தான் சிறப்பு.

## Dr. முருகானந்தம்

மூத்த எழுத்தாளர்.சிறுகதைகள் இவரது இலக்கியப்படைப்புக்களில் முக்கிய மானவை. இவரது படைப்பு ஆதாரங்கள் எனக்கு எட்டவில்லை என்றாலும் வன்னேரிக் குளத்தின் அக்கால வாழ்வியலைக்கூறும் "வன்னேரி பொன்னேரி", "அலியன யானை" என்பன சிறந்த சிறுகதைகள் என்பதை கேள்விப்பட்டிருக்கின்றேன்.கிளிநொச்சியில் 300க்கு மேற்பட்ட சிறுகதைகளை படைத்தவர் என்ற பெருமை இவரை மட்டுமே சேரும்.

## த. அகிலன்

இவரை சிறுவயது முதல் எனக்கு தெரியும். இவரை உணர்ச்சி பூர்வமான பேச்சாளராக, படைப்பாளியாக ஆச்சரியமாக தடவை வியந்திருக்கின்றேன். இவரது "மரணத்தின் வாசனை" என்ற சிறுகதை தொகுப்பு மூலை முடுக்குகள் எங்கும் பாசிச வதையில் நாம் இழந்த பல உயிர்களின் கதையை சொல்லும். அத்துடன் த.அகிலனின் "தனிமையின் நிழற்குடை" கவிதைத்தொகுப்பில் பல்வேறு உணர்ச்சிக்கவிதைகளைக் காணலாம். கிளிநொச்சியின் அடையாளமாய் சர்வதேசத்தில் மிளிர்கின்ற ஒரு படைப் பாளியாக அகிலனைக் காணலாம்.

## தீபச்செல்வன்

இவரது கட்டுரைகள்,சிறுகதைகள்,நாவல்கள் நிகழ்கால வாழ்வியலையும் நாம் கடந்து வந்த ஜீவ அவலங்களையும் பேசுவனவாகவும் உள்ளன.அண்மையில் இவரது படைப்பாக வெளிவந்த "நடுகல்" சர்வதேசப்பரப்பிலும் கிளிநொச்சியின் இலக்கிய வலிமையை உயர்த்திக்காட்டியது எனலாம்.

## பெ.கணேசன்

கட்டுரைகள்,சிறுகதைகள்,கவிதைகள் என இவரது படைப்புக்கள் ஏராளம் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சிறுகதைகளிலே கிளிநொச்சியின் மண்வாசனையை உயர்த்திப்பேசும் போக்கினை அதிகமாகக் காணலாம்.இவரது கட்டுரைகளிலே கல்வியல் சிந்தனைகள் அதிகமாக வெளிப்படுவதுண்டு. பல்வேறு சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் சிதறிக்கிடக்கும் இவரது படைப்புகளை ஒரு தொகுப்பாக கொண்டுவந்தால் அது இலக்கியப்பரப்பிலே இவருக்கு மேலுமொரு அடையாளத்தை தரும் என நினைக்கிறேன்.

**சந்திரபோஸ் சுதாகரன்.**

இவரது படைப்புகள் பெரும்பாலும் பாசிச அச்சுறுத்தல்களுக்கு எதிராக பேசியவை. அடக்குமுறை என்பதை இவரது படைப்புகள் எல்லாம் வெறுப்பாக வெளிப்படுத்தி நின்றன. இவரது படைப்புகள் தொகுப்பாக வெளிவரும் முன்பே இவரது உயிர் பாசிசக் கரங்களால் காவுகொள்ளப்பட்டது துரதிஸ்டமானது. சுதாகரனின் படைப்புகளை இவரது நண்பர்கள் இணைந்து தொகுப்பாக வெளிக்கொணர்ந்தது பாராட்ட வேண்டிய விடயம். சுதாகர் "நிலம்" என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து பல இலக்கிய படைப்புகளை வெளிக்கொணர்ந்தவர்.

**இ.நடராசா**

திருநகர் நடராசா என்று பலரும் கூறுகிறார்கள். கிளிநொச்சியின் சூழல் மரபுகளுடன் பல சிறுகதை வெளியீடுகளைத்தந்தவர். "ஓய்வு" என்ற இவரது சிறுகதைத் தொகுப்பை எனக்கு காண கிடைத்தது. இலக்கிய வெளியில் பிரபலமாக அடையாளம் காணப் படாதவராக இருந்தாலும் இவர் ஒரு சிறந்த படைப்பாளி என்றே சக இலக்கிய படைப் பாளிகள் கூறுகிறார்கள்.

**முருகேசு சிவஞானம்.**

அடையாளம் தெரியாமல் மறைந்திருக்கும் சிறந்த கவிஞன். ஏராளமான கவிதை களுக்கு சொந்தக்காரன். தனது படைப்புக்களை பகிரங்கப்படுத்தவோ ஆவணப் படுத்தவோ இவர் அதிகம் ஆர்வம் காட்டாமல் விட்டது கிளிநொச்சியின் இலக்கியப் பரப்பில் ஒரு பின்னடைவு என்றாலும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார் என்பது ஆச்சரியமான விடயம். கிளி/சிவபாதகலையம், முக்கொம்பன் ம.வி, அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் உற்பட்ட பல பாடசாலைகளின் பாடசாலை பாடசாலை கீதம் இவரால் இயற்றப்பட்டதே.

அத்துடன் புதுக்குடியிருப்பின் நிலவியல் காட்சிகளை கூறும் இவரின் பாடல் ஒன்று இருவெட்டில் வெளி வந்துள்ளது.இப் பாடல் கேட்பதற்கும் இரசிப்பதற்கும் இதமானது. மேலும் ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்தின் சிறப்பைக்கூறும் மூன்று பக்திப்பாடல் இவரது படைப்பாகும் என்பதோடு "தேவ தேவனே திலீபன்" எனும் தியாக திலீபனின் உணர்வுகளை உச்சத்திற்கு எடுத்துச்செல்லும் தேசிய எழுச்சிப்பாடலுக்கும் இவரே சொந்தக்காரன் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. துரைராஜா (செல்வா சுக்)**

கிளிநொச்சியில் பிறந்து ஐரோப்பாவில் இன்று மிகவும் பிரபலமானவர் ஆரம்பத்தில் சிறந்ததொரு முயற்சியாளனாகத்தான் இவரை பார்த்திருக்கிறேன். அந்த முயற்சிகளில் ஒன்றாக அழகான கவிதைகள் மற்றும் பாடல்களைப்படைப்பதிலும் அதீத ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை மிக அண்மையிலேயே நான் தெரிந்து கொண்டேன். மே 18 என்ற முள்ளிவாய்க்காலின் ஜீவ அவலங்களை சித்தரிக்கும் இவரது குரல்வழிக்கவிதை கேட்பவர்களை சிலிர்த்துப்போகச்செய்யும். இவரது பாடல்களில் "ஏனிந்த போர் மேகம்" என்ற பாடல் நாம் பட்ட பாடுகளின் அவலத்தை வெளிப்படுத்தும் காட்சிகளுடன் இணையத்தில் காண முடியும்.

இவர் எழுதிய பக்திப்பாடல்கள் தமிழ் இன விடுதலை எழுச்சிப்பாடல்கள் பலவற்றை S.P பாலசுப்பிரமணியம், உன்னிகிருஸ்னன், உன்னிமேனன், அனுராதாஸ்ரீராம், நித்தியஸ்ரீ உற்பட பலர் பாடியுள்ளனர் தென்னிந்திய பாடகர்களை பாடவைக்கக்கூடிய பாடல்களை எழுதக்கூடிய பாடலாசிரியர்கள் தேசம் கடந்திருந்தாலும் கிளிநொச்சியில் பிறந்தவர்கள் என்பது பெருமையல்லவா இவரது பாடல்கள் இணையத்தளங்களிலே பிரபலமாகவுள்ளன.

கிளிநொச்சியின் படைப்பாளிகளும் படைப்புகளும் சர்வதேசமெங்கும் பரவி நிற்பது எமக்கு பெருமை சேர்க்கும் விடயம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கின்றேன்.

**செங்கைஆழியான் (குணராசா)**

ஒரு பல்துறைப்படைப்பாளி இவர். கிளிநொச்சியை நிரந்தரமாகக்கொண்டவர் இல்லை என்றாலும் இவர் கிளிநொச்சியில் தொழில் நிமித்தம் வசித்த காலங்களில் கிளிநொச்சியின் உயிர் மூச்சாய் விளங்கும் இரணைமடுவை மையமாகக்கொண்டு அதன் சூழலியல் மரபுகளுடன் இவர் படைத்த ஒருமையவட்டங்கள், கோடை, மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, யானை உட்பட்ட பல நாவல்கள் சிறப்பானவையாகும்.

அத்துடன் இவர்களோடு அருட்பணி யோசுவா, பொன் காந்தன், திருநகரூர் ஜெகா, அனாமிகன், ப.தயாளன், அன்ரன்அன்பழகன், வேல்லவன், ரமணன், கா.அகிலன், ராதிகா பத்மநாதன், இரத்தினசிங்கம், ப.தயாளன், சு.ஜெயக்குமார், தயா அரசரத்தினம், ஏழுமலைப்பிள்ளை, அச்சுதம்பிள்ளை, வளவை வளவன், செல்மினி, அமரதாஸ், நிரஞ்சலன், டிவனியா, பொன் தில்லைநாதன், பா.வை ஜெயபாலன், குமரிவேந்தன், மணிமேகலை, போன்ற இன்னும் பலர் தத்தமது காலப்பகுதியில் கிளிநொச்சியின் இலக்கியத்திற்கு அடையாளம் தந்தவர்கள். இவர்களும் சிறந்த படைப்பாளிகள் என்பதை குறிப்பாக சொல்லித்தான் ஆகவேண்டும். இவர்களோடு சில மூத்த கலைஞர்களும் நினைவிற்கு வருகின்றனர். கணேசலிங்கம், முத்துசிவன், கோப்பாய் சிவம், நவபாலகோபால் போன்றவர்களையும் மறந்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தோடு கிளி/கனகபுரம் மகா வித்தியாலத்தின் சிற்பிகளாய் கிளிநொச்சியில் இலக்கியப்பாதையில் பிரவேசித்தவர்கள் தனுசியா மகேந்திரன், தமிழரசி நாகலிங்கம், கிஸ்காட், தனபாலன்(சுபபாலா) போன்றவர்கள் என் ஞாபகத்தில் இருக்கின்றனர். தனுசியா, தமிழரசி ஆகியோர் கால ஓட்டத்தில் ஓய்ந்து போனது வருந்தத்தக்கது. இவர்கள் மீண்டும் வர வேண்டும் எழுத வேண்டும் தமது ஆக்கத்திறன்களை தொடர்ந்து வெளிப்படுத்துவதன் ஊடாக கனகபுரம் மகாவித்தியாலத்திற்கும் தமக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

சுபபாலா ஒரு நல்ல படைப்பாளி. இவரது படைப்புக்களில் காதலும்,புலம்பெயர் வாழ்வின் வலியும் வியாபித்து நிற்கும். இவரது "தலை கோதிய தாய்மடி தேடி" என்ற கவிதை நூலை வானொலி ஆய்வுக்காக எடுத்திருந்தேன். அதில் பல கவிதைகள் யதார்த்தமானவை. இவ்வாறு கிளிநொச்சியின் இலக்கிய மேன்மையை தேடித்தேடி சேமித்துக்கொண்டே போகலாம். கடந்த காலத்தில் கிளிநொச்சியில் இருந்து வெளிவந்த களனி, அருவி போன்ற சஞ்சிகைகளும் கணிசமான இலக்கியப்பணியாற்றி இருக்கின்றன. இந்தப்போக்கு இன்னும் வலுப்பெற வேண்டும், புதிய படைபப்பாளிகள் உருவெடுக்க வேண்டும், புதிய படைப்புக்கள் பிறக்க வேண்டும் அதற்காக கிளிநொச்சியின் கலாசார கூடல்,தமிழ்ச்சங்கம் என்பன வாய்ப்புகளுக்கான வழிகளை திறந்து கொடுக்க வேண்டும். அப்போது தான் கிளிநொச்சியின் இலக்கிய தடம் முடிவின்றி நீண்டு செல்லும்.

நன்றி

**திரு.தம்பு சேதுபதி**
முந்நாள் பிரதி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப கல்வியும் பெற்றோர் ஆசிரியரின் வகிபங்கும்

மாணவப்பராயத்தின் மேம்பாட்டில் மிக முக்கியமான கல்விசார் பராயமாக ஆரம்பக் கல்விப்பராயம் குறைந்து காணப்படுகின்றது. இந்தப் பருவத்தில் பிள்ளையில் ஏற்படுத்தப்படும் மாற்றம் அவனது எதிர்காலத்தின் இயலுமை, இயலாமைகளுக்கு அடிப்படைக்காராணமாக அமைந்து விடுகின்றது. என்பது மறுக்க முடியாத பேருண்மையாகும். எனவே மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு ஆரம்ப கல்வி நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். கல்வியில் வென்ற வர்களை நலம் அணுகி அறியும் போது அர்கள் எல்லோருமே வியந்து குறிப்பிடுவது தமது ஆரம்பக் கல்விக்காலம் என்பது இங்கு நோக்கற்பாலது.

ஆரம்பக் கல்வி என்னும் போது நாம் பாடசாலை கல்வியை மட்டும் நோக்காது முன்பிள்ளை பருவத்தில் முன்பள்ளிகளில் வழங்கப்படும் கல்வி பற்றியும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஐந்து வயதினை பூர்த்தி செய்து பின்னர் முறையான கலைத்திட்டம் ஒன்றினை பின்பற்றி கல்வியை கற்க பாடசாலைக்கு வருகிறார்கள். ஆயினும் 3 வயதின் பின்னர் அல்லது அதற்கு முன்னரே பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கு அனுப்பும் ஒரு நிலையை வழமையிலுள்ளது. எனவே குறித்த இந்த பாடசாலைக் கல்விக்கு முற்பட்ட காலப்பகுதியில் பிள்ளைகளுக்கு அவர்களின் உள விருத்திக்கான வாய்ப்புக்கள் அதிகம் வழங்கப்படுதல் அவசியமானது. முன்பள்ளிகளில் முறையான கலைத்திட்டம் ஒன்று இன்னும் ஒழுங்குபடுத்தப்படாத நிலைமையே இருந்து வருகின்றது. ஒவ்வொரு முன்பள்ளிகளையும் நடாத்துகின்ற அமைப்புக்கள் தமக்கென வகுத்து வைத்திருக்கின்ற திட்டத்திற்கு ஏற்பவே தமது முன்பள்ளி செயற்பாடுகளை மட்டும் கொண்டு செல்கின்றமை அவதானிக்க முடிகிறது. சில மாகாணங்களில் முன்பள்ளிகளின் வெயற்பாடுகளுக்கான சில நிகழ்ச்சி திட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றை முழுமையாக பின்பற்றப்படும். நிலைமை காணப்படுவதில்லை. இவற்றின் காரணமாக முன்பள்ளி பருவத்தில் முழுமையான வழிப்படுத்தல்கள் சீரான முறையில் மாணவர்களுக்கு கிடைக்கின்றது என்பது சொல்வதற்கில்லை. இதனால் இரண்டு வருடங்களுக்கு மேலாக முன்பள்ளிக்கு சென்று வரும் பிள்ளை முறையான ஒரு கற்றலின் கீழ் வருகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இவை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். உண்மையில் முன்பள்ளியிலிருந்து வருகின்ற பிள்ளைகள் கற்பதற்கு தயாரான நிலையில் ஆற்றல் பொருந்தியவர்களாக வரவேண்டும்.என்பதே பாடசாலைகளின் எதிர்பார்ப்பாகும்.

### ஆரம்பக் கல்வியை வழங்குவதில் பெற்றோரின் பங்கு

பிள்ளைகளுக்கு சீரான ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதில் பெற்றோருக் கான கல்வி சார் அணுகுமுறை இன்றியமையாததாகும். "ஒரு பிள்ளை தாயிடம் அன்பையும், தந்தையிடம் கல்வியையும் பெறலாம்" என்பது அன்றிலிருந்து இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமூகத்தின் பேசப்படும் விடயமாகும். "தந்தையோடு கல்விபோம்" என்பது தமிழ் சமூகத்திடையே நிலவி வரும் முக்கிய கருத்தாகும். எனவே பிள்ளையின் கல்வியில் பெற்றோரின் அக்கறை கவனம் என்பது இன்றியமையாததாக அமைகிறது. அந்த வகையில் பெற்றோர்களின் பங்களிப்பாக ஆரம்பக்கல்வி செயற்பாடுகளில் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளலாம்.

பிள்ளைகளை பாடசாலைக்கு சீராக அனுப்புதல்.
பிள்ளைகளின் சுகாதார நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துதல்.
நாளாந்தம் பிள்ளைகளின் புத்தகங்கள் பயிற்சிக் கொப்பிகள் என்பவற்றை கிரமமாக பார்வையிடல்.
ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டுப் பாடங்களை செய்வதற்கான தூண்டல்களை வழங்குதல்.
பிள்ளைகளின் உணவுப்பழக்கத்தில் அதிக கவனம் செலுத்துவதுடன் போசாக்கான உணவு வகைகளை வழங்குதல்.
நற்பழக்க வழக்கங்களை நாளாந்தம் ஊட்டி வளர்த்தல்
பிள்ளைகளின் பெறுமதிமிக்க பொழுது போக்குகளுக்கு வாய்ப்பளித்தல்.
பாடசாலைளகளில் பிள்ளைகளின் கற்றல் மேம்பாடு தொடர்பான சந்திப்புக்களில் தவறாது பங்கு கொள்ளுதல்.
பிள்ளைகளின் பலம், பலவீனம், இயலுமை, இயலாமை பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுதல்.

இவை போன்ற செயற்பாடுகளில் பெற்றோர்கள் தமது கவனத்தைக் குவித்தல் வேண்டும். ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளுக்கு பெற்றோரே முதல் ஆசிரியர் என்பதை நினைவிருத்திக் கொள்ளல் வேண்டும்.

**ஆரம்பக்கல்வி செயற்பாடுகளில் ஆசிரியர்களின் பங்கு**

"அன்னைமடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய்
அவன் தன்னந் தனிமையை போக்கி
உள்ளத்தில் நம்பிக்கை ஆற்றலை ஊட்டிடுவோம்."

என்ற ஆசிரிய கீதத்தின் விதிகளுக்கு அமைவாக ஆசிரியர்களின் வகிபங்கு இன்றியைமையாததாகும். சிறுவர்கள் இயல்பாகவே கற்கும் ஆற்றல் பொருந்தியவர்களாகவும் விடயங்களை தேடியவர்களாகவும் காணப்படுகின்றனர். என்பது உளவியல் ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். எனவே புதிய ஓர் அனுபவம் சிறுவர்களுக்கு கிடைக்கப்பெறும் போது பெரியவர்களின் செயற்பாடுகள் அதற்கு ஆதரவானதாக அமைதல் வேண்டும். மாறாக அது எதிர் மறையாக அமையும் போது புதியவற்றை தேடிக்கண்டறியும் ஆற்றல் மாணவர்களால் கைவிடப்படும். இவ்வாறான நிலை ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமையாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் உள,உடல் தேவைகளை பூர்த்தி செய்ப வர்களாக இருப்பது ஆரம்ப வகுப்புக்களில் மட்டுமல்ல உயர் வகுப்புக்களிலும் முக்கிய மானதாகும். இதனாலேயே "ஆசிரியர்கள் பிள்ளைகளின் இரண்டாவது பெற்றோர்கள்" என குறிப்பிடப்படுகின்றனர்.

**பிள்ளைகள்**

- ✓ பிறக்கும் போதே ஆற்றல் கொண்டவர்களாகவும், ஊக்கல் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.
- ✓ குழந்தை நிலையிலேயே அவர்களின் முறை வளர்ச்சி மிக வேகமாக நிகழ்கிறது. சூழலின் இயல்பு அந்த வளர்ச்சியை மேலும் துரிதமாக்குகிறது.
- ✓ பிறப்பிலிருந்தே தமது சூழலில் நிகழும் செயற்பாடுகளையும் உள்ளத்திலே தொகுத்து இணைககும் ஆற்றல் கொண்டவர்களாக பிள்ளைகள் இருக்கின்றார்கள்.
- ✓ ஒவ்வொரு சிறுவரும் தனித்துவமான உளக்கோலமுடையவர்களாக இருக்கின்றனர்.. இந்த நிலையில் அனைத்து பிள்ளைகளுக்குமுரிய பொதுவான கற்றல் ஏற்பாடு தனித்துவ எழுச்சியை தடைசெய்து விடக்கூடும்.
- ✓ எனவே ஆசிரியரானவர் பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.
- ✓ பிள்ளைகளின் தனிமனித வேறுபாடுகளை புரிந்து கொண்டு பணியாற்றல் வேண்டும்.
- ✓ பிள்ளைகளின் உளம் பாதிக்காத வகையில் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லல்
- ✓ ஆசிரியர்கள் பிள்ளைகள் மீது பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் ஆரோக்கியமானவையாகவும், முன்மாதிரியானவையாகவும் இருத்தல் வேண்டும்.
- ✓ பிள்ளைகளின் இயல்பான ஆற்றலை தூண்டுபவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும்.
- ✓ ஆசிரியரின் நடத்தை கோலங்கள் பிள்ளைகளை ஈர்ப்பதாகவும், முன்மாதிரி யானதாகவும் இருத்தல்
- ✓ மாணவர்களின் சிந்தனை ஆற்றலை விருத்தி செய்ய தூண்டுதல் வேண்டும்.
- ✓ சுய ஆக்கம், சுய தொழிற்பாடுகளை மாணவரிடையே மேம்படுத்தல்.
- ✓ எண்ணும் எழுத்தும் ஆரம்ப வகுப்பில் இன்றியமையாதது என்பதால் அதனை வளர்த்தல்.
- ✓ கடும் சொற்களையும், உளம் பாதிக்கும் பேச்சுக்களையும் பிரயோகிக்காதிருத்தல்
- ✓ பிள்ளைகளுக்கு பாதுகாப்பான சூழலையும் மதிப்புத்தரும் சூழலையும், தமது தேவைகள் நிறைவேற்றப்படும் சூழலையும் உருவாக்கி கொடுத்தல்.
- ✓ பிள்ளைகள் பற்றிய ஆரோக்கியமான கலந்துரையாடல்களை பெற்றோருடன் ஏற்படுத்தல்.
- ✓ வகுப்பறையையும், பாடசாலை சூழலையும் பிள்ளையின் கற்றலுக்கான சூழலாக உருவாக்கி கொள்ளுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான செயலொழுங்குகள் மூலம் ஆரம்ப பிள்ளைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் நிலையான மாற்றங்களை கொண்டு வர முடியும்.

ஆசிரியர்கள் மாணவர் சார்பாக நின்று பல்வேறு கற்றல் முறைகள், ஒழுங்குகளை மேற்கொண்டாலும், சகல மாகாணங்களிலும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பகுப்பாய்வு பின்வரும் விடயங்களை எடுத்துக் காட்டுகிறது,

- பெற்றோர்களில் 60% மானோர் தமது பிள்ளைகளுக்கு பாடசாலையில் கற்பிக்கும் விடயங்களை விளங்கிக் கொள்வது சிரமமானது என்கின்றனர்.
- மாணவர்களில் 42% மானோர் கற்கும் போது தமக்கு விளங்காதவை தொடர்பாக கேள்வி கேட்க பயப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.
- 61% மான மாணவர்கள் வருகை தராத நாட்களில் வகுப்பறையில் கற்பிக்கும் விடயங்களை கிரகித்து கொள்வது கஷ்டமானது என்கின்றனர்.
- மாணவர்களில் 78% மானோர் ஆசிரியர்களின் தண்டனைக்கு பயப்படுவதாக கூறுகின்றனர்.
- 50% மான மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் வீட்டு வேலைகளை விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது என்கின்றமை.
- தமது வகுப்பிலுள்ள 97% மான பிள்ளைகளுக்கு ஏதோ ஒருவகையில் கஷ்டம் காணப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றனர்.
- கஷ்டம் காணப்படும் மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக தமக்கு ஒத்துழைப்பு தேவை என 100% ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.
- தனது கற்பித்தல் முறைமையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும் என 97% மான ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்காட்டிய விடயங்களிலிருந்து நோக்கும் போது கற்றல் கற்பித்தல் செய லொழுங்கில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. என்பதைக் காண முடியும். இப் பிரச்சினைகள் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானவை இவற்றை நீக்குவதற்கும் பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலை முகாைம என்பன ஒன்று பட்டு சிந்தித்தல் வேண்டும். ஒவ்வொரு தரப்பினருக்கும் உரிய இடைஞ்சல்களை ஒவ்வொரு தரப்பினரும் புரிந்து , அவற்றை நீக்குவதற்கான வழிவகைகள் பற்றி சிந்தித்து செயற்படுதல் வேண்டும். ஏனெனில் எல்லா தரப்பினரும் இணைந்து வளம்படுத்த வேண்டிய ஒரு தரப்பாக மாணவர்கள் இருப்பதால் அவர்கள் சார்ந்து எந்த விடயத்தையும் சிந்தித்து செயற்படுத்துவதே பொருத்தமானதும் சரியானதும் ஆகும்.

**உசாவியவை**


- ✓ பாடசாலையும் சமூகமும் - மா. சின்னத்தம்பி
- ✓ முற்றத்தில் சிந்திய முத்துக்கள் - விழிப்புணர்வு பயிற்றுநர் கைநூல்
- ✓ சகல பிள்ளைகளும் கற்கலாம் - கல்வி அமைச்சு
- ✓ சிறுவர் கல்வியும் அண்மைகாலத்தைய ஆய்வு முடிவுகளும் - சபா ஜெயராசா (ஆசிரியர்)



**அ.பங்கையற்செல்வன்**
அதிபர்
கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்த்துவிட்ட முத்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் பதிவுகள்

எமது பாடசாலை என்று நாம் கால் பதித்த 1985ஆம் ஆண்டு திரு. சாம்பசிவம் சேர் அதிபராக மிளிர்ந்த காலம். அவரின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஆசிரியர்கள் அதிபர் விடுதியில் இருந்து அதிபரும், ஆண் ஆசிரியர்களும் பாடசாலைக்கு வருவார்கள். அதிபர் அவர்களோ சிவந்த மேனியும், நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையுமே கண்முன்னே வரும். சிவகுமார் ஆசிரியர் வெள்ளை காற்சட்டையும் மேற்சட்டையும் அணிந்து ஆங்கிலப் பாடத்தை சரளமாக கற்றுக் கொடுப்பார். ஆண் ஆசிரியர்களை விட பெண் ஆசிரியர்கள் அதிகம். முற்றத்தில் படர்ந்து விரிந்து நின்ற பாலைமரம் பாலைமரத்தடியில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் சகிதம் காலைப் பிரார்த்தனை கூட்டாக நடைபெறும். தொண்டர் ஆசிரியர்கள் முழு மூச்சாய் உழைப்பார்கள். தங்கம்மா ஆசிரியர் 10.00 மணிக்கு பசுப்பால் தேநீர் ஊற்றி எல்லோருக்கும் இனிமையாய் தந்திடுவார். இவ்வாறு உருண்டோடிய காலம். மாணவர்கள் கல்வியிலும் இணைபாடவிதானத்திலும் வெற்றி கொண்ட காலம். அடுத்து வந்த காலம் திருவாளர் க. ஆறுமுகதாஸ் அதிபராக கடமையேற்றார். வெள்ளை வேட்டியுடன், கனத்த குரலுடன் கடமைகளை கண்ணியமாக மேற்பார்வை செய்து மாவட்டத்தில் முதன்மை பாடசாலையாக உருவெடுத்தது. விளையாட்டில் இறங்கிவிட்டால் அதிபர் விளையாட்டு மைதானம் வந்து நிற்பார். கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி 7 பாடசாலைகள் இணைந்து விளையாடும் கண்கொள்ளாக் காட்சி. இளம் பெண் ஆசிரியர்கள் சிலர் மைதானத்தைச் சுற்றி மாணவர்களுடன் ஓடி உற்சாகப்படுத்துவர், வயதான ஆசிரியர்கள் அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து வாழ்த்தி அனுப்பும் நிகழ்வு.

உடற் பயிற்சி நிகழ்வில் 6 குழு உதைபந்தாட்டத்தில் பெரியகுழு, வலைப் பந்தாட்டத்தில் 3 குழு கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கிளித்தட்டு என பல அணிகள் கோர்வையாகச் சென்று முதலிடத்தைத் தட்டிக் கொள்வர். எமது பாடசாலைக் கிளி சாம் சாந்தகுமார் பாலூட்டி வளர்த்த கிளி என பட்டமும் சுட்டிடுவார். பெண் தர்மகுமாரி 100m ஓட்டக்கிளி ஓடினால் முதலிடம், கால்தடம் போட்டு வீழ்த்திய நாள் ஆசிரியர்கள். கண்ணீர் வடித்து அழுத காலம் எமது மாணவர் வெற்றியீட்ட வேண்டுமென்ற ஆவல். பெண்கள் வலைப்பந்தாட்டம் தயாநிதி, விஜியநிதி, கீதாஞ்சலி என பெயரிட்டு வெற்றி கொண்ட காலம். அம்பிகை பூப்பந்தாட்டம் அவருக்கே தனிச்சிறப்பு மாணவர்கள் களைத்து விட்டால் உணவுடன் வந்து நிற்பார் அதிபர் ஆறுமுகதாஸ்.

ஆசிரியர் குழாம் குடும்ப ஒற்றுமை புகழ் அல்ல உண்மை வீட்டில் விசேட நாள் என்றால் 5, 6 பாத்திரங்கள் விசேட உணவுடன் வந்து சேரும். ஒரு குழையல் எல்லோரும் மகிழ்வுடன் உண்ணும் காட்சி. அதிபர் தந்தைபோல் மிளிர்வார். வயதான ஆசிரியர்கள் தாய்மார்கள் இவ்வாறு உருண்டோடிய காலம் 1985 - 2004 வரையான உச்ச காலம் பல ஆசிரியர்கள் வளர்த்த பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மேற்பார்வை என்றால் கனகபுரம் ம.வி தனி இடம். எந்த அலுமாரித்தட்டில் என்ன கோவை இடப்பட்டுள்ளது என்பது அனுமானமாகச் சொல்லும் திறமை, அதிபருக்கு தனி இடம். ஆசிரியர்கள் தவறு விட்டால் தனிமையாக அழைத்து கண்டிப்பார். ஆனால், மேற்பார்வைக்கு வந்து விட்டால் ஆசிரியர்களை குறை காண முடியாது. எட்டுத்திக்கும் புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்கள் பொன்விழாக்காணும் எமது பாடசாலை.

அந்தோனிப்பிள்ளை உப அதிபர் ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் புன்சிரிப்பும், மகிழ்வும் அதிபரிடம் கேட்கமுடியாத விடயத்தை ஆசிரியர்கள் அந்தோனிப்பிள்ளை ஆசிரியரிடம் இரகசியமாக கேட்டு முடிவெடுக்கும் ஆற்றல்.

அன்னைக்கு அன்னையாய், தந்தைக்கு தந்தையாய், ஆசானுக்கு ஆசானாய் திகழும் அன்பான அந்தோனிப்பிள்ளை ஆசிரியர் இன்முகத்துடன் எல்லோரிடமும் பழகுபவர். இவ்வாறு 19 ஆண்டுகள் கனகபுரம் ம.வி என்னையும் என்னைப்போன்ற பல ஆசிரியர் களையும் வளர்த்த புகழ் சாரும். இக்காலம் கனகபுரம் மகாவித்தியாலயப் பொற்காலம் என்றே கூறலாம். 2004ம் ஆண்டு இப்பாடசாலையில் இருந்து இடமாற்றலாகிச் சென்றாலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் நாம் உழைப்போம். சுருக்கச் சொல்லின் பலரை வளர்த்தெடுத்து உலகளாவிய ரீதியிலே பலரை வழிப்படுத்தியது எனலாம். எனவே எல்லோரும் இருகரம் கோர்த்து உடலில் உயிர் உள்ளவரை வளர பாடுபட வேண்டும். வாழ்க வளர்க வெல்க என வாழ்த்துகிறேன்.

**திருமதி பரமேஸ்வரி ஆறுமுகநாதன்**
முன்னாள் ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாவுடன் பொலிவு பெறும் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயமும் ஆசிரியத்துவ பணியும்

கிளிநொச்சி மாவட்ட நகரில் ஏ9 மேற்குப்புறமாக அழகு சேர்த்து நிற்கும் கனகபுரகிராமத்தின் கண்ணாக துலங்கும் கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம் தனது ஐம்பதாவது அகவையில் பொன்விழா காணும் நன்நாளில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன். எனது ஆசிரியத்துவ பணியின் காலம் 2004 தொடக்கம் 2006 வரை கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

போர்ச்சூழல் அமைதிபெற்று சமாதான காலமாக மலர்ந்த சூழல். இடம்பெயர்வின் புத்துயிர்பெற்று சொந்த இடத்தில் இயங்குவதற்கான மீள்கட்டுமான பணிகளுடன் கல்வி முன்னெடுக்கப்பட்ட காலம். பாடசாலைவளாகம் நிறைந்த மாணவர்களுடன் குறைந்த பௌதீக வளங்களுடன் இருப்பதைக் கொண்டு நிறைவான கல்வியை எப்படி மாணவர்களுக்கு கொடுக்க வேண்டுமென கல்விச்சமூகமும், பெற்றோரும் இணைந்த கூட்டு முயற்சியால் முன்னெடுத்த காலம்.

ஆசிரியத்துவம் என்பது வெறுமனே ஒரு தொழிலாக பார்க்கப்படுவது கிடையாது அது சமூக மாற்றங்களை விளைவிக்க வல்ல கருவியாக கருதப்படுகின்றது. உலகை மாற்றிய மகத்தான மனிதர்களாக பலர் ஆசிரியர்களாக இருந்திருப்பது வரலாற்றுத் தரவுகளை புரட்டும்போது புலப்படுகின்றது.

வெறுமனே வகுப்பறைகளில் பாடப்புத்தகங்களில் இருக்கும் விடயங்களை தயார்பண்ணி கற்பிப்பது மட்டும் ஒரு உண்மை மறைந்து விடுவது கிடையாது. ஒரு பிள்ளைக்கு ஒரு வீட்டில் நல்ல ஆசிரியனும் பாடசாலையில் நல்ல பெற்றோரும் கிடைக்கும் போதே அவனால் தனது முழுமையை எட்ட முடியும் என்பது உளவியலாளர்களின் உரமான நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை எதுவெனில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பெற்றோர்கள் போலவும் இருக்க வேண்டும் என்பதேயாகும். இதுதான் சமூகம் எதிர்பார்க்கும் ஆசிரியத்துவத்தின் மூலமாகும்.

இதனை நன்கு உணர்ந்து தாயகத்தில் ஆற்றிய ஆசிரியத்துவப் பணியினை மீட்டுப்பார்க்கிறேன். அவை அதீத பாடங்களை கற்றுத்தந்திருக்கிறது.

கல்விக்கூடங்களுக்கான கட்டட தளபாட பௌதீக வளமற்ற நிலையில் தரப்பாள் கொட்டகைக்குள்ளும் மரநிழலிலும் பதுங்கு குழிகளுக்கருகிலும் கற்றற் செயற்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்த சூழலும் அதனை ஏற்று கல்விகற்ற மாணவர்களின் அறிவுத்திறன் மனப்பாங்குகள்.

பெற்றோரை அல்லது உறவுகளை இழந்த மாணவர்கிளன் மனோநிலைக்கு ஏற்ப அவர்களை கையாண்டு வழங்கிய கல்வி, பாடசாலைக்கு பசியுடன் வரும் பிள்ளைகளுக்கு பாடம் புரியும் என்பது அபர்த்தமானது. அது போன்று இந்தப் பிள்ளைக்கு எது சொன்னாலும் விளங்காது என முடிவுக்கு வருதலும் ஆபத்தானது. இந்த இரண்டு நிலையையும் கையாண்டுதான் கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தால் நடாத்தப்பெறும் பொதுத்தேர்வுகளிலும் போட்டிகளிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற கூட்டுமுயற்சியினால் பிரத்தியேக மாலைநேர கல்வியை வழங்கி மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற முன் வைத்தோம். மாணவர்களின் உடல், உள ஆரோக்கிய வினைத்திறனை விளங்கிக்கொண்டு மகிழ்ச்சிகரமான கல்வி கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் தொடக்க காலம் முதல், போர்ச்சூழலான காலம், சமாதான காலம், மீண்டும் போர்ச்சூழலான காலம், முள்ளிவாய்க்கால் நோக்கிய இடம்பெயர்வுக்காலம், போர்முடிவுக்கு பின்னரான மீள்குடியேற்றகாலமென கல்விச் செயற்பாட்டிலும் பாடசாலை இயங்குநிலையிலும் பல்வேறு இடையூறுகள், சவால்கள், தடங்கல்கள் என பல தடைகள் தாண்டி பொன்விழா அகவையை எட்டி நிற்கிறது. இவற்றுள் இம் மகா வித்தியாலயம் உருவாக்கிய சாதனையாளர்கள், கல்வியியலாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் என்ற உயரியவர்களால் இம் மகா வித்தியாலயம் புகழ்பெற்று உச்சத்தை தொட்டு நிற்கிறது.

இதற்கு அத்திவாரமாக திகழ்ந்தவர்கள் தொடக்ககால பள்ளி, முதல்வர்கள், பெற்றோர்கள், பாடசாலை சமூகம் சார்ந்தவர்களாகும். தொடர்ந்து வரும் காலங்களில் கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம் பல சாதனைகள் படைத்திட பொன்விழா நிகழ்வு புத்தொழிவீசி கோடிட்டு காட்டி நிற்கிறது. இந்த உழைப்பின் அறுவடையில் ஆசிரியத்துவமானவர்களின் மேன்மைமிகு பணி துலங்கி நிற்கும்.

**திருமதி. அ. செல்வராஜ்**
ஆசிரியை
பேர்ண்- தூண் தமிழ் வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் தந்த கனகபுரத்தின் அறிவுத்தாயே

அன்பு தேடி மகிழ்ந்த குழந்தை
அறிவு தேடி கூடுங் காலை
நாடுவோர் அறிவுப் பசி தீர்த்து -நாம்
யார் என்பதை அறியவைக்கும் ஆய்வுச்சோலை
பல கூட்டுக்கிளிகள் சீருடையில் பேதமின்றி
ஒரு கூட்டில் இணைந்த பசுஞ்சோலை
வாழ்க்கைப் பாதையில் திடமுடன் பயணிக்க
வழிகாட்டும் கலங்கரை விளக்கே கல்விச்சோலை

நெற் களஞ்சியமாம் கிளி நகரில்
பண்ணை வளர் கனகபுரத்தில்
அறிவுற்று சொரிய விளைந்த
அட்சய பாத்திரமே அறிவுச் சுரபியே
அகவை ஐம்பதா - இன்று உனக்கு
வாழ்நாள் முடிவற்ற சிரஞ்சீவியே வாழ்க
கனகபுர மண்ணின் சிறப்பே வரலாற்றுத் தடமே
வாழ்க வழிகாட்டும் பணி தொடர்க!

ஆசான்கள் பலர் உன் கூடிணைந்தார்
அருஞ்சேவையாற்றி ஊர் புகழ் வளர்த்தார்.
அறிவுப் பசியால் உனை நாடியோர் தன்நிறைவுகண்டார்
மருத்துவராய், மனைபற்றாளராய்
அறிஞர்களாய், ஆசான்களாய் - வேளான்
மன்னர்களாய், பொறியியலாளராய்
புறநானூறு சொன்ன விடுதலை மைந்தர்களாய்
வணிகராய் இன்னும் பலர் பிறப்பெடுத்தார்.

ஊரிழந்து போன போதும் - நீ
உன் பெயர் இழந்து போகாமல் பணிதொடர்ந்தாய்
கால வேள்வியில் உன் புத்திரர் பலரை இழந்தாய்
அறிவூட்டிய ஆசான்கள் உயிர்குறக்க நீ துடித்தாய்
உன் சோலைக் குருத்துக்கள் அங்க மிழந்தார்
உற்றவர் உனைச் சூழ்ந்தவர் இழப்பில் நீ துவண்டாய்
வலிகள் பல பட்ட போதும் - நீ தளராமல்
மனத்திடத்தால் பணி நகர்த்தி தடம்பதித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவோட்டத்தில் அள்ளுண்டு போகாமல்
கயவர் சதியில் நீ கதிகலங்கி ஓடாமல்
நின்றாடி நிலைத் தடம் பதித்ததால் - இன்று
பொற்குடம் பதிக்கின்றாய் பொன்விழா நாளில்
உன் கூட்டில் நாம் வாழ்ந்த நாட்கள் நிழலாட
நின் நினைவில் காலச்சக்கரம் உருண்டோட
உன் விழா நாளில் நாமும் மகிழ்கின்றோம்.
உன் புகழில் எம் சிந்தை செழிப்படைகின்றோம்.

அறிவே , ஆற்றலே ,ஆளுமையே , அன்புணர்வே
இத்தரணியில் மிளிரும் பொற்குடமே
காலம் தந்த கனகபுரத்தின் அறிவுத்தாயே
வாழ்க வளர்க வழிகாட்டும் உன் பணி தொடர்க...
கனகபுரம் மகாவித்தியாலயம் புகழ்காலமெல்லாம் சிறக்க...

**திருமதி. சபாரஞ்சன் சறோஜாதேவி**
முன்னாள் ஆசிரியை
வாழ்த்துவதால் பெருமகிழ்வடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வியில் சமத்துவத்தை ஊட்டல்

ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் மாணவர்களிடம் சமத்துவம் பேணல் என்பது அவர்களின் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு துணையாக அமையும். ஒவ்வொரு பிள்ளையும் தன்னாலான ஒரு வகை ஆற்றலை வெளிக்கொணரும் வல்லமையை கொண்டுள்ளமை சிறப்பாகும். இத்தகைய சூழலில் வல்லமை வெளிப்பாட்டிற்கான பொருத்தமான களமும், வாய்ப்பும் சம சந்தர்ப்பமும் பொருத்தமுற அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடம் காணப்படுகின்றது. மாணவர்களிடம் காணப்படும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்களுக்கான சந்தர்ப்பங்களுக்கான சம வாய்ப்பு வழங்குவதில் கண்ணும் கருத்துமாய் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

சமத்துவம் எனும் போது வகுப்பில் பாரபட்சமற்ற முறையில் எல்லா மாணவர் களையும் வழிப்படுத்துவதைக் குறிக்கும். பிள்ளைகளின் உலகில் அவர்களை சுதந்திர பட்சிகளாக செயல்பட வழிநடாத்தப்பட வேண்டும. அழகியல், ஆக்கம் கற்றல், விளையாட்டு, பொதுப்பணிகள், களப் பயங்கள், சமய செயற்பாடுகள், ஏனைய செயற்கரிய செயல்களில் ஈடுபடும்போது இயலுமைக்கு ஏற்ப செயல்பட சம வாய்ப்பு வழங்குதல் அவசியமாகும்.

வகுப்புக்களில் பிரதான விடயமான பால் நிலை சமத்துவம் பேணுதல் கட்டாயமாகும். ஆண், பெண் பிள்ளைகளின் வேகம், விவேகம் என்பவற்றுக்கு ஏற்ப பங்கு கொள் மனப்பாங்கை அதிகரித்தல் அவசியமாகும். பங்குகொள் மனப்பாங்கில் காட்டும் ஈடுபாடுகள் அவர்களிடம் காணப்படும் வேற்றுமைகள் மறைக்கப்பட்டு இலக்கை நோக்கிய வழிகாட்டலுக்கு வலுப்படுத்தும் எனவே பங்கு கொள் ஆற்றல் பால்நிலை சமத்துவத்துக்கு வலுவூட்டுகின்றது,

தேர்ச்சி நிலையை அடைந்த மாணவர்களையும் தேர்ச்சி நிலையை அண்மிக்கும் மாணவர்களிடமும் சமத்துவ மனப்பாங்கை காட்டுதல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத் திலும் தேர்ச்சி நிலையை அண்மிக்கும் மாணவர்களுடைய உளம் தாக்கப்படாதவாறு வகுப்பில் கற்றல் சந்தர்ப்பங்களுக்கான சம வாய்ப்பு வழங்குவதன் மூலம் சமத்துவம் நிலை நாட்டப்படுகின்றமையை உணரலாம்.

செயற்பாடு சார்ந்த கற்றலில் ஈடுபடும் குழுக்கள் எப்பொழுதும் சம வல்லமை கொண்டதாக அமைத்தல் அவசியமாகும். இதில் குழுக்களின் தனித்துவமான வல்லமையை வெளிக்கொணர்தல் அவசியமாகும். குழுக்களிடையே சமத்துவம் பேணுவதுடன் குழுவில் உள்ளவர்களிடமும் சமத்துவம் காணப்படல் பிரதானமாகும். ஏனெனில் போட்டி மனப்பாங்குடன் இயங்குவதற்கும் குழுவில் ஏழு கருத்துக்களைப் பொதிந்து விளக்கமுடன் சளைக்காமல் முன்வைக்க குழுவிற்குள் சமத்துவம் பேணல் கட்டியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியில் சமத்துவம் பேணுவதற்காக மாணவர்களிடம் வெள்ளை சீருடை, காலணி, பாடநூல், என்பவற்றுடன் உணவும் வழங்கப்படுகின்றது. இவை யாவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் சமமாக பகிரப்படுகின்றனவா, என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். ஆரம்பக் கல்விப் புலத்துடன் தொடர்புறும் ஒவ்வொருவரும் சமத்துவ எண்ணப்பாங்குடன் செயல்படல் அவசியமாகும். பிள்ளைகளின் ஆற்றலுக்கும் நுண்ணியக்க திறன்களுக்கும் ஏற்ப அவர்கள் எதற்கும் முன்வரும் ஆற்றலை வேகமாக வெளிப்படுத்துவார்கள். இதனைக் கருத்தில் கொண்டு எல்லா மாணவர்களையும் வழிப்படுத்தும் வல்லமையைப் பெறல் அவசியமாகும். மாணவர்களைக் கையாளும் எவராகிலும் இதய சுத்தியுடன் சமத்துவம் பேணும் மனப்பாங்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சமத்துவம் மதிக்கப்படும் வகுப்புகளில், மாணவர்களிடம் ஐக்கியம் காணப்படும் பொது நோக்கு சிந்தனை மிளிரும், முரண்பாடற்ற சூழல் உருவாகும், எதையும் கைச்சிதமாக கையாளும் வல்லமை ஏற்படும், சமூக மயத்திறன்களில் விருத்தி ஏற்படும். ஜீவகாருண்யத் தன்மை காணப்படும், சுயதிறனில் விருத்தி ஏற்படும், சமநிலை ஆளுமை தன்மை காணப்படும் சகபாடிகளுடன் கூடி வாழும் கூட்டுறவு ஏற்படும் இத்தகைய நன்மைகள் ஆரம்பத்திலேயே வளர்த்தெடுக்க ஆரம்பப்பிரிவுக் களமாக அமைகின்றது.

எந்தவொரு சமூக மயத்திறனும் பிள்ளைகளிடம் ஆரம்பத்திலேயே விதைக்கப்பட வேண்டும். இவை முதன்மை நிலை ஒன்றிலேயே பகிர்ந்து உண்ணல் பகிர்ந்து கொடுத்தல், மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்கை ஊட்டும்போது எதிர்காலம் பரஸ்பர விட்டுக் கொடுப்புகளுடன் எதையும் சகித்து வாழும் மனப்பாங்கை ஏற்படுத்தும். எனவே, ஆரம்ப வகுப்புக்களில் சமத்துவம் பேணல் என்பது ஆரம்பப் பிரிவுடன் தொடர்புடைய அனைவரிடத்திலும் வளர்க்கப்பட வேண்டிய ஓர் பண்பாகும். இத்தகைய நிலையில் சம வல்லமையுடைய ஆரம்ப பிரிவை எதிர்காலத்தில் வளர்க்க உதவும் என்பது திண்ணம்.

**திரு. பா. ஸ்ரீஸ்குமார்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆலமரமே ஆண்டாண்டு காலமாய் நீ வாழ்க"

போர்காலக் கருமேகம் நீங்கிய காலகட்டத்தில் உறவுகளைத் தொலைத்து சொந்தங்களை இழந்து சொத்துக்களைத் தொலைத்து சொல்லொணாத் துயரத்தில் தவித்துக் கொண்டிருந்த வேளையில் எமது மாவட்டத்தின் (கிளிநொச்சி) தனி ஒரு கனகபுரம் எனும் கலைத்தாய் தலைநிமிர்ந்து தன்னகத்தே சூழவுள்ள பாடசாலைகளின் ஆசிரிய தீபங்களின் வருகையாலும், அனைத்துப் பாடசாலைகளின் மாணவச் செல்வங்களின் அலைமோதலாலும் பாடசாலைத்தாய் ஒரு சுமைதாங்கியாகி அரவணைத்த பெருமை இப்பாடசாலைக்குரியது.

இச்சூழ்நிலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி இணைபாட விதான செயற்பாடுகளின் ஒன்றான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியினை வெகுசிறப்பாக நடாத்தி முன்மாதிரியாகச் செயற்பட்டமை வியப்பிற்குரியது. மேலும் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உடற்பயிற்சிப் போட்டிகளிலும் வெற்றியீட்டி பல இடங்களைப் பெற்றமை பெருமைக்குரியதாகும்.

இப்பள்ளியின் சிட்டுக்கள் இசை நடனம், நாடகம் என்றால் அன்னப்பறவைபோல் வெள்ளை உடை உடுத்து பூச்சூடி வரும் காட்சி கண்ணுக்கு கவர்ச்சியளிக்கும். இதுமட்டுமன்றி விசேட தேவையுடைய மாணவர் அலகு மூலம் அச்சிறார்களின் எண்ணக்கனவுகளை வெளிப்படுத்தும் செயற்பாடுகள் சிறப்பிற்குரிய விடயங்களாகும் கணினி நிலையம், கணித வள நிலையம் என மாணவர்களில் கல்வி வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளன. சிறார்களின் அறிவாற்றலை விருத்தி செய்யவும், வாசிப்புத்திறனை அதிகரிக்கவும் தற்காலிக நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு செயற்பட்டு வருவதும் பாராட்டுக்குரியதே.

சின்னஞ் சிறார்களின் கல்வி அபிவிருத்தியைக் கருத்தாகக் கொண்டு ஆரம்பிப் பதற்கான வலயத்தின் வளநிலையமாக அமைந்து ஆரம்ப கல்வியினை வனப்பாக்கும் செயற்பாடும் இங்கு நடைபெறுவதற்கு ஆவன செய்யபடப்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலைத்தாயின் மொட்டுக்களிடையே ஜனநாயகம், ஒற்றுமை, விழுமியப் பண்பு களை ஏற்படுத்தும் நோக்குடன் பாடசாலை கூட்டுறவுச்சங்கத்தினை கிளிநொச்சி வலயத்தின் கரைச்சிப் பிரதேசத்தின் கனகபுரம் மகாவித்தியாலயப் பாடசாலைக் கூட்டுறவுச்சங்கம் என்னும் பெயர் ஆரம்பித்து மாணவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் எழுதுபொருட்கள், உபகரணங்களை வழங்கி உதவிய பெருமைக்குரிய தோடு சிற்றுண்டிச் சாலையையும் இச்சங்கம் நடாத்தி உதவியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பிறமொழியான சிங்களமொழி மாணவர்கள். ஆசிரியர்களுடன் எமது பாடசாலை தமிழ்மொழி மாணவர்கள், ஆசிரியர்கள் சரி நிகராக மினிப்பே சென்று உண்டு. உறவாடி ஒன்றாகத்தங்கி திரியும் குயில்களாக பழகும் வாய்ப்பு இப்பாடசாலையின் வரலாற்றுச்சிறப்பம்சமாக மிளிர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்சத்தின் தீபங்களாக விளங்கிய ஆசிரியர்களின் ஒற்றுமையை மேம்படுத்தவும், சேமிப்புப் பழக்கத்தினை வலுவூட்டவும் "ஆசிரியர் சேமிப்பு நிதியத்தினை" அமுல்படுத்தி இத்திட்டத்தின் மூலம் ஆசிரியர்கள் அரிய பயன்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் இன்னிய இசைமூலமான தமிழர் பாரம்பரிய கலையினை வளர்த்த பெருமை இம்மாவட்டத்தின் இப்பாடசாலைக்கேயுரியது. இப்பாடசாலை எல்லே விளையாட்டில் அம்பாறை முதல் கேகாலை வரை சென்று தேசிய மட்டத்தில் பங்குபற்றி நாமும் சளைத்தவர்கள் அல்ல என்ற விதத்தில் பங்காற்றியமை வியப்பிற்குரியது. விளையாட்டுத்திறனை விருத்தி செய்யும் பொருட்டு தனக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத குறையினை நீக்கும் பொருட்டு இந்நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேன அவர்களால் கட்டுமானப்பணியினை வழங்கி மைதானத்தினைப் பாடசாலைக்கு கையளித்த உயரிய கைங்கரியச் செயற்பாடு இப்பாடசாலைக்கே உரியது.

வெளியிடங்களில் இருந்து இப்பாடசாலைக்கு கற்பிக்க வருகைதரும் ஆசிரியர்கள் தங்கியிருந்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு விடுதி வசதிகளையும் கொண்டமைந்தது இப்பாடசாலையின் தனிச்சிறப்பாகும்.

கனகபுரம் மகாவித்தியாலயம் கல்விச் செயற்பாட்டில் ஆலம் விதையிலிருந்து பெருவிருட்சமாகி விழுதுவிட்டு நிரந்தர நிழல் பரப்பி மிளிர்வதையிட்டு பெருமகிழ் வடைகின்றேன். அத்துடன் கல்விச் சமூகமாகிய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் எனத் தூண்களாக நின்று கைகொடுத்து உதவி நல்குவதையிட்டும் பெருமகிழ்வெய்துவதுடன் இவர்களின் ஆக்கமும், ஊக்கமும் பள்ளியின் வளர்ச்சிக்கு தேவை. தற்போதைய நிலையில் இருகை தட்டியே ஓசை வருவது போல நல்ல சமுதாய உருவாக்கத்திற்கு பழைய மாணவர்களும் பெற்றோர்களும் ஒரு சேர உழைப்பது நன்றே இந்நிலை என்றும் தொடர வாழ்த்துவதுடன் பள்ளியும், பள்ளி மாணவர்களும் கல்வியிலும், விளையாட்டிலும், கலை பண்பாடுகளிலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வாழ்த்தி நிற்கின்றேன்.

வாழ்க தமிழ்மொழி
வளர்க நம் மாணாக்கர்
ஓங்குக உன் சேவை
நன்றி

**திருமதி. ஞா ஜெயக்குமார்**
முந்நாள் ஆசிரியர்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற்தர முகாமையாளர் (first line manager)

அதிபர் என்பவர் பாடசாலையின் முதல் தர முகாமையாளர் (first line manager) அவ் முகாமையாளரிலேயே நலன் தரு பாடசாலையின் வினைத்திறனும், விளைதிறனும் தங்கியுள்ளது. எனவே முறையாக வழங்கும் பயிற்சியின் வாயிலாக நல்ல முகாமை யாளர்களை உருவாக்கலாம் என்பதே அனைவராலும் ஏற்கப்பட்ட உண்மையாகும் பாடசாலையின் நிர்வாகம் என்பது வெறுமனே நிர்வாகம் செய்தல் என்பதை விட சகலரும் பங்கேற்கும் ஒரு முகாமைத்துவப் பணி என்னும் நிலைமைக்கு மாற்றமடைந்துள்ளது. பாடசாலையின் செயற்பாடுகள் இன்று பன்முகப்படுத்தப்பட்ட துறைகளில் விரிவடைந்து செல்கின்றது. புதிய கல்விக் கோட்பாடுகள், கொள்கைகள், நவீன கல்வி சீர்திருத்தங்கள், உலகளாவிய கல்விச் செயன்முறைகள் பரவலாக் கப்படுவதால் பாடசாலையின் தூர நோக்கு இலக்கு என்பன விரிவடைந்து செல்கின்றன இதற்கேற்ப "அதிபர்களின் நடிபங்கும்.வகிபாகமும்" மாற்றமடைய வேண்டிய நிலையில் உள்ளது. அதிபர் தனது பாடசாலைக்கு கிடைக்கின்ற



உள்ளீடுகளை (input) மனிதவளம், பௌதீகவளம், நிதிவளம், நேரவளம், தகவல்வளம் என்பவற்றை செயன்முறையான (process) கற்றல், கற்பித்தல், செயன்முறை, இணைபாடவிதானச் செயற்பாடுகள் மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் பாடசாலைச் சமூகத்தின் இடையிலுள்ள தொடர்புகள் மூலம் நல்ல வெளியீடுகளை (output) மாணவர் இடைவிதானச் செயற்பாட்டு வெற்றிகள் பாடசாலையின் கவின் நிலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இம் முகாமைத்துவ செயற்பாட்டை ஒரு வட்டவரைபடத்தின் மூலம் காட்ட முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சகல அதிபர்களுக்கும் உள்ளீடுகள் (Input) மிக தரமாகவும் தாராளமாகவும் கிடைக்கும் என்று கூற முடியாது. சாதகம் பாதகமாக கிடைக்கும் வளங்களை சரியாகத் திட்டமிட்டு செயன்முறைக்குட்படுத்துவதன் மூலம் நல்ல வெளியீட்டை பெற்றுக் கொள்ள முடியும் இவ்விடயத்தில் அதிபரின் முகாமைத்துவ திறன் மிக முக்கியமானது மேலே படத்தின் அம்புக்குறி காட்டியவற்றை அவதானிப்போமாயின் இன்று எமக்கு கிடைக்கும் நல்ல வெளியீடானது நாளை எமது பாடசாலைக்கு உயர்ந்த உள்ளீடாக அமையும் மாறாக இன்றைய அதிபரின் செயன்முறையின் வெளியீடு பாதகமாக அமையுமாயின் நாளைய உள்ளீடுகள் பாதகமான நிலையில் அமையக் கூடும் ஆகவே அதிபரின் முகாமைத்துவ திறன் சிறப்பானதாக இருக்கவேண்டியது மிக முக்கியம்.

முதற்தர முகாமையாளர் பாடசாலை நிர்வாகத்தை திட்டமிடுபவர் ஒருங் கிணைப்பவர், நெறிப்படுத்துபவர் நிர்வகிப்பவர் கட்டுப்படுத்துபவர் எனப் பலபணி களைச் செய்பவர் இப் பணிபற்றி பல்வேறு அறிஞர்கள் தமது நூல்கள் வாயிலாகவும் கூறியுள்ளனர். அந் நூல்களை அடிப்படையாக வைத்து பெற்ற தரவுகளிலிருந்தும் கல்வி அமைச்சு காலங்களிற்கேற்ப வெளியிட்ட சுற்று நிருபங்களிற்கமைவாகவும் அதிபர் ஆற்ற வேண்டிய பணியை ஒழுங்குபடுத்திக் கூற முயற்சிக்கின்றேன்.

01. பாடசாலையின் அனைத்து கருமங்களையும் முகாமை செய்தல்.
02. ஆசிரியர்களின் நேரசூசி,தவணைக்குறிப்பு,நாட்குறிப்பு என்பவற்றைப்பரிசோதனை செய்து தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.
03. பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல்.
04. பாடசாலை அபிவிருத்திக்கு அனைவரது பங்களிப்பையும் ஏற்படுத்துதல்.(PSI)
05. கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
06. மாதிரி வகுப்புக்களை நடாத்துதல் அல்லது ஒழுங்கு செய்தல்.
07. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தியை மேற் கொள்ளல்.
08. ஆசிரியர் தரவட்டங்களை உரிய காலத்தில் நடத்த ஏற்பாடு செய்தல்
09. மாதாந்த, தவணைப்பரீட்சைகளை நடத்திப் புள்ளிப் பகுப்பாய்வு செய்வதனை உறுதிப்படுத்தவதன் மூலம் மாணவர் அடைவுமட்டத்தினை உயர்த்துவதற்கு வழி ஏற்படுத்தல்.
10. பெற்றோர் சந்திப்புக்களை நடாத்தி மாணவர் கல்வி தொடர்பான சவால்களைக் கலந்துரையாடி ஆலோசனை வழங்குதல்.
11. ஆசிரியர்களின் சுயமதிப்பீடு, மேற்பார்வையாளரின் மேற்பார்வைச் செயற்திட்டங் களை நடைமுறைப்படுத்தல்.
12. அமுலாக்கத்திட்டம் ஐந்தாண்டுத்திட்டம் என்பவற்றைத் தயாரித்து உரிய காலத்தில் அனுமதி பெற்று செயற்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பாடசாலை நாட்காட்டியைத் தயாரித்து அனுமதி பெற்று செயற்படுத்துதல்.
14. பாடவிதான செயற்பாடுகளைச் செயற்படுத்துதல்.
15. ஆசிரியர் மற்றும் ஏனைய அலுவலர்களின் கடமைக் கூறுகளை மேற்பார்வை செய்தல்.
16. கல்வி அபிவிருத்திக்காக பாடசாலையில் உள்ள வளங்களை உச்சளவில் பயன் படுத்தல்.
17. அங்கீகரிக்கப்பட்ட நிதியை உரிய நியதிகளுக்கு ஏற்ப பயன்படுத்தல்.
18. ஆசிரியர்கள் மாணவர்கள் ஒழுக்கத்தினைக் கண்காணித்து உரியவாறு நெறிப் படுத்தல்.
19. கல்வித் திணைக்களத்தினுடனான தொடர்புகளை உரிய முறையில் பேணிவருதல்.
20. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழையமாணவர் சங்கம் ஆகியவற்றை செயற் படுத்தி தலைமை தாங்குதல்.
21. பாடசாலையில் உள்ள கணக்குகளை உரியவாறு பேணி வருதலும் வரவுசெலவுத் திட்ட அறிக்கையை தயாரித்து அனுமதி பெறுதலும்.
22. பாடசாலை வனப்பினைப் பேணுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல்.
23. மனிதவளம் பௌதீகவளம் என்பவற்றை தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளும் திறன்.
24. பாடசாலையின் சகலதரப்பினரிடமும் சுமுகமான உறவினையும் தொடர்பாடலி னையும் ஏற்படுத்தல்.
25. பாடசாலை மட்டத்தில் எழுகின்ற பிரச்சினைகளை நிதானமாக எதிர் கொண்டு மிகச் சுமுகமாகவும் இலகு வழியிலும் தீர்க்கும் ஆற்றல் கொண்டிருத்தல்.
26. தேவைக்கேற்ப நவீன தொழிநுட்பத்திறனை பயன்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
27. மனித விழுமியங்களைப் பேணும் திறன்.
28. சரியான அறிக்கைப்படுத்தலினை மேற்கொண்டு தொடர்ந்து பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் செல்ல வழிகாணல்.

மேற்கூறப்பட்ட கடமைக் கூறுகளை தேசிய கல்விகொள்கைக்கேற்றவாறு நேர் வரிசை மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் அதிகாரத்திற்குட்பட்ட அரசாங்க பாடசாலைகளின் கல்விதொடர்புடைய செயற்பாடுகளையும் அவ் அமைச்சுகளில் ஒப்படைக்கப்பட்ட இணைபாடவிதான செயற்பாடுகள் போன்ற பாடசாலை மேம்பாடு தொடர்பான வகிபாகங்களை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அலுவலகங்கள் ஊடாக தனது நடிபங்குகளை மாற்றி நேர் மனபாங்குடனான தலைவராக சேவையாற்றி அதிபர்கள் தமது முதற்தர முகாமைத்துவப் பணியில் வெற்றி காணவேண்டும். இப் பெரும் பணி பற்றி அதிபர் பணிக்கு புதியவனான நான் செய்துள்ள தொகுப்பில் தவறுகள் இருப்பின் பெரும் மனதுடன் மன்னிக்க வேண்டி நிறைவுசெய்து கொள்கிறேன்.

நன்றி

தொகுப்பு
**சி. இளங்குமரன்**
அதிபர்
கிளி/அழகாபுரி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுடன் பெற்றோர்

மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்ற இந்த இயந்திர உலகில் குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலையாக பரிணமித்து நிற்கிறது. பதினாறு பிள்ளைகளைக் கூட பெற்று உண்டு கழித்து ஒன்றாய் இருந்த மனித சமுதாயம் "மெல்ல மெல்ல" மங்கிப்போய் பெற்ற பிள்ளை ஒன்று எனினும் ஓராயிரம் சட்டங்கள் அறிந்து உணவுப் பழக்கவழக்கங்கள் மாறி நாகரிகம் எனும் போர்வைக்குள் மறைந்து கொண்டு போகிறது. மனித சமுதாயம், எது எவ்வாறு இருப்பினும் பெற்றோரது முழுக்கவனமும் பிள்ளையின் பால் இருக்க வேண்டியது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமாகும்.

இக்காலத்தில் ஒரு பிள்ளையை வளர்ப்பது கடினமான வேலை. ஒருவர் ஒரு இலத்திரனியல் சாதனத்தை வாங்கும் போது ஓர் அறிவித்தல் புத்தகமொன்று அத்துடன் வழங்கப்படுகிறது. சாரதியொரு வாகனம் ஓட்டுவதற்கான சாரதி அனுமதி பத்திரமொன்று பெற்றுக்கொள்வதைப்போல் அல்லாமல் ஒரு பெற்றோரின் மிக முக்கியமான வேலையாக பிள்ளையின் வாழ்க்கைக்குப் பொறுப்பாளியாக தகுதி பெற விசேட சட்டதிட்டங்களோ, அறிவுறுத்தல்களோ, பெறவேண்டிய சான்றிதழ்களோ தேவைப்படுவதில்லை. மாறாக தம்பிள்ளைகளை விளங்கிக்கொள்ளல், தொடர்பு நுட்பங்கள், சில ஒழுங்குமுறைகள் என்பனவேயாகும்.

இவ்வுலகை முத்தமிட்ட குழந்தை அன்னையின் அரவணைப்பில் அன்பையும் தந்தையின் அரவணைப்பில் பாதுகாப்பினையும் பெறுகிறது. தனது குடும்பத்தினரை ஒட்டிய பழக்கவழக்கங்களையும் பெற்றோர் பேசுகின்ற வார்த்தைகள், அவர்களுடைய நடத்தைகள் என்பனவே குழந்தையின் பழக்க வழக்கங்களை தீர்மானிக்கின்றது. பின் முதன்மை நிலை ஒன்றில் காலடி எடுத்து வைக்கும் போது வீட்டுச்சூழலிலிருந்து சற்று விலகி புதிய சமூகம் ஒன்றைக்கண்டு கொள்கிறார்கள். ஆரம்பக்கல்வி, இடைநிலை வகுப்புக்கள், உயர்தரம் என்ற அடிப்படையில் சகபாடிகளின் செல்வாக்கும் பழக்க வழக்கங்களும் பின்பற்றப்படுகின்றன.

முற்காலத்தில் பிள்ளைகள் எவ்வாறு வளர்க்கப்பட்டனர் என்பது முக்கியமல்ல. ஏனெனில் இன்றைய பெற்றோர்களும் பிள்ளைகளும் முகம்கொடுக்கும் எதிர்கொள்ளும் பயமுறுத்தக் கூடிய அதைரியத்தை அளிக்கும் சவால்களை அன்றைய பெற்றோர்களும் பிள்ளைகளும் எதிர்கொள்ளவில்லை. என்றே சொல்லலாம்.

இன்றைய தொழில்நுட்பயுகத்தில் பெற்றார் பிள்ளைகளுடன் தொடர்புகொள்ளல் என்பது பெற்றோர்களுக்கு உறுதியான வெளிப்படையான விடயமல்ல. அதிகரிக்கும் கல்வித்தேவைகள், தொழில்நுட்பயுகத்தின் விந்தை ஊடகங்களின் தாக்கம், சமூக வலைத்தளங்களின் பிரசித்தம், போதைப்பொருட்களின் ஈர்ப்பு உலகப்போகப் பொருட்களின் பாவனை போன்றன இளைய தலைமுறையினரிடையே உண்மையை மறைந்து போலித்தன்மை வாழ்க்கையின் ஒரு பகுதியாக காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தருணத்தில் பெற்றோர் பிள்ளைகள் நம்பிக்கையைப் பெறவும், தமது பிள்ளைகள் மேற்கூறப்பட்ட விடயங்களை எவ்வாறு கையாளுகின்றனர் என்பதை அறியவும், அவர்களின் எதிர்மறை திறன்களையும் அறிய பெற்றோர்கள் நல்ல செவிசாய்ப்பாளர்களாக இருக்கவேண்டும். சரியான முறையில் பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டிய பெரும் பங்கு பெற்றோரையே சாரும்.

எது உண்மை எது பொய் என்பதை அறியும் இடம் குடும்பமே. பண்பாடு, சமயம், கலாசார விழுமியங்கள் என்பனவும் குடும்பத்தில் இருந்தே பழக்கப்படுத்தப்படுகின்றது. எனவே, இத்தகைய விழுமியங்கள் வீட்டில் இருந்தே பின்பற்றப்படுவதோடு மட்டுமல்லாது வருங்கால சந்ததிக்கும் கடத்தப்பட வேண்டும். இத்தகைய பெரும் பணியில் பெற்றோர்கள் முழுமனதுடன் ஈடுபடுவார்களேயானால் சிறந்த மாணவச் சமூகம் ஒன்றை எமது தேசத்தில் கட்டியெழுப்ப முடியும்.

**திருமதி. நர்மதா பிறைசூடி**

கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லனவற்றை எண்ணுவோம் நலமாக வாழுவோம்

மனிதர்களிடத்தில் திறமை இயல்பாக இருந்தும் அவர்கள் அதனை சரியாக பயன்படுத்துவதில்லை. பல வசதி வாய்ப்புக்கள் கிடைத்தும் அதனை நழுவ விடுகின்றனர். மனிதனின் மனதில் பல்லாயிரம் எண்ணங்கள் உருவாகும். அதில் தாழ்வு எண்ணங்கள் முரட்டு எண்ணங்கள், எதிர்மறையான எண்ணங்கள், பலவீனமான எண்ணங்கள், தெய்வீகம், அன்பு என பல எண்ணங்களும் காணப்படுகின்றன.

நம் எண்ணங்கள் எப்பொழுதும் சுத்திகரிக்கப்பட்டு புனிதமாக இருக்க வேண்டும். எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் ஆரோக்கியத்திற்கு நல்லதாகும். அதேபோன்று எண்ணம் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் வாழ்விற்கு நல்லது. ஒரு மனிதன் எதை நினைக்கின்றானே அதுவாகவே உருவாகின்றான். இதைத்தான் எம் முன்னோர்கள் விதைப்பதே முளைக்கும் என்றார்கள். நாம் எமது வாழ்க்கையில் உயர்ந்து ஒளி வீச எமது மனம் தான் ஆணிவேர் உயர்ந்த எண்ணங்களை விதைத்து வாழ்வில் உயரவேண்டுமென்று நினைத்தால் நிச்சயம் வெற்றியடையலாம்.

தவறான எண்ணங்களை மனதில் இருந்தினால், தவறான வழிகளைத்தான் அறிவு தரும், எமது எண்ணங்கள் எப்பொழுதும் நல்லதாக அமைய வேண்டுமானால், என்றும் இறைசிந்தனையுடன் இருத்தல் வேண்டும். நிலமுள்ளவர்கள் நிலத்தை சுத்தம் செய்து உரமிட்டு நீர் பாய்ச்சி பயிரிடுகின்றார்கள். பலர் மனதை உழுது நல்லெண்ணங்களை விதைத்துப் போட்டி, பொறாமை, புறம் பேசுதல், பிறருக்கு கேடு விளைவித்தல் என்ற எதிர்மறை எண்ணங்களை விடுத்து உள்ளன்போடு பழகுதல் வேண்டும். உண்மையாக உழைத்தல், எதையும் எதிர்பாராமல் உதவி புரிதல் போன்ற பண்புள்ளவர்கள் வாழக்கூடிய வர்கள். அவர்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் சந்தோசமாகவும், உற்சாகத்துடனும் வாழக் கற்றுக்கொள்கிறார்கள்.

எண்ணம் அணுகுண்டை விட ஆற்றலுடையது, ஏனென்றால் மனம் எண்ணியதனால் தான் அறிவு செயற்பட்டு அணுகுண்டு உருவானது. ஓர் எண்ணத்தை நம்பிக்கையுடன், பலமுறை மனதில் நினைத்தால் அது நடந்தே தீரும். ஆகையால் நல்லதும் கெட்டதும் நடப்பது, நாம் எண்ணும் எண்ணங்களில் தான் தங்கியுள்ளது. நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே மாறிவிடுகின்றாய். என்பதை நீங்கள் கேள்விப்பட்டி ருப்பீர்கள். உங்கள் எண்ணம் உறுதியாக இருந்தால், இயற்கையே உங்களுக்கு உதவிக்கரம் நீட்டி உதவிபுரியும். எனவே, நல்லனவற்றை எண்ணுவோம் அதனை செயற்படுத்த நாள்தோறும் முயற்சித்து நலமாக வாழ்வோம்.

**திரு.சு.வரதராசா**
முன்னை நாள் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாலயம்

கிளிநொச்சி நகரினிலே
கீர்த்தியுடன் மிளிர்ந்தெழுந்த
ஒன்று தொடக்கம் பதினொன்று வரை
ஒழுங்கமைந்த பண்ணைகளுடன்
வளர்நது நிற்கும் கனகபுரம்
வாஞ்சைமிகு கிராமமாகும்.

களிப்புடனே வாழுகின்ற
கனகபுரமே கிராமத்தின்
இளம் சிறார்கள்
இணைத்தோங்கில் கல்வி கற்க
கனகபுரம் மகா வித்தியாலயத்தை
கட்டி வளர்த்தார்கள்

அறிவோடு பல ஆற்றல்களையும்
அற்புதமாய் மாணவர்க்கு
அள்ளி அள்ளிக் கொடுப்பதற்காய்
அழகு பெற்று நிற்கும்
கனகபுரம் மகாவித்தியாலயம் - கிராமத்தின்
கண்ணான பாடசாலை

கல்வி அறிவோடு
நல்ல ஒழுக்கங்களையும்
பல்வேறு ஆக்கங்களையும்
பாங்குடனே மாணவர்க்கு
அள்ளி வழங்கும் பாடசாலை
அறிவு நிறை ஆலயம் தான்

நல்ல பல ஆசான்கள்
நன்றாகச் சேவையாற்றி
கல்வியுடன் கலைகளையும்
கடமையுடன் கற்பித்து
பாடசாலை வளர்ச்சிக்கு
பல சேவை செய்தார்கள்

ஆசிரியர்கள் செய்த
அளப்பரும் சேவையாலே
எஞ்சினியர் டாக்டராய்
எழுதுவினைஞர் ஆசிரியராய்
பாடசாலை என்றும் - சமூகத்திற்கு
படைத்தளித்து நிற்கிறது.

கல்வி மான்களை உருவாக்கும்
கனகபுரம் மகாவித்தியாலயம்
படிப்படியாய் வளர்ச்சி கண்டு -இன்று
பரவசமாய் மிளிர்கின்ற
பொன்விழாக் காணும் - நல்ல
பொழுதாகி நிற்கிறது,

இன்னும் இந்தப் பாடசாலை
இவ்வளவு உயர்வதற்கு
கிராமத்து மக்களும் - பழைய
மாணவர் கரங்களும்
வலுவாகிச் சேர்த்தாலே
வரலாறு படைக்கிறது.

என்றும் என்றும் உயரவேண்டும்
ஏற்றங்கள் பல பெறவேண்டும்
நல்லதொரு பாடசாலையாக
நாட்டில் திகழ வேண்டும்.
எல்லோரும் உழையுங்கள் - நல்ல
எதிர்காலம் எமக்காகும்.

**திருமதி. யசோதா சசிபாபு**
(முன்னைநாள் ஆசிரியை)
கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை பெரிது சாதனை பெரிது

ஒருவருடைய வெற்றி என்பது எதில் தங்கியுள்ளது? உலகத்தை பார்க்கும் ஆவலுடன், எம்மீது தன்னினரில்லாத் தூய அன்பை வைத்திருக்கின்ற எம் அன்னையை, வாய்கிழிய கதற வைத்துக்கொண்டு, பிறந்துவிடுகின்ற எம் முகத்தை பார்த்தவுடனேயே அல்லது எமது அழுகுரலைக் கேட்டவுடனேயே அவளும் முகமலர்கின்றாள். உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் மூளையின் அமைப்பு ஒரே மாதிரியானதாகவே உள்ளதாக கூறப்படுகிறது. அப்படியெனில் நாம் ஒவ்வொருவரும் வேறுபட்டிருப்பது ஏன்? விஞ்ஞானி, வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர், எழுதுவினைஞர், அலுவலகப் பணியாளர், எழுதுவினைஞர், கூலி... இப்படி பல தொழில்கள் அறிவை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன. இதற்கு அடிப்படை காரணம் என்னவாக இருக்கலாம் என எவராவது எப்போது சிந்தித்திருக்கிறோமா? என்னால் அவரைப்போலக் கற்க முடியாது அல்லது முன்னேற முடியாது, எனக்கு இவ்வளவு தான் இயலும், இவ்வளவே போதும் என்று எண்ணி ஒரு வரையறை போட்டு வாழ்கின்றவர்கள் நாம்.

ஆனால் வளமான வாழ்வுபெற்று, புகழ்பெற்ற பல அறிஞர்கள், “எண்ணங்களே இந்த உலகத்தை நடத்திச் செல்கின்றன(எமர்சன் என்ற மேதை)” என கூறுகின்றனர். மனம் என்பது அதன் உரிய இடத்தில்ததான் இருக்கிறது. அதுவே நரகத்தை சுவர்க்கமாக மாற்றும். சுவர்க்கத்தை நரகமாக மாற்றும் என்றார் மில்டன். “நல்லது இதுதான், கெட்டது இதுதான் என்ற பாகுபாடு இல்லவே இல்லை. எல்லாம் எம்முடைய சிந்தனையில் தான் இருக்கிறது.” என்றார் ஷேக்ஸ்பியர்.

வெற்றி என்பது ஒருவரது மூளையின் அளவைப் பொறுத்ததாக அல்லாமல், ஒருவருடைய சிந்தனையின் பரிமாணங்களை பொறுத்தே இருக்கிறது. ஏனெனில் பெரிதாக அல்லது உயர்வாக சிந்திக்கின்ற ஒருவருக்கு, மந்திர மாயம் போன்று, வெற்றி அதிகமாகவே கிடைக்கிறது.

பெரும்பாலனவர்கள் இன்னும் “விதி“தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றது: எனக்கு அதிஸ்டமில்லை: எனது தலை எழுத்து சரியில்லை: எல்லாவற்றுக்கும் பணம் தேவை: அதற்கு நாம் எங்கு போவோம்? ஏதோ பிறந்துவிட்டோம்: அப்படியே வளர்ந்து, வாழ்ந்து, இறப்பு வரும்வரை காத்திருப்போம்....என்று வாழ்நாள் முழுவதுமே சலித்துக்கொண்டு, பற்றற்று தம்மைச்சுற்றி இருக்கிறவரையும் குழப்பிக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்தக் குழப்பம் ஏதோ ஒரு அளவில் ஒவ்வொருவருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

இன்றைய எமது தமிழ் இளம் சமுதாயத்தினர் தமக்குத் தேவையானதை சிந்திப்பது மில்லை: சிந்திக்க முனைவதுமில்லை. சிகரத்தை அடைய முடிவதுமில்லை. பெரும் பாலான பிள்ளைகளது, இளைஞர்களது சிந்தனை சினிமாப்பாணிகளை பின்பற்றிக் கொண்டு சென்றுகொண்டிருக்கின்றமை அவர்களது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமோ எனும் பாரிய அச்சத்தை தமிழ்ச் சமூகத்தினுள் உண்டாக்கியுள்ளது. இவ்வாறான சிந்தனைகளைக் கொண்ட பிள்ளைகள், தமது அவநம்பிக்கையை நியாயப்படுத்த "காரணங்களைத்" தேட ஆரம்பிக்கின்றனர். சந்தேகம், அவநம்பிக்கை என்பன தோல்விகளுக்கு அடித்தளமாகின்றன. இதனால் இன்றைய தமிழ்க் குடும்பங்களிற்குள் சண்டை, சச்சரவு, வாள்வெட்டு, மது, மாது, விவாகரத்து என்று பலவாறான சமூகச்சிக்கல்கள் தலைதூக்கிக்கொண்டிருக்கிறது. புகைப்பிடித்தல், குடிப்பழக்கம், போதைப்பொருளுக்கு அடிமையாதல், தீய நண்பர்கள் போன்றன புலன்களிற்கு மகிழ்ச்சி தருவதாய் எண்ணி அதையே இன்றை இளம் சமுதாயம் நாடி தேடுகிறது. அதற்கு யார் காரணம்?

பெற்றோர் இருவருமே பணத்தை தேடி ஓடிக்கொண்டிருக்கின்றோம். பிள்ளை களின் முகத்தை பார்க்கசுட நேரமில்லாத ஓட்டம். பிள்ளைகளிற்கு நல்ல வீடு, டுநுனு வுஇஎ, ஜீன்ஸ், பான்ட், கைகளில் எந்நேரமும் Smart phone.......... ஆனால் பிள்ளை பாடசாலைக்கு போகிறானா? எவ்வாறு செல்கிறான்? என்பதை கண்காணிக்க நேரமில்லை. அன்பாகப் பேச நேரமில்லை, நல்ல சத்தான உணவு செய்துகொடுக்க நேரமில்லை, அவனுடன்ஃஅவளுடன் அருகிருந்து கையைப்பிடித்துக்கொண்டு அவர்கள் நட்பு வட்டாரம் பற்றி அளவளாவ நேரமில்லை. பிள்ளைகளின் மனம் தேவையானதை சிந்திக்க நேரத்தை ஒதுக்கித் தராமல் நாம் போய்கொண்டிருந்தால் இதில் பிள்ளைகளின் பிழைதான் என்ன? எமது குடும்பத்தில் நமக்கு நாமே தோல்விகளை வருவித்துக் கொள்கிறோம் என்பதுதான் கொடுமையான உண்மை. நம்மிடமுள்ள இயலாமை காரணமாக அல்லது கையாலாகாத் தன்மையினால், தனிப்பட்ட தவறுகளால் ஒரு சமூகத்தின் எதிர்காலமே அழிவுப்பாதைக்குள் போய்விடாதா? நீங்கள் வாங்கிக் குவித்தவை எல்லாம் பிள்ளைக்கு பாடசாலையில் பாராட்டை, பரிசை பெற்றுத்தந்ததா? உயர்கல்விக்கு செல்ல வழிவகுத்ததா? தொழில் சந்தையின் சவால்களுக்கு முகம்கொடுக்க ஒழுக்கத்தை, பணிவை, எமது கலாசாரத்தை, ஆளுமையைக் கட்டியெழுப்பியதா? இல்லையே. சமூகத்திற்கு ஏற்புடையவனாக்குவது எம் ஒவ்வொருவரதும் தார்மீகக் கடமையல்லவா?

பிள்ளைகள் சுறுசுறுப்பானவர்கள். அவர்களிற்கு எண்ணங்களை வெளியில் இருந்து திணிக்கக்கூடாது. அவர்கள் வளரும் செடிக்கு ஒப்பானவர்கள். "உங்கள் பழக்கங்களைக் கூறுங்கள், நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என நான் கூறுகிறேன்" என்பது வழக்கு மொழி. காலை எழுந்தது தொடக்கம் படுக்கைக்கு செல்லும்வரையும் புத்தகமும் கையுமாய் திரிகின்ற பிள்ளைகள் சிந்திப்பது எப்போது? Tab, phone உம் 200CC மோட்டார் சைக்கிளும் வாங்கிக்கொடுத்தால் அவர்கள் சிந்திப்பது எப்போது? பிள்ளைகளைச் சிந்திக்க வழிவகுப்போம். தட்டிக்கொடுப்போம். அவர்களது உணர்ச்சிகளுக்கு மதிப்பளிப்போம். சொல்வதைச் செவிமடுப்பொம். சரியான பாதைக்கு வழிகாட்டுவோம். தோல்வியில் தோள் கொடுப்போம். ஆரோக்கியமான உணவை கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மத்தியவங்கி அறிக்கையில் குறிப்பிட்ட சில விடயங்களை பகிர்ந்து கொள்ளுதல் இங்கு பொருத்தமாக இருக்கும். "பல ஆண்டுகளாக பல ஆர்வலர்கள் எடுத்துக் கூறியபோதும், ஒரு சிக்கலான் பொருளாதாரத்தின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான கல்வி மற்றும் தேர்ச்சித் திறமைகளை தற்போதுள்ள மற்றும் எதிர்கால தொழிற்பாட்டை போதியளவில் கொண்டிருக்காத தன்மை தொடர்ந்தும் தீர்வில்லாமல் காணப்படுகிறது................ தொழிற்படையின் தரத்தை உயர்த்துவதற்கான கொள்கை முயற்சியில் போதாமை, ஒருங்கிணைப்பு இல்லாமை, காணப்படுகின்றன. கல்வித்துறை குறிப்பாக உயர்கல்வி தொடர்பான தரம், பொருத்தம், சமநிலை மற்றும் கொள்திறன் பற்றிய கொள்கை முன்னெடுப்புக்கள் அவசரமாக முன்னரிமைப்படுத்தப்படவேண்டும். ஏனெனில் பொருளாதாரத்தின் உருமாற்றத்திற்கு உயர்தர மனித வளங்கள் என்பன இன்றியமையாதது. *(2017 மத்திய வங்கி அறிக்கை, ப-27)* ஆரம்பப்பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை பொதுமக்களுக்கு சமத்துவமான இலவசமான கல்வியை வழங்கக்கூடியதாக கல்வி முறைமைகள் இருக்கின்றபோதும் இலங்கையின் கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் தொழிநுட்பப் பயிற்சி முறைமைகள் பொருளாதாரத்தின் தொடர்பான துறைகளினால், கோரப்படுகின்ற தேர்ச்சியை உருவாக்கும் நியதிகளில் வரலாற்றிலே மிகக் குறைந்த செயலாற்றத்தினைக் கொண்டிருக்கின்றன. எனவே முறைசார்ந்த கல்வியையும், தொழில் பயிற்சியையும, தொழில் சந்தை தேவைப்பாடு களுடன் பொருத்தம் செய்வது அவசரமானதாகவுள்ளது. தொழில் உருவாக்குவோரின் தேவைப்பாடுகளுக்கம் தொழில் நாடுவோரின் எதிர்பார்ப்புக்குமிடையில் ஏற்பட்டி ருக்கும் பாரிய இடைவெளி உள்நாட்டுச் சந்தையில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. *(2017 மத்தியவங்கி அறிக்கை, ப-135)*

இவ்வறிக்கை பெற்றோரையும், பிள்ளைகளையும், கல்விச் சமூகத்தையும் பாரிய பொறுப்புக்குமுன் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது. சர் ரோஜர் ல.எஸ்ட்ரேஞ்ஜ் கூறும்போது "புலன் உணர்ச்சியும், நெருப்பு மற்றும் நீரும் ஒன்றெனக் கொள்ளலாம்: ஏனெனில் இவை நல்ல வேலையாட்கள், ஆனால் மோசமான எஜமான்" என்கிறார். (வர.த.நடராஜன், ப 79). ஆம் பழக்கங்களை நாம் அடக்கியாளவிட்டால், அவை எங்களுக்கு எஜமானாகிவிடும். பிள்ளைகள் சாதனை படைக்கப்பிறந்தவர்கள். "எந்தத் தவற்றையும் உணராமல் இருப்பதே தவறுகளிலேயே பெருந்தவறு" என்று கார்லைல் என்ற மேதை அருமையாக சொன்னார். பிள்ளைகளுக்கு பின்விளைவுகளைப் புரிந்துகொள்ளுமளவிற்கு இப்பருவத்தில் போதுமான முதிர்ச்சி இன்மையாலும், மாணாக்க நண்பர்களுடன் அவர்கள் போக்கில் வாழ்வேண்டும் என்ற எண்ணத்தாலும் தீய பழக்கங்களிற்கு பலியாகலாம். மாணவர்களுக்கு வலிமையான மன உறுதிவேண்டும். நல்ல நண்பர்களை தேர்ந்தெடுக்க வழிகாட்டவேண்டும். பிள்ளைகள்மீது பெற்றோர் வைத்தள்ள நம்பிக்கையை சில நிமிட புலன் இன்பத்திற்காக இழக்கும் ஆபத்தை எதிர்கொள்ளாத வகையில் அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். தொடர்முயற்சி, கடின உழைப்பு, மனஉறுதியால் வருகின்ற விளைவுகளை உணர்த்தவேண்டும்.

பிள்ளைகளே நம்மைச் சுற்றியுள்ள தலைமைப்பண்பு உடையவர்களை, அவர்களது வாழ்க்கை பற்றித் தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். சாதனைகள், வெற்றிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி போன்றவை எல்லாம் சிந்தனையை அடிப்படையாகக்கொண்டவை என்பது உங்களிற்கு வெளிப்படும்.

இத்தாலி நாட்டில் "ட்யுரீன்" பல்கலைக்கழகத்தில் ரேடியோலஜி (Radiology) நிபுணர் "மாரியோ போஜியோ" என்ற பெண்மணி தனது ஒ-சுயல கதிர் பரிசோதனையில் தனது இடதுகை முழுவதையும் வலது முன்கையையும் வெட்டி அகற்றும் நிலைக்கு ஆளானார். ஆனால் சற்றும் தளராத அவர் "வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் பயனுள்ளதாக்கிவிடவேண்டும்" என்று தனது நண்பர்களிற்கு கூறினாராம். (எடையூர் சிவமதி, ப- 1-2) இப்பெண்மணியின் எண்ணம் மிக உயர்வாக இருந்ததால்தான் இன்று பலர் நோய் நிலைகளை அறிந்து சிகிச்சை பெறுகின்றனர். "என் வயதை நான் ஆண்டுகளைக்கொண்டு அளவிட விரும்பவில்லை. நான் செய்து முடித்து வெற்றிகண்ட செயல்களைக்கொண்டே கணக்கிடுகிறேன். வயதின் முதிர்ச்சியால் நான் ஓய்ந்து சும்மா இருக்கும் காலத்தை எதிர்பார்க்கவில்லை. வேலை நிறைந்த வாழ்க்கையே நல்வாழ்க்கை என்று நாக் நினைக்கின்றேன்" என்றார் எடிசன். விஞ்ஞானி பி.சி ராயிடம் ஒருவர் கேட்டார் " உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மிக சுறுசுறுப்பாக இருந்தது எப்போது?" என்று. அதற்கு அவர்" வாழ்க்கையில் ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு, அதன்படி நடக்காத சோம்பேறிகளுக்குத்தான் அவசியமான காரியங்களிற்கு மட்டுமன்றி, அன்றாடக் கடமைகளுக்கே நேரம் கிடைப்பதில்லை. ஆனால் சுறுசுறுப்பாக இருப்பவர்களுக்கோ நேரம் கிடைக்கவில்லையே என்ற பிரச்சினை ஒருபோதும் ஏற்படுவதில்லை. எனக்கு 60 வயது ஆகிவிட்டது. இப்போதுதான் இன்னும் சுறுசுறுப்பாக இருக்கிறேன்" என்றார்.

எமது மனம் நேர்மறை எண்ணங்களையே உருவாக்கட்டும், கட்டாயம் வெல்வோம் என நம்பிச் செயற்படுவோம். மனதை சிந்திக்க உபயோகிப்போம். பிறரைக் கண்டு அஞ்சுவதைத் தவிர்ப்போம். மனச்சாட்சியை திருப்தி செய்துகொண்டு நம்பிக்கையைப் பெருக்குவோம். நம்பிக்கை- நாம் எண்ணுகின்றவை நிகழும் என்பதை முதலில் நம்பவேண்டும். அது தான் வாழ்க்கையின் உயரத்திற்கு ஒருவரை கொண்டு செல்வதற்கான பாதையைக் காட்டும்.

உழைப்பு கடுமையான உழைப்பு மிகக் கடுமையான உழைப்பு

**திருமதி. சுவேந்தினி நிரஞ்சலன்,**
ஆசிரியை.
கிளி/பாரதி வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நம்மைச் சுற்றியும்....

பிறந்தோம்... வாழ்ந்தோம் என்றில்லாமல் எம்மை வாழவைத்த பூமிக்கு நாமும் ஏதாவது செய்தாக வெண்டுமே! வாழ்வதற்கான இடம், நீர், உணவு எல்லாமே தரும் பூமித்தாயை வெறுமனே விடலாகாது. அவ்வாறு நாம் செய்வது, எம்மை பெற்று வளர்த்த பெற்றோரை உதாசீனம் செய்வதற்கு சமமானதாகும்.

நம்மைச் சுற்றிலும் தினசரி நிகழ்ந்து கொண்டிருக்கும் சுற்றுப்புற சுகாதாரமற்ற நிலை, சூழல் மாசடைதல் அதனுடன் சேர்ந்த புவிவெப்பமயமாதல் போன்ற புறக்காரணிகளை தெரிந்து கொண்டு அதற்காக செய்ய வேண்டியவைகளை திட்டமிட்டு நம் பாடசாலை மாணவர்களிடத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். உடனடி பெறுபேறுகளை நாம் எதிர்பார்க்க முடியாவிட்டாலும் காலப்போக்கில் சமூக விழிப்புணர்ச்சியாக மாற்றம் பெற்று தீமைகளை குறைத்து நன்மையான மாற்றத்தை நிச்சயம் தோற்றுவிக்கும்.

சுற்றுப்புறச் சுகாதாரம் மிகவும் முக்கியமானது. நோய்கள் உருவாகுவதன் முக்கிய காரணிகளும் இங்கேயே உண்டு. எச்சில், உமிழ்தல், கண்ட இடங்களில் குப்பைகள் போடுதல் என்பது தவறு என்பது மாணவர்களுக்கு அதுவும் சிறார்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லித்தருதல் வேண்டும். இவை முற்றாக தவிர்க்கப்படவேண்டும். குப்பைகள் புறம்பாகவும், பிளாஸ்ரிக் கழிவுகள் புறம்பாகவும் போடவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் பாடசாலையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். குப்பைகள் குழிதோண்டி புதைப்பதன் மூலம் பசளையாக மாற்றம்பெறும். இதே முறையை வீட்டிலும் செய்யும்படி ஊக்குவிக்கவேண்டி வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த நடவடிக்கையை நாளாந்தம் காணமுடியும். இவர்கள் மனதளவில் பக்குவமடைந்து விட்டனர். இவை ஒரே நாளில் அங்கு மாற்றம் பெறவில்லை படிமுறை வளர்ச்சி தான் அங்கேயும் நடந்தது,

சூழல் மாசுபடுதலில் எரியூட்டல், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள், புகை என்பனவும் அடங்கும். வேலைவாய்ப்பு பெற தொழிற்சாலைகள் வேண்டும். ஆனால் அதிலிருந்து வெளியேறும் கழிவுகள் முக்கியமாக புகை கரிய மில வாயுவை கொண்டுள்ளது. தாவரங்கள் உணவு தயாரிக்க கரியமிலை வாயு (Co2) தேவையானது. அவை கரியமிலை வாயுவை உள்ளீர்த்து பிராண வாயுவை (ஒட்சிசன்) வெளிவிடும்போது தேவையான உணவு தயாராகின்றது. எல்லா இடங்களிலும் மரங்களை நடுவதன் மூலம் கரியமில வாயுவை உள்ளீர்த்து பிராண வாயுவை அவை வெளிவிடு கின்றன. பகல் நேரங்களில் இந்த தொழிற்பாடு தாவரங்களில் நடைபெறுகின்றது. வெளியிடும் பிராண வாயுவை ($O_2$) நாம் சுவாசிக்கின்றோம். எனவே மரங்கள் நமது நண்பர்கள் போல எமக்கு உதவுபவை ஆகின்றன.

சுற்றுச்சூழலின் மிகவும் ஆபத்தானநிலை காடழிப்பாகும். அழிக்கப்படும் மரங்களுக்கு ஈடாக மரங்கள் நாட்டப்பட வேண்டும். அது தான் நடைபெறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடழிப்பினால் மழை குறைவடைந்துள்ளது. காடுகளும் மழையும் ஒன்றோடொன்று தொடர்பானது. இது பற்றிய அறிவூக்க செயற்பாடுகள் மாணவர்களிடத்தில் விதைக்கப்படவேண்டும். வேம்பு, தேக்கு, முதிரை, மற்றும் பழமரங்கள் போன்றவற்றை பாடசாலைகள் மற்றும் வீதி ஓரங்களில் விதிகளை அனுசரித்து நாட்ட வேண்டும். சிறிது காலம் நீர் ஊற்றி கால்நடைகளிடமிருந்து பாதுகாத்தால் அவை பிற்பாடு எந்த கவனிப்புமின்றி விருட்சங்களாக மாறிவிடும்.

மரங்கள் இருந்தால் தான் மழைப் பொழிவு இருக்கும். மழை இருந்தாலே நிலத்தடி நீர்வளம் இருக்கும். இவை இருந்தால் தான் நம் வாழ்வு வளம் பெறும்.

கனகபுரம் மகா வித்தியாலயம் பொன்விழா காணும் நன்நாளில் நாமும் இதில் கொஞ்சம் முயற்சி செய்யலாமே! இன்றைய மாணவர்கள் - நாளைய நாயகர்கள் அவர்களை நம்பி இந்த பொறுப்பை ஒப்படைக்கலாம்.

நாமும் வாழ்ந்து நம்மைச் சுற்றிலும் வாழவைப்போமாக!

**திருமதி. கனகரத்தினேஸ்வரி சச்சிதானந்தன்**
வகுதித்தலைவர் - ஆரம்பபிரிவு
(ஓய்வுபெற்றவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விழுமிய மேம்பாட்டுக்கல்வி

தோற்றத்திற்கு ஆதிமூலமான கருவறையில் தாயினால் விழுமியம் விதைக்கப் படுகின்றது. மனித விழுமியங்கள் பெற்றுத்திரட்டிக் கையளிக்கப்படவேண்டும். ஆசிரியரால் தேடித்தேடிப்பெற்று திரட்டிக் கையளிக்க வேண்டும். மாணவர்களுக்கு ஆசிரியர் சொல்லும் சொல் இனிமையாக வேண்டும். அவனது பாவனை சிந்தனை சமூகத்தை தொடவேண்டும். ஆசிரியர் மாணவர்களிடத்தே சுயநலமற்ற அன்புகொள்ள வேண்டும். சுயநலமற்ற அன்பு உயர்ந்த பண்புகள் மற்றவர்களை மாற்றும் சாதனம் பாடசாலைகள் ஊடாக உலகில் எவ்வாறு வாழ்வதென்பது கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

மனித விழுமியக்கல்வியில் ஐந்து அம்சங்கள் முக்கியம் பெறுகின்றது. அவை சத்தியம் (உண்மை), தருமம், சாந்திசமாதானம், அன்பு, அகிம்சை ஆகியன. நல்ல மன ஒருமைப்பாடே மன அடக்கத்திற்கும், நல்ல கற்கைக்கும் நல்வழி அமைக்கும், தினமும் வழிபட வேண்டும். நல்ல எடுத்துக்காட்டு வசனங்கள் பாடல்கள் தினமும் படிக்கவேண்டும். அவற்றை மனனம் செய்து கூறவேண்டும். அதன் கருத்துக்கள் மனித விழுமிய முத்துக்கள் உதாரணமாக ஔவையாரின் நன்னெறிப்பாடல்கள்.

நாம் கதைக்கும் விதம் விழுமியத்தின் மிக அடிப்படையானதாகும். இதயத்தில் இருந்து அன்பை அடிப்படையாகக் கொண்டு ஊற்றெடுத்த விதம் மிக மிக அவசியம் மற்றவர்களின் மனம் புண்படாத விதத்தில் கவலையை ஏற்படுத்தாத விதத்தில் சிந்திக்க வேண்டும். தீமையானவற்றை சிந்திக்கக்கூடாது கெடுதி ஏற்படக் கனவிலும் நினைக்கக் கூடாது. அதேபோல் நாம் பார்க்கும் விதமும் முக்கியமானது நாம் மற்றவற்றைப்பார்க்கும் விதம் முறை மிக மிகப் பிரதானம் நல்ல எண்ணத்துடன் பார்க்கவேண்டும். இவையே மனித விழுமியக் கல்வியில் உயர்ந்த நிலையாகும்.

**திருமதி. சிவஞானேஸ்வரி**
கனகசுந்தரம்
கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மனிதனைப் பூரணமானவனாக்கும்

விநோதமான புவிதனில் வாழும் மனிதர்களுக்கு அறிவு என்பது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வறிவினை மனிதர்கள் பெற்றுக்கொள்வதற்கு சாலச்சிறந்த ஒரு ஊடகமாக நூல்கள் திகழ்கின்றன. கடவுள் உறையும் இடம் திருக்கோயில் எனில் புத்தகங்கள் உறையும் இடங்கள் அறிவுத்திருக்கோயில்கள் ஆகும். நூல்கள் மனிதனை "வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன." மனிதர்களின் நல்ல நண்பர்கள் நூல்கள் ஆகும். இன்று புவியினில் நூலகங்கள் உள்ளன. இவ் நூலகங்களிலிருந்து நாம் நூல்களை இரவலாக வாங்கிப் படிக்கலாம். பணம் செலுத்தி நூல்களை வாங்கும் அளவிற்கு வசதி அற்றவர்களுக்கு இரவல் வாங்கிப் படிக்கும் முறையானது பெரிதும் உதவுகின்றது. தேனீக்கள் எவ்வாறு தேனைச் சேர்த்து ஒரு தேன் கூட்டை அமைக் கின்றனவோ, அதே போல மனிதர்களும் அருமையான நூல்களைத் தேடிக்கற்று தமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மனிதர்களாகிய நாம் பல நூல்களை வாங்கி வீட்டில் அடுக்கிவைத்தால் மட்டும் போதாது. அதனை வாசித்து அதிலுள்ள நல்லவிடயங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பெறுவதற்கரிய நூல்கள் பல இருந்தாலும், அதனை வாசிப்பதனூடாகவே மனிதனானவன் தனக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றான். நாம் நமது ஓய்வான நேரங்களில் பல்வேறுபட்ட பொழுதுபோக்குகளில் ஈடுபடுகின்றோம். தொலைக்காட்சி பார்த்தல், முத்திரை சேகரித்தல், வீட்டுத்தோட்டம் அமைத்தல், மீன்கள் வளர்த்தல் போன்றன அவ்வாறான சில பொழுதுபோக்கு அம்சங்களாகும்.

ஆனால், நமது ஓய்வினை மிகவும் பயனுள்ள வகையில் மாற்றிக்கொள்ள நல்ல நூல்களை வாசிப்பதை ஒரு பொழுதுபோக்காக நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். நூல்களை வாசித்தல் என்று கூறும் போது, அந்த நூல்கள், சிறுகதையாகவோ, நாவல்களாகவோ, காப்பிய நூல்களாகவோ, நாடக நூல்களாகவோ, நமது பாடம் தொடர்பான நூல்களாகவோ இருக்கலாம். இப்புவியில் பல நூல்களுள்ளன. அவை பல அடிப்படையில் வேறுபடுத்தப்டுகின்றன. மொழி அடிப்படையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி போன்ற பல மொழி அடிப்படையான நூல்களுள்ளன. இன அடிப்படையில் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள், பறங்கியர்கள் போன்ற இனத்தவர்களுடைய கலாச்சாரம் பற்றி கூறும் நூல்களுள்ளன. சிறியோர் முதியோர்கள் என்ற அடிப்படையில் நூல்கள் வேறுபடுத்தப்படுகின்றன.

இவ்வாறு பல வகையான நூல்கள் காணப்படினும், நாம் அவற்றை வாசிப்பத னூடாக நமது அறிவு வளர்ச்சி அடையுமே தவிர ஒரு பொழுதும் குறைவடைவதில்லை. ஒரு மனிதனானவனுக்கு கல்வி அறிவு என்பது இன்றி அமையாததாகும். இக்கல்வி அறிவைப் பெற்ற ஒருவனால் மட்டுமே தனது வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளிற்கு சிறப்பாக முகங்கொடுத்து தனது வாழ்க்கையை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லமுடியும். இக்கல்வி அறிவைப் பெறுவதற்காக முதலில் எழுத்துக்கள் கற்பிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இவ் எழுத்துக்களைத் தொகுத்து சொற்கள், பின் சொற்களைத் தொகுத்து வாக்கியங்கள் இவ்வாறு ஒரு மனிதனானவனுக்கு எழுத்துக்களை உச்சரித்து எழுதி வாக்கியமாக்கி வாசிக்க கற்பிக்கப்படும்.

நாம் அறிவைப் பெற வேண்டுமாயின் நூல்களை வாசிக்க வேண்டும். மனிதனான வன் வாசிப்பதனூடாக தனக்கு வேண்டிய கல்வி அறிவினைப் பெற்றுக்கொள்கின்றான். "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற கூற்றானது விளக்கி நிற்பது யாதெனில் ஒரு மனிதனானவன் கற்கவேண்டியது உலகம் போன்ற அளவு அதாவது இந்த உலகமானது எவ்வாறு பரந்துபட்டதாகக் காணப்படுகின்றதோ அதே போன்றது கல்வி இப் பரந்த கல்வியில் நாம் இதுவரை கற்றது ஒரு கைமண்ணளவு அதாவது மிகவும் சிறிய அளவு.

ஒரு மனிதனானவன் ஒரு நூலை வாசித்துஅதிலுள்ள விடயங்களை அறிந்தால் மட்டும் போதாது அக்கற்ற கல்விப்படி ஒழுகவேண்டும். அப்பொழுதுதான் மனிதன் தான் கற்ற கல்வியின் பெறுபேற்றை முழுமையாக அடைகின்றான். இதனை வள்ளுவப் பெருமான் தனது திருக்குறளில் கூறுகையில் "கற்கக் கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்றார். ஒருவன் கல்வியினை நன்கு கற்றால்மட்டும் போதாது கற்ற நெறிப்படி ஒழுகவேண்டும் என்பதே அதன் பொருளாகும்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பல்வேறுபட்ட தொழில்நுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி போன்றன மிகவும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இன்றைய மாணவர்களும் அறிவுக்கு விருந்தாக அமையும். நல்ல நூல்களை வாசிப்பதைவிடுத்து தொலைக்காட்சி பர்ரத்தல், தொலைபேசியில் நீண்டநேரம் உரையாடல் தொலைபேசியிலுள்ள விளையாட் டுக்களை விளையாடுதல் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர். அது மட்டுமன்றி கணினியில் பலதேவையற்ற விடயங்களைப் பார்க்கின்றனர். அச்சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டது. மனிதனுடைய வேலைகளை இலகுவாக்கவே ஆகும். இச்சாதனங்களை நாம் பயன்படுத்தத்தான் வேண்டும். ஆனால் எதுவும் அளவுடன் இருத்தல் வேண்டும்.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற கூற்று நமக்கு இதனை உணர்த்துகின்றது. நல்ல நூல்கள் நல்ல ஆசான்களுக்குச் சமனாகும். ஆசான்கள் நமக்கு நல்ல கல்வியை போதிக்கின்றனர். நாம் நூல்களை வாசிப்பதனூடாக நல்ல கல்வியைப் பெற்றுக்கொள்கின்றோம். இவ்வாறு நூல்களை வாசிப்பதனூடாக உயர்ந்த மகானாக ஒருவரை நாம் பார்ப்போமாயின் அவர் ஆபிரகாம் லிங்கனே ஆவார். இவரது சிறுவயதில் இவர் மிகப்பெரிய சவால்களை எதிர் கொள்ள வேண்டி இருந்தது. வறுமையே மிகவும் மோசமான சவாலாக இருந்தது. இருப்பினும் இவர் பத்திரிகை விற்று அதில் வரும் பணத்தில் தனது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றினார். அது மட்டுமன்றி தனது அலுவலக நண்பர்களிடமிருந்து நூல்களைப் பெற்று தனது அறிவை வளர்த்துக் கொண்டார். அதுமட்டுமன்றி எதிர்காலத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாகி நாட்டை நல்லமுறையில் ஆட்சி புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இந்தவெற்றிக்குப் பின்னுள்ள முக்கியகாரணமாக புத்தகங்களை வாசிக்கும் பழக்கமே அமைந்துள்ளது. ஒரு மனிதன் புதிய புதிய நூல்களை தினந்தினம் வாசிப்பானாயின் அவன் அனுதினமும் தனது அறிவை வளர்த்துச் செல்கின்றான். என்பதே இதன் பொருளாகும். ஒருமனிதன் வாசிப்பதனூடாக தனது வாழ்க்கைக்குத் தேவையான பூரண அறிவைப் பெற்றுக்கொள்கின்றான். "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" எனும் முதுமொழியானது புலப்படுத்துவது யாதெனில், ஒரு மனிதனானவன் இறக்கும் வரையும் நூல்களை வாசித்துத் தமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற பழமொழிக்கு இணங்க மனிதனானவனின் அருமையான இளமைப்பருவத்தில் உள்ள மாணவர்களாகிய நீங்கள் நல்ல நூல்களை வாசித்து உமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதனால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான். எனவே, நாம் நல்ல நூல்களை வாசித்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**திருமதி. மீரா.சிவசுதன்**
ஆசிரிய நூலகம்
யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிறுகதை)

# தாயுள்ளம்

காலைப்பொழுதில் அம்மாவின் கதறல், அயலவர்களின் ஆரவாரம், தொலைபேசி அழைப்பினால் அவதிப்பட்டு ஓடிச் சென்றதால் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது. ஒரு கணம் எனது உடலும், உள்ளமும் நடுங்கியது. அப்பாவின் அமைதியான நிலை என்னை உலுக்கியது. அம்மாவின் அலறல் சத்தம் என்னை கதற வைத்தது. அணைத்தேன் தாயை, மடி மீது விழுந்து அழுதாள் என் அன்னை.தாயின் கண்ணீரை துடைத்தேன். விம்பி அழும் தாயின் உள்ளத்தின் வேதனையை யார் தேற்றுவது.

அந்தோ! 54 வருடங்கள் கூடி வாழ்ந்த ஜோடிப் பறவைகள் அவர்கள். "ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" இத்தாயின் கடின உள்ளத்தாலும், கடின உழைப்பாலும் தனது பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு உழைத்தாள். இவரது கணவரின் பற்றாக் குறையான உழைப்பு, தம் பிள்ளைகளின் பசியைக் கூட தீர்க்க முடியாத நிலையில் இருந்ததால், எமது பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்த முயற்சித்த போது தாயானவர் தன் பசி மறந்து, தூக்கம் கலைந்து, இரவு பகல் பாராது, வீட்டிலே சுயதொழில் முயற்சியில் ஈடு பட்டு பொறுப்புக்களை சுமந்து சுமை தாங்கியானார். தாயுள்ளம் போற்றப்படக் கூடியது.

பழைய புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பது போல தாயின் நிலையை எண்ணிப் பார்த்து வியந்தேன். கால ஓட்டங்களின் விரைவை எண்ணித் திகைத்தேன். பட்டாம்பூச்சியாகத் திரிந்த இந்த ஏழைத் தாய். ஒரு குடிகாரன் மகள். பருவ வயதில் திருமணப் பந்தத்தில் இணைக்கப்பட்டாள். கட்டிளமைப் பருவ வயது கடந்து செல்லாத பதினைந்து வயதில் கட்டி வைக்கப்பட்டாள். பதினாறாவாது வயதில் தாயானார். பச்சிளம் பாலகிக்கு பச்சிளம் குழந்தை ஒன்று கிடைத்தது. பாலூட்டத் தெரியாத நிலை, தாலாட்டுபாட முடியாது, உணவு சமைக்கத் தெரியாது, உணவு பரிமாறத் தெரியாது இந்த உண்மைகள் அனைத்தும் மறைக்கப்பட்டது. நல்லதொரு கணவனின் வீட்டில் அகப்பட்ட பெண் என்பதால், நல்லதொரு மனைவியாக, நல்லதொரு தாயாக மாறினார். தாய்மை என்பது கிடைத்தற்கரிய பேறு. தாயுள்ளத்திற்கு நிகரானது எதுவுமில்லை.

தனது முப்பைத்தைந்து வயதிற்குள் இரண்டு ஆண்பிள்ளைகளையும், ஐந்து பெண் குழந்தைகளையும் பெற்று முதுமை அடைந்தாள். தனது விடாமுயற்சியினால் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டு ஒருவரின் உதவியும் இல்லாமல், உயர்கல்வி வரை கற்பித்தார். தனது தாலியைக் கூட அடகு வைத்தும், காணியை விற்றும் நல்ல நிலைக்கு எம்மை உருவாக்கினார். இப்படிப்பட்ட தாயின் உள்ளம் பாராட்டப்படக் கூடியது. பஞ்சம் வந்த போது தாம் பட்டினி கிடந்து எம்பசி போக்கினார். தமது இளமைப் பருவத்து ஆசையெல்லாம் அடக்கி எம்மை ஆளாக்கினார். ஆனால், நெற்றி நிறையப் பொட்டும், வாய் நிறைய புன்னகையுமாய் வலம் வருவார். எமது தந்தையின் அன்பினால் கட்டுண்டு வாழ்ந்தார். இன்று அத்தாயுள்ளம் கதறுகிறது. ஏங்கித் தவிக்கிறது, எதற்காக எனப் புரியவில்லை. கணவனை இழந்த சோகமோ, அல்லது கடைசிப் பிள்ளையைப் பிரிந்த துயரோ யார் அறிவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சம்பவம் ஒன்று நினைவில் நிழலாடுகிறது. தனது கணவனின் கடினமான பேச்சைக் கூட இத்தயாரால் தாங்க முடியாது என்பதை சிறு செயல் ஒன்று நினைவுபடுத்துகிறது. தான் செய்த பிழையை உணர்த்த தனது கணவன் கடிந்து பேசியதை கேட்டு மனம் உடைந்தவர், தனது உயிரை மாய்க்கத் துணிந்தார். 33 வயதில் முன்பின் அறியாத பருவம், மண்ணெண்ணெயை தன் மேல் ஊற்றி பற்ற வைத்துக் கொண்டார். எதேட்சையாக கண்விழித்த கணவன் நடந்த விபரீதத்தை உணர்ந்து பதறிய நிலை இன்னும் கண்முன்னே....... பச்சிளம் பாலகர்களை விட்டு விட்டு செல்ல நினைத்த அந்த தாய் பின்னர் கதறி அழுத கோலம், கணவனை கட்டி அணைத்து நின்ற நிலை அந்தக் காட்சிகள் அந்தத் தாயின் உள்ளத்தின் மென்மையை உணர்த்தியது,

அன்று தந்தை கதறிய கதறல், அம்மா! அம்மா!! நான் என்ன பிழை செய்தேன். உன்னைக் கண்டிக்க தண்டிக்க எனக்கு உரிமையில்லையா? தாயே என்னையும், உன் மழலைகளையும் விட்டு எப்படி அம்மா உயிரை மாய்க்கத் துணிந்தாய். சிறுவயதில் என் தாயை இழந்தேன். உன்னில் தானே தாயின் உள்ளத்தை அறிந்து கொண்டேன். அப்படிப்பட்ட நீயா? இப்படிச் செய்தாய். அன்றில் இருந்து அமைதியாகப் போன தந்தையைத் தான் கண்டேன்.

அன்று தந்தையார் சொன்ன சொல்லை, வேதவாக்காக கைக்கொண்டு 54 வருடங்கள் இணைபிரியாத ஜோடிப் பறவைகளாக வாழ்ந்த நிலை. அதை நினைத்தே இத் தாயுள்ளம் இன்று பதறுகிறது. தாய்படும் வேதனை. இன்னுமொரு தாயுள்ளம் அறியுமே? எத்தனை துன்பங்கள் வந்த போதும் துவண்டு விடாத தாய், பஞ்சம் பசி வந்த போது பதறாத தாய். யுத்தம், இடப்பெயர்வு வந்தபோது கலங்காத தாய். வீடின்றி அலைந்த போது தடுமாறாத தாய், ஐந்து பெண்களைப் பெற்ற போது அச்சம் அடையாத தாய், இளைய மகள் கடைக்குட்டியின் இழப்பின் போது கலங்கிய தாய் இன்று....

பத்து வருடங்கள் பின்னோக்கிச் செல்லுகிறது சிந்தனையோட்டம். கடைசிப் பிள்ளை, கடைக்குட்டி என்று செல்லம், விதியின் கோரத்தாண்டவம் அவள் வீட்டில் தனது தாண்டவத்தை தொடங்கியது. காதல் கண்ணை மறைக்க, அனைவரையும் மறந்து காதலனை கைப்பிடித்து, திருமணப்பந்தத்தில் இணைந்து இரண்டு மழலைகளைப் பெற்றெடுத்து, தாயின் கையில் கொடுத்து விட்டு வாழ்ந்தது போதுமென்று வாழ்வைத் தொலைத்து மறைந்து விட்டாள். இத் தாயுள்ளம் என்ன செய்யும் யாரிடம் போவது யாரைப் பழி சொல்வது, சொல்ல முடியாத துயரம் அன்று அந்தக் கோரக்காட்சி....... ஐயகோ! எவருக்கும் இந்த நிலை வரக்கூடாது. மண்ணெண்ணைக் குக்கர் வெடித்து மரணப்படுக்கையில் கடைக்குட்டி வந்த சேதியால் ஓடினோம், ஓடினோம் கால் போன போக்கில் ஓடினோம். தேடினோம், தேடினோம் முனகல் சத்தம் திடுக்கிட்டோம், திகைத்தோம். உருண்டு திரண்ட கரியவிழிகள் எங்கே, அலையெனத் திரண்ட கூந்தல் எங்கே, புன்னகை சிந்தும் அழகிய இதழ்எங்கே, அழகிய வதனம் எங்கே, கோலம் கண்டோம். அலங்கோலம் கண்டோம். நாம் அலங்கோலம் கண்டோம். அம்மா! அம்மா!! அந்த தாயுள்ளம் இதனை ஏற்குமா? இதனை தாங்குமா? சொல்லக் கூடாது என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவெடுத்தோம். கட்டி அணைத்து கதற முடியவில்லை எப்படி அவளை காப்பாற்றுவேன். தாயை எப்படி தேற்றுவேன் இருண்ட 21 இரவுகள் அவை தங்கையின் இறுதி யாத்திரையில் முடிந்தது. காற்றோடு கலந்த அந்த நினைவுகள், யாரோ கூப்பிடுவது போன்ற உணர்வில் திரும்பினேன்.

அம்மாவின் இருமல் சத்தம், தனது மகளின் இழப்பை மறந்து தன் மனதை கல்லாக்கிய அத்தாயுள்ளத்திற்கு நிகர் எவருமில்லை. இடிந்து போகாமல் நிமிர்ந்து நின்றார். அடுத்த கட்ட வாழ்க்கைக்கு தன்னை தயார்ப்படுத்தினார். தனது பேரக்குழந்தைகளின் கொஞ்சல்களிலும், மழலைச் சிரிப்பினைச் பார்த்தும் மனதைத் தேற்றிக் கொண்டார். ஆனாலும், ஆழப்புதைத்து வைத்திருக்கும் சோகத்தை மறைந்திருந்து கொட்டித் தீர்ப்பாள். அழுது கொட்டித் தீர்ப்பதை ஒருமுறை கண்டபோது உடல் சிலிர்த்தது, உள்ளம் குமுறியது. எத்தனை சோகங்கள், வேதனைகளை தாய் புதைத்து வைத்திருக்கிறாள் என்பது புலனாகியது.

தாயுள்ளமதை நோகவிடாது காப்பதே எமது கடமை. அதை சரிவர செய்ய வேண்டும். தந்தை இறந்த பின்பு தாயுள்ளத்தின் வேதனையை புரிந்து பிள்ளைகள் அதனை ஈடு செய்ய வேண்டும். தாய்மைக்கே எடுத்துக் காட்டாக திகழ்ந்த இந்த ஏழைத்தாய் ஏன் ஏங்குகிறாள். தான் தனித்து விடப்பட்டதை உணர்ந்து தானோ என்னவோ கலங்கித் தவிக்கிறாள். இப்படிப்பட்ட எத்தனை எத்தனை தாயுள்ளங்கள் தவிக்கின்றது,

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" தாயுள்ளத்தை போல் ஒரு உள்ளம் இல்லை. பாரபட்சம் பாராது, பாகுபாடு காட்டாது, தன் அன்பை அள்ளிக் கொட்டுகிறாள். ஆனால், பிள்ளைகளோ தாயின் தூய்மையான உள்ளத்தை, மென்மையான உள்ளத்தை புரிந்து கொள்வதில்லை. மாறாக அவரின் உள்ளத்தை நோகடிக்கிறார்கள். தனிமையில் தவிக்க விடுகிறார்கள். முதியோர் இல்லங்களில் சேர்க்கிறார்கள்., வெறுப்பைக் காட்டி முகம் சலிக்கிறார்கள். தாயானவள் சும்மா வெட்டியாக காலத்தை கழிக்கிறார் என்று வீட்டு வேலைகளை தலையில் சுமத்துகின்றார்கள். பத்து மாதங்கள் கருப்பையில் சுமந்து, பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்த்து, தன் பசி பாராமல், எம்பசி தீர்த்து சமூகத்தில் நற்பிரஜையாக வாழ வைத்த தாயுள்ளமே பூஜிக்கப்பட வேண்டியது என்பதை ஒவ்வொரு குடிமகனும் உணர வேண்டும்.அம்மா சும்மாவா இருந்தாள். சுமைதாங்கியாகத்தானே இருந்தாள். கருவில் வயிற்றில் சுமந்தாள், மார்பில் சுமந்தாள், மடியில் சுமந்தாள், தோளில் சுமந்தாள், முதுகில் சுமந்தாள். இப்படிப்பட்ட சுமைதாங்கி ஏன் கலங்குகிறாள், ஏன் உள்ளம் உருகி அழுகிறாள். தாயுள்ளத்தை நோகடித்தவர் யாரோ? ஆண் பிள்ளைகளின் அரவணைப்பு கிடைக்கவில்லை என்றோ? அல்லது பெண் பிள்ளைகளில் தங்கி வாழும் நிலை தனக்கு ஏற்பட்டு விட்டதே என்ற ஏக்கமோ? இத்தாயின் உள்ளம் புரியாத புதிராக உள்ளது.

பிள்ள! பிள்ள!! திடுக்கிட்டு எழும்பினேன். எனது தாய் எனது தலையை தடவுகிறாள். இன்னும் கொஞ்சம் படு பிள்ளை ஒரே வேலை தானே களைச்சுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிட்டாய் போல இருக்கிறது. நான் கடையைப் பார்க்கிறன். வயது போன நேரத்திலும் பிள்ளையை கஷ்டப்படுத்தக்கூடாது, பிள்ளை கஷ்டப்படக்கூடாது என்று நினைக்கும் எண்ணம் தாயின் உள்ளத்திற்கு மட்டும் தான் ஏற்படும். தாயின் உள்ளம் புனிதமானது, தெய்வீகமானது, தாயை வணங்கினாலே சித்தி கிடைக்கும். "உள்ளம் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்பது போல தாயின் உள்ளத்தில் இடம் பிடித்தால், அதுவே உயர்வைத் தரும், நல்ல வாழ்வைத் தரும் அமைதியைத் தரும் தாயின் உள்ளக் பூஜிக்கப்பட வேண்டியது. அப்படிப்பட்ட எனது தாயை நோய் வந்து சூழ்ந்தது. வைத்தியர்கள் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டுள்ளது என்றார்கள். அதற்கான வைத்திய செலவை ஈடுசெய்ய எம்மால் முடிந்தவரை சிகிச்சையை ஆரம்பித்தோம். நல்ல முன்னேற்றத்தைக்கண்டோம்.

அக்கா! அக்கா!! அதிர்ந்தேன், எனது தங்கையின் அவலக்குரல் அம்மாவின் உடல் நிலை பாதிப்பு. உணர்வு அற்ற நிலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் எனது தாயின் நிலை கண்டு பதறினேன். தாயுள்ளம் என்ன நினைத்ததோ எம்மை ஒரு தடவை மட்டும் பார்த்தது. என்ன சொல்ல நினைத்ததோ தெரியாது. மீளா உறக்கத்தில் ஆழ்ந்த நிலை, உடல் அசைவற்ற நிலை, கண்மணிகள் மட்டும் உள்ளே ஓடிக்கொண்டிருந்தது. மூச்சு மட்டும் இருந்தது. 5 நாட்கள் இரவு பகல் தாய்க்கு அருகில் நாம் தாயுள்ளம் எமை அறியாது. நாம் படும் வேதனையை உணராதா? ஏக்கப் பெருமூச்சு இடைக்கிடை தாயிடம் இருந்து .......

வேண்டாத தெய்வம் இல்லை. தாயின் அமைதி, தாய் உள்ளத்தின் மென்மை, எம்மை துக்கத்தில் நீண்ட நாட்கள் இருக்கவிடாமலும் தமக்காக ஒருவரும் கஷ்டப்படக்கூடாது என்ற நல்ல எண்ணத்திலும் எம்மை விட்டு ஒரு நொடியில் பிரிந்து சென்றது. தாய்க்கு ஈடு இல்லை. தாயுள்ளத்தைப் போன்று உலகில் வேறு உள்ளம் இல்லை. தற்போது பசுவை இழந்த கன்றைப் போல, தாயின் உள்ளத்தின் எண்ணங்களை மீட்டுப் பார்த்த வண்ணம் எமது எண்ண அலைகள் ஓடிக்கொண்டு இருக்கிறது. எமது தாய் வருவாளா? தாய் உள்ளத்தில் நாம் இடம் பிடிப்போமா? காத்திருக்கும் பிள்ளைமனம்.

**திருமதி.க.சசிக்குமார்**
முன்னைநாள் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நிறைவில் மகிழ்கின்ற கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியை நோக்கிய என் மனப்பதிவிலிருந்து சில வரிகள்...

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டிலிருந்து இப்பள்ளியின் எனது நினைவுகளிலிருந்து சில எண்ண அலைகள் பசுமை நிறைவுடன் பள்ளியில் சிறார்களின் வளர்ச்சிக்கு சேவை செய்ய வந்த வேளை அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவமணிகள் அன்புடன் வரவேற்ற நாட்கள் எனது மனதில் பதிந்தது. என்னும் எனது முல்லை மண்ணை விட்டு வந்தேன் என்ற ஏக்கம்... என்றாலும் வந்த மண்ணில் பற்றுறுதி கொண்டு பெற்ற கடமையைப் பேணி நல் மாணவச் சிறார்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உளமறிந்து நிலையறிந்து அக்குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சியினைப் பணி என்று நினைக்காது பெற்ற கடமையைப் பேணிச் சேவை என்று மனதில் நிலை நிறுத்தி இறுதிவரை செயலாற்ற முடிந்தது என எனது எண்ணத்தில் நினைவில கொள்ள முடிந்தது.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என்ற வளப்பயன்பாட்டுடன் "சமூகத்தின் கண்களுக்காகப் பாடசாலையின் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளது" என்ற நோக்கத்துடன் முன்னோக்கி நகர்ந்து வரும் வேளையில் இரண்டாயிரத்து எட்டிலே ஏற்பட்ட "பூவுக்குள் பூகம்பம்" என்ற வரி பொருந்தும். எல்லாமே நொருங்குண்ட வேளையிலும் "விழ விழ எழுவோம்" என்ற வாசக வரிகளுடன் விழுந்து விழுந்து ஆங்காங்கே கனகபுரம் பள்ளியினை தற்காலிகமாக அமைக்க முடிந்தது. என்றாலும் விதி வரைந்த வழி சென்று முகாம்களில் கனகபுரம் என்ற நாமம் மாறி முகாம் பாடசாலை வலயம் என்ற பெயருடன் எனது பணி தொடர்ந்தது.

மீளவும் கனகபுரம் ம.வி புத்துணர்ச்சி பெற்று **04.01.2010** அன்று கிளிநொச்சி மண்ணில் தடம் பதித்து கட்டிட வளர்ச்சி மட்டுமல்ல கல்வி வளர்ச்சியும் அபிவிருத்தி அடைந்த வேளையிலும் ஏனோ.... சமூகத்தின் கண்ணோட்டம் இப் பள்ளியில் இல்லை என்றே உணர முடிந்தது ஏன்? என்ற ஆதங்கம் மனதில் எழுந்தாலும், எமது பணியினை மாணவர்களுக்கு ஊட்டின பண்புகளை வளர்த்து விட்ட பெருமையினை எம்மால் உணர முடிவதில்லை அவ்வாறான ஆளுமை விருத்தி அடைந்த மாணவர்கள் தங்கள் நிலையிலே உயர்ந்ததைக் கூறுவதன் மூலம் உணர முடிகிறது.

பள்ளியின் கல்வி அபிவிருத்தி அடைந்த மாணவர்கள் முழு மூச்சுடன் முயற்சி செய்து இருப்பினும் மாணவனின் மனதில் மாற்றம் ஏற்பட்டால் வாழ்க்கையில் வெற்றி. மாற்றம் ஏற்படாவிட்டால் வாழ்கையில் அது தோல்வி இவை ஒட்டு மொத்த ஆசிரியர்களின் ஆதங்கம்... இவ் ஐம்பதாவது அகவை நிறைவில் காலடி எடுத்து வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மகளான கல்லூரி அன்னையானவள் இதுவரை காலமும் மாணவச் செல்வங்களை மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, பட்டதாரிகளாக, கல்விமான்களாய் ஆசிரியர் களாய் உயர் நிர்வாக அதிகாரிகளாய் தலைசிறந்த குடும்ப தலைவர்களாக வளர்த்து விட்ட பெருமையுடன் வீற்றிருக்கின்றாள் நம் கல்லூரி அன்னை.

பசுமை நினைவுடன் பொன்மகளாக
பரிணமிக்கும் எமது வித்தியாலயம்
வெள்ளிவிழா கண்ட வெளிச்சத்திலும்
பொன்மகளாக வந்த பெருமையிலும்
பவளவிழா நோக்கிய பயணத்திலும்
நூறாண்டு காலம் பல படிக்கற்களைத்
தாண்டி விண்ணுயர புவியன்னையில்
வீற்றிருக்க வாயார வாழ்த்துக்கள்
வளமாக விளம்பி நிற்கும்.....

**திருமதி. வி.ஜெ.மேரியோசப் அருள்**
ஓய்வுநிலை ஆசிரியர் தரம் - 1
பொதுக்கலைமாணிப் பட்டதாரி டிப்ளோமா
பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறந்து சென்ற பட்டாம் பூச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பள்ளிக்கால நினைவுகள்....

திருநகர் கிருஸ்ணர் கோயிலுக்கு அருகில் எமது வீடு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை ஊழியனான கனகசபை என்பவரின் பிள்ளைகளான கணேசநாதன் கணேசகுமாரி கணேசகுமாரன் எங்களை கனகபுரம் கனிஷ்ட வித்தியாலயம் என்று சிறிய பாடசாலை சுவரில் எழுதப்பட்டிருந்த ஐந்து வகுப்புக்களை மட்டுமே கொண்டிருந்த சிறிய பாடசாலைக்கு எமதுதாயாரால் அழைத்துச் செல்லப்பட்டோம். பாடசாலையின் வடக்கு திசைக்கப்பால் அமைந்துள்ள வேலிக்கு அப்பாலும் மேற்கு திசை வேலிக்கப்பாலும் பெரும்காடாக இருந்ததுடன் பெருங்காடுகளில் காட்டுவண்டுகளின் சத்தம் இருப்பது போன்று இங்கும் சத்தம் இருந்ததால் எமக்கு அச்சம் ஊட்டுவதாக இருந்தது இருந்தாலும் பாடசாலை வாசலில் வெள்ளை வேட்டி சால்வை நைசனல் என்று அழைக்கப்படும் உடையணிந்து பொது நிறம் மூன்று வரிகளில் விபூதியும் மத்தியில் சந்தனம் அதன் மத்தியில் குங்குமப்பொட்டும் மலர்ந்த முகத்துடன் திரு. சி.பொன்னையா ஆசிரியர் வரவேற்றார். அவரே ஒன்றிலிருந்து ஐந்துவரைக்குமான ஆசிரியராக இருந்தார்.

அப்பாடசாலையில் நாங்கள் **12,13,14** ஆம் மாணவர்களாக இணைந்தோம். முதல் மாணவனாக பாடசாலைக்கு எதிராக குடியிருந்த யோகன் அண்ணாவின் மகன் சுபேந்திரனும் அதன்பின்னராக செல்லத்துரை ஐயாவின் பிள்ளைகளான சறோஜினிதேவி, பிரபாகரன், கிருபாகரன் ஆகியோரும் சீவரத்தினம் ஐயாவின் பிள்ளைகளான கலைதேவி, கலைச்செல்வன், கலைஜீவன், கலைறதி மற்றும் குமாரசாமி ஐயாவின் பிள்ளைகளான இராஜகுமார் மற்றும் சகோதரர்கள் கனகநாயகம் ஐயாவின் பிள்ளைகள் என்று முதல் வாரத்தில் **30 -40** வரையான பிள்ளைகளுடன் ஆரம்பமான பாடசாலை இன்று இமாலய வளர்ச்சி அடைந்து பெருமை சேர்க்கின்றது.

ஒரு சில வாரத்தில் இரண்டாவது ஆசிரியராக பணிசெய்ய வந்தவர் திருமதி அமிழ்தரட்ணம் யோசைப் அல்லது மேரி ரீச்சர் அவருடன் அவர்மகள் பியன்சியா சறோஜினிதேவி மற்றும் மேரிரீச்சரின் அண்ணர் மகள் சுசிலாவும் இணைந்து கொண்டனர். மூன்றாவது ஆசிரியராக செல்வி. தங்கம்மா ரீச்சர் இணைந்து கொண்டார். இவர் ஆசிரியர்களுக்கான மூன்றாவது தங்குவிடுதியில் குடியேறி குடிபூரல் நிகழ்வும் பாடசாலை அனைத்து மாணவர்களுக்கும் உணவும் சமைத்து வழங்கினார்.

நான்காவது ஆசிரியராக பணிக்கு வந்தவர் திருமதி.சீவரத்தினம் நாகம்மா ரீச்சர் திரு.சீவரத்தினம் அவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பொலீஸ் உத்தியோகத்தராக கடமைபுரிந்தார். நாகம்மா ரீச்சரின் சகோதரன் நாகேஸ்வரனும் இப்பாடசாலையில் கல்விகற்றார். நாகம்மா ரீச்சர் கடமைக்கு வந்ததும் தான்குடியிருந்த பெரிய அளவிலான விடுதியை அவருக்கு கொடுத்துவிட்டு பாடசாலை கட்டிடத்தோடு இணைந்த ஒரு குடிலை அமைத்து வாழ்ந்தவர்தான் எமது தலைமை ஆசிரியர் பொன்னையா மேலும் அவரின் மகன் சிதம்பரநாதனும் ஆரம்ப காலத்தில் என்னோடு கல்விகற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது ஆசிரியர் வருவதற்கு முன்னர் திரு. பொன்னையா ஆசிரியர் மற்றும் செல்வி தங்கம்மா ரீச்சருடன் மாலை நேரங்களில் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள வீடுகள் அனைத்துக்கும் சென்று அவர்களது பிள்ளைகளை எங்கள் பாடசாலையில் சேர்த்துக்கொள்ள வேண்டிக்கொள்வதற்காக என்னையும் இணைத்துக்கொள்வார்கள். மேலும் எனது வகுப்பு ஐந்திலிருந்து ஒவ்வொன்றாக கூடும்போது எனது வகுப்புதான் உயர்ந்ததாக இருக்கும். எனவே, ஏனைய மாணவர்களுக்கு தண்ணீர் மற்றும் பிஸ்கற் வழங்குவது, அனைத்து வகுப்புக்குமான மாணவர் வரவுப்பதிவேடு ஆசிரியர்களுக்கான பதிவேடு (சம்பவத்திரட்டு) வைப்பது மட்டுமல்ல எனது மேசையில்தான் மணி இருக்கும் (பாடசாலை தொடக்கம் முடிவு பாடமாற்றத்திற்கான மணி) அந்த அளவிற்கு ஆறு ஆண்டுகளுக்கு மேல் உத்தியோகப்பற்றற்ற மாணவ முதல்வனாக இருந்தேன். கனகபுரம் கனிஷ்ட வித்தியாலயம் ஓராண்டு நிறைவுவிழா கொண்டாடியது. அதன்போது மாணவர்களால் கலை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

1. கிராமிய நடனம், தலைமை ஆசிரியர் திரு. பொன்னையாவின் ஆளுமையில் (பாடல் ஒப்பனை பங்குபற்றிய மாணவர் தெரிவு) நான் பங்குபற்றயிருந்தேன்.
2. மீனவர் நடனம் செல்வி தங்கம்மா ரீச்சரின் ஆழமையில் பெண்ணாக எனது சகோதரி கணேசகுமாரன் ஆணாக திருமதி தங்கராஜாவின் மகள் குமுதினி (அரசினர் வைத்தியசாலை பெண்தாதி)
3. குறத்திநடனம் திருமதி மேரி ரீச்சர் ஆளுமையில் சூசைதாசன் ஐயாவின் மகள் ஜோதினி மற்றும் சீவரத்தினம் ஐயாவின் மகள் கலைதேவி. இந்த நிகழ்வின் பின்னர் பெற்றார் தினவிழா நடைபெற்றது. இதில் வடமாகாணத்திற்கான நாடகப்போட்டியில் முதலிடத்தைப்பிடித்த 'கடமையின் காவலன்' என்னும் இராவணன் கதையைகொண்ட நாடகம் திரு. வீரசிங்கம் திரு,சத்தியமூர்த்தி திரு. திருச்செல்வம் திரு.பாவை ஜெயபாலன் (லண்டன் சண்றைஸ் றேடியோப்புகழ்) என்ற பிரபல கலைஞர்கள் பங்குகொண்டிருந்தனர். பாடசாலை மாணவர்கள் பங்குகொண்ட 'சிலம்பின் செல்வி' நாடகம் அனைத்து ஆசிரியர்களின் ஆளுமையில் மேடையேற்றப்பட்டது. கண்ணகி யாக மேரி ரீச்சரின் மகள் பியன்சியா (தற்போது மட்டக்களப்பு அரச அதிபர்) கோவலனாக என்னை முதலில் பயிற்றப்பட்டாலும் பின்னர் எனது தயக்கத்தால் சீவரத்தினம் ஐயாவின் மகள் கலைதேவி பங்குகொண்டார். பாண்டிய மன்னனாக திரு. பொன்னையா மாஸ்ரரின் மகன் சிதம்பரநாதன் பாண்டியதேவியாக சூசைதாசன் ஐயாவின் மகள் ஜோதினி அரச காவலர்களாக நானும் வீரசிங்கம் ஐயாவின் மகன் விஜயகாந்தனும் நடித்திருந்தோம். இதைத்தொடர்ந்து பாடசாலைக்கான இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. 1. கம்பன் 2. வள்ளுவன் 3. பாரதி என்று நடைபெற்று வெற்றியை இதன் அடிப்படையில் ஈட்டியிருந்தது.

ஐந்தாவது ஆசிரியராக திரு,தோமஸ் மாஸ்டர் தொடர்ந்து பண்டிதர் திரு.கனகசபாபதி திரு.தோமஸ் மாஸ்டர், திருமதி. அலோசியஸ் எழுத்துப்பிழைகளையும், வசன அமைப்பையும் கவனிக்கவும் வேலைக்குழு காரணத்தால் இன்றும் தகவல்களை சேர்க்க முடியவில்லை வருந்துகின்றேன்.

**க.கணேசநாதன்**
உண்மையுடன் பழைய மாணவன்
பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா நினைவுகள்

தமிழர்கள் வாழ்வில் நானிலங்கள் பிரிக்க முடியாதவை அதிலும் கிளிநொச்சி மாநகரம் மூன்று நிலங்களையும் கொண்டிருக்கின்றது.

மிகவும் கடினமான காலங்களில் முல்லை நிலமாகக் காணப்பட்ட கிளிநொச்சியில் படித்த வாலிபர்களுக்கு முதன் முதலாக ஐந்து ஏக்கர் தோட்டக்காணியும், ஒரு ஏக்கர் வயல் காணியும் வழங்கி அவர்களை விவசாயத்தில் ஈடுபடவைத்தனர். இங்கே இவர்கள் விவசாயத்தோடு கோழிகளும் பண்ணைகளாக வளர்த்தபடியால் இக்கிராமத்திற்கு கோழிப்பண்ணை என்ற பெயரும் உண்டு. கனகபுரம் கிராமத்தில் நூற்றிக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்தார்கள். எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு வருடைய இன்பத்திலும் துன்பத்திலும் எல்லோரும் ஒன்றிணைவார்கள். இங்குள்ள மூத்தவர்களை இளையவர்கள் மாமா, மாமி என்று அன்போடு அழைப்பது வழக்கம். இதுதான் இக்கிராமத்தின் குட்டிக் கதை.

**1969**ஆம் ஆண்டு கனகபுரம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, கனகபுரம், திருநகர், ஜெயந்திநகர் ஆகிய கிராமங்களில் இருந்து மாணவர்கள் இப்பாடசாலையில் இணைந்து கல்விகற்றார்கள் பிற்காலத்தில் உதயநகர், அம்பாள்குளம் பகுதியில் இருந்தும் இணைந்து படித்ததாக அறிகின்றோம். வந்தாரை வாழவைக்கும் கிளிநொச்சி நகரத்தில் மக்கள் அன்போடு வாழ்ந்த காலம் அது.

எமது பாடசாலையின் முதல் அதிபர் மதிப்பிற்குரிய பொன்னையா வாத்தியார் இவர் பாடசாலையைப் பொறுப்பேற்ற காலம் மிகவும் கடினமான காலம் ஒரு கட்டடத்துடன் தான் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதில் எல்லா மாணவர்களையும் வைத்திருந்து படிப்பிக்கவேண்டும். இவ்வளவு சிரமத்தின் மத்தியில் எங்களுக்கு கல்வியறிவை தந்தார்கள். இவரது முயற்சியின் பயன் பிற்காலத்தில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. பொன்னையா வாத்தியார் மிகவும் அன்பானவர், சிரித்தமுகமுடையவர், வெள்ளை வேட்டியும், ஆசிரியர்களுக்கான மேலங்கியும் அணிவார். நெற்றியில் திருநீறு சந்தனம் குங்குமம் அணிந்திருப்பார். பிரகாசமான முகம், குள்ளமான தோற்றம் வரணி என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திங்கட் கிழமை காலை பாடசாலை வந்தால் வெள்ளிக்கிழமை பின்னேரம் தான் வீடு திரும்புவார். எமது பாடசாலையின் பழைய கட்டடத்தின் முன்பகுதி அதிபரின் அலுவலகம். அதன் பின்பகுதியில் ஒரு ஓலையால் குடிசை போட்டு அதில் சமைத்துச் சாப்பிட்டு பாடசாலையில் உறங்கி எங்கள் நல்ல காலத்திற்காக உழைத்த உத்தம மனிதர். இவர்காலத்தில் எனது தந்தையார் சீவரத்தினம், தனது வேலை முடிந்தவுடன் எமது பாடசாலைக்கு வந்து அதிபருடன் பாடசாலை முன்னேற்றத்திற்காக மணிக்கணக்காக கதைத்து ஆலோசிப்பதும் உண்டு. பொன்னையா அதிபர் காலத்தில் படித்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரைப்பற்றித்தெரியும். இக்கட்டுரையை வாசிக்கும்போது எல்லோருக்கும் ஞாபகம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பாடசாலையின் இரண்டாவது ஆசிரியை மேரி யோசெப் இவர் எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை. ஆசிரியர்களுக்கு கட்டப்பட்ட விடுதியில் வசித்தவர். பாடசாலையின் பின்பகுதியில் இருக்கும் மாதா கோயிலை ஆரம்பித்து வைத்தவரும் இவரே. இவரிற்குப் பின்பு தங்கம்மா, நாகம்மா, தோமஸ், அந்தோனிப்பிள்ளை ஆசிரியர்கள் வந்தார்கள். தமிழ், சமயம், சுகாதாரம், சமூகக்கல்வி, விளையாட்டு, விவசாயம் போன்ற பாடங்களை அன்போடு கற்றுத்தந்தார்கள். மிகவும் கண்டிப்பானவர்களாகவும் இருந்தார்கள். இரத்தினராசா ஆசிரியர் பெரிய வகுப்பு மாணவர்களுக்கு புவியியலும் எங்களுக்கு சமூகக்கல்வியும் படிப்பித்தவர். அன்பான ஆசிரியர்.

யோசெப் ஆசிரியை ஓமந்தைக்கு மாற்றமாக செல்ல, எமக்கு புதிய ஆங்கில ஆசிரியராக திரு. சிவகுமாரன் வந்தார். எவ்வளவு அன்பானவரோ, அவ்வளவு கண்டிப்பானவரும் கூட. இவரை பாடசாலையில் எல்லோருக்கும் பிடிக்கும். இவர் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஒவ்வொருநாளும் எமது பாடசாலைக்கு வந்து செல்பவர். நினைத்துப் பார்த்தால் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார் என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. எமது படிப்பிற்காக தன்னை வருத்திய ஆசான் இவரிடம் படித்த மாணவர்கள் இவரை என்றென்றும் மறக்கமுடியாது. தற்போது கனடாவில் வசிக்கின்றார். முன்பு ஒருமுறை யாழ்ப்பாணத்தில் அப்பலோ சேர்கஸ் பாடசாலை மாணவர்களை பேருந்தில் கூட்டிச் சென்ற காட்டினார்கள். அந்த நேரத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அனைவரையும் தனது இல்லத்திற்கு கூட்டிச் சென்று தேநீர் சிற்றுண்டி தந்து எங்களை வரவேற்றார். அன்பும், ஆதரவும், கண்டிப்பும், நகைச்சுவையும், சொல்லி எங்களை செதுக்கிய சிற்பி அவரே, அவருக்கு நிகர் அவரே.

எமக்கு கணித பாடத்திற்கு ஆசிரியர் இல்லாதகுறையை நீக்கியவர் திரு. ராஜேந்திரன் ஆசிரியர் இவர் எமது பாடசாலைக்கு வந்த பின்பு தான் எமது பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள். எமது பாடசாலைக்கு ஏதேனும் செய்ய விருப்பப் பட்டால் நாங்கள் இவருடனே கதைத்து நிறைய வேலைகள் செய்திருக்கின்றோம். எமது நம்பிக்கைக்கும், அன்புக்கும் உரிய ஆசிரியர் இவரே என்றால் மிகையாகாது. பண்டிதர் ஆசிரியர் இவர் மட்டுவில் என்ற இடத்தில் இருந்த வந்து, எங்கள் பாடசாலையில் தங்கி இருந்து எங்களுக்கு தமிழ்மொழி, தமிழ் இலக்கணம் போன்ற பாடங்களை ஐயந்திரிபுறக் கற்றுத்தந்த அன்பான ஆசிரியர். கண்டிப்பானவரும் கூட. பரீட்சைகளில் குறைந்த புள்ளிகளை எடுத்தால் அவருக்கு வரும் கோபம் ஏச்சுக்கள் தாங்க முடியாதவை. மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தவர். மாணவர் மன்ற கூட்டங்களில் பேச்சுத்திறன் எழுத்துத் திறன், தலைமை தாங்கும் பண்புகளை வளர்த்து விட்ட மாமனிதர் என்றே சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத ஆசிரியர் தியாகராச எங்களுக்கு ஆரோகணம், அவரோகணம் தெரியுமென்றால் அது சங்கீத ஆசிரியரையே சாரும். திரு. திருமதி தில்லைநாயகம் எங்கள் பாடசாலையில் கற்பித்தவர். தில்லைநாயகம் ஆசிரியர் நாங்கள் படித்த இறுதி நேரத்தில் அதிபராக இருந்தவர். பிற்காலத்தில் அவர் இருந்த பொறுப்புக்கள் உங்கள் எல்லோருக்கும் தெரியும் என நினைக்கின்றேன்.

சின்னத்தம்பி ஆசிரியர் எங்கள் பாடசாலையில் படிப்பித்தவர்களில் ஒருவர். திருமதி இராஜாம்பிகை வர்த்தகம் படிப்பித்தவர். ஆசிரியர் தங்கும் விடுதியில் இருந்து படிப்பித்தவர். அன்பானவர், கண்டிப்பு மிகுந்த ஆசிரியர் திருமதி சலேசியஸ் ஆசிரியையும், அன்றைய பழைய மாணவ சங்கத் தலைவர் கெங்கானந்த ஈஸ்வரனும், செயலாளர் சந்திரபாலனும் அதிபர் தில்லைநாயகம் ஆசிரியருடன் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராசநாயகமும், செயலாளர் சீவரத்தினம் எல்லோருமாகச் சேர்ந்து அதிபர் பொன்னையாவுக்கு பிரமாண்டமான பிரிவு உபசார விழா நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. சீவரத்தினம் என்பவரது பங்கு இப்பாடசாலை வளர்ச்சியில் பெரிய பங்கு வகித்திருக்கின்றது. பலமுறை பெற்றார் ஆசிரியர் சங்க செயலாளராக இருந்திருக்கிறார். திரு. கனகேந்திரம் என்பவரது உழைப்பும் இப்பாடசாலைக்கு உண்டு.

2015 ஆண்டு இங்கே பழைய மாணவர்கள் தங்கள் விருப்பத்தின் பெயரில் "பொன்னையா கணினி அகம்" என்று ஒரு அறையில் கணினிகள் வைக்கப்பட்டு மாணவர்களுக்கு கணினி அறிவை பெருக்க ஐந்து கணினி வாங்கி அன்பளிப்பு செய்ததும் குறிப்பிடத்தக்கது. இப் பொன்விழா காணும் கனகபுரம் மகாவித்தியாலயத்திற்கு பழைய மாணவர்கள் இணையத்தில் ஒரு குழு உருவாக்கி, ஆக்கபூர்வமான ஆலோசனை வழங்கியும், நேரடியாக அந்த இடத்தில் நின்று வேலைகளைச் செய்தும், பண உதவிகள் செய்தும், ஊக்குவித்தும் பாடசாலை முன்னேற்றத்திற்காக உழைப்பதுவும் மாணவ சமுதாயத்திற்கே உரித்தான உன்னத செயற்பாடே ஆகும்.

இத்தருணத்தில் பாடசாலையின் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், நிர்வாகத்தினர் பாடசாலை வளர்ச்சிக்கு உழைப்பவர்களை பாராட்டி நிற்கின்றோம். அத்துடன் கனகபுரமும் அயல் கிராமங்களிற்கும் பாடசாலைக்கும் தமிழர் மேம்பாட்டிற்கும் பெரிதும் உழைக்கும் அன்புத் தம்பி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களின் உதவிகள் மறக்கமுடியாதவை அவரை அன்போடும் மன மகிழ்வோடும் இதய பூர்வமாகப் பாராட்டுகின்றோம்.

இந்தப் பாடசாலை ஆரம்பித்த காலத்து பழைய மாணவர்கள் எல்லோரும் அன்பானவர்களே, இக்கட்டுரையின் நோக்கம் எங்கள் பாடசாலையின் வரலாறு சரியான முறையில் இருக்கவேண்டுமென்பதே இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உழைத்தவர்கள் நிறையப் பேர். அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் பொன்னையாவின் காலம் இப்பாடசாலையின் பொற்காலம் என்று வர்ணிக்கலாம். **1975** ம் ஆண்டு முதன்முறையாக இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. இப்போட்டி நடைபெறுவதற்கான மைதானத்தை மட்டப்படுத்து வதற்காக திருவாளர் பரராசசேகரமும், திருவாளர் செல்லையா பிறதரும் தங்களது உழவு இயந்திரங்கள் மூலம் நிலத்தை மட்டப்படுத்தி தந்தனர். இவர்களுடன் நடா அண்ணன் ஆலமரத்தடி வீடு அவரும் முன்னின்று உழைத்தவர்.

1978ம் ஆண்டு கிட்டத்தட்ட 36 ஆசிரியர்களும், 1400 மாணவர்களும் இருந்தனர். ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு ஆசிரியர்கள் இருந்தனர் இதுவும் பொன்னையா அதிபரின் சாதானையாக நாங்கள் பார்க்கின்றோம். 1980ம் ஆண்டு பாடசாலை நிர்வாகம், பழைய அதிபர் பொன்னையா அவர்களுக்கு பிரிவு உபசாரவிழா எடுக்கத் தவறி இருந்த நேரத்திலும் எங்கள் பாடசாலையில் கற்பித்தவர்.

எங்கள் பாடசாலையின் பாலைமரத்தை ஒருவரும் மறக்கமாட்டார்கள். காலை வெயிலில் அதன் நிழலில் நின்று தேவாரம் பாடியதும் நற்சொற் பொழிவுகள் கேட்டதும் நெஞ்சை விட்டு நீங்காத நிகழ்வு. எங்கள் கிணறும் அதை அண்டிய பகுதிகளில் விவசாய பாடத்திற்காக தோட்டம் செய்ததும் ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே என்று பாடத் தோன்றுகின்றது. கனகபுரம் பாடசாலையில் கல்வி கற்ற அனைத்து மாணவர்களுக்கும் இதில் எழுதப்பட்ட விடயங்கள் நெஞ்சைவிட்டு அகலாதவை என எண்ணுகின்றேன். எங்கள் காலத்தில் முதல் முதலில் பத்தாம் வகுப்பு பரீட்சை எடுத்து வெளியேறிய வர்களில் இருந்து நாங்கள் படித்த காலத்து மாணவர்களது நினைவில் உள்ளவர்களை எழுதுகின்றேன். விடுபடுபவர்கள் கவலைப்படவேண்டாம். உங்கள் விபரங்களை எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.

கலைதேவி, யோகினி, புஸ்பவதி, கமலாதேவி, கலாமதி, வளர்மதி, விஜயகுமாரி, வில்வாணி, P.N.C. Ya வவுனியாவின் முந்நாள் அரசாங்க அதிபர் திருமதி.சாள்ஸ் தேவராசா, தேவராணி, யோகச்செல்வி கலாமோகன், சந்திரபாலன், றெமினியூஸ், ரஞ்சன், பாக்கியநாதன், சரோஜினி, சுவர்ணாங்கி, பேரின்பநாதன், விஜயகாந்தன், கணேசநாதன், இராசகுமார், கேதீஸ், ரவீச்சந்திரன், கருணானந்தசிவம், கலைச்செல்வன், பிரபாகரன், இரகுநாதன், உலோகநாதன், ஞானலிங்கம், இரவீந்திரன், சிவபாலன், கோகுலவண்ணன், ஜெயமோகன், கிருஸ்ணவேணி, புலோமினா, வசந்தி, நாகரத்தினம், சுசீலா, சாந்தினி, கலைரதி.

மனோரஞ்சினி, தர்மகுலராணி, கலா, சரஸ்வதி, கருணாபத்தினி, ராக்கினி, குமுதினி, லில்லி, கெங்கானந்தஈஸ்வரி, முருகதாஸ், ராஜ்குமார், நெவில்குமார், அற்புதமலர், ஞானச்செல்வி, முத்துக்குமார், சித்திரா, ஜெசீலி, கலையீவன், கிருபாகரன், சத்தியநாதன், கதிரமலை, சோதிலிங்கம், உதயகுமார், குணரத்தினராசா, டொமினிக்சாந்தன், தயாபரன், சந்திரசேகரம், ஆறுமுகதாஸ், கதிர்காமநாதன், ரவிவர்மன், யோகேஸ்வரன், ரகுலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரலிங்கம், நிவாட்சன், கனகாம்பிகை, மோகனராணி, லக்சுமி , குகாநந்தி, குகேஸ்வரி, ஜெயந்தாமதி, சாந்தா இமக்கினோர், கௌரி, கமலனி.

கலைவாணி, புஸ்பராணி, தவமலர், கடம்பரேஸ்வரி, உமா, லலிதா, சகாயமலர், கலாராணி, பரமேஸ்வரி, கனகராசா, மணிவண்ணன், அருட்செல்வன், அருளானந்தம், தோமஸ் ஆலாலகண்டன், சிம்மேந்திரன், கங்காதரன், கெனிவூட்சன், ஜெயக்குமார், லோகநாதன், தவச்செல்வன், யசோ , வளர்மதி, நிர்மலா தவச்செல்வன், யோகேஸ்வரன், பாபுஜி, வெற்றிவேல்குமரன் இந்திரகுமார், சந்திரலிங்கம், சிவாகரன், அமிர்தநாதன்,, பத்மாதேவி, மங்களகௌரி, அன்பழகி, சிறீஸ்காந்தமதி, சுமதி, பவளராணி, கல்யாணி, சாரதா, கலைமாறன், தமிழரசி, சியாம், மனோகரி குகவதனி, மணிமேகலை, சமன்லதா, அருள்மலர், ரெஜிஅலோசியஸ், ரவிவர்மன், ஜீவா , சிவபாலன், சந்திரசேகரன்.

மகேந்திரன், ராகுலன், பற்றிக் சுரேஸ்குமார், சுரேந்திரன், தவராசா , குகசீலன், கனகசபை செந்தூர்வாசன், பிரபாகரன், ரவிசங்கர், யோகலிங்கம், கிருபாகரன் 1, கிருபாகரன் 2, விக்கினேஸ்வரன் 1, விக்கினேஸ்வரன் 2, இராசேந்திரகுமார், பரமேஸ்வரன், செல்வராசா, கனகநாதன், கனகநடராசா, விஜயசீலன், உதயபாவு, ரவிச்சந்திரன்,, சுப்பிரமணியம் 1, சுப்பிரமணியம் 2, நாகேந்திரன், செல்வரட்ணம், ராஜ்குமார், டிலீப்குமார், சிறி, சர்வேந்திரன், மாயரஞ்சன், மனோரஞ்சன், மோகனதாஸ், கோபாலகிருஸ்ணன், கமால்தீன், ஜமால்தீன், நவரட்ணம், மணிவண்ணன், கிருஸ்ணராசா, மோகனதாஸ் 2, ஜெயராசா, சற்குரு தில்லைநாதன், அரவிந்தன், லதாரஞ்சினி, கலைச்செல்வி, சத்தியமலர், ராணி.

குமுதினி, சிவரஞ்சனா, தவநிதி, இவோன் சுபாசினி, பரமேஸ்வரி, சண்முகவடிவு, மங்கயற்கரசி, நந்குமாரி, கோகிலவேணி, சசிதரன், கோணேஸ்வரன், மதிசேகரம், விமலா, தவரஞ்சினி, கமலவேணி, விசாலாட்சி, மாலதி, மஞ்சு, அட்லின் , லூக் மஞ்சுளா, ரோசி, வான்மதி, இராசகுமாரி, கலாரஞ்சினி, வேணி, சந்திராதேவி, ரஜிதராணி, தட்சாயினி, தர்மராசா, கிங்ஸ்லி, பாரத், மோகனதாஸ், மனோரஞ்சன், யோகலிங்கம், நந்தினி, ஆனந்தன், தவேந்திரன், சிவசோதி, பஞ்சலிங்கம், கோகிலா, நாவேந்திரன், சாந்தினி, வசந்தி, சுமதி, திரேசாதில்ருக்கி, துஸ்யந்தி.

இராசகுமாரி, இந்திரகுமாரி, ஜெயக்குமார், இரவிச்சந்திரன், செல்வரஞ்சினி, இராசகுமாரி, புஸ்பலதா, கேதீஸ்வரன், பாஸ்கரன், கோடீஸ்வரன், ஜெகதீஸ்வரன்,, மஞ்சுளா, மாலினி, கல்யாணி, சியாமளா, விக்கினேஸ்வரன், ஈசன், ரூபகுமாரி, பிரிந்தகுமாரி, சிவகணநாதன், சுவேந்திரன், நடேசானந்தன், இராஜ்குமார், கோகிலவேணி, தர்மகுலம், சிவசௌமியா, சிவசொரூபன், சிவபாஸ்கர், சிவசௌகார்த்திகா, இளங்குமரன், இளங்கோ கௌரி, கலைவாணி , சூரி, பாலேந்தின், திருவருட்செல்வன், சுசேந்திரன், தவரூபன், பிரிந்தா, பிரபாகரன், பாஸ்கரன், குகேந்திரன், தயாபரி, சத்தியபாமா, நித்தியா, கர்ணகுமார், நந்தகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேம்குமார், தர்சிகா, தனுசியா, தேவதாஸ், கீரன், கடம்பசீலன், மதன்கண்ணன், கமலக்கண்ணன், ஜெயபாலன், பத்மநாதன், அருள்ராஜ், வசீகரன் சசிக்குமார், கலைநிதி, சுகிர்தா, இதயகுமாரி, பூமணி, விஜயதாஸ், கலைச்செல்வி, தேவரக்சகி, வேல்கௌரி, ஜெயமகள், அமல்ராஜ், யோகராஜ், ஈஸ்வரகாந்தன், சுதாகரன், திருமுருகன், ஆனந்தி, கவிதா, வனிதா, கௌரி, மனோகரன், ஜெயசாந்தினி, நிறஞ்சலா, ரஜனி, அஞ்சலரவி, நந்தகுமார், ஆனந்தகுமார், என்டனிதாஸ், இருதயராஜ், மாறன், வசீகரன், அருள்தாஸ், யோகசர்வதாசன், கிருஷ்ண பாலன், கனகபாரதி, சுரேஸ்குமார், வசந்தகுமார், நடராசா, அகிலேஸ்வரன், சிறிதரன், ரஜீதரன், கிருஸ்ணராசா, ஏகாம்பரநாதன், மகேஸ்வரி, உசாநிதி.

புனிதமலர், குலமகள்ராதா, மேரிகுலஸ்டிகா, லன்டா கிறிஸ்டின், லன்டா ஜஸ்டின், கலைமகள், ஜசித்தா, தரங்கா புஸ்பகுமாரி, புஸ்பலதா, விமலராணி, விஜயராணி, தவரூபி, மகேஸ்வரி 2, கீதாஞ்சலி, சிறீரஞ்சினி, சுபத்திராதேவி, ருக்குமணிதேவி, கலாநிதி புவனேஸ்வரி, சரோஜாதேவி, தியாகமலர், தர்மவதி, தேவமகள், சாந்தினி, உமயாளினி, கேமலதா, கமலராணி, கோணேஸ்வரன், துரைரட்ணம், அகிலேஸ்வரன், சசிகுமார், வசீகரன், கிறிஸ்டின், சசிக்குமார், கோபிநாத், நந்தகுமார், குலரமணன்,, புவீந்திரகுமார், விஜயகுமார், மங்களகுமார், வர்மன், சூரியகுமார், முருகதாஸ் 1, புஸ்பாகரன், டேனியல், கோபாலகிருஸ்ணன், செல்வரூபன். மனோரஞ்சன், முருகதாஸ் 2, கோமகன், கணேஸ், ரவிசங்கர், பாஸ்கரன், சுதானந்தவேல், வசந்தன்,

நோபேட் ஜெயசீலன், திருச்சந்திரன், அன்று கேதீஸ்வரன், அருள்தாஸ், அன்ரன், பரமானந்தன், தவச்செல்வி, கோகிலா, பிரமிளா, புஸ்பலதா, வினோஷா, வனராணி, வரோகினி, தவயோதினி, பிரசாந்தி, மங்களேஸ்வரி, கலையமுதா, மதிவதனி, கருணாநந்தினி, வசந்தராணி, நாகேஸ்வரி, இராஜகலா, கலைச்செல்வி, கோமதி, இராஜேஸ்வரி, இந்திராணி, கருணா ரூபி, முத்துராணி, கலைமதி, வினோதினி, மஞ:சுளாதேவி, மேரிஜக்குலின், விஜயகுமாரி, பத்மாம்பாள், இந்திரசீலி, பாமினி, சிரோமி, தேவப்பிரியா, ஜெரோமி, ஞானப்பார்வை.

ஜெயகரன், தவசேகரன், உமாகரன், மதிவதனன், பரமேஸ்வரன், செல்வகுமார், ஜெயக்குமார், சுபாஸ், விஜயாநிதி, கிருஸ்ணவேணி உமையாள், குகன், யூடி ரமேஸ், ஜெயகுமார் சூரியகுமார், தனபாலன் மதன்ராஜ் இளங்கோவன், நடேசானந்தன் கிருபாகரன் 1, கிருபாகரன் 2, மகாதேவன், துஷ்யந்தன், விஜயகுமார், ஸ்ரீகாந் அமலதாஸ், சங்கர், ஹென்றி டயஸ், ஸ்ரீஸ்கந்தராஜா, கார்த்திகேயன், சுரேந்திரராஜா, கனகநடராஜன், கருணதாசன், நந்தகோபு, சுந்தரசிவம், கிங்ஸ்லி வில்லியம், ராமு, முத்துக்குமார் ராஜசேகரன் விமலதாஸ், உதயகுமார் சுப்ரமணியம்1, சுப்ரமணியம் 2, நாகேந்திரன் அற்புதராஜா, கிருஸ்ணவேணி, செல்வராணி, விஜயமனோகரி, அமுதா, சுகந்தி, சுசிலா, தனுசியா மணிமேகலை, மலர்விழி, சுமித்ரா, நிர்மலாதேவி, வெனிற்றா, சத்தியரஞ்சினி, மீரா, மேசி, தபோதினி, கற்பகம், தங்கம், இலங்கேஸ்வரி, தயாநிதி.

**திரு. சீ. கலைச்செல்வன்**
பழைய மாணவன்
பிரிவு 1979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டு அகலா நினைவலைகள்

நாம் பிறந்து வளர்ந்த எம் தாய் மனிதனை தலைசாய்ந்து வணங்கி, வாழ்த்தி பொய் அகல நாளும் புகழ் இழைத்தல் என் வியப்பாம் வையகம் போற்ற வயல் ஒளி நீர் கையகல கல்தோன்றி மண்தோன்றா காலத்தே, வாளொடு முன் தோன்றிய மூத்த தமிழ் மொழியை வணங்கி, வாழ்த்தி, இன்று ஐம்பது வருடங்கள் கடந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் சங்கமித்து உயர்ந்து நிற்கும் கனகபுரம் வித்தியாசாலை எமக்கு அறிவு புகட்டி ஒழுக்கத்தை கற்றுத் தந்து, நல்வழிப்படுத்தி, மண்ணின் மைந்தர்களாக உருவுர்ககி பெருமை சேர்த்து நிற்கின்றது.

1969ம் ஆண்டு பாடசாலையை ஆரம்பிப்பதற்கு அரும்பாடுபட்ட பெருமதிப்புக் குரிய பொன்னையா அதிபர் அவர்களை இத்தருணத்தில் நினைவு கூர்வதுடன், எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும், எமது அறிவு வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து கற்பிதத அத்துணை ஆசிரியப் பெருந்தகைளையும் வாழ்தகி வணங்கி பாடசாலையின் ஆரம்ப நாள் முதல் நான் கல்விகற்ற பத்தாண்டுகள் (1979 வரை) என் நெஞ்சை விட்டகலா நினைவலைகளை பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு அமைய, கற்றபடி ஒழுகியும் ஒழுக்கத்தின்படி வாழ்ந்தும் கொண்டிருக்கக்கூடிய என் பாசத்துக்குரிய, தோழமை மிக்க என் உடன் பிறப்புக்கள், தாய மண்ணிலும் மற்றும் எங்கெங்கெல்லாமோ வாழ்ந்து கொண்டிருந்தாலும் ஐம்பது வருடங்கள் வரை பின்நோக்கிச் சென்று இன்ப,துன்பம் நிறைந்த அந்த கடந்தகாலத்தை எம் மனக்கண்முன் நிறுத்தி, நினைவுதனில் மிதந்து எண்ணச் சிறகுகளை விரிக்கும் போது -

அளவிடமுடியாத ஆனந்தத்திற்கும், அளவிடமுடியாத சோகத்திற்கும் உரித்தான மனித உணர்வுகளின் வெளிப்பாடாகிய புன்னகையும், கண்ணீரும் பொங்கிட பரிவகிக்கும் என்பதில் ஐயமில்லை.

என்றென்றும் என் அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய அனைவருக்கும், நட்புடனும், தோழமையுடனும் எழுதிக்கொள்வது, யான் நலம், நீங்களும் நலமே இருக்க எல்லோருக் கும் பொதுவான இறைவனை வேண்டிக் கொள்கின்றேன். மேலும், உங்களுடன் வாழ்ந்த காலத்தை ஞாபகப்படுத்தத் தோன்றுகின்றது. முடிந்தவரை முயற்சிக்கின்றேன். பெருவனமாக கிளிநொச்சி இருந்த காலம். அது காட்டிற்கு மத்தியில் கிளிநொச்சி ஒரு சிறு நகரம் வெள்ளக்காரன் வெளியேறி பத்து வருடங்கள்தான் ஆகின்றது. 1958 கனகபுரம் கிராமம் உதயமாகிய ஆண்டு, படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம் என அரசு காணிகளை வழங்கி கோழி வளர்ககும் திட்டம் பிரதான நோக்கமாகக் கொண்டு உருவாகிய காரணத்தால் எல்லோரும் கோழிப்பண்ணை என இக்கிராமத்தை அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினராசா, சாந்தா இமாகுலேோர், அற்புதமலர் டொமினிக் சாந்தி, பாமதி, மார்வலூாவின், மற்றும் என் ஞாபகத்தில் தவறிய பலரும், பத்து வருடங்கள் வரை ஒன்றாக படித்தவர்கள் அல்லவா - இன்று உதயகுமார், கலைஜீவன், கதிரமலை டொமினிக் சாந்தி, ஆகியோர் எம்மத்தியில் இல்லை என்ற போதிலும், அவர்கள் எம் நெஞ்சத்தில் என்றென்றும் நிலைத்திருப்பர். கனகபுரத்திற்கு அயல் கிராமமாக அக்காலத்தில் இருந் திருநகர், ஜெயந்தி நகர், பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் எமது பாடசாலையில் இணைந்து கொண்டதனால் குறுகிய காலப்பகுதியில் ஒரே ஆண்டில் பல வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு பாடசாலையின் வளர்ச்சியில் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

ஏழ்மையும், எளிமையும் மிக்க மாணவர்கள் நாம் ஒன்றாக இணைந்து அன்பு பாராட்டி பாசமுடன் பழகிய நாட்கள் அதை வசந்த காலம் எல்லாம், பாடசாலைக்கான கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே எமது கல்வியும் தொடர்ந்து கொண்டிருந்தது. மாணவர்களின் வருகை அதிகரித்த காரணத்தால் ஆசிரியர்களுடைய தேவையும் அதிகரித்து அதன் காரணமாக கண்ணாடி ரீச்சர் என நாம் அன்போடு அழைக்கும் திருமதி.மேர் ஜோசவ், திருமதி.நாகம்மா, திருமதி தங்கம்மா, திரு அந்தோனிப் பிள்ளை, திரு. சின்னத்தம்பி, திரு.சிவகுமாரன், திரு.கனகசபாபதி, திரு.அருணாசலம், திரு.சண்முகதேவன், திருமதி. இராஜாம்பிகை, திரு.இரட்ணராஜா, திரு.தியாகராசா மற்றும் என் ஞாபகத்தில் தவறிய ஆசிரிய, ஆசிரியைகளின் அரும்பெரும் பணியினால் கனகபுர வித்தியாலயம் அபரிமித வளர்ச்சி கண்டது.

**1972** இலங்கை குடியரசாக்கப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் பிரதமராக இருந்த திருமதி.ஸ்ரீமாவோ பண்டார நாயக, அவர்களின் ஆட்சிக் காலத்தில் தன்னிறைவு பொருளாதார கொள்கை, நடைமுறைப் படுத்தப்பட்டு இறக்குமதிப்பொருட்க்ள, முற்றாகத் தடைசெய்யப்பட்டதன் காரணமாக பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதன் விளைவாக அரை இறாத்தல் பாணுக்காக அதிகாலை வேளையிலே பாண் தளாரிப்பு நிலையம் (பேக்கரி) நோக்கு நாம் படைஎடுத்த வரிசையாக சார்ந்து நின்றது. ஞாபகம் இருக்கிறதா, இருந்தபோதும் இக்காலப் பகுதியில் கிளிநொச்சி விவசாயத்தில் பெருமுன்னேற்றத்தை அடைந்தது.

**1977** தேர்தலின் பின்னர் பிரதமராக பதவிக்கு வந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆட்சியின் போது கண்மூடித்தனமாய் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக தென்னிலங்கையில் வசித்த தமிழர்கள் உயிரிழந்தோர் போன ஏனையோர் இழப்பதற்கு எதுவுமின்றி அகதிகளாகி உயிரை காப்பாற்றிக் கொள்ள வடபகுதி வந்தபோது, கிளிநொச்சி அகதிகளுக்கு தஞ்சம் அளிக்க, கணிசமான ஒரு தொகுதி அகதிகள் கனகபுரம் பாடசாலை கட்டிடங்களில் தஞ்சம் புகுந்தனர். கனகபுரம் மக்கள் அகதிகளை அரவணைத்து பேருதவி புரிந்தனர். நான் சிறுவனாக இருந்தபோது எம் இனத்துக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த பேரழிவும், பேரிழப்பும் என் மனதில் ஆழமாக பதிந்து கொண்டது, நானும், என் உயிர் மக்களுடன் சேர்ந்து துன்பப்பட்ட அந்த மக்களுக்கு சேவையாற்றியது மறக்கமுடியாததே. இக்கொடூர நிகழ்வு காரணமாக பாடசாலையில் அகதிகள் தஞ்சம் அடைந்ததனால் பாடசாலை காகல வரையறையின்றி மூடப்பட்டது. ஏறத்தாழ ஒரு வருட காலம் எமது கல்வி தடைப்பட்டிருக்கும் என எண்ணுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும் இடரான இந்த துயர சம்பவமும், பிற்காலத்தில் 1983ல் ஏற்பட்ட இனக்கலவரமும் இளம் பாராயத்து வாழ்க்கையை மாற்றியமைத்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனது பாதையும் புதிய திசையில் பயணித்தது. கனகபுரம் பாடசாலையில் வாழ்ந்த அகதிகளின் நிலை கண்டு அவர்களை அரவணைத்தபோது தான் எமது ஆசிரியர்கள் க்றறுத்தந்த, அன்பு என்றால் என்ன? என்பதை புரிந்து கொண்டேன். அன்பை பகிர்ந்து கொண்டால் அதை கொடுப்பவருக்கும் இன்பம், பெற்றவருக்கும், இன்பம் என்ற உண்மை என் இதயத்தில் பதிந்து கொண்டது.

"அன்பிலார் எலாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிற்ர்க்கு "

என்ற குறளின் உண்மைத் தன்மை புரிந்தது. கருணை மிக்க அன்பின் வெளிப் பாடானது - அகிம்சையை ஆதரிப்பது மட்டுமல்ல நண்பர்களே! தீய குணங்களான, இம்சைக்கு, கோபத்திற்கு - ஆணவத்திற்கு, அகங்காரத்துக்கு, அதிகாரத்துக்கு அன்பு எதிரானது என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். அன்பின் மூலம் சத்தியத்தை நிலை நிறுத்த முடியும் அல்லவா. கால ஓட்டத்தில் அகதிகள் மீள் குடியேற்றப்பட்டு படாசாலை மறுபடியும் இளங்க ஆரம்பித்தது.

என் பாசத்துக்குரிய உறவுகளே! இன்று எமது பாடசாலை ஐம்பது ஆண்டுகளை கடந்து வெற்றிவிழா கொண்டாடும் இச்ச்நதர்ப்பத்தில் எம்மை வழா வைத்த எம் கல்வி நிலையத்திற்கு எம்மாலான அனைத்து உதவிகளையும் குறிப்பாக பொருளாதார உதவிகளை நல்கி பாடசாலையின் நலனுக்காகவும் ஏழைச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக் காகவும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும். என்று அன்போடு வேண்டுகின்றேன்.

அன்பு உள்ளங்களே நான் இறுதியாக கூறிக்கொள்வதெல்லாம் எமது பாடசாலை யும் எமது ஆசிரியர்களும் எமக்கு கற்றுத்தந்ததெல்லாம் யாரையும் கடிந்து கொள்ளாமல், யார் மீதும் - வன்சொல் பேசாமல், யாரையும் கேவலப்படுத்தாமல் யாரையும் குற்றப்படுத் தாமல், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சாமல், வார்த்தைகளால் கீறிக்கீறி இந்தக்காலம் ஆக்காமல் இன்சொல்லாலும் நன்சொல்லாலும் உள்ளங்களை வருடிக் கொடுத்த அறிவாகமும் பெருக இடரானதும் தொலைய - அருள் ஞான இன்பம் அது எல்லோர்க்கும் கிடைக்க எமது இளையோர் சமுதாயம் நல் அறத்தை - கற்றுக் கொள்வது தான் எமது பாடசாலையினதும் எமது ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் அதிகப்படியான ஆசிர்வாதமாக அமையும் எனக் கூறி அன்போடு இம் மடலை நிறைவு செய்கின்றேன்.

இங்ஙனம்,
என்றென்றும் உங்கள் அன்பிற்குரிய
**செல்லத்துரை கிருபாகரன்**
பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**84ம் வருட மாணவர்களினது பதிவு**

# வரம்

வரம் - உயர்வு நவிற்சிச் சொல்லாடலாகத் தெரிந்தாலும் இதன் கனதி எப்பாற்பட்டதெனப் பார்க்க எமது பழைய காலத்தின் தொடக்க நிலையான நாற்பத்தைந்து ஆண்டுகள் பின்னோக்கி செல்ல வேண்டியுள்ளது. இங்கு பதியப்படுபவை எமது ஞாபகத்தில் உள்ளவை மட்டுமே தவற விடப்பட்டிருப்பின் மன்னித்தருள்க.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து ஐம்பதுகளில் கிளிநொச்சி பிரதேசத்தில் காடுகள் எல்லாம் கழனிகளாக மாற்றம் பெற்று நகரக்கட்டமைப்புக்கள் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கிய காலம். இளைஞர்களாக குடியேறிய எமது தாய், தந்தையார் அவர் தம் பிள்ளைகளின் தேவைக்காகக் கிராம மட்டப் பாடசாலையாக உருவெடுத்ததே எங்கள் பாடசாலையாகும்.

விசாலமான நிலப்பரப்பில் பாலை, வீரை, முதிரை முதலிய பாரிய மரங்கள் நிறைந்த சோலைப் பகுதியில் ஒரு கட்டிடம், அதனோடு நீண்ட கிடுகுக் கொட்டகை இவைதான் பாடசாலையாக அறியப்பட்டன. நடுவில் பெரியவெளி நுழைவு வாயிலுக்கு அருகில் சேர்ந்தால் போல் பாரிய நிழல்தரும் பாலை மரம் மற்றும் அடிப்படை தேவைகளான மலசலகூடங்கள், கிணறுகள், ஆசிரியர் விடுதிகள் இப்படி அழகாக வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது, கனகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. வெள்ளை வேட்டி, முழுநீளக் கையுடன் மேற்சட்டை, நெற்றியில் திருநீற்றுக்குறி, சந்தனம் அணிந்த இரண்டு ஜாம்பவான்கள் வலம் வந்த காலம் துடிப்புடனும் சுறுசுறுப்போடு கையில் பிரம்புடனும் துள்ளித் திரிந்த அதிபர் பொன்னையா சேர் எங்களுக்கு அறிமுகமாகின்றார். அவருடன் ஆறுமுக நாவலரின் தோற்றத்தை ஞாபகப்படுத்துமாப்போல் இருந்தவர்தான் பண்டிதர் ஆறுமுகதாஸ் சேர் அவர்களுடன் அந்தோனிப்பிள்ளை சேர் இப்படி தொடக்க ஞாபகத்தில் உள்ளவர்கள் சிலர்.

ஏடுதொடக்கலுடன் பாலர் வகுப்பொன்று எனப் பாடசாலையில் இணைந்து கொண்டோம். பாடசாலை தொடங்கிய ஐந்து ஆண்டுகளில். அறுத்துறுத்த தமிழ் பக்திச்சுவைமிகு சைவம், பாடலும் பண்ணும் என இவ்வாறு பாலர் என்னும் இளம்பிராயத்தின் அறிவு வெளிச்சத்தை ஒளியேற்றி வைத்தவர்கள் திருமதி நாகம்மா ரீச்சர், திருமதி தங்கம்மா ரீச்சர் ஆகியோர் பாலர் தம் மனத்தில் பசுமையாக படியும் வண்ணம் ஆடல்பாடல்கள் மூலம் அறிவுப் பசி தீர்க்கும் வித்தைகள் அறிந்தவர்கள். எமது சக நண்பிகள் மேடையேறி தங்கள் கண்ணசைவுகளாலும், அபிநயங்களாலும் தங்கம்மா ரீச்சர் பாடிய "கட்டழகு தங்கமகள் திருநாளாம் அவள் கட்டி வந்து ஆசை முத்தம் தருவாளாம்" எப்போதும் ஞாபகம் வரும் நினைவழியா நிகழ்வுகள். மேலும் மரநிழலின் மணல் பரப்பில் அமர்ந்திருந்து படித்த நாட்கள் அவை. காலச்சக்கரம் சுழல்கிறது, பாடசாலையின் தோற்றத்திலும் மாற்றங்கள் வருகின்றது. இரண்டாய் இருந்த பாடசாலைக் கட்டடங்கள் நான்கு ஐந்தென விரிவு பெறுகின்றது நாமும் உயர்வாகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு நான்கு எமது வகுப்பறை புதிதாக போடப்பட்டிருந்த ஓலைக் கொட்டகை தற்போது பாடசாலையின் நுழைவு வாயிலுக்கருகில் புதிதாய் இரு மாடியாய் எழுந்திருக்கும் கட்டிடப்பகுதியது. அப்போது எமக்கு புதிய வகுப்பாசிரியர் அறிமுகமாகின்றார். அவரும் அவர் மனைவியும் அப்போது தான் எமது பாடசாலையின் இணைந்திருந்தார்கள். முதல் நாள் வகுப்பு எமது பெயர்களைக் கூறி அறிமுகமாகின்றோம். அவர்தான் பின்னாளில் பொன் தியாகம் என எல்லோராலும் செல்லமாக அறியப்பட்ட திரு. தில்லைநாயகம் மாஸ்டர். அவரது புதல்வியும் எமது வகுப்பு சக தோழி தொடக்க நாளிலேயே எம்மையெல்லாம் தன்பக்கம் ஈர்த்துவிட்ட வசிகரன். ஒழுக்கம் மூச்சென்றால் மறுவளம் கண்டிப்பு, ஏதும் பிசகானால் மறுவளத்தை காட்டு என்பார். நாளைய சமுதாயம் எப்படியெல்லாம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கனவுகள் சுமந்து நடந்தாரோ? என்று நாம் இப்போது வியக்கும்படியாக அவரது நடவடிக்கைகள் இருந்தது. எதற்கும் வரிசையில் நிற்கப்பழகுவது, நேர்மை என்ற தத்துவத்தை புரியவைத்தவை கூறிக் கொண்டே போகலாம். அவரின் மனைவி அலோசியஸ் ரீச்சரும், எமக்கும், கிறிஸ்தவ மாணவருக்கும் பாடங்கள் எடுத்தார். ஐந்தாம் வகுப்பு புலமைப்பரீட்சை தயார்செய்து எங்களுக்கு ஊக்கம் தந்தார். நம்பிக்கையை விதைத்தார். அந்தத் தடவை சிறு இடை தவறிவிட்டோம் என்ற மனவேதனையும் இருந்தது.

எமது தாய்ப் பாடசாலை இடையிடையே ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள், இன அழிவுகளால் இடம்பெயரும் எம்மினத்தவருக்கு தனது ஆதரவுக் கரத்தை நீட்டத் தவறியதுமில்லை. காலத்திற்குக் காலம் விரிவாக்கம் என்னும் போர்வையில் மாற்றங்கள் கடந்தன. பிரதான பாடசாலை மண்டபத்தில் அமைந்திருந்தது கொண்கிறீடிலான விழா மேடை இன்றும் மனதில் நிலைத்து நிற்கும் நீங்காத விம்பம். நாடகக்கலை ஆட்சி செய்த காலம் மாணவர் மன்ற மாதாந்த கூட்டங்கள் இங்கு தான் அரங்கம் காணும். பலரது திறமைகளையும் கண்டு மகிழ்வோம். அந்த மேடையும் அகற்றப்பட்டு வகுப்பறையானது.ஒரு சோர்வாக மனதுக்கு இருந்தது. இதே பகுதி ஆண்கள் மலசலகூடப் பக்கம் என்றால் மற்ற பகுதி முடிவில் அதிபர் அலுவலகம் அமைந்திருந்தது.

பாடசாலை வீதிக்கும் அதிபர் அலுவலகத்திற்கும் இடைப்பட்ட மணல் பகுதி பாரிய மரங்களால் குளிர்மை பட்டுக்கொண்டிருந்த ரம்மியமான வெளி தினமும் மதிய இடைவேளையின் போது ஆர்ப்பரித்துக் கொண்டு மிகவும் ஆரோக்கியமாக கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருப்போம். பாடசாலையின் அந்த மூலைப் பகுதி கலகலப்புக்கு குறைவில்லாது இருந்தது, அதற்கும் ஆப்பு வைத்து விட்டார்கள். அதிபர் அலுவலகத்திற்கும் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியால் பழைய கட்டிடத்தொடர்ச்சியாக நீட்டிவிட்டார்கள். சிறுவர்களாகிய எமக்கு எவ்வளவு கடுப்பு வந்திருக்கும் நிர்வாகத்தின் மீது வெறுமையை உணர்ந்த தருணங்கள் அது. பாடமாக நுழைவாயிலுக்கு அருகில் பெரிதாக உயர்ந்து பரந்து நிழல் பரப்பிக்கொண்டிருந்தது ஒரு பாலை மரம். அது எமக்கு உண்மையில் ஒரு போதி மரம் தினசரி காலை ஒன்று கூடல் அந்த நிழலில் தான் நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். நாம் பாடும் தேவார திருவாசகங்களால் அவ்வெளியெங்கும் பரவசமாகும். சொற்பொழிவுகள் வழங்கும் பெரியவர்களில் எங்கள் அன்புக்குரிய ஆங்கில ஆசிரியர் சிவகுமார் மாஸ்டரை மறக்க இயலாது. அந்த நிழலில் எமக்கு பரிசில்கள் தந்து கௌரவப்படுத்தினார்கள். ஒழுக்க நிலைகளை பழக்கச்செய்தார்கள். அங்கிருந்து கலைந்து செல்லும் போது எப்படியாக வகுப்பறைகளிற்கு செல்வதென்பதும் பயிற்சியாகத்தான் இருந்தது. நாங்கள் பாடசாலை வரும்போது உடுக்கும் உடைத்தெரிவும் சிகையலங்காரம் எல்லாம் எமது தெரிவாகவே இருந்தது. அந்த சுதந்திரத்தை பறித்த ஒருவரென்றால் எங்கள் ஆங்கில ஆசிரியர் சிவகுமாரன் சேர் ஆவர். தன்னையே உதாரண புருஷராக எம்முன்னே இருந்து காட்டினார். நடை,உடை பாவனை என்றால் எம்முன்னே தெரிபவர் இவர் என்றால் மிகையில்லை. தனி மனித ஒழுக்கம் இவரால் இறுக்கமாக்கப்பட்டது, இவரது தோற்றம் எங்கினிலும் கண்ணில் பட்டால் எங்கள் அட்டகாசங்கள் எல்லாம் அடங்கிவிடும். அதிபராக இருந்தவர் பின்னர் பதவி உயர்வு பெற்றுச்செல்லும் போது மனதில் தோன்றிய பிரிவுணர்ச்சி அவர்மீது எமக்கிருந்த நெருக்கத்தின் காட்சி இது நடந்தது காலம் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போது சிறிது பின்னோக்கிச் செல்வோம்.

நாம் ஆறாம் வகுப்பை அடைகிறோம் நாம் முன்னர் கூறிய விழா மேடை இருந்த இடம்தான் எங்கள் புதிய வகுப்பறை, புதிய நண்பர்களும் எமது வகுப்பில் இணைகின்றார்கள். குறிப்பாக கருணை இல்ல மாணவிகள் அவர்கள் எங்களோடு போட்டிபோட்டு திறமை காட்டிக் கொண்டிருந்தார்கள். அது எம்மை செழுமையாக்கியது. வகுப்பாசிரியராக புதியவர் ஒருவர் வருகிறார். இப்போது ஒரு மாற்றம் நிகழ்கின்றது. இது வாழ்வோடு ஒட்டியிருக்குமென நாம் அப்போது நினைத்திருக்கவில்லை. ஒருவனின் கையெழுத்துத்தான் அவன் தலையெழுத்தை மாற்றும் என்பது போல, இந்த ஆசான் எங்களை புதிய பரிமாணத்திற்கு கொண்டு சென்றால் அவர் தான் எங்கள் சித்திர ஆசிரியர் திரு.சண்முகராசா சேர். அழகிய ஓவியங்கள் வரைவது மட்டுமல்ல எழுதும் எழுத்துக்களிலும் நளின நயமிட்டு எம்மைச் சித்திரக் கலையில் தேர்ச்சி பெற வைத்தவர் எங்கள் மாணவ மன்றத்தால் வெளியிடப்படும் கனகதீபம் என்ற கையேடு இவரின் ஆளுமையால் மெருகேறியது. இதில் அமையும் படைப்புகளே அழகிய எழுத்தமைப்புகளால் சித்திரப்புத்தகமாக வெளிக்கொணர்ந்தார். அவரது அந்த வரைதல் யுக்தியை நாமும் கையகப்படுத்தி எம்மை வளப்படுத்தி கொண்டோம். சரியான நேரத்தில் சரியான போதகராக எமக்கு கிடைத்தது எமது பாக்கியம். ஆசிரியர் தட்டுப்பாடு எமது காலத்திலும் நிலைத்திருந்தது. பலர் தொண்டாசிரியர்களாக எமக்கு கணிதம், விஞ்ஞானம், சமயம் என்று கற்பித்தார்கள். செல்வி தங்கமலர், திருமதி ராஜி, செல்வ கலா ரீச்சர் என்று அந்த வரிசை நீளும். செல்வி பெர்னான்டோ ரீச்சர். கணித ஆசிரியர்களாக விளங்கிய திரு.மகாலிங்கம் சேர் திரு.மகாநாதன் சேர் நன்றி கூறப்படவேண்டியவர்களாவர். உயர்ந்த தோற்றம் கொண்ட முப்பது வயதையொத்த வாலிப இளைஞர் எமக்கு விவசாய பாட ஆசிரியராக வகுப்பு ஆறில் அறிமுகமாகின்றார்.

ஆறாம் ஏழாம் வகுப்பிற்கு மாறும் போது இவர் தான் எமது வகுப்பாசிரியர். எமது பதின்ம வயது குறும்புகளுக்கு இவரிடம் வாங்கிக் கட்டியது ஏராளம். கிணத்தடிக் கருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள துண்டுக்காணியில் நாம் பாத்தி கட்டி தோட்டம் செய்த நினைவுகள் நீங்காதவை. இவர் படிப்பித்த காலத்தில் எமது பாடசாலை விளையாட்டுத் துறையில் மேன்மை கொண்டது. இவர் திறமைமிக்கவர்களைத் தேர்வு செய்தார். மற்றவர்களையும் ஊக்குவித்தார். நாம் கிளிநொச்சி வட்டாரப் போட்டிகள் பின்னர் கொத்தணிப் பாடசாலை கள் என்று எங்களை சிறந்த போட்டியாளர்களாக உருவாக்கினார். அவருக்கு மற்ற ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள். நாம் பதக்கங்கள் பல வென்றோம். நன்றிகள் பல எங்கள் விவசாயப்பாட ஆசிரியருக்கு.

எங்கள் பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் தங்களை எங்கள் பாடசாலையுடன் முழுதாய் இணைத்தே செயல்பட்டார்கள் என்றே கூறமுடியும். அவர்கள் புதுமைகளைப் புகுத்துவதில் பின் நின்றதில்லை. செல்வி சின்னத்தம்பி அதிபர் சிலகாலம் எமது பாடசாலையில் கடமையாற்றினார். இவர் தனது பாணியில் சில மாற்றங்களை எமது பாடசாலையில் புகுத்தினார். குறிப்பிடக் கூடியவையாக மாணவிகளுக்கான கழுத்துப்பட்டி வடிவமைக்கப்பட்டு, சீருடையில் சேர்க்கப்பட்டது. மாணவ தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான அடையாளப் பதக்கங்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

பல நிகழ்வுகள் பாடசாலையிலும் அதன் வெளியிலும் நடக்க தொடங்குகின்றன. இரம்மியமான எங்கள் பாடசாலை வாழ்க்கையில் ஏகாந்தமாக வீசிய தென்றலில் கொடிய கந்தகப் புகைகள் நிறைக்க போவதை கட்டியம் கூறுவது போல பல தடைச் சட்டங்கள் வந்தன. ஒடிய இரயில் வடக்கில் நின்றது. பயணங்களைத் தடைப்படுத்தி ஏற்றி இறக்கி நடக்கவிட்டார்கள். எங்களை வளர்த்தெடுக்க பல ஆசிரியர்கள் யாழ்குடாவில் இருந்து வந்து சென்றார்கள். அவர்கள் ஒருபோதும் தங்கள் பயணங்களை நிறுத்தவில்லை. எங்களைத் தேடி வந்தார்கள். எங்களை வளம் பெற வைத்தார்கள். இப்போது கூறுங்கள் இவர்களை நாம் அடைந்தது வரம் இல்லையா? எல்லோரையும் போல் எமது கற்றற் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. தெளிவான நோக்கு எங்கள் யாரிடமாவது இருந்தது என்றால் சந்தேகமே. இவற்றுக்கு பதில் சந்தேகமே.

இவற்றுக்கு பதில் கூறும் திருப்புமுனையாக எமது பாடசாலைக்கு ஒருவர் நியமனம் பெற்று வந்தார். யாழ் பல்கலையில் தமிழில் முதுமாணிப் பட்டம் பெற்று தனது முதல் நியமனமாக எமது பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றார். எங்கள் தமிழ் ஆசிரியை தனம் ரீச்சரென்று செல்லமாக அழைக்கப்பெற்ற இளவாலையைச் சேர்ந்த செல்வி.தனரஞ்சுகமணி ஆசிரியை குறுகுறுத்த நடை மென்மையான பேச்சு எந்தச் சவால்களுக்கும் தயாரானவர் போன்ற மிடுக்குடன் நாம் அவரை எதிர்கொண்டோம். ஆசிரியப்பணியில் உள்ள சவால்களை எதிர் கொண்டார். தனது கடமையில் மருந்தாய் இருந்து எம்மை சிறிது சிறிதாக செதுக்கத்தொடங்கினார். அவரின் மென்மையான குரல்வளம் கரகரப்பானது. தொண்டை வற்ற எமக்கு பாடங்கள் கற்பித்தார். உண்மையில் எங்களால் எவ்வளவு மனவுளைச்சலை எதிர்கொண்டாரோ என்று விளிக்கின்றோம். மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளராமல் மாலை வகுப்புகள், மேலதிகமாக சனிக்கிழமைகளிலும் வகுப்பு வைத்து சாதாரண பரீட்சைக்கு எம்மைத் தயார் செய்தார். இது எங்கள் பாடசாலை தொடப்போகும் உச்சத்திற்கான பெறுபேறுகள் கிடைக்கப் போகும் தருணம். நாமும் பரீட்சைக்கு முதலே நம்பிக்கை பெற்றிருந்தோம். இவரின் திறமையை அறிந்த தனியார் கல்வி நிலைய நிறுவுநர் ஒருவர் தனது ரியூட்டரியில் படிப்பிக்க விடுத்த அழைப்பை நிராகரித்து எம்மையும் எமக்கு கீழ் இருந்த பிரிவுக்காகவும் மேம்படுத்துவதில் குறியாய் செயல்பட்டார். அவரின் முயற்சிகள் வீண் போகவில்லை. எமது பாடசாலை பெறுபேறுகளில் வெற்றிகளினை பறிக்கத் தொடங்கியது. ஒரு பொற்காலம் உருவாகத் தொடங்கியது. உங்களுக்கும் தலைசாய்த்து எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம் ரீச்சர்.

எமது பாடசாலை குறுகிய கால நியமனங்களாக பல அதிபர்களை கண்டு கொண்டிருந்த நேரம் திரு. சாம்பசிவம் சேர் அதிபராக நாம் சாதாரண தரம் எடுக்கும் போது இருந்தார். இது கூட நாம் பெற்ற பேறே என்று எண்ணுமாறு நிகழ்வுகள் நடந்தன. நல்ல மனிதநேயமிக்க பேரரசனாக எம்மில் இன்றும் மிளிர்ந்து நிற்கின்றார். சாதனை பெற்ற மாணவனை முதுகில் தட்டி வாழ்த்திவிட்டு தனது கடமை முடிந்ததென நில்லாது தான் முயற்சி எடுத்து உனக்கு யாழ் இந்துக் கல்லூரியில் சேர அனுமதி வாங்கிவிட்டேன். என்னுடன் வா என்று மேல் நோக்கி உயர வழிகாட்டிய கலங்கரை வெளிச்சம். அவா பற்ற வைத்த பொறி பலருக்கு பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற கனவை விதைத்துவிட்டதென்றால் அது மிகையில்லை. இறுதியாக மனதை வாட்டும் பெரும் துயரம் பாடசாலையை இடையில் துறந்து வெற்றிகள் பெற்று மீண்டு வருவோம் என சென்ற நண்பர்கள் பலர் இன்று எம்முடன் இல்லை. சக நண்பர்களான குமரன் துளசி , ஜெகதீஸ் என்று பெயர் தெரிந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தலை குனிந்து வணக்கங்கள் செய்கிறோம்.

உயர் கல்லூரி பல்கலைக்கழகம் என்று பயின்று வந்தாலும் எமது இளமைக் கால வாழ்க்கையில் புடம் போட்டு தங்கமாக மாற்றியதென்றால் அது எங்கள் ஆரம்ப பாடசாலை. அங்கு கற்ற வாழ்க்கைப் பாடம் இன்னும் எம்மில் தொடர்கின்றது. நாம் சந்தித்த அதிசய மனிதர்கள் எங்களை மட்டுமல்ல எமது பிள்ளைகளின் வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்துகின்றார்கள்.

நாம் கண்டவர்கள் எங்களுக்கு தெய்வங்கள் இனி வருபவர்களும் எமது சந்ததியின ருக்கு வழிகாட்டிகளாகத் தொடர்வார்கள் என்று நம்பிக்கையோடு, பொன்விழா மேலும் ஒரு உந்து சக்தியாக எமது மாணவர்கள் மனதில் உத்வேகம் பெறவேண்டி வாழ்த்தி வாழிய சீர்பெறும் கனகபுரம் மகா வித்தியாலயம் வாழ்க.

வணக்கம்

**திரு. குமாரசாமி இந்திரகுமார்**
84 ஆண்டு சாதாரண பிரிவு
மாணவர்கள் சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதையும் நமது பாடசாலையும்

நமது பாடசாலை பொன்விழாவைக் காணும் இத்தருணத்தில் நடைபாதையின் முதன்மையும் நன்குணரப்பட்டுள்ளது. அதன் விளைவாக பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி நடைபாதயினை அமைப்பதற்கு திட்டமிட்டு செயற்படுத்தத் தொடங்கி யுள்ளோம். அந்தவகையில் முதற்கட்டமாக படாசாலைக்கு முன்பாக உள்ள குறிப்பிட்ட பகுதியை செய்து முடிப்பது எனவும் அடுத்து பாடசாலை வீதிக்குச் சமாந்தரமாகப் பாடசாலை எல்லைவரை விஸ்தரிப்பது என்பதுமாகும். இதன் விளைவாகப் பாடசாலைச் சூழல் அழகாகக் அழகுப்படுத்தப்படுவதுடன் மாணவர்கள் பாதுகாப்பான வருகை தருதலும் உறுதி செய்யப்படுகின்றது.

பாதுகாப்பான வீதி என்பது பாதசாரிகள், துவிச்சக்கரவண்டி பயன்படுத்துவோர் மோட்டார் வாகனம் பயன்படுத்துவோர்என்று பிரிவுகளாக வடிவமைக்கப்பட்டிருத் தலாகும். நாட்டு மக்களின் பாதுகாப்புக்கருதி அரசாங்கம் சிறந்த திட்டங்களைத் தயாரித்து அதிகாரிகள், வீதிப் புனரமைப்பது அலுவலர்கள் மூலம் நடைமுறைப்படுத்து கின்றது. வீதி தொடர்பான சட்டதிட்டங்கள் எழுத்துருவில் காணப்படுகின்றன. ஆனால் பல நடைமுறையில் செயற்படுத்தப்படானமயாலேயே அன்று முதல் இன்று வரை விபத்துக்கள் இடம்பெறுவதும் உயிரிழப்புக்கள் தொடர்வதும் மாறாவிதியாகக் காணப்படுகின்றன.

வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு அதிகார சபையினால் வீதிக்கான எல்லைகற்கள் நாட்டப்படுகின்றன. ஆனால் எல்லைகள் எல்லைகளாக நாட்டப்பட்டு உள்ளன. வீதிகள் அகலப்படுத்தப்படுவதில்லை. பல சிக்கல்கள் நீண்ட காலத்தின் பின்னரே திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

எனவே தான் கனகபுரத்தாயின் மடியில் கல்வி கற்ற நாம் மாணவர்களின் பாடசாலை பயணத்தின் பாதுகாப்புக்கருதியும் மன மகிழ்வுடன் பாடசாலைக்குள் நுழைவதற்கு மாகவும் நடைபாதை அமைக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றோம்.

எமது பாடசாலைக்கு வருகை தருவதற்கான வீதிகள் சாதாரண வீதிகளாகவே உள்ளன. நடுப்பகுதி மட்டுமே பாவனைக்கு ஏற்றவகையில் தார், கொன்கிறீட், கிரவல் முதலானவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இருமருங்குகளும் பயன்பாடற்ற பற்றைகள், குப்பைகள் நிறைந்து வடிகாலின்றியும் காணப்படுகின்றன. மேலும் பாடசாலைகளுக்கு அருகில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு வந்து செல்லும் கனரக வாகனங்களினால் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்கு இன்றும் நாளையும் பாதுகாப்பின்மை காணப்படுகின்றது.

எனவே எல்லாம் அரசாங்கமோ அதன் அதிகாரிகளோ செய்யும் வரை காத்திருக் காது மாணவர்கள் மனமகிழ்வுடன் பாடசாலைக்குள் பாதுகாப்பாக நுழைந்து கல்வியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசடறக் கற்று ஒழுக வேண்டும் என்னும் ஒரே நோக்கில் நடைபாதையும் நமது பாடசாலையும் வேலைத்திட்டத்தினைத் தொடங்கியுள்ளோம். இம்முயற்சி வெற்றி பெறுவதற்காக என்னுடன் கரம் கோர்த்துள்ள என் இனிய நண்பர்களான திரு.த.பிருந்தாபன் (பிரான்ஸ்), திரு.த. பாலகிருஸ்ணன் (கிளிநொச்சி), திரு.ந.இலட்சுமன் (கொழும்பு), திரு.இ.ஞானேந்திரன் (கனடா), திரு.இ.கோகிலராஜன் (கனடா), திரு.செ.மெல்கியூர் (பிரித்தானியா), திரு,வே.சத்தியசீலன் (சுவிஸ்), செல்வி.அன்பரசி ஆகியோரையும் முதன்மைப்படுத்துகின்றேன்.

இவ்வேலைத்திட்டத்தின் மூலம் மாணவர் மனங்களிலும் பசுமரத்தாணி போல சில விடயங்கள் பதிய வேண்டும். அதாவது உங்களைப் போன்றே இப்பாடசாலையில் கல்வி கற்ற எம்மால் உங்கள் மனங்களை மகிழ்விப்பதற்காகவும் உங்கள் பாதுகாப்பிற் காகவும் செய்து தரும் நடை பாதை உங்களை நாளும் நாளும் சுமந்து பாடசாலைக்குள் அழைத்து வரப்போகின்றது. உங்களைச் சுமந்து பெற்ற தாயைப் போன்று பாடசாலைக்குள் சுமந்து வரும் நடைபாதையின் பெறுமதி அளப்பெரியது. அதன் பெறுமதி உணர்ந்தும் பாதுகாப்புக் கருதியும் நீங்கள் ஒவ்வொருவரும் நடைபாதையைத் தினமும் பயன்படுத்துவதுடன் பராமரிப்பினை நடைபாதையைச் சேதப்படுத்தப்படாதிருத்தல் வேண்டும் என்பது எமது விருப்பம்.

**திரு.கு.இந்திரகுமார்**
(1984 க.பொ.த பிரிவு சார்பில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வாசனை

புலம்பெயர் தேரசத்தில் இருந்து கொண்டு தாய்மொழியையும் தாய் நாட்டு சிறப்புக்களையும் அறிந்து கொண்டேன். எனக்குத் தாய் நாட்டைப் பற்றிய ஒழுங்கற்பாலான வடிவம் எனது மனதில் இருந்தது. அங்கு சென்றபோது தான் அந்த மண்ணின் சுவாசத்தை உணரமுடிந்தது. பரவசப்பட்டேன். அனைத்தும் என்னை விக்கவைத்தது.

வீரம் செறிந்த வன்னிமண்ணை சென்று பார்த்தேன். யாழ்ப்பாணம் சென்றேன். எமது மூதாதை இராவணன் வெட்டு திருகோணமலைக்கு சென்று வந்தேன். நாகர்கள் வாழ்ந்தபோது கோவில் கொண்ட நயினாதீவு சென்று நைனை அம்மனை வணங்கினேன். என்னை ஆச்சரியப்படுத்தியது எனது தாயகம். அந்த வகையில் எனது அம்மாவும் அவரது சகோதரர்களும் கல்வி கற்ற பள்ளியான கனகபுரம் பள்ளி சென்று பார்த்தேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எனக்குள் ஓர் ஏக்கம் என்னால் இந்தப் பள்ளியில் கல்வி கற்க முடிய வில்லையே என்று. இருந்த போதிலும் இங்கு கல்வி கற்றும் சில மாணவர்களுடனும், ஆசிரியை திருமதி. புவனா அவர்களுடன் உரையாடி மகிழ்ந்தேன்.

எனது அப்பப்பாவினது நண்பர்கள் திரு. குலசிங்கம், திரு. இராசேந்திரம் தாத்தாக்களுடனும் உரையாடினேன். எனது அம்மப்பா அம்மம்மாவிடம் இந்த இடத்திற்கு கோழிப்பண்ணை எனப் பெயர் வரக் காரணம் கனகபுரம் பள்ளி ஆரம்பித்த விடையம் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டேன். அப்பொழுது எனது அம்மம்மா கூறினார் அவரும் அவருடன் சில மாணவர்களும் காட்லிக் கல்லூரியில் கல்வி கற்கும் பொழுது அவர்களுடைய ஆசிரியரான திரு. வைத்திலிங்கம் என்பவரால் கனகபுரத்திற்கு வரவழைக்கப்பட்டு காடுகள் வெட்டி காணிகள் உருவாக்கியதாகவும் காடுகள் வெட்டு வதற்கு அவர்கள் நிறையப்பணம் செலவு செய்ததாகவும் காடு வெட்டிக் காணி உருவாக்கியதன் பின்பு வீடுகட்டுவதற்கு அரசு பணம் உதவி செய்ததாகவும் கூறினார். அப்பொழுது அங்கு இருக்கும் இளைஞர்கள் சிறு தொழில் செய்வதற்கு கோழிப்பண்ணை வைத்து கோழிகள் வளர்த்தார்கள். அதனால் அந்த இடத்திற்கு கோழிப்பண்ணை எனும் பெயர் வந்ததாகவும் கூறினார்.

அதன் பின்பு அனைவரும் திருமண வயது எட்டவும் திருமணம் செய்து கொண்டு குடும்பம் குடும்பமாக வந்ததாகவும் அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்து வளரவும் இவ்விடத்தில் பள்ளி அமைக்க வேண்டும் என அரசு முடிவெடுத்து திரு. ஸ்ரீஸ்காந்தா அவர்களால் பள்ளி அமைப்பதற்கான இடம் பார்க்க வந்த பொழுது பள்ளி அமைப்பதற் கான காணி காணாது என முடிவெடுத்த போது எனது அம்மப்பா தனது காணியில் இருந்து அரை ஏக்கர் காணியை பள்ளிக்கு கொடுத்து உதவியதாகவும் அதன் பின்பு இவ்விடத்தில் பள்ளி அமைக்கலாம் என முடிவெடுத்து பள்ளி அமைக்கப்பட்டதாகவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி கட்டப்பட்டு முதல் பள்ளி ஆரம்பிக்கும் பொழுது முதலாவது அதிபராக திரு. பொன்னையா அவர்களும் ஆசிரியையாக திருமதி நாகம்மாவும், திருமதி தங்கம்மாவும் இருந்தார்கள் எனவும், மாணவர்கள் அதிகமில்லாத காரணத்தால் எனது மாமா இராசசுந்தரம் சுரேந்திரன் அவரது மூன்று வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டு முதல் கட்ட மாணவர்களில் ஒருவரானார் என்றும் கூறினார்.

இவ்வாறு தனது சேவையைத் தொடங்கிய கனகபுரம் பள்ளி இன்று பல ஆயிரம் மாணவர்களை உருவாக்கி உலகெங்கும் பரந்து வாழவைத்திருக்கிறது. தனது ஐம்பதாவது அகவையில் காலடி எடுத்து வைத்து பொன்விழாக் காணும் கனகபுரம் மகாவித்தியாலயத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள்.

கனகபுர மகாவித்தியாலயத்தில் எனது முன்னோர் கல்விகற்றதால் அவர்கள் சார்பில் எனது ஆக்கமும் இடம் பெறுவதற்கு சந்தர்ப்பம் தந்ததற்காக அனைவரிடமும் நன்றி கூறி நிற்கின்றேன்.

பிரான்சில் இருந்து **இ. கார்த்தியா, வேர்ஜினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப்பருவத்தினரின் பாடசாலைச் சூழல்

## கட்டிளமைப் பருவ உளநலம்

கட்டிளமைப்பருவ வயதினரின் பெரும்பாலான காலப்பகுதி பாடசாலையிலேயே கழியப்போகிறது. வீடும், பாடசாலையும் இரட்டை மாட்டு வண்டியின் மாடுகள் என்றால் அதன் மேல் உள்ள சுமையாக கட்டிளமைப்பருவத்தினர் உள்ளனர். இந்த இரண்டு மாடுகளும் சரியாக நடந்து, வழிகாட்டினாலேயே வண்டி சீராக உருண்டு குறிப்பிட்ட இடத்தை அடைய முடியும். வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியர்களும் கட்டிளமைப்பருவத்தினருக்கு நல்ல வழிகாட்டிகள். அவ்வாறு நடப்பதாலேயே எவ்வளவோ மாணவர்கள் நன்னிலை அடைந்துள்ளனர்.

குருகுல கல்வியில் மாணவர்கள் தம் குருவை நோக்கி சென்று கல்வி கற்றார்கள். பின் அது மருவி பாடசாலை, கல்லூரியாக மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளிற்கு சென்று வருகின்றனர். பிரத்தியேக வகுப்புகளிற்கு ஆசிரியரை நாடியும், ஆசிரியர் மாணவரை நாடி கல்வி புகட்டுவதுமாக காலம் மாறியுள்ளது. மாணவரின் ஒழுக்கம், கற்பித்தல் செயற்பாடுகளில் கடைப்பிடிக்கப்பட்ட சாரீர தண்டனைகள் குறைந்து அணுகுமுறை முற்றிலும் மனித நேயத்துடன் உள்ளது. இவற்றை கண்காணிக்க மனித உரிமை அமைப்புக்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகஸ்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், காவல்துறை என பலர் உள்ளனர். அத்துடன் அது குறித்த விழிப்புணர்வும் மாணவர்களிற்கு தாராளமாக வழங்கப்பட்டுள்ளது. "பிள்ளை நேயப்" பாடசாலையாக தற்போதைய கல்விச் செயற்பாடுகள் மாறியிருப்பதால் எங்கள் பழைய, கொள்கையான "அடியாத மாடு படியாது" என்கின்ற பழமொழி மெதுவாக செயழிழந்து அது புது வடிவமெடுத்துள்ள நிலையில் கட்டிளமைப் பருவத்தினருக்கும் ஆசிரியர்களிற் குமான இடைவெளிகள் கொஞ்சம் அதிகம் விரிவடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இருந்த போதும் பெரும்பாலான பாடசாலைகளில் சரீர தண்டனை நிறுத்தப் பட்டு, நாகரீகமான கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதை காணக்கூடியதாக உள்ளது.

## பாடசாலையின் வளங்கள்

பாடசாலைச் செயற்பாடுகள் கல்வியுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படுகின்ற செயல் அல்ல. கல்விக்கு புறம்பாக இணைபாடவிதான செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவற்றின் நோக்கம் ஒரு மாணவனை "பல்திறன் ஆளுமை" உடையவனாக மாற்றுவதாகும். கல்விச் செயற்பாடுகள் மைதான செயற்பாடுகள், அரங்கச் செயற்பாடுகள், ஆன்மீகச் செயற்பாடுகள், தலைமைத்துவச் செயற்பாடுகள், சமூகச் செயற்பாடுகள், புத்தாக்கச் செயற்பாடுகள், வாழ்க்கை ஆற்றல் செயற்பாடுகள், படைப்பாக்கச்செயற்பாடுகள், சூழலியல் செயற்பாடுகள் என பாடசாலைச் செயற்பாடுகள் மிக நேர்த்தியாக பரந்துபட கட்டமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றாற் போல் பாடசாலையின் உயிரியல் வளங்களான அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர், பயன்தரு மரங்கள், பூங்கா, பாடசாலை தோட்டம் மூலிகைத் தோட்டம் என்பனவும் பௌதீக வளங்களில் பாடசாலை கட்டடங்கள், வகுப்பறைகள், கலையரங்கு, விளையாட்டு மைதானம், கிணறு, நீர்தாங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலசலகூடம், வாகன தரிப்பிடம், ஆலயம், திறந்தவெளி அரங்கு, கணினிக்கூடம் என்பன அமையப் பெற்றுள்ளன. இவையாவும் மாணவர்களின் ஆரோக்கியமான கல்விக்கும் அவர்களது உடல்உளநல மேம்பாட்டிற்கும் மிக அத்தியாவசியமானவை. இவை ஒவ்வொன்றிலும் கற்றுக்கொள்ள எண்ணற்ற செயற்பாடுகள் உள்ளன. கல்வியின் இலக்கை தெளிவாக அறிந்து கொண்ட கல்வியியலாளர்கள், கல்விக்கு கடன்கொடுக்கும் நாடுகள், நிறுவனங்கள், பேராசிரியர்கள் இரவு பகலாக உழைத்தே பாடவிதானங்களை மாணவர் பயன்பாடு கருதி உருவாக்கியுள்ளார்கள். பாடசாலைகளில் உள்ள அவ்வளவு வளங்களை யும் மாணவர்கள் சரிவர பயன்படுத்த ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். எனவே ஆசிரியர் என்பதற்கு சரியான பதமாக வழிகாட்டிகள் அல்லது ஆலோசகர்கள் என குறிப்பிடுவதே பொறுத்தமானது.

ஒரு வகுப்பறையில் உள்ள எல்லா மாணவர்களும் ஒரேவிதமாக இருப்பதில்லை. எமது கை விரல்களைப் போல அவர்களில் மீதிறன் கூடியவர்கள் இடைப்பட்டவர்கள், குறைந்தவர்கள் பன்முக ஆளுமை பெற்றவர், பாடக்கூடியவர், வரையக்கூடியவர் என அவர்களின் ஆற்றல்கள் வேறுபடும். ஒழுக்கமுள்ளவர்கள் கீழ்படிவானவர்கள், குழப்படிகாரர், நல்ல பழக்க வழக்கமுடையவர், களவெடுப்பவர், புறம் கூறுபவர் என அவர்களின் நடத்தைகள் மாறுபடும். ஆனால் அவர்கள் எல்லோரும் உங்கள் மாணவர்கள் என்பதை நினைவில் கொள்க. எல்லோரையும் ஒன்றாக கரைசேர்க்கும் வழிகாட்டிகள் தான் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகளை படிப்படியாக மாற்றும் தைரியம் வாய்ந்த ஆசிரியர்களே நல்வழிகாட்டிகள். நீங்கள் அதை செய்கிறீர்கள். சில வேளைகளில் களைத்து விடுகிறீர்கள். உளநலத்துறையில் பணியாற்றும் உங்களிற்கு ஒவ்வொரு நாளும் கிடைக்கின்ற அனுபவங்களில் நாங்கள் மது, போதைபொருள் பாவனையாளர்கள் தற்கொலை முயற்சியில் காப்பாற்றப்பட்டோர், பல்வேறு விதமான உளநோய்களால் சிந்தனை, உணர்ச்சிகள், நடத்தைகளில் மாற்றம் ஏற்பட்டு வன்முறையோடு அனுமதிக்கப் படுவோர் குடும்ப பிரச்சினையோடு வருவோர என பிரச்சினைப்படுகின்றவர்களுடனேயே எமதுதொழில் உள்ளது எங்களது எல்லா உணர்ச்சிகளையும் ஓரளவிற்கு கட்டுப்படுத்தியே எம் பணிகளை செய்கிறோம். அதுபோலவே ஆசிரியர் தொழிலிலும் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளுடன் வருகின்ற மாணவர்களை ஆற்றுப்படுத்தி கல்வி கற்பிக்கின்ற சேவையே தற்போது தேவைப்படுகின்றது.

**அடைவு மட்டம்**

பெறுபேற்றை மையப்படுத்திய பரீட்சைகளால் கட்டிளமைப்பருவத்தினர், உடலாலும் உள்ளத்தாலும் களைப்புற்று விடுகின்றனர். எல்லா மாணவர்களுமே நல்ல பெறுபேற்றை பெறப் போவதில்லை. அதற்காக நாங்கள் அவர்களை ஒதுக்கிவிடவும் முடியாது. கட்டிளமைப்பருவ மிக முக்கியமான காலங்கள் அவர்கள் பாடசாலை சூழலிலேயே இருக்க வேண்டும். வகுப்பு இறக்கிவிடுதல், பாடசாலையால் நிறுத்துதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை தவிர்க்க வேண்டும். மாறாக கல்விபொதுத்தராதர சாதாரண தரம், உயர்தரம் வரை கொண்டு வந்து அதன் பின் தொழில் வழிகாட்டல்களை சரியாக செய்து, அம்மாணவர்கள் அந்த மாவட்டங்களில் உள்ள திறந்த பல்கலைக்கழகங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பயிற்சி நிலையங்கள் என்பவற்றில் அவர்களின் திறனிற்கு பொருத்தமான தொழிற் கல்வியை பயின்று அதன் மூலம் ஒரு தொழிலை பெற்றுக்கொள்ள ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். அவ்வப்போது பாடசாலை பரிசளிப்பு நிகழ்வுகளில் அவர்களின் ஆற்றல்களிற்கு ஏற்ப பரிசளித்து அவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகாமல் விருப்புடன் வருவதற்கு உதவ வேண்டும். மெல்ல கற்கும் மாணவர்களிற்கு, பிரத்தியேக வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி ஆசிரியர்கள் ஒரு நேர அட்டவணையில் அவர்களிற்கு மேலதிக கல்வியை கொடுப்பதுவும் பயனுடைய இடையீடாகும்.

**பாடசாலையில் ஒழுக்க விதிமுறைகள்**

பொதுவாக மாணவர்களின், சிகை அலங்காரம், ஆடை வடிவமைப்பு, இடுப்புப்பட்டி, கொப்பியின் உறை, மேசை, கட்டிடங்களில் எழுதுவது, தொலைபேசி மிரட்டல், நேரம் பிந்தி வருதல் என்பவற்றால் அதிப்ர, ஆசிரியர்கள் கட்டிளமைப்பருவத்தினருடன் முரண்பட வழியேற்படுத்துகின்றது. இங்கு முரண்படுவதற்கு மேலாக மாணவர்கள் சில ஒழுக்க விதிமுறைகளை பின்பற்ற ஆவண செய்வது பொருத்தமானது, மாணவர்கள் பாடசாலையின் ஒழுக்க விதிமுறைகளை அறிந்து கொள்ளும் விதமாக ஒழுக்க விதிமுறை கோவைகளை பொருத்தமான படங்கள், வரைபுகள் மூலமாக காட்சிப்படுத்தலாம். உதாரணமாக பொருத்தமான சிகை அலங்காரம் ஒரு வரைபடத்தின் மூலமாக காட்டி, அவ்வாறு அமையாது விட்டால் அதற்கான தண்டனை எதுவென்பதை குறிப்பிடலாம். ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆடை வடிவமைப்பு, சில மாதிரிகளை காட்சிப்படுத்தி வைக்கலாம். இவ்வாறு மாணவர்கள் பாடசாலையின் ஒழுக்க விதிமுறைகளை அறிவதற்கு அதிபர், ஆசிரியர்கள் உதவ வேண்டும். முற்றிலும் தடைசெய்யப்பட்டது என பச்சைக்குத்துவது, ஆண்கள் காது குத்துவது, வர்ண உடைகள் அணிவது, பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் வருவது போன்றவற்றையும் குறிப்பிடலாம். மாணவ ஒன்றுகூடல்களின் போது சத்தியப்பிரமாணமாக இவற்றை மேற்கொள்ளலாம்.

**அதிபர், ஆசிரியர்களின் கடமைகளும் பொறுப்புகளும்**

மாணவர்கள் உங்களிடம் இருந்தே முன்மாதிரிகளை கற்றுக்கொள்ளப் போகின்றார்கள். எனவே அதற்கு மிகத்தகுதியான ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும். உங்களது சிகை அலங்காரம், தாடி, மீசை என்பவற்றின் "நவீன வடிவமைப்பு" கட்டிளமைப் பருவ மாணவர்களில் எதிரொலிக்கும். எனவே பொருத்தமானவற்றை செய்வது மிகப்பயனுடையது. கட்டிளமைப்பருவ மாணவர், மாணவியருடன் நல்ல நண்பர்களாக இருங்கள். நீங்களும் அந்த வயதை கடந்து வந்தவர்கள் என்பதால் அவர்கள் என்ன செய்வார்கள் என உங்களிற்கு தெரியும். பாட நேரத்தின் ஒரு சிறிய நேரத்தை அவர்களுடன் பொதுவான விடயங்களை கதைப்பதற்கு ஒதுக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் மனம் திறந்து கதைப்பதற்கான நேரத்தை கண்டுபிடியுங்கள், அவர்கள் கூறும் பிரச்சினைகளை நீங்கலாக தீர்த்து வைத்து உதவுங்கள். அவர்களது பிரச்சினைகள் வெளிவராதபடி இரகசியம் காப்பது மிகப் பயனுடையது. பொருத்தமான பெற்றோர், சகோதர / சகோதரியினர் இல்லாத கட்டிளமைப்பருவத்தினர் தமது விருப்பு, வெறுப்புகளை வெளிப்படையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பதற்கு உதவுங்கள். ஆண்களிற்கு ஆண் ஆசிரியர்களும் பெண் மாணவிகளிற்கு ஆசிரியைகளும் ஆலோசகர்களாக இருப்பது உங்களது உளநலனை பாதுகாக்க உதவும். வருடாந்தம் கல்விசுற்றுலா குறிப்பாக கட்டிளமைப்பருவ வயதினருக்கு ஒழுங்குப்படுத்தி அவர்களை அங்கு அழைத்து செல்லுங்கள். அவர்களது அறிவு, ஆற்றல், பண்புகள், நடத்தைகள், நல்ல முயைாக அமைய சுற்றுலாக்கள் உதவும். சுற்றுலாவிற்கு ஆயத்தப்படுத்தும் போதே பொது இடங்களில் நடந்து கொள்ளும் முறைகள், செய்யக்கூடியது. செய்யக்கூடாதது போன்ற வற்றை மாணவர்களுடன் சேர்ந்து திட்டமிடுங்கள். கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய அணுகுமுறைகளை பின்பற்றுவது பொருத்தமானது. இருவழி தொடர்பாடல்களிற்கும், திறந்த கருத்துகளிற்கும் சந்தர்ப்பம் கொடுத்து அவர்களது உள்ளத்து உணர்வுகளையும் அறிதல் நன்று. சிலவேளைகளில் புதிய விடயங்களையும் மாணவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள முடியும்.

ஆசிரியர்கள் கட்டிளமைப்பருவத்தினர் செயல்களில் அநாவசியமாக தலையிடு வதை தவிர்த்து அவர்களின் நடத்தைகளை சரியாக மாற்றி நெறிப்படுததி உதவலாம். கற்பிக்கும் பாடங்களின் முக்கியத்துவம், வாழ்க்கைக்கும் பாடத்திற்குமான முக்கியத் துவம், ஏனைய பாடங்களுடன் அவற்றிற்கு உள்ள தொடர்புகளையும் ஒருங்கிணைந்து கற்பிப்பது மாணவர்கள். பாடங்களின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள ஏதுவாக அமையும். பாடசாலை இடைவேளை, ஆசிரியர் வராத நேரங்களில் மாணவர்களை மைதான, அரங்க குழுச்செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது மிகப்பயனுடையது. அண்மையில் வெளிவந்த சினிமா படங்களான "சாட்டை" "குற்றம் கடிதல்", "பாபநாசம்", "காக்கா முட்டை", "அப்பா" , "அம்மா கணக்கு", "English winglish" உள்ளிட்ட பொருத்தமான படங்களையும் பாடசாலையில் ஆசிரியர்கள், அதிபருடன் பார்ப்பதோடு நாளாந்தம் பாடசாலை மாணவர்கள் சம்பந்தமான செய்திகளையும் பாடசாலை சமூகமாக கலந்தாலோசிக்கலாம். ஒருவரின் நலன் என உலக சுகாதார ஸ்தாபனம் வரைவிலக்கணப் படுத்துகின்ற உடல், உள, ஆன்மீக, சமூக, சூழலியல் சார் அனைத்தும் கிடைக்கபெற்ற ஒரு இடம் பாடசாலையாகும். எனவே மாணவர்களின் நலனை அடைவுமட்டம் என்ற குறுகிய பரப்பிற்குள் வரையறைப்படுத்தாது பரந்த உலகிற்கு ஏற்றவர்களாக்க பாடசாலை சூழல் கைகொடுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவ உளநலம்

## கட்டிளமைப்பருவ தொழிற்பயிற்சிகள், வேலை வாய்ப்புக்கள்

இலவச கல்வி என்பது, மாணவ்ரகளிற்கு மிகப்பெரிய வரப்பிரசாதம், இருந்த போதும் பாடசாலைக் கல்வியினூடாக அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகம் புகுவது முடியாத விடயம். பாடசாலை இடைவிலகல், பரீட்சைகளில் ஏற்படும் தோல்விகளால் மாணவர்கள் தொடர்ந்தும் இலவச கல்வியூடாக பட்டதாரியாக வெளியேறுவது என்பது சாத்தியப்படக்கூடிய விடயமல்ல. கட்டிளமைப் பருவ வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் பெரும்பாலும் கல்வி பொது தராதர சாதாரண பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பவற்றில் ஏற்படுகின்ற பின்னடைவுகளை தொடர்ந்து தமது வாழ்வாதார முயற்சியிலிருந்தே யாதேனும் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பாரம்பரிய தொழில்கள்**

விவசாயம், மீன்பிடி, மிருக வளர்ப்பு, மட்பாண்டத் தொழில், தச்சுத்தொழில், சிகையலங்காரத் தொழில், வீட்டு வேலை, கூலித்தொழில், குடிசைக் கைத்தொழில் போன்ற பல வாழ்வாதார முயற்சிகளில் எமது பெற்றோர் உறவினர்கள் ஈடுபட்டார்கள். அக்காலப்பகுதியில் கல்விக்கான முக்கியத்துவம் பெரிய அளவில் இருக்கவில்லை. சாதாரணமாக குடும்ப தலைவனும், தலைவியுமாக பல்வேறு வழிமுறைகள் ஊடாக தமது வருமானத்தை பெற்றுக்கொண்டனர்.தற்போதைய சந்ததி பாரம்பரிய தொழில் முறைகளில் பெரிய அளவில் ஈடுபாடு கொள்ளவில்லை. மாறாக அவர்களது தொழில் முயற்சி என்பது அன்றாடம் கையில் காசை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை களாகவே அமைகின்றன. தொழில்வாண்மை கல்வியூடாக பல்வேறு திறன்களை பெற்று நிரந்தர வருமானம் ஈட்டக்கூடிய அதிக வருமானத்தை தருகின்ற தொழில் முயற்சிகளை தெரிவு செய்வதில் இளையவர்களின் அக்கறையின்மை காணப்படுகின்றது. உள்ளூரில் நிறைந்த வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கான தொழிற்பயிற்சிகள் அத்துடன் இணைந்த தொழில்வாய்ப்புக்களை அரச, அரசசாரா அமைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இவற்றில் பெரும்பாலான தொழிற்பயிற்சிகள் இலவசமாக கிடைப் பதுடன் தொழிற்பயிற்சியின் இறுதியில் தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கான உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

## தொழில்வழிகாட்டல்கள்

ஒரு பாடசாலையின் வெவ்வேறு வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள், பல்வேறு திறன்களை, ஆர்வங்களை, ஈடுபாடுகளை காட்டுவார்கள். அவர்களில் இசை, நடனம், விளையாட்டு, பாடுதல், கைவினை பொருட்கள் செய்தல், தலைமைத்துவம், கண்டுபிடிப்பாளர்கள் என அவர்களின் திறன்கள் பல்வேறு வகையில் விரிவடைந்து காணப்படும். எமது பாடசாலைக் கல்வியில் பல்வேறு அனுகூலங்கள் இருந்தபோதும், பரீட்சைகளும், மதிப்பெண்களையும், பெறுபேறுகளையும் மையப்படுத்திய கல்வியால் மாணவர்களின் விருப்பு, வெறுப்புத்திறமைகள் இனங்காணப்படாமல் படிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியற்ற பரீட்சைகளில் தோல்வியடைந்தவர்களாக சமூகத்திற்குள் விடப்படுகிறார்கள். அவ்வாறு அல்லாமல் ஒவ்வொரு மாணவனுடனும் தனியாக கலந்துரையாடி, அவர்களின் திறன்களை இனங்கண்டு அவற்றை விருத்திசெய்து, அதற்கு ஏற்றாற்போல் தொழில் வழிகாட்டல்கள் கொடுத்து அதற்கான கல்விமுறைக்கு உள்வாங்கப்படும் போது கட்டிளமைப்பருவத்தினர்களின் காலங்கள் வினைத்திறனாக பயன்படும். அவர்கள் குறிப்பிட்ட வயதிலேயே தொழில் ஒன்றை நிரந்தரமாக பெற்றுக்கொள்ளவும், அவற்றை தக்க வைக்கவும் கற்றுக்கொள்வார்கள்.

ஆண்டு 10 இல் இருந்தே மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்துவது போல், பரீட்சையில் வெற்றி கிட்டாத போது எவ்வாறு தொழில் முயற்சிகளிற்கு பயன்படுத்தலாம் என்பதை ஆசிரியர்களும், பெற்றோரும் தீவிரமாக கலந்துரையாடி அதன் வழி மாணவர்களை வழிப்படுத்துவது இன்றைய காலத்திற்கு பொருத்தமானது.

**ஆசிரிய வழிகாட்டிகள்**

மாணவர்களை தொழில்வாண்மை தேர்வுகளை சரியாக மேற்கொள்வதற்கான ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது பாடசாலையில் நியமிக்கப்படுகின்றனர். (Carreer Guidance Teacher) இவ்வாசிரியர்களின் பணிகள், மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களிற்கு பொருத்தமான தொழில்நுட்ப கல்வி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களை கொடுப்பதோடு மாணவர்களின் திறன்களையும் நன்கறிந்து அதனை விருத்திசெய்வதாகும். இங்கு ஒரு மாணவன் க.பொ.த உயர்தரம் வரை கல்வியை பூர்த்தி செய்து, நல்ல ஆங்கில அறிவையும் பெற்றுக்கொண்டால் அவனது எதிர்காலம் வளமாக அமையும்.

**தொழில்வாய்ப்புக்கள்**

பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழக கல்வி அதன் பின்னாக பட்டதாரிகள் அரச சேவைக்கு உள்வாங்கப்படுகிறார்கள். விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக கல்வியை முடித்த பட்டதாரிகள் விரைவாக அரச, தனியார் துறைகளில் நல்ல மாத வருமானத்துடன் தொழில் ஒன்றை நிரந்தரமாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. வணிக துறையில் கல்வி கற்றவர்களிடம் அரச, அரசுசாரா , தனியார் வங்கிகளில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடிகிறது. இதில் பரிதாபப்படக்கூடிய பட்டதாரிகளாக கலைத்துறையினர் உள்ளனர். பல்கலைக்கழகங்கள் வழங்கும் கலைப்பீட பட்டங்கள் இன்றைய தொழிற்சந்தைக்கும், வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்றாற்போல் இல்லை என்பது கவலைக்குரியது. இவ்வாறாக கலைப்பீடங்களில் பட்டங்களிற்கு பதிலாகவும் இன்றைய வேலை வாய்ப்புகளிற்கு ஏற்றாற்போலும் பட்டதாரிகளை உருவாக்குவது, அநாவசியமாக இளைஞர்கள் வருடக் கணக்கில் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக வீதிகளில் விடப்படும் நிலை எதிர்காலத்தில் தவிர்க்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் தொழில் வாய்ப்புக்கள்**

யுத்தம் விடைபெற்றதன் பின்னாக உலக சந்தை திறந்துவிடப்பட உலகில் எந்தவொரு நாட்டிலும், உற்பத்தி செய்யப்படும் மின்சாதனங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் என அனைத்தும் தற்பேது வீடுகளிற்கே கொண்டு சென்று விற்கக்கூடிய அளவில் உள்ளது. இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார்கள், பாரவூர்திகள், அரிவு வெட்டும் இயந்திரங்கள், விவசாய இயந்திரங்கள் போன்றன பழைய தொழிநுட்பம் போன்றதல்ல. பாரம்பரிய வாகன தொழிநுட்பம் இங்கு பயன்படுவது மிக அரிது. எனவே இவற்றிற்கு விசேட தொழில் தகைமை, பயிற்சிகள் தேவை. அத்துடன் இவற்றை கையாள்வதற்கும், விற்பதற்கும் இளைஞர்கள் தேவைப்படுகின்றனர்.

**வாகன ஓட்டுநர்கள்**

பாரவூர்திகள், விவசாய இயந்திரங்கள், அரிவு வெட்டும் உபகரணங்கள் கட்டுமான உபகரணங்கள் போன்றவற்றை இயக்குவதற்கு பழுது பார்ப்பதற்கு இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் அனுபவமுள்ள வாகன ஓட்டுநர்கள், இயக்குனர்கள், திருத்துனர்கள் இந்தியாவில் இருந்தே அழைத்து வரப்பட்டார்கள். தற்போது ஓரளவிற்கு எமது இளைஞர்கள் இதில் ஆர்வம் செலுத்துகிறார்கள். வீதி அபிவிருத்திகளில் பயன்படும் வாகனங்களில் பணியாற்றும் பெரும்பாலானோர் தென்பகுதியை சேர்ந்த சிங்கள இளைஞர்களே பணியாற்றுகிறார்கள். பாரவூர்தி பயிற்சி நிறுவனங்கள் போதியளவில் இன்றும் தமிழ் பகுதியில் இல்லாதது ஒரு குறைபாடு. இதற்கான பயிற்சிகளுக்கு அனுராத புரத்திற்கு செல்ல வேண்டும். இங்கு மொழிப்பிரச்சினையும் தடையாக உள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**உல்லாச பயணத்துறையும் வேலைவாய்ப்புக்களும்**

படிப்படியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உல்லாச பயணத்துறை நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றது. கிழக்கிலங்கையில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் உல்லாச பயணத்துறையுடன் நிறைந்த விடுதிகள், இங்குள்ள சமையலறை, வெளிப் பராமரிப்பு, பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக உத்தியோகத்தர்கள், விடுதி பராமரிப் பாளர்கள், உடல் தொடுகை சிகிச்சையாளர் போன்றவற்றிற்கு நிறைய ஆளணியினர் தேவைப்படுகின்றனர். இருந்தபோதும் எமது இளைஞர்களை விட தென்பகுதி இளைஞர்களே இத்துறையில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்கின்றார்கள்.

**வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்**

மத்திய கிழக்கு நாடுகள், தென் கொரியா, ஜப்பான், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிற்கு வேலை வாய்ப்பிற்காக ஆண், பெண் இருபாலாரும் சென்று வருகின்றனர். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், எல்லா மாவட்டங்களிலும் தற்போது பல்வேறு தொழில் பயிற்சி, வழிகாட்டல், ஆலோசனைகள், சேமிப்பு முறைகள், தொடர்பாடல், தொழில் பாதுகாப்பு போன்ற பயிற்சிகளை கொடுத்து வருகின்றது. சாதாரண தொழிலாளர்களாக செல்வதை விட தொழில் தகைமை ஒன்றை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட தொழில் ஒன்றிற்காக செல்பவர்கள் நல்ல வருமானத் துடன் சந்தோசமாக தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள்** - National Vocational Qualification (NVQ)

இலங்கையில் தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் கடந்த பல ஆண்டுகளாக உள்ளூர், வெளிநாடுகளில் பொருத்தமான தொழில் ஒன்றை இளைஞர்கள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல்வேறு தொழிற்பயிற்சிகளையும், தொழில் வழிகாட்டல்களையும் வழங்கு கின்றது. இவ்வாறான தொழிற்பயிற்சிகளில் பயிற்றுவிக்கும் பயிற்சிகளில் பொருத்தமான உபகரணங்கள், விரிவுரை மண்டபங்கள், செயற்பாட்டு மண்டபங்கள் போதிக்கும் காலம் உட்பட பல்வேறு விடயங்களை கருத்திற்கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. அத்துடன் NVQ பயிற்சிநெறியின் இறுதிப்பரீட்சை செயலமர்வு யாவும் சர்வதேச விதிமுறைகளுக்கு அமையவே நடைபெறுகின்றன.

இதன் மூலமாக சர்வதேச தரத்திற்கு அமைவான சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்வதோடு பயிற்சி நெறியில் பெற்றுக்கொண்ட அறிவு, திறன் மனப்பாங்கு என்பன உலகமயமாக்களிற்கு ஏற்ப நீடித்து நிலைக்கக்கூடிய அதிக வருமானம் தரும் நிரந்தர தொழில் ஒன்றை ஏற்றுக்கொள்ள ஏதுவாக அமைகிறது.

**தேசிய தொழிற்பயிற்சி மூலமாக எதிர்பார்க்கப்படும் பலன்கள்**

01. வழங்கப்படும் பயிற்சிகள் உள்ளூர், சர்வதேச தொழில் வாய்ப்புகளிற்கு ஏற்றதாக அமைதல்.
02. சர்வதேச ரீதியான தரம் நிர்ணயிக்கப்படல்.
03. தொடர்ச்சியான படிமுறையான பயிற்சிகள்
04. தொழிற்சாலைகள், வர்த்தக வணிகத்துடன் தனியார் தொழில்தருநர்களுடன் பயிலுனர் இளைஞர்களை தொடர்புபடுத்தி விடுதல்.
05. தொழிற்சாலைகளின் ஆளணித் தேவைக்கும் முகாமைத்துவத்திற்கு ஏற்றவிதமான பயிற்சிகள்.
06. நெகிழ்வுத் தன்மை கொண்ட கடும் கட்டுப்பாட்டு விதிமுறைகள் அற்ற கற்பித்தல் செயற்பாடுகள்.
07. சர்வதேச மட்டத்திலான தொடர்பாடலிற்கான காலங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
08. ஏனைய தொழில் பயிற்சி நிறுவனங்களுடனான தொடர்புபடுத்துகை.
09. தற்போது தேவையானாலும் இன்னும் எதிர்காலத்திற்குத் தேவையான கற்கை நெறிகளை இனங்கண்டு உள்வாங்குதல்.

**கற்கைநெறி தகைமைகள்**

இவை ஏழு அடைவு மட்டங்களாக அவற்றில் உள்ள வெவ்வேறு அலகுகளிற்கு ஏற்ப சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது, அத்துடன் அடைவு மட்டம் - 5 பூர்த்தி செய்யும் ஒரு இளைஞன் பல்கலைக்கழக பட்டத்திற்கு இணையான ஒரு பட்டத்தையும் விரிவுரையாளராக பயிற்சி நிறுவனங்களிலும் கடமையாற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அடைவு மட்டம் | தகமைகள் | பயிற்சி உள்ளடக்கம் |
|---|---|---|
| அடைவு மட்டம் (1) | தேசிய பயிற்சி சான்றிதழ் | தொழிற் சந்தைக்கு உட்புகுவதற்கான ஆரம்ப அறிவு அனுபவம் கிடைக்கும். |
| அடைவு மட்டம் (2)<br>அடைவு மட்டம் (3)<br>அடைவு மட்டம் (4) | தேசிய பயிற்சி சான்றிதழ் | அடைவு மட்டம் 2,3,4 என்பன தொழிற் சந்தையில் வேலை வாய்ப்பு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்றன. |
| அடைவு மட்டம் (5) (6) | தேசிய டிப்ளோமா சான்றிதழ் | அடைவுமட்டம் (5), (6) என்பவற்றை பூர்த்தி செய்யும் இளைஞன் ஒருவன் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் அவர் பயின்ற தொழிற்கல்விக்கான வேலை ஒன்றை இலகுவாக ஏற்றுக்கொள் வதுடன், தொழில் மேற்பார்வையாளர், நிர்வாக முகாமைத்துவம் போன்ற உயர் பதவியொன்றையும் பெற்றுக்கொள்ள முடியும். |
| அடைவு மட்டம் (7) | பல்கலைக்கழக பட்டதாரி சான்றிதழ் | தொழில்நுட்பவியலாளர் பல்கலைக்கழக சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதுடன் விரிவுரையாளராக தொழில் பயிற்சி நிறுவனங்களில் கடமையாற்ற முடியும். |

**அடைவு மட்டம் 1 - 6 வரை, குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள மிக அண்மைய தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ள முடியும். அடைவு மட்டம் (7) ஐ பெற்றுக்கொள்ள UNIVOTEC இல் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NVQ அடைவு மட்டம் 1 -4

இளைஞர்களின் திறன்களுக்கு எற்றவிதமான தொழில்பயிற்சி வழங்கப்பட்டு ஆரம்பத்திறன் அற்ற தொழிலாளி நிலையில் இருந்து திறன் உள்ள, தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை தகைமைகள் யாவும் இவ்வடைவு மட்டங்களால் கிடைக்கப்பெறுகிறது. அத்துடன் பயிலுனர் தான் பழகிய தொழிற்குரிய தொழில் தகைமை சான்றிதழையும் இதனுடன் சேர்த்துப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இத்துடன் அதே துறையில் தொடர்ந்தும் தனது கற்கை நெறியை மேற்கொண்டு பல்கலைக்கழக டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

## NVQ அடைவு மட்டம் 5 -6

அடைவுமட்டம் 5 - 6 வரை பயிலுனர் ஒருவர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொண்டு, தான் பயின்ற தொழில்நுட்ப கல்வியை கொண்டு மேற்பார்வையாளர் (Supervisor ) அல்லது செயற்றிட்ட முகாமையாளராக ("process Manager") குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்ற முடியும். இங்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், கணினி போன்றவை நன்கு தெரியும்போது, சந்தைப் பொருளினை இலகுவாக கொண்டு செல்ல முடியும். அல்லாது போனால் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு ஏற்றாற் போல் இளைஞர்களை தயார்படுத்தி அடைவு மட்டம் 5 - 6 ஐ பூர்த்தி செய்ய உதவு கிறது. இதற்கு இடைவெளிகளை நிரப்புதல் (Cap - Filling) என பெயரிடப்படுகின்றது.

## அடைவு மட்டம் - 7

மேற்படி கற்கைநெறி கொழும்பில் உள்ள UNIVOTEC திறந்த பல்கலைக்கழகத் திலேயே கற்க முடியும். இங்கு கற்கைக நெறியை பூர்த்தி செய்யும் இளைஞன் ஒருவன் B.Tech I அல்லது B.Ed ஆகிய பட்டங்களை தனது பெயரின் பின்னால் சேர்த்துக் கொள்ள முடியும். மேற்படி பட்டதாரிகள் இவ்வாறான தொழில்பயிற்சி நிறுவனங்களில் உடனடியாக விரிவுரையாளராக நியமனம் பெறுவதோடு பகுதி நேரமாக தமது கற்கை நெறிக்கு பொருத்தமான தொழிலை செய்து மேலதிக வருமானத்தை பெற முடியும்.

## வெவ்வேறு தொழில் பயிற்சிகள்

NVQ பயிற்சி திட்டங்களின் ஊடாக ஏறத்தாழ 100 தொழில் முயற்சிகளுக்கான கற்கை நெறிகள் தற்போது தொழில்நுட்ப கல்லூரிகளில் கற்க முடியும். இவற்றில் கட்டிட தொழில் சம்பந்தப்பட்ட மேசன், தச்சுதொழில், மின்னிணைப்பு, குழாய் பொருத்துதல், குளிர்சாதன பிறப்பாக்கிகள் பொருத்துதல் உட்பட பல துறைகள் உள்ளன. வாகனம் திருத்துதல், சீர்செய்தல், சுத்திகரித்தல், வர்ணப்பூச்சு பூசுதல், அடிச்சட்டம் சீராக்கல் தொழிநுட்ப முகாமைத்துவம் உள்ளிட்ட பல பிரிவுகள் அடங்குகின்றன. அத்துடன் பராமரிப்பு (சிறுவர், முதியோர், விசேட தேவைக்குரியவர்) துறைகளில் அதிக பயிற்சி நெறிகள் உள்ளன. சுகாதார துறை, சமூக நலன், கற்பித்தல், சிகையலங்காரம் , முக அலங்காரம், முதியோர் பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு, சமையல், உல்லாச பயணத் துறை, நிர்மாணத்துறை, முகாமைத்துவத்துறை, கட்டுமானம், கணினித் தொழிநுட்பம் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடி, மிருகவளர்ப்பு, விவசாய செயற்றிட்டங்கள் என பலதரப்பட்ட துறையில் NVQ தொழில் தகைமை பயிற்சிகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**க.பொ.த சாதாரண தரம் சித்தியடையாத மாணவர்களுக்கு உயர்தரம் கற்கும் வாய்ப்பு**

தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்கப்போகும் மிக நல்ல செயல். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி உயர்தரம் கற்கத்தேவையான அடிப்படை தகைமைகளை பெறத் தவறிய மாணவர்களுக்கு உயர்தரத்தில் கல்விகற்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக நாடளாவிய ரீதியில் நான்காயிரம் மாணவர்களிற்கு தொழில்கல்வி வழங்கியுள்ளது. இதற்கென நாடளாவிய ரீதியாக நாற்பது பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டது. அத்துடன் 2018,இல், 10 000 மாணவர்கள் இவ்வாறு உள்வாங்கப்பட்டு உள்ளனர். அத்துடன் 2019 இல் க.பொ.த சாதாரண தரத்தில் உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் இணைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பாடசாலை இடைவிலகல், இளவயது திருமணம், தற்கொலை, மது, போதை பாவனை என்பவற்றை ஓரளவிற்கு குறைத்துக்கொள்ள முடியும்.

**Dr.P.Judy Ramesh Jeyakuamr**
MBBS (SL), D.Psych (COl), FMH (Canada)
Psychiatrist
BH-Valachcghenai
87th O/L Batch
K/Kanagapuram, MV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் தந்த கருணைக் கொடை

காலம் தந்த கருணைக் கொடை
காலமே பொறாமை கொள்ளும் இவரின் நடை
காலத்திற்கேற்ப உதவிய பெரிய கடை
கனகேந்திரம் தந்தை போல் எவருமில்லை
இவர் எளிமையின் விடை.....!!!

ஒவ்வொரு சிரிப்பிலும் ஓம் என்ற ஓங்காரம்
ஒவ்வொரு செயலிலும் நாம் என்ற தீர்மானம்
ஒரு நாளும் நான் என்று நின்றதில்லை
அகங்காரம் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் இவரே ஆகாரம்

சூரியனைப் போலவே சோர்வறியார்
சொந்த பிள்ளை பிழை செய்தாலும்
மன்னிப்பு என்பதற்கு இடமளிக்கார்
சொல்லில் சொல்லேறி தமிழ் முழங்கி புன்னகைப்பார்
சொல்லியது செய்யாது போனால் பூவரசால்
படை எடுப்பார்

சுயமாய் படித்தவர்களை விட- இவருக்கு
பயத்தால் படித்தவர்களே அதிகம்
பைத்தியம் என எவரும் சொல்லாது
அறிவுக்கு வைத்தியம் பார்த்தவர் என்பதே புனிதம்

படிப்பில் மட்டும் மூழ்க விட மாட்டார்
பல திறமைகளிலும் சாதனை படைக்க வேண்டும்
என்று சில இரவுகளில் தூங்க விடமாட்டார்

அம்பாள் குளம் கந்தன் குளம் அழைத்து செல்வார்
அழகாக நீந்த சொல்லி - அருகிருப்பார்
தடுமாறி தண்ணீர் குடித்தால் எடுத்து சொல்வார்
அத்தனை பெயர்களையும் ஒரு நொடியில்
அழைத்து கேட்பார்
இத்தனையும் செய்த பின்பும் - வீட்டே போகார்

சிறுவர் இல்லத்தில் படித்த
அத்தனை பேரும் வித்தகர்களே
சிலர் மாவீரமாகிய வித்துடல்களே
அத்தனைக்கும் காரணம் கனகேந்திரம் மாத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை எழுதுவோனுக்கு இவரே மூல மந்திரம்

ஆதலால் தான் பாடிப் பாடி மகிழ்கின்றேன்
இவர் பாதம் தொட்டு தொழுகின்றேன்

தன் பிள்ளை போல
பிறர் பிள்ளைகளையும் அணைத்து
வறுமை துள்ளி விளையாடிய காலத்திலும்
எங்களுக்கும் உணவளித்து
சொல்லாமல் செய்த சேவைகள் கோடி
இந்த சேவகனை பாடி பாடி போற்ற வேண்டும்
இதுவே என் கவிக்கு உயிர் நாடி

பல மகான்களை புத்தகத்தில் பார்த்தது உண்டு
படங்களில் காட்சிக் கதைகளில் கண்டதுண்டு
இந்த பிறப்பில் எம் ஊரில் பல ஏழைகள் கண்ட
மகானாய் இவர் ஒருவரே
இவர் ஞாபகத்தில் பூப்பது கூட - பெரும் நிறைதே..

சிறுவர் இல்ல ஞாபகங்களுடன்
உங்கள் தனபால்......!!!!
கனகேந்திர அப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறைக் கனவுகள்

என் ஞாபகங்கள்
வெள்ளைச்சிறகுடன்
பள்ளி வானில்
குதூகலித்தது வசந்தம்

காற்றைக் கிழிக்கும்
கால்களுடன்
அப்பாவின் விரல் பிடித்து....
அடம்பிடிப்பும் அழுகையும்

அம்மாவின் பாசம் நிறைந்த
சாப்பாட்டுப் பெட்டியும்...
அக்காவின் அரவணைப்பும்
ஆசைத்தம்பியும்

அழிறப்பறும்....
அரைவாசிப் பென்சிலும்
குட்டி போடும் மயிலிறகுடன்
புத்தகம் சுமந்த மனம்...
சுமையுடன்.... இன்று

ஒன்றைப் பாலையும்
பாலத்தின் கீழ்பள்ளமும்
பின்வீதி ஆலும்...
நாலும் + நாலும் எட்டு என
சொன்ன
பொட்டு வைச்ச ரீச்சரும்...

நினைவில் வளைகிறது
வானவில்
அகரம் தொடக்கி சிகரம்
தொடவைத்த
ஆசிரியரும்
பிரம்பு ஏந்திய பிரம்மாக்கள்

கரும்பலகை மேல்
மூலையில் எழுதிய
கனகபுரம் அ.த.க
03/06/....
வெண்கட்டியும்
வெள்ளைச் சட்டையில்
ஊஞ்சலாடிய ரிபனும்....
கருவளையமாய்
கண்ணில்

கிளித்தட்டிலும்.. கிரிக்கட்டிலும்
துள்ளிய இளமை
வாணி விழாவும் நத்தாரும்
தோரணங்களைத்
தொங்க விடுகிறது.
நினைவின் நீளமெங்கும்...

விவசாயியும், வியாபாரியும்,
விடுதலைப் போரின் வீரரையும்
கனகபுரம்
துயிலுமில்லத்தில்
கண்ணுறங்கும் காவிய
நாயகரையும்

பல்கலைக்கழகம் முதல்
பல துறைகளிலும்
மாணவரை
பிரசவித்த தாயறை
கனகபுரம்
மகாவித்தியாலயம்

மீண்டும் எப்போது.....?
பிறப்பேன் வகுப்பறையில்
அதுவரை
காத்திருக்கிறேன்
கனகபுர பழைய மாணவன்

**திரு. சண்முகம் குகசீலன்**
1988(பிரிவு) மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி நகரமும் எமது பாடசாலையும்

வடமாகாணத்தில் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்கள் அடங்குகின்றன. இதில் கிளிநொச்சி மாவட்டம் 1984ல் தனிமாவட்டம் ஆக்கப்பட்டது. அது வரையில் யாழ் மாவட்டத்தின் கீழ் தான் இயங்கியது. 1279 சதுர கிலோமீற்றர் பரப்பளவை உடையதாக அமைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டம் விவசாய நிலங்களையும், பலநீர்த் தேக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு சிறப்பான ஒன்றாக வட மாகாணத்தின் பெரிய நீர்த்தேக்கமாக இரணைமடுக்குளம் உள்ளது. இது 1921ல் ஆண்டு உருவாக்கப்பட்டது. 131,365,816 சதுர கனவளவு நீரை தன்னுள் சேமித்து வைக்கும் அளவிற்கு பெரிய நீர்த்தேக்கமாகும்.

தனி மாவட்டம் ஆவதற்கு முன் கிளிநொச்சி யாழ்ப்பாணத்துடன் இணைந்திருந்த வேளையில் கிளிநொச்சி நகரின் வளர்ச்சிக்காக 1950ல் ஆண்டளவில் அமரர். திரு.ஸ்ரீகாந்தா அவர்கள் மிகவும் பாடுபட்டார். அவரின் முயற்சியினால் தான் கனகபுரம் கிராமம் உருவாக்கப்பட்டது, ஸ்ரீகாந்தா அவர்களினால் தான் கனகபுரத்தில் 1958ம் ஆண்டு படித்து வாலிபர் திட்டம் என்ற அடிப்படையில் யாழ் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இக்கிராமத்தில் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு தான் கனகபுரம் கிராமம் உருவாகியது.

இதேபோல் கனக புரத்தைச் சூழ திருநகர், ஜெயந்தி நகர், அம்பாள் குளம், செல்வா நகர், பாரதிபுரம், கந்தன் குளம், உதயநகர், ஆனந்தநகர், ஆனந்தபுரம், முறிப்பு என பல கிராமங்கள் காணப்படுகின்றது, இந்த நிலையில் எமது கிராமங்களுக்கு ஓர் பாடசாலை வேண்டும் எனும் நிலை தோன்றியது, அதன் காரணமாகவே கனகபுரம் கிராமத்தில் பாடசாலை உருவாகியது,

"கற்றது கையளவு கல்லாதது உலகளவு"

என்பது ஔவையின் முதுமொழி. இதற்கமைய கனகபுரம் கிராமத்தில் கலங்கரை விளக்காக கனகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 1969 கார்த்திகை 11ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது,

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

என்ற வாக்கிற்கிணங்க கனகபுரத்திலும், அயல் கிராமங்களிலும் உள்ள மாணவர் களை தன்னகத்தே உள்வாங்கி அறிவுப் பசி தீர்த்தது இப்பாடசாலை. இதன் முதல் தலைமை ஆசிரியராக அமரர் திரு.பொன்னையா அவர்கள் பதவி ஏற்று எமது பாட சாலையின் வளர்ச்சிக்கு வித்திட்டார். தானே முன்னின்று காடுகளாகவும், புதர்களாகவும் இருந்த இடங்களை துப்பரவு செய்தார். மரங்களின் கீழும் கொட்டில்களிலும் தான் எமது மாணவர்கள் ஆரம்பக்கல்வியினை மேற்கொண்டனர். எமது கிராமம் புதிதாக உருவானதால் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அது மகுடம் சூட்டப்பட்டது போலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்திற்கு ஆரம்பத்தில் ஆண்டு 1 தொடங்கி 11 வரை அனைவரையும் அன்பால் அரவணைத்து அறிவுக் கண்களைத் திறந்த அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் இதன் மூலம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். சாதாரணதரம் வரை இருந்த வகுப்புக்கள் இன்னும் ஒருபடி முன்னேறி உயர்தர வகுப்புகளையும் கொண்டுள்ளது. இன்று நாம் அனைவரும் நல்லதோர் நிலையில் வாழ அடிகோலியவர்கள் இவர்களே. பள்ளி என்பது கல்வியை மட்டும் போதிப்பது அல்ல. அதனுடன் மாணவர்களுக்கு நல்லொழுக்கங்களையும் கற்றுக்கொடுப்பதாகும்.

அத்துடன் நின்றுவிடாது மாணவர்களின் தனித் திறமைகளைக் கண்டறிந்து அவர்களை அத்துறையில் சிறந்து விளங்கச் செய்ததும் எமது பாடசாலை. விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், பொது அறிவுப் போட்டிகள் மட்டுமன்றி திருக்குறள் மனனம் செய்தல், தேவாரம் மனனம் செய்தல், சமய நிகழ்வுகள் சங்கீத போட்டிகள் என்று இன்னும் பல நிகழ்வுகள் இன்றும் எம் கண்முன்னே வந்து போகின்றது.

இவ்வாறு இருக்கும் போது தான் 1984ம் வருடம் கிளிநொச்சி தனி மாவட்டமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து பிரிந்தது. இவ்வாறு ஒழுங்காக சென்ற எமது கல்விக் காலங்களில் தான் சில சில இடையூறுகள் தோன்றியது. இடப்பெயர்வுகள் எம்மையும் எம்மைச் சார்ந்தோரையும் பாதித்தது. சில மாணவர்கள் ஊரை விட்டு நாட்டை விட்டு சென்றனர். வளமான எமது கல்விச் சமூகம் சில சில இடையூறுகளை சந்தித்து தற்போது மீண்டெழுகிறது,

இன்று ஐம்பதாவது ஆண்டில் காலடி வைக்கும் எமது பாடசாலை மென்மேலும் வளர்ந்து பல நூறு மாணவர்களை சிறந்தவர்களாக உருவாக்கி நற்பெயருடனும் புகழுடனும் வாழ இவ்வேளையில் வாழ்த்தி நிற்கும்.

1989ம் ஆண்டு பிரிவு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் தோன்றியது எப்படி?

ஏறத்தாழ 400 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமி தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சூரியனில் இருந்து பிரிந்து வந்த பொருள் பூமியாகியது. ஆரம்பத்தில் சூரியனைப் போலவே பூமியும் கடும் வெப்பத்துடன் இருந்தது பிறகு வெப்பம் குறைந்து பூமி மீது மழை பெய்யத் தொடங்கியது. அந்த மழை பெருமழை ஆயிற்று சுமார் அறுபதாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து மழை கொட்டியது, இதனால் பூமி குளிர்ந்து கடல்கள் தோன்றின.

அக்காலத்தில் பூமியின் நிலப்பரப்பு இப்போது உள்ளதுபோல் பல கண்டங்களாகப் பிரிந்திருக்கவில்லை. ஒரே நிலப்பரப்பாக இருந்தது. சுற்றிலும் கடல் சூழ்ந்திருந்தது. பின்னர் நிலப்பரப்பு உடைந்து, மெல்ல மெல்ல நகர்ந்து கண்டங்களாகின. பூமி தோன்றி சுமார் 150 கோடி ஆண்டுகளுக்கு பின் அதில் உயிரணுக்கள் தோன்றின. முதன் முதலாக தோன்றிய உயிரணு கடற்பாசி என்று கருதப்படுகிறது. பிறகு ஏறத்தாழ 35 கோடி ஆண்டுகளுக்கு முன்னர், தரையில் ஊர்ந்து செல்லக்கூடிய பிராணிகள் தோன்றின.

டைனோசர்கள் என்று அழைக்கப் படும் ராட்சதப் பல்லிகள், 10 கோடி ஆண்டுகள் பூமியில் வாழ்ந்ததாகவும் ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன் அழிந்து போனதாகவும் ஆராய்வியலாளர்கள் கருதுகின்றனர்.



**மனிதன் தோன்றியது எப்போது?**

இறைவன் படைத்த ஆதாம் ஏவாள் மூலம், மனித இனம் தோன்றி வளர்ந்தது என்று கிறிஸ்தவர்களின் மறைநூல் கூறுகிறது, "மனிதனை முழு மனிதனாகவே இறைவன் படைத்தான்" என்பது இஸ்லாமிய மறைமொழி. மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆங்கில விஞ்ஞானியான டார்வின் பல ஆராய்ச்சிகள் செய்து, 1959ம் ஆண்டில் தன் முடிவினை வெளியிட்டார். அவருடைய ஆராய்ச்சியின் படி, சுமார் 45 கோடி ஆண்டுகளுக்கு முன், பூமியில் உயிர் வாழ்கை தொடங்கியது. முதுகெலும்பு உள்ள சில பிராணிகளும் இலை இல்லாத சில தாவரங்களும் அப்போது உண்டாயின.



இதைத் தொடர்ந்து நிலத்தில் ஊர்ந்து வாழும் முதலை, பல்லி, பாம்பு, ஆமை போன்ற (ஊர்வன இனத்தைச் சேர்ந்த பிராணிகள்) உண்டாயின. விலங்கு இனமும் தாவர இனமும் நிறைய பெருகின. மாமிசம் தின்னும் விலங்குகள் தோன்றின. ஊர்ந்து செல்லும் பிராணிகளில் இருந்து சில பாலூட்டிகள் உண்டாயின. ஊர்ந்து செல்லும் பிராணிகள் சிலவற்றிற்கு சிறகுகள் முளைத்தது சில வகைப் பறவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாயின யானை, காண்டாமிருகம், பன்றி, மாடு போன்றவற்றின் முன்னோடிகள் தோன்றின. தோற்றத்தில் மனிதனை போலவே உள்ள விலங்குகள் தோன்றின. குரங்குகள் சற்று வளர்ச்சியடைந்து, சற்றுப் பெரிய மூளையும், கூர்மையான கண்களும், திறமையான கைகளும் உடையனவாக உருமாறின.

இந்தக் குரங்குகளில் இருந்து தோன்றியவர்களே இன்றைய மனிதர்கள். இதுவே டார்வின் சித்தாந்தம். குரங்கில் இருந்து மனிதன் நேரடியான தோன்றியிருக்க முடியாது என்றும் இக் குரங்குகளும் பொதுவான ஒரு மூதாதையர்களில் இருந்து தோன்றியிருக்க வேண்டுமென்றும் வேறு சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பொதுவாக 'குரங்கில் இருந்து தோன்றியவன் மனிதன்' என்ற கொள்கை உலகம் முழுவதும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மனிதனைப் போல தோற்றம் கொண்ட குரங்குகள்தோன்றி, ஒரு கோடி ஆண்டுகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. குரங்கில் இருந்து மனிதன் தோன்றி சுமார் 10 இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன.

**கற்காலம்**

ஆரம்பத்தில் மனிதன் காட்டுமிராண்டியைப்போல வாழ்ந்தான். உணவு தேடுவது ஒன்றே அவன் வேலையாக இருந்தது, முன்னர் கொடிய மிருகங்களிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், மிருகங்களைக் கொன்று உணவாக்கிக் கொள்ளவும், கரடுமுரடான கற்கருவிகளை உருவாக்கிக் கொண்டான். கற்களை உரசி தட்டியும் நெருப்பை உருவாக்கக் கற்றுக் கொண்டான். இறைச்சியைச் சுடவும், குளிரில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் நெருப்பை பயன்படுத்தினான். எலும்புகளை ஊசிகளாகப் பயன்படுத்தினான். தோலை ஆடையாக்கி தன் உடலை மறைக்கத் தொடங்கினான். மரப்பட்டைகளையும் இலைகளையும் அணிந்தான். தன் எண்ணங்களை வெளிப்படுத்த சைகைகளையும், பிறகு ஒலிகளையும் பயன்படுத்தினான். மெல்ல மெல்ல பேச்சு உருவாகிற்று.

பின்னர் கற்கால மனிதனிடம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் எற்பட்டது, கி.மு 12,000 முதல் கி.மு 5,000 வரையிலான இக்காலம் "புதிய கற்காலம்" என அழைக்கப்படுகிறது. இக் காலத்தில் தான் நாகரிகம் தொடங்கியது என்று கூறலாம். மனிதன் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவாறு வாழக் கற்றுக் கொண்டான். மக்கள் நதியோரங்களில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினர். சுட்ட மண்ணால் பாண்டங்கள் செய்தனர். நீர் சுமக்கப் பாத்திரங்கள் செய்தனர். வீட்டில் நாய், குதிரை, கழுதை போன்ற விலங்குகளை வளர்க்கத் தொடங்கினர். பலர் மேற்கு ஆபிரிக்கா, வடஆபிரிக்கா, போன்ற பகுதிகளில் குடியேறினர். சிலர் ஐரோப்பாவிற்குள் பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, ஜேர்மனி, ஆகிய பகுதிகளுக்கும், சிலர் மொசப்பத்தோமியா (இன்றைய ஈராக்) சிரியா ஆசியா போன்ற பகுதிகளுக்கும் சென்றனர். வடமேற்கு பாரசீகத்திலும் குடியேற்றங்கள் எற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காலத்தில் பல இனத்தவர்களிடையே கலப்பு ஏற்பட்டது. புதிய கற்கால மனிதர்கள் இந்தியாவில் நெல்லை, மைசூர், மலபார், கடப்பை ஆகிய இடங்களில் வாழ்ந்தார்கள்.

**உலோக காலம்**

புதிய கற்காலம் முடிந்ததும், உலோக காலம் கி.மு 3000ல் தொடங்கியது. ஆசியா, ஆபிரிக்காவிலும் இருந்தே உலோக காலம் ஐரோப்பாவிற்கு பரவியது, தங்கம்தான் முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டு ஆபரணங்களாக பயன்படுத்தப்பட்டது, காலப்போக்கில் தினசரி தேவைகளுக்கான பாத்திரங்கள், கருவிகள், ஆயுதங்கள் செய்வதற்கு செம்பு கண்டுபிடிக்கப்பட்டது, முதலில் சைப்ரஸ் தீவிலும், சினாய் தீபகற்பத்திலுமே இது கண்டுபிடிக்கப்பட்டது, பொருளாதார காரணங்களாலும் பாதுகாப்புக்கருதியும் மனிதர்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் உலோகங்களின் உபயோகம் பற்றிய கருத்துக்கள் பல்வேறு இடங்களில் வாழ்ந்தவர்கள் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டன.

தகரம், செம்பு, வெண்கலம் ஆகிய உலோகங்கள், சைல், எகிப்து, மொசப்பத்தோமியா ஆகிய பகுதிகளில் கி.மு 3000ல் பயன்படுத்தப்பட்டன. வாணிபம், போர், இனக் கலப்பு காலமாக "உலோகக் கால நாகரிகம்" வளர்ந்தது. இதன் காரணமாக சுரங்கம் தோண்டுதல் போக்குவரத்து சாதன அபிவிருத்தி என்பன ஏற்பட்டன. வாணிபம் பெருகியது. பாலைவனம் கடல், நதி போன்றவற்றை கடக்க மனிதன் கற்றுக்கொண்டான். கட்டிடங்கள், பிரமிட்டுக்கள் , கோவில்கள், வீடுகள் கட்டப்பட்டன. வாள், ஈட்டி, கத்தி போன்றன தயாரிக்கப்பட்டன. கலைகளும், அழகுப் பொருட்களும் உருவாகின.

இரும்பு எகிப்தியர்களால் கி.மு 3000ம் ஆண்டிலேயே பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பியர்கள் கி.மு 1000ல் தான் அதன் பயனை அறிந்தனர். இந்தியாவில் அதன் உபயோகம் மிக முன்னதாகவே இருந்தது. உலோக காலம் உலகின் போக்கையே மாற்றியது என்று கூறலாம். மனித வாழ்க்கை நாகரிகம் அனைத்தும் மாறின. நாகரிகம் வெகு வேகமாக வளரத் தொடங்கியது. என்று கூறலாம்.

தொகுப்பு
**திரு. கனகேந்திரம் இளவழகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. J. S. Rohan Savarimuttu

B.A (English), M.A.(English), M.A. (Philosophy & Religion), M.Sc. (Psychotherapy & Counseling), M.Phil. (English), CTE., DIM., PGDHE., PGDIM., Ph.D.,

(No. 58, Depot Road, Kanagapuram, Kilinochchi)
Senior Lecturer in English
Department of Languages and Communication Studies,
Faculty of Business and Communication Studies,
Trincomalee Campus,
Eastern University, Sri Lanka

Memories are still fresh even after all the turmoil and travels undertaken from this soil of Kilinochchi in 1985 when the hours were gloomy for a child who already had his father undergoing his university assignment in Belgium's prestigious Katholieke Universiteit Leuven. I have been cherishing my memories about Kilinochchi and most importantly about the Kanagapuram Maha Vidiyalayam since my departure in 1985 where I had to spend some time in Colombo and attend a Tamil school over there. When I landed in Belgium I was introduced into a new educational system known as the Rudolf Steiner Schools, but even then the memories of Kanagapuram Maha Vidiyalayam haunted me in my dreams, the morning assemblies, the small fights, the biscuits that were rationed, and the church behind the school etc. Well let me begin anew if I have to make some sense to the reader.

I am the firstborn to my parents Mr. Jacob Savarimuttu (who was fondly called as Jaha Annan by the Ambal Kulam and Kanagapuram people) and Mrs. Mary Agnes Savarimuttu (who was fondly called as Shantha Akka by the Ambal Kulam and Kanagapuram people) who were running an NGO known to many as EDCK (Education Development Centre Kilinochchi) at Ambal Kulam since 1980; and a brother to Mrs. Rogina. J. S. Savarimuttu (who at present is heading the Department of Psychiatric Nursing in a Higher Educational institution in India). Since my parents were working with and for the people, they wanted me to study in a school like all the other children and I still remember the evening where my Dad and my Mum took me around the school through the road on all four sides telling me that this is a good school for me to study and be happy. I still do not understand what happened to me because since then I started to like this school to the extent that it was always dear to my heart. When I joined the first day, I still fondly remember my sister who came crying to the teacher in my class begging her to be admitted into the class promising that she will study well. I also remember the days

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

where I took all the biscuits home to my sister who will be eagerly awaiting my return. Her continuous efforts in meeting the teacher of my class secured her a position as a student in the play-school when I was promoted to 1st Std (Well that's what she still believes). I fondly remember my teacher teaching me additions and I could not understand it, since I was over imaginative and when I came home my mother used Tamarind seeds to explain addition. The next thing that is of prime importance to me is the Sports Day of the school. Being a little one I still remember that we were taken to a big play-ground where there were four houses with lots of flags representing each house, and remember only walking here and there getting extra glucose powder from packets which were reserved for sportsmen and sportswomen. All my travels and encounters with many educational institution put me in a position to comment that the sports observed at Kanagapuram Maha Vidiyalayam is on par with all the leading academics cutting across boundaries and cultures. Whenever I witnessed sports activities I always fondly remembered how grand it was done at Kanagapuram Maha Vidiyalayam.

I used to fondly walk from my home at Ambal Kulam to Kanagapuram Maha Vidiyalayam and then back home talking with friends where some of my friends used to buy sweets from the only *Pettikadai* known to many as Ganeshan Kadai at Ambal Kulam and share it with me and my sister. I also remember that once during the rainy season while I returned from school I was playing in almost all the puddles of water found between the school and my home and then happened to develop Scabies (since I did not heed to the warnings given by my sister) and had to dip my foot in hot salt water for many days.

Then in the year 1982, my parents moved from Ambal Kulam land to a new land at No. 58, Depot Road, Kanagapuram, so as to expand their project by having a Children Home and facilitating Free Tuition for nearly more than 200 students every day. I remember that I used to walk to school all the way from Plot No. 58 with my sister and few boys from the Children Home whose names which I can fairly recollect as Mr. Henry, Mr. Srikantharaja, Mr. Thanabalan, Mr. Thambiraja, Mr. Muth, Mr. Sabapathi which will be joined by a set of boys and girls from the opposite house such as Dr. Judy, Ms. Jayanthi (Late), Mrs. Suganthi, Mr. Sam, and by Mrs. Indrani (who lived adjacent to the land which had the St. Joseph statue) who would have come there already awaiting us to join her or vice versa. On our way to school we

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

would stop at Mr. Kanegendran Mama's house where the group swells with the inclusion of Mr. Azhagan, Mr. Ilango, and Mrs. Manimegalai. This used to be the biggest gang that used to move towards the school with such enthusiasm.

Another incident I used to remember and cherish is the *Ponvandu* (a greenish shiny beetle) business...my God each guy had his own *Ponvandu* (a greenish shiny beetle) which was either exchanged for biscuits or very little sum of money and students were busy parading theirs and having races amongst these poor beetles with lots of shouts where even clicks were formed and this became the major political structure for us the little ones in the school. Even I had a chance to own one, which I preserved in an empty matchbox and carried it every day to school but faintly remember that one day due to my carelessness it flew away.

Amidst all this, I chanced to go to the Sri Lanka Broadcasting Corporation at Colombo with my aunty and a few more children to partake in the children's programme, where I remember with all clarity the way I introduced myself with so much of pride in uttering my school's name. I also sang a song that was taught to me at school about train and the green and red flags.

Even though I had studied only upto 3rd Std at Kanagapuram Maha Vidiyalayam, when I landed at Kilinochchi after my long refugee odyssey in the house of Mr. Henry at about 7.30 pm I still remember with all fondness the meeting of Mr. Robert Jeyaseelan who told me that he was my second standard classmate at Kanagapuram Maha Vidiyalayam and shared his love and affection and stories about the golden days at Kanagapuram Maha Vidiyalayam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வாழ்வில் இணையம்

நாம் ஒரு மிகப்பெரிய தொழில் நுட்பப் புரட்சி (The era of New Technology) நடந்து கொண்டிருக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். என்பதில் ஐயமில்லை. இதில் கணினி சார் தொழில் நுட்பத்தில் இணையம் மற்றும் அதன் ஊடான சமூக வலைத்தளங்கள் என்பன முக்கியமானவையாகும். இவை பற்றிய புரிதல்கள் போதியளவு இதனை எதிர்கொள்ளும் எமது இளைய தலைமுறைக்கு இருக்கின்றதா என்பதையும் வளர்ந்து வருகின்ற மூன்றாம் உலக நாடான இலங்கை போன்ற நாடுகளில் இதனுடைய தாக்கம் பற்றியும் இக் கட்டுரை வினவ முயல்கின்றது.

இன்று உலக அளவில் 56% மக்கள் இணையத்தை பயன்படுத்துகின்றனர். (3.2million), இவற்றில் பெரும்பான்மையாக ஆசிய நாடுகளே அதிகளவில் உள்ளன. சீனா, இந்தியா, USA என்னும் வரிசையில் இலங்கை **32** வது இடத்தில் இருக்கின்றது. இலங்கையில் **6.71** million மக்கள் அன்றாடம் இணையத்தில் வலம் வருகின்றனர். இவர்களில் 92% மக்கள் சமூக ஊடகங்களை (6million) பயன்படுத்துவதாகவும் இதில் Facebook (90%), Whatsup(97%), Viber (49%), Instagram(13%) போன்றவை முதன்மையானதாகும். எனினும் இன்றைய சூழலில் 63% இலங்கையர்கள் சமூக ஊடகங்களில் இருப்பவர்களாகவும் இத் தொகையானது ஒவ்வொரு வருடமும் 20 -25% ஆல் அதிகரித்து வருகின்றது. எனும் புள்ளி விபரங்களையும் காணக் கூடியதாக உள்ளது. 'Seven media' group இன் ஆய்வறிக்கையின்படி இணையத்தை பயன்படுத்தக்கூடிய கையடக்கத் தொலைபேசிகள் *Smart phone) பரவலாக வயது வேறுபாடின்றி எல்லோரிடமும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (Android mobile 63%, ios 36%)

மேற்குறிப்பிட்ட புள்ளி விபரங்களின்அடிப்படையில் இலங்கையில் இணையம் மற்றும் சமூக ஊடகப் பாவனை வளர்ச்சி மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. எனும் உண்மையை மறுக்க முடியாது. அதே நேரம் இவற்றினால் வரும் பாதிப்புக்கள் அதிகரிக்காமலும் இல்லை. எனவே தான் இவை மீதான நுண்ணறிவு. எமது இளைய சமூகத்திடையே கூற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

மேலும் இந்த சமூக ஊடகங்களை பெண்களை விட ஆண்களே அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். எனும் அதிர்ச்சிகரமான உண்மையையும் ஓர் ஆய்வு குறிப்பிடு கின்றது. இதனுடைய தாக்கம் எமது சமூக பண்பாடு மற்றும் பொருளாதாரத்தில் எதிரொலிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை.

இச் சமூக ஊடகங்களால் கவரப்படும் இளைஞர்கள் தங்களது கருத்துக்களை பொது வழியில் ஏற்றப்படும் போது ஏற்படும் தாக்கங்களைக் கண்டு கொள்வதில்லை. அப்போதைய மகிழ்ச்சி மற்றும் நண்பர்களையோ மற்றவர்களையோ வியப்படைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவைப்பதற்காகத் அவர்களை எந்த எல்லைக்கும் கொண்டு சென்று விடுகின்றது. இப் பரந்து விரிந்த தொழில் நுட்ப உலகத்தில் தங்களது செயலுக்கு உடனடி அங்கீகாரத்தை இவர்கள் பெற்று விடுவதாக எண்ணுகின்றார்கள்.

இணையத்தில் (சமூக ஊடகத்திலும்) ஒருமுறை ஒரு பதிவையோ அல்லது புகைப்படத்தையோ பதிவேற்றி விட்டால் அதனை நாம் ஒருபோதும் மீளப்பெறவோ அல்லது இல்லாமல் செய்யவோ முடியாது என்பதை பலபேர் அறிந்திருப்பதில்லை. தங்களது செயலியில் இல்லாமல் செய்து விட்டால் அது இணைய உலகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாக எண்ணிக் கொள்கின்றார்கள்.

இலங்கையில் ஒருவர் ஒரு நாளைக்கு *30* நிமிடங்கள் வரை facebook இல் செலவிடுவதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. இது இரண்டு வருடங்களிற்கு முற்பட்ட அறிக்கை என்பதால் இன்று இன்னும் அதிகரித்து இருக்கும். என்பதை எண்ணக்கூடியதாக இருக்கின்றது. இச் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதில் Philippines, Thailand, Indonasia போன்ற ஆசிய நாடுகளே முன்னணியில் இருக்கின்றன. இதில் வளர்ந்த நாடுகளான USA *($24^{th}$)* மற்றும் Canada *($30^{th}$)* இச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் குறைவாகவே உள்ளன. 'Global Digital Report' இன் படி Germany (40%) மற்றும் Japan (39%) போன்ற தொழில்நுட்பத்தில் முன்னேறிய நாடுகள் மிகக் குறைவாகவே தங்களது நேரத்தை சமூக ஊடகத்தில் செலவிடுகின்றனர்.

சமூக ஊடகம் என்பது ஒழுங்கு படுத்தப்படாமல் இருக்கும் மிகப்பெரிய ஊடகமாகும். ஒவ்வொரு பதிவையும் இதன் மீது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது அதனுடைய நம்பகத்தன்மை பற்றி ஆராய வேண்டிய கட்டாயம் உள்ளது. மேலும் மருத்துவம் சார்ந்த பதிவுகளையோ அல்லது தனிமனிதர் சார்ந்த பதிவுகளையோ பகிரும்போது அதனுடைய பாதிப்புப் பற்றி நாம் அறிந்திருப்பதில்லை. இதற்கு உதாரணமாக எம் கண்முன்னே இலங்கையில் நடந்த படுகொலைக்கு பின்னான இன மோதலில் சமூக ஊடகங்களின் பங்கு வந்து நிற்கின்றது. இதனை அடிப்படையாக் கொண்டே facebook நிறுவனம் தற்போது ஒரு சமூகத்திற்கு அல்லது தனி மனிதனுக்கு எதிரான கருத்துக்களை தொடர்ந்து பரிமாறுவதை (Troll) தடுக்க முயற்சி எடுத்திருக்கின்றது.

இவை போக இன்றைய சூழலில் சமூக ஊடகங்கள் வழியாக எங்களை அறியாமலே எம்மை யாரோ பயன்படுத்துகிறார்கள். தங்களது சித்தாந்தங்களையோ அல்லது அரசியல் தேவைகளையோ எம் மீது திணிப்பதை கண்கூடாகக் காண முடிகின்றது. இதற்கு உதாரணமாக **2016** இல் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தல் மற்றும் பிரித்தானியாவின் ஐரோப்பிய வெளியேற்றம் (Brexit) போன்றவற்றில் சமூக ஊடகத்தின் பங்கு மிகப் பெரியதாகும். இன்றைய அமெரிக்க அதிபர் Donald Trump வெற்றி பெறுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவிலுள்ள Cambridge Analytica எனும் நிறுவனம் **100** milllion அமெரிக்கர்களின் Facebook கணக்குகளைக் களவாடி அதனைப் பயன்படுத்தி மக்களிடையே மனமாற்றத்தினை ஏற்படுத்தி தேர்தலில் வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள் என்பது எல்லோரையும் வியக்க வைக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை சமூக ஊடகங்கள் பொழுதுபோக்கு வீடியோக்களைப் பார்ப்பதற்காகவும் (50%), செய்திகளைப் பார்ப்பதற்காகவும் (27%) பெரும்பாலானவர்கள் பயன்படுத்துகின்றனர். மேலும் இச் சமூக ஊடகங்கள் மற்றும் இணையம் என்பவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவதனால் எமது உடலில் ஏற்படும் மாற்றங்களையும், மனதில் ஏற்படும் மாற்றங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. இவற்றால் ஏற்படும் பாதிப்புப் பற்றி நாம் pinpoint இல் கூறிவிட முடியாது. இவை எற்படுத்தும் தாக்கத்தின் மூலம் மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றம் காரணமாக இன்றைய இளைஞர்களிற்கு போதைப்பொருள் மற்றும் மதுபானத்தின் மீதான நாட்டம் அதிகரிக்கின்றது எனக் கூறப்படுகின்றது, (some studies link internet addiction disorder to physically changing the brain structure)

Bergan Facebook Addiction Scale (BAFS) இன் அடிப்படையில் இலங்கையின் Facebook addction அளவு கோலானது **2.84** என கணிப்பிடப்படுகின்றது. இது Test Value ***3*** ஐ விட குறைவாக இருக்கின்ற போதிலும் இவை அதிகரிக்கும் பட்சத்தில் ஏனைய நாடுகளைப் போன்று கருத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினையாக இது உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தான் இணையங்களிலோ அல்லது சமூக ஊடகங்களிலோ கூடுதலாக நேரம் செலவிடுவது பல்வேறு பாதிப்புக்களை உடலளவிலும் மனதளவிலும் ஏற்படுத்தும். இதனை வயது வந்தவர்கள் உணர்ந்து, தமது இளைய சமூகத்தை இதிலிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலும் கடமையிலும் உள்ளனர். இல்லையெனில் நாம் ஒரு வளமற்ற எதிர்கால சமூகம் உருவாக வழி கோலுகின்றோம்.

இணையத்தை கூடுதலாகப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள்

Symptoms of Internet Addction Disorder

- Isolation — தனிமைப்படுத்தல்
- Depression — மன அழுத்தம்
- Loneliness — ஏகாந்தநிலை
- Mood swings — மனநிலை மாறுபாடு
- Dishonesty — கண்ணியமின்மை
- Anxiety — பதட்டம்
- No sence of time — நேரம் கழிதல்பற்றிய உணர்வின்மை
- Avoidence of work — வேலை செய்வதைத் தவிர்த்தல்

1993ம் அண்டு பிரிவு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்பாட்டுத் தெருவோரப் பண்பாடு

செம்பாட்டு தெருவோரம் ஓர் பண்பாட்டுக் கலைக்கூடம்
மண்பாட்டு வாஞ்சையுள்ள கொள்கை சேர் எழில் கூடம்
நாற்புறமும் பாலை மரம் அதனிடையே ஆலமரம்
ஆசான் பதியென்றால் மீதியெல்லாம் இவையன்றோ

சிந்தை கலங்கி நிற்க நாடு சீரிழந்து நிற்கையிலே
சீராக ஒரு பள்ளி சிதறாமல் நடை போட்டு
விந்தை பல புரிந்து இன்று பொன் விழாவும் கண்டதுவே

கூடங்கள் மாறிச்செல்ல பாடங்கள் மாறிவரும் - எல்லாமே
பாடமென்றால் ஏன் இந்த மாற்றமென்றோம் - ஆனாலும்
அவையெல்லாம் அவனியிலே தேவையென்று
சிறகடித்து சீமையெல்லாம் பறக்கையிலே சீராகக் கண்டு கொண்டோம்

அ-அம்மா, ஆ-ஆடு இது தானே ஆரம்பம்
காருண்யம் கண்டு கொள்ள இவைதானே அடிவண்ணம்
காலை ஒரு தேவாரம் அதனருகே கர்த்தருக்கு வழிபாடு
எம்மதமும் சம்மதமென ஈரிசையும் செவி சேரும்

செல்லச் சண்டைகள் சின்னச் சின்ன கீறல்கள்
சொல்லி வைத்த சிறு பொய்கள் சொல்லாத பேருண்மை
இவை தானே பள்ளியறை

அஞ்சு வயசிருக்க அட்சரமே ஆச்சாரமென்றார்
வாய்ப்பாடு தேவையென்றார் வாய்ப்பாட்டும் வேண்டுமென்றார்
பாலர் கதையொன்று பலநீதிக் கதை சொன்னார்
புலால் மறுத்தலே பாடமென்றார் - இல்லை
உணவுச் சங்கிலியே வாழ்க்கை யென்றார்

ஆசான் கையிருக்கும் அன்போடு ஒரு பிரம்பு
கொண்டதோர் சிறு தழும்பு இவை இன்னும் எம் தலை குட்டும்
யார் அறியா தவறெல்லாம் யாம் புரியும் போதெல்லாம்
இவையெல்லாம் பாடமென்று இருக்கையிலே...

மானுட உரிமையென்னும் பேச்சொன்று மடை திறந்து வந்தேற
தடி வேண்டாம் தடுமாறும் போது பிடி வேண்டாம்
அடி வேண்டாம் ஆசானின் அணைப்பும் வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிந்தோர் வார்த்தை வேண்டாம் கடுகளவும் மிடி வேண்டாம்
படி தாண்டி செல்ல ஓர் படி வேண்டாம்
இவையெல்லாம் இவரின் உரிமையென்றால்
அவையெல்லாம் செத்தொழிந்து போகட்டும்.

பெற்றதனால் பேறு கொண்டவரின் மெத்தனத்தால் - சூழல்
செத்ததுவோ அத்தனையும் அழிந்ததுவோ
யுத்தமே எனைத் தொலைத்தது என்போரும்
சத்தமே இன்றி சமூகத்தை கொல்வோரும்
நித்தமே எனக்கினி இதுவென சலிப்போரும்
பட்டமே என்பிள்ளைக்கு பகட்டான வாழ்க்கை தரும் என்போரும்
கிட்டவே கிட்டாது உமக்கிந்த சமூகம்

சுட்டெரிக்க விடும் அத்தனையும் போகட்டும்
போதிமரம் வேண்டாம் ஞானத்தை தேடிவர - மறுபடியும்
அத்தனையும் வேண்டுமென்று ஆசான் கைபிடியுடன்
அழகாக இப் பள்ளியிடும் உம் பிள்ளைகளை.....

1993 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பிரிவு
பழைய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் நினைவுகள்

அன்னையின் அரவணைப்புக்கு மேல்
ஆசிரியரின் அரவணைப்பைத் தேடிய நாட்கள்
அந்த நாளை இப்போது நினைத்தால்
ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறக்கிறது - என்மனதில்

நண்பர்களின் இணைப்பில் நாட்கள் புரண்டோட
நல்லதொரு விருட்சமாய் அதிபரும், ஆசான்களும்
எமை நன்நெறியில் இட்டுச் சென்றதினால்
நல்லதோர் நிலை கண்டோம் இப்போது

கனகபுரம் பள்ளியில் சாதாரண தரத்தில்
ஊற்றெடுத்த தோழர்களை முதன்முதல்
உயர்தரத்திற்கு உயர்த்திச் சென்று பெருமை
சேர்த்ததும் என் பிரிவுத் தோழர்களே!

சின்னச் சின்ன வண்ணப்பூக்களாய்
சிறகடித்த அந்த நாட்களை
இப்போதும் நினைக்கும் போது
விழியோரம் நீர் கசியும்

நட்புடன் தோள் சாய்ந்த அந்த நாட்கள்
பழமையாகிடுமோ எனும் ஏக்கம்
பசுமரத்தாணியாய் இன்று என்மனதில்
பதிந்து விட்டதே என் செய்வேன்.

பள்ளி வளாகம் முழுவதும்
ஓடித்திரிந்த நாட்களை எண்ணி
பொன் விழாக்காணும் இவ்வேளை
புல்லரிக்கின்றதே என் தேகம்....

**திருமதி. சு.தவயோதினி**
1993 (O/L) பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரம் மகா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டதும் பெற்றுக்கொண்டதும்.....

"கனகம்" என்பது தாமரை இத்தாமரையைப் போல சேற்றில் வளர்ந்து பூசைப் பொருளாக மாற்றம் பெற்ற செந்தாமரை போல இந்த சமூகத்தில் முகவரியற்ற பலருக்கு முகவரி கொடுத்தது எமது பாடசாலையாகும். 1988ம் ஆண்டு தரம் - 06 இல் இப்பாடசாலையில் இணைந்து கொண்டேன். இப்பாடசாலையில் படித்த வாலிபர் திட்டத்தின் பயனாளிகளின் பிள்ளைகளும் ஏனைய அயற்கிராமத்திலுள்ளவர்களின் பிள்ளைகளும் கற்று வந்தனர். இங்கு மத நல்லிணக்கமும், சகோதரத்துவமும், ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் நற்பண்பும், அதிபர், ஆசிரியர்கள் இணைந்து ஒற்றுமையாக செயற்பட்டு வந்தனர்.

இப்பாடசாலையானது கிளிநொச்சியிலுள்ள ஏனைய சிறந்த பாடசாலைகளுக்கு சற்றும் தளராது, கல்வியிலும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளிலும், கலைநிகழ்வு களிலும், சிறந்து, விளங்கியது. அதிபர் திரு.க.ஆறுமுகதாஸ், உப அதிபர் அந்தோனிப்பிள்ளை ஏனைய ஆசிரியர்கள் தலைமையில் சிறந்த சேவையாற்றி வந்தனர். பாடசாலை மாணவர்கள் தமக்கிடையே ஒற்றுமையாகவும், சிறந்த பண்புடையவர் களாகவும் காணப்பட்டனர். நாட்டில் யுத்தம் நடைபெற்று பொருளாதாரத்தடை கடுமையாக இருந்த காலமது எமது பாடசாலையிலும் அநேக நண்பர்கள் "சீருடையை கலைத்து வரியுடையை" தரித்து கொண்டனர், விடுதலைப் போராட்டத்தில் பல தியாகங்களை செய்து மாவீரர் ஆயினர். எமது அதிபர் நல்ல தமிழ் பற்று மிக்கவராகவும், போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்ந்தவராகவும், தமிழ் உணர்வும், தாயகப் பற்றும் உடையவர்களாக எம்மையும் உருவாக்கினார் வழிகாட்டினார்.

எமது 1993 வகுப்பு இரு பிரிவுகளைக் கொண்டது நன்றாக படிப்பவர்கள், "A" வகுப்பிலும் ஏனையவர்கள் "B" வகுப்பிலும் கற்று வந்தோம் தரம் 11 இல் இந்நிலை மாற்றம் பெற்று சகலரும் இணைந்து கல்வி கற்றுவந்தோம். யுத்தம் காரணமாக பலர் எம்முடன் வாழ்ந்தவர்கள் வித்துடல்களாக வீரவணக்கம் செலுத்திய பின்னர் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் நோக்கிக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்நிலையில் 1993 O/L பரீட்சை நடைபெற்றது. நன்றாக படித்து வெற்றி பெற வேண்டும் என்பதை ஆசிரியர். குமாரலிங்கம் அவர்கள் வறுமையிலும், பசியிலும் வாடிய என்னைப் போன்ற மாணவர்களுக்கு உணவு வழங்கி எம்மை கண்டித்து, தண்டித்து வளப்படுத்தினார் 1993 O/L பெறுபேறு வந்த போது 70% சித்தி எமது மாணவர்கள் பெற்றதனால், கனகபுரம் அ.த.க பாடசாலை வரலாறு மாற்றம் பெற்றது, எமது அதிபர் க.ஆறுமுகதாஸ், எமது பாடசாலையை கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு கொண்ட பாடசாலையாக மாற்ற பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டார். இதற்கு அயல் பாடசாலை சமூகங்கள் விரும்பவில்லை ஆயினும் கனகபுரம் A/L பாடசாலையாக மகாவித்தியாலய மாக பரிணமித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகபுரம் மகாவித்தியாலயத்தின் 1996 ஆம் ஆண்டு முதலாவது A/L வகுப்பு எமது வகுப்பாகும். 1996 A/L வகுப்பில் முதல் தடவையிலேயே 4B பெறுபேறு பெற்று நான் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டேன். தவிர்க்க முடியாத காரணங்களால் பல்கலைக்கழகம் செல்லவில்லை, மாணவத் தலைவனாகப் பல்வேறு தலைமைத்துவப் பண்புகளை என்னுள் வளர்த்தது இப்பாடசாலை.

கனகபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இப்பாடசாலை எமது தாயக விடுதலை போராட்டத்திற்கும், கல்வி சார் நடவடிக்கைகளுக்கும் பெரும் பங்காற்றி வருகின்றது. இன்றும் கிளிநொச்சியிலுள்ள அரச தனியார் துறைகளில் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த பணியாற்றி வருகின்றனர். எமது கனகபுரத்திற்கு இன்னும் ஒரு சிறப்பு கனகபுரம் "மாவீரர் துயிலும் இல்லம்" எமது பாடசாலை மாணவர் விடுதலைப் போரில் தம்முயிரை ஈந்த அநேகர் வாழும் இடம் அதுவாகும். இத்துயிலும் இல்லத்தின் அஞ்சலி நிகழ்வுகளிலும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளிலும், கலைநிகழ்வுகளிலும் எமது மாணவர்கள் பங்கேற்றனர்.

போராட்டம் மௌனிக்கப்பட்டு யுத்த மற்ற இந்தச் சூழலில் பொன்விழாக் காணும் கனகபுரம் மகாவித்தியாலயம் கடந்து வந்த பாதைகள், பல்வேறு அனுபவங்களாகும். எம்முடன் கல்வி கற்று, தாய்நாட்டை நேசித்து, களமாடி உயிர்நீத்த நண்பர்களே எம் தோழியரே, வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து வாழும் நண்பர்களே உங்கள் அன்பை தியாகத்தை நினைத்து நன்றி கூறுகிறேன்.

இன்று கனகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களே! நீங்கள் படிக்கும் இந்த பாடசாலை உங்களை நல்ல மனிதர்களாக மாற்ற வேண்டும், சமூக சிந்தையும், சமய நல்லிணக்கமும் கொண்டவர்களாக உங்களை மாற்றட்டும், இங்கே என் நண்பர்கள் கல்வி கற்றனர். தாய் நாட்டிற்காக தமது எதிர்காலத்தை தியாகம் செய்தனர். என்பதை மறந்துவிட வேண்டாம்" எனத் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

"இன்று கனகபுரம் மகாவித்தியாலயம் பொன் விழாக் காண்கிறது. கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் சிதைந்து போயுள்ளது" விடுதலைப் போராட்டத்தில் நேரடியாக களமாடி உயிர்நீத்தவர்களுக்கு வணக்கம் செலுத்தி, எமது இரத்த உறவுகளின் நினைவுடன் வாழும் அனைவருக்கும் நன்றி கூறி கனகபுரம் மகாவித்தியாலயம் வளர்ந்து அநேகருக்கு வழிகாட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பழைய மாணவன் 1993
வண : S.துரைரத்தினம் (Dip.in tech.B.Ph)
அகில இலங்கை சமாதான நீதவான்
தென் இந்திய திருச்சபை
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்திலிருந்து எழுந்தவை.......

1) இளந்தென்றல் அசைந்தாட
பட்சிகள் சிறகடிக்க அந்த
இராகங்களை ரசித்துப் பூத்துக்குலுங்கும்
தேமாமர நிழலிலே .................

2) அன்னையின் அரவணைப்பைத் தாண்டி
தோழமையுடன் தோள் சாய்ந்த அந்த நாட்கள்
நல்லதொரு ஆலமரமாய் அதிபரும்....
அவற்றின் கிளைகளாய் ஆசான்களும் .....

3) அவர்களின் நிழலிலே.........
சின்னச் சின்ன பட்டாம் பூச்சிகளாய்
சிறகடித்த நாட்கள் பல நாளிகைகளாய் மாறி
அகவை ஐம்பதில் நிற்கும் உத்தமியே!

4) எண்ணிலடங்கா நன் மாணாக்கரை
உருவாக்கிய வித்தகியே ...... !
ஏற்றம் பல கண்டு அவ்வூர் மத்தியில்
அமைந்த கனகபுரம் கிராமத்தில் அன்று
அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாம்.

5) தேசிய மட்டப் போட்டிகளில் சாதனைகள் படைத்து
தேசமெல்லாம் புகழோங்க...
அரும்பாடுபட்டு அர்ப்பணிக்கும்
ஆயிரம் ஆசிரியத் தெய்வங்கள் ....

6) பெற்றோர் தம் கனவுகளைக் கையிலேந்தி
கல்லூரி வளாகம் முழுவதும்
கால் பதித்து வலம் வந்த - நாட்களை எண்ணி
புல்லரிக்கிறது எம் மேனி

7) அகவை ஐம்பதில்
பொன் விழாவைக்க காணும் வித்தகியே
வாழ்க நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழ்க..... வாழ்க ..... வளர்க.....

**திருமதி. ஜெ.வரோகினி**
1993 (O/L) பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டியவள் நீயே!

காலங்கள் கடந்தோடியது
கண்மூடி திறப்பதற்கு
முன் பொன்விழாவும்
இன்று உனக்கு பூரித்துநிற்கின்றோம்
பெருமையுடன்

அறுபத்தொன்பது
கார்த்திகையில்
அடி பதித்தாய் கனகபுரத்தில்
அயலூர் குழந்தைகளையும்
அரவணைத்துக் கல்வி தந்தாய்

பத்து மாதம் தாய்மடி சுமந்தாள்
பத்தாண்டு நீ சுமந்தாய்
பட்டாம் பூச்சியாய் படபடத்தோம்
சிட்டுக்குருவியென சிறகடித்தோம்.

எண்ணற்ற மாணவர்கள்
எண்ணிலடங்கா கனவுகள்
அத்தனையும் சுமந்து
அன்னை உன்னிடம் வந்தோம்

எத்தனை விதமான குறும்புகள்
எத்தனை விதமான குழப்படிகள்
எத்தனை விதமான எண்ணங்கள்
அத்தனையும் சுமந்து வந்தோம்

குற்றமில்லா நட்புடனே
சுற்றமும் தந்து வாழ வைத்தாய்
நட்புக்கு இலக்கணமாய் நாம் வாழ
நல்லதோர் வழிகாட்டினாய்

பசுமை நிறைந்த நினைவுகளாய்
பள்ளிக்காலம் இன்றும் எமக்கு
பசுமரத்தாணியாய் எம்
உள்ளத்தில் பதிந்துள்ளதே

எப்படி நாம் மறுத்திடுவோம்
எங்கள் பள்ளி கால வாழ்க்கையை
என்றென்றும் நாம் மறவோம்
எம் உயிர் உள்ளவரை

வெள்ளைக் கமலத்து சரஸ்வதியையும்
வெள்ளாடை சூடிய மாதாவையும்
கிணற்றடி தண்ணீரையும்

பிரம்புடன் வந்த ஆசிரியர்களையும்
பண்புடன் கற்பித்த ஆசான்களையும்
அன்புடன் அரவணைத்தவர்களையும்
ஆளுமையுடன் எமைவளர்த்தோரையும்

துள்ளிக் குதித்த இடை வேளைகளையும்
அள்ளி விளையாடிய கொக்கான்களையும்
கிளித்தட்டு மறித்த தனையும்
கிட்டிப்புள் அடித்த தனையும்

கெந்திக் கோடு வியையாடியதும்
மென்பந்து விளையாடியதும் திரும்பவும்
என் வாழ்வில் வராத தித்திப்பான காலங்கள்

பரீட்சை நெருங்கினால்
பரபரப்பாவோம் பதட்டத்துடன்
விளையாட்டுப் போட்டி என்றால்
விரைந்து நாம் ஒன்றானோம்

கல்வி எனும் நூல் கொண்டு
கட்டி வைத்தாய் அனைவரையும்
பத்தாம் வகுப்பு முடிந்ததும்
பிரிந்து சென்றோம் அனைவரும்

போட்டி போட்டுக்கொண்டோமே தவிர
பொறாமையற்றிருந்தோம்
நாட்டு நடப்புகளால்
நாம் பிரிந்தோம் திக்கிற்கொருவராய்

கனவில் கூட நினைக்கவில்லை
நனவாகியது எம் நினைவு பொன்விழாவால்
கடந்து சென்ற முப்பது
வருடங்களைக் கண்முன்னே கொண்டு வந்தாய்

பொன்விழா என்றதும்
புற்றீசலாய் ஒன்றானோம்
புதிதாய் ஒரு வரலாறு
படைக்கின்றோம் பொன்விழாவிற்கு

ஒற்றுமையாய் நாம் வாழ்ந்து
ஒரு குரலில் வாழ்த்துகின்றோம்
வாழிய நீ என்றென்றும்
வளர்ந்திடுக மென்மேலும்

**க.பொ.த 1989 ஆம் ஆண்டு பிரிவு**
**மாணவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத வாசனை

எந்த ஒரு மனிதனும் தன் வாழ்வில் மறக்கமுடியாத இடம், பாடசாலை, பாடசாலைக்குள் முதல் முதல் காலடி எடுத்து வைத்த நாள் தொடக்கம் பாடசாலையை விட்டு வெளியேறும் நாட்கள் வரை பாடசாலையில் நாம் பெற்ற அனுபவங்கள், நடந்த சம்பவங்கள் அனைத்தும் மரணிக்கும் வரை உள்ளங்களிலே ஊசலாடும் மனிதனில் மாபெரும் தங்கத்தை செலுத்துவதும் அவனை ஒரு சமூக இயல்புடைய மனிதனாக, பரிணமிக்க செய்வதும் பாடசாலையாகும். அதே போன்ற ஒரு நிலையை தான் கனகபுரம் மகாவித்தியாலயமும் பல உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றது. அந்த உள்ளங்கள் பழைய மாணவர்களை இன்று காணப்படுகின்றார்கள்.

இன்றைய கிளிநொச்சி கிராமிய மணம் வீசிய சூழலில் இருந்து நகரமாக மாறி வரகின்ற நிலை, அல்லது மாறிவிட்டதே என்று கூறலாம். கிராமத்தில் இருந்து மக்கள் நகர்ந்து ஒரு பிரதேசத்தில் குடியேறுவதற்கான நகரம் உருவாகின்றது. கிராம மட்டத்தில் இருக்கின்ற மனமகிழ்ச்சி, மக்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமை, மனிதநேயம், உதவும் தன்மை, எந்த நிகழ்விலும் ஒன்று கூடி உழைக்கும் மனநிலை, பணத்திற்கு முக்கியத்துவம் அளிக்காது மனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனிதாபிமானம். இன்றைய சூழலில் காணப்படும் ஒரு கடினமானத்தான் இருக்கின்றது. அந்த நிலையில் வாழ்ந்து கல்வி பயின்ற மாணவர்கள் இன்றும் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தை மறக்காது பாடசாலை வளர்ச்சியில் ஒரு தூணாக நிற்பது அந்த வாழ்வியல் கற்றுக் கொடுத்த ஒரு பண்பாகவே தான் பார்க்கின்றேன். இந்த சூழலில் இருந்து சென்ற நூற்றுக்கணக்கான மாணவர்களால் நானும் ஒருவனாக இந்த பாடசாலையில் கல்வி பயின்றேன் என்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

**1985**ம் ஆண்டு பாலர் வகுப்பில் (அக்காலம் இவ்வாறு அழைப்பர்) சேர்வதற்காக அழுது கொண்டு வந்த ஞாபகம் இன்றும் என் நினைவில் இருக்கிறது. முதல் நாள் என்னை மாதிரி பல மாணவர்கள் அழுது கொண்டிருந்தார்கள் . அவர்களை காணும் போது எனக்கு அழுகை இன்னும் அதிகரித்தது. இவ்வாறு இரண்டு, மூன்று வாரங்களுக்கு பிறகு தான் திருமதி.தம்பிராசா ஆசிரியர் எங்களின் கண்களுக்கு தெரியத் தொடங்குகின்றார். அவ்வாசிரியர் ஆரம்பத்தில் பாட்டுப் பாடி ஆடி காட்டினார். நாங்களும் அதே போன்று செய்ததாக ஞாபகம் இருக்கிறது. பின்னர் கதை, பட்டம் விடுதல், விளையாட்டு என அந்த ஆசிரியர் மீது ஏற்பட்ட பற்றுதல், பாடசாலையை ஒரு மகிழ்ச்சிகரமான ஒரு இடமாக மாற்றியது. என்னோடு அன்று யார்யார் எனது வகுப்பில் ஒன்றாக இருந்தார்கள். என்பதை ஞாபகப்படுத்துவது ஏ்னபது கடினமாகவே இருக்கின்றது. அடுத்த வருடம் நாங்கள் வகுப்பேற்றப்படுகின்றோம். புதிய ஆசிரியர் ஒருவர் எங்களை பொறுப்பெடுக்கின்றார். பழைய ஆசிரியர் வரமாட்டாவா என்ற ஏக்கத்தோடு, அந்த ஆசிரியரிடம் செல்கின்றோம். கொஞ்சம் கண்டிப்பாகவே இருந்தார். காதை முறுக்கி ஒரு சின்ன அடி முதுகில் விழும். நாங்கள் கொஞ்சம் கட்டுப்பாடாக இருக்கப் பழகினோம். அந்த ஆசிரியர் தான் இன்று எங்களை அன்போடு தாயாக அரவணைக்கும் புவனா ரீச்சர். இவ் ஆசிரியரைப் பற்றிய சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை நான் பதிய நினைக்கின்றேன். கனகபுரம் பாடசாலையில் நாங்கள் ஆண்டு பதினொன்று வரை கல்வி கற்ற காலத்திலும் சரி, இன்றும் சரி மிகுந்த பயம் அதிபருக்கு அடுத்த நாள் புவனா ரீச்சருக்குத்தான் அடிக்காக அல்ல. அவர் எங்கள் மீது வைத்திருந்த அன்பு தான் காரணம் சிலவேளை இதை எப்படி உனக்குத் தெரியும் என கேட்கலாம். அதற்காக ஒரு சம்பவத்தை நினைவு படுத்துகின்றேன். புவனா ரீச்சரிடம் படித்துக் கொண்டே காலப்பகுதியில் தற்போது Co.op.city அமைந்துள்ள கடைக்கு முன்பாக கண்ணிவெடி (நிலக்கீழ் குண்டு) வைக்கப்பட்டு இருந்தது. இவ்விடயம் வெடிக்கும் வரை எமக்குத் தெரியாது, நானும் இரண்டு மூன்று நண்பர்களும் பாடசாலை முடிவடைந்து விட்டுவரும் வழியில் சின்னத்தம்பி அண்ணனுடைய காணியில் இருந்த மரங்களில் குரங்குகளுக்கு கல்லால் எறிந்து கொண்டிருந்தபோது புதைக்கப்பட்ட குண்டு வெடித்தது. நானும் இரண்டு நண்பர்கள் மட்டுமே அந்த வீதியில் தனியாக நின்று அழுது கொண்டிருந்தோம். அப்போது சின்னத்தம்பி அண்ணன் எங்களை தங்களுடைய வீட்டிற்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றார். அந்த நிகழ்விற்குப் பின் நான் 2 வருடங்கள் கொழும்பில் கல்வி கற்று மீண்டும் 04ம் ஆண்டிற்கு கனகபுரம் பாடசாலைக்கு திரும்பி வந்தபோது பாடசாலையில் இணைக்க மறுத்தபோது புவனாஆசிரியர் எனக்காக கதைத் தார். அந்த ஞாபகமும், அந்த சம்பவமும் என் ஆழ்மனதில் அவரைப் பற்றிய உயர்ந்த மரியாதைக்குரியவராக மாற்றியிருந்தது.

இந்த நிகழ்விற்குப்பின் எனக்குப்பிடித்த ஆசிரியர்களில் ஒருவராகவும், அங்கு கற்ற அனைத்து மாணவர்களுக்கும் பிடித்த ஆசிரியராக அன்றில் இருந்து இன்றுவரை அவர் காணப்படுகின்றார். நாங்கள் ஆண்டு ஐந்திற்கு வருகின்றோம். ஆண்டு ஐந்திலே இரண்டு வகுப்புக்கள் புதிதாக பிரிக்கப்படுகின்றன. ஒருவகுப்பிற்கு தங்கம்மா ரீச்சரும் இன்னொரு வகுப்பிற்கு சோதிநாதன் ஆசிரியரும் வகுப்பாசிரியர்களாக இருந்தார்கள். இருவரும் மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் கண்டிப்பாக இருந்தார்கள். இந்த வகுப்பில் தான் அதிகமான மாணவர்கள் முதல் தடவையாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தார்கள். கு.ஜெயக்குமார், சசிக்குமார், சுதர்சன், தனஞ்செயன், செல்வகிருஷ்ணன், நித்தியா, மஞ்சுளா, ஆகிய மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கும், ஆசிரியர் களுக்கும், சமூகத்திற்கும் பெருமை சேர்த்தார்கள். இந்த புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்த ஆசிரியர் சோதிநாதன் அவர்களிற்கு பாராட்டுவிழா நடைபெற்ற போது ஆசிரியர்க்கு வழங்கப்பட்ட பரிசுப்பொருளை ஆசிரியர் மீண்டும் அதை பாடசாலைக்கு வழங்கி தன்னுடைய ஆசிரியத்துவத்தின் புனித தன்மையை நிருபித்த அந்த காட்சி இன்றும் எங்கள் கண்முன் நிழலாடுகின்றன. சோதிநாதன் ரீச்சரின் மகளும் எங்களுக்கு ஆங்கிலப் பாடத்தை மிகச்சிறப்பாக கற்பித்ததார். அதேவேளை தங்கம்மா ரீச்சர் என்றால் எமக்கு மட்டுமல்ல. அனைத்து மாணவர்களும் பயப்பிடுவார்கள். அவர்களிடம் கற்றவர்கள் வாய்ப்பாடு பன்னிரண்டு வரை தெரியாமல் இருக்க மாட்டார்கள். என்று புகழும் அளவிற்கு அன்றைய காலத்தில் மிகச்சிறப்பாகவும், அர்ப்பணிப்பாகவும் செயற்பட்ட ஒரு ஆசிரியர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக தரம் ஆறு எங்களுக்கு புதிய அனுபவம், ஒவ்வொரு பாடங்களுக்கும் ஒவ்வொரு ஆசிரியர்கள் அந்த வரிசையில் கனி ரீச்சர், ராஜமணி ரீச்சர், சுபாஜினி ரீச்சர் போன்ற ஆசிரியர்கள் எமக்கு அன்பான ஆசிரியர்களாக கற்பித்தார்கள். இவ்வாறு 7,8,9 வகுப்புக்களிற்கு ஒவ்வொரு புதிய புதிய ஆசிரியர்களாக வருகை தந்திருந்தனர். சிறிகாந்தா ஆசிரியர் தமிழ்பாடத்தை சிறப்பாக கற்பித்தார். இவருடன் வருகை தந்தவர்க்ள அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருந்தனர். கிளாலியூடாக ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு இங்கு வந்து தங்கியிருந்து கற்பித்தார்கள். அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை ஒரு போதும் அந்த கால மாணவர்கள் மறக்கமாட்டார்கள். தரம் ஒன்பதில் எங்களக்கு வகுப்பாசிரியராக குமாரலிங்கம் ஆசிரியர் அவர்கள் வந்தார். அவரே ஒன்பது தொடக்கம் 11 வகுப்பு வரை வகுப்பாசிரியராக இருந்தார். இந்தக் காலப்பகுதியில் தான் நண்பர்களிடையே மிக நெருங்கிய உறவு வளர்ந்தது. நாங்கள் பாடசாலைக்காக உழைக்க வேண்டும். இது எங்கள் பாடசாலை என்ற எண்ணம் மேலோங்கியது. அதிபர் ஆறுமுகதாஸ் அவர்களுக்கு எங்களுடைய பெயர்கள் பரீட்சயமாகின. அனைத்து ஆசிரியர்களுக்கும் எங்களை தெரியத் தொடங்கியது. படிக்க வேண்டும். நல்ல பெறுபேறுகளை அடைய வேண்டும். உணர்வு மேலோங்கியது. எம்மோடு கல்வி கற்ற அதிகமான மாணவ்ரகள் நோயல் ரியூசனுக்கு செல்லத் தொடங்கினோம், நண்பர்களின் உறவுநெருக்கமானது. ஒற்றுமையாக ஒன்றுப்பட்டு பாடசாலைக்காக பணி செய்தோம்.

பொருளாதார தடை காரணமாக மண்ணெண்ணெயில் கேள்வி அதிகரிப்பு, சவர்க்காரம் இல்லை. பல்வேறுபட்ட நெருக்கடிகள் மத்தியில் கல்வி க்றறோம். நாம் மட்டுமல்ல அதிகமான மாணவர்கள் இவ்வாறான சூழலில் கல்வி கற்றார்கள். இந்த நிலையிலும் எம்மை தளரவிடாமல் வழி நடத்தி சென்றவர்கள் ஆசிரியர்களும் அதிபரும் தான். இந்தக் காலைக்கூட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டது. இதை நிவர்த்தி செய்தவர்கள் தம்பிராசா சேர். றெஜிஅலோசியஸ் சேர், பிரபாகரன் சேர், டொக்டர் யூடிசேர், டொக்டர் தவராசா சேர், போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். எந்த ஊதியமும் பெறாமல் கற்பித்தல் செயற்பாட்டிலும், இணைப்பாட விதான செயற் பாட்டிலும் கடுமையாக உழைத்தார்கள். அவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டால் விளையாட்டிலும், கல்வியிலும் பாடசாலை மேலோங்கியது, பல கனவுகளோடு கல்வி கற்ற நாம் 1995 ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வோடு எமது பரீட்சை பிற்போடப்பட்டு நாமும் இடம்பெயர்ந்து கண்ணீரோடும் கவலை தோய்ந்தவர்களாக வெளியேறினோம். இவ்வாறாக பாடசாலை நாட்கள் எமக்கு (1995 Batch) அமைந்திருந்தன.

இன்றும் எமது பாடசாலை எந்த விதத்திலும் தரம் குறையவில்லை. அதற்கு காரணம், ஆறுமுகதாஸ் அதிபர் அதன் பின்னால் கடமையாற்றிய அதிபர் ஆசிரியர்கள் தான் காரணம், சிறந்த பெறுபேறுகள் கற்றுக்கொண்டு இருக்கின்றன. விளையாட்டிலும் சிறந்து விளங்குகின்றார்கள். ஒழுக்கத்திலும் மேலோங்கிய நிலை காணப்படுகின்றது. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை பற்றிய விமர்சனம் மேலோங்கி காணப்படுகின்றது. சமூக எதிர்பார்ப்பு மேலோங்கி உள்ளது. இந்நிலைக்கு காரணம், சமூகமும், பழைய மாணவர்களும் பாடசாலை மீது வைத்திருக்கின்ற பற்றும் எதிர்பார்ப்பும் தான். தற்போது கடமை யாற்றுகின்ற அதிபர் திருமதி.இ.இரவீந்திரநாதன் அவர்கள் சிறப்பாக தனது பணியை செய்து வருகின்றார். பௌதீக வளங்களை விருத்தி செய்துள்ளார். பெறுபேறுகளை உயர்த்துவதாலும் கூடிய கரிசனை கொண்டுள்ளார். இவர்களுக்கு அனைத்து நிலையினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், போன்றவற்றில் பாடசாலையில் மட்டும் பொறுப்பை திணிக்காமல் பெற்றோர் முதல் அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும். பாடசாலையின் நான்கு தூண்கள் எனப்படும். அதிபர், ஆசிரியர் பழைய மாணவர்கள், பெற்றோர் அனைவரும் ஒரே நோக்கத்தில் கைகோர்த்து செயற்பட வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் இந்த பொன்விழா நிகழ்வோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டும், வளர்த்துக் கொண்டும் செல்ல வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்பதை தயவாக தெளிவுபடுத்துகின்றேன்.

பொன்விழாவை சிறப்பாக முன்னெடுக்க உழைக்கின்ற ஒவ்வொரு உள்ளங்களுக்கும் எமது அணி சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**த.டேவிட் கிஸ்காட்**
O/L 95 அணி சார்பாக
(பழைய மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரம் எனும் கப்பலில்....

கனகபுரத்தில் கருவாகி
உருவெடுத்த எம் கல்வி - இன்று
உலகத்தரத்தில் நாம் உயர்கொள்ள
உயிர்கொடுத்த உன்னத வித்தியாலயம் இது
இன்று பொன்விழாவில் பெரு விருட்ஷமாய்
விண்ணைமுட்டி நிற்கிறது
பெற்றவர் சுமந்த கனவை முதுகில்
புத்தக சுமையாய் தோள்தாங்கி நடந்த எம்மை
புத்துயிர் கொடுத்து புதுமைகள் பல செய்திட
வித்திட்ட வித்தியாலயம் இது....
யுத்த வடுக்களால் வஞ்சிக்கப்பட்ட எம்மின
உடல் உள காயங்களை கல்விகொண்டு கணைதொடுக்க
கரையேற்றி விட்ட கலாசாலை இது
குட்டி போடுமென்ற ஆசையில் புத்தகத்தில்
மறைத்துவைத்த மையிலிறகும் விமானத்தின்
இரைச்சலில் விட்டெறிந்து விடையறியாது
ஓடினோம் பங்கர் தேடி.....

இந்திராணி டீச்சரின் அரவணைப்பில்
இன்னொரு அன்னையை கண்டோம்
சோதிநாதன் டீச்சரின் போதனையில்
உருவெடுத்தோம் பேரலையாய்
ஆலமரத்தின் விழுதுகளாய் ஒரே கோட்டில்
தொடங்கினோம் பந்தயம் முடிய முன்னமே
பலரை காணவில்லை - யுத்தம் என்னும்
கொடியமுகம் உதைத்து தள்ளியது.
ஆறுமுகதாஸ் ஆசிரியரின் ஆளுமையில்
மீண்டும் தளிர்த்தோம் இலக்கம் இரண்டு பள்ளியின் கூரையினுள்

சங்கர் சேரின் சேவையும் பரா ஆசிரியரின்
பாடங்களும் படியேற உந்துகொடுக்க
வீறுகொண்டோம் மீண்டும் பழைய கனகபுரமாய்
ஜெயசுதா டீச்சரின் ஓவியத்திலும்
விஜி டீச்சரின் உடற்பயிற்சியாலும் உருவானோம்
இணைப்பாட செயற்பாட்டில் இணையில்லாத அணியாய்
புவனா டீச்சரும், செல்வா சேரும், சேதுபதி சேரும் செதுக்கிவிட சிற்பங்களாய்
உருவெடுத்தோம் கனகபுரம் என்னும் கைலாசத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை
வாழ்க்கை என்னும் போரில் எத்திசை செல்லினும்
அத்திசையில் முகம் கொடுக்க கற்று கொடுத்த பள்ளி இது
அறிவை அறிமுகம் செய்து நட்பை விதைத்து
பண்பாய் புகட்டி பலருக்கு அடையாளம் கொடுத்த கல்லூரி இது
துள்ளி குதித்து செங்கல் வைத்து துடுப்பாட்டம் ஆடி
பிள்ளை சேரிடம் பிடிபட்டு பதைபதைத்து
விழாக்களிலும், வெள்ளிக்கிழமைகளிலும்
குறள் சொல்ல ஒழிந்து திரிந்த பொழுதுகளும்
கண்களில் எதிர்காலம் எனும் வண்ண கனவுகளை ஏந்தி
அறியா பருவத்தில் சாதி, மதம் கள்ளம் இல்லா
நண்பர்களுடன் எச்சில் உணவை எட்டி பறித்து

உண்டு ருசித்த காலங்களும் கனகபுர புராணம்
சொல்லும் உண்மை காவியங்கள்
செருப்பில்லா கால்களும் எண்ணெய் தடவா முடிகளும்
அழுக்குப் படிந்த உடைகளும் குறைவற்ற
சந்தோசத்திலும் உறவாடிய பொழுதுகள் அவை
வாழவழியும் பழக நட்பும் கொடுத்து
ஏற்றி விட்ட கூடமாம் கனகபுரம்
மதிய நேர சத்துணவுக் கஞ்சியால் விடுமுறைக்குகூட
பள்ளி செல்ல தவித்தோம்
வீட்டை மறந்து வீட்டுபாடத்தை மறந்து
தோழனோடு திரிந்த காலங்கள்
எண்ணும் போதெல்லாம்
எதனையோ தொலைத்த உணர்வு என்னுள்
மீண்டும் வராதா இந்த நாட்கள் - கனகபுரத்தின்
இந்த பொன்னான பொன்விழாவில்
பொதிந்துள்ள அத்தனையும் வார்த்தைகளால்
விழிகலங்கி கொட்டிவிட வரிகள் தேடி தோற்று போகிறேன்.

வாழ்க கனகபுரம் வளர்க உம் புகழ்

**கமலேந்திரா சிவபாதம்** (பழைய மாணவன் O/L *2002)*
BSc (University of Peredeniya), MSc (Brunel University London)
PhD Research Scholor (Queen Mary University of London)
Visiting REsearch Sceintific (Institute of Cancer Reserac - UK)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கற்றது எள்ளளவு

நான் கிளிநொச்சி கனகபுர மகாவித்தியால பொன்விழா மலருக்கு கட்டுரை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். "நாவிற் கலைமகளையும், கனகபுரத் திற்குரிய கனகமாளிகை அம்மனையும் வணங்கிக்கொண்டு பாடசாலை அதிபருக்கும், புத்தக வெளியீட்டுக் குழுவினருக்கும், என் அன்பு வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு கன்னி மடலை எழுத ஆரம்பிக்கலாம் என நினைக்கின்றேன்.

என்னை விட கனகபுர மகாவித்தியாலயத்தில் கற்று கட்டிட ஒப்பந்தக்காரராகவும், பட்டதாரிகளாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், விசேட முகாமைத்துவ உதவியாளர்களாகவும், ஆசான்களாகவும் அரச பதவிகளில் இருக்கின்றார்கள். அவர்களோடு ஒப்பிடும் போது நான் கற்றது எள்ளளவு. நாட்டின் நிலைமையால் கற்கமுடியாமல் இன்னோரன்ன இருந்தும், தேர்தல் ஆணையாரின் வீட்டில் கணிதம் படித்து திறமைச்சித்தியடைந்து க.பொ.த என் அம்மா, அப்பாவிற்கு நன்றி பற்பல.

எவர் எந்த ஊரில், பிறக்கின்றாரோ, அதே ஊரிலுள்ள பாடசாலையிலோ or அருகிலுள்ள பாடசாலையில் தன் ஆரம்ப கல்வியை கற்றல் வேண்டும். இதனைத்தான் பழைய கனகபுர உத்தியோகத்தர் அம்பாள்குள செயலாளர்கள் செய்தனர். அதில் படித்த மாணவர்கள் தங்கள் பிள்ளைகளை அதே பாடசாலையில் கற்பிப்பதன் மூலமாக மாணவர் தொகைஅதிகரிப்பதோடு அப்பாடசாலைக்கு பெயரும் முகமும் உண்டாகும். இதற்கு உதாரணமாக மட்டக்களப்பில் பிறந்த விபுலானந்த அடிகளார் தன் கிராமத்திலுள்ள பாடசாலையிலும், ஆறுமுக நாவலர் தன் கிராமத்திலுள்ள திண்ணப் பள்ளியிலே (பாலர் பாடசாலையிலே) கற்று அ.தக. பாடசாலையிலும் கற்று உயர் படிப்பிற்காக உயர் பாடசாலைகளில் சென்று தமிழ், சைவத்தொண்டராகவும், தங்கத்தாத்தா என்று சொல்லப்படுகின்ற நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நவாலியூர் அ.த.க பாடசாலையிலும், நவாலியூர் அருணாசல இராமலிங்க உபாத்தியாரிடம் தங்கத்தாத்தா என பட்டம் பெற்றார்.

ஆத்மஜோதி நா.முத்தையா ஏழாலையில் பிறந்த வித்தியாலயத்திலும் ஆரம்பக் கல்வி கற்றார். அண்மைக்காலத்தில் புகழ்பெற்ற தமிழ் அறிஞரும் பேராசிரியரும் பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ் துணை தலைவராகவும், யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் துணை வேந்தராகவும் இருந்த திரு.சுப்பிரமணியம் வித்தியானந்தம் தெல்லிப்பளையில் பிறந்த இவர் தெல்லிப்பளையிலுளள்ள வீமன் கல்லூரியிலும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் படித்த இவர் உயர் படிப்பிற்காக யாழ்/பரியோவான் கல்லூரியில் படித்தவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட முன்னாள் அரசாங்க அதிபர் திருவாளர் நாவுக்கரசு இராசநாயகம் பூநகரி நாலாம் கட்டையில் பிறந்து ஆரம்பக்கல்வியை பூநகரியில் படித்து உயர்படிப் பிற்காக யாழ்/இந்துக்கல்லூரியில் படித்து பேராதனைப் பல்கலைக்கழகம் படித்து முடித்தடன் யாழ் அபிவிருத்தி உத்தியோகத்தராக பூநகரி பிரதேசத்திற்கு இருந்ததோடு மட்டுமல்ல பூநகரி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், கால்நடை கூட்டுறவுச்சங்கம் போன்றதை உருவாக்கி இலாபத்தில் ஓடியது. கொக்குவிலில் திருமணம் செய்து தன் மனைவியின் பூநகரியில் வாழாது தன்பிள்ளைகளை யாழ் பூநகரி மகாவித்தியாலயத்தில் படிப்பித்து உயர்பதவி கிடைத்து மன்னாரில் மாற்றம் கிடைத்து பிள்ளை அங்கு படிப்பித்து இருக்கும் வேளை மேலும் கிளிநொச்சிக்கு பிரதித்திட்டப்பணிப்பளராக, அரசாங்க அதிபராக இருந்த போதும் பிள்ளைகளை கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் படிப்பித்தார். இவர் கிளிநொச்சியில் எத்தனை நிறுவனங்களை உருவாக்கினாலும் கூடி கொக்குவிலில் மோட்சம் அடைந்து ம் அவரின் பூதவுடல் நாலாம் கட்டை இந்து மயானத்தில் நெருப்போடு சங்கமமாயின.

கிளி/கனகபுரத்தில் பிறந்தவர்கள் படித்தவர் தங்கள் பிள்ளைகளை கனகபுரம் மகாவித்தியாலயத்தில் படிப்பித்து உயர் வகுப்பு கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு நில்லாமல் கணிதப்பிரிவை கொண்டுவருமாறு படித்த மேதைகளை தயவாக கேட்கின்றோம். தற்போது கனகபுரம் மகா வித்தியாலயத்தில் கனகபுரம் உதயநகர் மேற்கு, ஆனந்தநகர் முறிப்பு, செல்வா நகர் மாணவச்செல்வங்களை படிப்பிக்குமாறு பெற்றோர்களை கேட்டுக்கொள்கின்றோம். இது வெளிநாட்டாரின் பெரும் ஆசை அதுவே.

"கிளி/ கனகபுர மகாவித்தியாலயம் வாழ்க வளமுடன்"

**செல்வன். வரதராஜா சயந்தன்**
2005 க.பொ.த சாதாரண வகுப்பு
பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட பல்கலைக்கழகம்

கனகபுரம் வெறும்
சொல் அல்ல
என் இதயத்தின் ஓசை
ஆறெழுத்தும் ஆறுபடை வீடு
அறம் செய் என ஆத்திசூடியும்
அனைவரும் சமமென
சீருடை சொன்னதும்
எள்ளையும் எட்டாக்கும்
மந்திரம் கற்றதும்
அம்மாவின் கைபிடித்து
முதன்முதலில்
போனதும் இங்குதான்

கனகபுரம் எங்கள் வீடு
சுகம் தரும் தாயின் கருவறை
கொட்டில்களும் மர நிழலும்
பதுங்கு குழிகளுமே
எங்கள் வகுப்பறைகள்

ஆண்டுக்கு ஒருமுறை
வகுப்பறை மாறுவோம்
அதில் அடிக்கடி சண்டை
வந்து சேருவோம்
விடுமுறையிலும் நண்பனைத்
தேடுவோம்
விடைபெறும் நாள்
வேண்டாமென்போம்

கனவுகள் கவலைகள் நகைச்சுவைகள்
சண்டைகள் பிரிவுகள் ஏக்கங்கள்
இவையும் எங்கள் பாடங்கள்
இலவச பாடப்புத்தகங்களோடு
இலவசமாய் நண்பர்களும்
குவிந்த இடம்

அறிவுக்கு கல்வி
பசி தீர்க்கும் சத்துணவு
பிந்தி வந்த நாட்கள்
வலி தந்த பிரம்படி
பரீட்சையில் பக்கத்தில்
பார்க்கும் மரண பயம்
ஊமைப் பாஷையில்
விடைகளின் தேடல்
ரீச்சரின் பாட வேலைகள் மறந்தாலும்
அம்மாவின் உணவுப் பார்சல் நினைவிருக்குமே
ஆகா என்ன சுகம்

ஒன்று சேரும் பிரார்த்தனை
அதிகாலை உடற் பயிற்சிகள்
வெயிற் கால விளையாட்டுப்போட்டி
எதை மறக்க முடியும்
தமிழும் கணிதமும் மட்டுமா?

வாழ்க்கைப் பாடமும் தந்த
எங்கள் கலைக்கூடமே
என் முதற் பல்கலைக்கழகமே
வாழ்க வளமுடன்
அறிவொளி ஏற்றும்
உன் புகழ் எங்கும் பரவட்டும்.

**திரு.அரசகேசரி ஆதவன்**
பழைய மாணவன்
(உயர்தரம் - வர்த்தகப்பிரிவு 2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வரப்புயர நீருயரும்"

"வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும் எனும் ஔவையார் வாக்கு. இன்றைய உலகிற்கு எவ்வளவு பொருத்தமானது? நாம் எம்மைச் சுற்றி பல பட்டங்களை அமைத்துக் கொள்கிறோம். நான் எனது குடும்பம், எனது சமுதாயம், எனது கிராமம், எனது மாவட்டம், மாகாணம், நாடு, நாம் வாழும் பூமி, எமது வாழ்வின் செயற்பாடுகள் அனைத்தும் இவ்வட்டங்களை மேம்படுத்துவதிலேயே அமையும். இவ்வட்டங்களில் எதற்கு நீங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? நீங்கள் எதற்குள் நின்று விடுகிறீர்கள்? நாம் வாழும் பூமி அதன் இயற்கை உயிரினங்கள் என்பவற்றின் நலனுக்காக நாம் ஏதாவது செய்கிறோமா? ஏனெனில் மிகவும் வெளியேயுள்ள வட்டமான பூமி. அதன் இயற்கை உயிரினங்கள் என்பவற்றின் நலனுக்காக நாம் ஏதாவது செய்கிறோமா? ஏனெனில் மிகவும் வெளியேயுள்ள வட்டமான பூமி இல்லாது போனால் நம்மைச் சுற்றி நாங்கள் அமைத்த வட்டங்களும், நாமும் இல்லாது போவோம். பூமி வெப்பமடைதல், காற்று மாசடைதல், உயிரினப் பல்வகைமை குன்றிப் போதல் என்பவை மிக வேகமாக நடந்து வருவதால் பூமியில் மனிதன் வாழ இயலாத நிலை விரைவில் ஏற்படப் போவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதனைத் தடுப்பதற்கு எம்மால் என்ன செய்ய முடியும்? ஔவையார் சொன்னது போல "வரப்புயர" எனும் சிறிய சிறிய செயல்கள் மூலம் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம். பூமி வெப்பமடைதலுக்கு பச்சை வீட்டு வாயுக்கள் காரணமாகின்றன. அவை வாகனப்புகை, தொழிற்சாலைப் புகையில் அதிகம் காணப்படும். நாம் அன்றாடம் வாகனங்களைப் பாவிக்கும் போது சிறிய தூரங்களுக்கு மோட்டார் சைக்கிளிற்குப் பதிலாக சைக்கிளைப் பாவிக்கலாம். தூர இடங்களுக்குச் செல்லும் போது பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பாவிக்கலாம். 10பேர், 10மோட்டார் சைக்கிளில் செல்வதை விட அவர்கள் எல்லோரும் ஒரு பெரிய வாகனத்தில் செல்லும் போது வெளிவிடும் புகை குறைவென கண்டறியப்பட்டுள்ளது. துவிச்சக்கர வண்டியில் செல்வது அல்லது நடப்பது எமது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது. மரங்கள் பச்சை வீட்டு வாயுக்களை சுத்தம் செய்கின்றன. அத்துடன் மழை பெய்யவும் மரங்கள் அவசியம். மரங்களை வெட்ட வேண்டாம் என நான் சொல்லப்போவதில்லை. ஏனென்றால், பெரும்பாலான மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. எனவே இருக்கிற மரங்கைளப் பாதுகாப்பதோடு, மரக்கன்றுகளை நடுவோம். திருமண வீடொன்றிற்குச் சென்றிருந்த போது அங்கே விடைபெற்று செல்வோருக்கு பலகாரத்திற்குப் பதிலாக மரக்கன்றுகளை கொடுத்திருந்தார்கள். எவ்வளவு முன்னுதாரணமான செயல். பூமி வெப்பமடைவதால் பனிக்கட்டிகள் உருகி இலங்கை போன்ற சிறு தீவுகளே முதலில் மூழ்கும் அபாயம் இருக்கின்றது.

அடுத்து பெரும் அச்சுறுத்தலாக இருப்பது பிளாஸ்திக், பொலித்தீன் பாவனை. குறிப்பாக ஒருமுறை மாத்திரம் பாவித்து விட்டு எறியும் பிளாஸ்டிக் கோப்பைகள், பொலித்தீன் பை, பிளாஸ்டிக் போத்தல், ஸ்ரோ (sto) இவை அனைத்தும் அறிமுகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட முன்னர் நாம் இவற்றிற்கு பதிலாக என்ன பாவித்தோம்? கடைக்குப் போகும் போது துணியிலான பையை கொண்டு சென்று சாமான் வாங்கி, மீண்டும் அதனை பத்திரமாக வைத்து கடைக்குக் கொண்டு செல்வது எவ்வளவு கடினமான காரியம்? லஞ்ச் சீற் (lunch tissue) என்றால் பாவித்து விட்டு எறிந்து விடலாம். இவ்வாறான ஒருமுறை பாவித்து விட்டு எறியும் கண்டுபிடிப்புக்களில் இருந்து தான் மனிதர்களையும் பாவித்து விட்டு ஏறியும் பழக்கங்களை மனிதர்கள் பழகிக்கொண்டார்களா? என சந்தேகமாக உள்ளது. நாங்கள் இவ்வாறு ஒருமுறை, ஒரு 5 நிமிடத்தேவைக்காக பாவித்து விட்டு எறியும் பொருட்களுக்காக எத்தனை தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன அவற்றால் பூமி வெப்பமடைதலில் ஏற்படும் தாக்கத்திற்கு எமது அந்த ஐந்து நிமிட பாவனையும், இலேசான தூக்கியெறிதலும் நியாயமானதா? "ஒன்றுதானே" சிலபேர் கூறுவார்கள். 8 பில்லியன் மக்களும் ஒன்று தானே என ஒவ்வொரு நாளும் பாவித்து விட்டு எறிகிறார்கள். இவை எங்கே போகின்றது. இந்த சூழலில் அவை பல்லாயிரக் கணக்கான வருடங்களாக அழியாமல் தாவரங்களுக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எரித்தால் நச்சுத்தன்மையான வாயுக்களை வெளிவிடும். சூடான பொருட்களை பிளாஸ்ரிக் பைகளில் வைக்கும்போது புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனங்கள் தோன்றுவதாக புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பூமியில் சனத்தொகை கூடி வருகிறது. உணவு உற்பத்தி குறைந்து வருகின்றது. நாங்கள் பொறுப்புள்ள வகையில் பொருட்களை கொள்வனவு செய்கிறோமா? எத்தனை பேர் வீட்டுத் தோட்டங்கள் வைத்து எமக்குத் தேவையான மரக்கறிகளை பெற்றுக் கொள்கிறோம். வீட்டுத் தோட்டம் செய்வது பொருட்களில் கொண்ட செல்வதைக் குறைக்கும். பொருளாதாரம் மேம்பட உதவும். உடல், உள ஆரோக்கியத்திற்கு நல்லது. மரம், செடி, கொடிகளுடன் அதிக நேரம் செலவிடும் மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் அதிக ஆயுளுடனும் வாழ்வதற்காக ஆராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இயற்கையுடன் ஒன்றித்து வாழ்வது சுலபம். ஆனால், Style இல்லை என சிலர் இல்லை எனப் பலர் நினைக்கின்றார்கள்.

இவ்வாறான சிறிய சிறிய நடத்தை மாற்றங்களை கொண்டுவருவது வளர்ந்த மனிதர்களில் கடினம், முடியாது என்று இல்லை. அனைவரும் இந்தக் கருத்தை ஆழ்மனதில் எடுக்க வேண்டும். சிந்தனை மாறினால்தான் நடத்தை மாறும். உதாரணமாக தும்மல் வரும்போது நாம் அதை நினைத்துச் செய்வதில்லை. அது தானாகவே வருகின்றது. அதே போன்றே நடத்தை மாற்றமும் சிறிய வயதிலிருந்தே நல்ல பழக்கங்களை பழக்குவது எளிது. அங்கே நடத்தை மாற்றம் தேவையில்லை. அவர்கள் பெற்றோர், ஆசிரியர் செய்வதையே நம்பி பின்பற்றுவார்கள் என்பதை விட பெரியவர்களை பார்த்துதான் நடத்தைகளை பழகுவார்கள். எதிர்காலச் சந்ததியினருக்காவது நாம் மாறியே ஆக வேண்டும். ஔவையார் இலகுவாகக் கூறிவிட்டார் "வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயரும்"

**திரு. மேரியோசெப் அருள்சில்வெஸ்ரர்**
பழைய மாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரின் மகத்துவம்

விஞ்ஞானத்தில் மிகப்பெரிய வெற்றியை எல்லாம் சாதிக்க முடிந்த மனிதன், ஒரு ஆரோக்கியமான அமைதியான உலகை ஏன் அவனால் உருவாக்க முடியவில்லை. மகிழ்ச்சியும் செழுமையும் மனிதனுக்கு கிட்டாமலே இருப்பதேன்? பூந்தோட்டமாக இருந்த உலகம் முட்புதராகி விட்டது எதனால்?

சுற்றுப்புறச் சூழலும் வாயுமண்டலமும் மாசு படிந்துவிட்டது. நதிகள், குடிதண்ணீர் அனைத்துமே போதுமான அளவுக்கு மாசுள்ளதாகிவிட்டன, தூய்மையான நிலங்களையும், காடுகளையும் அழித்துக் கொண்டிருக்கின்றோம், மண்வளத்தை விசமாக்கிக் கொண்டிருக்கின்றோம், மோட்டார் வாகனங்களின் புகையினால் வாயுமண்டலங்களை மாசுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். தொழிற்கூடங்களில் வெளியேறும் கழிவுநீரும், புகையும், தூயநீரை அசுத்தப்படுத்துகின்றது. இவற்றின் காரணமாக இயற்கையின் அழகு கொள்ளையடிக்கப்படுகின்றது. நீர்வளம் மிகவும் பாரிய பிரச்சினைக்கு உள்ளாகின்றது.

நீர்வளத்தைப் பற்றி நோக்குவோமேயானால் நீர் எவ்வாறு உருவாகின்றது என்றால் எம்மில் பலரின் பதில், பனிப்பாறைகள் உருகி கடலுடன் கலக்கின்றது. அல்லது சமுத்திரங்கள், ஆறுகள், குளங்களில் உள்ள நீர் ஆவியாகி ஒடுங்கி மேகமாகி மாறி மழை பெய்வதன் மூலம் என்று கூறுகின்றனர். ஆனால், இது நீர் எவ்வாறு உருவாகின்றது என்ற கேள்விக்கான பதில் இல்லை. எங்கிருந்து நீர் உருவாகின்றது என்ற கேள்விக்கான பதில் ஆகும்.

நீர் எவ்வாறு உருவாகின்றது என்றால் இரு ஐதரசன் (H) மூலக்கூறும் ஒரு ஒட்சிசன் (O) மூலக்கூறும், இணைவதன் மூலம் நீர் உருவாகின்றது என இலகுவாக பதில் கூறமுடியும். ஆனால், இவை இணைவது என்பது குறுகிய நேரத்தில் நடப்பதொன்றல்ல இவ்விரு மூலக்கூறுகளையும் நாம் ஒரு குடுவையில் இட்டு மூடி சிறிதுநேரத்தில் பார்ப்போமேயானால் அங்கு நீர்த்திவளை உருவாகி இருக்காது. அவ்வாறு உடனடியாகவே மாறினால் என்னவாகும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு இரும்பின் மீது நீர்த்திவளை படும் போது அது உடனடியாக துருப்பிடித்து விடாது.

பாண் துண்டின் மீது நீர்த்துளி விழுந்தவுடன் உடனடியாக பங்கசும் வளர்வதில்லை. இவ்வாறான இரசாயன செயற்பாடுகள் வேகமாக இடம்பெற்றால் பேராபத்துக்கள் நிகழும். எவ்வாறெனின் மனித உடலை நாம் மண்ணில் புதைக்கும் போது மக்கிவிடுகின்றது. ஏனெனில் மண்ணுக்கு மக்கும் சக்தி உண்டு. மண்ணின் வினைபடுதிறன் வேகமாக இருந்தால் நாம் தரையில் படுத்து எழும்புவதற்கிடையில் மக்கிவிடுவோம். ஆகவே, சிந்தித்துப் பாருங்கள் இதன் ஆபத்தை. எனவே, தான் இவை அனைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைபாடுபொறுமையுடன் நடைபெறுகின்றது. வினைபடுபொறுமை ஆனது ஒவ்வொரு திண்மத்தினதும் வினைபடுதிறன் தங்கியுள்ளது. ஒவ்வொரு தணிமங்களும் குறித்த வினைபடுதிறனை கொண்டு ஒரு தணிமம் இன்னுமொரு தணிமத்துடன் தாக்கமுறும் போது அவற்றிக்கு வினைபடுதிறனுடனேயே தாக்கமுறுகின்றது. அவ்வாறே இக்குடு வையில் உள்ள நீர்மூலக்கூறுகளும் குறித்த விளைப்படுதிறனுடனேயே தாக்கமுறுகின்றன. அவ்வாறென்றால் எப்போது நீர் உருவாகும்? ஒரு மணி நேரத்தின் பின்னா? இல்லை, நமது வாழ்நாள் முழுவதும் இருந்து அவதானித்தாலும் அங்கு நீர்த்திவலைகள் உருவாகி இருக்காது. அவ்வாறென்றால் இங்கு எவ்வித விளைவும் நடைபெறவில்லை என்ற சந்தேகம் எழுகின்றது அல்லவா? ஆனால் இங்கு வேதிவினை நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கும். இம்மூலக்கூறுகள் தம்மிடையே பல கோடி முறை மோதிக் கொள்கின்றன. இவ்வாறு மோதல் அடையும் போதே நீர்த்திவலைகள் உருவாகின்றன. இவ்வாறே சில துளிநீர்த்திவலைகள் உருவாவதற்கு பல இலட்சம் வருடங்கள் எடுக்கின்றன.

இவ்வாறு உருவாகும் நீரை மிகவும் சிக்கனமாகவும் கவனமாகவும் பயன்படுத்துவது எம் ஒவ்வொருவருடைய கடமையாகும். "நீரின்றி அமையாது உலகு" என திருவள்ளுவர் கூறியுள்ளார். இவ்வுலகில் அனைத்து ஜீவராசிகளுக்கும் இன்றி அமையாது நீர் ஆகும் இவ்வுலகில் 3% தூய்மையான நீரே காணப்படுகின்றது என கூறுகின்றனர். ஆகவே, எமது சூழலில் நீர் முகாமைத்துவத்தை பேணுவதன் மூலம் நீர்வளத்தை பாதுகாக்க வேண்டும். நீர்வளம் நிலை பெற வேண்டுமாயின் பசுமைப் போர்வையை அழியாது பேணல் சிறந்தது.

அதாவது நம்மை சூழவுள்ள மரம்,செடி, கொடிகளை பராமரித்தல் வேண்டும். மரக்கன்றுகளை நட வேண்டும் மற்றும் மரங்களை நடும் மனங்களை வளர்க்கவேண்டும்.

நீரானது மிக அருமையான வளம் என்பதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். அதனை நிரூபிக்கக் கூடிய பல கதைகள் மகாவம்சத்தில் காணப்படுகின்றத. உதாரணமாக தந்தையின் ஆட்சியை தனதாக்கிக் கொண்ட காசியப்பன் இதுவரையும் தந்தையான தாதுசேனன் சேர்த்து வைத்த செல்வங்கள் அனைத்தையும் தனக்கு தருமாறு கொடுமைப்படுத்தி வந்தான். அதனால் தாதுசேன மன்னன் தன்னை கலாவாவிக்கு அழைத்துச் சென்றபோது அரசன் குளத்தில் இறங்கி இருகைகளாலும் குளத்து நீரை அள்ளி காட்டி "இதுவே நான் சேர்த்து வைத்துள்ள செல்வம்" எனக் கூறினான். இதன்மூலம் எமது மூதாதையர் நீரினை எந்தளவில் அரும்பெரும் செல்வமாக மதித்து வந்தனர் என்பதனை அறியமுடிகின்றது.

அடுத்து எமது சரீரரத்தில் நீரின் பயனை எடுத்து நோக்கினால், அதிகாலையில் நீரை பருகுவதன் மூலம் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. வாயில் இருந்து குடல் வரை சுத்திகரிக்கப்படுகின்றது, வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் செயற்பாடு அதிகரித்து நோய்களின் தாக்கம் குறைவடைகின்றது. நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலியக்கச் செயற்பாடுகள் சீராக நடைபெறுகின்றன. இத்தகைய நீர் அசுத்தமடைவதனால் பல தொற்று நோய்கள் பரவுகின்றன. பாரிய உயிரிழப்புக்கள் நிகழ்கின்றன. இந்நீர் வளம் பெரும்பாலும் மனிதனின் தலையீட்டினாலேயே மாசடைகின்றது. நீரின் தேவை அதிகரித்து காணப்படுவதினால் நீர் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இயற்கை வழிகளில் இருந்து கிடைக்கும் நீர் பெரும்பாலும் சுத்தமானதாகவே காணப்படும். எனவே, அவற்றை பொருத்தமான முறையில் சேகரித்து அவற்றை உரிய முறையில் பராமரித்து நீரின் தேவையையும், பெறுமதியையும் உணர்ந்து நாமும் பயன் படுத்தி நமது எதிர்கால சந்ததியினருக்கும் விட்டுச் செல்வது நமது ஒவ்வொருவருடையதும் கட்டாய கடமையாகும்.

"ஒரு துளி தண்ணீரின் அருமை தாகத்தில் இருந்தவனுக்கு மட்டும் தான் தெரியும் அது விலைமதிக்கமுடியாத பொக்கிஷம் என்று"

நன்றி

**திரு. க.தயாளன்**
பழைய மாணவன்
2014 O/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்நம்பிக்கை

**இந்த உலகில் இருந்து உனக்கு எவ்வளவு வேண்டும்.**
**உன்னுடைய நம்பிக்கையின் அளவுக்கு உனக்கு கிடைக்கும்.** (கவியரசு கண்ணதாசன்)

உலகம் ஒரு போர்க்களம் அதில் நம் வாழ்க்கை ஒரு போராட்டம் போராட்டத்தில் வெற்றிக்காக நாம் கையாளும் ஆயுதம் எது தெரியுமா? வெற்றி பெறுவோம் என்ற எண்ணமும் நம் ஆற்றலில் நாம் கொண்ட நம்பிக்கையும் ஆகும். சவால்களும் பிரச்சினைகளும் ஏராளமாக இருக்கும் இந்த உலகில் மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை சமூகத்தில் வாழ முற்படும்போது பல வழிகளில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவன் ஆகின்றான் எவனொருவன் தன்நம்பிக்கையுடன் முகம் கொடுக்கத் துணிகின்றானோ அவன் தன்வாழ்க்கையை முன்னெடுத்துச்செல்லும் வல்லமை படைத்தவனாகின்றான், மற்றவர்களால் பேசப்படுகின்றான், போற்றப்படுகின்றான், சாதிக்கின்றான்.

தன்நம்பிக்கையுடன் முகம் கொடுக்கத் துணிவில்லாதவன் கோழையாகின்றான். தனது வாழ்வை சுமையானதாக எண்ணி வாழ்வை விட சாவே சிறந்தது என எண்ணி தற்கொலைக்கு துணிகின்றான். "தன்னைத் தானே வென்றவன் தனக்குத் தானே நண்பன் தன்னைத் தானே ஆளாதவன் தனக்குத்தானே பகைவன்" இவ்வாறு ஒருவன் தானே தனக்கு நண்பன், தானே தனக்குப்பகைவன் ஆகின்றான். என பகவத்கீதை குறிப்பிடுகின்றது. நம்பிக்கை, சகிப்புத்தன்மை, துணிவு , உறுதி ஆகிய நான்கு ஆயுதங்களால் நாம் விரும்பும் எதையும் சாதித்துவிடலாம். தயக்கமின்றி நம்பிக்கையுடன் எம்மை தயாராக்கிக் கொண்டு காரியத்தில் இறங்கமுற்பட்டால் எவ்வித இடையூறும் இன்றி எல்லாம் வெற்றியாகும். ஏதாவது ஒரு இலட்சியத்தில் நம்பிக்கை வைத்து, அந்த நம்பிக்கையை அறிவுபூர்வமாக செயற்படுத்தி, ஒவ்வொரு நாளையும் எம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் அடியெடுத்து வைக்கவேண்டும். அவ்வாறு இன்று செயற்பட்டால் தான் நாளையும் எம்மால் நம்பிக்கையுடன் சிந்திக்கமுடியும் தொடர்ந்து செயற்படவும் முடியும்.

ஒருவன் முதலில் தன்னிடம் தானே நம்பிக்கை இழக்கக்கூடாது தான் எதையும் சாதிக்க வல்லவன் என்ற நம்பிக்கை இருத்தல் வேண்டும். இந் நம்பிக்கை இம்மண்ணில் பிறந்த ஒவ்வொருவரிடமும் பிறக்கும் போதே இருக்கின்றது. எவ்வாறெனில் இவ் அவனியில் அவதரிக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் ஒரு பெரிய சவாலை எதிர்கொண்ட அவதரிக்கின்றது. அதாவது பல்லாயிரக்கணக்கான மூலவுயிர்களுடன் (அணுக்களுடன்) போட்டியிட்டு முதலில் வரும் ஓர் அணு தாயின் கருவறையில் கருவுற்று, பின் அக்கரு நன்முறையில் விருத்தியடைந்த குழந்தைக்குரிய அமைப்பைப் பெற்று, வெற்றிகரமாக இவ் அவணியில் அவதரிக்கின்றது. ஆகையால் பிறக்கும் போதே நாம் ஒவ்வொருவரும் எதையும் சாதிக்கும் வல்லமை படைத்தவராகின்றோம்.

பின்னர் அக் குழந்தை மெதுவாக தவழுகின்றது. எழுந்திருக்கின்றது. நடக்க எத்தணித்து கீழே விழுந்து மீண்டும் நம்பிக்கையுடன் முயன்று, எழுந்து ஒருவருடம் பூர்த்தியாகும் போது நடக்கவும் செய்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் அக்குழந்தை பிறர் சொல்வது எதையும் கேட்பதும் இல்லை அக்குழந்தைக்கு விளங்குவதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் இதை ஒவ்வொரு குழந்தைகளும் சாதிக்கின்றனர்.

அத்துடன் அவனுடன் அவனுடைய தாயும் தந்தையுமே அதிகமாக அவனுடன் இருக்கின்றனர். அதனால், நம்பிக்கை இழப்பதற்கும் சந்தர்ப்பங்கள் இல்லை. பின்னர் அவன் வளர்ந்து சமூகத்தில் பிரவேசிக்கும் போது சுற்றத்தாருடைய வார்த்தைகளை அதிகம் கேட்கின்றான். அதிகம் கிரகிக்கின்றான். அதிகமாக யோசிக்கின்றான். இதன் போது அவன் பயப்பட ஆரம்பிக்கின்றான். தன்னம்பிக்கையை இழக்கவும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஆகவே நாம் ஒவ்வொருவரும் தன்னில் நம்பிக்கை வைத்து பிறரின் நம்பிக்கை இழக்கும் செயற்பாடுகளை, வார்த்தைகளை கண்டு கொள்ளாது எமது இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும்.

"எதுவும் முடியாதது என்றில்லை
முகம் கொடுக்கப்படாதது எதுவோ அதுவே முடியாதது"

ஒருவனால் முகம் கொடுக்க முடியாதபோது தன்னம்பிக்கை, துணிவு, பல மற்றவனாக தன்னையே தோல்வியாக நினைத்து அச்சமுற்று துவண்டு விடுகின்றான். குடும்ப, சமூக, சமய, பொருளாதார வாழ்வை நகர்த்திச்செல்ல முடியாமல் தத்தளிக் கின்றான். ஆனால், "என்னால் முடியும்" என்ற தன்நம்பிக்கை உருவாகும்போது அவன் வாழ்வின் ஒரு படி மேலே தள்ளப்படுகின்றான். ஆபிரகாம்லிங்கனின் வரலாற்றை நாம் எடுத்து நோக்கினால் ஏழையாக இருந்த போது பல எதிர்ப்புக்கள், பயங்கள், கொலைகள், பயமுறுத்தல்கள் என்பவற்றிக்கு முகம் கொடுத்து பணக்கார வர்க்கத்தினருக்கு எதிராக போராடி அடிமைத்தனத்தை வென்றெடுத்து அமெரிக்க ஜனாதிபதியாகினார்.

இன்றைய மாணவர்கள் எதிர்கால தலைவர்கள் இவர்களிடம் கோழைத்தனம் முற்றாக நீக்கப்பட வேண்டும். மனத்துணிவு, தன்னம்பிக்கை, ஆளுமைப் பண்பு, தலைமைத்துவப் பண்பு வளர்க்கப்பட வேண்டும். ஒரு விடயத்தில் நாம் முழுநம்பிக் கையுடன் செயற்பட்டு தோல்வி அடைய நேரிட்டால் துவண்டு போகக்கூடாது. ஏனெனில், இதன்மூலம் நாம் பல சவால்களை முகம்கொடுக்க துணிந்தவர்கள் ஆகின்றோம். அத்துடன் தோல்வியே வாழ்க்கையின் வெற்றியை அடைவதற்கான முதற்படியாகும். எனவே இன்றைய போட்டிச் சூழலில் தன்னம்பிக்கையுடன் முகம்கொடுத்தல் என்பது ஒவ்வொருவரது மனித வாழ்விலும் மிகவும் இன்றி அமையாத அம்சமாக அமைகின்றது.

"உங்களுடைய நம்பிக்கைகளும், கனவுகளும், இலட்சியங்களும் தகர்க்கப்படும் போது அந்த சிதைவுகளுக்கு இடையே தேடிப்பாருங்கள் இடிபாடுகளுக்குள்ளேயே புதைந்து கிடக்கும் ஒர் பொன்னான வாய்ப்பு உங்கள் கண்ணில்படும்"

- (Doctor அப்துல்கலாம்)

நன்றி

**திரு. க.கஜன்**
பழைய மாணவன்
2014 வர்த்தகப்பிரிவு (A/L)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிகள் ஒளிரட்டும்

நிராயுத பாணியாய் நிற்கின்றான் இறைவன்
ஆயுதங்களோடு மனிதன் நிற்க...
உடலில் தான் ஓடவேண்டும் குருதி - இங்கு
வீதியில் ஓடுவது ஏன்?
மனிதாபிமானத்தை கொல்வது நியாயமா?
அன்பு எனும் சொல்லையே
கட்டளையிடுகின்றான் இறைவன்.
மதக்கொடியை தாங்கும் கோபுரங்கள்
இரத்தக்கறை தாங்கலாமா?
கறுப்பனும் நாம் தான், முல்லாவும் நாம்தான்
ஏன்? பீட்டரும் நாம் தான்
ஒருவரை ஒருவர் தேடிக்கொள்வோம் கூடிக்குலாவிட
பழிவாங்கிட வேண்டாம்
கடவுளின் மகிமையை பறைசாற்றட்டும்
எமது புனித நூல்கள் - தவறில்லை
ஆனால், கடைப்பிடிக்க மறுப்பதேன்?
இந்துக்கள் மனதார வணங்கட்டும்?
கிறிஸ்தவர்கள் ஜெபிக்கட்டும்,
இஸ்லாம் தொழுகை செய்யட்டும்.
பயத்துடன் அல்ல, சுதந்திரத்துடன்
உரிமைகள் நூலில் மட்டுமன்றி
உரிமையோடு இருக்கட்டும் - அவர்கள் வாழ்விலும்
கடவுளைப்பற்றி கவலைப்பட வேண்டாம்.
புகழை பறைசாற்றவும் வேண்டாம் - இறைவன்
மனிதனை நினைந்து வருந்தும் நிலையில்..
பிஞ்சுகளின் அழுகையில், தாயின் கதறலில்
இறைவன் அடையும் திருப்தி தான் என்ன?
வரங்கள் கிடைக்குமென்ற நப்பாசையா? - இல்லை
பெருமை உயரும் என்ற கற்பனையா?
அப்பாவி உயிர்கள் வணங்க வழிவிடுங்கள் நிம்மதியாய்...
உங்களை தூண்டிவிட்டவர்கள் யார்?
தீபங்களான உங்களை பந்தமாய் எரிய விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்து இரசிக்கும் அற்ப திருப்தி என்ன?
சிறிது நேர பேரிரைச்சலில் உங்களையும் கருக்கி
இருளடையப்போகும் உலகைப்பாருங்கள்...
யாருக்காக வெடித்தீர்களோ அங்கு
அவனும் கதறுகின்றான்.
கறுப்பனை கூப்பிடாதீர்கள்,
முல்லாவையோ, பீட்டரையோ கூப்பிடாதீர்கள்
மனிதனைக் கூப்பிடுங்கள் - அங்கே
தீபங்களாய் ஒளிர்வீர்கள்- இறைவன் புன்னகையில்
உயிர்கள் சிரிக்க....

**செல்வி. ஞானமணி மேகலா**
2015 வர்த்தகப்பிரிவு.
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் தொகுப்பு

## கல்வி

புத்தகம் எனும் செடியை அறிவு எனும்
வேரால் தாங்கு
பூக்கள் என்னும் புனிதமான வாழ்க்கை
உனக்கு கிடைக்கும்
கல்வி என்னும் கரு விழியை இமைகளாய் மாறி
பாதுகாத்துக்கொள்
உலகமே அந்த கரு விழி வழியே தெரியும்.

## பள்ளி படிப்பு

வெறும் புத்தகப் புழுவாய்
இருந்து விடாமல்
எதார்த்த வாழ்வின்
நடைமுறை சிக்கல்களையும்
மனித மனதின் முரண்பாடுகளையும்
எனது பள்ளி கற்று கொடுத்திருக்கிறது.

## தோல்வி

தோல்விகள் என்பது
உன்னை தூங்க வைக்கப்பாடும்
தாலாட்டு அல்ல
நீ நிமிர்ந்து நிற்பதற்கான
தேசியகீதம்

## வெற்றி

கஷ்டம் வரும்போது
கண்ணை மூடாதே
அது உன்னை கொன்றுவிடும்
கண்ணை திறந்து பார்
நீ அதை வென்று விடலாம்.

## வாழ்க்கை

கருவறையில் இருந்து இறங்கி
கல்லறையை நோக்கி நடந்து
செல்லும் தூரம் ஆகும் வாழ்க்கை
இப் பயணத்தில் வாழ்ந்தோம்
இறந்தோம் என்றில்லாமல்
இறந்தும் வாழ்கின்றவராக
வாழவேண்டும்.

## நட்பு

ஒரு நல்ல நட்பு
கரும்பை போன்றது
நாம் அதை அடித்தாலும்
ஒடித்தாலும், கடித்தாலும்
பிழிந்தாலும் நமக்கு
அது இனிப்பை மட்டுமே
தரும்

## தாய்

உடலில் சுமந்து
உயிரை பகிர்ந்து
உருவம் தந்த தெய்வம்
உலகில் தேடித் தேடி அலைந்தாலும்
மீண்டும் அமர முடியாத ஒரே
சிம்மாசனம் தாயின் கருவறை

**ஆக்கம் : –செல்வி. கு.சுகித்தா**
பழைய மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அள்ளிக் கல்வி தந்த அன்னைப்பள்ளிக்கு என் பொன்னான வாழ்த்துக்கள்

தாய்மொழி தமிழால் தரமுயர்ந்து நிற்கும் என் பள்ளிக்கு தலை சாய்த்து தடம் பதித்த என் கல்விப் பயணத்தில் உரம் கொடுத்த என் பள்ளியே 'பொன்விழா' காணும் இந்நாளில் போற்றி நிற்கிறேன். அரிச்சுவடி தொட்டு ஆண்டு பதினொன்று வரை நீண்டு தடம் பதித்த என் கல்விப்பயணம் எம் ஊர் பள்ளி கனகபுரம் மகாவித்தியாலயம் வரலாறு சொல்லும் வளமான கனகபுரத்தில் படித்த வாலிபர் திட்டத்தில் பசுமையாய் மிளிர்ந்த பள்ளி என்று பெருமை கொள்கின்றேன். சின்ன வயதில் மெல்ல நடந்து சிறப்புடன் கல்வி கற்று ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் (2011) சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்ந்ததை எண்ணி உவகை கொண்டது என் உள்ளம்.

மெல்லென நாங்கள் தரங்களில் உயர்ந்து ஒன்பதாம் ஆண்டுகளில் (2015) மாகாண மட்ட பரீட்சையிலும் மனம் மகிழ பதினொரு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று வெற்றி கண்டோம். என்றால் என் பள்ளி எனக்கு தந்த சிறப்பான கற்றல் தானே! பள்ளியே! உன்னை மெச்சிட வார்த்தைகள் இல்லை.

பாதைகள் மாறவில்லை தொடர்ந்தும் உன்னோடு பதினோராம் ஆண்டு வரை திறம்பட பயணித்தேன். 2017ம் ஆண்டு என் பள்ளியின் ஐம்பது ஆண்டுகளில் வரலாற்றில் பொறிக்கப்பட்ட பெருமையான நாளாய் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் முதல் தடவையில் 9A அதிவிசேட சித்தி பெற்று என் பள்ளிக்கு பெருமை சேர்த்த பெருமை என்னையே சாரும் என்றால் அந்தப் பெருமையை எனக்குத் தந்தது என் அன்னை பள்ளியே! கனகபுரம் மகாவித்தியாலயம் பொன்விழா காணும் நாளில் பெருமையோடு நிமிர்ந்து நிற்கின்றேன். பெயர் தந்த என் பள்ளியை எண்ணி பதினொரு ஆண்டுகாலம் பயணித்த என் பாதையில்

கல்வி தந்த பள்ளியே!<br>
கற்பித்த அன்பு ஆசான்களே!<br>
துணை நின்ற அதிபர்களே!<br>
உற்சாகம் தந்த பெற்றாரே!<br>
தோள் கொடுத்த தோழர்களே!

நன்றியோடு கரம் கூப்புகின்றேன். உயர்தரம் கற்க பாதைகள் மாறின. பயணங்கள் தொடர்ந்தன விடை பெற்றோம் விழி வழிய விலகினோம் பள்ளியை விட்டு கனகபுரம் மகாவித்தியாலயம் பொன்விழா காணும் நாளில் வரம் கொடுத்து உயர்வு காணும் ஈழத்து மற்றும் புலம்பெயர்ந்த பழைய மாணவர்களை உற்சாகமும் முயற்சியும் மனம் மகிழ வைக்கிறது. நன்றிஉறவுகளே! தொடரட்டும் உங்கள் பணி.

"வளர்வு காணும் என் கல்விக் கூடமே தளர்வு இன்றி தரம் உயர்வாய்<br>
பொன்விழா காணும் மங்கல நாளில் அன்னை பள்ளியே! கனகபுரம் வாழி வாழி!"

**செல்வி. தி.கம்ஷாயினி**<br>
பழைய மாணவி<br>
2017 (O/L) batch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை நாட்கள்

முன்பள்ளியில் கல்வி கற்ற நான் எனது தரம் ஒன்றுக் கல்வியை ஆரம்பிப்பதற்காக கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயத்திற்கு எனது தாயாருடன் சென்றேன். அங்கு தலைநிமிர்ந்து நின்ற 2 மாடிக் கட்டடம் பாடசாலையின் கோபுரம் போலத் திகழ்ந்தது. ஆங்காங்கே இருந்த விதவிதமான மரம் செடிகளும் அவற்றின் அடியில் இருந்த ஜப்பான் ரோஸ்களும் எனது கண்களைக் கவர்ந்தன. நான் என் தாயாரோடு அதிபர் காரியாலயத்தில் அனுமதிக்கப்பட்டேன். அதிபரின் அனுமதியுடன் தரம் ஒன்று வகுப்பில் சேர்க்கப் பட்டேன். அங்கு வாயிலின் இருதிசைகளிலும் அழகியப் பூச்செடிகள் காணப்பட்டதுடன் அதன் நடுவில் அழகிய பூவரச மரமும், அதன் அடியில் மல்லிகைக் கொடியும் காணப்பட்டன. அதனைச் சுற்றி வெள்ளை நிறத்தில் வட்டவடிவில் சீமெந்துக்கட்டுக் காணப்பட்டது. பின் அவற்றை இரசித்தவாறு நான் வகுப்பறைக்குள் ஓடிச் சென்றேன். அங்கு யானை, கோழி, கிளி, மயில் போன்ற பிராணிகளின் அழகிய ஓவியங்கள் காணப்பட்டன. அத்துடன் சுவர்களில் அழகிய வாத்துக் குஞ்சுகள், அணில், வண்ணத்துப் பூச்சி போன்ற காட்டூன் படங்கள் காணப்பட்டன. எமது வகுப்பாசிரியர்களாக ஆசிரியர் தவனேஸ், ஆசிரியர் கனகசுந்தரம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

என்னுடன் கல்விகற்க வந்த மாணவர்கள் ஒருவரையும் எனக்குத் தெரியாது. இதனால் நான் அவர்களோடு சந்தோசமாகப் பழகமுடியவில்லை. நாட்கள் உருண்டோட அனைவரும் நண்பர்களானோம். அடிக்கடி சிற்சில கோபங்கள் முரண்பாடுகள் வந்து போகும். இவ்வாறு நாட்கள் நகரும் போது போட்டிகள் ஆரம்பித்தன. நான் தரம் ஒன்றில் பிரதேச சபையின் சித்திரப்போட்டி, தமிழ் உறுப்பெழுத்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், திருக்குறட்போட்டியில் வெற்றி பெறவில்லை இது எனக்கு மிகவும் வேதனையைத் தந்தது. ஆசிரியரின் கவனிப்பாலும், தாயாரின் கவனிப்பாலும் தவணைப் பரீட்சையில் முதலிடம் பெற்றேன்.

தரம் 2இல் ஆசிரியர் தவனேஸ் எம்மைவிட்டு விலகி ஆசிரியர் கனகசுந்தரம் மாத்திரம் வகுப்பாசிரியராகக் காணப்பட்டார். அவர் மாணவர்களில் மிகுந்த அக்கறை உள்ளவர். தரம் 2ல் தமிழ் உறுப்பெழுத்துப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக "மொழிக்கலசம்" எனும் புத்தகம் பிரதேசசபையால் வழங்கப்பட்டது. தொடர்ந்து தரம் 3இல் ஆங்கில தினப்போட்டியில் ஆங்கில உறுப்பெறுத்துப் போட்டியில் 1ம் இடமும், கவிதைப் போட்டியில் மூன்றாம் இடமும் பெற்றேன். முதன் முதல் எனக்கு மாகாணப்போட்டியில் கலந்து கொள்ள என்னை வழிப்படுத்திய மதிப்பிற்குரிய ஆசிரியர் திருமதி கார்த்திகாயினி அவர்களை என் நினைவுகளில் உயர்ந்த இடத்தில் வைத்திருப்பேன்.

என்னோடு அனைத்து ஆசிரியர்களும் அன்பாகப் பழகினார். மிகுந்த அக்கறை காட்டினார்கள். எனது நண்பர்களில் சிலரும் அன்புடன் பழகினார்கள். வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் நண்பர்களுடன் கைகோர்த்து சுற்றித்திரிந்து விளையாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் என்றும் பசுமையானது. தரம் 4இல் தவணை 3இல் புலமைப் பரீட்சை வகுப்புக்கள் ஆரம்பித்தன. தரம் ஐந்து புலமைப்பரிசில் பயிற்சிகள் முழுமையாக வழங்கப்பட்டன. ஈற்றில் நூற்றி எண்பத்தைந்து புள்ளிகள் பெற்றேன். என்னை மாவட்ட மட்டத்தில் முதலாம் நிலையில் வருவேன் என அனைவரும் எண்ணினர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. காரணம் வினாத்தாளை நிதானமாக வாசிக்கவில்லை. கட்டுரைப் போட்டியில் இரண்டாம் நிலையை மகாண ரீதியில் பெற்றேன். இதனால், மாகாண கௌரவிப்பு நிகழ்வில் வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. என் பெயர் பத்திரிகையில் வெளியாகியது அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

எனக்கு உடல் நலமின்றிய சந்தர்ப்பங்களில் என் நண்பர்களின் பெற்றோர்களும் அதிபர், ஆசிரியர்களும் என்னில் மிகுந்த அக்கறை காட்டிக் கவனித்ததை என்றும் மறவேன். சிறுவர் தினத்திற்கு ஆசிரியர்கள் எமக்கு வாழ்த்துக்கூறி பரிசில்கள் தருவதுடன் தாமே உணவு சமைத்து எம்மை வரிசையாக இருத்தி வாழையிலை போட்டு உணவு பரிமாறுவார்கள். நண்பர்களுடன் உணவுண்டு மகிழ்ந்த அந்நாட்கள் எவ்வளவு இனிமையானவை. ஒவ்வொரு ஆசிரியர் தினத்திற்கும் ஆசிரியர்களை வாழ்த்தி கவிதை வாசிப்பேன். அவர்கள் நன்றாக இருந்தது என்று பாராட்டும் போது மனம் பூரிப்படைவேன்.

கல்வி, விளையாட்டுக்களில் சிறந்து விளங்கும் இப்பாடசாலை பொன்விழா காண்பதை எண்ணி பெருமிதம் அடைகின்றேன். தொடர்ந்தும் பல துறைகளிலும் சாதனைகள் படைத்திடவும் சரித்திரங்கள் போற்றிடவும் திகழ வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

ஆக்கம்
**செல்வி. சி. நிரூஷி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றம்



# ஆங்கில மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமா மன்றம்



# கிறிஸ்தவ மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மன்றம்



# அழகியல் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித விஞ்ஞான மன்றம்



# சமூக விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டிகளின் வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தியோராம் நூற்றாண்டு ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் மற்றும் திறன்கள்

## (Competencies and Skills for 21st century teachers)

பல்கலைக்கழகத்தில் கற்பித்தாலென்ன, ஆசிரிய கல்வி நிறுவனங்களில் கற்பித்தாலென்ன அல்லது பாடசாலையில் கற்பித்தாலென்ன, கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஆசிரியர்களே. நாம் இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகளாவிய ரீதியில், வகுப்பறைகள் பல மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றன. கற்பித்தலுக்கு பல தேர்ச்சிகள் மற்றும் திறன்கள் தேவைப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில், தற்காவ கல்வியுலகிற்கு பொருத்தமான தேர்ச்சிகளையும் திறன் களையும் ஆசிரியர்களாகிய நாம் கொண்டிருக்கின்றோமா? எனச்சிந்தித்துப்பார்ப்பது பொருத்தமானது என நான் நினைக்கின்றேன். நானும் ஒரு ஆசிரிய கல்வியியலாளன் என்றவகையிலும், ஆசிரியர்களுக்கு கற்பிப்பவள் என்ற ரீதியிலும், நாம் அனைவரும் எமது தேர்ச்சிகள் மற்றும் திறன்களை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துவது அவசியமானதாகும்.

**ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சிகள்**

தற்கால ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சிகள் பலவாகும். அவற்றை பின்வருமாறு இலங்கை கல்வியமைச்சு **(2015)** வகைப்படுத்தி குறிப்பிடுகின்றது.

**கற்றல் பேறுகளை அடைவதற்காக விளைதிறனாக செயற்படல்**

- இதன்கீழ் சகல ஆசிரியர்களும், கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை சிறப்பாகத் திட்டமிடல்.
- கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை விளைதிறன்மிக்கதாக செயற்படுத்தல்.
- மாணவர்கள் தேர்ச்சிகளை பெறுகின்ற வகையில் கணிப்பீடு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டலை மேற்கொள்ளல்.

**தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் தேர்ச்சிகளை வெளிப்படுத்தல்.**

இதன்கீழ் சகல ஆசிரியர்களும், பாடசாலையின் இலக்கு மற்றும் நோக்கக்கூற்றுக்கு ஏற்றவாறு செயற்பாடுகள்

- விளைதிறன் தொடர்பான தேர்ச்சியை வெளிப்படுத்தல்.
- ஆலோசனை மற்றும் வழிகாட்டல் விடயங்களின்போது தமது பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றல்.
- தமது விடயங்களுக்குரிய முகாமைத்துவத் தகவல்களின் அறிக்கைகளை முறையாகப் பேணல்.

**தொழிற்றகமைமிக்கவராக செயலாற்றல்**

- இதன்கீழ் சகல ஆசிரியர்களும், தொழிற்றகமையை உறுதிப்படுத்திக்கொள்ளல். இருக்கின்ற சட்டதிட்டங்களின்படி செயற்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பண்பாடுகள் மற்றும் கலாசார விடயங்களுக்கு மதிப்பளித்து முன் மாதிரியான நடத்தைக்கோலங்களை வெளிப்படுத்தல்.
- சமூகத்தில் தொழில்வாண்மை மிக்கவராக ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில் செயற்படுத்தல்.

4. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் நேரடியான பங்களிப்பை வழங்க வேண்டும். இதன் கீழ் சகல ஆசிரியர்களும், மாணவர்களின் முழுமையான ஆளுமை விருத்திக்கு உதவுகின்ற விதத்தில் பல்வேறு இணைப்பாடவிதான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்தல். மாணவர்களின் இயலுமைகளை இனங்கண்டு சகல மாணவர்களையும் பல்வகையான இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல். இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதை குறைப்பதற்கு வழிசெய்தல்.

**ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய இருபத்தியோராம் நூற்றாண்டுத் திறன்கள்**
(21th Century Skills)

சகல ஆசிரியர்களும் பின்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டுத் திறன்களை கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

**கற்றல் திறன்கள்** (Learning skills)

- திறனாய்வுச்சிந்தனை (Critical Thinking) - பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணுதல்.
- படைப்பாற்றல் (Creativity ) - Thinking Outside the box கூட்டாகச் செயற்படல் (Collaboration) - ஏனையவர்களுடன் உரையாடல்

**2. எழுத்தறிவுத்திறன்கள்** (literacy skills)

- தகவல் எழுத்தறிவு (Information Literacy ) - எண்ணக்கருக்கள், படங்கள், புள்ளி விபரங்கள் மற்றும் தரவுகளை புரிந்து கொள்ளல். ஊடக எழுத்தறிவு (Media Literacy) - Understanding the methods and outlets in which information is published. தொழில்நுட்ப எழுத்தறிவு (Technology literacy) - Understanding the machines that make information age possible.

**3. வாழ்க்கைத்திறன்கள்** (Life Skills)

- நெகிழ்ச்சித்தன்மை (Flexibility - Deviating from Plans as needed. தலைமைத்துவம் (Leadership) - Motivating a learn to accomplish a goat. ஆரம்பித்தல் (Initiative - starting projects,, strategies, and plans on one's own உற்பத்தித்திறன் (Productivity) - Maintaining efficiency in an age of distractions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூகத்திறன்கள் (Social skills) - Meeting and networking with others for mutual benefit.

**ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்ப தேர்ச்சியும் (Teachers and IT Competency)**

கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கேற்ப ஆசிரியர்கள் தமது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவையும் தேர்ச்சியையும் விருத்தி செய்து கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

**சுயநெறிப்படுத்தப்பட்ட கற்பவர்களாக ஆசிரியர்கள்** (Teachers as self - regulated learners)

ஆசிரியர்கள் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலுக்கான ஆற்றல்களான, கற்றல் இலக்குகளை உருவாக்குதல், திட்டமிடல், சுயஊக்கல், சுயகவனிப்பு, சுயகட்டுப்பாடு, சுயகற்றல் உத்திகளின் பயன்பாடு, சுயமேற்பார்வை, பொருத்தமான புலமைசார்ந்த உறவுகளை சுயமாகத் தேடல், சுய பிரதிபலிப்பு மற்றும் சுயமதிப்பீடு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- கற்றலுக்குத் தேவையான ஆலோசனைகளை புலமைச்சிறப்புமிக்க பலரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு முனைதல்.
- கற்றலுக்கான சாதகமான சூழலைத்தாமே உருவாக்க முனைதல்.
- சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றல் செயற்திறன்களைப் பெற்றிராத சகபாடிகளுடனான தொடர்புகள் இயல்பாகவே குறைதல்.
- அடைவுப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப்பெறுதல்.
- சுயகற்றலில் உயர் நம்பிக்கை கொண்டிருத்தல்.

**நவீன ஆசிரியர்களுக்குத் தேவையான கற்பித்தல் திறன்கள்** (Skills needed for modern teachers)

- தற்கால ஆசிரியர்கள் பின்வரும் கற்பித்தல் திறன்களை கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது,
- பாடத்தை அறிமுகஞ்செய்யும் திறன் (Introduction Skills)
- விளங்கப்படுத்தும் திறன் (Skills of Explanation)
- வினாக்களை வினாவும் திறன் (Skills of probing questions)
- கற்பித்தல் துணைக்கருவிகளை பயன்படுத்தும் திறன் (Skills of using teaching aids) மற்றும்
- பாடத்தை நிறைவுசெய்யும் திறன் (skills of closure) என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.
- மேலும் 21ம் நூற்றாண்டு ஆசிரியரானவர் இசைவாக்கிக்கொள்பவர், சிறந்த தொடர்பாளர், வாழ்க்கை நீடித்த கற்போன், சிற்நத தலைவர், சிறந்த முன்மாதிரி, கூட்டாகப் பணிபுரிபவர், இடர்களை எதிர்கொள்பவர் சிறந்த கதை கூறுபவர் வடிவமைப்பாளர், சிறந்த கலைஞர், உறவுகளை கட்டியெழுப்புபவர் மற்றும் புத்தாக்குனர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர்களும் கல்வி ஆராய்ச்சியும்** (Teachers and Educational Research)

ஆசிரியர்கள் தமது பணியுடன் தொடர்புபட்டவகையில் கல்வி ஆய்வுகளில் ஈடுபடவேண்டுமென தற்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் மற்றும் நிர்வாக மேம்பாட்டுக்கு உதவும் வகையில் செயல்நிலை ஆய்வுகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள் மற்றும் கல்விசார் ஆளணியினர் ஈடுபடவேண்டும் என தற்கால கல்வி முறைமை எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைப் பாடசாலைக் கல்வித்துறையின் ஆய்வுகள் தினம், முதன் முதலாக 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டு ஆய்வுதின எண்ணக்கருவானது "கல்வித்துறையின் சிறந்த அடைவுகளை எட்டுவதற்கான ஆய்வுகள் (Research for Achieving Excellence in Education)" என்பதாகும்.

கல்வித்துறையின் அளவுரீதியானதும் (Quantitative) பண்புரீதியானதுமான (Qualitative) அபிவிருத்திக்கு ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுத்தல் அவசியமானதாகும். ஆய்வுகள் தினத்தன்று அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆய்வில் ஈடுபடுத்துவதற்கே எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பரிசோதனை ஆய்வகள் (Experimental Research) மற்றும் சமூகம்சார் ஆய்வுகளில் (Social Research) ஈடுபட்டு, ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களது வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆசிரியர்களை வலுவூட்டல்** (Empowering Teachers)

உலகளாவிய ரீதியில் 'ஆசிரியர்களை வலுவூட்டல்' என்பது தொடர்பாக தொடர்ச்சியாக யுனெஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 'ஆசிரியர்களை வலுவூட்டல் மற்றும் பேண்தகு சமூகங்களை கட்டியெழுப்பல் (Empowering Teachers, Building Sustainable Societies)' என்பது 2015 ஆம் ஆண்டின் UNESCO வின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். அதேபோல 'ஆசிரியர்களுக்கு பெறுமதியளித்தல் மற்றும் அவர்களின் அந்தஸ்சை உயர்த்தல் (Valuing Teachers, Improving their status)' என்பது 2016 ஆம் ஆண்டின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். இதிலிருந்து, உலகளாவியரீதியில் 'ஆசிரியர்களை வலுவூட்டல்' என்பது தொடர்பாக தொடர்ச்சியாக யுனெஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருவதை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது.

முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள், நிபுணத்துவ அறிவு, விசேட திறன்கள் மற்றும் கற்பித்தல் தேர்ச்சிகள் என்பவற்றை கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்காலத்தில் ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்**

தற்காலத்தில் ஆசிரியர்கள் முன்சேவைப் (Per Service taining) பயிற்சியினூடாகவும் சேவைக்காலப் பயிற்சிகளினூடாகவும் (In - Service Trainings) வலுவூட்டப் படுகிறார்கள். இலங்கையில் ஆசிரிய முன்சேவைப்பயிற்சிகளை வழங்குவதற்காக இருபது தேசிய கல்வியியல் கல்லூரிகள் (National College of Education) அமைக்கப்பட்டுள்ளன. இவை தேசிய கற்பித்தல் சான்றிதழை (National Diploma in Teaching) வழங்குகின்றன.

சேவைக்காலப் பயிற்சிகளினை, கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக் களங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள், ஆசிரிய கலாசாலைகள் (Teachers' training colleges). ஆசிரிய மத்திய நிலையங்கள் மற்றும் பல்கலைக்ககழகங்களிலுள்ள கல்விப் பீடங்களும் கல்வியில் துறைகளும் ஆசிரியர்களுக்கு வழங்குகின்றன. தற்போது ஆசிரியர் சேவையின் தடைதாண்டலுக்கு, ஆசிரிய வாண்மைவிருத்தியுடன் தொடர்புடைய குறிப்பிட்ட மொடுல்களை பூர்த்திசெய்தல் கட்டாயமானதாகும். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள் (School Based Teacher Development - SBTD) பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றன.

**இலங்கையில் ஆசிரியர்களை வலுவூட்டலிலுள்ள குறைபாடுகள்**

- தேசிய மட்டத்திலும் கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்கள் இன்னும் பயிற்றப்படாது பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டிருக்கின்றனர்.
- ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பிற்கு முரணாக, அடிப்படை கல்வித்தகைமை யற்றவர்கள் தொடர்ச்சியாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.
- வலயமட்டத்தில் சேவைக்காலப் பயிற்சிகள் வழங்குவதற்கான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடரீதியான உதவிக்கல்விப்பணிப்பாளர்களது பற்றாக்குறை பல கல்வி வலயங்களில் காணப்படுகின்றது,
- வலயமட்டத்தில் சேவைக்காலப் பயிற்சிகள் வழங்குவதற்கான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடரீதியான உதவிக்கல்விப்பணிப்பாளர்ளகில் கணிசமான எண்ணிக்கை யானவர்கள் தமது வாண்மையை இற்றைப்படுத்திக்கொள்ளாமை.
- மாகாணமட்டத்தில் மற்றும் வலயமட்டத்தில் ஒழுங்கமைக்கப்படும் சில சேவைக் காலப் பயிற்சிகள் விளைத்திறனற்றவையாக நடாத்தப்படுகின்றது,
- மாறிவரும் காலத்திற்கேற்ப பல்கலைகழங்கள் மற்றும் ஆசிரிய கல்வி நிறுவனங்கள் தமது கலைத்திட்டங்களை மாற்றியமைக்காமை.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆசிரிய கல்வி நிறுவனங்களில் கடமையாற்றும் விரிவுரை யாளர்கள் மற்றும் ஆசிரிய கல்வியியலாளர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் கால மாற்றத்திற்கு ஏற்ப தமது வாண்மையை இற்றைப்படுத்திக்கொள்ளாமை.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செறயற்பாடுகள் எதிர்பார்த்த அளவில் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படாமை.
- அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஆளணியினர் தமது ஆசிரிய வாண்மை விருத்திக்கற்கை நெறிகளில் மேற்கொள்ளும் ஆய்வுகளின் முடிவுகள் சமூகத்தை சென்றடைவதில்லை.
- பாடசாலைகளில் நடைபெறும் ஆசிரியர்களின் உள்வாரி மற்றும் வெளிவாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடுகள் ஆசிரியர்களின் பணிமேம்பாட்டுக்கு உதவும்தன்மை குறைவாகக் காணப்படுகின்றது.

**எதிர்காலத்தில் ஆசிரியர்களை சிறந்த முறையில் வலுவூட்டுவதற்கான சிபார்சுகள்**

1. பின்வருவனவற்றுள் இருபத்தியோராம் நூற்றாண்டு திறன்கள் (21st Century Skills) தொடர்பாக எல்லா ஆசிரியர்களும் வலுவூட்டப்பட வேண்டும்.
   கற்றல் மற்றும் புதுமைத்திறன்கள் (Learning and innovation skills)
   டிஜிற்றல் எழுத்தறிவுத்திறன்கள் (digital literacy skills)
   தொழில் மற்றும் வாழ்க்கைத்திறன்கள் (Career and life skills)
2. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள், ஆசிரியர்களின் பங்களிப்புடன், சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.
3. ஆசிரியர்கள் தமது கற்பித்தல் தொடர்பாக சகபாடி மற்றும் சுயமதிப்பீட்டை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும். கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 6/2013 இற்கு அமைவாக தற்போது பாடசாலைகளில் 'பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்" முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைத் திட்டங்களில் மாணவர்களின் உளநலன் மேம்பாடு மட்டுமன்றி ஆசிரியர்களின் உளநலன் மேம்பாட்டுக்கான நடிவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் உச்ச அளவு வினைத் திறனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
5. ஆசிரியர்கள் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட வேண்டும். வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அவர்களது வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில் நடைபெற்ற நீண்ட உள்நாடடு யுத்தத்தில் அதிகளவில் பாதிப்பிற் குள்ளானது வடக்கு மாகாணமாகும். இதனால் எமது பாரம்பரியச் சொத்தான கல்வியில் பல பின்னடைவுகளைச்சந்திக்க நேர்ந்துள்ளது. அண்மைக்கால பொதுப்பரீட்சை அடைவு வீழ்ச்சிகள் அதற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்த யதார்த்த நிலையை கல்விசார் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு காலத்தைப்போக்காது, வடமாகாண கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஒற்றுமையாக ஈடுபடுவோம். கால மாற்றத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வியமைச்சு மற்றும் ஆசிரிய கல்வி நிறுவனங்கள், காலமாற்றத்திற்கு பொருத்தமாக ஆசிரியர்களை வலுவூட்ட வேண்டும்.

நன்றி

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணைகள்**


1. UNESCO *(2017)* World Teachers' day - 5th October 2017, Retrieved from
2. சின்னத்தம்பி.மா *(2016)*, ஆசிரியர்களது எதிர்கால அறைகூவல்கள், ஆசிரியர் மகாநாட்டுப்பேருரை, வடமராட்சிக்கல்விவலயம். *29.04.2016*
3. கல்வி அமைச்சு *(2017)* இலங்கைப்பாடசாலைக்கல்வித்துறையின் ஆய்வுகள் தினம் (Research Day) - மார்ச் - 15 இசுறுபாய, பத்திரமுல்ல.
4. நித்திலவர்ணன், *(2007)* சுதந்திரமாக கற்பித்தல் மற்றும் ஆசிரியர்களை வலுவூட்டல், யா/ மட்டுவில், கமலாசினி வித்தியாலய ஸ்தாபகரான வித்துவான் இராமலிங்கம் நினைவுப்பேருரை, *25.10.2017*
5. இலங்கை கல்வியமைச்சு *(2015)* ஆசிரியர்தின அனுபந்தம், வீரகேசரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கு

பாடசாலைகளின் பாடவிதானத்தில் ஆரம்பக்கல்வி மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். அனைத்திற்கும் ஆரம்பக்கல்வியே அடிப்படை என்பதற்கு ஏற்ப ஆரம்பக்கல்வியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு சிறப்பாகவும், தெளிவாகவும் மாணவரைச் சென்றடைதல் இன்றியமையாதது ஆகும். அதற்கு ஆசிரியரின் வகிப்பங்கு முக்கியமானதாகும். கல்விச் சிந்தனையாளர் கால்டுவெல், மென்ரிசூரி அம்மையார் ஆகியோரால் எடுத்துரைக்கப்பட்ட "விளையாட்டு முறைக் கற்றல்" தற்கால சீர்திருத் தங்களில் சிறந்த முறையாக செயற்படுகிறது. அந்த வகையில் அரங்க விளையாட்டுச் செயற்பாடுகள் மனக்கணித விளையாட்டுக்களின் ஊடாக மகிழ்ச்சிகரமான கற்றலையும் உடலியக்கத் திறன்களையும் கல்வியில் நாட்டத்தையும் ஏற்படுத்த முடியும்.

மேலும் இலத்திரனியல் உபகரணச் செயற்பாடுகளின் ஊடாக மாணவரின் விருப்பமான கற்றலை மேம்படுத்துவதால் அடைவை மேம்பாட்டுக்கு இட்டுச்செல்லும், அத்துடன் விளையாட்டுக்கள் மூலம் பிள்ளைகள் தானே தொடர்ந்து இயங்குகின்ற ஆற்றலை, வளர்க்கின்றன என்றும், புலங்களுக்குப் பயிற்சி தருகின்றது என்றும் மொன்ரிசூரி அம்மையார் கூறுகின்றார். எனவே, ஆரம்பப் பருவப்பிள்ளைகளுக்கு மிகவும் பயன்மிக்க முறையாகவும் காணப்படுகிறது. விளையாட்டை கருவியாகப் பயன்படுத்தி பிள்ளைகளை கல்விச் செயற்பாட்டில் நாட்டத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்த முடியும்.

கற்றலும், கற்பித்தலும் சிறப்பாக நிகழும் போதே பாடசாலையில் மாணவர்களின் அடைவு மட்டம் உயரும், இங்கு அடைவு மட்டம் எனக் குறிக்கப்படுவது மாணவரின் அறிவில், திறனில், மனப்பாங்கில், விழுமியத்தில் ஏற்படும் உரிய தேர்ச்சிகளைக் குறித்து நிற்கின்றது. என்பதைக் கண்டறியும் கற்றல், கற்பித்தல் செயன்முறையினை தொடர்ச்சியாக விருத்தியாக்கக்கூடிய செழுமை மிகு கல்வியியலாளர்களாக ஆசிரியர்கள் மிளிருதல் வேண்டும்.

மாணவர் எல்லோரும் ஒரே மாதிரியான அடைவு மட்டத்தை உடையவர்கள் அல்லர். அவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப அடைவு மட்டங்களும் வேறுபட்டுள்ளன. இதனால் ஆய்வின் இறுதியின் விளைவு, எல்லா மாணவர்களையும் ஒரே மாதிரியான அடைவு மட்டத்துக்கு கொண்டு வந்துள்ளது எனக்கூற முடியாது. எனவே மாணவர்களின் கற்றலில் மகிழ்ச்சியான கற்றல் - கற்பித்தல் செயற்பாடு பாட அடைவினை உயர்த்த முடியும். அதாவது மாணவர் விரும்பும் கற்றல் முறையில் கற்பிக்கும் போது அடைவு மேம்பாடு அடைவது நிதர்சனமானது.

ஆசிரியத்துவம் ஓர் களைப்படையும் தொழில் நுட்பமாகும். ஆசிரியர்கள் உடல் ரீதியாகவும் மட்டுமன்றி, உளரீதியாகவும் களைப்படைவர். பாடசாலை முடிவடையும் போதும், தவணை முடிவடையும் போதும், களைப்பின் மிகுதியை உணர்வர் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் ஒருவரின் கருத்தாகும். "உண்மையில் மகிழ்வான கற்பித்தல் முறையின்றி கற்பிக்கும்" போது களைப்பின் மிகுதியை உணர்த்தக் கூடியததாக இருக்கும். வெறுமனே வாய் மொழிமூல ஆசிரியர் தொழிற்பாடு கூடிய கற்பித்தல் மூலம் சரியான எண்ணக்கரு மாணவரிடம் ஏற்பட்டிருக்குமா? என்பது கேள்வியே? ஒரு அலகை எவ்வளவு தூரம் வாய்மொழி மூலம் மட்டும் விளக்கினாலும், எதிர்பார்த்த விளைவு கிடைப்பதில்லை. ஆசிரியர்களுக்கு களைப்பு ஏற்படுகிறது. ஆனால், விடயத்தை சாதனங்கள் மூலம் கற்பிக்கும் போது ஒரு புலக்காட்சியை மாணவர்கள் பெற முடியும். இதனையே ஆய்வாளர் கருப்பொருளாக எடுத்து வெளிப்படுத்தினார் எனலாம்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள், முரண்பாடுகள், உளப்பாதிப்பு, விரக்தி, நெறிபிறழ்வான நடத்தை முதலிய வற்றிலிருந்து விடுவித்து அரங்க விளையாட்டுக்கள் இலத்திரனியல் உபகரணச் செயற்பாடுகள் மூலம் மகிழ்ச்சிகரமான கற்றலில் மாணவர்களை ஈடுபடுத்துவது என்பது எதிர்கால கல்வியின் தேவைப்பாடாகும்.

**ஆசிரியரின் வினையாற்றல்**

- மகிழச்சிகரமான கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளைப்பிரயோகித்தல்
- சிறந்த கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல்
- அரங்க விளையாட்டுக்கள், வினோத விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் கற்பித்தல்
- மனக்கணித விளையாட்டுக்கள் ஆடல், பாடல் செயற்பாடுகள் மூலம் கற்றல்
- மாணவர் அடைவு சம்பந்தமாக பெற்றோருடன் தொடர்பை விருத்தி செய்தல்
- அரங்க விளையாட்டு முறை மூலம், ஆடல் பாடல் செயற்பாடுகள் மூலம் மாணவருக்கு
- நேரடியாக அனுபவங்களைக் கற்றுக்கொடுத்தல்.
- பெற்றோர்களிடம் பிள்ளைகளின் அடைவு மட்டத்தினை முன்னேற்றுவது தொடர்பான திறந்த கலந்துரையாடல் கிரமமாக ஈடுபடல்.
- கற்போரின் சுயகற்றலை மேம்படுத்தக்கூடிய கற்பித்தலை மேம்படுத்தல்.
- திருப்திகரமான வகுப்பறைக் கவின் நிலையை விருத்தி செய்தல்.
- பாட வடிவமைப்பில் நேர்ப்பாங்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தல் வேண்டும்.
- தொடர்பாடல் நுட்பங்களைப் பொருத்தமாய் பயன்படுத்தல்.
- தொடர்பாடல் நுட்பங்களை வினைத்திறனுடன் உபயோகித்தல் வேண்டும்.
- கற்றலை தூண்டுவதற்கான வளங்களை சந்தர்ப்பங்களை உருவாக்கல், பயன்படுத்தல், மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- பாடப்புல அறிவு, பாடத்திட்டமிடல், வகுப்பறை முகாமைத்திறன், கற்போனுடைய வெளிப்பாடுகளை ஊக்குவிக்கும் திறன், கற்றலை அளவிடலும், மதிப்பிடலுமான திறன் ஆகிய கற்பித்தல் சார்ந்த தேர்ச்சி ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும்.
- கற்றல் - கற்பித்தல் திட்டமிடல் ஆகியவற்றினை நெறிப்படுத்த சக ஆசிரியர்களின் உதவி பெறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றல் - கற்பித்தல் சாதனங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தல் மூலம் கற்பித்தல் இலகுவடைகிறது.
- மாணவரிடையே தரிசன நோக்கினை (vision) விருத்தி செய்து அதனை அடைவதற்கு இடையூறாது ஊக்குவித்தல்.
- மாணவர்கள் மீது நம்பிக்கையும், விசுவாசத்தையும் கொண்டிருப்பதோடு உடன்பாடான மனப்பாங்குகளை வெளிப்படுத்தல் வேண்டும்.
- மாணவர் அடையும் சிறுசிறு வெற்றிகளைக் கூட முதன்மைப்படுத்திக் கொண்டாடுதல் வேண்டும்.
- மாணவரின கற்றலுக்கும் அவர்களது பூரண விருத்திக்கும் பொறுப்புடமை மாத்திரமின்றி, வகை கூறலையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஆசிரியர் தன்னிடமுள்ள திறமைகளை ஒழுங்கமைப்பதுடன் மாணவர்களிடையே அமைதியின்மை மனக்குழப்பம், குழப்பம், உணர்சசி, விரக்தி, தவறான மனநிலை போன்றவற்றை இல்லாமல் செய்தலுடன் மற்றோரிடம் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

இச் செயற்பாடுகளினூடாக மாணவரின் உள்ளார்ந்த ஆற்றல்கள் தூண்டப்படு கின்றன. அவர்களின் இறுக்கமான நிலையினைக் களைவதற்கும், இலகுவானதும், இலேசானதும், சுதந்திரமானதுமான மனநிலையை ஏற்படுத்துவதற்கும், கற்றலுக்குமான சூழ்நிலையை மாணவர்க்கு ஏற்படுத்தவும் உதவுகிறது. சிறார்களின் கற்பனை அவதானம், புலனுணர்வு, மனவெழுச்சி, கருத்தூன்றல், சுதந்திர சிந்தனை, சமூக உணர்வு, உளமுதிர்ச்சி, படைப்பாக்கச்சிந்தனை முதலியன மாணவரின் அடைவு மேம்பாட்டுக்கு உதவுகின்றது.

இவை போன்ற ஆலோசனைகளை கவனத்தில் எடுப்பதன் மூலம் ஓர் நிறைவான வினைத்திறன் மிக்க மனித சமுதாயத்தினை முன்னேறுகின்ற சிறப்பான விளைவை எய்த முடியும். அரங்க விளையாட்டு முறையைப் பயன்படுத்தி கற்பிக்கும் போது கற்பித்தலானது எளிதாகவும் இலகுவாகவும் அமைவதுடன் கற்பித்தலில் ஒரு திருப்தியும் ஏற்படுகிறது. அரங்க விளையாட்டுக்கள், ஆடல், பாடல், இலத்திரனியல் உபகரணச் செயற்பாடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்ப வகுப்புக்களில் நடை முறைப்படுத்துவதன் மூலம்சிறந்த சுயதிறனுள்ள ஓர் எதிர்கால கல்விச் சந்ததியை உருவாக்க முடியும். அத்துடன் நேரடி அனுபவங்களையும் பூரண விளக்கத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

கற்பித்தல் என்பது ஒரு கலையாகும். மாணவர்களுக்கு தெளிவாக புகட்டல் என்பது வெறுமனே பேச்சினாலோ, வெண்கட்டியாலோ மாத்திரம் நிறைவேறிவிடாது.. ஓர் ஆசிரியருக்கு கற்பித்தலில் உள்ள ஆர்வம், திறமை, இயல்பூக்கம் அவரது கற்பித்தலில் "இழையோடும் பாடசாலைகளில் நல்ல ஆசிரியர்களைக் கண்டு கொண்டிருந்தோம். ஏன் இன்றும் கூட கண்டு கொண்டிருக்கின்றோம். அவர்களின் பெயர்களை அவ்வப்போது உச்சரிக்கையில் எமது உள்ளம் புளாங்கிதம் அடையும். அவர்களிடம் காணப்பட்ட அந்த மந்திரம் தான் என்ன.....? மாணவர்களுடனான நல்லுறவு, இணக்கம், பிணைப்பு, பரஸ்பர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு மாணவரை மதித்தல் அவர்களை வென்றிட இவையும் காரணமாக இருந்திருக்கிறது.

ஒரு ஆசிரியனுக்கு பல ஆளுமைகள் தேவைப்படுகின்றன. ஆசிரியர்களின் உச்சரிப்பு, பேச்சு, தொனி மாணவர்களின் பால் நிச்சயம் ஈர்க்கும் அந்த வகையில் ஆரம்பக்கல்வியில் ஓர் ஆசிரியரின் வகிபங்கு பலவிதமானதாக உள்ளது. மிக நெருக்கமாக குழந்தைகளுடன் தாய், தந்தையாக, சகோதரராக, தாதியாக, நண்பராக, ஆசிரியராக பல வகிபங்குகளை அவர் எற்க வேண்டியுள்ளது. கதைக்கும் முறை, அணுகும் முறை, தனது வகிபங்கிற்கு இயைபாகி செயற்பட வேண்டியுள்ளது. ஆசிரியரது மகிழ்ச்சிகரமான தோற்றம் அவரது கனிவான பார்வை, பொறுமையுடன் கேட்கும் சகிப்புத்தன்மை, தொடர்ந்து விடாது முயன்று மீண்டும் மீண்டும் ஆசிரியர் நோக்கத்தை அடைய செயற்படும் செயற்பாடு ஆசிரியர்களை மாணவர்களுடன் கலந்திடச்செய்யும். ஓர் ஆசிரியரின் உடல் அங்க செயற்பாடுகள் (Body Languages) மிகமுக்கியமானவையாகும். ஆரம்பக்கல்விக்கு மாத்திரம அல்ல. உயர்வகுப்புக்களுக்கும் தெளிவான கூர்மையான ஆசிரியரின் விழிப்பார்வை, உதடு, கன்னம், முகம், கை ஆகிய உறுப்புக்களின் அசைவுகளின் தோற்றம் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆசிரியர் கற்பிக்கும் போது மாணவர்கள் ஜடமாக அமர்ந்திருக்கவில்லை என்பதை யும், உயிர்த்துடிப்புடன், உணர்வுகளுடன் ஆசிரியரை அவர்கள் அவதானிப்பார்கள் என்பதையும், மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் ஆசிரியருடன் இருக்கிறார்கள். என்பதே ஆசிரியரின் கற்பித்தலின் வெற்றியாகும். அவர்கள் ஆசிரியருடன் உயிர்ப்புடன் இல்லை. எனில் அதுவே ஆசிரியரின் கற்பித்தலின் தோல்வியாகும். ஆசிரியர் எவ்வாறு தங்களது பாடப் பகுதியை சமர்ப்பிக்கின்றார் (Presentation) என்பது மாணவரின் துலங்கலில் பிரதிபலிக்கும் எனலாம். மிக முக்கியமானது ஆசிரியர்கள் எவ்வாறு மாணவருடன் உரையாடுகின்றார்கள் என்பதாகும். "வளகொழா" என்றாலும் அது வெற்றிபெறாது நீங்கள் பேசும் பாணி (The way of talking) மிகமுக்கியமான தொன்றாகும். சுவருக்கும், கரும்பலகைக்கும், வெண்பலகைக்கும், கதிரை, மேசைகளுக்கும் ஆசிரியர் கற்பித்தல் மாணவர்களான உயிருள்ள மனித பிராணி என்பதை நல்லாசிரியன் தெரிந்து வைத்திருப்பான். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு பிணைப்புச் சங்கிலிபோல் தொடர்ந்து வருகின்றன என்பது மிக முக்கியமானதாகும். ஆசிரியரின் சந்தம், ஒலி, தொனி மாணவனை கவர்ந்து ஈர்க்கும் ஆசிரியர்கள் தமது சத்தத்தினை தயார்ப்படுத்தி செம்மைப்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளவேண்டும் ஆசிரியர் தொழிலுக்கு குரல்தொனி (voice) அவசியமானதாகும்.

ஆசிரியர்கள் முன்னாயத்துடன் வகுப்பறைக்குச் செல்லவேண்டும். முன்னாயத் துடன் வகுப்பறைக்குச் செல்லல் என்பதை சட்டமாக, சுற்றுநிருபமாக, கட்டளையாக கொள்ளத்தேவையில்லை. ஆனால் சிறந்த கற்பித்தலுக்கு அதுவே வழி என்பதனை சுயமாக ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவையும் திறனையும் பெற்றிருப்பதுடன் செயற்படுத்தும் மனப்பாங்கும், விழுமியமும் இருப்பது நன்று. கற்பித்தலில் திறன் கொண்ட ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைக் கற்பித்தலை (Model Classes) அவதானிப்பதால் கற்பித்தல் நுணுக்கங் களையும் (Technics) உபகரணங்களையும், கற்பித்தல் பாணியையும் (style) தெரிந்திருத்தல் ஆசிரியர்களின் தம் பணிக்கு செழுமை சேர்க்கும்.

சிறார்களிடையே இறுக்கமான நிலையைக்களைவதற்கும், இலகுவானதும் அல்லது இலேசானதும் சுதந்திரமானதுமான மனநிலையை சிறார்களிடையே ஏற்படுவதற்கும் இலத்திரனியல் உபகரணச் செயற்பாடு, அரங்க விளையாட்டுக்கள், மனக்கணித விளையாட்டுக்கள் மிக உகந்தவை. இவ்வகையில் , இவ் விளையாட்டுக்கள் மாணவரின் தேர்ச்சியினை அதிகரிக்கக்கூடிய தயார் நிலையை மாணவர்க்கு ஏற்படுத்த உதவியது. அது மட்டுமல்லாது உடனடிப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கக்கூடிய திறனையும் ஏற்படுத்தியது. மாணவரிடையே பிணைப்பையும், முதிர்ச்சியையும் ஏற்படுத்தியது, ஒன்றிணைந்து செயற்படுத்துவதற்கும் அழகியல் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கும் மேலாக பிள்ளை போல் செயற்பட வைத்தது.

ஆரம்பப்பிரிவுக் கற்றலுக்கு உறுதுணையாக ஆடலும், பாடலும், விளையாட்டும், உபகரணச் செயற்பாடுகளும் ஆகும். அவை இங்கு ஒரு படி மேல் சென்று மாணவர்க்கு மிகவும் பிடித்தமானதாக அரங்க விளையாட்டு, மனக்கணித விளையாட்டு, இலத்திரனியல் உபகரணச் செயற்பாடுகள் முதலியன. மேலும், மாணவர்கள் தமது துன்ப துயரங்களை மறந்து செயற்பட ஏதுவாகியது. சிறார்களிடையே மரங்கள், தாவரங்கள், விலங்குகள், விருப்பமும் இயற்கை என்பவற்றிட மும் இயற்கையை ரசிக்கும் பண்பும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் மனப்பாங்கும் ஏற்படுத்தியது. அது மட்டுமல்லாது மிருகங்கள், பறவைகள் என்பவற்றை அவதானிக்கும் இயல்பு அவற்றிடம் அன்பு கொள்ளும் தன்மை அவற்றைத் துன்புறுத்தாமல் பாதுகாக்கும் இயல்பு இவற்றிடம் அன்பு கொள்ளும் தன்மை அவற்றைத் துன்புறுத்தாமல் பாதுகாக்கும் தன்மை அவற்றைப் போலச் செய்தல் சூழல் மாசுபடுதலை அனுமதிக்காமல் தன்னளவில் சூழலுக்கு நேசமான செயற்பாடுகளைக் கொண்டவர்களாகும். இயல்பு என்பவை ஏற்பட வாய்ப்புண்டு.

கற்றல் கற்பித்தலில் பிள்ளைக்கு உதவுதலே கல்வியாகும். இவ்வகையில் ஓர் ஆசிரியரின் பணி மேன்மையானது மிருகங்களைப் பழக்குவது போன்ற நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அன்பும் அரவணைப்பும், பற்றும்,பாசமும், உறவும், உணர்வும் நிறைந்த ஒரு தெய்வீகமான நிலையை அவ்வாசிரியர் பேணுதல் வேண்டும். தனது மாணவச்சிறார்க்கு கற்றல் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் அதற்கான களநிலை யினை நன்கு திட்டமிட்டு உருவாக்குதல் என்பவையே அவரது பிரதான பணியாகும்.

மேலும், பிள்ளைகளின் கல்வி பற்றிச் சிந்திக்கும் பலர் அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே இது தவறு அது பயனுள்ளது எனப் பலர் கூறி வந்தனர். பல சிந்தனைகள் உருப்பெற்றன என்பதே உண்மை, எப்போது அப்பிள்ளை தான் உணர்ந்து விருப்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்றானோ, அவ்வேளையில் அவன் அடைகின்ற அடைவு அல்லது அனுபவம் தான் கல்வியாகின்றது. இங்கு அடைவு அல்லது அனுபவம் தான் கல்வியாகின்றது இங்கு தான் ஆசிரியர் பணியாற்றி கவனமெடுக்க வேண்டியுள்ளது. உண்மையில் ஓர் ஆசிரியர் வசதியளிப்பவர், ஒரு பங்கு பற்றும் நெறியாளர் ஆகின்றார். கற்றல் செயற்பாட்டை நன்கு திட்டமிட வேண்டியவர் ஆகின்றார். என்ன விடயம் பிள்ளைகளுக்கு சென்றடைய வேண்டும். என்பவை போன்ற விடயங்களை நன்கு திட்டமிடுவதோடு பிள்ளைகளை அரவணைத்துக் கொண்டு செல்பவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கு உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய உணர்வுக்கு மதிப்புக் கொடுக்கக்கூடிய பக்குவ நிலையினை அவ்வாசிரியர் கொண்டிருப்பது அவசியமாகும். இவ்வாறான நிலையிலேயே பிள்ளை களை குறிப்பாக கவனிக்கப்பட்டடு உரிய தேர்ச்சிகளை இத்தகைய ஒரு பக்குவ நிலையிலேயே மனிதத்துவத்தை உருவாக்கக்கூடிய கல்வி அனுபவம் பிள்ளைகளிடத்தே சென்றடையும்.

எல்லோராலும் வெற்றி பெறமுடியும் நாம் நம்முடைய முழுக்கவனத்தையும் கல்வியின் மீதும் கற்றல் செயற்பாடுகளின் மீதும் கவனம் செலுத்த வேண்டும். எந்தவொரு காரியத்திலும் நமது நோக்கம், சிந்தனை, செயல் யாவும் வெற்றியென்பதை மாத்திரமே இலக்காகக்கொண்டு நேர் சிந்தனையுடன் (Possitive Thinking) செயற்பட வேண்டும். "ஒவ்வொரு செயலுக்கும் நானே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்" இதனை புத்த மதம் "நாம் இருக்கின்ற நிலைமைக்கு யாரோ காரணமல்ல நமது நிலமைக்கு நாமே தான் காரணம்" எனக் கூறுகின்றது. வேதாகமம் "ஒருவன் எதை நினைக்கிறானோ அதுவாகவே அவன் இருக்கிறான்" எனக் கூறுகின்றது இந்து சமயம் "மனம் எதை உருவாக்க நம்புகிறதோ அதை மனிதன் அடைகின்றான்" எனக் கூறுகிறது,

ஆகவே எவ்வகையில் நோக்கினாலும் முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் கற்று ஆய்ந்து ஒழுகு எனும் கருத்துக்கள் உள்ளன. எனவே எல்லா ஆசிரியர்களும் கற்பிக்கத்தகுதியுடையவர்கள் எல்லா மாணவரும் கற்கத் தகுதியுடையவர்கள் ஆசிரியர் கற்பிக்கின்ற முறையில் மாணவர் கற்க முடியாவிட்டால் மாணவர் கற்க விரும்பும் மகிழ்ச்சியான கற்பித்தல் ஒழுங்குமுறையில் ஆசிரியர் கற்பிக்க வேண்டும். ஆகவே, மாணவர் அடைவு அதிகரிக்கும் அதே வேளை மகிழ்ச்சியாக கற்கும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் மனப்பாங்கும், அறிவும், திறனும் அதிகரிக்கும் என்பது கட்டுரையாளரின் அனுபவக் கருத்தாகும்.

**திரு.பொன்னம்பலம் விஜயநாதன்**
MED,MA- TAMIL, Bd DSM,PGDEM
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் - 2007 தேசிய கல்வி நிறுவகம், மஹரகம
- மகிழ்ச்சிகரமான கற்றல், பயிற்றுனர், கைந்நூல் 2001 GT2/T.P/Nep
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 4,2006 - தேசிய கல்விநிறுவகம்
- செயற்பாட்டுப்பூங்கா 2002 யுனிசெவ் வெளியீடு
- ஆரம்பக்கல்வி சீர்திருத்தம் வழிகாட்டல்கள் 2002 தேசிய கல்வி நிறுவகம்
- வாண்மை விருத்தி ஆசிரிய ஆலோசகர்களுக்கானது 2002 GTZ/T.P/NEP
- இராதாகிருஸ்ணன்.மு உள்ளொலி பெருக்கும் சிறுவர் அரங்கு 2004
- சிறுவர்களுக்கான அரங்க விளையாட்டுக்களும் புதிர்களும் 2006 NEP வெளியீடு
- ஆரம்பக்கல்வியும் விசேட கல்வியும் - பாடவிதான அபிவிருத்தி பிரிவு தே.க.நி மஹரகம
- மகிழ்வுடன் வாழ்தல் - 2003 N.I.E,GT.Z
- சிறுவர் உளநலம் 2005 கல்வி அமைச்சு N.I.E
- செயல்நிலை ஆய்வு ஓர் அறிமுகம் 2006 தனராஜ் - தை
- சின்னத்தம்பி.க கல்வி ஆய்வியியல் 206 ஜெரேப்ரோ.பி, சந்திரசேகரம் சோ.பெற்றோரும் கல்வியும்
- நவரட்ணம்.உ..2007 கற்பித்தல் செயல்முறையியல் கல்வி உளவியல்
- பாஸ்கரன்.க.கல்வியில் செயல்நிலை ஆய்வு
- முல்லை நிசானா 2004 விளையாடுவோம் வாசிப்போம்
- கற்பித்தலுக்கான ஆசிரியர் பயிற்சிகள் கைந்நூல் தே.க.நி மஹரகம
- அகவிழி ஆசிரியத்துவ நோக்கு கட்டுரைகள் 2008,2009
- ஜெயராசா.சபா.(2005) குழந்தை உளவியலும் கல்வியும் பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு
- ஸ்டேலா வொஸ்னியாடோ(2005) பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வுக்கு ஏணி

இலங்கையின் முன்னோடியான உயர்கல்வி நிறுவனங்களுள் இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்லூரியும் ஒன்று. உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்செயற்படும் இவை இரண்டாம்நிலை கல்வியை (பாடசாலைக்கல்வி) பூர்த்திசெய்து பல்கலைகழகக்கல்விக்கான வாய்ப்புக்களை தவறவிட்ட மாணவர்களிற்கு மாற்றீடான முறையில் பல்துறைசார்ந்த, தொழில்முறை ரீதியான பாடத்திட்டங்களை வழங்கிவருகின்றது. அவற்றில் பொறியியல், வியாபாரமுகாமைத்துவம், ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என நவீன உலகின் சவால்களை முறியடிக்கும் விதமான பாடப்பரப்புகளை உள்ளடக்கியிருக்கின்றமையை குறிப்பிட்டுக் கூறமுடியும்.

இந்நிறுவனங்களில் கல்விபயிலும் ஒருவர் இலங்கை அரசபல்கலைகழகம் ஒன்றிலிருந்து வழங்கப்படும் இளமாணிப்பட்டத்திற்கோ அல்லது சான்றிதழிற்கோ சமாந்தரமான தகுதியுடையவராக கணிக்கப்படுவர். நாட்டில் இதுவரை பதினொரு உயர்தொழில்நுட்பவியல்கல்வி நிறுவனங்களும் அவற்றின் பகுதி நிறுவனங்களாக ஏழு கல்விநிலையங்களும் செயற்பட்டுவருகின்றது. அவற்றில் வன்னிமாவட்டத்தை பிரதிநிதித்துவதப்படுத்தி வவுனியா ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனம் வன்னிமாவட்ட மாணவர்களிற்கு மாத்திரமின்றி வடக்கின் ஏனைய மாவட்டங்களின் மாணவர்களும் இலகுவாக பயணம்செய்து கல்விசெயற்பாடுகளை மேற்கொள்ளும் வண்ணம் அமைவிடரீதியான சிறப்பை பெற்றுக்கொள்கிறது.

குறிப்பாக நகர்புற மாணவர்களின் வசதியை மாத்திரம் கருத்தில்கொண்டு நகரங்களில் பல்வேறு கல்விநிலையங்கள் அமைக்கப்பட்டு வரும் இக்காலசூழலில், கிராமப்புற மாணவர்களிற்கும் உயர்கல்வி வசதியை உறுதிப்படுத்தும் வகையில், வவுனியா நகரிலிருந்து பத்து கிலோமீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள ஓமந்தை பகுதியில் ஏ9 வீதிக்கு அருகாக அமைதியான சூழலில் இது அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கணக்கியலில் நான்கு கல்வியாண்டுகளை உள்ளடக்கிய உயர்தேசிய டிப்ளோமா, தகவல்தொழில்நுட்பவியல், மற்றும் ஆங்கிலபாடத்தில் இரண்டு கல்விஆண்டுகளை உள்ளடக்கிய உயர்தேசிய டிப்ளோமாக்களை முழுநேரம், பகுதி நேரம், என்ற வகையில் ஓமந்தை உயர்தொழில்நுட்பவியல் நிறவனம் வழங்கிவருகின்றது. கல்வி செயற்பாடுகள் அனைத்தும் ஆங்கிலமொழிமூலமாக இடம்பெறுவதால் கற்றல் காலம் நிறைடைந்து சான்றிதழ்களுடன் வெளியேறும் மாணவர்கள் ஆங்கில மொழிப்புலமையை பெற்றுக்கொள்வதுடன், மொழிரீதியான சவால்களை கையாளக்கூடிய ஆளுமை களையும், திறன்களையும் வளர்த்துக்கொள்கின்றமை சிறப்பம்சமாக காணப்படுகிறது. இதன்மூலம் அப்பகுதி மாணவர்களின் ஆங்கிலமொழிமீதான வெறுப்புணர்விலும் அக்கறையீனத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் பயில்கின்ற பாடத்திட்டங்களிற்கு ஏற்ப அத்துறைசார்ந்த தொழில் தாபனங்களில் பகுதி நேர தொழில்பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு களையும் இந்நிறுவனம் உருவாக்கி கொடுப்பதனால் மாணவர்கள் தொழில்ரீதியான அனுபவங்களை பெற்றுக்கொண்டு, தம்மை தயார்படுத்திகொள்ளும் சூழலையும் இக்கல்வி நிறுவனம் ஏற்படுத்தி கொடுக்கிறது, சமச்சீரான கல்வியானது வியாபாரமாக மாறிவரும் உலகமயமாதல் சூழலில் முற்றிலும் இலவசமாகவும், சிறிய அளவிலான கட்டண அறவீட்டை மாத்திரம் பெறும் இந்நிறுவனம் ஏழை மாணவர்களின் பட்டதாரிக் கனவை நனவாக்கிவருவதுடன் அவர்களது தொழில்வாய்ப்புக்களையும் உறுதிப்படுத்திக் கொடுக்கிறது.

மாணவர்கள் மீதான விரிவுரையாளர்களின் அதீத ஈடுபாடு கற்றல்மீதான அச்சங்களையும், அழுத்தங்களையும் நீக்கி சுதந்திரமான கற்றல் என்ற வகையில் நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்கள் வகுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வன்னிமாவட்ட மாணவர்களின் நன்மைகருதி வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளைச் சீருடனும், ஐக்கியத்துடனும் மேற்கொண்டு வருகின்றமை கண்கூடு.

கல்விச் செயற்பாடுகளிற்கு மாற்றீடாக இணைப்பாடவிதானங்களான கலை, கலாசாரம், விளையாட்டு நிகழ்வுகளிலும் மாணவர்களை தயார்படுத்தி அவர்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற இயல்தன்மையை ஓமந்தை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் அவதானிக்க முடியும். "கல்வியே ஒருவரை முன்னேற்றும்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க போரினால் மிகவும் வீழ்ச்சியை சந்தித்திருந்த வன்னிமாவட்ட மாணவர்களின் நன்மைகருதி அமைக்கப்பட்டுள்ள ஓமந்தை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் மாணவர்களின் சுதந்திரமானதும், பெறுமதியானது மான கல்வித்தேவையைப் பூர்த்திசெய்துவருவதுடன் அவர்களிற்கு வரப்பிரசாதமாகவே அமைந்திருக்கிறமையை மறுப்பதற்கில்லை.

**திருமதி க.பிரதீபன்**
உதவி விரிவுரையாளர்,
ஆங்கில பிரிவு,
உயர் தொழிநுட்ப கல்லூரி.
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப பிரிவு மன்றம்



## சுற்றாடல் முன்னோடிக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றிவிடும் ஏணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிர்ந்து வாழக் கற்றுக்கொள்

*நீ பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உணவு பட்டினி கிடப்பவனுக்குரியது.*
*நீ அடுக்கி வைத்திருக்கும் துணிமணிகள் ஆடையற்ற மனிதனுக்குரியது.*
*நீ லொக்கரில் நிறைதது வைத்திருக்கும் தங்கம் பரம ஏழைக்குரியது.*
*பகிர்ந்து கொள்ளாதது தவறு, பகிர்ந்து கொள்ளாதவர் திருடர்.*

சூரியன் தாமரையை மலரச்செய்கின்றத. சந்திரன் அல்லியை மலரச் செய்கிறது. நல்ல மனிதன் கேட்காமல் உதவுவான். அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சில் தான் ஆனந்தம் பூப்பூக்கும் எந்த இதயம் ஏழைக்காக இரங்குமோ அதுதான் மகாத்மா! தேனாறு பாய்ந்து செந்நெல் விளையும் பூமியில் 800 மில்லியன் மக்கள் இரவு உணவின்றி பட்டினியாய் படுக்கைக்குச் செல்லும் பரிதாபநிலை எப்போது மாறும்? ஒருவருக் கொருவர் பகிர்ந்தால் தான்!

மனிதன் இணைந்து வாழவேண்டும் சமூகக் கூட்டு வாழ்வில் இன்பமும், துன்பமும் பகிரப்பட வேண்டும். வாய் உண்ணக் கை உதவுகின்றத. கால் நடக்க கண்வழிகாட்டு கின்றத. கண்களுக்குள் கலவரம் நடந்தால் காட்சியேது? பல் நாவுக்கு பகையானால் சொல்லேது? ஒட்டிக்கொள்ளும் செங்கற்கள்தான் வீடாகும். சங்கமத்திற்கு சம்மதிக்கும் நதிதான் சமுத்திரமாகும். ஒற்றுமை நீங்கில் நம்மில் அனைவருக்கும் தாழ்வே என்பதை உணரவேண்டும் அமைதியின் கருவியாக பகிர்வின் அடையாளமாக நம்மை மாற்றுவோம்.

தன்னிலைத் தெளிவு சமுதாயத்தெளிவு, விடுதலை, தலைமைத்துவம் இவைகளைப் பெற்று புதியதோர் மேலான உலகை நிர்மாணிக்க நம் புத்திசாலித் தனத்தை பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். தீப்பெட்டி எடுத்து திரியில் சுடர் ஏற்ற ஒரு கரம் முன் வந்தால் தான் விளக்கில் வெளிச்சம் பிறக்கும். இதையே நாம் ஒவ்வொருவரும் நம் சொந்த வாசற்படியைச் சுத்தம் செய்தால் போதும் முழு உலகமும் சுத்தமாகி விடும். என்றார் அன்னை தெரேசா. நம் பங்கை ஆற்றுவோம் நம் செயலாக்கத்திற்கான வட்டத்தை விரிவடையச் செய்து, மாறாத மனிதாபிமானமும், மறக்க முடியாத பாசப்பகிர்வும், கொண்டவர்களாக வாழ்வோம். காலத்துக்கு கலண்டர் கிழிப்பதை மாற்றி நம் முன்னே நீண்டு செல்லும் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் பகிர்ந்து வாழப் பழகிக் கொள்வோம்.

பணிப்பகிர்வு, கொடுக்கப்பட்ட பணிகளை சிறப்பாகச் செய்ய உதவுகின்றது. பணிப் பகிர்வு ஒரு மனிதனுடைய பரந்த குணத்தைக் காட்டுகின்றது. தனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைச் சிறப்பாக செய்யாமல், பிறரையும் செய்ய விடாமல் தடுக்கக்கூடிய மனிதர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். நாம் நம்மை மற்றவர்களுக்காக அர்ப்பணிக்கும் அன்பின் பகிர்வு நிலையை வென்றெடுப்போம். உறவு நம்மிடையே, வளரும்போது பகிர்வு நம்மை அறியாமல் நம்மில் ஏற்படுகின்றது. எங்கே உறவு இல்லையோ? அங்கே பகிர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காது? நாம் நல்லுறவின் பகிர்வுச் சமூகமாக மாறவேண்டும். இதற்காக நாம் அனைவரும் பாடுபடுவோம்.

"பஞ்சம் என்பது இயற்கை உருவாக்குவது, அல்ல மாறாக அது மனிதன் உருவாக்குவது" என்று நோபல் பரிசு பெற்ற அமிர்த்தியா சென் கூறுகிறார். இது நூறு சதவீத உண்மை. சில நேரங்களில் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு விலையேற்றம், அனைத்திலுமே மனிதனின் சுயநலத்திலும் அதனைப் பதுக்குவதாலும் உருவாகின்றது.

நாமும் நமது சுயநலத்தை உடைத்தால் பிறர் நலம் பெருகும். அதில் பகிர்வு மலரும். "உன் அயலான் பசியால் இறந்திருக்க நீ அளவுக்கு அதிகமான உணவு வைத்திருந்தால் அவனது சாவுக்கு நீயும் ஒரு காரணம் புது உலகம் படைக்க நாம் மனங்களைப் பகிர்ந்து வாழ்வைப் பலப்படுத்துவோம்.

சென்று விடுவதாலோ! பணத்திற்கும் பொருளுக்கும் "செல்வம்" என்று பொருத்தமாகப் பெயர் சூட்டியுள்ளனர். யாரும் செல்வத்தை சேர்த்து நிலை பெறச்செய்யமுடியாது? அது எப்படியும் ஒரு நாள் வேறு கைகளுக்கு மாறிவிடும். இதனால் தான் நம்மிடம் உள்ளதை பிறரோடு பகிர்ந்து வாழ்தலே அறிவு பூர்வமானது. தானகச் சென்று விடுவதை ஈகையில் நாமாக மனம் மகிழ்ந்து கொடுத்து விடுவது சிறந்தது.

நாம் நம்மிடம் உள்ளதை பகிர்ந்தளிக்க முன்வரவேண்டும். அன்பின் செயல் என்று கருதி வாழ்க்கையில் நல்ல பண்பை நமதாக்க வேண்டும். எனக்கு மட்டும் எம் சந்ததிக்கு மட்டும் என்று சேர்தது வைக்காமல் நம்மிடம் உள்ள உணவு, உடை, பொருள், பணம், திறமை, அறிவு, நேரம், ஆறுதல் வார்த்தை, அனுதாபம், அனுபவம் போன்றவற்றைப் பிறப்போடு பகிர்ந்து கொள்வோம். பகிரும் போது மகிழ்ச்சி இரட்டிப்பாகவும் துன்பம் பாதியாக மாறுவதோடு நமது வாழ்வும் அர்த்தமுள்ளதாக அமையும். பெறுவதிலும் தருவதே இன்பம் என்பதை உணர்ந்தவர்களாய் பகிர்ந்து வாழ்வோம். அன்பு தளிர்க்க நாளும் வாழ்வோம்.

**திருமதி. மேரி தில்லைநாதன்**

பிரதிஅதிபர்

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நாயகிக்கு புகழ்மாலை....

கல்விக் கலையிலே
கரையில்லா தாயவளே
கனகபுரம் கண்ட
கல்விப்பொக்கிசமே
காலமெல்லாம் உன்சேவை
தரணிக்குத் தேவையம்மா

கட்டிளம் குமரியாய்
நான் காலடி வைத்தபோது
கல்விக்கடலின் ஓர் புள்ளியாய்
நீ இருந்தாய்...... கனகபுரம்
அ.த.க உன்நாமம்.... கண்டவர்கள்
சொன்னார்கள்.
பயந்து பயந்து நான்
சேவையில் கால் வைத்தேன்.
சாம்பசிவம் சேர்...
இளம் இரத்தம்.. .கல்விப்பணியில்
சாதிப்பாய் கலங்காதே என்று...
முத்தாய்ப்பாய்
தொடக்கி வைத்தார்.

அறியா வயதில்
அர்த்தமாய் கற்பித்து
ஆளாய் வருவே னென்று....
கனவிலும் நினைக்கவில்லை...
ஆரம்பக் கல்வியை
அழகு தமிழாய்
முடிந்தவரை போதித்தேன்.
முயற்சி திருவினையாய்
முத்தான முத்துக்கள்
சோதனையில்
சாதனை புரிந்தார்கள்.

கனகபுரப்பள்ளியே
அப்போதெல்லாம்
செம்மண் வீதியோரம்
ஓலைக் கொட்டகையாய்
ஒதுங்கியருந்தாலும்..
சாதனைகள் ஏராளம்..

பராவும், புனிதாவும் சக்தியும்
என் ஆசிரிய தோழிகள்....
ஒரு பிடிச் சோற்றையும்....
ஒன்றாகச் சேர்ந்துண்போம்...
சூது,வாது தெரியாது...
மகிழ்வாக கற்பித்த நாட்கள்
கண் முன்னே நிற்கிறது,..

கனகபுரத் தாயவளே
குட்டிச் சிறுமியாய்
அ.த.க என இருந்த நீ
1994ல் குமரியானாய்....
புதமையின் பூரிப்பால்
புதுப்பொலிவு பெற்றாய்...
மகாவித்தியாலயமாய்
கலையோடு வர்த்தகம் அதனாடே
கவின்கலைகள்...
வற்றாத ஊற்றாய் வடிவெடுத்தாய்
வர்த்தகமும், சமூகக்கல்வியும்
போதிக்கும் திறனை
எனக்குத் தந்தவளே!
இப்போது உனக்கு 50 வயசாச்சாம்
பொன்விழா காண....
போவதாய் உன் வாரிசுகள்
சொல்கிறார்கள்.....

ஆறுமுகதாஸ் முதல்வர் காலத்தில்
வெள்ளிவிழா
கண்ட பேர்தே கனகபுர நாயகியே
நீ கண்ட சாதனைகள் ஏராளம்.....
கல்வியோடு ..............
கலைகள்... உறுதியோடு
விளையாட்டு தேசிய ரீதியிலும்
நீ கண்ட வெற்றிகள் ஏராளம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரச்சோலையில்
பொன் விளையும் பூமி....
படித்த வாலிபரின்
பண்பான பிள்ளைகளை
பார் புகழ வைத்த
உத்தமியே.. வாழிய நூற்றாண்டு

ஷெல் வந்தபோதும்
பிணமலைகள் குவிந்த போதும்
சில்லென்று செந்நீர்
நிலத்தில் சிந்திய போதும்...
குப்பி விளக்கின் முன் உன்வாரிசுகள்
புத்தகங்களோடு... புரட்சி செய்தார்கள்...
நீ சாதாரண பெண்ணல்ல....
சரித்திர நாயகி.....

வலைஞர் மடத்திலும்....
வடலி ஓரத்திலும்.. புத்தகங்களை
சுமந்து உன்சேய்கள் சாதனை
படைத்தார்கள்.
இன்று உன் காலடியில் நிற்கிறார்கள்...
தாய்முகம் கண்ட சேயாய்
அவர்கள் பூரிப்பாய் நிற்கிறார்கள்.

நான் குடியிருந்த கோயிலே
ஞாபகம் இருக்கிறதா...
20 வருட சேவையில் என்னை நீ
செதுக்கிச் செதுக்கி சிற்பமாய் மாற்றி
வைக்க....
காலத்தின் தேவையால்
மாற்றம் வந்தது... உன்னால்
உருவெடுத்த நானும் என்தோழி
பராவும் குலுங்கி அழுதோமே...
உனைப்பிரிய...
ஞாபகமிருக்கிறதா?

வாழ்க்கைச் சாலை
ஒரு வட்டம் மீண்டும் உன்மடியில்
சேவை செய்வது ஓர் வரமே..
இல்லை அது ஓர் தவமே.... எனக்குப்
பாக்கியமாய் கிடைத்தது.
என் தொழிலின் தொடக்கப் புள்ளியும்
நீயாகி முற்றுப்புள்ளியும் நீயாக
வரவேண்டும்...
கனகபுரப்பள்ளியே நீ வாழ்க.

உன்மடியில் என் சேவை
வெள்ளிவிழா காண்கிறது..
பொன்விழா நாயகியே
பொங்கட்டும் உன் புகழ்

கிளிநொச்சி மண்ணில்
கனகபுரப் பள்ளியே
நீ ஒரு கல்விச் சிகரமம்மா!
உன் மடியில்
ஆடி ஓடி விளையாடி
அள்ளி மணல் மடி நிரப்பி
கூடிப்பாடி அழுதுண்ட குழந்தைகள்
கல்வி வேள்வியில்
ஆகுதியாய் ஒளிர்கிறார்கள்
நாளைய கனகபுரம்
அவர்கள் சுட்டுவிரல் அசைவிற்காய்
காத்திருக்கும்

என்சேவை
உனக்கு இனிதாகும்
வரம் வேண்டும்.
உன்னால் செதுக்கப்பட்ட
சிலை நான்....
எதிர்காலச் சிற்பிகளை
கல்வி உளி கொண்டு
செதுக்குகிறேன்..
தாயவளே!
உன் தாய் மடியில்
நானென்றும் சேய் தான்.

**திருமதி.புவனா குமார்**
ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நீங்காத நினைவுகள்

ஆதியும் நீயே! அந்தமும் நீயே! என்ற கூற்றுக்கிணங்க கனகபுரத் தாயின் இருபதாவது அகவையில் (1989) கால்பதித்தேன். ஆரம்பக்கல்வி தொண்டர் அசிரியராகத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சேவையாற்றினேன். எனது ஆசிரியச் சேவையின் முதல் அதிபராக திரு ஆறுமுகதாஸ் அவர்களின் வழிகாட்டல்கள் இன்றும் என் பணியை மேலோங்கச் செய்கின்றது.

அது மட்டுமா? அக்காலத்தில் சேவையிலிருந்த மூத்த ஆசிரியர்களின் ஆலோசனை களும் அறிவுரைகளும் என் பணிக்கு அடித்தூண்களாய் அமைந்தன. குறிப்பாக திருமதி தங்கம்மா, திருமதி சோதிநாதன், திருமதி குமாரலிங்கம், திருமதி நாகம்மா, திருமதி கனகரத்தினம், திரு. இராமச்சந்திரன் போன்ற மூத்த ஆசிரியர்கள் எனது உள்ளத்தில் அழியாச் சின்னங்களாகும்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகாரணமாக 1996 கனகபுரத்தாய் போகும் பாதையில் பின்தொடர்ந்து சென்றேன். ஸ்கந்தபுரம் இல. 02 பாடசாலையில் கனகபுரம் பாடசாலையும் சேர்ந்து இயங்கியது. அங்கேயும் தொடர்ந்து சேவையாற்றினேன்.

கனகபுரத்தாயின் முப்பதாவது அகவையில் 1999 அதிபர், ஆசிரியர்கள் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து எனது திருமணவைபவத்தை நிகழ்த்தியமை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் கிளி/ இந்துக்கல்லூரியில் சேவையாற்றி இறுதிக் காலத்தில் ஆறுதல் தேடி மீண்டும் ஓடி வந்தேன் 2015ம் ஆண்டு இவ்வாறு எனது முதல் நியமனம் எனது திருமணம், எனது ஓய்வு நிலை ஆகிய மூன்றும் உன் காலடியில் நடந்தது. நடக்க வேண்டும் என இறைவனை வேண்டி நின்றேன்.

இது நாள் வரை உன்மடியில் தவழும் குழந்தைகளின் கல்விப்பாதையின் வளர்ச்சிக்கு உழைத்திட வேண்டும் என உமது ஐம்பதாவது அகவையில் ஆசிவேண்டி நிற்கின்றேன்.

வாழி கனகபுரம் ம.வி. வளர்க நம் அன்னையின் குடும்பம்.

நன்றி

**திருமதி. இ. சண்முகம்**
ஆசிரியை
கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

மனிதன் தனது வாழ்க்கைப் போக்கை மாற்றி அமைத்து, நவீன மயப்படுத்தலில் தன் வாழ்நாளை மீட்டுருவாக்கம் செய்ய முற்படும் இவ் வேளையில் எங்கோ ஓர் மூலையில் போர் வடுக்களாலும் இயற்கையனர்த்தங்களாலும், தீராத, தீரும் நோய்களாலும், குடும்பத்தின் வறுமையின் நிமிர்த்தமும் போசாக்கின்மையாலும் கடும் பாதிப்புக் குள்ளாகும் மக்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

எமது நாட்டைப் பொறுத்தவரை போரில் அகப்பட்டவர்களும் 2004ம் ஆண்டு மார்கழி 26ம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களும் அதிகம் காணப்படுகின்றனர். இவ்விருபிரிவினரினதும் இன்றைய போக்கினை எடுத்துப் பார்த்தால் தாயை இழந்த தந்தையை இழந்த சகோதரர்களை இழந்த மேலும் உறவினர்களை இழந்த எனப் பல பிரிவினர் உள்ளனர்.

இவ்வாறான இழப்புக்களால் மனம் பாதிக்கப்பட்ட மாணவர்களினதும் ஏனைய சமூகத்தினரதும் போக்கை அவதானித்தால் இவர்கள் மனங்களில் எதையோ ஒன்றை இழந்தவர்கள் போலும், மீள முடியாத மனச் சுமையுடன் தம் வாழ் நாளை கழித்த வண்ணம் வாழ்கிறார்கள்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பிரச்சினைகளை இனங்கண்டு தடைகளை உடைத்து அவர்களின் மனங்களில் இடம் பிடித்து தேவைகளை இனங்கண்டு தற்காலச் சூழலுக்கு ஏற்ப வாழ வழிப்படுத்த வேண்டியது ஒவ்வொருவரதும் கடமை ஆகும்.

இப் பிரச்சினைகளின் தீர்வுக்கு மறு வடிவமாகத்தான் உலக மனித நேய தினமா - னது ஆண்டு தோறும் ஆகஸ்ட் 19ம் திகதி அந் நாளை உளரீதியாக கொண்டாடி வருகின்றனர். இவ்வாறான தன்மையுடன் வாழும் குழந்தைகள் உலகளாவிய ரீதியில் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதும் இதன் மூலம் தெளிவு பெறுகின்றது.

முற்காலத்தில் இயற்கை அனர்த்தம் மற்றும் கொடிய விலங்குகள் என்பவற்றின் தாக்கத்தில் இருந்து மனிதன் தப்பித்து வாழப் பழகிக் கொண்டான். ஆனால் பின்பு அது மாற்றம் அடைந்து மனிதன் மனிதனையே அச்சுறுத்தியும் கொலைகள், கடத்தல்கள், கப்பம் பெறுதல் போன்றவற்றைச் செய்ய பல அமைப்புக்களை உருவாக்கினான். அதற்கு பொருத்தமான பெயர்களையும் சூட்டி, மனிதன் மனிதனை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டமையால் தான், இக்காலத்தில் பெரிய அழிவுகள் மனிதனால் ஏற்பட வாய்ப்பாயிற்று. இவற்றுக்கெல்லாம் காரணம் எங்கோ ஓர் இடத்தில் மனித நேயப் பிறழ்வு அடைவதே ஆகும். இதனால் தான் மனித சமூகத்தை அழிக்க கொடிய அமைப்புக்கள் தோன்றின எனலாம்.

மனித நேயம் அருகி வரும் இவ் வேளையில் மனித வாழ்வு என்பது நிலையற்றது. நிலையற்ற இவ்வுலகில் நாம் கொண்டு வந்த எதனை கொண்டு செல்லப் போவது எதனை என்பதற்கு ஏற்ப நமது வாழ்நாளில் எம்மால் ஆற்ற வேண்டிய நல்லவற்றைச் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் உயர்வு பெற வேண்டும். இதனை ஒவ்வொருவரும் தமது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட வேண்டும். இதனை ஏனையோரும் அறிய வழிப்படுத்த வேண்டும்.

அதுமட்டுமா? உதவி செய்யும் மனப்பாங்குடன் வாழ்ந்து வரும் பெரியோரை இனங்கண்டு அவர்களை தன்னலம் கருதாது கௌரவிக்க வேண்டும், பறைசாற்ற வேண்டும். இந்நேயம் மிக்க ஒரு சிலர் இவ்வுலகில் வாழ்வதால் தான் இவ்வுலகம் இன்று வரை நிலைத்து நிற்கின்றது என வள்ளுவர் பின்வருமாறு அழகாகக் கூறியுள்ளார்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

எனக் கூறியுள்ளார். மனிதப் பண்புகள் தற்போது முற்றாக அழிந்து விட்டது எனக் கூற முடியாது. எனலாம். இப்பண்பானது தற்போது அருகி வருகின்றது. அதனைப் பாதுகாப்பதும், விழிப்புணர்வு ஊட்டுவதும் பிற்காலச் சமூகத்திற்கு அது எடுத்துக் காட்டாக அமைவதோடு அவர்கள் பின்பற்றவும் வழியாக அமையும்.

இதைவிட எமது நாடுகளில் மனித நேயம் எவ்வாறு பேணப்படுகிறது எனப் பார்த்தால்

பாடசாலைகளில் வழங்கப்படும் உலக உணவுத்திட்டச் செயற்பாடும்
யுத்தத்தில் இருந்து மீண்ட பின் நிதியுதவியும், வீட்டுத்திட்டங்களும்
சுத்தமான குடிநீர்
சுகாதார சேவை
சுத்திகரிக்கப்பட்ட கிணறுகள்
ஏனைய அமைப்புக்களால் இனங்காணப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி வழங்கல்.

இதை விட இன்னோரன்ன செயற்பாடுகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையில் சில குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளும் விடுவிப்புக்களும் கூட மனித நேயச் செயற்பாட்டிற்கு தடையாக உள்ளது. இத்தடைகளை உடைக்க ஒட்டுமொத்தச் சமூகமும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும். முன்னின்று உழைக்கும் தொண்டு சார் அழைப்பையும் அதன் தொண்டர்களையும் முன்னிலைப்படுத்தி மனித நேயத்தை முறைப்பட கட்டி எழுப்புவோம், நல் சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

"மனிதன் அறிவாளியாவது எளிது
அறிவாளி மனித நேயத்தோடு
திகழ்வது தான் அரிதிலும் அரிது"

**திருமதி கோ. சந்திரகுமார்**
ஆசிரியர்
கிளி/ கனகபுரம் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குப் பிடித்த விடயங்கள் சில, உங்களுக்கும்...

01. ஏனையவர்களுக்கு நீங்கள் நல்லவர்களானால், அப்போது உங்களுக்கு நீங்கள் மிக நல்லவராகிவிடுவீர்கள்.

(எண்ணம், செயல், நடத்தையில் சரியானவையாக இருத்தல்

02. ஒவ்வொருவரும் தம்மை வளர்த்துக் கொள்வது எப்படியெனில்

பாதகமாகச் சிந்திப்பதைத் தவிர்த்தல்

புதியதை அறிய விரும்புதல்

கவனமாகச் செவிமடுத்தல்

சந்தேகிப்பதைத் தவிர்த்தல்

ஒழுங்கான செயற்பாடுகளில் ஈடுபடுதல்

தொடர்ந்து ஒரு செயலைச் செய்வதைத் தவிர்த்தல்

கோபத்தைத் தவிர்த்தல்

கொடூரமாக நடப்பதைத் தவிர்த்தல்

03. பயன்மிக்க நன்மை செய்கின்ற சிறந்த பாராட்டுதல்கள் இருக்க வேண்டிய முறைமைகள்

எந்த சிறந்த செயலுக்காக பாராட்டுகிறோமோ அதை தெளிவாகச் சொல்லி உங்கள் பாராட்டைத் தெரிவிக்க வேண்டும்

தாமதமின்றி பாராட்டினால் நீங்கள் அவரது மனதில் இடம் பிடித்து விடுவீர்கள்.

விசுவாசத்துடன் ஒவ்வொரு சொல்லும் இதயத்தில் இருந்து வந்து பாராட்ட வேண்டும். விசுவாசமின்றிப் பாராட்டாதீர்கள்

பாராட்டும் பொழுது "ஆனால்" என்ற இடைச்சொல்லைக் கூறிவிடாதீர்கள்.

பாராட்டும் போது பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்காதீர்கள்

04. மற்றவர்கள் எம்மை நோக்கி எதையாவது சொல்ல விளையும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

நீங்கள் மிகவும் உற்சாகமாக இருந்து உற்சாகத்தை வெளிப்படுத்துங்கள்

உங்கள் பார்வை பேசுபவரை நோக்கியே இருப்பின் பேசும் போது ஆர்வம் துலங்கும்

உணர்ச்சி வசப்படாது விடயத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப, கேள்விகளைப் பொறுமையாகக் கேளுங்கள்

சரியான நேரம் வரும் போது, நீங்கள் அவதானித்து வைத்திருந்த விடயம் தொடர்பான அறிவையும், அனுபவத்தையும் வைத்து வெளிப்படுத்துங்கள்

ஒருவர் பேசும் போதெல்லாம், சொல்லுங்கள், சரி சொல்லுங்கள் என்று பிரதிபலிப்பை வெளிப்படுத்துங்கள்.

தொடர்பில்லாத விடயத்தை குறுக்கே பேசாதீர்கள்.

பேசும்போது சிலர் மௌனம் சாதிப்பதும், சில சமயம் முக்கியமாகிறது. ஏனெனில் மௌனமும் மொழிதான் அதற்கும் மதிப்பளியுங்கள்

பேசுபவரது முகவெளிப்பாடுகளிலும் கண்களின் வழியான உணர்ச்சிகளாலும் எவை வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை அக்கறையுடன் அவதானியுங்கள்

எனவே முயற்சி செய்து நடைமுறைப்படுத்துங்கள்.

தொகுப்பு

**திருமதி. கோ. நவரட்ணராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஒரு சவால்

மனித வாழ்க்கை ஒரு சவால், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருமே பல பிரச்சினைகள் போராட்டங்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், நாம் வாழும் வாழ்க்கையைத் திருப்தியான மனநிலையில் வாழ்ந்து கொண்டிருப்ப வர்களாக இருப்பது மிகவும் அரிதாகக் காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு மனிதனும் அறிவு பூர்வமாகச் சிந்திப்பதை விட, வெறும் உணர்வுகளுக்குக் கட்டுண்டு உணர்ச்சி களுக்கு அடிமையாகி அந்த உணர்வுகளுக்கே அடிமைத்தனமாகியும் தெளிவான முடிவுகளைப்பெறமுடியாமல் வாழ்க்கையை வாழ முடியாமல் சிக்கித் தவிக்கின்றார்கள்.

மனிதனுடைய வாழ்வு என்பது வெறும் உடல் ரீதியான உணர்வுகளின் முடிவில் வாழ்ந்து முடிப்பதல்ல, அனைவருமே நல்லதொரு இலக்கை நோக்கி வாழும் மனிதர் களாகச் செயற்பட வேண்டும். அந்த இலக்குகளில் தன்னம்பிக்கை வைத்துச்செய்யும், ஒவ்வொரு காரியங்களிலும் பற்று வைத்துச் செயற்பட வேண்டும். அப்போது தான் இலட்சியப் பாதையை ஏற்று முழுதாக நிறைவேற்ற முடியும். ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், சாப்பிட்டோம் என்று வீணாக வாழ்வை வாழ்ந்து முடிக்காமல், எமது சிந்தனை, அறிவு என்பவற்றைப் பிரயோகித்து பூமியிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி மனித வாழ்வின் முன்னேற்றப்பாதையை உருவாக்கி மனிதனாக வாழ்ந்து, மனதளவில் தைரியசாலிகளாக வாழ்ந்து, ஏனைய மனிதர்களையும் தாழ்வு மனப்பாங்கின்றி வாழக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மனிதர்களாகப் பிறந்த நாம் தினமும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகின்றது. பிரச்சினைக்கு முகம் கொடுத்து எமது வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள, மனநிலையைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். மனிதன் பிரச்சினைகளைச் சந்திக்கும் போதுதான் தனது ஆறாம் அறிவைப் பிரயோகிக்க நேரிடுகின்றது. வெறும் உணர்வு ரீதியாக முடிவுகளை எடுத்து வேதனைப் படுவதை விட அறிவு பூர்வமாகச் சிந்தித்து அஞ்ஞான இருளை அகற்றுவதன் மூலமே மனதில் தெளிவு பிறக்கின்றது. எமது மனநிலையும் ஆரோக்கியம் அடைகின்றது. பிரச்சினைகளைக் கண்டு அச்சம் கொண்டு ஓடும் போது மரத்தில் ஒட்டிக் கொண்ட புழுவைப்போல பிரச்சினையும், எமது மனதில் தொற்றிக்கொண்டு தேவையில்லாத பல மனக்குழப்பங்களுக்குள்ளாகித் தப்பான முடிவுகளுக்கு ஆளாக நேரிடுகின்றது. இதனால் நம்மை நாமே சித்திரவதை செய்து எமது உடலையும், உயிரையும் நீக்கிக் கொள்ளும் அளவிற்கு தற்கொலை என்ற தப்பான முடிவை எடுத்துக் கொள்கின்றோம். இதனால், என்ன நன்மை ஏற்படப்போகின்றது. அவசரபுத்தி, ஆத்திர குணம், அகங்காரம் போன்ற எதிர்மறையான சிந்தனைகளால் மனநோயாளியாக மாறி விடுகின்றோம்.

நாம் அனைவரும் வாழ்வதற்காகவே அன்றாடம் ஓடியோடி உழைக்கின்றோம். இரவு பகலாக உடலை வருத்திப்பாடுபடுகின்றோம். எமது சிந்தனைகளைச் சிறந்த வழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க நேரிடும் போது தான், சிக்கலான முடிவுகளையும் சுலபமாகத் தீர்க்கும் திறன் எம்மிடையே தோன்றுகின்றது.

நாம் நாளாந்தம் காலையில் எமது வீட்டிலுள்ள சுற்றுப்புறச் சூழலைத் தூய்மைப்படுத்தும் போது, தேவையில்லாத குப்பை கூழங்களை அகற்றிச் சுகாதாரமாக வாழ்கின்றோம். அதைப் போலவே மனதிற்கும் சந்தோசமான செயற்பாடுகளைச் செய்து சந்தோசமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் செல்லும் வழிப் பயணத்தில் எத்தனை மேடு பள்ளங்களைத் தாண்டிப் பயணிக்கின்றோம்.

எத்தனை தடங்கலைத் தாண்டிச்சென்று எம்தேவையை நிறைவேற்றிக் கொள்கின் றோம். எந்தப் பிரச்சினையையும் துன்பமாக நினைக்காமல், இவையெல்லாம் மனதிற்கு உரம் சேர்க்கும் படிக்கற்கள் என நினைத்துக் கொண்டு, எம்மை நாம் தாழ்வாக நினைக்காமல், எமக்கும் தனித்திறமை உண்டு என எண்ணியபடி, எம் வாழ்க்கைப் பயணத்தையும் வளம் சேர்க்க வைராக்கியமுள்ள மனநிலையுள்ளவராக, எந்த நிலையிலும் தளராமல் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே! வாழ்க்கை என்பது இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாக இருந்தாலும், எமக்கு நாம் கொடுக்கும் மனத்தைரியமும் தான்! எமது நாட்டு நலனுக்காக இன்றே செயற்பட்டு விழிப்புடன் வாழ்வோம்.

**திருமதி. வாசுகி வரதராசா**
ஆசிரியர்
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துத்துப்பார்

மனித விருட்சமே
மாயவலையில் சிக்குண்டு
மகத்தான பயன்களை
மண்ணுக்குள் புதைத்தாயா?

உலகம் உய்யட்டும்
உரிமைகள் கிடைக்கட்டும்
உணர்வுக்கு உயிரூட்டி
உன் பண்பாட்டை பேணிடு

நீரூற்றி பசளையிட்டு
நிரந்தரமாய் வேலிகட்டி
பசுமையுடன் கவர்ச்சி தந்து
பசி போக்கும் மரமாகிய மானிடரே

அன்பும் பண்பும் அரவணைப்பும்
அகிலத்தில் வேர் ஊன்றிடவே
தெள்ளிய மனமுடைய மூதாதையர்
தொல்லுயிரைத் தொலைத்தனரே

நாகரீக மோகத்தில்
நாறுகின்ற மனிதம் எங்கே?
உடையிழந்த மரமாகி
கருகுகின்ற நிலைகாண்பீர்!

எதிர்கால சிற்பிகளின்
ஏற்றத்தை விரும்பிடவே
மாணவப் பூக்களிடம்
மாட்சிமை துளிர்க்க வேண்டும்.

இரத்தத்திற்கு இரத்தம் என்று
இழிவான சொல்லுரைத்து
பழி தீர்க்கும் பாவத்தை
பாலகரே மறந்திடுவீர்!

பசுவுக்கு பசுவாகி
துணிவுக்கு புலியாவீர்
நன்றிக்கு நாயாகி
நானிலமும் தழைக்க வைப்பீர்

பெற்ற அன்னை பால்வார்க்க
கொற்றவன் நீர் வார்ந்த கதை
மீசை முளைத்த பருவமதில்
மின்னல் போல ஏன் மறந்தீர்?

தலை சாயும் நெற்பயிராகி
தாயை தலை வணங்குவீர்
குரு நிந்தை செய்திட்டால்
குறுகிய வாழ்வே என தெரிந்திடுவீர்

உலகம் உன்கையில்
உரிமையுடன் பெற்றிடவே
மனிதத்தைக் கருக்கிடாது
மாட்சிமை கொள்ள வைப்பீர்!

ஆசிரியை
செல்வி.த.துரைராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயம் கற்பித்தலின் உளவியற் கோட்பாடுகள் மற்றும் விழுமியச் சிந்தனைகள்

பாடத்துறைகளைப் பொறுத்தவரை எமது பணியை சீராகவும், திருப்தியோடும் கற்பித்து முடிப்பதற்கு உளவியல் சார் கோட்பாடுகள் துணை நிற்கின்றன. இது சைவ சமயத்தில் ஆழ ஊடுருவிக் காணப்படுகின்றது. எவ்வாறெனில்,

இந்து உளவியல் அடிப்படை
கல்வி உளவியல் அடிப்படை
சமூக உளவியல் அடிப்படை

என்ற நோக்கில் உள்வாங்கப்பட்டு விரிவு பெறுகின்றது. இந்து உளவியல் அடிப்படையில் நோக்கும் போது சமய நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் அன்றி நல்லொழுக்க வளர்ச்சியையும், நன்னடத்தையின் ஆக்கத்தையும் பேணும் ஒரு துறையாகவே சமயம் அமைகிறது. இதன் மூலம் ஒருவரின் ஆன்மீக மனப்பாங்கு, சமனிலை ஆளுமை என்பன வளர்க்கப்பட இந்து உளவியல் துணை புரியும்.

அது மட்டுமா?

"ஆசார - பிரபாவோ தர்மா" என்னும் தொடர் ஆனது சைவசமயத்திற்கும், நன்னடத்தைக்கும் இடையே காணப்படும் ஆழமான பிணைப்பை வெளிப்படுத்துகிறது. எனவே இந்துக்கள் வெளிப்படுத்தும் நல்லொழுக்க வளர்ச்சி இந்து உளவியல் அடிப்படையின் சிறப்பாகும்.

தற்போதைய கற்பித்தல் முறையானது மாணவர் மையக்கல்வி ஆகும். இதன் போது கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் அங்கங்களாக அலகு, உப அலகு, விடய ஒழுங் கமைப்பு கற்பித்தல் அணுகுமுறை,உத்திகள், மதிப்பீடு, மாணவர்களின் வயது, ஆர்வம், நாட்டம், மனப்பாங்கு போன்ற உளவியற் கூறுகளுக்கு அமைவாகவே வரையறுக்கப் படுகின்றது.

மாணவருக்கும் - ஆசிரியருக்குமான தொடர்பு, தந்தைக்கும் மகனுக்கும் இடையேயான சுமூகமான நல்லுறவு போல, விளங்க வேண்டும் என்பது இந்து சமயக் கோட்பாடு, இதற்கு உதாரணமாக,

சுவேதாஸ்வர உபநிடதத்தில்

தந்தை உத்தாலகருக்கும், மகன் சுவேத கேதுவுக்கும் இடையே இடம்பெற்ற உரையாடலைக் குறிப்பிடலாம். இதுதான் ஆசிரியர் - மாணவர் நல்லுறவாக மறுவடிவம் பெற்றுள்ளது. இதுவே கல்வி உளவியல் அடிப்படையாகவும், எமது கலைத்திட்ட மாற்றமும் இதனை எடுத்துக் காட்டுகிறது.

சமூக உளவியல் தொடர்பாக நோக்கவோமானால், ஏனைய மதங்களை மதிக்கும் மனப்பாங்குகள், ஏனைய மதக்கருத்துக்களை கிரகித்துக் கொள்ளும் சிந்தனைகள், ஏனைய சமய வைபவங்களில் கலந்து கொள்ளல், இதன் மூலம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இந்து சமயம் கற்பித்தலின் பாடசாலை மட்ட சமூக உளவியல் அடிப்படைக் கூறுகளாகும். இதனால் பாடசாலை மட்டத்தில் வளரும் சமூக நல்லுறவு பரந்த சமூக நிலையிலும், தேசிய நிலையிலும், சமயப் புரிந்துணர்வு, சமயப் பொறை, சமூக இணக்கம் ஆகிய சமூக உளவியற் கூறுகளின் அடிப்படையே ஆகும்.

சைவசமயம் புகட்டும் மனித விழுமியங்கள் பற்றி நோக்கின் அன்பு, இரக்கம், நேர்மை, பணிவு போன்ற மனித விழுமியப்பண்புக்களில் அடிப்படை, இதற்கு ஒரு சிறிய உதாரணம் ஒன்றை நோக்கின் படிப்பறிவு இல்லாத வேடனான திண்ணான் திருக்காளத்தியில் எழுந்தருளிய இறைவன் கண்களிலிருந்து குருதி வடிந்த இரு சந்தர்ப்பத்தில் தனது கண்களையே இடந்து அப்ப முனைந்த அபூர்வச் செயல் அன்பின் ஆழத்தை உணர்த்தும். இதனையே வேதாந்த ஞானசிகரமான ஆதி சங்கரரும் மாயாவாத கண்டன வாதியான மாணிக்க வாசகரும் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

மேலும் சமூகப் பொறுப்பு, பண்பாடு, விழிப்புணர்வு, சமூகநீதி, தன்னலத் தியாகம் சமூக சேவை இவையெல்லாம் சமூகம் சார் விழுமியங்கள் ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக,

ஆறுமுக நாவலர் பஞ்ச காலத்தில் கஞ்சித் தொட்டி தருமம் செய்தமை.
அப்பரும் சம்பந்தரும் திருவீழி மிழலையில் படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை.
காரைக்காலம்மையார் சிவனடியார்களுக்கு திருவமுது படைத்தமை.
போன்றன எடுத்துக் காட்டுகளாகும், இதனையே திருமூலர் தனது திருமந்திரத்தில்
"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி...."
எனக்கூறிச்சென்றுள்ளார்.

இதை விட சைவசமயம் உணர்த்தும் விழுமியங்களாக குரு பக்தி, அகிம்சை, இன்னா செய்யாமை, தியானம் ஆலயத்தொண்டு, புலனடக்கம் என்பனவற்றில் குருபக்தியை எடுத்து நோக்கினால் உபநிடதம் என்பது குருவிற்கு அருகில் இருந்து உற்றுக் கேட்டல் எனவும் குருவின் அருகில் இருந்து மெய்யன்போடு அமர்ந்து பணிவுணர்வுடன் மெய்யுணர்வு தரும் உபதேசத்தைப் பெறுதல் குருபக்தியின் வெளிப்பாடுகள் ஆகும்.

அதே போல் அப்பர் பெருமான் மண்ணுலக வாழ்வின் இறுதிக் கட்டத்தில் சரியைப் பணி புரிந்து, பிறந்த மேனித் தோற்றத்தோடு அரம்பையர் அவரை மயக்க முனைந்த சந்தர்ப்பத்தில், காம வசப்படாது ஒருமையுணர்வுடன் தொண்டு புரிந்த அப்பரின் செயற்பாடு புலனடக்கம் எனும் சமய விழுமியப்பண்பிற்கு உயரிய எடுத்துக்காட்டாகும்.

எனவே, இந்துசமய கருத்துக்கள் அனைத்தும் உளவியல் சார் எண்ணக்கருக்களை தன்னகத்தே கொண்டதுடன், அவை சமூக, சமய, தனிமனித விழுமியப்பண்புகளை மேலோங்கச் செய்வதற்கு உறுதுணையாக நிற்பன என்பது தெளிவாகிறது.

**திருமதி து. சந்திரசீலன்**
ஆசிரியர்
கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி மாணவர்களும் ஆசிரியர் வகிபாகம்

சமகால கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டில் வெளிப்படையாகவே காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய கல்வியின் கல்வியின் ஊடாக அடையக்கூடிய இலக்கு தொகுதியை அடையமுடியாதுள்ளது. அதனை கல்விச் சமூகம் இனங் கண்டுள்ளது.

ஆரம்பக்கல்வி வகுப்புக்களானது தரம் 1 - 5 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கல்வி முறையானது 8 குறிக்கோளையும் 7 தேர்ச்சிகளையும் அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு வகுப்புக்கள் முதன்மை நிலை 1,2,3 எனவும் முதன்மைநிலை ஒன்றில் தரம் 1,2 வகுப்புக்களும் முதன்மை நிலை இரண்டில் 3,4 வகுப்புக்களும் முதன்மை நிலை மூன்றில் தரம் 5 வகுப்பும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வயதிற்குட்பட்ட மாணவர்கள் இயல்பாகவே விளையாட்டில் நாட்ட முள்ளவர்களாகவும், பாராட்டை விரும்புதல், சுதந்திரமான செயற்பாட்டில் நாட்டம் உள்ளவர்கள், அடம்பிடித்தல்,குறும்புத்தனம், புதியவைகளில் அதிக நாட்டம், சுறுசுறுப்பு, ஏனையோர் கவனத்தை ஈர்த்தல் கள்ளங்கபடமில்லாத தன்மை, கட்டுப் பாட்டை விரும்பமாட்டார்கள். உள்ளதை உள்ளபடி பார்த்தல், அழகான பொருட்களில் நாட்டம் கதை கேட்டலில் நாட்டம் புலக்காட்சியின் அடிப்படையில் கருத்து கூறுப வர்களாகவும் காணப்படுகின்றனர்.

மேலும் ஆரம்பக்கல்வி மாணவர்கள் தன்முனைப்புச் சிந்தனையுடன் செயற்படு வார்கள். ஆராயும் இயல்பு ஆக்கபூர்வச் செயற்பாடுகள் உள்ளவர்களாகவும், காப்பு, அன்பு, களிப்பு என்பவற்றை வேண்டி நிற்பவர்களாகவும், ஆற்றல் படிப்படியாக விருத்தி அடைபவர்களாகவும் காணப்படுவார்கள்.

ஒரு கட்டத்திற்கு எவ்வாறு அடித்தளம் பலமாக உள்ளதோ அதே போலவே மாணவர்களின் உயர்கல்விக்கு ஆரம்பக்கல்வி அடித்தளமாக அமையும். ஆரம்பக் கல்வியை பொறுத்தவரையில் நல்ல ஒழுக்கமுள்ள மாணவரையும் நல்ல கல்வியையும் உருவாக்கும் பொறுப்பு ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு உள்ளது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெணத்தகும்" எனும் ஔவையாரின் வாக்கிற்கிணங்க ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் எண்ணும் எழுத்தும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றது. எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களிடம் அன்புடைய வர்களாக இருத்தல் வேண்டும். ஆர்வத்துடன் கற்பிப்பவராகவும் எல்லா மாணவர் களையும் சமமாக மதித்து இன்முகத்துடன் மாணவர்களின் பலம், பலவீனங்களிற்கு ஏற்றவாறு கல்விச் செயற்பாட்டை ஒழுங்கமைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இங்கு செயற்பாட்டு முறை, விளையாட்டு முறை, குழுமுறை போன்ற முறைகள் மூலம் கற்பிப்பவராகவும், மாணவர்களிடம் அதிக அக்கறை உடையவராகவும், அவர்களின் திறமைகளை இனங்கண்டு பாராட்டுதல் வழங்குபவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி வகுப்புக்கள் எப்போதும் கவர்ச்சிகரமானதாகவும் ஆசிரியர்கள் கவர்ச்சியான முறையில் கற்பிப்பவராகவும் தேவையான போது பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்குபவராகவும் கற்றலில் இடர்பாடுடைய மாணவர்களுக்கு உதவுபவராகவும் பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாப்பவராகவும், ஆசிரியர் மனமகிழ்ச்சி உடையவராகவும், மாணவர்களுடன் வினைத்திறனுடைய தொடர்பாடல் சுயமதிப்பீடு செய்பவராகவும் சுயமதிப்பீட்டிற்கு உட்பட்டவராகவும் தாய், தந்தை வகிபாகம் உடையவராகவும் செயற்படுதல் வேண்டும்.

ஆசிரியர் வினைதிறன் கொண்டு திட்டமிடுபவராகவும் தேசிய குறிக்கோள் பொது அடிப்படைத்தேர்ச்சி கொண்டு கற்பித்தல் தொடர்பாக செயற்படுபவராகவும், திட்ட மிடுபவராகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறாக மாணவர்களிற்கு இயல்புகளுடன் ஆசிரியர்களின் இயல்புகளும் ஒன்றாகச் சேர்ந்து மாணவர் கற்றலின் செல்வாக்கு செலுத்தும் போது ஆரம்பக்கல்வி மாணவர்கள் இடைநிலை, உயர்நிலை கல்வியை கற்பதில் இடர்பாடுகள் ஏற்படாமல் ஆரம்பக்கல்வி சிறந்த அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**திருமதி ரா.கைலைநாதன்**
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரே பிள்ளைகளைக் கவனியுங்கள்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" என்ற அருள்வாக்குகளுக்கு இணங்க அரிய பிறப்பாகிய இந்த மானிடப்பிறப்பை எடுத்த எங்களுக்கு பகுத்தறிவு என்னும் மேலாடை உயர்ந்தபோது எமக்குக் கிடைத்த பெரும் பொக்கிசமாகும். இப்பேற்றினால் நாம் மற்றைய ஜீவராசிகளை விட உயர்ந்து நிற்கவேண்டிய பெரும் பொறுப்பு எம்மைச் சார்ந்திருக்கின்றது.

மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். சிந்தனையின் பொருட்டு செவ்வனே சீர் பெற்ற நல்வாழ்க்கையை அமைத்து நாமும், வருங்காலச் சந்ததிகளான எமது பிள்ளைகளையும் நல்வழிப்படுத்தவேண்டிய பாரிய கடமை எமக்குண்டு. அந்த வகையில் அழியாச் செல்வமாகிய கல்வியை பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். கற்க வழி செய்து கொடுக்க வேண்டும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும், எல்லா அழகையும் விட கல்வியழகே அழகு போன்ற அருமருந்தன்ன வாக்கியங்கள் கல்வியின் சிறப்பை மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன, மேலும்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" எனும் வள்ளவரின் குறளுக்கேற்ப தந்தையானவன் பிள்ளைகளைக் கல்வியில் நாட்டம் கொள்ளச் செய்து அவர்களது முன்னேற்றமான காரியங்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உரிய பெரும் பொறுப்பாக அமைகின்றது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, பின் நல்லவன் ஆவதும் தீயவர் ஆவதும் பெற்றோர் வளர்ப்பினிலே." ஆம், உண்மைதான் பிள்ளைகள் வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு மகத்தானது. ஆனால், இதை இன்று எத்தனை பெற்றோர்கள் உணர்ந்து செயற்படுகின்றார்கள் என்பது கேள்விக்குறியே.

இளம் பருவம் மிகப்பிரதானமானது அப்பருவத்தை தவறான பாதையில் வீணாக்கப்படாது சீரமைப்பது பெற்றோரின் பங்களிப்பாகும். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்", "இளமையில் கல்வி சிலையிலெழுத்து" என்னும் பொன்மொழிக்கிணங்க இளமையில் பழகும் பழக்கங்கள் வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல மிகவும் இலேசாக, எளிதாக மனதில் பதிந்து ஆயுள் வரைக்கும் அதன் தாக்கம் இருக்கும். இதனால், இளமைப்பருவத்தில் நல்ல அறம்சார்ந்த நீதிக்கதைகள், நற்பண்புகள், ஒழுங்கங்களை பிள்ளைகள் மனதில் படியச் செய்ய வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

பாடசாலையில் கற்றவற்றை அன்றைய தினமே கற்பது இலகுவானதாகும். இதனைத் தள்ளிப் போட முயற்சிக்கக்கூடாது. படித்த பாடத்தை அன்றைய தினமே மீள உள்வாங்குவதன் மூலம் மனதில் படிந்து ஞாபகசக்தியை ஊட்டி மனதிலும் நிலையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிந்து விடுகிறது, இதனை பெற்றோர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இது கற்றதைத் தெளிவுபடுத்தும் என்பதை பெற்றோர் பிள்ளைக்கு கூறுவதன் மூலம் பிள்ளை மீளக் கற்றலின் முக்கியத்துவத்தை உணரக் கூடியதாயிருக்கும். பெற்றோர்கள் பாடங்களை ஒழுங்குபடுத்தி, எதனை முதலில் கற்க வேண்டும். கடினமான, இலகுவான பாடங்கள் எவையென வகைப்படுத்தி, கடினமான பாடங்களுக்கு கூடிய நேரத்தையும், இலகுவான பாடங்களுக்கு குறைந்த நேரத்தையும் ஒதுக்கி கற்கவேண்டும் என்பதைக் கூறவேண்டும்.

கற்றல் என்பது மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்து காணப்படும் ஒரு செயற்பாடாகும். பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு பெற்றோர் தான் ஊக்கிகள், பிள்ளைகள் பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள் என்று ஓடிப்படித்தாலும், வீட்டிலே கற்றுவந்தால்தான் பலன் கிடைக்கும், என்பதைப் பெற்றோர் புரிய வைக்க வேண்டும். கற்றலானது பாடசாலையிலும், வீட்டிலும் நிகழ்த்தப்படுவதாகும். பாடசாலையில் கற்றதை வீட்டில் மீளக்கற்கப் பழகவேண்டும். இதற்கு பிள்ளை படிக்கக் கூடிய சூழலை, வசதியைப் பெற்றோர்கள் செய்து கொடுக்க வேண்டும். ஆரவாரமில்லாத, அமைதியான, ஏனையவர்களின் தொந்தரவுகள் இல்லாது பிள்ளை படிக்கக்கூடிய வசதிகளைப் பெற்றோர் செய்து கொடுப்பது நல்லது.

ஒவ்வொரு மனிதனும் தனித்தனி தன்மை கொண்டவர்கள். ஒவ்வொருவரினதும் அறிவு, ஆற்றல், ஆளுமை என்பவை ஆளுக்கு ஆள் வேறுபட்டவை. தனித்துவமானது, எனவே, ஒருவரைப்போன்று இன்னொருவரை எதிர்பார்க்க முடியாது. ஆனால், இன்றைய பெற்றோர் வேறோர் பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பார்த்து தம்பிள்ளை கல்வி விடயத்தில் குறைவாக இருந்தால் ஏசியும், அடித்தும் பிள்ளையின் மனம் நோகச் செய்கிறார்கள். இது மாறாக பிள்ளையின் கல்வி வீழ்ச்சிக்கு வழி கோலுவதாக அமைந்து விடும். இதை விடுத்து உண்மையான அன்பு காட்டி, நட்புச் செலுத்தி பிள்ளையின் கல்வியை மேலும் உயரச்செய்ய வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும்.

தற்காலப் பிள்ளைகள் மது, போதைவஸ்து அலைபேசி, முகப்புத்தகப் பாவனை தொலைக்காட்சி, குழுச்சண்டை என நடத்தைப் பிறழ்வுகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் பெற்றோர் கவனித்து அவர்களை நல்லவழியில் நாட்டம் கொள்ளச்செய்தல் வேண்டும். தீய செயற்பாடுகளில் மாணவர் ஈடுபடாதிருக்க பெற்றோர்கள் பிள்ளைகளுடன் ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும். பிள்ளைகளை உளவியல் கல்வியறிவூட்டுவதுடன், ஆன்மீகம் வளர்ந்த கல்வியையும் ஊட்டுவதனால் நல்ல சமூக இணக்கப்பாடுள்ளவர்களாக மிளிர்வார்கள். இது பெற்றோர்களின் முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

குழந்தைகளை அளவோடு பாராட்ட வேண்டும். இது அவர்களுக்கு ஊட்டச்சத்தாக நின்று பிடிக்கும். பெற்றோர்கள் கல்வியின் மீது பிள்ளைகளுக்கு விருப்பத்தை ஏற்படுத்தி தாங்களாகவே விரும்பிக் கற்கும் முறைக்கு அவர்களைத் தயார்படுத்த வேண்டும். ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க வேண்டும். அதனால் ஏற்படப் போகும் பயன்கள் என்ன? நன்மைகள் என்ன என்பவற்றை பிள்ளைகளுக்கு கதைகள் மூலம் மனதில் பதியவைக்க முயல வேண்டும்.

எமது கலாசாரத்தின் பாரம்பரியத்தின் தக்க உதாரணங்களுடன் சந்தர்ப்பம் வரும்போது எடுத்துக்கூறுவது பெற்றோர் பொறுப்பாகும். நடை, உடை, உணவு ஆன்மீகச் செயற்பாடு போன்ற எமது கலாசார பண்புகளை எடுத்துக்கூறி அதனைப் பின்பற்றச் செய்யச் செய்வதால் வருங்காலத்தில் பிள்ளை நல்லதொரு பண்பாளனாக மிளிர வாய்ப்புண்டு.

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி, வாழ்க்கையோடு தொடர்புடையது. இலக்கியச் சுவையை இசையுடன் பாடச் செய்தல் வேண்டும். இசையோடு கூறப்படும் ஒழுக்கநெறிகள், கருத்துக்கள் எப்போதும் மனதில் பதிந்து நினைவில் நிற்கும். இசை நினைவாற்றலை அதிகரிக்கும் இதனாலேயே காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலைமுழுவதும் விளையாட்டு என எதுகை மோனையோடு இசையுடன் பாடினான் மகாகவி பாரதி.

குழந்தைகள் தங்கள் திறமைகளைத் தாங்களே வெளிப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவதுதான் பெற்றோரின் கடமையே தவிர திணிக்கக்கூடாது. தேர்வில் தோல்வி அடைவது இழப்பல்ல. அடுத்த தேர்வில் திறமையாக முதல் மாணவனாக மிளிரலாம் என ஊக்கப்படுத்தலே பெற்றோரின் செயலாக இருக்கவேண்டும். தீயசக்திகள் குழந்தைகளை அணுகாதவாறு கண்காணிக்க வேண்டும். படிப்பு வளர பண்பும் வளரவேண்டும். இல்லாவிட்டால் பண்பற்ற படிப்பால் பயன் எதுவும் கிடையாது. குழந்தைகள் என்று விடாது அவர்களின் வயதுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற சில பொறுப்புக்களை அவர்களிடம் பகிர்ந்து கொடுத்து, அச்சேவைகளைப் பொறுப்புடன் செய்யப்பழக்குதல் வேண்டும். பெற்றோர் பொறுப்புடன் நடந்து பிள்ளைகளைப் பொறுப்பேற்கச் செய்ய வழி காட்டுதல் மூலம், "நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்" ஆக அமைக்க முடியும்.

இந்தப் பரந்த நிலவுலகின் கண்ணே ஆண்டவனின் திவ்விய பேரருட் கருணையினால்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற உயரிய நற்சிந்தனையை பிள்ளைகளுக்கு ஊட்டி அவனுடைய திருவருள் நலத்தால் நலமாக வாழ்ந்து நன்மைகளை அடைய அவனருளை நாடி நிற்போமாக!

**திருமதி.அ.தாரணி**
ஆசிரியர்
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கல்வியும் எமது பாடசாலையின் நிலைப்பாடும் ஒரு வரலாறு

விசேட கல்வி என்பது சாதாரணமான கற்றல் - கற்பித்தல் கலைத்திட்டத்திற் கமைவான நடவடிக்கையின் போது முகங்கொடுக்க இடர்படும் நிலையில் உள்ள மாணவர்கட்கு விசேட உத்திகளை பயன்படுத்தி அல்லது அவர்களின் உள வயது தன்மைக்கு அமைவான கற்பித்தலை மேற்கொள்ளும் செயன்முறை ஆகும். உதாரணமாக பார்வை பிரச்சினை உடைய பிள்ளையாயின் அவரின் காலவயதை ஒத்த வகுப்பின் கலைத்திட்டத்தையே கற்பித்தலில் மேற்கொள்ளமுடியும். இவர் கேட்டல் கிரகித்தல் மூலம் உள்வாங்கி பிறையில் (குற்றெழுத்து) மூலம் எழுதும் பயிற்சியை பெற்று பிறையில் மூலமான பரீட்சைக்கு விடையளித்து கற்றலை மேற்கொள்வார். அதே போன்று கேட்டல், பேச்சில் பிரச்சினை உடைய பிள்ளையாயின் சைகை மொழிமூலமான தொடர்பாடலுடன் உட்படுத்தலில் ஈடுபடுத்தலாம். மாறாக வேறு பிரச்சனை காரணமாக (டண்சிங்றோம் ஒட்சிசம், ADHD) கற்றலில் இடர்படின் அவர்களின் உளவயதினை கண்டறிந்து அதற்கமைய விசேட கல்வி அலகில் விசேட கற்பித்தல் உபகரணங்களை கையாண்டு விசேட உத்திகள் மூலம் கற்பித்தலை முன்னெடுக்க முடியும்.

இத்தகைய விசேட தேவையுடைய பிள்ளைகள் எமது பாடசாலை சூழலில் அதிகமானோர் காணப்படுகிறார்கள். எமது பிரதேசம் யுத்தத்தின் பாதிப்புக்குள்ளானது ஆகையால் அதன் தாக்கத்தினால் காயத்திற்குள்ளானோர் பாதிப்பு, வறுமை காரணமான நோய் பாதிப்பு, இழப்பின் விளைவான மனநிலை பாதிப்பு, அதிர்ச்சி காரணமான பாதிப்பு என பல விசேட தேவையுடைய பிள்ளைகள் காணப்படுகின்றனர். இவர்களின் எதிர்காலத்தை கட்டி எழுப்பி மிளிர செய்ய விசேட உத்திகளுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு தேவை. இதற்கமைய மீள் குடியேற்றத்தின் பின் 2010 களில் விசேட கல்வி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமான வகுப்பறை ஒன்றில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன.

இவர்களின் நிலமைகளுக்கமைய இருக்கை, பாதுகாப்பு வசதி, நடமாடும் வசதி மற்றும் மலசலகூட தேவையை பூர்த்தி செய்யும் வசதிகளோ இல்லாத நிலையில் நடமாடுவதில் சிக்கலான பிள்ளைகள் வருகை தரமுடியாது இருந்தனர். இதைவிட விருப்பமற்ற கவின் நிலையற்ற வகுப்பறையாக இருப்பதனாலும் ADHD சிறார்கள் வெறுப்புடன் காணப்பட்டனர். கற்க விரும்பாததுடன் வகுப்பறைவிட்டு வெளியில் ஓடுதல் புரள்வான நடத்தையில் ஈடுபடல் போன்ற அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. இந்நிலையினை எல்லாம் பார்வையிட்ட வெளியூரை சேர்ந்த நலன் விரும்பியான திருமதி கௌரி பொன்னையா என்ற பெருமாட்டி பெரும் உதவியாக விசேட கல்வி அலகு ஒன்றினை நிறுவி 2013 செப்ரம்பர் 30ம் திகதி பெருமனதுடன் கையளிப்பு செய்தார். இது மட்டுமன்றி அவர் நடமாடுவதில் இடர்படும் மாணவர்கட்கு ஊன்றுகோல், சக்கர நாற்காலி மற்றும் இருக்கை என்பவற்றையும் மாணவர்கட்கு அன்பளிப்பு செய்தார். இதன் காரணமாக நடமாட இடர்பட்ட மாணவி ஊன்றுகோல், உதவியுடன் நடைபயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று தற்போது சுயமாக நடமாடும் (ஊன்றுகோல் இன்றி) நிலையை பெற்றுள்ளார். சாதாரண இருக்கையில் அமர்வதில் இருமாணவர் இடர்பட்டமையை கண்டு இருக்கை வசதி ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும் நடமாட சக்கர நாற்காலியையும் அன்பளிப்பு செய்துள்ளார்.

இவ்வாறான வாய்ப்புக்கள் கிடைத்தமைஅறிந்து அயல் கிராம பாடசாலைகளில் இருந்த விசேட தேவையுடைய மாணவர்கள் பலர் புதிதாக சேர்க்கப்பட்டனர். கிராமங்களில் தேவையுடையோர் வராது இருப்பதை அறிந்து world vision உடன் இணைந்து வீட்டுத்தரிசிப்பின் போது அவர்களும் இணைக்கப்பட்டனர். இணைக்கப் பட்டவர்கள் விசேட உத்திகளுடனான கற்றல் - கற்பித்தல் செயன்முறை காரணமாக சிறப்பாக ஈடுபட்டதுடன் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பாடசாலையில் புகழை பறைசாற்றும் வண்ணம் திகழ்ந்தனர். இவ்வாறாக இணைக்கப்பட்ட மாணவர்களும் ஏற்கனவே உள்ள மாணவர்களும் விசேட உத்திகள் மூலமான கற்பித்தலில் திறம்பட உள்வாங்கி கொள்வதன் விளைவாக வருடம் தோறும் குறைந்தது. ஒருவரேனும் சாதாரண வகுப்பறைக்கு செல்லும் நிலையை பெற்று அனுப்பப்பட்டனர். அவர்கள் அம் மாணவருடன் போட்டியிட்டு ஓரளவேனும் சிறப்பாக கற்றல் - கற்பித்தலில் இணைப்பாட செயற்பாட்டிலும் ஈடுபட்டு வருவதை காண முடிகிறது.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடு மட்டுமன்றி இணைபாட விதான செயற்பாடு களிலும் சிறப்பாக ஈடுபடுவதை காணமுடிகிறது. வருடாந்த வலயமட்ட விளையாட்டு போட்டியிலும் மாகாணமட்ட போட்டியிலும் தமிழ்பேசும் உறவுகளின் வடமாகாண பாரா ஒலிம்பிக் சமூக அபிவிருத்தி அமைச்சின் போட்டி போன்றவற்றிலும் பங்குபற்றி சிறப்புடன் இடங்களை பெற்று இருப்பதை காண முடிகிறது. இவ்வாறாக **2013** லிருந்து வலயமட்ட விளையாட்டுப்போட்டியில் அனைத்துப்பிள்ளைகளும் பங்குபற்றி அதில் 90% மான மாணவர்கள் வெற்றியைப் பெற்றுக் கொள்வது வழமை இதேபோன்று மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றி குறைந்தது இரு நிகழவேனும் முதலாம் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இதைவிட வலயமட்ட அழகியல் போட்டிகளிலும் இடங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. சென்ற வருட அழகியல் போட்டியில் தனி நடனம் 1ம் இடம், தனிப்பாடல் 1ம் இடம், குழு நடனம் 1ம் இடம் பெற்றனர். இதில் 1ம் இடம் பெற்ற குழுநடனம் முழுநிலா கலை விழாவில் (வட்டக்கச்சி இராமநாதபுரம் பாடசாலையில்) அரங்கேற்றப்பட்டது. அவ்விழாவில் இவர்களின் சாதனையை பிரதம விருந்தினர் பாராட்டி உரையாற்றியமை பெருமையை அளித்தது. இதைவிட உளநல நாளை முன்னிட்டு உளநல வைத்திய அதிகாரி திரு.க.ஜெகரூபன் அவர்களால் நடாத்தப்பட்ட அழகியல் போட்டியில் தனிப்பாடல் 2ம்,3ம் இடங்களையும் தனி நடனம் 1ம் இடத்தினையும் குழு நடனம் 1ம் இடத்தினையும் பெற்றதுடன் பெறுமதி மிக்க பரிசில்களையும் பெற்றனர். இதே போன்று தமிழ் பேசும் உறவுகளின் வடமாகாண பரா ஒலிம்பிக் போட்டியில் நீளம்பாய்தல் 1ம் இடத்தை ஒரு மாணவன் பெற்றதுடன் பெருவிளையாட்டிலும் வேறு மாணவர்களுடன் இணைந்து செயற்பட்டு காற்பந்தில் முதலிடமும் வலைப்பந்தாட்டத்தில் முதலிடமும் பெற்றுத் தந்து கிளிநொச்சி வலயத்திற்கே பெருமை சேர்த்தமையை காண முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் வேடம் புனைதல், விளையாட்டுப்போட்டி நவராத்திரியின் போதான கோலப்போட்டி என்பவற்றிலும் சிறப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக விசேட தேவையுடையோர் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு இவர்கள் இரையாக அமையாது அனைவரும் பாராட்டும் வண்ணம் சாதனைகள் படைப்பது அவர்களிற்கு மட்டுமன்றி குடும்பத்தினர் கட்கும் பாடசாலைக்கும் பெருமையாக அமைகின்றது. இவ்வாறு இவர்களை வீட்டிலே தனிமைப்படுத்தி ஒதுக்காது முன்கொண்டு வந்து பல சாதனை படைக்க பெற்றோரும் உதவியாக உள்ளனர். அதே வேளை தேவையறிந்து உதவி வழங்க நலன்விரும்பிகளும் நிறுவனங்களும் இங்கு முன்வந்திருப்பதை காணலாம். அதாவது போக்குவரத்து உதவிகள் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், விசேட தேவைக்குரிய உபகரணங்கள் (ஊன்றுகோல், சக்கர நாற்காலி) போன்றவையும் போசாக்கு உணவு வழங்கல், பணஉதவி என்பனவும் இவர்களுக்கு பெரும் உதவியாக அமைகிறது. கற்றல் - கற்பித்தலுடன் கூடிய இயக்கப்பயிற்சிக்கான உபகரணங்களும் அதற்கான ஒரு பிரத்தியேக அறையினையும் செரண்டிப் நிறுவனம் புனரமைத்துத் தந்துள்ளது. இதனை 24.01.2019 அன்று எம்மிடம் கையளித்து தற்போது இயக்க செயற்பாடுகள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் பேச்சு தொடர்பாடலில் இடர்படும் மாணவர்களே 3 பங்கினர். காணப்படுகின்றனர். இதனையும் மாணவரது உடல் உள நிலையை பரிசோதிக்கும் முகமாக 2017 முதல் வைத்திய அதிகாரியினால் மாதாந்த மருத்துவ முகாம் நடைபெற்று வந்ததுள்ளது. இதன் மூலம் மருத்துவ ஆலோசனை பெறுவதுடன் மருத்துவ உதவியும் பெற்றனர். இதனைவிட உள பிரச்சினைக்கேற்ப கையாளும் விதம் தொடர்பில் வைத்தியரால் ஆலோசனை பெற்றோருக்கும் ஆசிரியர்கட்கும் வழங்கப்பட்டது. இதனைவிட U.K இல் இருந்து வந்த குழுவினரால் ஆசிரியர்களிற்கு ஒட்டி பிள்ளைகளை கையாளும் முறை, உத்திகள், யோகா பயிற்சி என்பனவும் விசேட செயலமர்வின் மூலம் ஆசிரியர்களிற்கு வழங்கப்பட்டது. இவற்றை எல்லாம் பயன்படுத்தி கற்பித்தல் மேற்கொண்டதன் பயனாக மாணவர்களின் பழக்கவழக்கங்கள், சமுதாய மயமாக்கல் செயற்பாடுகள், கற்றல் செயற்பாடுகள் விளையாட்டு, இணைபாட செயற்பாடுகளில் சிறப்பாக திகழந்து சாதனைகள் பாராட்டத் தக்கனவாக அமைந்தது,

"இறைவன் படைப்பின் உன்னத படைப்பு மனிதம் அதில்
மாண்புடன் போற்ற நீ வாழ்"

என்பதற்கமைய அரிதான மானிடப் பிறவியில் பார் போற்ற வாழ விசேட தேவையுடையோர் என ஒதுக்காத எமது பாடசாலை நல்லதொரு களமாக அமைவது பாடசாலையின் பெருமையை பறைசாற்றுகின்றது. பொன்விழா காணும் பாடசாலைத் தாய் எல்லா மாணவர்கட்கும் களமாய் அமைந்துள்ளது. இது கிளிநொச்சி மாவட்டத்திற்குமே பெருமை அளிக்கின்றது.

நன்றி

**திருமதி. சி. ஜெயசுதர்சன்**
**திருமதி. ல. விமலராஜன்**
விசேட கல்வி ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவணந்தியும் பதவியியலின் முக்கியத்துவமும்

தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு காலகட்டத்தில் சமணராக மாறிய தமிழ்க்குலத்து அறிஞர்களும், அவர்தம் சந்ததியினரும் தமிழ் நூலாக்க முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டனர். தமக்கு முன்னைய காலத்தில் தமிழில் அருகி இருந்த சமஸ்கிருத வழக்குகளை பெருகப்படைக்கும் முயற்சியில் அவர்களுக்கு ஆர்வம் இருந்துள்ளது. தமிழில் இல்லாத புதுமைகளை எல்லாம் நாம் படைக்கின்றோம், என்று காட்டி தமிழரைக் கவரும் சமய விருத்தி நோக்கும், இதற்கு ஓர் காரணமாக இருந்திருத்தல் கூடும். ஆனாலும், மொழி விருத்தி என்ற நோக்கில் தமிழ்ச்சமூகம் அதனை ஏற்க வேண்டியதாயிற்று. அவ்வகையில் எழுந்த ஒரு இலக்கண நூலே நன்னூல் ஆகும்.

நன்னூலின் ஆசிரியராகிய பவணந்தி முனிவர் ஓர் சைன மதத்துறவி ஆவார். சைன மதத்தில் துறவிகளை நந்தி என்ற பெயரால் அழைக்கப்படுதல் மரபு. இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் " பொன் மதிற் சனகைச் சன்மதி முனியருள் பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி என்னும் நாமத்திருத்தவத் தோனே.."

என்ற அடியில் இவர் ஓர் தவ ஆற்றல் உடைய துறவி எனத் துணியலாம். துறவிகளை நந்தி என அழைக்கும் முறையை அச்சணந்தி, வச்சணந்தி என்ற வழக்கினாலும்,
"கனகநந்தியும் புட்பநந்தியும் பவணந்தியும் குமணமா
சுனக நந்தியும் திவண நந்தியும்" என்ற தேவாரத்து அடியாலும் அறியலாம்.
இவர் ஊர் சனகை என்றும் துணியப் பெறும். சனகை என்பது
சனநாதபுரம் என்பதன் மருவு என்பார் மயிலை நாதர்......
"தன்னூர் சனகையிற் சன்மதி மாமுனி..."

எனவரும் தொண்டை மண்டல சதகத்தின் செய்யுளைக் கொண்டும். தொண்டை நாட்டில் இன்று சனகபுரம் என்று வழங்கும் ஊரே என்பர் சிலர்.

சனகை என்பதற்குச் சனநாதபுரம் என்று மயிலைநாதர் உரை எழுதியிருந்ததால் மைசூர் ஜில்லா திருமுக்கூடல் இராசிபுரம் தாழுகாவைச் சேர்ந்த கிராமம் என்றும், அது கங்கா நாட்டில் காவிரியின் வட கரையில் உள்ளது. என்றும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் து.அ.கோபிநாதராவ் அவர்கள் குறிப்பைக்கொண்டு மகாமகோபாத்பாய் ஐயர் அவர்கள் மைசூர் மாவட்டத்தைச் சேர்ந்த சனநாத புரமே பவணந்தியர் ஊர் என்பது துணிவு.

பவணந்தி முனிவர் கி.பி **1178**ம் ஆண்டு முதல் **1216** வரை அரசாண்ட 3ம் குலோத் துங்கசோழன் காலத்தவரான சீயகங்கன் காலத்தில் இவர் இருந்தவராகத் துணியப் பெறுதலின் இவர் காலமும் சீபகங்கன் காலமே எனத் தெளிவாகும்.

நன்னூலைச் செய்த பவணந்தி காலம் வரை தமிழுக்கு ஏக இலக்கணமாக இருந்து வந்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று உறுப்பு உடைந்த பிண்டம் தொல்காப்பியம். அதனை முதல் நூலாகக் கொண்டு பவணந்தி முனிவர் நன்னூல் இயற்றியுள்ளார். ஆனால், அதே போல் மூன்று அதிகாரத்துக்கும் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் செய்ததாகத் தெரியவில்லை. இருந்தும் அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர நூல் செய்யுமாறு இவரை சீயகங்கன் கேட்டுக் கொண்டதாக நன்னூல் சிறப்புப் பாயிரம் கூறுவது கொண்டு, இவர் செய்த பொருளதிகாரம் வழக்கற்றுப் போயிற்று. அல்லது ஏதோ இடையூறு காரணமாக கிடைக்காமல் போயிற்று என்பர்.

அது எப்படி இருந்த போதிலும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் படைப்பதே பவணந்தியரின் நோக்கம் என்பதற்கு மறுப்பில்லை. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் நூல் மரபு, மொழி மரபு என்ற இரு இயல்களை அமைத்து, எழுத்துக்கள் பற்றிய அடிப்படை இலக்கணத்தை விளக்கினார். நூல் மரபு கூறுவது எழுத்து என்ற தனிப்பட்ட எழுத்தின் இலக்கணம், மொழி மரபு கூறுவது இடர்படுதல் சார்பில் சில எழுத்துக்களுக்குரிய விசேட இலக்கணம், பவணந்தியாரும் அதைப் பின்பற்றி இலக்கணம் வகுக்கும் நோக்கம் இருந்துள்ளமையை முதலில் எழுத்தியலும், அடுத்து பதவியலும் அமைந்திருக்கும் பாங்கு சூசகம். இதன் வழியில் அவர் இலக்கணம் செய்தாரேனும் இது வழி நூல் ஆதலால் வழிநூல் இலக்கணத்துக்கு ஏற்ப பின்னூல் வேண்டும் விகற்பம் கூறல் என்பதாக அவர்காலத்திற்கு வேண்டப்பட்ட பத உறுப்புக்களையும் எடுத்துக்காட்ட வேண்டியவர் ஆனார்.

அது செய்கையில் சமஸ்கிருத இலக்கணம் ஆகிய பாணினி இலக்கணத்தில் கையாளப்பட்ட பகுதி, விகுதி இலக்கணங்களையும், பதம் சார்ந்த பிற உறுப்புக்களையும், பதவியியலில் எடுத்துரைத்து உள்ளார். வடமொழிப்பதங்களில் பகுதி, விகுதி பாகுபாடு மட்டுமே உள்ளது. இடைநிலை, சந்தி, சாரியை வழக்குகள் அங்கு இல்லை. தமிழ் பத அமைப்பிற்கு ஏற்ப இதைப் பொருள் செய்து சமஸ்கிருத இலக்கண மரபில் தமிழுக்கு ஒத்த வகையிலே இவர் கையாண்டு இருப்பது அவரது இலக்கண விவேகமாக கருதப்படுகிறது.

வடமொழியில் பதங்களின் பகுதிகளை கணம் கணமாக வகுத்துணர்த்தும் மரபு உண்டு. ஒவ்வொரு இனத்தனவாகிய பகுதிகளும் பத ஆக்கத்தில் தத்தமக்கு இயல்பான வெவ்வேறு விகாரங்களை அடைவது சமஸ்கிருத மொழி இயல்பு. அதனால் அனைத்து வினைப்பகுதிகளையும் பன்னிரண்டு கணங்களாக வகுத்து இலக்கணம் கூறப்படும். தமிழ் வினைப் பகுதிகளைப் பொறுத்தவரை அதிகப்படியான வேறுபாடுகள் இல்லை. இருந்தும் தமிழ் வினைப் பகுதிகளை வாய்ப்பாட்டு நிலைப்படுத்தி 24 வாய்ப்பாடுகளாக " நடவா மடி சீவிடு ..." என்று தொடங்கும் சூத்திரம் இயற்றி உள்ளார். இது வடமொழி இலக்கண மரபை பின்பற்றிய ஒன்றாகும்.

தொல்காப்பிய வழக்கில் இல்லாத பகாப்பதம், பகுபதம் என்னும் வழக்குகளை பவணந்தியார் நன்னூலிலே பிரசித்தமாக எடுத்தாண்டவை. தன் குறிவழக்கம் மிக எடுத்துரைத்தல் என்ற உத்தியிற் பாற்படும் - அது பற்றி குறிப்பிடும் சிவஞானசுவாமிகள் வடநூல் மேற்கோள் ஆக ஒரு மொழிகளை விதந்து பகாப்பதம், பகுபதம் என காரணம் குறித்தோதற்கு அவற்றை நல்விருந்து என நாவலர் பயில, "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்.." சூத்திரம் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"றனழள ஒவ்வும் உயிர்மெய் உயிரள (பு)

அல்லாச் சார்பும் ..... " இச்சூத்திரம் ஈறாக பகாப்பதம், பகுபதம் என பலவாற்கூறுதல் தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல் எனும் உத்தி என விருத்தி உரையில் குறிப்பிடுதலால் அறியப்படும். இதன் மூலம் இப்பெயர் வகுப்பும் பதப்புணர்வு இயல்பு பவணந்தி தன்கைப்பொருளாக அமைத்துக்கொண்டது விளங்கும். முதன்முதலாக நன்னூலில் பத இலக்கணத்தை எதிர் கொள்வதற்கு இது ஒரு காரணமாகக் கொள்ளலாம். தொல்காப்பிய நூல் இலக்கணப்படி பண்புத்தொகைகளைப் பிரிக்கும் போது தொல்காப்பிய உரையாசிரியர்கள் பண்புகளின் அடிச்சொல் வடிவத்தை மட்டும் பண்புச் சொல்லாக பிரித்துக்காட்டும் வழக்கம் இருந்து வந்துள்ளது. நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் வெள்ளுடை என்றால் வெள் + உடை என்றும், கரும்குதிரை என்றால் கரு + குதிரை என்றே பிரிப்பதும் வழக்காறாய் இருந்துள்ளது. பிற்கால வழக்கில் பண்பு, பண்பியின் வேறாகாது என்ற கருத்து நிலை பெற்றதால் வெண்குதிரை எனும்போது குதிரையும், வெண்மையும் ஒன்றுதான் என்று கொள்ளும் நிலை உண்டாயிற்று. இம் மார்க்கத்திற்கும் பவணந்தி முனிவர் தமது இலக்கணத்தில் இடம் வகுக்க வேண்டிய தேவை உண்டாயிற்று. அவர் பண்புப் பெயர்களை மையிற்றோடு அடியாக எடுத்துக்காட்டி சொற்புணர்ச்சியில் அவை பெறும் விகாரங்களுக்கு விதி அமைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. பதவியலில் "செம்மை, சிறுமை, சேய்மை...." எனத் தொடங்கி "ஈறுபோதல் இடை உகரம்..." எனத்தொடர்ந்து அவர் வகுத்து இருக்கும் சூத்திரப்பாக்கள் இதனை வலியுறுத்தும்.

அடிப்படையில் புதுப்படைப்பாக பதவியல் படைத்த பவணந்தி முனிவர் வினை அடிகளை 23 வகையாக வகுத்ததன் சார்பில் தமிழ் வினைச் சொல்லாக்கத்திற்கு இன்றியமையாத ஒரு விளக்கத்தையும் தந்துள்ளார். இவ்வினை அடிகளொடு வி.பி என்ற பிறவினை விகுதிகள் சேர்ந்து பால் விகுதிகளைப் பெற்று பிறவினை என்ற வகுப்பு தோன்றுவதற்கும் வழிவகுத்துள்ளார். "விளம்பிய பகுதி வேறாதலும் விதியே..." என இலக்கணம் செய்து ஒரு வினைக்கு ஒரு கருத்தா மட்டுமன்றி இருவர்க்கு ஒரு கருத்தா, மூவர்க்கு ஒரு கருத்தா, நால்வருக்கு ஒரு கருத்தா என அமையும் இயல்புக்கு விளக்கம் தந்துள்ளார். வி.பி விகுதிகளில் பகுதியை அடுத்து "வியும்" மேல் நிகழும் தொடர்ச்சிகளில் அதற்கு அதிகமாக "பியும்" தொடர்ந்து வருதல் இவருடைய விளக்கத்தால் பெறப்படும். ஒரு வினைக்கு ஓர் கருத்தா ஆகும்போது "நடத்து (நீ நடத்து) எனவும், ஒரு வினைக்கு இரு கருத்தா ஆகும் போது நடத்துவி (நீ அவனைக் கொண்டு நடக்கச்செய்) எனவும் ஒரு வினைக்கு மூவர் கருத்தா ஆகும்போது, நடத்துவிப்பி (நீ இரண்டாம் ஆள் மூலம் மூன்றாம் ஆளை ஏவி நாலாம் ஆளைச் செயல்படுத்து) என்று வரும் இத் தொடர்ச்சி எந்தளவுக்கும் நீள இடமுண்டு. ஆனால் நால்வருக்கு ஓர் கருத்தா எனத் தரும் அளவுக்கு மேல் உதாரணம் காணல் அரிது. இவ்வமைப்பு பதவியல் தரும் ஒரு விசேடம்.

பவணந்தியார் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழ் மொழியோடு சமஸ்கிருத சொற்கள் பரவலாக கலந்து வழங்கும் நிலை இருந்தது. சங்கமருவிய காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண மதத்தினராகிய தமிழ்ப்புலவர்கள் தமிழையும், சமஸ்கிருத்தத்தையும் சரிக்குச் சரி கலந்து பலநூல்களை இயற்றியுள்ளர்ர. மணிப்பிரவாளநடை என அழைக்கப்படும் வழக்கும் இதற்கு உண்டு. இக்காலத்தைத் தொடர்ந்து வந்த பல்லவர் காலத்திலும் இம் மணிப்பிரவாளநடை இடம் பெற்று இருத்தலை நாலாயிர திவ்விய பிரபந்த்திற்கு எழுதப்பட்ட வியாக்கியானங்களில் செறிவாக காணப்படும். அன்று சமஸ்கிருதப்பயிற்சி மிகுதியாக இருந்ததால் சமஸ்கிருத சொற்களை தமிழில் கலக்கும் போது சமஸ்கிருதத்திற்கு இயல்பான ஓசை அமைப்பில் சில மாற்றங்களும் தேவைப்பட்டன. அந்த வகையில் சமஸ்கிருதத்திற்கும், தமிழுக்கும் பொதுவான எழுத்தொலிகள் 25 உம், சமஸ்கிருதத்திற்கு சிறப்பான ஒலிகள் 26உம் பொது ஒலி கொண்ட சமஸ்கிருதச் சொல்லை தமிழில் அமைக்கும் போது ஓசைப் பிறழ்ச்சி ஏற்படாது. சமஸ்கிருத சிறப்பொலி சேர்ந்த சொற்களை தமிழில் அமைக்கும் போது தமிழ் எழுத்து ஓசைக்கு ஒத்த வகையில் அவற்றில் மாற்றம் அமைய வேண்டும். முந்திய வகையை தற்சமம் (அதற்கு சமமானது) எனவும், தற்பவம் (அதிலிருந்து தோன்றியது) என இரண்டு வகையாக கூறுவார். கமலம் என்பது சமஸ்கிருதச்சொல், இதில் வந்த நான்கு எழுத்தும், தமிழுக்கும், சமஸ்கிருத்திற்கும் பொது ஆதலால் அதை அப்படியே தமிழில் எழுதுவது தற்சமம் ஆகும். "ஹரி" என்ற சமஸ்கிருதச்சொல்லில் உள்ள "ஹ" ஓசை தமிழுக்கு இல்லாதபடியால் தமிழில் அதை "அரி" என்று எழுதுவது தற்பவம் எனவும் உதாரணமாக கொள்ளலாம்.

தமிழில் இடம்பெறும் சகல சமஸ்கிருதச் சொற்களை கையாளும் போது சமஸ்கிருத விஷேட எழுத்துக்கள் அமைந்த சொற்களில் எந்த சமஸ்கிருத ஒலிக்கு எந்த தமிழ் ஒலி இணங்கும் என குறிப்பிட வேண்டிய தேவை இதனால் எழுந்துள்ளது. அத்தேவை நோக்கி பதவியலின் இறுதியில் வடமொழி ஆக்கம் என்ற தலைப்பில் நான்கு சூத்திரங்கள் பவணந்தி முனிவரால் வகுக்கப்பட்டிருக்கின்றன. சமஸ்கிருதத்தில் தனி எழுத்து வழக்கத்தோடு, கூட்டெழுத்து வழக்கமும் உண்டு. கூட்டெழுத்து என்பது ஒன்றுக்கு மேற்பட்ட மெய்எழுத்து ஒலிகளை ஒன்று சேர்ந்து ஒரே ஒலியாக வழங்குதல் ஆகும். அந்தக் கூட்டெழுத்துக்களையும் தமிழில் எவ்வாறு மாற்றியமைப்பது என பவணந்தியர் ஆக்கிய விதி தமிழ் வழக்கிற்கு மிகவும் உபயோகமானது ஆகும்.

"இணைந்தியல் காலை" எனத்தொடங்கும்" சூத்திரத்தில் அதற்குரிய விதிகள் அமைகின்றன. "வாக்யம்" என்ற சமஸ்கிருதச் சொல்லில் "க்ய" ஒரு கூட்டொலி. தமிழ் இலக்கணத்தின்படி "க்" க்கும், "ய" வுக்கும், மயக்கம் இல்லை. ஆதலால், அந்த "க்" கை இரட்டித்து அதற்கு ஒரு "இ"யும் சேர்த்து வாக்கியம் என எழுதலாம் என்பதாக இவ்விதி அமைகிறது. இப்படியான விதிகள் செய்யுள் நடைக்கு மட்டுமன்றி பேச்சு நடைக்கும் மிக முக்கியத்துவமானதாக அமைந்து இருப்பதைக் குறிப்பிடலாம்.

பாக்யம் - பாக்கியம்

**பக்வம்** - பக்குவம்

**பத்மம்** - பதுமம்

போல்வன காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியின் மொழி முதல் ஆகா என விலக்கப்பட்ட எழுத்துக்களும் சமஸ்கிருதத்தின் மொழி முதல் ஆக வருவதுண்டு. இவ்வாறு வரும் சமஸ்கிருதச் சொற்களை தமிழ் மொழியில் சேர்க்கும் போது தமிழ்மொழி நடைக்கு ஏற்ப எவ்வாறு அமைப்பது என விதி அமைந்துள்ளார். "ர" வில் தொடங்கும் சமஸ்கிருதச் சொல்லுக்கு சுட்டெழுத்துக்களில் எது பொருத்தமோ, அதைச் சேர்த்து அமைக்கலாம் என விளக்குகின்றார். அதன்படி ரங்கம் தமிழ் ஆகும் போது அரங்கம் எனவும், ராமன் தமிழ் ஆகும் போது இராமன் எனவும், ரோமம் தமிழாகும்போது உரோமம் எனவும் இந்த வகையிலே மற்றவற்றையும் காணலாம்.

பதவியியலில் பவணந்தியார் புகுத்திய புதுமைகளின் உச்சமாக பகுபத, பகாப்பத சொற்களின் உச்ச எல்லை கூர்ந்து நோக்கத்தக்கதாகும். பகாப்பதச் சொல்லின் உச்ச எல்லையாக ஏழு எழுத்தினையும், பகுபதச் சொல்லின் உச்ச எல்லையாக ஒன்பது எழுத்தினையும் குறிப்பிட்டு இருப்பதானது தூய தமிழ் சொற்களினை நாம் இனங்காண்பதற்கும், அவர் தமிழ் எழுத்துக்களில் செய்த ஆய்வுக்கும் ஓர் உச்ச வரம்பாகும்.

**உசாத்துணை நூல்கள்**

செந்தமிழ் இலக்கணம் பாகம் 1 - பண்டிதர் க.நாகலிங்கம்
தமிழ்மொழி இலக்கண இயல்புகள் - பேராசிரியர்.அ.சண்முகதாஸ்
நன்னூல் காண்டிகை உரை - ஆறுமுகநாவலர்
நன்னூல் விருத்தி உரை - ஆறுமுகநாவலர்

தொகுப்பு
**திரு. சு.இமயராஜ்**
ஆசிரியர்
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இணைப்பாட விதானமும் சமூகத்திற்கு தயாராதலும்

இன்று அறிவுப்பசியை தீர்க்கப் பாடசாலை வரும் மாணவர்கள், நாளை சமுதாய வாழ்க்கைக்காகத் தன்னைத் தயார்படுத்தும் இடமாகப் பாடசாலையைக் கருதவேண்டும். பாடசாலை வாழ்க்கையே மாணவனது சமுதாய வாழ்க்கைக்கான ஆரம்பக்களமாகும். பாடசாலைக் கல்வியறிவை மட்டுமல்லாது சமுதாயத்தில் வாழ்வதற்கான உடல், உள, சமூக, பண்பாட்டு ஆளுமை வளர்ச்சிகளுடன் கூடிய ஆற்றலை வளர்க்குமிடமாகும். இதனைக் கருத்தில் கொண்டே பாடசாலைகளில் இணை பாடவிதானச் செயற்பாடு களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

பாடசாலைக்கலைத்திட்டத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைத் தவிர்ந்த அனைத்துச் செயற்பாடுகளும் இணைப்பாடவிதானச் செயற்பாடு ஆகும். அதாவது பாடசாலையின் வகுப்பறைக் கல்விக்கு மேலதிகமாக உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, ஆகியவை வளர்க்கப்படக்கூடிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்வதன் மூலம் மாணவரை ஒரு முழுமனிதனாக்கும் செயற்றிட்டமே இணைப்பாடவிதானம் ஆகும். அந்த வகையில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இணைப்பாடவிதானச் செயற்பாடு களாவன விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினவிழா, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானப் போட்டிகள், கண்காட்சி, வாழ்க்கைத்திறன், நிகழ்ச்சிகள், சமயம் சார்ந்த விழாக்கள், முதன்மையான தினங்கள் (ஆசிரியர்தினம், சிறுவர்தினம், பாடசாலை தினம்) கலாசார நிகழ்வுகள் (பொங்கல், புத்தாண்டு) கல்விச் சுற்றுலா, பாடரீதியான மன்றங்கள், சுற்றாடல் கழகம் முதலான கழகங்கள், சாரணியம் பாசறை, முதலுதவிப் பாசறை, மாணவர் தலைவிகளுக்குச் சின்னஞ் சூட்டல், மாணவர்களை ஈடுபடுத்தி சிரமதானம் செய்தல், மரநடுகை, பூஞ்சோலை, மூலிகைத் தோட்டம் அமைத்தலும் பராமரித்தலும், இசை, நாடக, நடன, சித்திரப் போட்டிகள் என நூற்றுக்கு மேற்பட்ட இணைப்பாட விதானச் செயற்பாடுகள் படாசாலைகளில் இடம்பெறுகின்றன. இச் செயற்பாடுகளினை நடை முறைப்படுத்தும் போது பாடசாலையின் அமைவிடம், வளங்கள், ஆசிரியர்களது ஆர்வம், வெளிச் சமூகத்தின் எதிர்பார்ப்பும் ஒத்துழைப்பும் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆயினும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் விரும்பியோ விரும்பாமலோ கலந்து கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால் பிள்ளை தானாகவே சமுதாயத்தில் வாழத் தயாராக்கப்படுவர்.

இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் உள்ளடங்குபவை பற்றி அறிந்த நாம். இதன்மூலம் மாணவர்களிடம் வளர்க்கப்படும் பண்புகள் பற்றி பார்ப்போம். இல்ல விளையாட்டுப் போட்டி மூலம் விளையாட்டும் பிள்ளைகளிடம் நற்பண்புகளை வளர்ப்பதுடன், விட்டுக்கொடுப்பு, வெற்றி தோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்ளல், தலைமைக்குக் கட்டுப்படும் பண்பு, விதிகளைக் கடைப்பிடித்தல், சட்டதிட்டங்களை மீறாமை, உடலைக் கட்டாகப் பேணுதல், வெற்றிக்காகப் போராடும் முயற்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தல்போன்ற பண்புகள் வளர்க்கப்படுகின்றன. மேலும் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றும் போது "கிணற்றுத் தவளையாக இல்லாமல்" சமூகத்துடன் இணையச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இதனால் சுய மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பம் அதன் விளைவாக திறன்களை மேலும் வளர்க்க முடியும். அத்துடன் எதிர்காலத்தில் குற்றச்செயல்களான மதுபாவனை, கொலைமுயற்சி போன்றவற்றில் ஈடுபடாமையும் தற்கொலை போன்றவையும் தடுக்கப்படுகின்றன.

மேலும் பாடசாலைகளில் பாடரீதியாக நடைபெறும் போட்டிகளில் ஈடுபடுவதனால் மாணவர்களின் அறிவு மேம்படுவதுடன் போட்டி போட்டு செயற்படும் விதத்தை அறிந்து கொள்ளல், சமூகத்தில் பிறமாணவர்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்பு, நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளல் தோல்வியை ஏற்றுக்கொண்டு வெற்றி பெற்றவர்களைப் பாராட்டும் பண்பு என சமூகத்திற்கு தேவையான உள ரீதியான பண்புகள் வளர்க்கப்படுகின்றன.

மாணவ தலைவர் பதவி, பயிற்சிப் பாசறைகள் மூலம் தலைமைத்துவப்பண்பு வளர்க்கப்படுவது தம் வாழ்வில் ஒரு செயலை பொறுப்பெடுத்து சரியாகத் திட்டமிட்டு நடாத்துதல் அதன்போது ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்தல், எந்த விடயத்தையும் துணிந்து செய்ய முற்படல், பிறரைத்தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தல், சமூக சேவைகளில் ஈடுபடல் போன்ற பண்புகள் வளர்க்கப்படுகின்றன. மேலும் மதம் சார்ந்த விழாக்களின் மூலம் மதங்களை மதித்து நடப்பதற்கும், சமூகத்தில் இன,மத ஒற்றுமைக்கும் வழிஅமைக்கின்றது,

மேலும் கண்காட்சி, புத்தாக்கப்போட்டி, சஞ்சிகை ஆக்கம், ஒப்படைகள், வெளிக்களச் செயற்பாடு முதலான ஆக்கச் செயற்பாட்டின் மூலம் பிள்ளையின் அறிவு தூண்டப்படுவதுடன், சமூகத்தின் இன்றைய தேவைகள் எவை என உணர வாய்ப்பு எற்படுகின்றது. அத்துடன், கூட்டாகப் பிறருடன் ஒத்துழைத்துச் செயற்படும் தன்மை வளர்க்கப்படுகின்றது. இதன்மூலம் பிள்ளை சமூகத்துடன் இணைந்து செயற்படும் பண்பு வளர்க்கப்படுகின்றது. சமூகத்துடன் ஒத்துழைத்துச் செயற்படுவது, எப்படி என்பதனையும் கற்றுக் கொள்கிறது மாணவ சமூகம்.

காலை ஆராதனையும், இணைப்பாடவிதானச் செயற்பாட்டின் ஓரங்கமே. இதன் மூலம் நேரமுகாமைத்துவம், பண்பாட்டு அம்சங்கள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் விவாதப் போட்டிகள், இசை, நடனம், நாடகப் போட்டிகள் முதலான நிகழ்வுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் கூச்ச சுபாவம் அற்றுப்போவதுடன் எதிர்காலத்தில் பிறர் முன் பயமின்றி விடயங்களைப் பகிர்ந்த்து கொள்ளத் தயாராகும் தன்நம்பிக்கை, வளர்ந்து தாழ்வு மனப்பாங்கு இல்லாமல் போகின்றது. அத்துடன் களப்பயணங்கள், சுற்றுலாக்களில் பாடசாலை மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் உடலும், உள்ளமும் புத்துணர்வு பெறுவதுடன் பல்வேறு சமூகப் பண்புகள், சூழலியல் தாக்கம் பற்றி அறியமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதானச் செயற்பாட்டின் மூலம் வளர்க்கப்படும் பண்பினைத் தொகுத்துப் பார்ப்போமாயின், மாணவரின் உடலையும், உள்ளத்தையும் ஒருங்கே வளரச்செய்ய முடியும். அவர்களிடம் தன்னம்பிக்கை, சுயகௌரவம், சுயதிறன் விருத்தி யடைவதுடன் தலைமைத்துவப்பண்பும் வளர்க்கப்படுகின்றது. மேலும் பிறருக்கு உதவும் மனப்பான்மையை உருவாக்குதல் சிறந்த குணநலப்பண்பு, உயர்ந்த நோக்கங்கள் சீரிய விழுமியங்கள், குழு முயற்சி, இணைந்து செயற்படும் பண்பு வளர இணைப்பாடவிதானம் உதவுகின்றது. இதனுடன் அமைதியின்மை, மனக்குழப்பம், ஆக்கிரமிப்பு, உணர்ச்சி விரக்தி, தவறான மனநிலை போன்றவற்றை இல்லாமல் செய்து மற்றோரிடம் புரிந்துணர்வை ஏற்படுத்தும் பண்பு இதன் மூலம் வளர்க்கப்படும் மாணவர் நம்பிக்கை விசுவாசம் கொண்டோராக உருவாவதுடன் உடல், உள, சமூக, ஆன்மீக அபிவிருத்தி கொண்ட செயலூக்கமான பிள்ளையாக மாற்றப்படுவர். மேலும் நல்ல ஆளுமையாக கலையுணர்வுடைய பிள்ளையாக வளர்வதற்கும் மொழித் திறன் விருத்தி பல்வகையான பண்பாட்டுக்கோலங்களை அறிந்து மதிக்கும் பண்பு வளர்க்கப்படுவதுடன் தேசிய ஐக்கியம், தேசிய ஒருங்கிணைப்பு, நமதுசுற்றாடலைப் பேண வேண்டும் என்ற உணர்வு உணர்த்தப்படும். அத்துடன் ஆசிரியர் மாணவர் - மாணவர் மாணவரிடையே நட்புறவான தொடர்பு வளர்க்கப்படும். இவ்வாறாக இணைப்பாடவிதானம் என்னும் கலைத்திட்டம் மாணவரிடையே பல பண்புகளை வளர்ப்பதுடன் சவால்கள் நிறைந்த இவ்வுலகில் பொருத்தப்பாடுடைய பூரண ஆளுமையான பிள்ளை உருவாகும் என்பது உறுதி.

இவ்விணைப்பாடவிதானச் செயற்பாட்டினை பாடசாலையில் நடைமுறைப் படுத்துவதால் ஆசிரியர் பெறும் பயன் அதிகம் ஆசிரியர் கற்றல் - கற்பித்தலுக்கப்பால் பிள்ளைகளை இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் பிள்ளையையும் தன்னையும் மேலும் வளப்படுத்தலாம். மேலும் ஆசிரியர் மாணவர் உறவு வலுப்பெற்று விசேட ஆற்றல், திறன், மனப்பாங்கு, வளர்க்கப்படும்.

எனவே பிள்ளையின் பூரண விருத்திக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடு இன்றியமையாதது. இதன்மூலம் மாணவரின் பாடசாலை வரவில் அதிகரிப்பைக் காட்டுவதுடன் கற்றலின் சகிப்புத்தன்மை குறைகின்றது. இதனால் பிள்ளைக்கு நல்லது எது தீயது எது எனப் பாகுபடுத்தித் தெரிந்துகொள்ளும் "அறிவு" வளர்க்கப்படும் இவ்வாறே நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைப்பாடவிதானச் செயற்பாடு மாணவரின் சமுதாயத்தில் ஒப்புரவாக வாழ்ந்து வரத் தயார்ப்படுத்துகின்றது. பாடசாலை களில் கற்றல் - கற்பித்தலுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அளிப்பதன் மூலம் பிள்ளை சமூகத்துடன் சேர்ந்து வாழ்ந்து நாட்டின் நற்பிரஜை ஆவான் என்பது திண்ணம்.

**திருமதி. சு.தவயோகினி**
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம்

**(சிறுகதை)**

தவம் ரீச்சர் வாராடா" என்று சொல்லிக்கொண்டு மேசை. கதிரைகள் அத்தனையும் தாவிக்குதித்து இழுத்து போட்டு ஓடினான். சுபாஸ். அவன் சொல்லுக்கு அத்தனை மாணவர்களும் கதிரைகளை இழுத்துப்போட்டு இருந்தார்கள். நீதிமன்றங்கள் கூட தோற்றுவிடும் அளவிற்கு வகுப்பறை அமைதியானது.

தவம் ரீச்சர் என்றாலே உயர்தரம் முதல் ஆண்டு ஒன்று வரை மாணவர்கள் அத்தனை பேரும் தலைகுனிந்து நிற்பார்கள். "இங்கே வா நிரூபன் ஆர் கத்தினது" என்று கேள்வி ஒன்றை தொடுத்துக்கொண்டு தரம் ஆறுக்குள் நுழைகின்றார். தவம் ரீச்சர் பாடசாலையின் கட்டுப்பாட்டின் ஒழுங்கு முறைகளுக்கும் அடி நாதமாய் விளங்கும் இருவரில் இவர் தான் நீண்ட காலத்திற்கு உரியவர். மாணவர்களிடம் அக்கறையும், பாசமும் கொண்டவரும் இவரே. இவ்வாறு கேட்டவுடன் நிரூபனைக் குறுக்கிட்டு சத்தியசீலன் எழுந்து "சுபாஸ் தான் ரீச்சர் கத்தினான்" என்று போட்டுக் கொடுத்தான். அவ்வாறு அவன் சொல்லு வதற்கும் காரணம் உண்டு. இல்லாத பொல்லாத குழப்படியெல்லாம் செய்பவன் தான் சுபாஸ். பக்கத்திலிருப்பவர்களுக்கு அடிப்பது, நுள்ளுவது, சேட்டைப்பிடித்து இழுப்பது ஆண், பெண் வேறுபாடின்றி அனைவருடனும் அடிபடுவது, இது மட்டுமல்ல கதிரையில் இருக்கும் நட்டுக்களை எல்லாம் கழட்டி பூட்டுவான். நாரியை நிமித்தியிருப்பதாக கதிரைக் கம்பியை வளைப்பான். தனக்கு தெரிந்த விடயங்களை முன்னிறுத்த கதிரை, மேசை என்று எல்லாவற்றுக்கும் மேல் ஏறி நிற்பான். எல்லோரையும் அடக்கி தன் விடயத்தை ஒப்புவிப்பான். தான் சொல்ல அதற்கு கீழ் எல்லோரும் கட்டுப்பட வேண்டும். என்று அவர்களை சுலபமாய் கட்டியும் அடக்கி ஆழ்வான் வீதிகளில் கிடக்கும் பழைய பற்றிகள், பழைய வானொலி, விளையாட்டுத் துப்பாக்கி, பழைய இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும் கலந்து பல தொழில்நுட்ப வேலைகளும் பார்ப்பான். ஆனால், படிப்பு விடயத்தில் வாசிப்பு எழுத்து என்பது கொஞ்சம் குறைவுதான்.

கேள்விஞானமும் விளங்கும் திறனும் கடும்வேகம், ஆசிரியர்கள் அனைவருக்கும் அவனை அறியாதவர்களில்லை 6ம் ஆண்டு குழப்படிக்காரன் என்று அறிமுகப்படுத்து வார்கள். குழப்படிக்காரன் இல்லை அவன் சுட்டிப்பையன். ஏனென்றால், கற்பிக்கும் வேளை அடிக்கடி கேள்விகளைக்கொடுத்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் தலைகுனிய வைத்து சோதித்தும் பார்ப்பான். சோதனை பேப்பர்க்கு எல்லாம் எழுத்துக் கூட்டி வாசித்துப் புள்ளி போட்டால் 60,70 புள்ளிகள் தேறும்.

இவ்வாறானவன் குழப்படியில் பேச்சு வாங்கி வாங்கி பின்வாங்கிலேயே இருப்பான். ஆனால் சீருடைகள் நேரத்திற்கு வருகை எல்லாம் தரமாகத்தான் இருக்கும் தவம் ரீச்சரை பார்த்து பயந்தோடும் மாணவர்களின் நடுவில் சுபாஸ் மீது ரீச்சருக்கு சின்னபாசமும் உண்டு சுபாஸ் மட்டுமல்ல அனைத்து மாணவர்களிலும் தான் மாணவர்களுக்கு ஏதும் பிரச்சினை எனின் இரவு பகல் கருத்தில் கொள்ளாது மாணவர்களின் நலனுக்காக அக்கறையும் ஆர்வமும் கொண்ட ஒருவர்தான். தவம் ரீச்சர் சுபாஸ் மீது சின்னபாசமும் இருப்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் பாடசாலையில் என்ன வேலை நடந்தாலும் இவனின் பங்கு இருக்கும். இப்போது கூட தவம் ரீச்சர் வாறாடா என்று கூறி எச்சரிக்கை குடுத்தவனை கத்தியவன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தவம் ரீச்சருக்கு இன்று மனதில் ஓர் சந்தோசமோ என்னவோ " டேய் சுட்டி இந்த மேசை கதிரை எல்லாம் ஏறி தாவிக் குதிப்பதை எப்ப நிப்பாட்டப் போறே" எல்லாருக்கும் சொல்றன் மேசையில் ஏறுவதை கண்டால் வெய்யிலில் முட்டுக்காலில் விடுவேன் என்று சொல்லிக் கொண்டே "எல்லாரும் செய்த வீட்டுவேலையை எடுங்கோ" என்று கூறியதும் ஐந்தாறு கொப்பிகள் மிகவேகமாக மேசையை அண்மித்தது "ரீச்சர் நான்தான் முதல் வைச்சனான் கீழ் கொப்பியில் இருந்து திருத்துங்கோ" என்று மீரா சண்டைபிடித்தாள். ஏனைய மாணவர்களோடு ஒப்பிடும் போது முதல் நிலை தான் "என்ன கொஞ்சம் பேர்தானா வீட்டுவேலை செய்தது எல்லாரும் கொப்பியை எடுங்கோ" என்றதும் ஓரிருவர் கொப்பியை விரித்துப் பார்த்தார்கள் இன்னும் கொஞ்ச மாணவர்களின் முளி உருண்டது மற்றும் சிலர் புத்தகப்பையினுள் கையை விட்டு நேற்று எந்த கொப்பியில் எழுதியதென்று தேடினார்கள் இதுமட்டுமா இவர்களின் முகம் வீட்டு வேலை பயிற்சிகள் அனைத்தும் செய்து முடித்தவர்கள் மாதிரி வைத்திருந்தனர். எல்லாம் குனிந்த குனியில் இருந்தார்கள். நிமிர்ந்தால் தங்களை கூப்பிட்டுவிடுவார் என்பதற்காக தலைகள் அத்தனையும் குனிந்த குனியில் இருந்தன.

டினேஸ் கொப்பியைக்கொண்டுவா மூன்றாம் வாங்கில் இருக்கும் அனைவரும் கொப்பியைக் கொண்டு வாங்கோ! என்று கூறியதும் முகத்தில் அப்படியொரு நிலை "ஈ கூட மொய்க்கவில்லை" என்பார்கள் வகுப்பறையில் இத்தருணம் அந்த நிலைதான் உதடுகள் ஒட்டிக்கொண்டு கண்கள் கொஞ்சம் கலங்கிய படி டினேஸ் கொப்பியை ஆசிரியரிடம் கொடுத்தான். தவம் ஆசிரியர் கொப்பியைத் திறந்து "தமிழிலுள்ள மொத்த எழுத்துக்கள் **247** இதோ சுகாதாரக் கொப்பி பின்பக்கம் சங்கு கோலம், பேய்கள் மாதிரி கீறிவச்சிருக்கும் படங்கள், வா ! இங்கு என்று வயிற்றில் பிடித்து ஒரு நுள்ளுவிட்டா! நுள்ளு அவ்வளவு காரமில்லை இருப்பினும் டினேஸின் கருவிழிகள் மேகங்களைப் போல வகுப்பறை முழுதும் மோதி டினேஸின் வானத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது.

இதற்கு எல்லாம் பயப்படாத ராசா! சுபாஸ் பின்னால் இருந்து கொண்டு நீ செய்துட்டியா? எல்லாம் சரியா? என்று மேற்பார்வை செய்து கொண்டிருந்தான். தவம் ஆசிரியர் கொப்பியை மடித்து கொண்டிருந்தான் தவம் ஆசிரியர் கொப்பியை மடித்து அறிவாளி! இங்கு என்ன சாம்பாரே சமைக்க ஒரு கொப்பியில் முழுதும் எழுதி வைச்சிருக்கா என்று டினேஷ்க்கு அடி விழ வகுப்பறை சட்டென அமைதியானது.

இவ்வாறு காலங்கள் ஓடி தரம் **10** ற்கு வந்து விட்டார்கள் குரல்களில் சின்னச் சின்ன மாற்றங்கள் தடித்த மெல்லிய குரல்கள், அருப்பு மீசைகள், சுபாஸ் நெடுத்து வளர்ந்து தன் வகுப்பில் உயரங்கூடியவனாகவும் வீரமானவனாகவும் காணப்பட்டான். மாலைநேர வகுப்புக்கள், மேலதிக வகுப்புக்களுக்கு போகமாட்டான் வந்தால் பாடசாலை சென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சுபாஸில் இப்படியான ஓர் மாற்றம் 15 வயதிற்கு வந்தவுடன் எல்லோரும் எதிர்பாராத மாற்றங்கள் அமைதியான பேச்சு, வீம்புகளுக்கு போவது கொஞ்சம் கொஞ்சமா குறைந்து சுபாஸ் என்பவனின் குணம், நடத்தையில் மாற்றம் படிப்பில் மட்டும் மாற்றமில்லை சாதாரணசித்தி வீதம் தான் இவ்வாறு மாதங்கள் உருண்டோட நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள், அரசியல் யுத்தங்கள் காரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் சாவீடுகள் யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாத காலம் கிழமையில் 2 , அல்லது 3 தடவைக்கு மேல் வித்துடல்கள் பாடசாலையில் அஞ்சலிக்காகஅதற்கான கொடிக்கம்பங்கள், கொடிகள் கட்டுவதற்கு பொறுப்பு தரம் 11 ஆம் ஆண்டு சுபாஸின் வகுப்புத்தான் இவ்வாறு நடைபெறுகின்ற சம்பவங்களால் கற்றல் கற்பித்தல் என்பது இல்லாமல் போக எங்கெங்கோ கேட்ட வெடியோசைகள் எல்லாம் ஊருக்குள் வந்து கர்ச்சனை போட இடப்பெயர்வு இடம்பெறலாயிற்று.

கட்டிடங்களையும் தாவரங்களையும் ஓரிரு செல்லப்பிராணிகளையும் தவிர ஏனைய அனைத்தும் விடைபெறமுடியாமல் விழிகள் ஊர்நினைவிலும் நெஞ்சுகள் உருக கொஞ்சம் கொஞ்சமாக அசையத் தொடங்கியது. அசைந்த வழியில் ஓரிருவர் மட்டும் ஓரிருவரை சந்தித்தனர். இதற்கு சுபாஸ் குடும்பம் விதிவிலக்கல்ல. அவன் வீட்டிலும் அவன் அண்ணனை குண்டுகள் காவு கொள்ள தந்தையும் காயப்பட குடும்பத்தின் பொறுப்புக்கள் கொஞ்சம் சுபாஷின் தோளில் பொறுத்துக் கொண்டது நிவாரணம் எடுப்பது வங்கர் வெட்டுவது எல்லா வேலையும் இவன் தான் எப்போதும் பயத்துடனும் குனிந்தபடியும் காதுகள் உன்னிப்புடனும் அனைவரும் இருப்பார்கள். குண்டுகள், துப்பாக்கி ரவ்வைகள் எப்போது எங்கே எவரின் உயிரைப் பறிக்கும் என்பது தெரியவில்லை இடைவெளி இல்லாத வீடுகள் குண்டுகள் விழுவதும் எங்கோ ஓர் வீட்டின் கூரைகளில் தான் ஏனெனில் அவைகள் விழ இடைவெளி இல்லாமல் மூன்று மாவட்ட மக்கள் மூன்று ஊருக்குள் ஒடுக்கப்பட்டனர்.

சுபாஷ் 7 அடி நீள 5 அடி அகல கிடங்கு வெட்டி அதற்குள்ளே கொட்டில் அமைத்து தறப்பாள் கட்டிப்போட்டு "அம்மா இதற்குள் இருப்போம் இதற்குள் சமைத்து சாப்பிடுவம் குண்டு விழுந்தா எல்லோரும் சாவம்" என்று தாய்க்கு சொல்வான் எங்காலும் குறுக்கு மறுக்காக பாடசாலை தோழர்கள் ஒருவரைக் காணநேரும் கண்டாலும் கதைக்க நேரமில்லை உயிர் போய்விடும் இவ்வாறு யுத்தமானது உக்கிரமடைந்து இலங்கை இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வர பலமுறை எத்தணித்து வரமுடியவில்லை. ஓர் நாள் இடம் மாறி இருந்தார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் அரிசி, மா, பருப்பு, உப்பு, கொஞ்சம் சீனி இவற்றைத் தவிர வேறு இல்லை ஐந்து தேங்காயிற்காக ஒரு ஆட்டோ விலைப்பட்டியல் காலம் ஒரு தேங்காய் ஒரு TV க்கு பண்டமாற்றுக் காலம் உயிர்களுக்கே பெறுமதி இல்லாத போது மற்று அனைத்தையும் யோசிக்கவா வேண்டும்.

குண்டுகளும் துப்பாக்கி சூட்டுக்களும் அன்றிரவு மாரி மழையாக பொழிந்தது காலை உதயமாகையில் ஓரிரு துப்பாக்கி சத்தங்கள் எட்டிப்பார்க்கையில் சட்டித் தொப்பிகள் அது இலங்கை இராணுவம் 16 வருட வாழ்வில் முதன்முதலாய் காண்கிறான் சுபாஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏ.ஏ.என்ட எண்ட" என்று கூறும் ஓசை அறியாதது இருப்பினும் சைகையை வைத்து சுதாரிகரித்துக் கொண்டு எழுந்து குடும்பத்தோடு ஓடினார்கள் இராணுவத்தின் பக்கம் கடும் சமரிலே சிதறிக் கிடந்த மனித சதைத்துண்டுகள் இரத்த வெள்ளங்கள் உடற்பாகங்கள் பிணங்களைத் தாண்டி உயிர் தப்பித்தால் போதும் என்றே நரகத்தினை நேரடியாய் கடந்து தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தது போல் ஓர் மனித இனம் நந்திக்கடலுக்குள் குதிக்கின்றது. கறுப்புக்கூழ் ஊன்கள் அழுகி எலும்புகள் காலில் தட்டுப்பட்டு உடைகள் பிய்ந்து மிதக்க அவற்றோடு சில உடல்களும் மிதக்க நரகத்தை கடந்து விட்டோம் என நம்பிக்கையில் இராணுவ ஆதிக்கத்தோடு அகதிமுகாம்கள் வந்து சேர்ந்தனர். வந்தவர்களை ஆனந்தக்குமாரசாமி அருணாச்சலம் கதிர்காமம், இராமநாதன் என்றும் ஏழு வலயங்களாக பிரித்தும் அனுப்பப்பட்டனர். இவ்வாறு இருக்கையில் யாரையோ... எங்கையோ பிடித்து சொந்தக்காரர்கள் ஊடாக சுபாஸ் முகாமிற்குள் இருந்து உள்ளாலே காசு கொடுக்கப்பட்டு வெளிநாடு அனுப்பப்பட்டான்.

ஐரோப்பியா நாட்டுக்கு சென்றவன் தாய் தந்தையுடனும் தங்கை ஓரிரு நண்பர்களுடனேயே தொடர்புகளை வைத்திருந்தான். காரணம் ஒரு அறை அதில்தான் சமையல் தூக்கம் எல்லாமே இந்த ஒரு அறைதான் சொந்த ஊரின் ஏக்கம் தாண்டி வந்த தடங்கள் அனைத்தும் இதயத்தில் சிவப்பு கறைகளாகவே காணப்பட்டன. வேலை நேரத்துக்கு செல்லவேண்டும். நீண்டதூரம் புகையிரதத்தில் பயணிக்க வேண்டும். போவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் வருவதற்கு இரண்டு மணித்தியாலம் நான்கு மணித்தியாலங்கள் போக்குவரத்தில் செலவு செய்து 8 மணித்தியால வேலையோடு பன்னிரு மணித்தியாலங்கள் இது மட்டுமல்ல தனது விடுதிக்கு அருகில் 3 மணித்தியால பகுதி நேர வேலை இதனோடே தன் சிலவையும் பார்த்து வீட்டுச் செலவையும் பார்த்து ஆண்டுகள் ஓடிக் கொண்டிருந்தன.

இவ்வாறு காலம் ஓடுகையில் தான் அவனது பாடசாலைக்கு பொன்விழா என்ற நிகழ்வு நடைபெற இருப்பதை அறிந்தான். அப்பொழுது அவன் நினைவில் பாடசாலை முற்று முழுதான விம்பம் வராமல் இருப்பினும் தவம் ஆசிரியரின் அன்பு கலந்த முகம் பளிச்சென்று ஞாபகம் வந்தது. இதனையிட Viber குழுவில் பாடசாலை வேலைத் திட்டங்கள் பற்றியும் ஓரிரு தாவரங்களின் இருப்பையும் கொண்டு படங்களினை வைத்து பாடசாலை திசையை அறிந்து கொண்டான் பாடசாலைக்கு விழா உதவிகளையும் செய்வித்தான்.

பாடசாலை மாதாவிற்கு பொன்விழா பட்டாபிஷேகம் ஓங்கி ஒலித்த இரைச்சலின் நடுவில் பழைய மாணவன் எனும் பெயரில் பெரியதோர் உருவம் கூட்டத்தோடு நுழைகின்றது. உருவம் மட்டும்தான் நினைவு உலகம் அற்று 15 வயது என்ற எண்ணத்துடன் தொடர்பில் இருந்த நண்பர்களுடன் அறிமுகத்தோடு உள்நுழைந்த உருவம், நான் தான் சுபாஷ் என்பதை எல்லோரும் அறியும்படியாக கத்த எண்ணியது. ஓரிரு ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தினான் மற்றைய ஆசிரியர்கள் புதியவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள் அவன் அவர்கள் முன் பழைய மாணவனாகவும், கற்பித்த ஆசிரியர்களுக்கு மாணவனாகவும் தெரிந்தான்.

அவன் விழிகள் இன்னும் ஓர் உருவத்தை மட்டும் தேடிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நிகழ்வுகளும் நகரும் பொழுது ஒவ்வொரு திசையாய் திரும்பிய அவனது விழிகள் மேடையில் நடைபெறும் நிகழ்வுகளை சுவீகரிக்க மறந்து ஏதோ ஒன்றை இழந்தவன் போல சுற்றுமுற்றும் தேடிக்கொண்டே இருந்தான். அவனின் எண்ணம் அவன் வழைத்துப் போட்டு இருந்த கதிரைகள், மேசைகள், வகுப்பறை கற்பித்த ஆசிரியர்கள் என மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

சுபாஷ் இருக்கும் இடத்திலிருந்து பின்னால் ஓர் பரீட்சயமான முகம் ஒரு குழந்தையுடன் சிவப்பு பொட்டும் ஒற்றைப்பின்னலுடனும் சாறியுடனும் ஒரு பெண் இவள் தன்னோடு படித்த நிரோஜா என அறிந்து கொண்டு ஒரு (Hi) சொன்னான் அவளிடம் இருந்து எந்த பதிலும் இல்லை தன்னை மறந்திருப்பாள் என உணர்ந்து கொண்டவன் இவ்வாறு இருக்கையில் பொன்விழா மலர் வெளியீடு நடைபெற அறிவிக்கப்பட்டது, பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள் என அனைவருக்கும் வழங்கி வெளியிட்ட பின் பாடசாலைக் குழுவினால் குறிப்பிட்ட இடத்தில் குறித்த விலையில் நூல்கள் தொடுக்கப்பட்டன. பல பேர் வேண்டப்போட்டி போட்டு கடும் நெருக்கடிக்குள் மலரை வேண்டி விரித்துக்கொண்டு நடந்து நடந்து படித்து கொண்டே இருக்கையில் அமர்ந்தான். பாடசாலை எனும் உலகத்தை தனக்குள்ளே கைக் கொண்ட உணர்வுடன் தட்டிக்கொண்டிருந்தான். இடையிடையே முன்னை நாள் அதிபர்கள் ஆசிரியர்கள் சாதனையாளர்கள் என்ற புகைப்படங்களும் வந்து கொண்டிருந்தன.

இடைவெளியில் ஒரு பக்கம் ...... காதடைத்துப் போனது ஒலி பெருக்கியில் எழுகின்ற அறிவுறுத்தல்கள் எதுவுமே கேட்கவில்லை. அவனைப் பொறுத்தவரையில் தான் மட்டுமே அங்கிருப்பதாக உணர்ந்தான் தொண்டைக்குள் ஏதோ ஓர் கட்டி பொறுத்துக் கொண்டது போலும் கண்கள் கொஞ்சம் ஈரமாகவும் சிவப்பாகவும் மாறியது பாடசாலையில் இருந்து தூக்கி எறியப்பட்டவன் போல் எண்ணம் அவனின் தேடல் கற்பனை நிஜங்கள் அனைத்திற்கும் விடை கிடைத்தது,

"என்ன சுபாஸ் எப்படி சுகம்" என்று விசாரிப்பார் என எதிர்பார்த்திருந்த தவம் ஆசிரியரின் விம்பம் கறுப்பு வெள்ளைப் போட்டோவாக அமரத்துவம் அடைந்த ஆசிரியர்கள் எனும் தலையங்கத்தோடு பொன்விழா மலரில்..

**ஆக்கம் திரு. பா.செந்துஜன்**
ஆசிரியர்
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை அன்பு

மானிடத்தில் என்றும், எங்கும் எப்போதும் இருக்க வேண்டியது இறை அன்பு

மண்ணுலகில் எப்போதும் இருக்க வேண்டியது இறை அன்பு.

வார்த்தையில் உண்மையாக இருப்பது இறை அன்பு.

என்றும் தன்னலம் இல்லாதது இறை அன்பு

எதையும் எதிர்பார்க்காது உதவுவது இறை அன்பு

என்றுமே குடும்பத்திற்காக உழைப்பது இறை அன்பு.

எதற்காகவும் விட்டுக்கொடுப்பது உண்மையான இறை அன்பு.

ஒருவரை ஒருவர் மதித்து ஏற்றுக்கொள்வது இறை அன்பு

கள்ளம், கபடம் இல்லாதது இறை அன்பு

கறுப்பு, வெள்ளை பார்க்காதது இறை அன்பு,

காசுக்கு விலை போகாதது இறை அன்பு

பிறர் வாழ்வதற்காக தம் வாழ்வைக் கொடுப்பது இறை அன்பு

பிறர் சுமைகளை சுகங்களாக நினைத்து வாழ்வது இறை அன்பு

உயிர்கள் மட்டில் என்றுமே அன்பு கூர்வது இறை அன்பு.

அனைவரும் சகோதரராய் நினைத்து வாழ்வது இறைஅன்பு

விண்ணுலகில் என்றுமே கிடைக்க வேண்டுவது இறை அன்பு.

மொத்தத்தில் என்றுமே மனித குலத்தில் இருக்க வேண்டியது இறை அன்பு.

**செல்வி. அ.கரோலின்**
ஆசிரியர்
கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் வெற்றிபெற சதுரங்க வீரர்களாகுவோம்

64 பெட்டிக்குள் 32 காய்களை வைத்தே ஒரு குருஸேந்திரப் போரை நடத்தி முடித்து விடலாம் அப்பப்பா.. எத்தனை வித எத்தனை ரக விளையாட்டுக்கள் இதனைப்பற்றி கூறத் தொடங்கினால் ஆயுள் முடிந்து விடும் இருந்தும் ஓரிரு வார்த்தைகள் நம் மாணவ செல்வங்களை சாதனை வீரர்களாக மாற்றுவதற்காய்..

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தோற்றம் பெற்றதாகக் கருதப் பட்டும் சதுரங்கமானது ஓர் விளையாட்டாக, கலையாக, அறிவியலாக நோக்கப்படு கின்றது. மூளைப்பலத்தை மட்டும் நம்பி களம் இறங்குவதால் இது புத்திஜீவிகள் விளையாட்டாகக் கருதப்படுகிறது. இதனால் சதுரங்க வீரர்களை சமூகம் புத்திஜீவிகளாக நோக்குகின்றது எனவே அவர்களின் நன்மதிப்பு அதிகரிக்கின்றது. அரசர்கள் விளையாட்டு என வர்ணிக்கப்படும் சதுரங்கம் இருவர் விளையாடும் ஓர் பலகை விளையாட்டாகும் இது மன்னர்களிடையே நடைபெறும் ஒரு யுத்தமாகும் இங்கு தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாற்படை என நான்கு சேனைகள் உண்டு ஒவ்வொருபடையும் எவ்வாறு நகரவேண்டும் என்று தனித்தனிக் கட்டளைகள் உண்டு இந் நான்கு படைகளையும் வைத்து, அரசர்கள் பரம்பரையாக ஆடி மகிழ்ந்த காலம் மாறி இன்று அறிவுள்ள ஆழ்ந்து சிந்திக்க விரும்புகின்ற அனைவராலும் விரும்பி விளையா டப்படும் விளையாட்டாக மாறியுள்ளது.

சதுரங்கமானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள தாகும் மனதை மகிழ்விக்கும் ஓர் விளையாட்டாக மட்டுமன்றி தன்னம்பிக்கை ஞாபகசக்தி கவனிக்கும் ஆற்றல், விரைவு, துல்லியம், ஆக்கத்திறன், புத்துணர்வு, ஒருமுகப்படுத்தல், மூளைவிருத்தி போட்டி, மிகுந்த போராட்ட உணர்வு உருவாக்குதல், ஆராயும் திறன், அமைதியடையும் திறன் கற்பனைத்திறன் நேர்மைத்திறன் நீதிநியாயத்தை சமமாக வழங்கும் பண்பு மற்றும் வெற்றி தோல்வியை சமமாக மதிக்கும் பண்பு என்பவற்றை வளர்க்க உதவுகிறது. இங்கு சூதுவாதுக்கோ குருட்டு அதிஸ்டத்துக்கோ இடமில்லை. இவ்வாறு வளர்க்கப்படும் திறன்கள் நாட்டின் சிறந்த பிரஜைகளாக திகழ வழிவகுக்கின்றது. அதாவது சிந்திக்கும் ஆற்றல் வளர்வதால் வினாக்களை இலகுவாக தீர்த்து விரைவாக செய்து முடிப்பதற்கும் இவ்விளையாட்டு அடித்தளமாக அமைகின்றது. சதுரங்க விளையாட்டின்போது மனம் எவ்வாறு ஒருமைபட்டு சிந்தனை முழுவதும் அதில் ஈடுபடுவது போல் கல்வி கற்கும் போது இப்பயிற்சி கைகொடுக்கின்றது அது மட்டுமன்றி இன்றைய நவீன உலகத்தில் தீர்மானமெடுக்கும் திறன் என்பது இளம் சந்ததியினர் மத்தியில் நலிவடைந்து வருகின்றது. எந்தக்காரியத்தையும் சுயமாக திடீரென தீர்மானித்துப் பணிபுரியும் சக்தியைப் பெருக்க வேண்டுமெனின் சதுரங்க விளையாட்டை ஓர் ஊன்று கோலாக எடுக்க வோண்டும் மற்றும் ஓர் சதுரங்க வீரன் எதிராளியை வீழ்த்துவதற்கு பலவகைச் சிந்தனை செய்து திட்டங்கள் பலவற்றை வகிக்கின்றான். இதன் போது அவனது முடிவெடுக்கும் திறனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது இறுதி தீர்வை தீர்மானிக்கும் பிரதான சக்தியாக விளங்குகின்றது. ஒரு நகர்வை தவறாக செய்தால் கூட, அவன் வெல்ல வேண்டிய விளையாட்டை வெல்லமுடியாது, தோல்வியைத் தழுவ நேரிடலாம். வாழ்க்கையில் நாம் விடும் சிறு தவறுகூட எம்மை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லலாம் என்பதனை இவ்விளையாட்டு எமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது. எனவே, இது விளையாட்டோடு முடிந்து விடாது வாழ்க்கையோடு ஒன்றிக்கின்றது. அதைவிட, வேறெந்த விளையாட்டுக்குமில்லாத தனிச்சிறப்புக்கள் சதுரங்கத்திற்கு உண்டு. சுயாற்றலைப் பெறுவதற்கு சுயவிசாரணை முக்கியமாகும். ஒவ்வொரு விளையாட்டு வீரனும், சுயவிசாரணை செய்து சுயமாக தன் தவறுகளை உணர்ந்து அவற்றைத் தவிர்த்து முன்னேற்றக்கூடிய தனிச்சிறப்பு உண்டு. இதைவிட நவீன இலத்திரனியல் சாதனங்களூடாக தேவையற்ற விளையாட்டில் ஈடுபட்டு தமது வாழ்வை சிதைக்கும் குழந்தைகளை இவ்விளையாட்டில் ஈடுபடப் பெற்றோர்கள் வழிநடத்து வார்களாயின் அவர்களின் கல்வி கற்கும் ஆற்றல் விருத்தியடையும்.

இவ்விளையாட்டானது மாணவப்பருவத்தில் மட்டுமல்லாது சமூதாயத்துக்குள் நுழையும் போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சவால்களை ஏற்று சுயமாக திட்டமிட்டு காய் நகர்த்தல்களை மேற்கொள்ள பெரிதும் உதவுகின்றது. இவ்வாறு இதன் பயன்கள் எண்ணிலடங்காதவை. எனவே, அனைவரும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சுயகட்டுப்பாடுகள், தங்களை தாங்களே வழிநடத்தும் ஆற்றல் உள்ளவர்களாக மாறுங்கள். இனியும் புத்தகப்பூச்சிகளாக நின்றுவிடாது சிறந்த செயற்பாடு மிக்கவர்களாக உருவாகுங்கள். இவ்வாறான நன்மைகளை ஓர் உன்னதமான விளையாட்டின் மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருந்தும், இனியும் அதனைத் தவறவிடுவதா? மாண வர்களே சிந்தியுங்கள். நீங்களும் சதுரங்க வீரர்களாகி வாழ்க்கையை சாதனைப்பாதைக்கு இட்டுச் செல்லுங்கள்.

**செல்வி. தி.லோஜினி**
ஆசிரியர் - கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்
சதுரங்க பயிற்றுவிப்பாளர்
யாழ் பல்கலைக்கழகம் (கிளிநொச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் ஒன்று ஆசிரியர்களும் மாணவர்களும்



## தரம் இரண்டு ஆசிரியர்களும் மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் மூன்று ஆசிரியர்களும் மாணவர்களும்



## அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் நான்கு மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் ஐந்து மாணவர்களும்



அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் ஆறு மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் ஏழு (A) மாணவர்களும்



அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் ஏழு (B) மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் எட்டு மாணவர்களும்



## அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் ஒன்பது மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் பத்து மாணவர்களும்



அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் பதினொன்று மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் (12) மாணவர்களும்



அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் தரம் (13) மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் விசேட கல்வி மாணவர்களும்



அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களும் 13 வருட உத்தரவாதக் கல்வி மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய விழிவெள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

ஈழத்திருநாடு பெற்றெடுத்த பேரறிஞர்கள் பலர். அவர்களுள் தமிழுலகு போற்றும், பெருமைக்குரியவராய் திகழ்ந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சுவாமி விபுலானந்தர். அவர் தனது வாழ்நாள் முழுவதும் துறவறத்தில் நின்று தமிழ்வளர தவம் புரிந்த பெருந்தகை. தமிழின் பெருமையை, தமிழிசையின் பெருமையை, யாழ் எனும் பழந்தமிழ் இசைக் கருவியின் பெருமையை உலகு அறியச் செய்தவர்.

மீன்பாடும் தேன் நாடாமென்று போற்றப்படும் மட்டக்களப்பு எனும் பிரதேசத்தில் காரைதீவு எனும் ஊரில் சாமித்தம்பிக்கும், கண்ணம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக **1892**ம் ஆண்டு பங்குனி மாதம் **27**ம் திகதி இவர் பிறந்தார். இவரது இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். மயில்வாகனன் இளமையில் கல்வியார்வம் மிக்கவராக விளங்கினார். தமிழ், ஆங்கிலம், ஆரியம் ஆகிய மும்மொழிகளிலும் புலமையும் இலத்தீன், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் அறிவும் பெற்றவர். மயில்வாகனன் அவர்கள் விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரியாகவும், பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும் விளங்கினார். இவர் மதுரைத் தமிழ் சங்கத்தின் பண்டிதர் பட்டத்தை பெற்றார்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்து கல்லூரியில் அதிபராகவும் பணியாற்றினார். இராம கிருஸ்ண சங்க மடத்தை சார்ந்து தனது முப்பதாவது வயதில் பூரண துறவியானார். இதன் பின்னர் மயில்வாகனன் எனும் பெயரை துறந்து பிரபோதசைதன்யர் எனும் திருநாமத்தை பெற்றார். பின்னர் தனது முப்பத்திரெண்டாவது வயதில் குருப்பட்டம் பெற்று சுவாமி விபுலானந்தர் எனும் பெயரை பெற்றார்.

இவர் எழுதிய நூல்கள் பல அவற்றுள் யாழ்நூல், நாச்சியார், நான்மணிக்கோவை போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றுள் யாழ்நூலானது சிறந்த நூலாக விளங்குகின்றது. பழந்தமிழ் இசை மரபிற்கு புத்துயிர் அளிக்கும் உயரிய நூலாக விளங்குகின்றது. இது மட்டுமல்லாமல் இவர் கருமயோகம், ஞானயோகம், விவேகானந்தர் ஞானதீபம், விவேகானந்தர் சம்பாஷனைகள் போன்ற நூல்களை மொழிபெயர்த்துள்ளார். கலைமகள், செந்தமிழ்ச் செல்வி ஆகிய சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார்.

மேலும், சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் கலைச் சொல்லாக்க குழுவின் தலைவராகவும் பணியாற்றினார். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழ் மொழியில் பெயர்த்திட உதவும் கலைச்சொற்களை ஆக்கும் பணியிலும் அடிகளார் சேர்த்துழைத்தமை அவரது மொழிப் பணியினை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. "ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று", கங்கையில் விடுத்த ஓலை" ஆகியன அடிகளாரின் கவித்துவ ஆற்றல்களுக்கு சிறந்த சான்றுகளாகும். இவை மட்டுமன்றி நாடகத் துறையிலும் அடிகளார் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். மதங்க சூளாமணி போன்ற நூல்களை எழுதி நாடகத் தமிழுக்கு தொண்டாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய சுவாமி விபுலானந்தரை, முத்தமிழ் அறிஞர் என்று உலகு போற்றுகின்றது. ஈழம் தொட்டு இமயம் வரை புகழ் பரப்பிய இப் பேரறிஞரை நினைவுகூர்ந்து ஊர் முழுவதும் விழா எடுத்து போற்றுகின்றனர். இவர் 1947ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

“ஆங்கிலத்துக் கவிதை பற்பல
அருமையாகத் தமிழ் செய்து தந்தனர்
நாங்கள் மெண்டு பருகி மகிழவும்
நன்று நன்றென உண்டு புகழவும்
தீங் கனிச்சுவை கொண்டவை தானுமே
தீட்டினான் தெய்வ யாழினை ஆய்ந்ததால்
ஓங்கி னானின் உயர்வைப் பகருவோம்!
உண்மையோடவன் நூலும் பயிலுவோம்”

**செல்வன். விஷயமனோகரன் கிருஜன்**
தரம் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் கல்வி

"அனைவருக்கும் கல்வி" என்ற கோஷம் இன்று உலக நாடுகள் எங்கும் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. அரசுகளின் இன்றியமையாக் கடமைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தனது வருமானத்தின் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவிடுகிறது. ஆனால், இதன் பயன்பாடு பூரணத்துவமுள்ளதாக அமைகின்றதா? என்பது சிந்தனைக்குரியதாகவே விளங்குகின்றது.

மனித சமுதாயம் பலவகையான மக்கட் கூட்டத்தைக் கொண்டுள்ளது. படித்தவர், பாமரர், செல்வர்கள், ஏழைகள், நல்லவர்கள், தீயவர்கள் எனப் பல்வேறு பாகுபாடுகள் நிலவுகின்றன. சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருக்க வேண்டுமா? இவை அவசியந்தானா? என்றால் இல்லையென்றே கூறுவர். எனவே, இதுபற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும். மனிதனுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் உள்ள வேறுபாடு பகுத்தறிவு என்பதாகும். பகுத்தறிவே மனிதனை உன்னத நிலைக்கு இன்றுவரை உயர்த்தி வைத்துள்ளது. இதன் மூலமே மனிதன் மொழிகளை உருவாக்கவும், விஞ்ஞான ரீதியில் புதியன பலவற்றை உருவாக்கவும், புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்கவும் முடிகிறது. காலந்தோறும் தாம் கண்டறிந்த உண்மைகளைத் தத்தம் மொழிகளில் பதிந்து வைத்தும் பயன்படுத்தியும் முன்னேற்றம் கண்டுள்ளனர். தாம் அடைந்த முன்னேற்றத்தை நிலைநாட்டவும், தத்தமக்கேற்ற வழிகளில் பயன்படுத்தவும் கல்வியே, மனித சமுதாயத்தில் நிலவும் ஏற்ற தாழ்வுகளைப் போக்கி எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் சமத்துவமாகச் சகலரும் வாழ்வதற்குரிய வழியினைக் காட்டவல்லது. கல்வி ஒன்றாகும். எல்லோரும் சமத்துவமாக எல்லாம் பெற்று வாழ வேண்டுமாயின் அனைவருக்கும் உகந்த கல்வி அளிக்கப்படுதல் அவசியமாகும்.

நாம் வாழும் சமுதாயத்தை ஒரு உடலாக உருவகிப்போமாயின் அந்த உடலில் உள்ள எந்த உறுப்பையும் நாம் ஏற்றது அல்ல என ஒதுக்கி விடமுடியாது. ஓர் உறுப்புக்கு ஊறு நேர்ந்தால் அது உயிரின் இயக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்திவிடும். இதேபோன்று தான் கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் உயிர் மூச்சாயமைந்துள்ளது. சமுதாய உறுப்புகள் யாவிலும் கல்வி தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அதற்குப் பங்கம் விளைந்தால் சமுதாயமே பெரிதும் பாதிப்புறும்.

கல்வி என்பது நமது கண்போன்றது. கல்விக்கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவோம். எனவே அனைவருக்கும் கல்வி அளிப்பதன் மூலமே சமுதாயம் ஒளிபடைத்த சமுதாயமாகத் திகழமுடியும்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்" என்பது வள்ளுவர் வாக்கு, மனிதன் விலங்காக வாழக்கூடாது. அவன் மனிதனாக, மனிதப் பண்புள்ளவனாக வாழவேண்டும். அதற்குக் கல்வியே அச்சாணி. ஒரு சமுதாயத்தில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியினர் கல்வியறிவு படைத்த மனிதராகவும் மற்றப் பகுதியினர் கல்வியறிவில்லாத மக்களாகவும் வாழ நேர்ந்தால் அந்தச் சமுதாயம் சீர்பெற முடியாது, முழுச் சமுதாயத் திற்குமே அது பெரும் இழுக்காகும்.

இவ்வுண்மையை நன்குணர்ந்தமையாற்றான் ஒவ்வோர் நாட்டரசும் தனது குடிமக்களுக்குக் கல்வியளிப்பதைப்பெரும் கடனாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட வயது வரை கட்டாயக்கல்வி புகட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அரசு அளிக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தாது சிலர் வறுமை, அறியாமை, அலட்சியம் காரணமாகத் தங்கள் பிள்ளைகளின் கல்வியிற் கவனம் செலுத்தாது விடுகின்றனர். இதனால் வருங்காலப் பிரசைகளான மாணவர்கள் பலர் கல்வி பெறும் வாய்ப்பினை இழந்து விடுகின்றனர். வீட்டு வேலைகளுக்கும் வியாபார நிலையங்களுக்கும், கடல்த்தொழில்களுக்கும் செல்லும் மாணவர்கள் கல்வியின் அருமையை அறியாது பின்னாளில் இரங்க வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர். பெற்றோர்களின் தவறு குறித்து வருந்துகின்றனர். படிக்கும் காலம் பொற்காலம் என்பர். அக்காலத்தை இழந்து விடும்மாணவர்கள் கல்விக் கண்ணை இழந்தவர்களாகின்றனர். இது பெரும் கொடுமை. இக்கொடுமை ஒழிய வேண்டுமாயின் அனைவருக்கும் கல்வி புகட்டப்பட வேண்டும்.

"எளிமையினால் ஒரு தமிழன் கல்வி இல்லையென்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்" என்றார் பாவேந்தர் பாரதிதாசனார். இதற்கமைய எல்லோருக்கும் கல்வி புகட்ட ஏற்றன யாவும் செய்யப்பட வேண்டும். "அனைவருக்கும் கல்வி" என்றால் குடிமக்கள் அனைவருக்கும் எழுத வாசிக்கத் தெரிந்தாற் போதும் என நாம் கருதி விடக்கூடாது. ஒருவன் தான் பெற்றுக்கொண்ட கல்வியால் தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படும் அளவிற்கு அவனது கல்வி அமைதல் வேண்டும். எல்லோரும் பொறியியலாளர்களாகவோ, பேராசிரியர்களாகவோ, மருத்துவர்களாகவோ ஆகி விட வேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறு. அவரவர் தம் ஆற்றலுக்கேற்பத் தொற்றுறைக் கல்வியையோ, தொழில்நுட்பக் கல்வியையோ, நுண்கலைக்கல்வியையோ பெறும் வாய்ப்பினை நல்கிட வேண்டும். அத்தகைய வாய்ப்பும் வசதியும் கிட்டும் போதுதான் "அனைவருக்கும் கல்வி" என்ற சொற்றொடர் பொருளுடையதாக அமையும்.

இன்று இத்தகைய பொருளுடையதான கல்வியைப் பெறுதற்குப் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன. இன, மத,சாதி வேறுபாடுகள் குறுக்கிடுகின்றன. கிராமப்புற மாணவர்க்கும், நகர்ப்புற மாணவர்களுக்குமிடையே கல்வி வசதிகளை அளிப்பதில் பாகுபாடுகள் காணப்படுகின்றன. பணம் படைத்தோர் பிள்ளைகள் அனுபவிக்கும் வாய்ப்பு வசதிகள், ஏழை மாணவர்களுக்கு எட்டுவதாயில்லை.

இந்நிலை மாற வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் எல்லா வசதிகளும் கிட்ட வேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலையிற்றான் அனைவருக்கும் கல்வி என்ற சொற்றொடர் அர்த்தமுள்ளதாக அமையும் என்பது உறுதி.

**செல்வி. ச.நிதர்சனா**
9B
கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My School

The name of my school is Kn/Kanagapuram Maha Vidyalayam. It is situated in Kilinochchi district. It was started in the year 1969. Mr.Srikanda is the founder of the school. Mr.Ponnaiya is the first Principal of our school. When this institution started there were only two teachers and five students. But there are forty five teachers and five hundred students now. There weren't any facilities for learning but we have good library, Science lab, computer room, mathsroom with many equipment now. The name of our principal is Mrs.R.Ravindranathan. She is very kind and strict. We are proud of our school.

**G.Kayalarasi**
Grade - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அழகே தனி அழகு

இன்றைய உலகில் அனைத்து இனத்தவர்களாலும் மதிக்கப்படுவதும் எல்லா அழகுகளையும் விட தனக்கே ஒரு தனி சிறப்பினை பெற்று விளங்குவதும் கல்வியே ஆகும். மனிதர்கள் எல்லோருக்கும் இரண்டு கண்கள் உள்ளன. அக் கண்களால் குறிப்பிட்ட தூரத்தை மட்டும் தான் பார்க்க முடியும். ஆனால் கல்வி என்ற கண்ணால் உலகெங்கும் நடப்பவற்றை அறியக் கூடியதாய் இருக்கின்றது. இதனையே வள்ளுவர்.

"கண்ணுடையார் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்"
என்று கூறுகிறார்.

செல்வமானது நிலையற்றது, அழிந்து விடக் கூடியது, கள்வர்களாலும், திருடர்களாலும் திருடக்கூடியது. ஆனால், கல்வியை எவராலும் திருட முடியாது. கொடுக்கக் கொடுக்க கூடுமே ஒழியக் குறையாது. அதனால் கல்வி அழகே சிறந்த அழகாகக் கருதப்படுகிறது. இதனை நாலடியார் "குஞ்சியழகும் கொடுத்தானைக் ..... கல்வி அழகே அழகு" என்று கூறுகிறது. இதனை வள்ளுவர்

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு மாடல்ல மற்றையவை"
என்று கூறுகிறார்.

கல்வியை நாள்தோறும் கற்க வேண்டும். சிலர் சில வேளைகளில் தான் ஆர்வத்துடன் படிப்பார்கள். ஏனைய நாட்களில் சோம்பலுடன் வேறு வேலைகளில் ஈடுபடுவார்கள். அவர்கள் கல்வி அறிவை முழுமையாகப் பெறமுடியாது. மணலான இடத்தில் கிணறு ஒன்றைத்தோண்டும் போது எவ்வளவு ஆழமாக தோண்டுகின்றோமோ, அதற்கு ஏற்பவே நல்ல நீர் ஊறிக் கொண்டே இருக்கும். அதைப் போன்றே நல்ல நூல்களை ஆர்வத்துடன் தேடிப் படிக்கும் போது, அறிவு வளர்ந்து கொண்டே இருக்கும். இளமையில் கற்பதோடு மட்டும் நின்று விடாது, ஒருவர் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டு இருப்பது சிறப்பானது, என்பதனை "பாடை ஏறினும், ஏடது கைவிடேல்" என்ற கூற்று உணர்த்துகின்றது.

"அரசனுக்கு தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு ஆனால் கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" கற்றோர்க்கு எந்த நாடும் சொந்த நாடாகும். எந்த ஊரும் சொந்த ஊராகும். அத்தகைய கல்வி அழகே சிறப்பு வாய்ந்தது. கல்வி என்பது நிலையான சொத்து அதனால் தான் கல்வியை எவ்வளவு வறுமை வந்தாலும் கற்க வேண்டும். அதனால் தான் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று ஆன்றோர் குறிப்பிட்டு இருப்பது சிறப்பானதாகும். ஒருவர் தனது மேனியை எவ்வளவு தான் மஞ்சள் பூசி அலங்கரித்தாலும் அது அழகாக இருக்காது. ஆனால், கல்வியே ஒருவனுக்கு நிறைந்த அறிவைத்தரும். எனவே, கல்வி என்னும் அழகை அலங்காரம் செய்து வெற்றி பெறுவோம்.

**செல்வன். ச. சாதூரியன்**
தரம் 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Untiring efforts of our teachers..

I mostly admire the teachers of my school. Teaching profession is fundamental to the development of any society. In this modern world education has become the key instrument of globalization. Our school was established for a noble purpose. They prepare us to ameliorate the society. Our teachers lead us in a proper way. They not only give us education but also good discipline. Our teachers approach towards the students is very admirable. They pay more attention in their teaching methods. We learn a wide spread knowledge from them. It is no exaggeration that our school produces good citizens to our country. This is done by the tireless and dedicated efforts of our teachers. Therefore their efforts are highly commendable.

**Master. V. Kaviyarasan**
**Grade - 7A**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது யுகம் படைப்போம்

உலகமயம் பெற்றெடுத்த
புதிய யுகத்தை
யாரும் கண்டதுண்டோ?
கைரேகைக்குள் சுருங்கி வந்த உலகம்
கண்ணிற்குள் நுழைந்து விட்டது.

கண்ணிக்குள்ளே கண்
மூடித்தனமான சூதாட்டம்
மனிதனைக்
கட்டிப் போடும் வலையாட்டம்
இதில் தான் நிதமும்
எங்கள் போராட்டம்
மனித வாழ்கையே
இதனால்த்தான் இன்று திண்டாட்டம்
பில்கேட்ஸ்க்கு ஒரே கொண்டாட்டம்

முகப்புத்தகத்துள்
தேடுகின்றான் புதுமுகம்
அதில் காணாத பலமுகம்
ஒரு முகத்தை கண்டு விட்டால்
மறு முகத்தை
திரையில் மறைக்கின்றான்
ஆனால், முகப்புத்தகத்தை வரைந்தான் தன்
முகவரியை
இட மறந்து விட்டான்.

திரையில் காணாத முகத்தை எண்ணி
மனக் கோலம் போடும்
இச் சிறுமுகம் என்று துளிர் விட்டு எழும்
இப் புதுயுகம்..

இன்று யுகமாற்றத்தை கண்ட இவ்
உலகம்
இன்று கணணி யுகத்தை
தினமும் மெச்சுகின்றது
இருட்டுக்குள்ளே
இருட்டுத் தவம் செய்தவர்கள்
கணினிக்குள் இன்று முரட்டுதனம்
செய்கின்றார்கள்
இதுதான் புதுயுகமா?

ஒன்று சொல்கின்றேன்
கேட்டுக் கொள்ளுங்கள்
இயற்கை அன்னை படைத்துத்
தந்த உலகத்தில்
மனிதன் இலத்திரனியலுக்கு
உயிர் கொடுத்தான்
உயிர்த்தெழுந்த இவ் இலத்திரனியல்
வெகு சீக்கிரத்தில்
இவ் உலகை அழிக்கும்
இது தான் தற்போதைய புதுயுகம்
நாம் என்றும் காண்போம்
கல்வி யுகம்

**செல்வி. ஜெ.பத்மலோஜினி**
தரம் -07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை நேசிப்போம்

இயற்கை எனும் பொக்கிசம் கிடைத்ததற்கரியது. பேணிப்பாதுகாத்து பயன்கொள்ளப்பட வேண்டியது. பல்வகைமையை சமத்துவம் செய்வது. காலநிலை மாற்றங்களை பேரம் பேசுவது. இதன் வழி "பூகோள வெப்பமாதல்" எனும் கருவி கொண்டு தென் துருவமோ அல்லது வடதுருவமோ, ஆசியாவோ, ஐரோப்பாவோ நாம் எங்கு வாழ்ந்தாலும் பாரபட்சமின்றி இயற்கை நம்மை ஆட்கொண்டு வழி நடத்துகிறது. பூகோள வெப்பமாதலைத் தொடர்ந்து அதன் பின் விளைவுகள் எனப் பின் தொடர்கின்ற வரட்சி, நன்னீர் பற்றாக்குறை, கடல் மட்ட உயர்வு, வெள்ளப்பெருக்கு போன்ற சூழல் சமனிலையை சீர்குலைக்கும் அழிவுக்காரணிகளும் எம்மைத் தாக்கக் காத்திருக்கின்றன்.

இங்கு சுட்டெரிக்கும் சூரிய வெப்பத்தில் எத்தனை அவலம்..? உடலியல் இயங்கு நிலையில் எத்தனை தேக்கம்...? இதன் தாக்கத்தில் இருந்து முழுமையான விடுதலை காண்பதற்கு எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புவியில் காணப்படும் மூலவளங்களில் புதுப்பிக்கக் கூடியதும், மீள் உருவாக்கம் செய்யக்கூடியது மான இயற்கை வளமாக காட்டுவளம் காணப்படுகின்றது, காடுகள், மண்வளத்தை பாதுகாத்தல், மேற்பரப்பு நீரை சேமித்தல், கால நிலைகளில் முக்கிய பயன்படுகருவியாக விளங்குகின்றன.

மேலும், காடுகள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன.

- விவசாயத்தைப் பாதுகாக்கின்றன.
- வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துகின்றன.
- சிறந்த நீரினை வழங்குகின்றன.
- கவர்ச்சியான சூழலை அளிக்கின்றன.
- சூழல் மாசுறுதலைத் தடுக்கின்றன.
- காடுகள் பச்சைவீட்டு வாயுக்களின் தாக்கத்தை தடுக்கின்றன.
- உலக வெப்பமடைதலைத் தடுக்கின்றன.

இவ்வாறு அதிமுக்கியத்துவம் வாய்ந்த மூல வளமாக திகழும் காடுகள் மீது மனிதர்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. காடழிப்பு நடவடிக்கைகள் அதிகளவில் இடம் பெறத் தொடங்கியுள்ளன. காடழிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டு இருக்கின்ற இத்தகைய துரித முன்னேற்றம் காரணமாக புவியில் பல்வேறு வகையான பிரச்சினைகள் தலை தூக்கத் தொடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இயற்கைச் சமநிலையின் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அவ் வளத்தின் மீது பெரிய தாக்கத்தையும், பற்றாக்குறையையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையை பொறுத்த வரையில் காடழிப்பானது மிக வேகமாக பரவிவருகின்றது. காடழிப்புச் செயன்முறை யானது உயிர்ப் பல்வகைமை ரீதியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மழைவீழ்ச்சியிலும் மண்ணரிப்பிலும் பெரிய செல்வாக்குச் செலுத்துகின்றது, எனவே நாம் எங்கு வாழ்கின்றோமோ, அந்த சூழலுக்கு ஏற்ப எங்களால் இயன்றளவு தாவரங்களை வளர்த்து இயற்கையுடன் இணைந்து சூழலில் வாழ முயற்சி செய்வோம்.

இடத்துக்கு இடம் காடுகளின் அளவு மாற்றம் அடையும் போக்கினைக் கொண்டுள்ளது. அநேகமான நாடுகளில் இன்று காடுகளின் மீள் உருவாக்கம் மற்றும் காடழிப்பு நடைமுறைகளை மட்டுப்படுத்தும் முயற்சிகளும் இடம் பெற்று வருகின்றன.

**செல்வன்.வி.சசிகரன்**
தரம் - 7A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மா நீ அற்புதம். அம்மா சொன்ன அற்புதமான பொய்களில் ஒன்று கடைசி உருண்டையில் தான் எல்லா சத்தும் உள்ளது. இதை மட்டும் வாங்கி போடா கண்ணா என்பார். நான் பெற்ற முதல் ரத்ததானம் எது தெரியுமா? என் அம்மாவின் பால்தான். உலகிலே மிகவும் அழகான அன்பான சொல் எது என்று கேட்டால் அது அம்மா உலகில் எங்கு தேடித்தேடி அலைந்தாலும் கிடைக்க முடியாத ஒரே ஒரு சிம்மாசனம் எது தெரியுமா எனது அம்மாவின் கருவறை நான் ஒரு தடவை அம்மா என கூப்பிடுவதற்காக பலமுறை பிரசவத்தில் "அம்மா அம்மா" என கத்தியவள் தான் அம்மா தொப்பிள்கொடி வெட்டுவது எமது பாசத்தை பிரிப்பதற்காக அல்ல அது எமது பாசத்திற்காக வெட்டப்பட்ட திறப்புவிழா ரிப்பன். நான் முதன் முதலில் நடக்கும் போது நான் நடக்கமாட்டேன் என்ற வருத்தத்தோட நான் விழுந்துவிடக்கூடாதென்ற பயம் தான் என் அம்மாவின் கவனத்தில் இருந்தது. ஒரு அம்மாவின் கடைசி ஆசை என்ன தெரியுமா? நான் இறந்த பிறகு என் கல்லறையின் மீது உன் பெயர் எழுதவேண்டும் அங்கு உன்னை நினைப்பதற்காக அல்ல, அங்கும் உன்னை சுமப்பதற்காக, சொல்லவந்ததை சொல்லத்தெரியாமல் நின்றுபார் தாய்மொழியின் அருமை புரியும். அதே போல் தாயை விட்டு தள்ளி இருந்துபார் தாயின் அருமை புரியும் தனதுதாய் தனக்கு என்னவெல்லாம் செய்தால் என்பதை மனிதன் கடைசிவரை உணர்வதில்லை. அதை அவன் உணரும்போது அவள் உயிருடன் இருப்பதில்லை. அம்மா நான் தோசை சாப்பிடும்போது கூட சட்னியை வைத்து சட்னி இருக்கடா கண்ணா இன்னுமொரு தோசை வைப்பது அம்மாவின் இயல்பு. வாழ்க்கையில் தியாகம் செய்பவர் அப்பா வாழ்க்கையே தியாகம் செய்பவர் அம்மா. இந்த உலகில் நான்முதலில் பிறந்தபோது என்னை அறிந்த பெண்மணியும் நான் அறிந்த பெண்மணியும் நீதானே அம்மா. அம்மா நீ என் அருகில் இருந்தால் கற்பாறை கூடப் பஞ்சு மெத்தைதான் அம்மா அப்பா கட்டிக்குடுத்த ஆடம்பரமான வீட்டை விட உன் சட்டையில் கட்டிகொடுத்த தொட்டிலே பெரும் நிம்மதியை தந்தது, சாப்பிடும்போது அம்மாவிடம் திட்டுவாங்கிகிட்டே சாப்பிடும் சுகமே தனி.

அம்மா நீ தூங்கசொன்னா எங்குபோனாலும் தூங்குவேன். ஆனால், நீ வந்து ஒரு தாலாட்டுப்பாடு அம்மா. "கல்லில் செய்த சிலையை விட கருவில் சுமந்த தாயே தெய்வம்"

**செல்வி. ஜீ.மிதுசியா**
தரம் - 07A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெய்வம்

தாயே எங்கள் தெய்வம்
தரணி போற்றும் தெய்வம்
தாயே நாங்கள் முதலில்
கண்ணால் கண்ட தெய்வம்.

பத்து மாதம் சுமந்து
பாங்காய் எமைப் பெற்றே
எத்துயர் துன்பமும் இன்றி
இனிதாய் வளர்த்த தெய்வம்

பாலும் பழமும் ஊட்டி
பக்குவமாய் வளர்த்த தெய்வம்
நாலும் இரண்டும் சொல்லி
நல்லறிவைத் தந்த தெய்வம்

பேரும் புகழும் சேர
பெரும் பேறாம் கல்வி தன்னை
சீரோடு கற்று நாம் உயர
சீர் வழி காட்டிய தெய்வம்

அன்பும் அறமும் நாட்டி
அரவணைத்த எம் தெய்வம்
நன்றாய் நாங்கள் வாழ
நல்வழி காட்டிய தெய்வம்

வையம் போற்றும் தெய்வம்
வாழ்வு காட்டிய தெய்வம்
கை கூப்பித் தொழுகின்றோம்.
காலடி தொட்டு வணங்கிடுவோம்.

செல்வன். அ.தாருசன்
தரம் - 07
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தின் உயிர்நாடி ஆசிரியர்

ஒரு சமூகம் உயிர்ப்புடன் திகழ்வதற்கு ஆசிரியர்கள் உயிர்நாடியாக விளங்குகிறார்கள். அறிவின் ஊற்றுக்களாக விளங்கும் ஆசிரியர்கள் சமூகத்தின் மாற்றத்திற்காகவும், மனித வர்க்கத்தின் மேன்மைக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், வாழ்வுக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் ஆசிரியர்களே! அடிப்படையில் சேவை செய்யும் தொழிலாக ஆசிரியர் தொழில் காணப்படுவது, ஆசிரியத்துவத்தின் தனித்துவமான வாண்மைத்துவமாகும். ஓர் ஆசிரியர் வசதியளிப்பவர், ஒழுக்கத்தை பேணுபவர், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பவர், நல்ல நண்பன், நடுநிலையாளர், கல்வியை பெறுவதற்கான வழிகாட்டி, கற்றல் கற்பித்தலை திட்டமிடுபவர், மாணவர் சிந்தனைகளை தட்டி எழுப்புபவர், மாற்றத்தை ஏற்படுத்துபவர், பொறுப்புக்கூறுபவர், சமூக நடத்தையை வெளிக்காட்டுபவர், நிபுணத்துவம் உடையவர் எனப் பல்வேறு நடிபாகங்களைக் கொண்ட சிற்பியாக விளங்குபவர் ஆசிரியரே!

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்கின்றார் ஔவைப்பிராட்டி. கண்ணெனத்தகும் எண்ணையும், எழுத்தையும் கற்பிக்கும் ஆசிரியப்பணி கௌரவமானது, மதிப்புக்குரியது, தன்னலமற்றது,பெருமையுள்ளது. "மாதா பிதா குரு தெய்வம்" என்பர். பெற்றோருக்கு அடுத்தபடியாக நம் வணக்கத்துக்குரியவராக விளங்குபவர் குருவே. "குரு" என்பது வடசொல் "கு" என்றால் இருள், குரு என்றால் அஞ்ஞான இருளை ஒழிப்பவன் என்பது பொருள். முற்காலத்தில் நன்றாகக் குரு வாழ்க, குருவே துணை என்று மாணவர்கள் குருவை வணங்கி விட்டுத்தான் கற்கத் தொடங்குவர், சமுதாயத்தில் அனைவராலும் மதிக்கப்படக் கூடிய தொழில் ஆசிரியப் பணி ஆகும்.

குலன், அருள், தெய்வக் கொள்கை, கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை, நிலம், மலை, நிறைகோள் மலர், நிகர், மாட்சி, உலகியலறிவு ஆகிய இவற்றை நல்லாசிரியர்களுக்குரிய இலக்கணமாக நன்நூலார் கூறுகின்றார். அவர் கூற்றுப்படி அவ்விலக்கணங்கள் யாவும் அமையப்பெற்றவர் என்று பிறர் கூறும் வகையில் நல்லாசிரியர்களாக விளங்கவேண்டும். மாணவர்களால் மரியாதைக்கு உட்படுத்தப்பட்டு தலைமுறை தலைமுறையாக, தலை சாய்த்து வணக்கம் செலுத்தப்படுபவர்கள், வெற்றிகரமான கற்பித்தலுக்கு தெளிந்த மனம், உன்னதமான ஆளுமையும் உள்ளார்ந்த அர்ப்பணிப்பும் ஆசிரியத் தொழிலின் மேன்மைக்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."

என்கின்றார் மகாகவி பாரதி. கல்வி பிறப்புரிமைகளுள் ஒன்றாக முக்கியத்துவம் பெறுகின்றது. ஒவ்வொரு பிள்ளையையும் பாடசாலைக்கு அனுப்புவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரினது பொறுப்பாகும். பதினாறு வயது வரை கல்வி வழங்குவது அரசின் பொறுப்பாகவும், இன்று விளங்குகின்றது. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆசிரியர் பணி எல்லாத் தொழில் துறைகளிலும் சிறப்புப் பெறுகின்றது. ஆசிரியர் தான் தேடி தன் மூளையிலே சேமித்த அறிவினை வெறுமையாக வுள்ள மாணவர்களுக்கு அள்ளி அள்ளி வழங்குகின்றார். இங்கே கொடுப்பவனும் பெறுபவனும் மகிழ்வடைகின்றான். அள்ளிக் கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம் கல்விச் செல்வமாகும். கொடுக்கக் கொடுக்க ஆசிரியரின் அறிவும் பெருகுகின்றது. மாணவர்களின் அழகினையும், வளர்ச்சியினையும், அறிவுத் தேடல்களையும், குறும்பு களையும் இரசித்தபடி தொழில் புரியும் ஆசிரியத்தில் கிடைக்கும் இன்பம் எல்லோருக்கும் கிடைக்காது. ஆசிரியத் தொழிலின் வளங்களாக மாணவர்கள் இளமை கொண்டவர்கள், குருபக்தியினால் ஆசிரியர் பால் ஈர்க்கப்படுபவர்கள், தானாய் ஈர்க்கப்பட்டு உற்ற உறவு நிலையில் சேரும் இனக் கருத்துக்கள் ஆசிரியரின் கிடைத்தற்கரிய மாபெரும் சொத்துக் களாகும்.

விருப்பு வெறுப்புக்கள், உணர்வுகள், ஆசாபாசங்கள், உடலுள எழுச்சி வேறுபாடுகள் இளவயது உடற்பலம், உளப்பலம், கொண்ட பல மாணவர்களின் முன் ஒரே நேரத்தில் எல்லோர் மனங்களுக்கும் ஏற்ப கற்பிக்கும் ஆசிரியர்களின் தலைமைத்துவ வலிமையும் ஆளுமையும் அவரவர்க்கு தனித்துவமாகும். ஆசிரியர் பிறப்பதில்லை உருவாக்கப்படு கிறார்கள். என்ற கருத்து வலுப்பெற்று வருவதற்கு வினைத்திறன் மிக்க ஆசிரியரின் கல்விச் செயற்பாடுகளே பின்புலமாக அமைந்துள்ளன என்று கூறலாம். ஆசிரியரே பாடசாலை கல்விச் செயற்பாடுகள் அனைத்திற்கும் வழிகாட்டுபவராக இருக்கின்றார். நாட்டின் கல்வித்தரம் உயர்த்தப்படுவதற்கும், பேணப்படுவதற்கும், தரமான ஆசிரியர்களின் பணி [illegible] மகத்தானதாகும். இன்றைய சூழலில் ஆசிரியர் மனித நேயம் மிக்க [illegible] சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டியவர்களாக எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

**செல்வி. கயலினி சதானந்தன்**

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

1) ரெயில் வண்டிகள் இல்லாத நாடு - ஐஸ்லாந்து

2) ஒட்டகச் சிவிங்கியின் நாக்கின் நிறம் -நீலம்

3) மூளை இல்லாத மீனினம் - நட்சத்திரமீன்

4) நீந்தத் தெரியாத, மூன்று இரைப்பைகள் உள்ள விலங்கு - ஒட்டகம்

5) உலகிலே மிக நீளமான குகை - மாமத்குகை

6) உலகிலே மிக ஆழமான ஏரி - பைக்கால் ஏரி

7) நான்கு கண்களுடைய விலங்கு - முதலை

8) இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர் - குளொடியஸ் தொலமி

9) ஒரு சிலந்தி வலை பின்ன எடுக்கும் நேரம் - 3 மணித்தியாலம்

10) சிப்பிக்குள் முத்து விளைய எடுக்கும் ஆண்டுகள் - 15 ஆண்டுகள்

11) 300 ஆண்டுகள் உயிர்வாழும் விலங்கு -முதலை

12) 03 ஆண்டுகள் கண் விழியாது தூங்கும் விலங்கு - நத்தை

13) மூன்று இதயம் கொண்ட உயிரினம் - ஒக்டோபஸ்

14) சத்தமிடத் தெரியாத மிருகம் - ஒட்டகச்சிவிங்கி

15) இலவச சீருடை விநியோகம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது - 1993 ஆம்ஆண்டு

16) நாணயங்கள் இல்லாத நாடு - பராகுவே

17) சினிமா தியேட்டர் இல்லாத நாடு - பூட்டான்

18) இமை மூடப்பட்டும் பார்க்கும் விலங்கு - ஒட்டகம்

19) நுளம்பின் ஆயுட்காலம் சராசரியாக எவ்வளவு காலம் - 25 நாட்கள்

20) மனித இனத்தின் ஆறு அறிவும் எவை?

தொட்டு உணரும் அறிவு (சூடு,குளிர்)

பார்க்கும் அறிவு

பேசும் அறிவு

கேட்கும் அறிவு

முகரும் (மணக்கும்) அறிவு

பகுத்தறிவு

செல்வி. ப.சுமதி
தரம் 08
கிளி /கனகபுரம் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

கல்வி ஓர் அழியாச்செல்வமாகும் என்று விளக்கிய வள்ளுவர் அந்த அழியாச் செல்வமாகிய கல்வியை கற்பதினால் வரும் சிறப்புக்களையும் குறிப்பிடுகிறார். அது கண் போன்றது என்கிறார். கண் என்றால் தமிழில் ஒளி என்று பொருள். கல்வி எவ்வாறு ஒளியாக விளங்குகிறது என்பதையும் விளக்குகிறார். எல்லா உறுப்புகளும் சரியாக இருந்தும் "கண்" இல்லாவிட்டால் ஒருவனால் பொருள்களையும், காட்சிகளையும், இயற்கையின் அழகுகளையும் காண இயலாது. எனவே அவன் ஒரு முழுமை பெற்ற மனிதனாக கருதப்படமாட்டான். இந்த உண்மையின் அடிப்படையில் கல்வியின் முக்கியத்துவத்தையும், தேவையையும் வற்புறுத்த விரும்பிய வள்ளுவர். கல்வியை கண்ணோடு ஒப்பிடுகிறார். நம் வாழ்க்கையின் இன்பதுன்பங்கள் பலவற்றிற்கும் புறக்காட்சிகளும், நிகழ்ச்சிகளும் தானே காரணம். நாம் பார்க்கும் விபத்துக்கள் நம் உள்ளத்தை பெரிதும் பாதிக்கின்றன. நம் கண்முண்ணே அடிக்கடி தோன்றி மறைகின்றன. இந்தக்காட்சியை நாம் பார்த்திருக்கா விட்டால் எந்த பாதிப்பும் ஏற்படாது இல்லையா? மகிழ்ச்சியோ துன்பமோ நாம் பார்க்கும் காட்சி அல்லது நிகழ்ச்சியால் தானே அமைகின்றது? இந்த அனுபவத்தை அல்லது நுகர்வை எது வழங்குகின்றது? காலம் காலமாக அறிஞர்களும் சான்றோர்களும் தாம் கண்டவற்றையும் அவற்றின் அடியில் சித்தாந்தங்களையும், கொள்கைகளையும், கண்டு பிடிப்புக்களையும், அறிவுரைகளையும் இன்ன பிறவற்றையும் நம் புலனுக்கு கொண்டு வருவது கல்வியே. இக்காரணம் கருதி வள்ளுவர் கல்வியைக் கண் என்கிறார். கல்வியின் அடிப்படை எண்ணும், எழுத்தும். இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல், கணிதம் எனக் கல்வியின் துறைகள் அனைத்தும் எண்ணையும் எழுத்தையும் சார்ந்தே அமைந்துள்ளன. சில துறைகளில் எண்ணின் சார்பு மிகுதியாகவும் உள்ளன.

"எண், எழுத்து ஆகிய இரண்டும்
மனிதர்க்கு இரு கண்கள்"
"இரண்டு கண்களும் பொருந்தி இருத்தல்.
முகத்திற்கு அழகு "
"எண்ணும் எழுத்தும் பொருந்தி இருத்தல்
கற்ற கல்விக்கு அழகு"

**செல்வன்.மா.இசைப்பிரியன்**
தரம் - 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவக் கவிதைகள்

முயற்சி தான் வெற்றியின்
முதற்படி என்றால்
அந்த முதற்படியை அடைய
நீ முந்நூறுமுறை
தோற்றாலும்
முயற்சியை இழக்காதே

கஷ்டப்படுகிறவன் கிட்ட
சிரிப்பு இருக்காது
சிரிக்கிறவன் கிட்ட
கஷ்டம் இருக்காது
கஷ்டத்திலும் சிரிக்கிறவன் கிட்ட
தோல்வி இருக்காது

தோல்வி வரும் போது
அதற்கு இதயத்தில்
இடம் கொடுக்காதே
வெற்றி வரும் போது
அதற்கு தலையில்
இடம் கொடுக்காதே

எதுவும் இல்லாத போது
சமாளிக்கும் திறமையும்
எல்லாம் உள்ளபோது
நீ நடந்து கொள்ளும்முறையும்
வெற்றியைத் தீர்மானிக்கும்

நல்லது நடக்கும்
என்று நம்புங்கள்
அது
உங்களை மட்டுமல்ல
உங்களை
சுற்றியிருப்பவர்களையும்
மகிழ்ச்சியாக
வைத்திருக்கும்.

தோல்வி அடைந்தால்
மாற்ற வேண்டியது
வழிகளைத் தானே தவிர
இலக்குகளை அல்ல

எப்போதும் அச்சத்தில்
இருப்பதை விட
ஆபத்தை ஒருமுறை
சந்திப்பதே மேல்
இந்த உலகத்தில் தலைவிதி
என்று எதுவுமே கிடையாது
எல்லாம் நீயாக
தேடிக் கொண்டதுதான்

தோற்றால் புலம்பாதே
போராடு
கிண்டலடித்தால் கலங்காதே
மன்னித்து விடு
தள்ளினால் தளராதே
துள்ளியெழு
நஷ்டப்பட்டால் நடுங்காதே
நிதானமாய் ஜோசி
ஏமாந்து விட்டால் ஏங்காதே
எதிர்த்து நில்
வெற்றி நிச்சயம்

எட்டிப்பிடிக்கும் தூரத்தில்
வெற்றி இல்லை அதை
விட்டுவிடும் எண்ணத்தில்
நானும் இல்லை

வெற்றியை விட
தோல்விக்கு பலம் அதிகம்
வெற்றி சிரித்து மகிழ வைக்கும்
தோல்வி சிந்தித்து வாழ வைக்கும்

**செல்வன். த.திவாகரன்**
தரம்-08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

ஓர் ஊரில் ஒரு காடு ஒன்று இருந்தது. இந்தக் காட்டின் மத்தியில் ஒரு சிறிய குகை. ஒன்று காணப்பட்டது, அந்த குகையில் ஒரு தாய்ப்பன்றியும், தந்தைப்பன்றியும், குட்டிப்பன்றியும் இருந்தது. குட்டிப் பன்றியை "சீனு" எனவும் அழைப்பார். சீனு சரியானக் குறும்புக்காரன். அவனுக்கு ஒரு சில நண்பர்களும் காணப்பட்டார்கள். ஒரு நாள் சீனுவும் அவனது நண்பர்களும் பொழுதுபோக்குக்காக ஆற்றங்கரைக்கு விளையாடச் சென்றார்கள். அவ் ஆற்றங்கரைக்கு சற்றுத்தூரம்தள்ளி இன்னுமொரு பயங்கரமான விலங்குகள் வாழும் காடு ஒன்று காணப்பட்டது. சீனுவும், நண்பர்களும் விளையாடிக் கொண்டிருக்கும் போது சற்றுத்தூரம் தள்ளி ஒரு அழகான புள்ளி மான் ஒன்று புல் மேய்ந்து கொண்டிருந்தது. இதனை காட்டில் இருந்து அவதானித்த சிங்கம் உடனே அந்த மானை வேட்டையாடியது. சிங்கம் வேட்டை ஆடியதைக் கண்ட சீனுவும், சீனுவின் நண்பர்களும் கண்டார்கள். சீனுவோ அவ்விடத்தை விட்டு அசையவே இல்லை. நண்பர்களோ தலை தெரிக்க ஓட்டம் எடுத்தார்கள். சீனு ஏன் என்றால் அவன் சின்னவன் விளக்கம் இல்லாதவன் சிங்கம் என்றால் பயங்கரமான மிருகம் என்று பெற்றோர் அதனை சொல்லவில்லை. சீனுவின் மேல் சாதுவாக துர்நாற்றம் வீசியது. ஏன் என்றால் அவன் காலை தான் அழுகலடைந்த மாமிசத்தை உண்டான். பின்பு குளிக்காமல் வந்துவிட்டான்.

இதனால் பக்கத்தில் வந்த சிங்கத்திற்கு குமட்டியது. துர்நாற்றமும் தாங்க முடியவில்லை. அந்த சிங்கம். சற்று தள்ளி நின்றது. என்ன தம்பி என்னை கண்டு பயந்துவிட்டியா என்று சீனு புன்சிரிப்பு சிரித்தது என்ன தம்பி என்னோடு சண்டை போட வா, என்று சீனுபலமாக கத்தி, சிங்கம் கூறியது இன்று சண்டை வேண்டாம். நாளை வா என்று சொல்லி விட்டு மானை தூக்கிக் கொண்டு கிளம்பியது. சீனுவிற்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. ஏன் என்றால் என்னைகண்டு பயந்து ஓடி விட்டான். என்று சொல்லிட்டு வீட்டுக்குச் சென்றான். ஆற்றங்கரையில் நடந்தவற்றை எல்லாம் தந்தையிடம் சீனு கூறினான். இதை கேட்ட தந்தை ஏங்கினார். என்ன காரியம் பண்ணிவிட்டாய் சீனு அந்த மிருகம் உன்னை விட பலசாலி உன்னை ஒரே அடியில் கொன்று விடும். சீனுவிற்கு தந்தை கூறியதை நினைத்துப்பார்க்க பயம்பிடித்தது. என்னசெய்வது சீனுவிற்கு ஒன்றும் புரியவில்லை. தனது அறைக்கு ஓடிச்சென்று தூங்கினான்.

அப்பா பன்றி யோசித்துப்பார்த்தது.. மாட்டுச்சாணம் போன்ற கழிவை உடலின் மேல் பூசிக்கொண்டுபோ என்று கூறுவோம். காலை சீனு எழுந்தவுடன் எல்லாவற்றையும் கூறினார். இதனையும் அந்த சீனு செய்து கொண்டு போனது. சிங்கமும் வந்துநின்றது. சிங்கத்திற்கு பன்றியில் இருந்து வரும் நாற்றம் தாங்கமுடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் ஓட்டம் பிடித்தது சிங்கம்.

தொகுப்பு
செல்வி. வி.சசிகரன்
தரம் - 07A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தளங்கள் மாணவர்களுக்கு கற்றுத்தரும் அனுபவங்களும் படிப்பினைகளும்

இன்றைய கால இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் அதிக ஈடுபாடு உள்ளவர்களாக விளங்குகின்றனர். ஆகையால் பெற்றோர்களும் மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் அவர்களின் பொழுதை வீணடிப்பதாக பெற்றோர் நம்புகிறார்கள். இதனால் பிள்ளைகளை கட்டுப்படுத்தவும், பின் தொடர்வதுமாக பெற்றோர்கள் இருக்கின்றனர். இருந்தாலும் மாணவர்கள் சமூக வலைத்தளத்தில் நேரம் செலவழிப் பதையே அதிகமாகி வருகின்றமையால் அவர்கள் நேரடியாகவும், இரகசியமாகவும் அதில் நேரத்தை செலவிடுகின்றனர். மாணவர்களுக்கான பயனுள்ள விடயங்கள் சமூகவலைத் தளங்களில் இல்லையா? சமூக வலைத்தளத்திற்கு செல்லும் குழந்தைகளை பெற்றோரும் ஆசிரியரும் எப்படி வழிநடத்த வேண்டும். மாணவர்கள் சமூக வலைத்தளங்களை எப்படி பயன்படுத்தி கொள்ள வேண்டும்? இதை இன்றைய கால மாணவர்கள் சந்திப்பதில்லை. சமூக வலைத்தளங்களை பற்றி கற்பிக்கும் கடமை பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இருக்கின்றது. அதனை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதை அவர்கள் ஆதரிக்க வேண்டும். சமூக வலைத்தளம் சிறந்த தகவல் தொடர்பு சாதனம் என்பதை எதிர்கால தலைமுறையினரான மாணவர்கள் நிச்சயம் அறிய வேண்டும். அதில் பாகங்களை அறிந்து பயன்படுத்த தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டுதிட்டமிடலுக்கும், தகவல் திரட்டு வதற்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் வலைத்தளங்களை உபயோகிக்க பழக வேண்டும். இந்த நியாயமான பழக்கத்தை பள்ளி கல்லூரியில் பழக்கப்படுத்தினால் அவர்களின் கற்றல் முறையில் மேம்பாடு ஏற்படும். கண்டிப்பதும், தண்டனை கொடுப்பதும் சமூகவலைத் தளங்கள் தீயபாதை என்பதை போல் புறக்கணிக்க வலியுறுத்துவதும் அவர்களின் மனதில் எதிர்மறை விளைவை உருவாக்கும் என்பதை பெற்றோரும், ஆசிரியரும் உணரவேண்டும்.

சமூக வலைத்தளங்கள் பற்றி ஆசிரியர்கள் விளக்கவேண்டும். அது நமது கற்றல் முறைக்கு அவசியமானது. என்பதை புரிய வைக்கவேண்டும். அதன் பயன்களை விளக்க வேண்டும். எந்த வலைத்தளத்தில், எந்த வகையான செய்முறை நமது வகுப்புக்கு ஏற்றது என்பதை விளக்க வேண்டும். அந்த வலைத்தளத்தின் அடிப்படைகளை விளக்குவதுடன் பாடம் சார்ந்தது எப்படி பயன்படுத்துவது என்பதையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விளக்க வேண்டும். சமூக வலைத்தளத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் இருக்கின்றனர். ஆனால் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்த குழுக்கள் உருவாகிவிட்டால் பெற்றோர் உள்ளிட்ட யாருக்குமே வீணான பயம் தேவையில்லை. ஒவ்வொருவரின் தனித்த இயக் கங்களே பெற்றோரை அச்சுறுத்தலாக உள்ளது. வலைத்தளம் குழுக்களானது. ஒருங்கிணைப்புக்கானது என்பதை உணர்ந்து பயன்படுத்த ஆசிரியரின் வழிகாட்டல் அவசியமாகும். ஆகவே, சமூக வலைத்தளங்கள் பாவிப்பதை குறைத்து கற்றலை மேம்படுத்த பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு ஆசிரியரும் மாணவரும் இணைந்து செயற்பட வேண்டும். பெற்றோர்கள் மாணவர்களை நம்புவது அவசியமாகும். ஆகவே, சமூகவலைத்தளம் என்பது நன்மையையும், தீமையையும் ஏற்படுத்தக்கூடியது.

**செல்வி. ஹம்ஸாநந்தி**
தரம் - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசிய மைனா

அன்று ஒரு விடுமுறை நாள் என் நண்பி வீட்டுக்கு சென்றிருந்தேன். அங்கே கூண்டுக்குள் அடைக்கப்பட்ட ஒரு அழகிய மைனா இருப்பதை கண்டு, அதன் அருகில் சென்றேன். அங்கு வைக்கப்பட்டிருந்த சுவையான பழங்களில் ஒன்றை எடுத்து அதற்கு சாப்பிடக் கொடுத்தேன். அது சாப்பிடவில்லை. மறுபக்கம் திரும்பிக் கொண்டது. எதுவும் புரியாத நான் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். நில்! என் சோகக்கதையை சொல்கிறேன், என்றது அந்த அழகிய மைனா. ஆச்சரியமாக இருந்தது, மைனா பேசுமா? என்று எண்ணிக்கொண்டு அதன் அருகில் சென்றேன். அதன் கண்களில் கண்ணீர் கசியத் தொடங்கியது. ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது? என்று கேட்டேன். மைனா பேசத் தொடங்கியது.

அடுத்தவரின் சுதந்திரத்தைப் பறித்து அதில் குளிர் காயும் கொடிய மிருகஜாதி நீங்கள். உங்கள் வீட்டை அழகுபடுத்தவும், உங்கள் மழலைகளை மகிழ்விக்கவும், உங்கள் வீட்டுக்கு காவல் புரியவும் எங்களைப் போல சுதந்திரமாகச் சுற்றித்திரியும் எத்தனையோ உயிரினங்களை சிறையில் அடைத்தும், கட்டிவைத்தும் கொடுமைப் படுத்துகிறீர்கள் ஏன்? சிலநேரம் எங்களை கொன்று சாப்பிட்டு உங்கள் பசியைப் போக்கிக்கொள்ளவும் செய்கின்றீர்கள் ஏன்? இந்தக் கொடிய எண்ணம் மனிதனுக்கு? எங்களை அடைத்து வைக்கும் கூடுகளுக்கு விதவிதமான வர்ணங்கள் பூசி பார்ப்பவர் கண்களுக்கு குளிர்ச்சியாக அழகுபடுத்துகின்றீர்கள் ஏன் எங்கள் மேல் அவ்வளவு பாசமா எங்களுக்கு? எங்களை பறக்க விடாமல் சிறகுகளைக் கூட வெட்டிவிடுகின்றீர்கள். ஏன் நாங்கள் உங்களைவிட்டுப் பிரிந்து விடுவோம். என்று அப்படி செய்கின்றீர்கள்? அப்படியானால் கொட்டும் மழையிலும், கொழுத்தும் வெயிலிலும் எங்களைத் தவிக்க விட்டுவிட்டு நீங்கள் மட்டும் கதவினைப் பூட்டிக்கொண்டும், குளிரூட்டிய அறைகளிலும் தூங்குவது ஏன்? உங்கள் சுயநலம் எங்களுக்கு நன்கு புரியும்.

நீங்கள் செய்யும் கொடுமைகள் கொஞ்சமா? நெஞ்சா? காடுகளைவெட்டி இயற்கையை அழிக்கீன்றீர்கள். எங்களைப்போல பல உயிர்கள் வாழும் புகழிடங்களையும் அழிக்கின்றீர்கள். அதுமட்டுமா? நீங்கள் வாழவும் தண்ணீர் அவசியம் என்பதை முற்றாக மறந்து இவ்வாறான கொடுமைகளை செய்கின்றீர்கள். காடுகளை அழிப்பதனால் மழைவீழ்ச்சி குன்றுகின்றது. சூழல் வெப்பம் அதிகரிக்கின்றது. குடிக்க சுத்தமான நீருக்கும் பஞ்சம் ஏற்படுகின்றது. உயிர்கள் பலவும் இறக்கின்றன என்று கொஞ்சம் கூட சிந்திக்காமல் செய்யப்படுகின்றீர்கள். எங்களைப் போல் உயிரினங்கள் வாழும் புகலிடங் களையும் அழித்து உங்களுக்கும் எங்களுக்கும் சேர்த்து நீங்களே தீமைசெய்கின்றீர்கள்.

சுதந்திரம் வேண்டி போராட்டம் செய்கின்றீர்கள். பூமியில் உள்ள உயிர்கள். அனைத்தையும் சிறைப்பிடித்து உங்களுக்கு அடிமையாகவும், உங்களுக்கு சேவகம் செய்ய வும் வைத்துக்கொண்டு யாரிடம் சுதந்திரம் கேட்கிறீர்கள்? எதற்காக உங்களுக்கு சுதந்திரம் வேண்டும். உங்களைப் போலத்தானே, நாங்களும், வாழத்தானே பூமியில் பிறந்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கும் அம்மா,அப்பா, தம்பி, தங்கை என்று எல்லாமே இருக்குத்தானே. அதைப் புரிந்து கொள்ளவே மாட்டீர்களா?

எனக்கும் ஒரு அழகான குடும்பம் இருந்தது. அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, நான் உட்பட ஐவர் கொண்ட குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம். வழக்கம்போல இரை தேடிக்கொண்டு ஆளுக்கொரு திசையில் பறந்தவேளை உனது நண்பியின் அண்ணன் கமல் விரித்த வலையில் நான் சிக்கிக்கொண்டேன். என்னைப் பிடித்து வந்து இந்தக் கூண்டில் அடைத்து வைத்து தினமும் வதைக்கிறான் அந்தக் கொடியவன். என் குடும்பப், பாசம், பந்தம் அத்தனையும் இழந்து தனிமையில் வாழும் எனக்கு கவலை இருக்காதா? நீயே சொல் என்று மேலும், அழுதது அந்த மைனா.

அதன் சோகக்கதையைக் கேட்டேன். என்னை அறியாமலே அழுதுவிட்டேன். என்ன நடந்தாலும் கவலை இல்லை என்று நினைத்து அந்தக் கூட்டைத் திறந்து அந்த மைனாவை பறக்க விட்டேன். நன்றி நண்பியே! காலம் உள்ளவரை உன்னை என்றும் மறவேன் என்று கூறி சந்தோசவானில் சிறகடித்துப் பறந்தது அந்த மைனா. நானும் ஒரு உயிரை வாழ வைத்த சந்தோஷத்தோடு வீடு திரும்பினேன்.

(பிற உயிர்களை துன்பப்படுத்தாமல் இயற்கையை துன்பப்படுத்தாமல்
இயற்கையை அழிக்காமல் எல்லோரும் இன்பமாக வாழ்வோம்")

**செல்வி. ரா.ஆர்த்திகா**
தரம் 9A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

விட்டுக்கொடுப்பதும் மன்னிப்பதும் தான் வாழ்க்கை
ஆனால் வாழ்க்கையின் போராட்டமே.
யார் விட்டுக்கொடுப்பது யார்மன்னிப்பது என்பதுதான்
வாழ்க்கையில் அடிபட்ட பின்புதான் அனைவரின்
உண்மை முகத்தை புரிந்து கொள்ள முடிகிறது.
விடியும்வரை தெரிவதில்லை கண்டது கனவு என்று
வாழ்க்கையும் அப்படி தான் முடியும் வரை
தெரிவதில்லை வாழ்வது எப்படி என்று
வாழ்க்கையில் கிளியாக இருக்காதீர்கள்
கழுகாக இருங்கள் கிளி அதிகமாகப் பேசும்
ஆனால் அதனால் உயரத்திற்கு பறக்க முடியாது.
ஆனால் கழுகு அமைதியானது அதோடு வானத்தை தொடும்
அளவிற்கு அதற்கு சக்தி உண்டு.
இதயம் துடிக்கும் போது யாரும் கவனிக்கமாட்டார்கள்
ஆனால் துடிப்புநின்ற பின் எல்லோரும் துடிப்பார்கள்
அது தான் வாழ்க்கை!
நம்வாழ்க்கையில் சாதனை படைத்தேன்
யாரையும் வேதனைபடுத்தவில்லை என்பது சிறந்தது
வேஷம் போடுபவன் நல்லவன் நல்லதை சொன்னாள் கோமாளி
அன்பு காட்டினாள் ஏமாளி உண்மை பேசினாள் பைத்தியக்காரன்
காசு இருந்தால் கடவுள் இது தான் இன்றைய வாழ்க்கை
நாம் வாழும் வரை நம்மை யாரும் வெறுக்கக்கூடாது
வாழ்ந்து முடித்தபின் நம்மை யாரும் மறக்கக்கூடாது
இது தான் வாழ்வின் வெற்றி.....!!!

**செல்வி வி.தர்சிகா**
தரம் - 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Friendship

Friendship is the rainbow
between two hearts staring seven
colors of feelings, love sadness
happiness, truth, faith secret and respect

Good friends are like stars
you don't always see them
but you know they always there

Friendship is the only
relationship whichever expect
your gender ,color status, cassette.
not only love has pain
friendship also have big pain
in the time of learning

Why god made teachers.
when god created teacher,
he gave us special friends
to help us under stand his world
and truly comprehend
the beauty and the wonder
of every thing we see
and become a better person
with each discovery

When god created teachers
he gave us special guides
to show us ways in which to grow
so wen can all how to do
what's right in stead of wrong
to lead us so that we can lead
and learn how to bestirring

Why god orated teachers
In his wisdom and his grace
was to help learn to maintain
our world

**Y. Subenthiran**
**7B**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய வெப்பநிலை என்பது ......

புவியின் மேற்பரப்பிற்கு அருகாமையில் காற்று மற்றும் சமுத்திரங்களில் மத்திய வெப்பநிலை அதிகரிப்பதையே, உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு என்போம். உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பானது 1950ம் ஆண்டுகளிலேயே ஆரம்பமானது. விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பின் படி 21ம் நூற்றாண்டில் பூமியின் வெப்பநிலை ஆகக்குறைந்தது $11^{0}$ செல்சியஸ் ஆக இருந்தது. இந்த வெப்பநிலை எதிர்வரும் காலங்களில் வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம். உலளாவிய ரீதியில் வெப்பம் அதிகரித்து வருவதற்கு காரணம் மனிதனின் பொறுப்பற்ற சில செயற்பாடுகளாகும். இவற்றின் ஒரு செயற்பாடாக கருதப்படுவது மனிதன் வனாந்தரங்களை வரைமுறை இன்றி அழிப்பதால் சூரியக் கதிர்கள் நேரடியாக பூமியை வந்தடைவதாகும். அத்துடன் மரங்கள், தாவரங்கள் அருகி வருவதால் காற்று சமநிலையைப் பேணமுடியாத நிலைமையும் காணப்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகளால் உலகளாவிய வெப்பநிலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் எதிர்காலத்தில் பல பிரச்சினைகளை உலகம் எதிர்நோக்கும் ஆபத்தான நிலையும் காணப்படுகிறது,

**வெப்பநிலை அதிகரிப்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

1. மனித காரணங்கள்
   - பசுமைப்போர்வை
   - வனாந்தர அழிப்பு
   - படிம எரிபொருள் தகனம்
   - பல தரப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிப்பு
2. இயற்கைக் காரணிகள்
   - வானியல் காரணங்கள்
   - சூரியனின் கரும்புள்ளி
   - எரிமலை வெடிப்பு
   - எரிகல் விழுதல்

**வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள்**

**சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்**

1. தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் பரம்பல் உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பின் போது காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் மேல் நெட்டாங்குகளில் உள்ள தாவரம் மற்றும் உயிரினம் கீழ் நெட்டாங்குப்பகுதிகளுக்கு பரம்பல் அடைகின்றன. இது பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் இனங்களின் அடர்த்தி குறைவடைதல் நிகழ்கின்றது.

2. பவளப்பாறைகளின் அழிவு
   பவளப்பாறைகளுக்கு தேவைப்படும் வெப்பநிலைக்கு அதிகமாக கடல் வெப்பநிலை அதிகரிப்பதனால் பவளப்பாறைகள் பாதிப்புக்குள்ளாகிறது.

3. ஓசோன் படலப் பாதிப்புக்கள்
   பசுமைக்குடில் காரணமாக ஓசோன் பாதிப்பு நிகழ்கிறது. இதனால் மனிதர்களுக்கு சுவாசநோய், புற்றுநோய், சரும நோய் என்பன ஏற்படும். உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட் அதிகளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் நீரில் உள்வாங்கப்படுகிறது. இதனால் கடல் நீரின் அளவு குறைந்து அமிலத்தன்மை உருவாகிறது. இது கடலின் நிலப்பன்மைத்துவத்தினைப் பாதித்து சுற்றாடல் செயற்பாடுகளுக்கு பலவிதமான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இப்பூமியில் வாழ்கின்ற நாம் வெப்ப நிலையை அதிகரிக்கும் செயற்பாடுகளை குறைத்து உலகளாவிய ரீதியில் நிலவி வரும் வெப்பநிலையை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே மாணவர்களாகிய நாம் ஆளுக்கு மூன்று கன்றாவது எமது பாடசாலை வளவில் நாட்ட வேண்டும்.

இவ்வாறான செயற்பாட்டை செய்து பாடசாலைச் சூழலை குளிர்ச்சியடையச் செய்ய வேண்டும். இதற்காகவே பாடசாலைகளில் சுற்றாடல் முன்னோடி செயற்திட்டம் காணப்படுகிறது, நாம் ஒரு சுற்றாடல் முன்னோடி என்ற வகையில் பாடசாலையில் ஒவ்வொருவரும் கன்றுகளை நாட்டி மரங்களின் பெருக்கத்தை அதிகரித்து நிலவி வரும் வெப்பநிலையை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**செல்வி. ம. நிதுசிகா**
தரம் - 09B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களைப் பாதுகாப்போம்

மரம் வளர்ப்போம் நலம் பெறுவோம் என்பது இந்நாட்டின் இன்றைய தேவைகளுள் ஒன்றாகும். ஒரு ஆய்வுக்கட்டுரை சொல்கிறது. இப்படியே இன்னும் 10 ஆண்டுகள் போனால் தமிழகமே பாலைவனமாகிவிடுமாம். இதனை தடுக்கத்தான் பல அமைப்புக்கள் ஆங்காங்கே மரம் வளர்க்க ஏற்பாடு செய்கின்றன. இலட்சக்கணக்கான மரக்கன்றுகள் இலவசமாக கொடுத்து மரங்கள் வளர்க்க ஆவண செய்து வருகின்றனர். "வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்" என்பது அன்றைய வாசகம். ஆளுக்கொரு மரம் வளர்க்கவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

மரங்கள் இயற்கை அன்னையின் கொடை, இயற்கை அன்னையின் மடியில் மலர்ந்த முதல் குழந்தை தாவரம் தானே! அவற்றை நாம் இல்லாமல் அழிப்பது தவறானது. அப்படிச் செய்தால் நன்றி கெட்டவர்களாக ஆகி விடமாட்டோமா? வேண்டாம் நாம் நமக்காக மட்டும் சிந்திப்பதை நிறுத்தி விட்டு, உலகநலனையும் எதிர்கால சந்ததிகளின் தேவையையும் சேர்த்து சிந்திக்க கற்றுக்கொள்ள வேண்டும். சுயநலத்தின் பிடியில் சிக்கிய மானிட சமுதாயம் இயற்கையை அழித்து, மரங்களை வெட்டி, காடுகளை குறைத்து தன் தலையில் தானே தீவைத்துக்கொள்கிறது.

மரத்தின் பயன்கள் பல உள்ளன. அதாவது உதாரணமாக கோடை காலங்களில் வேம்பு, பூவரசு, புங்கன், காட்டு அத்தி, மா போன்ற மரங்கள் உதவுகின்றன. பயிர்களுக்கு உரமாக அல்லது பசுந்தாழை உரத்திற்கு பங்கம், வாகை போன்ற இனங்கள் பயன்படுகிறது. தென்னை, பனையினை நோக்குவோமானால் இவற்றில் வீடுகளின் கூரைக்காக இரண்டுவகையில் பயன்படுகிறது. அதாவது ஓலை, பலகை என்பனவாகும். தென்னையிலிருந்து உணவிற்காக தேங்காய், தும்பின்மூலம், தும்புத்தடியும், ஈர்க்கின் மூலம் ஈர்க்குத்தடி அல்லது விளக்குமாறும், ஓலையின் மூலம் ஆலயங்களுக்கு பயன்படும் தோரணம் போன்றவை பெறலாம். பனையின் மூலம் பெறப்படும் ஓலையிலிருந்து சுளகு, நீத்துப்பெட்டி, தொப்பி, பூச்சாடி, கூடை போன்ற பலவகையான உற்பத்திகளை மேற்கொள்ளலாம். இவைகளின் மூலமே பலவகையான நன்மைகள் என்றால் ஆயிரக்கணக்கான மரங்களிலிருந்து கோடிக்கணக்கான பயன்களை பெறலாம்.

மரங்களை அழிப்பது மிகவும் தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் தான் மரங்களை அழிப்பதை தடுப்பதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் அவற்றில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் சுற்றாடல் முன்னோடி திட்டமும் ஒன்றாகும். ஆகவே நாம் ஆளுக்கொரு மரம் வளர்த்து மரங்களை அழிக்கும் அறிவற்ற செயலை தடுத்து மரம் வளர்த்து பசுமை காண்போமாக!

**செல்வன். உ.யதுசன்**
10A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HEALTH IS WEALTH

"What a piece of work is a man, how noble in reasor how infinite in faculty. In form, in moving, how expressive and admirable in action. How like an angle in apprehension. How like a God! The beauty of the world. the paragon of animals." - Shakespeare

A great miracle is the man and there is nothing more wonderful than to be healthy and happy. A healthy soul resides in a healthy mind and healthy mind resides in a healthy body. This is not a myth or a fantasy but a scientific fact. In the recent, the scientistic have stated than in general a healthy body has 20% more active brain cells than the unhealthy. There fore, a healthy person leads a more active life, is more vigilant, sharp minded, intelligent, happy and successful,

Good health is a precious gift of nature to the mankind. It is like the sun, which dispels darkness and imparts happiness. It provides freshness and refreshing energy to others .A healthy person is most welcome in the society.

It is our duty to maintain the wonderful and miraculous machine, called the human body. It is more versatile and complex than any other machine or living being the primary requisites of the body is a healthy and balance diet. Our body needs at least 2200 calories, every day in the from of cereals, pulses, milk, fruits and vegetables. The food must provide essential nutrients. sports and dail exercise are also very important as these give proper shape and physique to the body. It builds stamina and confidence and inculcates the sportsman spirit. The body needs [illegible] nd recreation . Open air activities, like jogging, swimming. running, playing and Yog[illegible] e active, exercise and recreation. The Yoga as the name suggests is a total process.

It is a unique way to shape up the body, sharpen the mind control the senses. This system of exercise lays emphasis of discipline, hygiene and cleanliness as the pre requisite. Yoga can be practiced even while working, meditating or sleeping by maintaining proper posture.

Health paves the way towards success and wealth. It helps in the development of a radiant and cheerful personality. In the modern world of machines and commerce, urbanization and pollution, tension and rush, the man is loosing touch with the nature. He is living an artificial life, with serious oilments, sickness and diseases. He is trapped between drinks, drugs, pollution and tensions. It is necessary that there is an awareness and awakening for health , nature and peace.

**Master. Y. Easobithan**

**Grade 11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரத்தூர் கதாநாயகன்
# ஊராலான நாமம் சூடிய மகா வித்தியாலயம்

கல்வியின் கண்பால் கல்லூரியின் - பெயர்
காதோரம் வந்து பல கலை பயிற்றி
காகித விழா தொடங்கி - இன்று
பொன் விழாக் காணும் என் கல்லூரி

அம்மா அழைத்து வந்து வாயில்விட
என் கரம் பற்றிய ஆசான் அரவணைப்பை
எப்படிச் செப்புவேன் - நான்
தவழ்ந்த இரண்டாம் மடி என் கல்லூரி வளாகம்

வெள்ளை தோல் போர்த்திய புள்ளி மான்களாய்
கற்றலுடன் இணைபாடவிதான செயற்பாட்டுக்கு எண்ணெய்யூற்றி
ஆசான்கள் எனும் திரியால் - நாம்
அறிவு சுடராக மிளிர்கின்றோம்.

செம்பினில் கலிம்பாகவும் நகத்தினில் தசையாகவும்
நம்மிலிருந்து அதிபர், ஆசான்களையும், கல்லூரியையும்
கடவுளின் வரம் பெற்றோரால் கூட
பிரித்து விட முடியாது.

இது மட்டுமா ....?
இன்று என் அம்மா, சித்தி, மாமா.. என்று
என் அயலவரை மாணாக்கராக்கி - அகிலத்தில்
மாமனிதராகவும், மகான்களாகவும்
வாழ்வாங்கு வாழ்வது எம் கல்லூரியின் பெருமையே

ஓர் கல்விக் கூடம் திறந்துவை - நூறு
சிறைச்சாலைகள் மூடப்படும் - எனும்
கூற்றில் கற்றோமே பலகதை
வாழ்க எம் கல்லூரியின் புகழ்
ஐம்பது ஆண்டுகள் என்ன, ஐந்நூற்று
ஐம்பது ஆண்டுகள்
"நன்றே செய் இன்றே செய்" - எனும்
மகுட வாசகத்திற்கு அமைய
இலக்கு... எனும் இலக்குடன்
நோக்கம் ..... எனும் நோக்கத்தினை
அடைவோம் இது திண்ணம், திண்ணம்!

வளர்க என் கல்லூரியின் பணி
உயர்க என் கல்லூரியின் புகழ்
மிளிர்க என் கனகபுரமெனும் ஊர்
சிறக்க என் ஊர் மக்கள்!

**செல்வி. விஷயமனோகரன் பிந்துஜா**
தரம் - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலின் வளர்ச்சி

தற்போதைய உலகில் நாம் பயன்படுத்தும் அனைத்து விடயங்களுமே நவீனமயப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு தகவலை வேறொருவருடனோ/ வேறொரு குழுவுடனோ பரிமாறிக் கொள்ளல் தொடர்பாடல் ஆகும். ஆதிகாலத்திலிருந்து தற்போதைய காலம் வரை தகவல் தொடர்பாடலை உற்று நோக்கின் பல்வேறு வளர்ச்சியும், மாற்றமும் அடைந்துள்ளன. பண்டைய காலத்தில் குரல் எழுப்புதல், புறா, குதிரை வண்டி, நெருப்பு மற்றும் பறைமேளம் அடித்தல் போன்றவற்றின் மூலம் தகவல் தொடர்பாடலை மேற்கொண்டான்.

இன்றைய நவீன உலகில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பமானது மின் அரசாங்கம், கைத்தொழில், வியாபாரம், கல்வி, சுகாதாரம், விவசாயம், போக்குவரத்து, மற்றும் பொழுதுபோக்குகக்காகவும் வளர்ச்சியடைந்துள்ளது. தற்போதைய கால கட்ட்த்தில் மாணவர்கள் பாடசாலை செல்லாமலும், வீட்டிலிருந்தே கற்கலாம். இது நிகழ்நிலை தொலைக்கல்வி (Online Distance Learning) எனப்படும். இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது தகவல் தெடார்பாலின் வளர்ச்சி எனலாம். முன்னைய காலத்தில் வாழ்ந்த மக்கள் நோய்களுக்கு மருந்துகள் இல்லாமல் இறந்துள்ளனர். ஆனால், தற்போது பல்வேறு பொறிகள் கண்டுபிடிக்கப்பட்டு மனித உலகின் அகத்தே காணப்படும் நோய்களை கண்டுபிடிக்க வசதியாக உள்ளது. ஆதி காலத்தில் விவசாயத்திற்கு ஏர், மாடு போன்றவை பயன்பட்டன. ஆனால் தற்போது வானிலை அளவீட்டுப்பொறி, தன்னியக்க வண்டுக் கட்டுப்பாட்டுப்பொறி பச்சையில்லாம் மற்றும் தன்னயிக்கக் களையகற்றும் பொறி மூலம் வேலைகளை மிகவும் இலகுவாகவும், விரைவாகவும் செய்யக்கூடியதாகவுள்ளது. தற்போதைய திரைப்படங்கள் முப்பரிமாண உருவத் தொழினுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இத் திரைப்படத்தை பார்க்கும் போது இவை உயிரோட்டம் உள்ளவையாக காட்சியளிக்கின்றது. பாரியளவு வணிக நிறுவனங்கள் தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட கண்டுபிடிப்பை முன்வைக்க Holographic Processing technology பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமன்றி இருந்த இடத்திலேயே விருப்பமான பாட்டையோ, திரைப்படத்தையோ பார்ப்பதற்கான தொழினுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் மூன்று வயது குழந்தை கூட தகவல் தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்தும் அறிவை கொண்டிருக்கிறது. இனிவரும் காலத்தில் பிறக்கும் குழந்தை கையில் தொலைபேசியுடன் பிறப்பதில் கூட ஆச்சரியமில்லை.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் எமக்கு நன்மையையே தருகிறது. ஆனால், நாம் அதனை அதிகளவில், தீயவழியில் பயன்படுத்தும் போதே பல்வேறு பிரச்சினைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றன. உதாரணமாக கணினியோடு அதிகநேரம் இருப்பதால் தசை வன்கூட்டுப் பிரச்சனைகள், தலைவலி கணினிப்பார்வை சகசம் மணிக்கட்டும் சுரங்கச் சகசம் (CTS. Carpel Tunnel Syndrome) ஆகிய நோய்கள் ஏற்படுகின்றது. தற்போதைய காலத்தில் இளஞ்சிறுவர்களே தொலைபேசியில் முகப்புத்தகம் மூலம் தீய நண்பர்களின் நட்பு கிடைத்து பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். உதாரணமாக கடந்த வருடம் இந்தியாவில் கட்டிளமைப்பருவ வயதினரும், இளைஞர்களும் Blue whale என்ற ஆபத்தான விளையாட்டை விளையாடி தங்கள் உயிரை இழந்துள்ளனர்.

எனவே இளஞ்சமுதாயமாகிய நாம் சமூகத்தின் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியிலின் வளர்ச்சி நன்மைக்காக பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி புதிய கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்து தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலை மேலும் வளர்ச்சி செய்ய வேண்டும்.

**செல்வி. கவிசாளினி**
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவன் மரபணு

விதைப்பதெல்லாம்
முளைக்கும் வரை
விதைத்தவனை
ஊர் நினைப்பதில்லை
முளைத்ததெல்லாம்
விளைத்தபின்னே
விதைத்தவனை
ஊர் மறப்பதில்லை

அலை கடல் புயல் வெயில் மழை
அதை மோதி விதைத்த நம் உழவனை
இரு கரம் உயர்த்தி தலை தாழ்த்தி
அவன் பாதம் விழுந்தாலும் தவறில்லை

இது நிஜம் ஓர்நாள் அவன் உயிரில்லை
அன்று உயிரினம் வாழ உணவில்லை
எந்த தொழிநுட்பமும் அன்று எமக்கில்லை
அன்று தெரியும் எப்பணமும் அங்கு
பயனில்லை

இன்று விதைப்பவனை நீர் மறந்தால்
பயிர் விதைக்காமல் உயிர் விதைப்பான்
உயிர் வெறுத்து மனமுடைந்தவன்
இறந்தால்
ஏதும் பயனில்லை ஊரே பிணம் தான்

அவன் உயிர் எரியும்
விதைத்த பயிரெறிய
அவன் நிலை புரியும்
எங்கள் உடல் எரிய
பயிர் விளையும்
மழை இருந்தால்
மழை பொழியும்
மரம் வளர்ந்தால்

மரம் அறுக்கும் நொடியில்
அதை நீ நினைத்தால்
இவ் வையகமும்
வறுமை தனை நினைத்துடுமோ

# போதை தவிர்த்துடு பாதை வென்றிட

மாறாயோ நண்பா உலக மாற்றம்
எல்லாம் உன்னாலே
கேளாயோ கொஞ்சம் உந்தன் நண்பன்
செல்லும் மாற்றத்தை

தேடாதே உருவாக்கு உன்
வாழ்க்கைக்கான பாதையை
தேயாதே சாயாதே வீணாகாதே
தீராதே நீ போதையில்

தேறாமல் போகலாம் உன்
திறமை கூட சாகலாம்
ஊர் உலகம் ஒதுக்கிட உன்
வாழ்வே மாறி போகலாம்

போதை போல் ஏதும் இல்லை
போகப் போக தெரியும் உண்மை
உன் தாய், தந்தை சொந்தம் எல்லாம்
வெறுக்கும் துன்பம் காடும் உன்னாலே

**செல்வன். ச.சிவசங்கர்**
13 வர்த்தகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியின் உள்ளே.........

**"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"**

- பாரதிதாசன்

விலங்கு நிலையிலிருந்து மனிதனை வேறுபடுத்தும் முக்கியமான சாதனமாகிய மொழி - சிந்தனையின் கருவியாகவும் செயற்படுகின்றது. மொழியின் மூலமாகவே நாம் மனித சமூகத்தின் உறுப்புரிமையை நிலை நாட்டுகின்றோம். மொழியின் மூலமாகவே உலகை நாம் உணர்த்து பொருள் உடையதாக்கி புரிந்து கொள்கின்றோம். மொழி மனிதனின் அபூர்வமான படைப்பாகும். மனித கலாசாரத்தை வெளிப்படுத்தும் ஒரு கூறாகவும் மொழி விளங்குகிறது.

மனித மொழியானது,

I) இடுகுறித்தன்மை

II) ஆக்குதல்

III) கால-இட வரம்பின்மை

IV) இருமைத்தன்மை

V) கலாசார ரீதியான பரிமாற்றம்

VI) மாறும் இயல்பு

எனும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் இன்று வழக்கிலுள்ள மொழிகளின் ஒரு தொகுதியினை திராவிட மொழிகள் என்பர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், கோயா, படகா, இருளா, கதபா, கொண்டா, கொட்டா இவ்வாறு திராவிட மொழிகள் காணப்படுகின்றன. இவற்றுள் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் மட்டுமே எழுத்து வடிவமுடைய இலக்கிய பாரம்பரியமுடைய மொழிகளாக விளங்குகின்றன. தமிழ் உலகிலுள்ள செம்மொழிகளுள் ஒன்றாக விளங்குவதாகும்.

கிரேக்கம், இலத்தீன், ஹிப்ரு, பாரசீகம், அரபு, சீனம், சமஸ்கிருதம், தமிழ் இவை உலகில் உள்ள தொன்மையான மொழிகளாகும். தமிழ் மொழியின் வரலாற்றை,

இலக்கியம்

இலக்கணம்

கல்வெட்டு

உரையாசிரியர்களின் உரைகள்

வெளிநாட்டவர் குறிப்புக்கள்

போன்ற சான்றுகளின் துணையுடன் ஆராயலாம். தமிழ்மொழியின் வளர்ச்சியை,

***1.*** பழந்தமிழ்

***2.*** இடைக்காலத்தமிழ்

***3.*** தற்காலத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. •

பழந்தமிழ் இயல்பானது பின்வருமாறு காணப்படுகின்றது.

1. உரைப்பேன் (பதிற்றுப்பத்து)

2. உடையேன் (குறுந்தொகை)

3. செய்கேன் (மணிமேகலை)

4. அறிகுவன் (சிலப்பதிகாரம்)

5. கூறுவன் (மணிமேகலை)

6. எழுந்தருளி (அப்பர் தேவாரம்)

இவை இவ்வாறு அமைய இடைக்கால தமிழில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பிறமொழிச் சொற்கள் பல வந்து கலந்தன.

தெலுங்கு, மராட்டிய சொற்கள் தமிழில் வந்து கலந்தன.

மேலைத்தேய மொழிகளாக போர்த்துக்கேயம், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலம், ஜேர்மன் சொற்கள் தமிழில் சேர்ந்துள்ளன.

போர்த்துக்கேயர் - கடுதாசி

பிரெஞ்சு - குசினி

டச்சு - துட்டு

ஆங்கிலம் - பென்சில்

ஜேர்மன் - எம்டன்

இவ்வாறு மொழியில் மாற்றங்கள் ஏற்பட்டமையால் மொழி இலக்கணங்களும் மாற்றமுற்றே வந்துள்ளன.

நவீன தொழில் நுட்பம் வளர்ச்சியடையும் போது அதனை விளக்குவதற்கு ஏற்றபடி மொழியும் வளரவேண்டிய தேவை ஏற்பட்டது. நான்காவது தமிழ் எனப்படுகின்ற "அறிவியல்த் தமிழ்" இன்று காணப்படுகின்றது.

1. புதிய கலைச்சொற்கள்

2. புதிய சில இலக்கணங்கள்

3. புதிய வாக்கிய அமைப்புக்கள்

இன்று உருவாகியுள்ளன. தமிழ் மொழி இவ் வகையில் புதிய வளர்ச்சி நிலை பெறத் தொடங்கியது. டாக்டர் கிறீன் அங்காதிபாதம், உடற்கூறும் உடல் நலமும் முதலான மருத்துவ நூல்களை எழுதி அறிவியல் தமிழுக்கு வித்திட்டார். பத்திரிகைகள், செய்தித் தாள்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் தமிழ் வழக்கில் காலத்திற்கேற்பவும் நாளும் வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் சமுதாய வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டும் பல புதுச்சொற்கள், சொற்றொடர்கள், மொழியமைப்புக்கள் போன்றவை இடம் பெறுகின்றன.

பத்திரிகைகள் - எழுத்துருவாக்கம்

நிலை பேறாக்கம்

புதுமையாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றிற்கு பெருந்துணை புரிகின்றன. பலர் விஞ்ஞானச் சொற்களைக் கையாண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். 1984 இல் சுஜாதா என்பவர் "கம்பியூட்டரின் கதை" எனும் நூலினை எழுதினார். கம்பியூட்டரில் பயன்படுத்தப்படும் சொற்களை அப்படியே ஒலிபெயர்ப்புச் செய்து எழுதப்பட்டதாகும்.

போக்குவரத்து வசதிகள் பெருகிக் கொண்டிருப்பதாலும், அறிவியல் வளர்ச்சி, மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், பல மக்களோடும் தமிழ் மக்களுக்குத் தொடர்பு நெருக்கமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் பிற மொழிக்கலப்பும் அதிகரித்து வருகின்றது. அதனால் பிறமொழிக்கு சிறப்பாக உரிய ஒலிகளான சொற்களை எப்படி எழுதுவது என்பது இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. எல்லா பிறமொழிச் சொற்களையும் மொழிபெயர்க்க வேண்டும் என்றும் பிறமொழிச் சொற்களைத்தமிழ் ஒலி மரபுக்கு ஏற்ப மாற்றவேண்டும் என்றும் ஆங்கிலம் முதலிய மொழிகளால் பிறமொழிச் சிறப்பொலிகளைப் புலப்படுத்த இடும் குறியீடுகள் முதலியவற்றைத் தமிழில் புகுத்தலாமென்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் தமிழ் மொழியானது தன் இனிமையையும் அழகையும் ஒரு போதும் இழக்காத வகையில் விளங்கவேண்டும் என்பது முதன்மையான கருத்தாகும்.

தொகுப்பு
**செல்வி. செ.புனிதவதி**
12 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனோ தொழில் நுட்பம்
## Nano Technology

உலகளாவிய ரீதியில் பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்டு வரும் நனோ தொழில் நுட்பமானது விஞ்ஞானம் கண்ட பரிணாம வளர்ச்சியின் புதிய திருப்புமுனையாகும். *1959* ஆம் ஆண்டு நோபல் பரிசைப் பெற்ற பௌதீகவியலாளரான றிச்சர்ட் பெபின் (Richard Fewynman) என்பவரே நனோ தொழில்நுட்பத்திற்கான இக்கூற்றை விஞ்ஞான ரீதியாக முன்வைத்தார். நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரின் பில்லியனில் ஒரு பகுதியாகும். (1nm = 10 -9m) சாதாரணமாக விளங்கிக்கொள்வதாயின் நனோ மீற்றர் அளவுத்திட்டத்தில் உருப்பெருக்கிக் காட்டக்கூடிய வில்லையை பாவித்து ஒரு மனிதனின் தலைமயிரை 200m அகலம் உடையதாகக் காட்டமுடியும். சடப்பொருளின் நுண்ணிய துணிக்கைகள் காட்டும் வியத்தகு இயல்புகளை நனோ தொழில்நுட்பம் பற்றிய கொள்கை உருவாக வழி வகுத்தன.

இன்றைய காலகட்டத்தில் இத்தொழில்நுட்பத்தின் பயன்பாடு மருத்துவம், உயிரியல், பௌதீகம், இலத்திரனியல், கணினி, விஞ்ஞானம், இரசாயன பாதுகாப்பு, விவசாயம் என உலகில் உள்ள அனைத்து துறைகளிலும் தனது செல்வாக்கை செலுத்த தொடங்கி விட்டது. நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்கனவே சந்தைக்கு வந்து விட்ட போதிலும் மக்கள் மத்தியில் இன்று வரை அவை தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றது.

நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகமானது மனிதனால் பயன்படுத்தப்படும் பாவனை பொருட்களிலும் காணப்படுகின்றது. காபன் அணுவைப்பயன்படுத்தி காபன் நனோ குழாய்கள், டென்னிஸ் மட்டைகள் போன்ற பல உற்பத்திகள் நடைபெறுகின்றன. இவ்வாறு உருவாக்கப்படும் டென்னிஸ் மட்டைகள் குறைந்த பாரம் உடையனவாகவும், உறுதி மிக்கவையாகவும் காணப்படுவதால் வர்த்தக ரீதியாக பெரு வரவேற்பை பெற்றுள்ளன. பாலங்கள், கட்டிடங்களில் உருக்கின் வலிமையிலும் பல மடங்கு வலிமை கொண்டதும் பாரம் குறைந்ததும் துருப்பிடிக்காததுமான காபன் நனோ குழாய்கள் உருக்கிற்கு மாற்றீடாக பயன்படுத்தப்படுகின்றது.

காபன் நனோக் குழாய்களின் விட்டத்தை மாற்றுவதன் மூலம் எமது தேவைக்கு ஏற்றவாறு இரசாயன, இரத்திரனியல், ஒளியியல் பண்புகளையும் பெற்றுக்கொள்ள முடியும். வளியை சுத்திகரிக்கும் வடிநீர், வடிஐதரசன் சேமிப்பு கலன்கள் உயிரியல் இரசாயனப் பிரயோகங்களில் சிலவாகும். காட்சித்திரைகள் (Display) ஒளியியல், இக்னைற்றர்கள், பிரான்சிஸ்ரர்கள், சூரியகலன்கள், கடத்திகள், கடத்துப் படலங்கள் போன்றன ஒளியியல், மின்னியல், இலத்திரனியல் சார் பிரயோகங்களாகும். இத் தொழில்நுட்பம் மூலம் கழியூதாக்கதிர்களையும், கிருமித் தொற்றையும் தடுக்கும் ஆற்றல் கொண்ட நனோ துகள்கள் கொண்டு உருவாக்கப்படும் ஊடுகாட்டும் (Transparent) முகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சுக்கள் தற்போது பாவனைக்கு வந்துள்ளன. இது சருமத்தின் இயற்கைத் தோற்றத்தை மாற்றாதிருப்பதுடன் கழியூதாக்கதிர்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கின்றது.

நனோ உயிர்த் தொழில்நுட்பம் ஆனது நாம் உட்கொள்ளும் காய்கறி பழவகைகளை உயர்தரத்துடன் அளவில் பெரியதாகவும் உயர் போசாக்கு உடையதாகும். உற்பத்தி செய்ய உதவுகின்றது. அது மட்டுமன்றி உணவுப் பொருட்களின் தன்மை கெடாது பாதுகாக்கும் நனோத்துகள்கள் (Nanoparticles) கொண்ட படலங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. உயிரியல் பண்ணையில் உள்ள தாவரங்களுக்கு தேவையான நீர்ப்போசன குறைவடையும் போது அதை நிவர்த்தி செய்ய வேண்டிய நீர்ப்பாசனங்களை தன்னியக்கமாக விடுவிப்பதற்கு பண்ணைகளிலுள்ள நனோ துகள்கள் கொண்ட நனோ உணரி (Nanosensors) வலையமைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நனோ தொழில்நுட்பத்திலான குளிர்சாதனப் பெட்டிகளின் அறிமுகம் எந்தவொரு உணவையும் மிக நீண்ட நாட்களுக்கு பழுதடையாமல் பேண வழிவகுத்துள்ளது. இதை விட உறுதியான கட்டடப் பொருட்கள், டயர்களை உருவாக்கவும் பயன்படுகின்றது. மருத்துவ ரீதியாக நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகமானது மாபெரும் புரட்சி ஒன்றை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இத்தொழில்நுட்பத்தினூடு உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் உட்கொண்ட மறுகணமே தொழிற்படும் ஆற்றல் மிக்கன. அதைவிட பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் சிகிச்சையை மேற்கொள்ள வாய்ப்பளிக் கின்றது. இந் நனோ தொழில்நுட்பமானது மனிதனின் ஆயுளை அதிகரிப்பதுடன் இளமையைப் பேணவும் வழிசெய்கின்றது.

நனோ தொழில்நுட்ப ஆய்வுக்கென நனோ தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப் பட்டுள்ளது. ஆக்க பூர்வமான நனோ தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புக் களுக்கும் களமமைப்பதுடன், ஏனைய நாடுகளுடன் போட்டி போடச்செய்யும் ஒரு ஆரம்ப முயற்சியாக அமைந்துள்ளது. உலகெங்கும் உள்ள பல்கலைக்கழகங்களிலும் இவ் ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் ஆய்வு முயற்சியில் யாழ் பல்கலைக்கழகப் பௌதீக துறையின் ஆய்வுக்குழு இலண்டன் பல்கலைக்கழக குழுவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய ஆய்வுகள் பெரியளவில் நடைபெற்றாலும் நனோ தொழில்நுட்பத்தால் சாதக விளைவுகள் அறியப்பட்டாலும் அதன் நீண்டகால பாதக விளைவுகள் பற்றியும் விஞ்ஞானிகள் ஆய்வாளர்களிடையே வினாக்கள் உள்ளன. எனினும் பொருளாதாரத்தை முன்னிறுத்தியே நனோ தொழில்நுட்ப பாவனை புதிய உலகைப் படைத்து வருகிறது. இத்தொழில்நுட்பம் பூமிக்கு அச்சுறுத்தலாக அமையாத வரையில் அதன் பிரயோகம் மனிதனுக்கு சாதகமானதே.

**செல்வி. ஜெ.டிலக்சனா**
2021 வர்த்தகப் பிரிவு
மாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலே பரதக்கலை

இலங்கையிலே பழைய காலம் தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகைகளிலே வளர்ந்து வந்துள்ளன. இங்கு வாழும் சிங்களம், தமிழ் பேசும் மக்களின் இடையே கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் நன்கு வளர்ச்சியுற்றாலும் இசை, நடனம் குறிப்பாக சாஸ்திரீய இசை,நடனம் ஆகியன ஆதிகாலத்திலே நன்கு வளர்ச்சியடைந்தமைக்கு தக்க சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் பௌராணிக மரபின்படி இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக்கொடியோன் எனவும் அவன் சாமகானம் பாடிச் சிவபெருமானின் திருவருள் பெற்றான் எனவும், கூறப்படுகின்றது. இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் பெயரே யாழ்ப்பாடி தொடர்பாலேற்பட்டதென்பர். மட்டக்களப்பிலுள்ள பாடுமீன்களின் இசை குறிப்பிடற் பாலது. இவை ஐதிகங்களாயினும், இலங்கைத் தமிழ் மக்களிடையே தொன்மையாகவே சாஸ்திரீய, நாட்டுப்புற இசை நிலவி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே நிலவி வரும் தென்மோடி, வடமோடி நாட்டுக்கூத்து மரபுகளும் குறிப்பிடத்தக்கவையே.

பழைய காலம் தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகையில் தமிழகத்தில் வளர்ந்து வந்த இக்கலை, இந்தியாவுக்கு வெளியே உள்ள இலங்கை, இந்தோனேசியா, வியட்னாம், கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளிலும் காலப்போக்கிலே பரவி வந்துள்ளது. இலங்கையில் வாழும் சிங்களவரும், தமிழரும் முறையே பௌத்தம், இந்துசமயம் ஆகியனவற்றை பின்பற்றுகின்றன. இவர்களை விட, குறிப்பிட்ட தொகை இஸ்லாமியரும், கிறிஸ்தவர்களும் உள்ளனர். கி.பி 16ம்,17ம் நூற்றண்டுகளில் ஏற்பட்ட போர்த்துக்கீச, ஒல்லாந்த படையெடுப்புக்களாலும், அவர்களின் ஆட்சியின்போது பின்பற்றப்பட்ட சுதேச கலையழிப்பு கொள்கையினாலும் இலங்கையின் கரையோர பிரதேசங்களில் இருந்த கோவில்கள் முதலியன அழிக்கப்பட்டன. இசை,நடனம்,சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலைகள் இந்துக்களிடையே பெரும்பாலும் கோவில் கலைகளாகவே நிலவி வந்துள்ளன. கோவில்கள் அழிக்கப்பட்ட போது கலைகளும் மங்கி மறைந்தன.

கி.பி 14ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியிலே சிங்களத்தில் எழுதப்பட்ட சந்தேசய தூது பிரபந்தங்களிலே சமகால தென்னிலங்கையிலே நிலவி வந்த இசை,நடனம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. "நடன மாதரின் கண்புருவங்கள் வண்டுகளின் நிரைபோல நெளிகின்றன" எனவும், "நடன மாதர்கள் கடைக்கண்களாவே பார்க்கின்றனர்" எனவும் கூறுகின்றனர். மேலும் கி.பி 11ம் நூற்றாண்டு தொடக்கம் 15 ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் பொலனறுவ, யாப்பகூவ, கம்பளை, டெடிகம, கோட்டை அரசுகளிலே நிலவிய சாஸ்திர நடனமும் பரதமாயிருந் திருக்கலாம் எனக் கொள்ளுவதற்கு காரணங்கள் உண்டு. இலங்கையிலே சோழரின் தலை நகராக விளங்கிய பொலனறுவையில் அமைக்கப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரத்திலே திருப்பணி புரிந்த தேவரடியார், கோவில்களிலே "நந்தாவிளக்கு" எரித்தனர் என கல்வெட்டுக்கூறும். யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்து வந்த தமிழ் மன்னர் பரதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையினை ஆதரித்து வளர்த்து வந்தனர். இக்காலத்தில் எழுதப்பட்ட வையாபாடல், கைலாய மாலை, முதலிய நூல்களிலே நடனம் பற்றிய சிலகுறிப்புக்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, வையாபாடலிலே "நச்சு விழி நாட்டியம் செய்வோர் ஆடும் மாதர் வலம் வர" என குறிப்பிட்டுள்ளது.

தமிழகத்தில் ஏற்பட்ட பரதக்கலை மறுமலர்ச்சியை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பரதக்கலை மறுமலர்ச்சிக்குப் பங்களித்தோர்களிலே திரு.ஏரம்பு சுப்பையா, திரு.எம்.எஸ்.பரம், கலைப்புலவர் நவரத்தினம், கலையரசு சொர்ணலிங்கன் முதலியோர் குறிப்பிடற்பாலர். முதலில் இங்குள்ள நடனக் கலைஞர்களிடமும், பின்னர் தமிழகத்தில் வாழும் ராமையாப்பிள்ளை, அடையாறு லஷ்மன் போன்ற நடனக் கலைஞர்களிடமும் கலாசேஷ்திரம் போன்ற பிரசித்தி பெற்ற கலைக்கூடங்களிலும், நடனக்கலை பயின்ற பல கலைஞர்கள் இலங்கையிலே இக்கலையினை கற்பித்து வளர்த்து வருகின்றனர்.

மேலும் இலங்கையைச் சேர்ந்த பரதக்கலைஞர் சிலர் வெளியே பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பிற நாடுகளிலும் இக்கலையினை கற்பிக்கின்றனர். சதங்கை ஒலி அரங் கேற்றங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் இலங்கையின் பிரதான நகரங்களில் மட்டுமன்றி, வெளிநாட்டுத் தலைநகரங்களிலும் அடிக்கடி கேட்கிறது. இலங்கையிலுள்ள சில சிங்களக் கலைஞர்களும் இதனைக் கற்றும், கற்பித்தும் வருகின்றனர். சமகாலத்தில் அவர்களிற் சிலர் அரங்கேற்றமும் செய்து வருகின்றனர்.

தொகுப்பு<br>
**செல்வி. யோ.கோகுலப்பிரியா**<br>
2020 கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நாட்டு மக்களுக்கு....

**எங்கே மனதில் பயமின்றித் தலை நிமிர்ந்து நிற்கிறார்களோ,**
**எங்கே அறிவுடைமை அனைவர்க்கும் பொதுவில் உள்ளதோ**
**எங்கே துண்டு துண்டுகளாகச் சிதறாத உலகம் உள்ளதோ**
**எனது தந்தையே, அங்கே எனது தேசம் விழித்தெழட்டும்.**

ஆக்கத்திறன் வளரும் ஆதார மையத்தில் தான் கற்பனை வளம் சூல் கொண்டுள்ளது. வாழ்க்கையின் மூலாதாரமும் அதுவே தான். நாம் வலுவாக விரும்புவதை தம்மை நோக்கி ஈர்க்க வைக்கும் சக்தி கொண்டது கற்பனை வளம். வெற்றியாளர்களுக்கும், தோல்வி யடைந்தவர்களுக்கும் இடையேயான வேறுபாடுகளுக்குக் காரணமும் இதுதான். இன்னும் இருபது வருடங்களில் எழுத்தறிவு பெற்ற வறுமையில்லாத புது யுக இலங்கையைக் காண விரும்புகிறேன். தலைசிறந்த தலைவர்கள் ஆட்சி செய்யும் ஒரு இலங்கையை நான் கனவு காண்கிறேன். பாமர மனிதனுக்குப் பலன் தரும் இலக்குகளின் உந்து சக்தியில் பிறந்த குறிப்பிட்ட இலட்சியத் திட்டங்களில், முழுமூச்சாகப் பாடுபடும் விஞ்ஞானிகளையும், தொழில்நுட்ப நிபுணர்களையும் கொண்ட ஓர் அமைப்பு முறையை நான் கனவு காண்கின்றேன். இந்தக் கனவை நனவாக்குவது எப்படி?

அமைப்புக்களை நடத்தும் தனிநபர்களைவிட அவை மிகப்பெரியவை. முக்கிய மானவை இதை நாம் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியம். குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்கு முயற்சி தேவை. அந்த முனைப்பை அள்ளித் தருகிறது மனம். ஒரு விஷயத்தைக் கொஞ்சம் யோசித்துப்பார்ப்போம். மனிதனை செவ்வாய்க்கிரகத்திற்குக் கொண்டு சென்று அங்கு அவனுக்கு ஒரு குடியிருப்பை அமைத்துத் தரப்போவது எந்தத் துறை? அல்லது எந்த அமைச்சகம், அனல்மின் துறை, புனல் மின்துறை, அணு மின்துறை, மரபுசாரா எரிசக்தித் துறை என்பவையெல்லாம் ஒருங்கிணைந்து செயல்படாமல் தனித்தனியாக முயற்சித்தால் இரண்டு இலட்சம் மெகாவாட் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமா? விவசாய விஞ்ஞானிகள், உயிரித் தொழில்நுட்ப நிபுணர்கள், மற்றும் பாசன நிபுணர்களின் ஒன்றிணைந்த உழைப்பு இல்லாமல் இரண்டாவது பசுமைப்புரட்சி யைச் சாதித்திருக்க முடியுமா?

ஒரு தொலைநோக்கின் சிருஷ்டியான சக்தித் தளத்தை என்னை அறிய வைத்த எனது சொந்த அனுபவங்களை நான் ஆழமாக எண்ணிப் பார்க்கிறேன். நமக்குள்ளேயிருந்து நமது அடி ஆழத்திலிருந்து கிளம்பும் ஒரு சக்தி அது. சுதந்திரப்போரட்ட காலப்பகுதியில் நாம் கண்ட இயக்கத்தின் எழுச்சி பொங்கிய, ஈடிணையற்ற செயல் வேகத்திற்கு இந்தச் சக்தியே ஊற்றுக்கண் சவால்களை எதிர்கொள்ளும் பல சந்தர்ப்பங்களில் என்னை ஆட்கொண்டது இந்த சக்தி தான். இந்த சக்திதான் சங்குநாதமாய் ஒலித்து, சுதந்திரத்திற்கு முந்தைய இலங்கையை, வீறு கொண்டு எழ வைத்தது. அசுர பலம் படைத்த ஒரு சாம்ராஜ்யத்தை மண்டியிட வைத்ததில் தோளோடு தோளாகத் துணை நின்றதும் இதே சக்திதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது உயர்ந்த சுயத்தை நாம் அறிந்து, உணர்ந்து கொண்டு வளர்ச்சியடைந்த ஒரு தேசத்தின் குடிமக்களாக நம்மைக் கருத்திக்கொள்ள வேண்டும், என்பதைத்தான் இந்த கட்டுரையில் உங்களுக்குச் சொல்ல முற்படுகின்றேன். நாம் ஒவ்வொருவருமே இந்த நாகரிகத்தின் ஞான தீபத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமக்கும், இந்த உலகிற்கும் இடையில் எந்தத் தடையும் கிடையாது என்று நமது புனித நூல்களில் கூறுகின்றன. நமக்குள்ளே உலகம் இருக்கிறது. இதைப்போலவே நாம் இந்த உலகத்தில் இருக்கிறோம். இந்த பிரபஞ்ச இசையுடன் இணையும் ராகமாக உங்களை நீங்கள் தான் அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு வளர்ச்சியடைந்த தேசமாக இலங்கையை கொடுப்பதற்கு மாணவர்கள் தயாராக வேண்டும். உங்கள் மனதில் எழுச்சி ஜீவாலையை மூட்டுங்கள். பெரிதாகச் சிந்தியுங்கள். வானளாவிய சிந்தனையாக அது விஸ்வரூபம் எடுக்கட்டும்.

சர்வ சக்தி படைத்த இறைவனே! வியர்வை கொட்ட உழைக்கும் சக்தியை என் மக்களுக்கு வழங்கு! அவர்களுடைய அயராத கடும் உழைப்பில் தீமையை வேரறுக்கக் கூடிய மேலும் பல அக்னிகள் உருவாகட்டும். எனது தேசத்தில் அமைதி பூத்துக் குலுங்கட்டும். எனது மக்கள் நல்லிணக்கத்தோடு வாழட்டும். நான் இந்த மண்ணிலே பிறந்தவள். இந்த மண்ணிலே மடித்து மண்ணோடு மண்ணாகிவிட வேண்டும். இந்த மண்ணின் மகத்துவத்தை கொண்டாடி குதூகலிப்பதற்காக மறுபடியும் இதே மண்ணில் நான் பிறப்பதற்கு அருள்புரிவாயாக!

ஆக்கம்.

**செல்வி. குகதாஸ் துவாரகா**
உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவி (2020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரம் கல்லூரியின் நிறைவை ஒட்டிய வாழ்த்துப்பா

ராகம் : கல்யாணி

தாளம் : ஆதி

பல்லவி

*வாழிய! வாழிய! வாழிய !!!*
*எங்கள் கனக புரத்தின் கல்லூரி*
*வாழிய! வாழிய!! வாழியவே!!!*
*(வாழிய)*

அனுபல்லவி

*கவின் கலை வளர்க்கும் எங்களின் கல்லூரி*
*கடல்திசை யெங்கும் புகழ்ந்திட வாழி (கவின்)*
*(வாழிய)*

சரணம் I

*கனகபுரத்திலே நிலைபெற்ற கலையொடு வாணிபம்*
*மாணவர் பலரை மாண்புடன் ஆக்கும்! (கனக)*
*குடுத்தும் மிகுந்த கல்வியின் சான்றோர்*
*குறைவின்றி வளர்த்திடும் கல்லூரி வாழி! (குடுத்தும்)*
*(வாழிய)*

சரணம் II

*அன்புடன் பண்பையும் அறிவையும் ஊட்டும்*
*அவனியில் எழில்மிகு எங்களின் கோயில் (அன்பு)*
*இன்புடன் இயலிசை நாடகம் தன்னை*
*என்றென்றும் புகட்டும் கல்லூரி வாழி (இன்பு)*
*(வாழிய)*

சரணம் III

*உடலியல் இசையியல் இறையியல் தன்னில்*
*உயர்வினைக் காட்டிடும் கல்லூரி வாழி (உடல்)*
*ஏடதின் தேடலும் அறிவியல் தேடலும்*
*அவனியில் புகட்டிடும் கல்லூரி வாழி (ஏடதின்)*
*(வாழிய)*

சரணம் IV

*வாழ்வியல் பண்பியல் அறிவியல் தன்னை*
*வளமாய் வழங்கிடும் கல்லூரி வாழி ! (வாழ்)*
*ஆழ்கடல் முத்தென அவனியில் மிளிரும்*
*எங்களின் தாயே என்றென்றும் வாழி (ஆழ்)*
*(வாழிய)*

**செல்வி. வ.நிலா**
(2020 கலைப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றே இன்றே

இல்லை ஓர் குறை யென்று
இங்கு நான் சொல்ல மாட்டேன்
நல்ல தோர் வாழ் வென்று
வல்ல மைகள் பாட மாட்டேன்

வானு யர்ந்த காடு மில்லை
வட்ட மிடும் பட்சி யில்லை
தேமதுரக் கனிகளில்லை
தென்றல் தொடுமிதமு மில்லை

ஓடிவரும் அருவியில்லை
ஒய்வெடுக்க நிழலுமில்லை
அழகுதரும் குளமுமில்லை
அதில்விளையும் விளைவுமில்லை

புழுதியங்கு மணக்கவில்லை
நோய்நொடிக்கு பஞ்சமில்லை
ஆசை அரசாண்டதினால்
மோசமிங்கு சூழ்ந்த தம்மா

வெம்மை இங்கு வாட்டு தம்மா
வியர்வை கூட கொதிக்குதம்மா
அன்ன மிட்ட பூமி யிங்கு
வெடிப் போடிக் கிடக்குதம்மா

இன்னும் ஒன்றும் கெட வில்லை
எழுந்து வாரீர் துயர் துடைக்க
தூர்ந்த குளத் தூர் வாரி
மழை பெய்யும் போது தேக்கிடலாம்

ஆளுக்கொரு மரம் நட்டு
ஆருயிராய்க் காத்திடலாம்
பேருக்கேனும் பயிர் செய்து
பெறுமதியைக் கற்றிடலாம்

ஊருக்கொரு கோவில் போதும்
அதனருகே கேணி வேண்டும்
ஓடிக்கடலைப் புணர்ந்திடும்
மழைநீரைத் தடுத்துத் தேக்கிடலாம்

மக்கிப் போகாப் பொருளொன்றும்
மறந்து போயும் நாம் நாடாது
தெள்ளத் தெளிந்த மனதினராய்
முயன்றால் முயன்று வென்றிடுவோம்

நீரை வீணே நாம் சிந்தோம்
நிலத்தை தரிசாய் நாம் காணோம்
ஆடிக்கிணறு நாம் தோண்டோம்
அடுத்தவர் பசியில் நாம் மகிழோம்

நாளை என்று ஓயமாட்டோம்
நன்றை இன்றே பயிர் செய்வோம்
அன்பை உரமாய் தூவியெங்கும்
அழிவை விரட்டி அணி செய்வோம்

**செல்வி. நா.டிறோன்றி**
(2020) கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கல்வி மாணவர்களின் ஆக்கம்



ந. எழிலன்



து. ரிதுர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணைத்தொடும் வீரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளின் விபரம் - 2019

## வொலிபோல் போட்டிகள்

### 15 வயதின் கீழ் ஆண்கள்

*1) 1ம் இடம் - கிளி/ விவேகானந்த வித்தியாலயம்*
*2) 2ம் இடம் - கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை*

### 15 வயதின் கீழ் பெண்கள்

*1) 1ம் இடம் - கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்*
*2) 2ம் இடம் - கிளி/ விவேகானந்த வித்தியாலயம்*

### 17 வயதின் கீழ் ஆண்கள்

*1) 1ம் இடம் - கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்*
*2) 2ம் இடம் - கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை*

### 17 வயதின் கீழ் பெண்கள்

*1) 1ம் இடம் - கிளி/ சிவபாத கலையகம்*
*2) 2 [illegible] கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்*

## கிளித்தட்டுப் போட்டிகள்

### 18 வயது ஆண்கள்

*1) 1ம் இடம் - கிளி/ மத்திய மகா வித்தியாலயம் - 09*
*2) 2ம் இடம் - கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம் - 11*

### 18 வயது பெண்கள்

*1) 1ம் இடம் - கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்*
*2) 2ம் இடம் - கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கல்வி ஆக்கத்திறன் போட்டிகள்

| வருடம் | பால் | மாணவர்பெயர் | விபரம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| 2015 | ஆண் | சிவகுமார் மாதுளன் | நீர் நிரப்புதல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| | பெண் | யேசுதாசன் இறையரசி | மணிகோர்த்தல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| 2016 | ஆண் | பரதராமன் சஜீபன் | பந்தெறிதல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| | பெண் | யேசுதாசன் இறையரசி | மணிகோர்த்தல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| | | | பரா ஒலிம்பிக் போட்டி | | |
| 2017 | ஆண் | பழனி கவிக்குமார் | நின்று நீளம் பாய்தல் | | 1ஆம் இடம் |
| | பெண் | யேசுதாசன் இறையரசி | நின்று நீளம் பாய்தல் | | 2ஆம் இடம் |
| | | | அழகியற் போட்டி | | |
| | ஆண் | முத்துராமன் தமிழ்மாறன் | தனிப்பாடல்<br>தனிநடனம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | |
| | குழு | விசேட கல்வி மாணவர்கள் | குழு நடனம் | 1ஆம் இடம் | |
| 2018 | பெண் | யேசுதாசன் இறையரசி | மணிகோர்த்தல் | | 1ஆம் இடம் |
| | ஆண் | முத்துராமன் கேசவன் | மணிகோர்த்தல் | | 3ஆம் இடம் |
| | ஆண் | பரதராமன் சஜீபன் | பந்தெறிதல் | | 1ஆம் இடம் |
| | ஆண் | திருநாயகம் கவிதரன் | 100m ஓட்டம் | | 3ஆம் இடம் |
| | ஆண் | அமலதாஸ் அகல்யன் | 100m ஓட்டம் | | 3ஆம் இடம் |
| | ஆண் | பழனி கவிக்குமார் | 50m ஓட்டம் | | 2ஆம் இடம் |
| | பெண் | பிரபாகரன் பிறைநிலா | சித்திரப்போட்டி | 3ஆம் இடம் | |
| | பெண் | பாலேந்திரன் தனுசன் | சித்திரப்போட்டி | 2ஆம் இடம் | |
| 2019 | ஆண் | ஸ்ரீஜங்கரன் திலக்சன் | தனிநடனம்<br>சித்திரம் | 1ஆம் இடம்<br>2ஆம் இடம் | |
| | பெண் | யேசுதாசன் இறையரசி | தனிப்பாடல் | 2ஆம் இடம் | |
| | ஆண் | கௌரிராஜா பிளசிகன் | தனிப்பாடல் | 2ஆம் இடம் | |
| | குழு | விசேட கல்வி மாணவர்கள் | குழு நடனம் | 3ஆம் இடம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர் விபரம்

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விபரம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2015 | பெண் | விஜயமனோகரன் பிந்துஜா | இடைநிலை | சமூக விஞ்ஞானப் போட்டி | | 3ஆம் இடம் | | |
| | பெண் | மனோகரன் நிருபாஜினி | இடைநிலை | மனைப்பொருளியல், விஞ்ஞான அறிவை அளர்த்தல் போட்டி | | 3ஆம் இடம் | | |
| | பெண் | ஞானச்சந்திரன் கவிசாளினி | இடைநிலை | சமூகவிஞ்ஞானப் போட்டி | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | பங்குபற்றியமை |
| 2016 | பெண் | ஞானச்சந்திரன் கவிசாளினி | இடைநிலை | சமூகவிஞ்ஞானப் போட்டி | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் (தங்கப்பதக்கம்) |
| | பெண் | சிவனேந்திரன் நிருஷி | ஆரம்பப் பிரிவு | ஆங்கில உறுப்பெழுத்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |
| | ஆண் | கணேசன் ருசாந்தன் | இடைநிலை | சமூகவிஞ்ஞானப் போட்டி | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | பங்குபற்றியமை |
| | ஆண் | செல்வராஜ் நிமல்ராஜ் | இடைநிலை | புற்றுநோய் தடுப்பு சுவரொட்டி | | 2ஆம் இடம் | | |
| 2017 | பெண் | நித்தியானந்தன் தேனுஜா | மேற்பிரிவு | தனிநடனம் | | 1ஆம் இடம் | | |
| | பெண் | விக்னேஸ்வரன் டனுசிகா | இடைநிலை | பண்ணிசை | | 3ஆம் இடம் | | |
| | ஆண் | சண்முகராசா வினோதன் | கனிஸ்ட பிரிவு | சித்திரம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | சிவனேந்திரன் நிருஷி | ஆரம்பப் பிரிவு | ஆங்கில தினப் போட்டி | | 1ஆம் இடம் | | |
| | பெண் | நடேசன் இனுசியா | இடைநிலை | 2ஆம் மொழி சிங்களம் வாசிப்புப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி | | 3ஆம் இடம் | | |
| | ஆண் | கணேசன் ருசாந்தன் | இடைநிலை | சமூகவிஞ்ஞானப் போட்டி | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 4ஆம் இடம் | |
| | பெண் | ஞானச்சந்திரன் கவிசாளினி | இடைநிலை | சமூகவிஞ்ஞானப்போட்டி | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 5ஆம் இடம் | |
| | பெண் | திருவரசு கம்சாயினி | இடைநிலை | வணிகக் குறுவினா | 1ஆம் இடம் | 3ஆம் இடம் | | |
| | பெண் | யோகேஸ்வரன் தரணிகா | இடைநிலை | வணிகக் கட்டுரை | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | | |
| 2018 | பெண் | சிவனேந்திரன் நிருஷி | ஆரம்பப் பிரிவு | ஆங்கில உறுப்பெழுத்து, கட்டுரைப் போட்டி | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 2ஆம் இடம் | | |
| | பெண் | விஜயமனோகரன் பிந்துஜா | இடைநிலை | சமூகவிஞ்ஞானப் போட்டி | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | | |
| | பெண் | குகதாஸ் துவாரகா | உயர்தரம் | வணிக கட்டுரைப் போட்டி | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |
| | பெண் | ஜெயக்குமார் ஜெலக்சிகா | இடைநிலை | மனைப்பொருளியல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விபரம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2015 | ஆண் | செல்லத்துரை யசோதரன் | 21 | 110m தடைதாண்டல்,<br>நீளம் பாய்தல் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>2ஆம் இடம் | |
| | ஆண் | சிவராசா டிலக்சன் | 15 | 100m தடைதாண்டல் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| | பெண் | ச.தர்சினி | 13 | 100m தடைதாண்டல் | 1ஆம் இடம் | 3ஆம் இடம் | |
| | ஆண் | ஜெ.நிலக்ஷன் | 15 | 100m தடைதாண்டல்,<br>200m ஓட்டம்<br>நீளம் பாய்தல் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>2ஆம் இடம்<br>1ஆம் இடம் | 2ஆம் இடம்<br><br>3ஆம் இடம் |
| 2016 | ஆண் | ஜெ.நிலக்ஷன் | 17 | 110m தடைதாண்டல்<br>நீளம் பாய்தல்<br>முப்பாய்ச்சல் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | |
| | ஆண் | சிவராசா டிலக்சன் | 15 | 200m ஓட்டம்<br>400m ஓட்டம்<br>100m சட்டவேலி | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | |
| | ஆண் | ச. வசந்தராஜ் | 17 | கோலூன்றிப் பாய்தல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | சோ.சோபனா | 17 | 400m தடை தாண்டல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | ஆண் | செ.யசோதரன் | 21 | 110m சட்டவேலி<br>5000m ஓட்டம்<br>1500m ஓட்டம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | |
| 2017 | ஆண் | க.வசிகரன் | 14 | 80m சட்டவேலி | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| | பெண் | ச.துர்க்கா | 14 | 80m சட்டவேலி | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| | ஆண் | சி.டிலக்சன் | 16 | 300m சட்டவேலி<br>400m ஓட்டம்<br>800m ஓட்டம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | <br>2ஆம் இடம்<br>3ஆம் இடம் |
| | பெண் | இ.தாரணி | 16 | நீளம் பாய்தல்<br>300m சட்டவேலி | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>3ஆம் இடம் | |
| | ஆண் | ர.சாருஜன் | 18 | 110m சட்டவேலி | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விபரம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 | ஆண் | ப.ஜோயல் தினேஸ் | 20 | தட்டெறிதல்<br>முப்பாய்ச்சல்<br>கரம் காய்<br>செலுத்துதல் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>2ஆம் இடம்<br>3ஆம் இடம் | |
| 2018 | ஆண் | ரஞ்சன் சாருஜன் | 18 | 110m சட்டவேலி<br>400m ஓட்டம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 2ஆம் இடம்<br>2ஆம் இடம் | 6ஆம் இடம் |
| | ஆண் | சி.டிலக்சன் | 16 | 400m ஓட்டம்<br>800m ஓட்டம்<br>1500m ஓட்டம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>3ஆம் இடம்<br>2ஆம் இடம் | 5ஆம் இடம் |
| | ஆண் | ஜெ.நிலக்சன் | 18 | 110m சட்டவேலி<br>நீளம் பாய்தல்<br>முப்பாய்ச்சல் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>2ஆம் இடம்<br>1ஆம் இடம் | 4ஆம் இடம் |
| | பெண் | இந்திரகுமார் தாரணி | 16 | 100m சட்டவேலி | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| 2019 | ஆண் | யூ சுரேஸ் கார்த்திக் | 14 | 100m சட்டவேலி<br>80m சட்டவேலி | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 3ஆம் இடம்<br>2ஆம் இடம் | 4ஆம் இடம் |
| | ஆண் | தர்மராஜ் டனுஷன் | 18 | முப்பாய்ச்சல் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| | ஆண் | சிவராசா டிலக்ஷன் | 18 | 400m ஓட்டம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | ஆண் | ரஞ்சன் சாருஜன் | 20 | 110m சட்டவேலி<br>400m ஓட்டம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | |
| | பெண் | ஜெயந்திரன் சானிலா | 14 | 80m சட்டவேலி<br>உயரம் பாய்தல் | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 1ஆம் இடம் | 5ஆம் இடம் |
| | பெண் | சத்தியதேவன் துர்க்கா | 16 | 100m சட்டவேலி<br>300m சட்டவேலி | 1ஆம் இடம்<br>1ஆம் இடம் | 2ஆம் இடம்<br>2ஆம் இடம் | |
| | பெண் | இந்திரகுமார் தாரணி | 18 | நீளம் பாய்தல் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழு விளையாட்டுக்கள்

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விளையாட்டு | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2015 | பெண் | சா.ஜெசாளினி<br>இ.தாரணி<br>பு.கோபிசா<br>ரா.விழியரசி<br>மு.நிரோஜா<br>தே.டிலக்ஷிகா | 13 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 3ம் இடம் |
| | பெண் | ஜெ.ஒளிர்வதனா<br>செ.சர்மினி<br>ஜெ.ஜெஸ்மியா<br>சு.பவித்திரா<br>மு.நிதர்சனா<br>பு.கீர்த்திகா<br>கு.துவாரகா<br>சோ.சோபனா<br>ப.சஜிகா<br>த.கஜலினி<br>செ.விதுஷா<br>செ.தனுப்பிரியா | 15 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | செ.சர்மினி<br>கு.துவாரகா<br>பு.கீர்த்திகா<br>சோ.சோபனா<br>ப.சஜீகா<br>செ.விதுஷா | 15 | பூப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | பு.கீர்த்திகா<br>யோ.தரணிகா<br>சோ.சோபனா<br>ப.சஜிகா<br>செ.விதுஷா | 15 | கரம் காய் நகர்த்தல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | ஆண் | ஜெ.நிலக்ஷன்<br>ம.சரண்யன்<br>பு.அஜுசன்<br>கி.சிந்தனைச்செல்வன்<br>செ.வேணுசாருஜன் | 15 | கரம் காய் நகர்த்துதல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விளையாட்டு | வலயம் | மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 2015 | ஆண் | பா.தாரந்தன்<br>க.தர்சன்<br>செ.டனிஸ்ரன்<br>ச.சிந்துஜன்<br>த.லதன் | 19 | கரம் காய் நகர்த்துதல் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| 2016 | ஆண் | பு.அனுசன்(அணித்தலைவி)<br>சி.டிலக்ஷன்<br>க.மதன்<br>ச.பிரியந்தன்<br>சோ.சோமறிஜோய்<br>த.டனுசன்<br>செ.இசைக்குமரன்<br>கா.மிதுசன்<br>சி.இசைவேந்தன் | 15 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | இ.தாரணி<br>சு.பவித்திரா<br>கே.தவசிகா<br>செ.சர்மினி(அணித்தலைவர்)<br>ஜெ.ஜெஸ்மியா<br>சி.அபிசாயினி<br>பு.கோபிஷா<br>ரா.விழியரசி<br>சா.ஜெசாளினி<br>ஜெ.ஒளிர்வதனா | 15 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | பு. கீர்த்திகா<br>ப.சஜீகா<br>த.கஜலினி<br>செ.விதுஷா<br>சோ.சோபனா<br>செ.தனுப்பிரியா<br>ச.தர்சினி<br>ஜெ.லாவண்யா | 17 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| **2017** | ஆண் | சி.டிலக்சன்<br>பு.அனுசன்<br>செ.இசைக்குமரன்<br>கி.இசைவேந்தன்<br>அ.சாள்ஸ் அன்ரனி<br>க.மதன் | 16 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விளையாட்டு | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 | ஆண் | த.டனுசன்<br>கா.மிதுசன்<br>ஏ.சுஜீபன்<br>செ.பகீரதன்<br>செ.புவிதரன்<br>ச.விநோதன் | 16 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | பெண் | இ.தாரணி<br>ஜெ.ஒளிர்வதனா<br>பு.கோபிஷா<br>ஜெ.ஜெஸ்ரியா<br>இ.அபிசாயினி<br>கே.தவசிகா<br>சு.பவித்திரா<br>சா.ஜெசாளினி<br>த.வனிதா | 16 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | |
| | ஆண் | ப.றோயல் திவேஸ்<br>ரெ.ஜெனிஸ்ரன்<br>பா.தாரந்தன் | 19 | கரம் காய் நகர்த்துதல் | 1ஆம் இடம் | 3ஆம் இடம் | |
| | பெண் | பு.கீர்த்திகா<br>யோ.தரணிகா<br>வி.சோபனா<br>செ.தனுப்பிரியா<br>க.சஜீகா | 17 | கரம் காய் நகர்த்துதல் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| | ஆண் | ஜெ.நிலக்ஷன்<br>ம.சரண்யா<br>பு.அனுசன்<br>கி.அனுசன்<br>செ.இசைக்குமரன் | 17 | கரம் காய் நகர்த்துதல் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | |
| 2018 | ஆண் | த.டனுசன்(அணித்தலைவர்)<br>கு.பகீரதன்(உப அணித்தலைவர்)<br>செ.இசைக்குமரன்<br>அ.சாள்ஸ் அன்ரனி<br>கா.மிதுசன்<br>ஏ.சுஜீவன்<br>ந.கவிசன்<br>கி.இசைவேந்தன்<br>ஜெ.அபிசாந் | 16 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 4ஆம் இடம் |

| வருடம் | பால் | மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விளையாட்டு | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | பெண் | பு.கோபிஷா<br>இ.தாரணி<br>தே.டிலக்ஷிகா<br>ந.இனுசியா<br>த.வனிதா<br>சி.அபிசாயினி<br>ஜெ.சுருதிகா<br>ரா.விழியரசி | 16 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| 2019 | கரப்பந்து | த.டனுஷன்<br>கு.பகீரதன்<br>செ.இசைக்குமரன்<br>சி.டிலக்ஷன்<br>அ.சாள்ஸ்அன்ரனி<br>கி.இசைவேந்தன்<br>கா.மிதுசன்<br>ஏ.சுஜீபன்<br>செ.சாதுரியன் | 18 | கரப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை நாடகம் திறந்தபிரிவு 2015

| மாணவர் பெயர் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|
| பா.தாரந்தன்<br>அ.விக்டோரியா<br>க.வினுசா<br>உ.யதுர்சன்<br>பு.தமிழ்ச்செல்வி<br>ம.நிருபாஜினி<br>கா.மிதுசன்<br>பு.ஜினுசன் ஜெனார்த்<br>வி.வேணுஜன்<br>ம.துவாரகன்<br>யோ.ஜான்சன்<br>தி.யசோதரன்<br>இ.டிலக்சன் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | பங்குபற்றியமை |

# பல்கலைக்கழகம் தெரிவான மாணவர் விபரம்

| வருடம் | மாணவர் பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 2012 | டெல்லிநாதன் நிரோஜன் | வர்த்தகம் | 3A |
| | பத்திநாதர் பவிதரன் | வர்த்தகம் | 3A |
| | செல்வகுமார் திசாந்தினி | கலை | 2B,C |
| 2013 | செல்வகுமார் கஜலக்சன் | வர்த்தகம் | A,B,C |
| | சேகர் சயந்தனா | வர்த்தகம் | A,B,C |
| | மங்களதேவன் விஜயகுமார் | வர்த்தகம் | A,B,C |
| | அழகேசன் சந்திரகுமார் | கலை | 2B,C |
| | சண்முகராசா ஜெனிசியா கெல்ஸா | கலை | 2A,B |
| 2014 | ராஜரட்ணம் தனுசியா | வர்த்தகம் | 2B,C |
| | இருதயராசா சிறோமி | கலை | A,B,C |
| 2015 | யசோதரன் விதுர்ஷன் | வர்த்தகம் | A,2B |
| | ஜெயேந்திரன் ரவீன்பிரசாந் | வர்த்தகம் | 2A,B |
| | செல்வராசா மயூரி | கலை | A,B,S |
| | மரியதாஸ் தர்சிகா | கலை | B,2C |
| 2016 | யோகேஸ்வரன் ஜஸ்மினி | வர்த்தகம் | 2A,B |
| | செல்லத்துரை யசோதரன் | கலை | B,C,S |
| | பாஸ்கரன் மேரிகோல்டினி | கலை | A,2S |
| 2017 | குகேந்திரன் சுகித்தா | கலை | 2A,B |

# கல்வியியற் கல்லூரிக்கு தெரிவான மாணவர் விபரம்

| வருடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 2012 | ராஜேஸ்வரன் தர்சா |
| | நடராஜ் டர்சிகா |
| | இனசெற் ஆனந்தராஜா பெனடிற்றா தயானந்தி |
| 2014 | பாஸ்கரன் திவாகரன் |
| | வரதராசா நிதர்சன் |
| | ஜெயக்குமார் விவேகா |
| 2015 | தியாகராசா கிசோபா |
| | விஜயகுமார் விவேகா |
| | மகேஸ்வரன் அனுசா |
| 2017 | பொன்னம்பலம் வேணுதா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகள்...

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் இன்று பொன்விழாவினைக் கொண்டாடுவதையிட்டு அனைவரும் மகிழ்வடைகின்றோம். இவ்வருட ஆரம்பத்திலேயே பொன்விழா மலருக்கான முன்னெடுப்புக்களை ஆரம்பித்த அதிபர், பழைய மாணவர்கள், மலர்க்குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒவ்வொரு ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் நாள் அன்றே ஆண்டுவிழாவினையும் பரிசளிப்பு நிகழ்வினையும் கொண்டாடி மகிழ்வது வழமை. ஆயினும் புலம்பெயர்வாழ் பழைய மாணவர்கள் பொன்விழா நிகழ்வில் தாங்களும் கலந்துகொள்ள வேண்டும் என விரும்பியதற்கமைய ஆகஸ்ட் 2,3ஆம் திகதிகளில் கொண்டாடுவதற்கு கைகொடுத்த பாடசாலைச் சமூகத்தினருக்கு மனமார்ந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

மேலும் ஆசிச்செய்திகளையும் வாழ்த்துச்செய்திகளையும் அகமகிழ்வோடு தந்துதவிய பெருந்தகைகளுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். இதயம் பேசுவதிலும் வழிகாட்டிகளின் வரிகளிலும், சான்றோர்களாகப் பவனிவரும் தங்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது வனப்புமிகு அன்னையான கல்வித்தாயின் ஓட்டத்தில் கருத்தூன்றிச் செயலாற்றிய பெருந்தகைகள், தங்களின் நினைவுப் பதிவுகளைப் பகிர்ந்து கொண்டமைக்கும் நன்றி கூறுகின்றோம். இவ்வுலகில் சாதனையாளர்களாகவும், சரித்திரநாயகர்களாகவும் பவனிவரும் பழைய மாணவர்கள், தங்கள் பள்ளிக்காலத்து உள்ளத்துணர்வுகளைச் சுவை படக்கூறி, அதிபர், ஆசிரியப் பெருந்தகைகள் மாண்பைப் போற்றியவர்களுக்கும், பொன்விழா மலருக்கான ஆக்கங்களைத் தந்த எமது பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அத்துடன் பாடசாலையின் சாதனையாளர்களின் விபரங்களைத் தொகுத்தெடுத்து தரவேற்றம் செய்ய உதவிய பரிசில்குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இம்மலரை வெளியிடுவதற்கு முழுமையான நிதிபங்களிப்பை நல்கிய "கலைக் குடும்பத்தினருக்கும், மனமார்ந்த நன்றிகள், மேலும் பொன்விழா மலரை அழகாக அச்சேற்றம் செய்த எமது பாடசாலையின் பழைய மாணவனும் Vista8 அச்சகத்தின் உரிமையாளருமான தெ. அமிர்தகரன் அவர்களும் அவர்தம் நிறுவனப் பணியாளர்களுக்கும் மிக மிக நன்றிகள். அத்துடன் விளம்பரங்களைத் தந்து உதவியவர்களுக்கும், புகைப்படங்களை எடுத்துதவிய அஸ்வின் புகைப்படக் கலையகத்திற்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

மேலும் இந்நூல் ஆக்கம் பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், வித்தியாலயக் குழுமத்தினர் யாவருக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

-மலர்க்குழு-
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நர்மதா கோல்ட் சென்டர்

*Narmatha Gold Center*

**GENUINE 916 GOLD**

அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு மாற்றுனர்

Authorized Foreign Money Exchanger

151, செட்டியார்தெரு,
கொழும்பு-11.
+94 11 238 92 82
+94 11 239 95 41
+94 75 99947 69
narmathagc151@gmail.com

187, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
+94 21 222 19 33
+94 21 222 47 79
+94 75 999 17 69
narmathagc187@gmail.com

WESTERN UNION WU
moving money for better

கிளிநொச்சி மண்ணில் புதிய உதயம்.

A9 வீதி, நீதிமன்றம் முன்பாக கிளிநொச்சி.
+94 21 228 4779, Viber +94 75 999 5769

கிளிநொச்சி மாநகரில் புகழ் பெற்று விளங்கும் கனகபுரம் மகா வித்தியாலயத்தின்
மலருக்கு எமது மனம் நிறைந்த பங்களிப்பும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழிலகம்

EZHILAGAM TRADE CENTER



விற்பனை நிலையம்




உங்கள் நிறுவனங்கள், இல்லங்களுக்குத் தேவையான மின் சாதனங்கள்
(மின்குமிழ்கள்,வயர்கள்,நீர்ப்பம்பிகள்,காற்றாடிகள்)
அனைத்தும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள உங்கள் மனதில் நிறைந்து இருப்பது.........



**A9 வீதி கிளிநொச்சி.** ☎ 021 228 3781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Akshaya

## Pharmacy & Grocery









பிரதான வீதி, கிளிநொச்சி. 021 228 4545


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறுகண்டிப் பிள்ளையார்
## காட்வெயார்




கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

☎ 0212285475
0212285476
0779153787


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூ
# லலிதா
நகைமாளிகை

WESTERN UNION
MONEY TRANSFER




A9 வீதி, கிளிநொச்சி.

☎ 021 228 3434
☎ 077 6079619

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUN FURNIY CITY

**FURNITURE - ELECTRONICS - HOMEAPPLIANCES - OFFICEEQUIPMENT**







உங்கள் இல்லங்கள்,நிறுவனங்கள் என்பவற்றுக்குத்
தேவையான அனைத்து வகையான இலத்திரனியல் சாதனங்கள்,
தளபாடங்கள் என்பவற்றை தரத்துடனும் உத்தரவாதத்துடனும்
ஒரே கூரையின் கீழ் பெற்று மகிழ்ந்திடுங்கள்



**A9,வீதி கிளிநொச்சி.** ☎ 021 228 3300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லோகன் பந்தல்




## லோகன் பந்தல் சேவை









திருநகர், கிளிநொச்சி. ☎ 0777349253


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SY NIRO Cool Cafe



A9,Road,Kilinochchi. 0774544418

சிந்து புடவையகம்
Sinthu Tex



கனகபுரம் வீதி, கிளிநொச்சி. ☎ 077 953 0753

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார்

## வண்ணச்சோலை




# பிள்ளையார் அருள்




A9 வீதி, கிளிநொச்சி ☎ 021 228 5789


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்ணா

## பெயின்ற் & காட்வெயார்




உங்கள் நிறுவனங்கள், இல்லங்களுக்குத் தேவையான கட்டிடப் பொருட்கள்,வர்ணப்பூச்சுக்கள் என்பவற்றை தரம்,நம்பிக்கை நியாய விலையில் பெற்று மகிழ்ந்திடுங்கள்.



கனகபுரம் வீதி கிளிநொச்சி.

☎ 077 3268381


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"All Kinds of Printings in one roof"

Vista8 Printers

Designing|Offset, Digital Printing|Banner Print|
Hoardings | PlaquesDigital Name Board|
Wedding Invitation Cards| Mug Print|Shield & etc ...




No. D116, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna.
T.P:. 021 221 5488 | 075 520 6848 | 077 791 8373
E-mail:vista8print@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்விழாக் காணும் எம் கனகபுரத் தாயவளை
கலைக்குடும்பம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

Vista8printers. Jaffna 0755206848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org